T. 2218

# உபநிஷத்ஸாரம்

# ॥ उपनिषत्सारः ॥

(ஸ்ரீ ராமகிருஷ்ண தீபம் எனும்
உரையுடன் கூடியது)

## இரண்டாம் பாகம்

(சாந்தோக்கிய–பிருஹதாரணியக உபநிஷத்துக்களும்
பிரம்ம சூத்திரங்களும், நூலின் அகராதியும்)

உரையாசிரியர்
“ அண்ணா ”

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை

இது சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத்
தலைவரால் பிரசுரிக்கப்பட்டது

முதல் வெளியீடு 1951

உரிமை பதிப்பாளர்க்குரியது

I—XX—10–'51

கபீர் அச்சுக்கூடம், சென்னை (1744)

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | ... | v |
| குறிகளின் விளக்கம் | ... | vii |
| ஆத்ம ஸமர்ப்பணம் | ... | viii |
| சாந்தோக்கியோபநிஷத்து | ... | 1 |
| பிருஹதாரணியகோபநிஷத்து | ... | 112 |
| பிரம்ம சூத்திரங்கள் | ... | 198 |
| பிரம்ம சூத்திரங்களின் அகராதி | ... | 269 |
| உபநிஷத மந்திரங்களின் அகராதி | ... | 273 |
| உரையின் அகராதி | ... | 281 |

## இதே ஆசிரியர் எழுதியவை

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| **உபநிஷத்ஸாரம்:** முதல் பாகம் (ஈச-கேன-கட-பிரச்ன-முண்டக-மாண்டூக்கிய-தைத்திரீய-ஐதரேய-உபநிஷத்துக்கள்) முதல் பதிப்பு | ... | 2 | 8 |
| **ஸ்ரீமத் பகவத்கீதை** (பதவுரை விரிவுரைகளுடன்) மூன்ருவது பதிப்பு | ... | 3 | 8 |
| **ஸ்ரீமத் பகவத்கீதை** (பொழிப்புரையுடன்) முதல் பதிப்பு | ... | 1 | 4 |

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை

# முகவுரை

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் வாயிலாக ஸம்ஸ்கிருதத்திலுள்ள மத நூல்கள் பல ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பதவுரை, பொழிப்புரை, விரிவுரைகளுடன் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இதே முறையில் தமிழிலிலும் பிரசுரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஸ்ரீமத் பகவத் கீதை சில ஆண்டுகளுக்கு முன் வெளியிடப் பட்டது. இப்போது முக்கிய மான பத்து உபநிஷதங்கள் உபநிஷத்ஸாரம் எனும் பெயர் கொண்ட நூலில் இரண்டு பாகங்களாக வெளிவருகின்றன. ஈச, கேன, கட, பிரச்ன, முண்டக, மாண்டூக்கிய, தைத்திரீய, ஐதரேய என்ற எட்டு உபநிஷதங்கள் முதல் பாகத்திலும், சாந்தோக்கிய, பிருஹதாரணியக என்ற இரண்டு உப நிஷதங்கள் இரண்டாம் பாகத்திலும் அடக்கம். இரண்டாம் பாகத்தின் முடிவில் பிரம்ம சூத்திரங்களின் ஸாரமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

2. உபநிஷதங்கள் பகவத் கீதையில் அடங்குவன எனலாம். அர்ஜுனனைக் கன்றாகக் கொண்டு உபநிஷதங்களாகிய பசுக்களைக் கறந்து கீதையாகிய அமுதை உலகில் உத்தமர் உண்டு உய்யுமாறு கோபாலன் அளித்தான் என்று பகவத் கீதையின் பெருமை கூறப்படும்.

சீராருபநிடதம் சேதாவாம், தேவர் பிரான்
பாராரும் ஆயனும், பார்த்தனேர்—நீரார்
இளங்கன்றும், கீதையே இன்னமுதாம், உண்பார்
களங்கமில் உள்ளத்தவராம் காண்.

உபநிஷதங்களும் கீதையும் சேர்ந்து பிரம்மசூத்திரத்தில் அடக்கம். பிரம்மசூத்திரத்தில் வேதவியாஸர், சுருதி என்று குறிப்பிடுமிடங்களில் உப நிஷதங்களையும், ஸ்மிருதி என்று குறிப்பிடுமிடங்களில் அநேகமாய்ப் பகவத் கீதையையுமே கருத்தில் வைத்துப் பேசுகிறார். குறைந்த எழுத்துக்களைக் கொண்டு சந்தேகமில்லாத வகையில் ஒரு விஷயத்தைப் பற்றிய எல்லா நோக்கங்களையும் ஆராய்ந்து ஸாரமான பொருளை, கூறியதுகூறல் முதலிய குற்றங்கள் இல்லாமல், சுருக்கமாய் உரைப்பதே சூத்திரம் எனப் படும் என்று அதன் இலக்கணத்தை யறிந்தோர் உணர்கின்றனர். (அல்பாக்ஷர மஸந்திக்தம் ஸாரவத் விச்வதோமுகம் | அஸ்தோப மனவத்யஞ் ச ஸூத்ரம் ஸூத்ர-விதோ விது: ||) இங்ஙனம் உபநிஷத்து, கீதை, சூத்திரம் என்ற மூன்று நூல்களையும் வியாஸர் ஒன்றுபடுத்திக் கொடுத்துள்ள வகையில் ஒப்பிட்டுப் படித்தால்தான் அவற்றின் உண்மைப் பொருளை உள்ளபடி உணர்தல் எளிதாகும்.

3. இந்நூல்களைப் படித்துப் பயன் பெறுவதற்கு வைராக்கியம் நிறைந்த ஸந்நியாஸி தான் உத்தம அதிகாரி. எனினும், ஆன்ம வாழ்க்கையில் நாட்டமுடைய கிருஹஸ்தனுக்கும் உரிமை இல்லாமல் இல்லை. கிருஹஸ்தனுக்குத் தன் ஆச்ரமக் கடமைகளல்லாமல் பிற ஆச்ரமங்களுக்குரிய அத்தியயனம், புலனடக்கம், தவம் முதலியவையும் விதிக்கப்படுவ

தால், எல்லா ஆச்ரமங்களும் இவ்வாச்ரமத்தில் அடங்கும் என்னலாம். இக்காரணத்தால் தான் சாந்தோக்கிய உபநிஷத்து கிருஹஸ்தனைக் குறித்து உபதேசிப்பதுடன் முடிவடைகிறது. இக்கருத்தை விளக்கவே, 'க்ருத்ஸ்ன பாவாத்து க்ருஹிணோபஸம்ஹார:' என்று பிரம்ம சூத்திரம் (3.4.48)கூறுகிறது. பிருஹதாரணியக உபநிஷத்திலும், யாஜ்ஞவல்கிய ஜனக ஸம்வாதத்திலும், பிற விடங்களிலும், கிருஹஸ்தாச்ரமிகளுக்கு உபநிஷத்வித்தையில் உரிமை உண்டு என்பது காணக்கிடக்கின்றது. ஆகையால் வேதாந்த மும்மணிகளாகிய இவை உலகைத் துறந்தோர்க்குத் தாம் உரியன என்று எண்ணி இவற்றினின்று அஞ்சி எட்டி நில்லாமல், நல்வாழ்வில் நாட்டமுடைய அனைவரும் இவற்றை ஆதரவுடன் ஆராய்ந்தறிய முன் வர வேண்டும். இவை ஒரு சாராருடைய தனிக் கொள்கைகளைப் புகட்டும் நூல்களல்ல. இறைவன் அனைவருக்கும் பொதுவாய் விளங்குவது போல் 'அவரவர் தம தமதறிவகை' அறிந்து அனுபவிக்கத்தக்க பொது உடைமை இவை. இவற்றை உள்ளன்புடன் நேசித்து ஊக்கத்துடன் வாசித்தால் நமது மதத்தைப் பற்றிப் பரவியுள்ள மூட நம்பிக்கைகள் ஒழிந்து, சீரிய வேதாந்தக் கொள்கைகள் மீண்டும் நிலைபெறவும், நாம் வாழ்வாங்கு வாழவும் வழி ஏற்படும்.

4. இம்மூன்று நூல்களின் தொகை 'ப்ரஸ்த்தானத்ரயம்' எனும் சிறப்புப் பெயரால் வழங்கும். இவைகட்கே முக்கியமாக மதாசாரியர்கள் எல்லோரும் விரிவுரைகள் எழுதியிருக்கின்றனர். 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையை நமது நாளில் நிலைநிறுத்திய இராமகிருஷ்ண பரமஹம்ஸர் இந்நூல்களுக்குப் 'பாஷ்யம்' எழுதாவிட்டாலும், அவர் வாழ்க்கையும் வாய்மொழியும் சிறந்த உரைகளாய் விளங்குகின்றனவாகலின், இந்நூலிற்கு அவருடைய உபதேச மொழிகளைப் பின்பற்றியே 'ஸ்ரீராமகிருஷ்ண தீபம்' எனும் குறிப்புரை வரையப்பட்டிருக்கிறது.

5. உபநிஷதங்களிலும் பிரம்மசூத்திரங்களிலும், முதல் நூல்களில் எந்த மாதிரி எண்குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளனவோ அம்மாதிரியே இங்குங் கொடுக்கப்பட்டுள்ளன. உபநிஷதங்களில் கருமகாண்டத் தொடர்புள்ள பகுதிகளும், சூத்திரங்களில் ஸாங்கியம், வைசேஷிகம் முதலிய வாதங்களின் கண்டனங்களும் விரிவுக்கஞ்சிச் சுருக்கத்தில் விடப்பட்டுள்ளன.

6. நூல் முழுவதையும் நன்கு பரிசோதனை செய்து அச்சில் பிழை வராமல் திருத்திக் கொடுத்துதவிய பிரம்மஸ்ரீ வழுதூர் ராஜகோபால சர்மா அவர்களுக்கும், விரைவில் அழகுபட அச்சிட்டுத்தந்த கபீர் அச்சுக்கூடத்தாருக்கும், இனி இதைப் படிக்கப்போகும் அன்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விஜயதசமி,
கர ஹூ புரட்டாசி மீ 24உ
10—10—1951

உரையாசிரியர்.

# குறிகளின் விளக்கம்

## உச்சரிப்புக் குறிகள்

| | | |
|---|---|---|
| க | ग | 'கங்கை' என்பதில் போல. |
| ட | ड | 'குடம்' ,, |
| த | द | 'பாதம்' ,, |
| ப | ब | 'இன்பம்' ,, |
| ரு | ऋ | 'எருது' ,, |
| ஶ | श | 'பாசம்' ,, |

ஹ, ஹி, ஹூ...'ராம:'=ராமஹ; ஸ்ரீ:=ஸ்ரீ ஹி; பாண்டு:=பாண்டுஹூ; என்றவாறு ஈற்றெழுத்துடன் ஒத்துவரும்.

ஃ 'க: கிம்'=கஃ கிம்.

ஃ 'அ' தொக்கி நிற்பதைக் குறிக்கும் 'இதஃ'=இதகும்.

## மற்றக் குறிகள்

உ-ம்.—உதாரணம்
ஒ.—ஒப்பிடுக.
கீ.—ஸ்ரீமத்பகவத்கீதை
பி. சூ.—பிரம்ம சூத்திரம்
ம. பா.—மஹாபாரதம்
பாக.—ஸ்ரீமத் பாகவதம்
ரா. கி.—ஸ்ரீராமகிருஷ்ணர்
சங்.—ஸ்ரீசங்கரர்
ராமானு.—ஸ்ரீராமானுஜர்

ஈச.—ஈசாவாஸ்ய உபநிஷத்து
கே.—கேன உபநிஷத்து
கட.—கட ,,
ப்ர.—ப்ரஶ்ன ,,
மு.—முண்டக ,,
மா.—மாண்டூக்கிய உபநிஷத்து
தை.—தைத்திரீய ,,
ஐ.—ஐதரேய ,,
சா.—சாந்தோக்கிய ,,
ப்ரு.—ப்ருஹதாரண்யக ,,

ॐ

॥ आत्मसमर्पणम् ॥

स्वरूपनिरूपणहेतवे

श्री शिवानन्दगुरवे नमः ॥

ओं असतो मा सद्गमय
तमसो मा ज्योतिर्गमय
मृत्योर्माऽमृतं गमय ॥

॥ ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

அஸத்தினின்று என்னை ஸத்துக்கு அழைத்துச் செல்.
இருளினின்று என்னை ஒளிக்கு அழைத்துச் செல்.
சாவினின்று என்னைச் சாகாமைக்கு அழைத்துச் செல்.
ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

—ப்ரு. 1.3.28.

ॐ

# ॥ छान्दोग्योपनिषत् ॥

ॐ आप्यायन्तु ममाङ्गानि...सर्वं ब्रह्मोपनिषदं ।
ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

## ॥ प्रथमोऽध्यायः ॥

ओमित्येतदक्षरमुद्गीतमुपासीत ओमिति ह्युद्गायति तस्योपव्याख्यानं ॥ १.१ ॥

# சாந்தோக்யோபநிஷத்

ஓம் ஆப்யாயந்து மமாங்கானி...ஸர்வம் ப்ரஹ்மோபநிஷதம் ।
ஓம் ஶாந்தி : ஶாந்தி : ஶாந்தி : ॥

## ॥ ப்ரதமோऽத்த்யாய : ॥

ஓமித்யேததக்ஷர-முத்கீத-முபாஸீத, ஓமிதி ஹ்யுத்காயதி தஸ்யோப-வ்யாக்க்யானம் ॥ 1.1 ॥

---

# சாந்தோக்கியோபநிஷத்து

ஓம். என்னுடைய அங்கங்களை......எல்லாவற்றையும் உபநிஷத்தில் உறையும் பிரம்மம் வலிமை பெறச் செய்யட்டும்.

ஓம். மூவ்வகையிலும் சாந்தி நிலவுக.

## முதல் அத்தியாயம்

1.1. 'உத்கீதம்' எனப் பெயர் பெற்ற 'ஓம்' என்ற அக்ஷரத்தை உபாசிக்க வேண்டும். ஓம் என்று (ஆரம்பித்தே வேதம்) கானம் செய்யப்படுவதால் (அது உத்கீதம் எனப்படும்). இனி அதன் விளக்கம்.

---

உபநிஷத்தின் பெயருந் தொடர்பும் :—

இவ்வுபநிஷத்து ஸாமவேதத்தில் சாந்தோக்கியப் பிராம்மணத்தைச் சேர்ந்தது. 'சந்தோக:' என்றால் ஸாமகானம் செய்பவன் என்று

एषां भूतानां पृथिवी रसः पृथिव्या आपो रसोऽपामोषधयो रस ओषधीनां पुरुषो रसः पुरुषस्य वाग्रसो वाच ऋग्रस ऋचः साम रसः साम्न उद्गीथो रसः ॥ १.२ ॥

ஏஷாம் பூதாநாம் ப்ருதிவீ ரஸ:, ப்ருதிவ்யா ஆபோ ரஸோऽபா-மோஷதயோ ரஸ, ஓஷதீநாம் புருஷோ ரஸ:, புருஷஸ்ய வாக்ரஸோ, வாசருக்ரஸ, ருச: ஸாமரஸ:, ஸாம்ன உத்கீதோ ரஸ: ॥ 1. 2 ॥

---

**1.2. பூதங்களின் ரஸம் (சிறப்பான பகுதி) மண்; மண்ணின் ரஸம் தண்ணீர்; தண்ணீரின் ரஸம் தாவர வர்க்கம்; தாவரங்களின் ரஸம் மனிதன்; மனிதனின் ரஸம் வாக்கு; வாக்கின் ரஸம் ருக்; ருக்கின் ரஸம் ஸாமம்; ஸாமத்தின் ரஸம் உத்கீதம் (ஓங்காரம்).**

---

பொருள். அதினின்று சாந்தோக்கியம் என்ற பெயர் வந்தது. சாந்தோக்கியப் பிராம்மணத்தில் பத்து அத்தியாயங்கள் உண்டு. அவற்றுள் முதல் இரண்டு அத்தியாயங்கள் நீங்கலாக மீதி எட்டும் சேர்ந்து சாந்தோக்கியோபநிஷத்து.

பிரம்ம சூத்திரத்தில் பெரும் பகுதி இவ்வுபநிஷத்தின் மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதனால் இதற்குத் தனிச் சிறப்பு உண்டு.

பிரச்னம், முண்டகம், கடம் முதலிய உபநிஷத்துக்களைப்போல இது ஒரே ரிஷியின் உபதேசமாக அமைந்ததன்று, பிருஹதாரணியகத்தைப் போல் பல ரிஷிகளின் உபதேசங்களின் (ஸம்ஹிதை) தொகுதி. ஸநத்குமாரர் பூமாவித்தையை நாரதருக்கு உபதேசிக்கிறார்; உத்தாலக ஆருணி ஸத்வித்தையை சுவேத கேதுவுக்கு உபதேசிக்கிறார்; புருஷவித்தையின் ரிஷி மஹீதாஸ ஐதரேயர்; ஸம்வர்க்க வித்தையின் ரிஷி ரைக்வர்; ஷோடசகலாப் பிரம்மவித்தையின் ரிஷி ஸத்யகாமஜாபாலர்; சாண்டில்ய வித்தையின் ரிஷி சாண்டில்யர்; பஞ்சாக்னி வித்தையின் ரிஷி ப்ரவாஹண ஜைவலி.

'ஸர்வங்-கல்-விதம் ப்ரஹ்ம', 'தத் த்வம் அஸி' 'ஆத்மைவேதம் ஸர்வம்' முதலிய மஹா வாக்கியங்களில் இவ்வுபநிஷத்து ஒடுங்கும். மஹா வாக்கியங்கள் ஓங்காரத்தில் அடக்கம். படிப்படியாக ஓங்காரப் பொருளை விளங்க வைப்பதே இவ்வுபநிஷத்தின் முக்கிய நோக்கமாகக் காணப்படுகிறது. 'ஓமித்யேத-தக்ஷர-முத்கீத-முபாஸீத' என்று ஆரம்பித்து, 'ப்ரஹ்ம லோக-மபிஸம்பத்யதே ந ச புனராவர்த்ததே' என்று முடிவடைகிறது.

तेनेयं त्रयी विद्या वर्तते ओमित्याश्रावयति ओमिति शꣳसत्योमित्युद्गायति एतस्यैवापचित्यै महिम्ना रसेन ॥ १.९ ॥

तेनोभौ कुरुतो यश्चैतदेवं वेद यश्च न वेद। नाना तु विद्या चाविद्या च यदेव विद्यया करोति श्रद्धयोपनिषदा तदेव वीर्यवत्तरं भवतीति खल्वेतस्यैवाक्षरस्योपव्याख्यानं भवति ॥ १.१० ॥

தேநேயம் த்ரயீ வித்யா வர்த்ததே, ஓமித்யாஶ்ராவயதி, ஓமிதி ஶꣳஸத்-யோமித்-யுத்காயதி, ஏதஸ்யை-வாபசித்யை மஹிம்ஞ ரஸேன ॥ 1. 9 ॥

தேநோபௌ குருதோ, யஶ்சைத-தேவம் வேத, யஶ்ச ந வேத, நாஞ து வித்யா சாவித்யா ச, யதேவ வித்யயா கரோதி ஶ்ரத்த-யோபநிஷதா, ததேவ வீர்யவத்தரம் பவதீதி கல்-வேதஸ்யைவா-க்ஷரஸ்யோப-வ்யாக்க்யானம் பவதி ॥ 1. 10 ॥

---

1.9. அதஞலேயே (ஓங்காரத்தாலேயே) மூன்று வேதங்களும் பிரவிருத்திக்கின்றன. (யாகங்களில் தேவர்களை அழைத்து) கேட்கும்படி செய்வதற்கு ஓம் என்று கூவி யழைக்கின்றனர்; ஓம் என்று (தொடங்கி) ருக்வேத மந்திரங்களைச் சொல்லுகின்றனர்; ஓம் என்று தொடங்கியே ஸாமகானம் செய்கின்றனர். இந்த அக்ஷரத்தின் மகிமையாலும் ரஸத்தாலும் (இந்த அக்ஷரத்தை உச்சரிப்பதானது) பரம் பொருளைப் போற்றுவதாகிறது.

1.10. (ஓங்காரத்தின் உச்சாரணமாகிய) இதஞல் இதை அறிந்தவர், இதை அறியாதவர் என்ற இருவகையாரும் (கருமங்களைச்) செய்கிருர்கள். அறிவும் அறியாமையும் முற்றும்

---

1.1. ஓம்—ஒ.தை. 1.8 ; மா. 1. கீ. 17. 23, 24 ; பி. சூ. 3. 3. 7.

1.9. பி. சூ. 1. 3. 17.

1.10. ஒ. கீ. 17. 18 ; பி. சூ. 3. 4. 4. பி. சூ. 4. 1. 19 (யதேவ வித்யயேதி ஹி)

1.10. கடுக்காயின் குணங்களை அறிந்த வைத்தியன் அதைச் சாப்பிட்டாலும் அதன் குணங்களை அறியாத ஒரு நோயாளி சாப்பிட்டாலும் அதஞல் வயிற்றிலுள்ள மலக்கழிவு ஏற்பட்டு ஆரோக்கியம் உண்டாகும்.

अथ ह चक्षुरुद्गीतमुपासांचक्रिरे तत्रासुराः पाप्मना विविधुस्तस्मात्तेनोभयं पश्यति दर्शनीयं चादर्शनीयं च पाप्मना ह्येतद्विद्धम् ॥ २.४ ॥

அத ஹ சக்ஷுருத்கீத-முபாஸாஞ்-சக்ரிரே, தத்ராஸுரா: பாப்மனு விவிதுஸ் தஸ்மாத்-தேநோபயம் பஶ்யதி, தர்ஶனீயஞ் சாதர்ஶனீயஞ்ச, பாப்மனு-ஹ்யேதத் வித்தம் ॥ 2.4 ॥

---

வேறன்றோ? (ஆகையால்) தத்வ ஞானத்துடனும், சிரத்தையுடனும், யோகமுறைப்படியும் எது செய்யப்படுகிறதோ அதுவே மிகுந்த வீரியமுடையதாகும் என்பது தெளிவு. இங்ஙனம் இவ்வக்ஷரத்தின் விளக்கம்.

2.4. (இதனுல் அசுரர்களை ஜயிக்கலாம் என்று தேவர்கள்) கண்ணை உத்கீதமாக உபாசித்தனர். அங்கு அசுரர்கள் பாவச் செயலால் அதைக் கெடுத்தனர். ஆகையால் அதைக் (கண்ணைக்) கொண்டு காணத்தக்கதையும் காணத்தகாததையும் (உலகம்) காண்கிறது. (இங்ஙனம் அது) பாவத்தால் கெடுக்கப் பட்டதாயிற்று.

---

ஆனுல் அதைச் சாப்பிடும் அளவும் முறையும் தெரிந்த வைத்தியன் அதைச் சரிவரக் கையாண்டு நல்ல பலனை எளிதில் அடைவான். அறியாத நோயாளியோ முழுப்பலனை அடையாமற் போகலாம், ஒரு வேளை முறை தவறி உபயோகித்துக் கெடுதியையும் அடையலாம். மந்திரமும் மருந்துபோலவே. இதை நன்கு அறியவேண்டும் என்று வற்புறுத்தவே அடிக்கடி 'ய ஏவம் வேத' என்னும் பல்லவி படிக்கப்படுகின்றது.

2.4. கண்ணை உபாசித்தது போலவே தேவர்கள் மற்ற இந்திரியங்களையும் மனதையும் உத்கீதம் என உபாசித்தனர். ஆனுல் ஒவ்வொன்றும் அசுரர்களின் பாவச் செயலால் கெடுதியுற்றதாகவே ஆயிற்று. முடிவில் முக்கியப் பிராணனை அங்ஙனம் உபாசித்தபோது அதையும் அசுரர்கள் கெடுக்க முயன்றனர். அப்போது கற்பாறையில் மோதின மண்ணுங்கட்டி போல் அவர்கள் சிதறிப்போயினர். இந்த இரகசியத்தை அறிந்தவனைப் பாவம் அணுகாது. அணுகினுல் அது சிதறுண்டு போம்.

य एषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषो दृश्यते । तस्य यथा कप्यासं पुण्डरीकमेवमक्षिणी तस्योदिति नाम स एष सर्वेभ्यः पाप्मभ्य उदित उदेति ह वै सर्वेभ्यः पाप्मभ्यो य एवं वेद ॥ ६.७ ॥

अथ य एषोऽन्तरक्षिणि पुरुषो दृश्यते सैवर्क्तत्साम तदुक्थं तद्यजुस्तद्ब्रह्म तस्यैतस्य तदेव रूपं तदमुष्य रूपं यावमुष्य गेष्णौ यन्नाम तन्नाम ॥ ७.५ ॥

ய. ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக-மேவ-மக்ஷிணீ தஸ்யோதிதி நாம ஸ ஏஷ ஸர்வேப்ப்ய: பாப்மப்ப்ய உதித உதேதி ஹ வை ஸர்வேப்ப்ய: பாப்மப்ப்யோ ய ஏவம் வேத ॥ 6. 7. ॥

அத ய ஏஷோऽந்த-ரக்ஷிணி புருஷோ த்ருஶ்யதே, ஸைவ ருக் தத் ஸாம, தது க்தம் தத்யஜுஸ் தத்ப்ரஹ்ம, தஸ்யைதஸ்ய ததேவ ரூபம், ததமுஷ்ய-ரூபம், யாவமுஷ்ய கேஷ்ணௌ, யந்நாம தந்நாம ॥ 7. 5. ॥

---

6.7. இந்த சூரியனுக்குள் பொன்போன்றொளிரும் எந்தப் புருஷன் காணப்படுகிறானோ அவனுடைய கண்களிரண்டும் தாமரை போன்றவை. அவன், எல்லாப் பாவங்களுக்கும் அப்பால் உயரச் சென்றுவிட்டதால் அவனுக்கு 'உத்' என்று பெயர். எவன் இங்ஙனம் அறிகிறானோ அவனும் எல்லாப் பாவங்களினின்றும் விலகி உயரச் செல்லுகிறான்.

7.5. கண்ணினுள் எந்தப் புருஷன் காணப்படுகிறானோ அவனே ருக்கு, அவனே ஸாமம், அவனே உக்தம், அவனே யஜுஸ், அவன் (பிரம்மம்) ஸர்வவேதமயம். (சூரிய மண்டலத்தில் காணப்

---

7.5. ஒ. (ஸ யஶ்சாயம் புருஷே) இந்தப் புருஷனிடம் உள்ளவன் எவனோ, சூரியனிடம் உள்ளவன் எவனோ, அவன் ஒருவனே. (தை. 2. 8.)

பி. சூ. 1. 1. 20. (அந்தஸ்-தத்-தர்மோபதேஶாத்)

உக்தம்—ருக்வேதத்தில் பாடப்படுவது உக்தம் அல்லது சஸ்த்ரம். ஸாமத்தில் பாடப்படுவது ஸ்தோத்ரம். ஒ. ஓமிதி ஸாமானி காயந்தி । ஓம் ஶோமிதி ஶஸ்த்ராணி ஶம்ஸந்தி (தை. 1. 8)

அவனே ருக் ஸாமம் யஜுஸ்—தை. 1. 5-ல் விவரித்துள்ள பிரகாரம் அதிலோகம் அதிதைவம் அத்தியாத்மம் முதலிய வகையில் உபாசிக்கும் போது வியாஹ்ருதிகளாகவும், அக்னி வாயு ஆதித்யன் முதலிய தெய்வங்க

अस्य लोकस्य का गतिरित्याकाश इति होवाच सर्वाणि ह वा इमानि भूतान्याकाशादेव समुत्पद्यन्त आकाशं प्रत्यस्तं यन्त्याकाशो ह्येवेभ्यो ज्यायानाकाशः परायणम् ॥ ९.1 ॥

* * * *

मटचीहतेषु कुरुष्वाटिक्या सह जाययोषस्तिर्ह चाक्रायण इभ्यग्रामे प्रद्राणक उवास ॥ 10.1 ॥

அஸ்ய லோகஸ்ய கா கதிரித்-யாகாஶ இதி ஹோவாச, ஸர் வாணி ஹ வா இமானி பூதான்-யாகாஶாதேவ ஸமுத்பத்யந்த, ஆகாஶம் ப்ரத்யஸ்தம் யந்த்யாகாஶோ ஹ்யேவேப்ப்யோ ஜ்யா-யாணுகாஶ: பராயணம் ॥ 9. 1. ॥

* * * *

மடசீஹதேஷு குருஷ்வாடிக்யா ஸஹ ஜாயயோஷஸ்திர்-ஹ சாக்ராயண இப்ப்யக்ராமே ப்ரத்ராணக உவாஸ ॥ 10. 1 ॥

---

படும் புருஷனுகிய) அவனுக்கு எந்த ரூபமோ அந்த ரூபமே இவனுக்கும்; எந்தப் பருவங்களோ அந்தப் பருவங்களே இவனுக்கும்; எந்தப் பெயரோ அதே பெயர்.

9.1. இவ்வுலகிற்குப் புகலிடம் எது என (சாலாவத்தியர் கேட்க) ஆகாசம் என்று (பிரவாஹணர்) கூறினுர். ஆகாசத்திலேயன்றே எல்லாப் பொருள்களும் உண்டாகின்றன; ஆகவே முடியும்போது ஆகாயத்திலேயன்றே புகுகின்றன. ஆகாசமே இவைகளுக்கெல்லாம் பெரியது, ஆகாசமே முடிவான உறைவிடம்.

* * * *

10.1. (ஒரு சமயம்) குருதேசம் இடியினுல் நாசமடைந்த போது (பஞ்சம் ஏற்பட்டதால்) உஷஸ்தி என்ற சாக்ராயணர் தன் பால்ய மனைவியுடன் யானைப்பாகர் கிராமம் ஒன்றில் (பசியால்) வாடி வதங்கிப் போய்த் தங்கினுர்.

---

ளாகவும், ருக்-யஜுஸ்-ஸாமம் முதலிய வேதங்களாகவும் விளங்குவது அவன் ஒருவனேயாம்.

9.1. இங்கு கூறியது 'ஆகாச வித்தை' எனப்படும்.

ஆகாசம்—ஆ—எங்கும், காசம்—பிரகாசிப்பது எதுவோ அது ஆகாசம். 'அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமா' யிருப்பது பிரம்மமே. ஆகையால் ஆகாசம் எனும் சொல் பிரம்மத்தையே குறிக்கும்.

ஒ. (ஆகாசஸ் தல்லிங்காத்) பி. சூ. 1. 1. 22. (ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம) தை. 1. 6. 2.

स हेभ्यं कुल्माषान् खादन्तं बिभिक्षे तꣳ होवाच नेतोऽन्ये विद्यन्ते यच्च येम इम उपनिहिता इति ॥ 10.२ ॥

एतेषां मे देहीति होवाच तानस्मै प्रददौ हन्तानुपानमित्युच्छिष्टं वै मे पीतꣳ स्यादिति होवाच ॥ 10.३ ॥

न स्विदेतेऽप्युच्छिष्टा इति न वा अजीविष्यमिमां न खादन्निति होवाच कामो म उदपानमिति ॥ 10.४ ॥

॥ इति प्रथमोऽध्यायः ॥

ஸ ஹேப்ப்யம் குல்மாஷான் காதந்தம் பிபிக்ஷே தꣳஹோவாச நேதோऽன்யே வித்யந்தே, யச்ச யேம இம உபநிஹிதா இதி ॥ 10.2 ॥

ஏதேஷாம் மே தேஹீதி ஹோவாச, தானஸ்மை ப்ரததௌ, ஹந்தானுபானமிதி; உச்சிஷ்ட்டம் வை மே பீதꣳஸ்யாதிதி ஹோவாச ॥ 10. 3 ॥

ந ஸ்வி-தேதேப்-யுச்சிஷ்ட்டா இதி; ந வா அஜீவிஷ்ய-மிமாந் ந காதந்நிதி ஹோவாச காமோ ம உதபானமிதி ॥ 10. 4 ॥

இதி ப்ரதமோऽத்த்யாய: ॥

---

10.2. கொள்ளைத் தின்றுகொண்டிருந்த ஒரு யானைக்காரனைப் பார்த்து (அவனிடம்) அவர் பிச்சை கேட்டார். 'தின்று மிகுந்த இதைத் தவிர வேறு ஒன்றும் இல்லையே' என்று அவன் கூறினான்.

10.3. 'அதை எனக்குக் கொடு' என்றார்; அதை இவருக்குக் கொடுத்து 'இந்தாரும் குடிக்க நீரும்' என்றான். '(அதை ஏற்றுக் கொண்டால்) உச்சிஷ்டத்தை உண்டவனாவேன்' என்று மறுத்தார்.

10.4. 'இது (இந்தக் கொள்) மட்டும் உச்சிஷ்டமன்றோ?' என்றான். 'அதை உண்ணாவிடில் என் உயிர் நிலைக்காது. குடி நீரோவெனின் காமமாகும்' என்றார்.

இங்ஙனம் முதல் அத்தியாயம் முற்றும்.

---

10.1–4. இங்கு கூறியது ஆபத் தர்மம். உயிருக்கு ஆபத்தில் ஆசாரத்தை மீறுவது தவறாகாது. ஆபத்து இல்லாத விஷயத்தில் மீறுவது தவறாகும். நீர் கிடைக்கக் கூடியதாயிருந்ததால் அதில் உச்சிஷ்டத்தை ஏற்கவில்லை. உணவு கிடைக்காததால் அதில் உச்சிஷ்டத்தை ஏற்றுக் கொண்டார்.

## ॥ द्वितीयोऽध्यायः ॥

त्रयो धर्मस्कन्धा यज्ञोऽध्ययनं दानमिति प्रथमः। तप एव द्वितीयः। ब्रह्मचार्याचार्यकुलवासी तृतीयोऽत्यन्तमात्मानमाचार्यकुलेऽवसादयन्। सर्व एते पुण्यलोका भवन्ति। ब्रह्मसंस्थोऽमृतत्वमेति ॥ २३.१ ॥

## ॥ த்விதீயோऽத்த்யாய: ॥

த்ரயோ தர்மஸ்கந்த்தா யஜ்ஞோऽத்த்யயனம் தானமிதி ப்ரதம: । தப ஏவ த்விதீய: । ப்ரஹ்மசாரீ ஆசார்யகுலவாஸீ த்ருதீயோऽத்யந்த-மாத்மான-மாசார்யகுலேऽவஸாதயன் । ஸர்வ ஏதே புண்யலோகா பவந்தி । ப்ரஹ்மஸம்ஸ்த்தோ-ऽம்ருதத்வ-மேதி ॥ 23.1 ॥

---

## இரண்டாம் அத்தியாயம்

23.1. தர்மத்தின் ஸ்கந்தங்கள் (பிரிவினை) மூன்று: யஜ்ஞம், அத்தியயனம், தானம் என்ற இது முதல் பிரிவு (கிருஹஸ்தாசிரம தர்மம்); தவமே இரண்டாவது (தவநிலையான வானப்பிரஸ்த ஸந்நியாஸ தர்மம்); ஆசார்ய குலத்தில் ஆயுள் முடியத் தன்னை யடக்கி வாழும் பிரம்மசாரியின் தர்மம் மூன்றுவது. இவர்கள் எல்லோரும் புண்ணிய லோகங்களை யடைவதற்குரியவர்களாகிருர்கள். (பிரம்ம ஸம்ஸ்த்தன்) பிரம்மஞானியோவெனின் (அழியும் லோகாந்தரங்களுக்குச் செல்லுவதில்லை) அழியாத ஆத்ம நிலையை எய்துகிருன்.

---

23.1–2. ஒ. ப்ர. 1.10 15; பி. சூ. 3.4.17 (ஊர்த்த்வரேத:ஸு ச). ஒ. (ப்ராணினும் ஸாக்ஷாத் அப்ப்யுதய-நி:ஶ்ரேயஸ ஹேதுர்-ய: ஸ தர்ம:) ஜீவர்களுக்கு நேராக இகத்திலும் பரத்திலும் உயர்ந்த நன்மையளிப்பதற்கு எது காரணமோ அது தர்மம்.

23.1. இஜ்யாத்த்யயன தானானி தப:ஸத்யம் க்ஷமா த்ருதி: । அலோப இதி மார்க்கோயம் தர்மஸ்யாஷ்டவித: ஸ்ம்ருத: ॥ தத்ர பூர்வம் சதுஷ்டய்யம்

प्रजापतिर्लोकानभ्यतपत्तेभ्योभितप्तेभ्यस्त्रयीविद्या संप्रास्रवत्तामभ्यतपत्तस्या अभितप्ताया एतान्यक्षराणि संप्रास्रवन्त भूर्भुवः स्वरिति ॥ २३.२ ॥

ப்ரஜாபதிர்-லோகா-னப்ப்யதபத் தேப்ப்யோபிதப்தேப்ப்யஸ்-த்ரயீவித்யா ஸம்ப்ராஸ்ரவத், தாமப்ப்யதபத் தஸ்யாபிதப்தாயா ஏதான்-யக்ஷராணி ஸம்ப்ராஸ்ரவந்த பூர்ப்புவ: ஸ்வரிதி ॥ 23.2 ॥

---

23.2. உலகங்களைப் பிரஜாபதி தவத்தால் ஆராய்ந்தார். அத்தவத்தின் பயனாய் மூன்று வேதங்கள் தோன்றின. அவற்றைத் தவத்தால் ஆராய்ந்தார். அத்தவத்தின் பயனாய் பூ: புவ: ஸுவ: என்ற அக்ஷரங்கள் தோன்றின.

---

தம்பார்த்தமபி ஸேவ்யதே। உத்தரஶ்ச சதுர்வர்க்கோ ந அமஹாத்மஸு திஷ்டதி ॥) யஜ்ஞம், அத்தியயனம், தானம், தவம், ஸத்தியம், பொறுமை, தளராமை, லோபமின்மை என தர்மத்தின் மார்க்கம் எட்டு விதம் எனக் கூறப்படுகிறது. அதில் முதல் நான்கும் இடம்பத்துக்காகவும் சேவிக்கப்படலாம். பின் நான்கோ மஹான்களிடமின்றி நிலை பெற மாட்டா. (ம. பா.)

(யதோ தர்மஸ்-ததோ ஜய:) எங்கு தர்மமோ அங்கு ஜயம் உண்டு. யஜ்ஞமுந் தானமுந் தவமுமே விவேகிகளுக்குப் பரிசுத்தம் அளிப்பவை. (கீ. 18. 5).

யஜ்ஞமாவது ஈசுவரனை உத்தேசித்தும் அவனுக்கு அங்கமாகிய தேவதைகளை உத்தேசித்தும் செய்யும் திரவியத் தியாகம். தானமாவது மனிதர்களுக்குச் செய்யும் உதவி. தவமாவது தன்னடக்கம். இம்மூன்றினாலுந் தான் மனிதனுடைய கடமை பூர்த்தியாகும்.

அத்தியயனமுந் தவமேயாம். 'தமக்குரிய வேதநூல் ஓதும் பழக்கம் வாக்காற் செய்யுந் தவம் என்று கூறப்படும்'. (கீ. 17. 15.)

பூ: புவ: ஸுவ:—ஓ. பூரிதி வா ருச:। புவ இதி ஸாமானி। ஸுவரிதி யஜூம்ஷி। மஹ இதி ப்ரஹ்ம ॥ (தை. 1. 5. 2.)

तान्यभ्यतपत्तेभ्योऽभितप्तेभ्य ॐकारः संप्रास्रवत्तद्यथा शङ्कुना सर्वाणि पर्णानि संतृण्णान्येवमोंकारेण सर्वा वाक् संतृण्णौकार एवेदꣳ सर्वमोंकार एवेदꣳ सर्वम् ॥ २३.३ ॥

॥ इति द्वितीयोऽध्यायः ॥

## ॥ तृतीयोऽध्यायः ॥

ॐ असौ वा आदित्यो देवमधु ॥ १.१ ॥

தான்யப்ப்யதபத்-தேப்ப்யோऽபிதப்தேப்ப்ய ஓங்கார: ஸம்ப்ராஸ்ரவத், தத் யதா ஶங்குனா ஸர்வாணி பர்ணானி ஸந்த்ருண்ணான்-யேவ-மோங்காரேண ஸர்வா வாக் ஸந்த்ருண்-ணௌங்கார ஏவேதꣳ ஸர்வ-மோங்கார ஏவேதꣳ ஸர்வம் ॥ 23·3 ॥

॥ இதி த்விதீயோ ऽத்த்யாய: ॥

## ॥ த்ருதீயோऽத்த்யாய : ॥

ஓம் அஸௌ வா ஆதித்யோ தேவமது ॥ 1·1 ॥

---

23.3 மேலும் அவற்றைத் தவத்தால் ஆராய்ந்தார். அத்தவத்தின் பயனாய் ஓங்காரம் தோன்றிற்று. இலைகளெல்லாம் நரம்பினால் நன்கு ஊடுருவி வியாபிக்கப்பட்டிருப்பதுபோல் வார்த்தைகளெல்லாம் ஓங்காரத்தினால் ஊடுருவி வியாபிக்கப்பட்டிருக்கிறது. இது எல்லாம் ஓங்காரமே, இது எல்லாம் ஓங்காரமே.

இங்ஙனம் இரண்டாவது அத்தியாயம் முற்றும்.

## மூன்றாவது அத்தியாயம்

1.1. ஓம். இந்த ஆதித்யன் தேவர்களுக்கு (அமிருதம்) மது.

---

23.3. ஆகையால் ஓம் என்று உச்சரித்தே வேதியர்களின் சாஸ்திரோக்தமான யக்ஞம் தானம் தவம் முதலிய கருமங்கள் எப்போதும் ஆரம்பிக்கின்றன. (கீ. 17.24.)

1.1. ஒ—இங்கு கூறப்படுவது 'மது வித்தை' எனப்படும். மது எப்படிக் களியூட்டுகிறதோ அப்படி சூரியன் எல்லா இந்திரியங்களுக்கும் இந்திரியங்களுக்கு அதிஷ்டானமான தேவர்களுக்கும் களியூட்டுகிறான்.

न वै देवा अश्नन्ति न पिबन्त्येतदेवामृतं दृष्ट्वा तृप्यन्ति ॥ ६.१ ॥

तदेष श्लोकः । न वै तत्र न निम्लोच नोदियाय कदाचन । देवास्तेनाहꣳ सत्येन मा विराधिषि ब्रह्मणेति ॥ ११.२ ॥

ந வை தேவா அஶ்னந்தி ந பிபந்த்-யேத-தேவாம்ருதந் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி ॥ 6.1 ॥

ததேஷ ஶ்லோக: । ந வை தத்ர ந நிம்லோச நோதியாய கதாசன । தேவாஸ்-தேநாஹꣳஸத்யேன மா விராதிஷி ப்ரஹ்மணேதி ॥ 11.2 ॥

---

6.1. தேவர்கள் உண்மையில் உண்பதுமில்லை பருகுவதுமில்லை. இந்த அமிருதத்தைப் பார்த்தே திருப்தியடைகின்றனர்.

11.2. (பிரம்மலோக விஷயத்திலோவெனின் ஆதித்தியனைப் பற்றிப்) பின்வரும் சுலோகம் உண்டு. (அதைக் கண்டறிந்த ரிஷி

---

ஒ—(மது வாதா ருதாயதே । மது க்ஷரந்தி ஸிந்தவ: । ...மதுமாꣳ அஸ்து ஸூர்ய:) காற்று இனிமை தருவதாய் வீசட்டும். நதிகள் இன்பத்தைப் பெருக்கி ஓடட்டும்......சூரியன் இன்பந் தருபவனாக இருக்கட்டும்.

மது நமக்கு மது நமக்கு மது நமக்கு விண்ணெலாம்
மதுர மிக்க ஹரி நமக்கு மதுவெனக் கதித்தலால்
மது நமக்கு மதியு நாளும் மது நமக்கு வானமீன்
மது நமக்கு மண்ணு நீரும் மது நமக்கு மலையெலாம்
மது நமக்கோர் தோல்வி வெற்றி மது நமக்கு வினையெலாம்
மது நமக்கு மாதரின்பம் மது நமக்கு மது வகை
மது நமக்கு மதி நமக்கு மது மனத் தொடாவியும்
மதுர மிக்க சிவ நமக்கு மதுவெனக் கதித்தலால்    —(பாரதி).

அந்தரங்கங் குளிர்ந்திருத்தல் அந்தமிலாத் தவத்தின் பயன். அதுவே மது வித்தையின் ரகசியம்.

ஒ. சா. 3.17.7

ஒ. பி. சூ. 1.3.31

11.2. ஒரு ரிஷி சூரியனை ஆத்மாவாக உபாசித்துத் தியானத்தி

न ह वा अस्मा उदेति न निम्लोचति सकृद्दिवा हैवास्मै भवति य एतामेव ब्रह्मोपनिषदं वेद ॥ ११.३ ॥

ந ஹ வா அஸ்மா உதேதி ந நிம்லோசதி, ஸக்ருத்-திவா ஹை வாஸ்மை பவதி, ய ஏதாமேவ ப்ரஹ்மோபநிஷதம் வேத ॥ 11.3 ॥

---

கூறுவது)—அங்கு (சூரியனுடைய இயற்கை) இப்படியன்று; ஒருபோதும் அஸ்தமிக்கிறதுமில்லை, உதிக்கிறதுமில்லை. தேவர் களே! அந்த ஸத்தியத்தால் நான் பிரம்மானுபவத்தினின்று மாறு படாமலிருப்பேனாக!

11.3. இந்தப் பிரம்மஞானத்தை யறிந்தவன் எவனோ அவ னுக்கு (ஞான) சூரியன் உதிப்பதுமில்லை, அஸ்தமிப்பதுமில்லை. அவனுக்கு எப்போதும் ஒரே பகலாகவே இருக்கும்.

---

லாழ்ந்து இந்த மந்திரத்தைக் கண்டார். தியானத்திலிருந்து எழுந்தபின் அவரை மற்றொருவர் பின்வருமாறு கேட்டார்: 'நீங்கள் பிரம்மலோகத்தி லிருந்து வருவதால் உங்களை ஒன்று கேட்கிறேன். அங்கேயும் இங்கு போல் சூரியன் இரவு பகலை உண்டாக்கி ஜீவராசிகளின் வாழ்நாட்களைக் குறைப்பதுண்டா?' அதற்குக் கூறிய பதில் 'அங்கு உதயமுமில்லை அஸ்தமனமுமில்லை.' (சங்கரர்)

11.3. ஞானியின் பரமாகாசத்தில் பிரகாசிப்பது ஞான சூரியன். அதற்கு உயர்வு தாழ்வும் போக்குவரத்தும் இல்லை.

ஒ. ஆத்ம ஞானத்தால் எவர்களுடைய அஞ்ஞானம் அழிவுற்றதோ அவர்களுக்கு ஞானமானது சூரியனைப்போல அந்தப் பரம்பொருளை விளங்கச் செய்கிறது. (கீ. 5.16)

(வேதாஹமேதம் புருஷம் மஹாந்த-மாதித்ய-வர்ணம் தமஸ: பரஸ்-தாத்) சூரியனைப்போல் ஸ்வயம் பிரகாசனும் அவித்தையாகிய இருளுக்கு அப்பாற் பட்டவனுமாகிய அந்த மஹா புருஷனை நான் அறிவேன். (புருஷசூக்தம்).

ஒ. ந தத்ர ஸூர்யோ பாதி। (கட. 5.15.)

तद्धैतद्ब्रह्मा प्रजापतय उवाच प्रजापतिर्मनवे मनुः प्रजाभ्यस्तद्धैतदुद्दालकायारुणये ज्येष्ठाय पुत्राय पिता ब्रह्म प्रोवाच ॥ ११.४ ॥

इदं वाव तज्ज्येष्ठाय पुत्राय पिता प्रब्रूयात्प्रणाय्याय वान्तेवासिने ॥ ११.५ ॥

नान्यस्मै कस्मैचन यद्यप्यस्मा इमामद्भिः परिगृहीतां धनस्य पूर्णां दद्यादेतदेव ततो भूय इत्येतदेव ततो भूय इति ॥ ११.६ ॥

தத்தைதத் ப்ரஹ்மா ப்ரஜாபதய உவாச, ப்ரஜாபதிர்-மனவே, மனு: ப்ரஜாப்ப்யஸ்-தத்தைத-துத்தாலகாயாருணயே ஜ்யேஷ்ட்டாய புத்ராய பிதா ப்ரஹ்ம ப்ரோவாச ॥ 11.4 ॥

இதம் வாவ தஜ்ஜ்யேஷ்ட்டாய புத்ராய பிதா ப்ரப்ரூயாத், ப்ரணய்யாய வாந்தேவாஸிநே ॥ 11.5 ॥

நான்யஸ்மை கஸ்மைசன யத்யப்யஸ்மா இமாமத்பி: பரிக்ருஹீதாம் தனஸ்ய பூர்ணாந் தத்யா-தேத-தேவ ததோ பூய இத்யேத-தேவ ததோ பூய இதி ॥ 11.6 ॥

---

11.4. (மதுவித்தை எனும்) இதைப் பிரம்மா பிரஜாபதிக்கு உபதேசித்தார்; பிரஜாபதி மனுவுக்கு; மனு மக்களுக்கு; உத்தாலக ஆருணி என்ற மூத்த குமாரனுக்கு அவருடைய தகப்பனர் (இப்படிப் பரம்பரையாக வந்த) இந்தப் பிரம்மஞானத்தை உப தேசித்தார்.

11.5. (ஆகையால் இதை) தகப்பன் மூத்த பிள்ளைக்கு உப தேசிக்கலாம், அல்லது தகுதியுள்ள மாணக்கனுக்கு (உபதேசிக் கலாம்).

11.6. மற்றபடி எவர்க்கும் உபதேசிக்கக் கூடாது,—எல்லாச் செல்வத்துடனும் நிறைந்த இந்த நீர் சூழ்ந்த பூமியையே கொடுத்த போதிலும். இது அதினும் பெரிது, இது அதினும் பெரிது என்பாம்.

---

11.5. தகுதியுள்ள மாணக்கனுக்கு—ஒ. தவம் செய்யாதவர்க்கும் பக்தியில்லாதவர்க்கும், பணிவிடை செய்யாதவர்க்கும் இதை உபதேசிக்கக் கூடாது. (கீ. 18.67)

गायत्री वा इद१ सर्वं भूतं यदिदं किंच। वाग्वै गायत्री वाग्वा इद१ सर्वं भूतं गायति च त्रायते च ॥ १२.१ ॥

तावानस्य महिमा ततो ज्यायां१श्च पूरुषः। पादोऽस्य सर्वा भूतानि त्रिपादस्यामृतं दिवीति ॥ १२.६ ॥

காயத்ரீ வா இத१ ஸர்வம் பூதம் யதிதம் கிஞ்ச । வாக்வை காயத்ரீ, வாக் வா இத१ ஸர்வம் பூதங் காயதி ச த்ராயதே ச ॥ 12. 1 ॥

தாவநஸ்ய மஹிமா, ததோ ஜ்யாயா१ஶ்ச பூருஷ: । பாதோ ऽஸ்ய ஸர்வா பூதானி, த்ரிபா-தஸ்யாம்ருதந் திவீதி ॥ 12.6 ॥

---

12.1 உண்டாயதாக இங்கு எதெது உண்டோ அது எல்லாம் காயத்திரியே. உண்டாய இதை எல்லாம் (காயதி பாடுவதாலும்) பேரிட்டுப் பேசுவதாலும் (த்ராயதே ச) போற்றிக் காப்பதாலும், வாக்கே (ப்ரத்யக்ஷமான) காயத்ரீ.

12.6 (காயத்திரீ மந்திரமாகிய) இதனுடைய மஹிமை அவ்வளவு. அதற்கும் பெரியவன் (இவ்வுடலுள் உறையும்) புருஷன். உண்டாய அனைத்தும் (தோன்றி மறையும் உலகு எல்லாம்) அவனுடைய ஒரு கால் பங்கு; அவனுடைய முக்கால் பங்கு (ஆத்ம) ஜோதியில் (அழிவற்ற) அமிருதமாயுள்ளது.

---

12.1 ஒ. சந்தங்களுக்குள் நான் காயத்திரியாக இருக்கிறேன். (கீ. 10. 35). கங்கை போன்ற தீர்த்தமும், கோவிந்தன் போன்ற தெய்வமும், காயத்திரீ போன்ற மந்திரமும் இல்லை என்பர்.

12. 6. பரப்பிரம்மத்தின் சக்தி வாக்கு ரூபமாய் இங்கு உபாசிக்கப் படுகிறது. அந்த வாக்குக்கு ஆதாரமாகப் புருஷன் உபாசிக்கப்பட வேண்டும். வாக்கானது நாலு பகுதியுடையது :—பரா, பஶ்யந்தீ, மத்த்யமா, வைகரீ. மூலாதாரத்தில் பரா வடிவம், ஸ்வாதிஷ்டானத்தில் பஶ்யந்தீ, அனுஹதத்தில் மத்த்யமா, விசுத்தி அல்லது கண்ட ஸ்தானத்தில் வைகரீ. கடைசியான வைகரீ வாக்கு மட்டுந்தான் நமக்கு விவகாரத்தில் விளங்குவது. மற்ற மூன்று பாதங்களும் உள்ளே மறைந்து கிடக்கின்றன. (த்ரீணி பதா நீஹிதா குஹாஸ~). வாக்கின் ஒரு பகுதியே காணப்பட்டு மிகுதி காணப்படாமலிருப்பது போல் பிரம்ம சக்தியின் ஒரு அம்சமே இவ் வுலகனைத்துமாய்த் தோன்றுகிறது. (ஏகாம்ஶேன ஸ்த்திதோ ஜகத்.— கீ. 10.42).

இங்கு கூறியது காயத்ரீவித்தை எனப்படும். (நாபின்னும் ப்ரதிபத்யேத காயத்ரீம் ப்ரஹ்மணு ஸஹ । ஸாऽஹமஸ்மீத்-யுபாஸீத விதினு யேனகேன

अथ यदतः परो दिवो ज्योतिर्दीप्यते विश्वतः पृष्ठेषु सर्वतः पृष्ठेष्वनूत्तमेषूत्तमेषु लोकेष्विदं वाव तद्यदिदमस्मिन्नंतः पुरुषे ज्योतिस्तस्यैषा दृष्टिर्यत्रैतदस्मिञ्छरीरे संस्पर्शेनोष्णिमानं विजानाति तस्यैषा श्रुतिर्यत्रैतत्कर्णाविभिगृह्य निनदमिव नदथुरिवाग्नेरिव ज्वलत उपशृणोति तदेतद्दृष्टं च श्रुतंचेत्युपासीत चक्षुष्यः श्रुतो भवति य एवं वेद य एवं वेद ॥ १३.७ ॥

**அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே விச்வத: ப்ருஷ்ட்டேஷு, ஸர்வத: ப்ருஷ்ட்டேஷு, அனுத்தமேஷூத்த-மேஷு லோகேஷ்விதம் வாவ தத்-யதித-மஸ்மிந்-நந்த: புருஷே ஜ்யோதிஸ்-தஸ்யைஷா த்ருஷ்டிர் யத்ரைத-தஸ்மின் சரீரே ஸம்ஸ்-பர்சேனோஷ்ணிமானம் விஜானதி, தஸ்யைஷா ச்ருதிர்-யத்ரைதத் கர்ணவபிக்ருஹ்ய நிநதமிவ, நததுரிவாக்னேரிவ ஜ்வலத உப ச்ருணோதி, ததேதத் த்ருஷ்டஞ்ச ச்ருதஞ்-சேத்யுபாஸீத, சக்ஷுஷ்ய:.ச்ருதோ பவதி, ய ஏவம் வேத, ய ஏவம் வேத ॥ 13.7 ॥**

---

13.7 இந்த ஜோதிர்லோகத்திற்கும் மேலாக ஒரு (சுயஞ்) ஜோதி பிரகாசிக்கிறது. சூழ்ந்துள்ள உலகு அனைத்தையுந் தன் கீழ்க்கொண்டு ஒப்புயர்வற்றதான உத்தம உலகில் (அது பிரகாசிக்கிறது). இந்தப் புருஷனிடம் உள்ளொளி எதுவோ அதுவும் இது

---

சித் ॥ )பிரம்மத்துடன் ஒன்ருகவும் வேறல்லாததாகவும் காயத்திரியை உபாசிக்க வேண்டும். எந்த முறையிலாயினும் அதுவே நான் என்று உபாசிக்க வேண்டும்.

ஒ. பி. சூ. 1.1.25 ; 2.1.27 ; 2.3.44 ; 4.4.19.

**த்ரிபாதஸ்யாம்ருதம் திவி**:—ஸத், சித், ஆனந்தம் என்பன மூன்று பாதங்கள். ஸத்தின் விளக்கம் (நான் இருக்கிறேன் என்ற உணர்ச்சி) எல்லோருக்கும் உண்டு. சித் விவேகிக்கு விளங்கும். ஆனந்தம் பூர்ண போதமுடையவனுக்குத் தான் விளங்கும். இம் மூன்றையும் உடையவனுக்கு அமிருத மயமான அத்யந்த துக்கநிவிருத்தி யென்று இதற்கு ஒரு மகான் பொருள் கூறினர்.

ஒ. ஸந்தாபயதி ஸ்வந்-தேஹ-மாபாத தல-மஸ்தக: (புருஷ ஸூக்தம்.)
அஹம் வைச்வாநரோ பூத்வா (கீ. 15. 14)

உடலில் உள்ளங்கால் முதல் உச்சந் தலைவரை உஷ்ணமாய் வியாபித்து உயிரை இயக்குவதும், வயிற்றில் ஜாடராக்கினியாக இருந்து

सर्वं खल्विदं ब्रह्म तज्जलानिति शान्त उपासीत। अथ खलु क्रतुमयः पुरुषो यथा क्रतुरस्मिँल्लोके पुरुषो भवति तथेतः प्रेत्य भवति स क्रतुं कुर्वीत ॥ १४.१ ॥

ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்-ஜ-லானிதி ஶாந்த உபாஸீத। அத கலு க்ரதுமய: புருஷோ, யதா க்ரது-ரஸ்மின் லோகே புருஷோ பவதி ததேத: ப்ரேத்ய பவதி, ஸ க்ரதும் குர்வீத ॥ 14.1 ॥

---

வேயாம். அது இங்ஙனம் காணப்படும்; இந்தச் சரீரத்தில் உணர்ச்சியால் உஷ்ணம் அறியப்படுவதால், அது இங்ஙனம் கேட்கப்படும்;—காதுகளை மூடிக் கொண்டால் தேரின் ஓசை போலும், காளையின் கர்ஜனை போலும், தீக்கொழுந்தின் சட சடப்புப் போலும் கேட்கப்படுவதால். இங்ஙனம் பிரத்தியக்ஷ மாய்க் காணப்படுவதும் கேட்கப் படுவதும் எதுவோ அதை உபாசிக்க வேண்டும். இங்ஙனம் அறிந்தவன் கண்ணுக் கினியவனுகவும் காதுக்கினியவனுகவும் (அழகும் புகழும் உடை யவனுக ஆவான்). இங்ஙனம் அறிந்தவன் (அழகும் புகழும் உடை யவனுக ஆவான்).

14.1. இது எல்லாம் பிரம்மமே. (தஜ்ஜம்) 'தத்' எனும் பிரம் மத்தினின்று உண்டாகி (தல்லம்) அதிலேயே முடிவில் லயித்து (தஸ் மின்னேவ அனிதி) இடையில் அதிலேயே உயிர் பெற்றிருப்பதால் (தஜ்-ஜ-லானிதி) இவ்வுலகு பிரம்மமே என்று மனவமைதியுடன் உபாசிக்க வேண்டும். மனிதன் நம்பிக்கை வடிவினன். இவ்வுலகில் மனிதன் எவ்வண்ணம் நம்பிக்கையுடையவனுகின்றுனே அவ்வண் ணமே இங்கிருந்து சென்றபின்னும் ஆகிறுன். (ஆகையால்) அவன் (சிறந்த) நம்பிக்கையை உறுதியாகக் கைக்கொள்ள வேண் டும்.

---

ஆகாரத்தை ஜீரணம் செய்து உயிரைப் போஷிப்பதும், உள்ளத்தினுள்ளே ஞானச்சுடராய் விளங்குவதும் பரஞ்ஜோதியே.

ஒ. (ந தத்ர ஸூர்யோ பாதி) கட. 5.15.

இங்கு கூறியது பரஞ்ஜோதிவித்தை எனப்படும்.

ஒ. பி. சூ. 1.1.24.

14.1. ஒ. தை. 3.1. மனிதன் நம்பிக்கைவடிவினன்—ஒ. இந்த ஜீவன் சிரத்தையே வடிவாய்க் கொண்டவன். எவன் எவ்வகைச் சிரத்தை யுடையவனே அவன் அவ்வகையானவனே. (கீ. 17.3) பி. சூ. 1.2. 1—2.

मनोमयः प्राणशरीरो भारूपः सत्यसंकल्प आकाशात्मा सर्वकर्मा सर्वकामः सर्वगंधः सर्वरसः सर्वमिदमभ्यात्तोऽवाक्यनादरः ॥ १४.२ ॥

மனோமய: ப்ராண-ஶரீரோ பாரூப: ஸத்ய-ஸங்கல்ப ஆகாஶாத்மா ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ:, ஸர்வமிதமப்ப்யாத்தோऽவாக்யனாதர: ॥ 14.2 ॥

---

14.2. மனத்தின் வடிவினதாயும், பிராணனை உடலாய்க் கொண்டதாயும், பிரகாசம் பொருந்தியதாயும், பொய்யாத ஸங்கல்பம் உடையதாயும், ஆகாயம் போன்று (எங்கும் பரவிநிற்கும்) இயற்கையுடையதாயும், எல்லாக் கருமங்களும், எல்லா ஆசைகளும், எல்லா வாசனைகளும், எல்லா ருசிகளுந் தானேயாகி இவ்வுலகனைத்தையும் வியாபித்து நிற்பதாயும், வாக்கு (முதலிய இந்திரியங்கள்) இல்லாததாயும், (அடையாத ஒன்றை அடைந்ததாலுண்டாகும்) பூரிப்பு இல்லாததாயும் உள்ளது (பிரம்மம் என்ற உறுதியான நம்பிக்கையுடன் உபாசிக்க வேண்டும்).

---

அவ்வண்ணமே இங்கிருந்து சென்ற பின்னும் ஆகிறான்.—எந்தெந்த நினைவை நினைத்துக் கொண்டு உடலை விட்டாலும் எப்போதும் அந்நினைவையே நினைத்ததால் அதையே அடைகிறான். (கீ. 8.6).

14.2. எல்லா ஆசைகளும் எல்லா வாசனைகளும்—ஒ. மண்ணில் நல்ல மணமும் தீயில் ஒளியும் ஆகின்றேன். எல்லாப் பிராணிகளிடத்தும் உயிரும், தவஞ்செய்வோருள் தவமும் ஆகின்றேன். பிராணிகளிடம் தருமந் தவறாத ஆசையாகவும் இருக்கின்றேன். (கீ. 7·9—11).

வாக்கு (முதலிய இந்திரியங்கள்) இல்லாததாயும்—ஒ. இந்திரியங்களனைத்தின் செயலாலுந் துலங்குவதாயினும் இந்திரியங்களனைத்துமிலாததாயும்...பொருள்களில் பிரிவுபடாததாயினும் பிரிவு பட்டது போல் நிற்பதாயும், பொருள்களைத் தாங்குவதாயும், விழுங்குவதாயினும் படைப்பதாயும் அது அறியத்தக்கது. (கீ. 13.16).

एष म आत्माऽन्तर्हृदयेऽणीयान्व्रीहेर्वा यवाद्वा सर्षपाद्वा श्यामाकाद्वा श्यामाकतण्डुलाद्वा एष म आत्माऽन्तर्हृदये ज्यायान् पृथिव्या ज्यायानन्तरिक्षाज्ज्यायान् दिवो ज्यायानेभ्यो लोकेभ्यः ॥ १४.३ ॥

सर्वकर्मा सर्वकामः सर्वगंधः सर्वरसः सर्वमिदमभ्यात्तोऽवाक्यनादर एष म आत्माऽन्तर्हृदय एतद्ब्रह्मैतमितः

ஏஷ ம ஆத்மாந்தர்-ஹ்ருதயேऽணீயான் வ்ரீஹேர்வா, யவாத்வா, ஸர்ஷபாத்வா, ஶ்யாமாகாத்வா, ஶ்யாமாகதண்டுலாத்வா, ஏஷ ம ஆத்மாऽந்தர்-ஹ்ருதயே ஜ்யாயான் ப்ருதிவ்யா, ஜ்யாயானந்த-ரிக்ஷாஜ்-ஜ்யாயான் திவோ, ஜ்யாயா-நேப்ப்யோ லோகேப்ப்ய: ॥ 14.3 ॥

ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ: ஸர்வமித மப்ப்யாத்தோऽவாக்யநாதர ஏஷ ம ஆத்மாऽந்தர்ஹ்ருதய ஏதத்

---

14.3. என் ஆத்மாவாகிய இது நெல்லினும் யவத்தினும் கடுகினும் தினையினும் தினையரிசியினும் நுண்ணியதாய் என் இருதயத்தினுள் (விளங்குவதாம்). என் ஆத்மாவாகிய இதுவே பூமியினும் பெரிதாயும், அந்தரிக்ஷத்தினும் பெரிதாயும், வானுலகினும் பெரிதாயும் இவ்வுலகங்களெல்லாவற்றினும் பெரிதாயும் என் இருதயத்தினுள் (விளங்குவதாம்).

14.4. எல்லாக் கருமங்களும், எல்லா ஆசைகளும், எல்லா வாசனைகளும் எல்லா ருசிகளும் தானேயாகி இவ்வுலகனைத்தையும் வியாபித்து நிற்பதாயும், வாக்கு (முதலிய இந்திரியங்கள்) இல்லாததாயும் (அடையாத ஒன்றை அடைந்ததாலுண்டாகும்) பூரிப்பு இல்லாததாயும் உள்ள அந்த பிரம்மமே என் இருதயத்தினுள் விளங்கும் எனது ஆத்மா. இச்சரீரத்தை விட்டு இந்தப்பிரம்மத்தையே

---

14.3. ஒ. பி. சூ. 1.2.7. (அர்ப்பகௌகஸ்த்வாத் தத்-வ்யபதேஶாச்ச) சா. 8.1.

14.1—4. இங்கு கூறியது சாண்டில்யவித்தை எனப்படும். ஒ. பி. சூ. 1.2.1 ; 2.1.30 ; 1.2.4.

प्रेत्याभिसंभवितास्मीति यस्य स्यादद्धा न विचिकित्सास्तीति ह स्माह शांडिल्यः शांडिल्यः ॥ १४.४ ॥

पुरुषो वाव यज्ञस्तस्य यानि चतुर्विꣳशतिवर्षाणि तत्प्रातः सवनं चतुर्विꣳशत्यक्षरा गायत्री गायत्रं प्रातः सवनं तदस्य वसवोऽन्वायत्ताः प्राणा वाव वसव एते हीदꣳ सर्वं वासयन्ति ॥ १६.१ ॥

**ப்ரஹ்மைதமித: ப்ரேத்யாபி ஸம்ப்பவிதாஸ்மீதி, யஸ்ய ஸ்யா-தத்தா ந விசிகித்ஸாஸ்தீதி ஹ ஸ்மாஹ ஶாண்டில்ய: ஶாண்டில்ய: ॥ 14.4 ॥**

**புருஷோ வாவ யஜ்ஞஸ்-த்ஸ்ய யானி சதுர்விꣳஶதி வர்ஷாணி தத் ப்ராத: ஸவனஞ், சதுர்விꣳஶத்யக்ஷராணி காயத்ரீ, காயத்ரம் ப்ராத: ஸவனம், ததஸ்ய வஸவோऽன்வாயத்தா:, ப்ராணா வாவ வஸவ, ஏதே ஹீதꣳஸர்வம் வாஸயந்தி ॥ 16·1 ॥**

---

அடைவேன். இங்ஙனம் எவனுக்கு நிச்சயம் உண்டோ அவனுக்குச் சந்தேகங் கிடையாது என்று கூறியுள்ளார் சாண்டில்யர், சாண்டில்யர்.

16.1. புருஷ வாழ்க்கை ஒரு யஜ்ஞம். (முதல்) இருபத்து நான்கு வருஷங்கள் வரை காலைச் சவனம். காலைச்சவனம் காயத்திரியுடன் சம்பந்தமுடையது. காயத்திரியோ இருபத்து நான்கு அக்ஷரங்களையுடையது. அதற்கு (காலைச் சவனத்திற்கு) அனுகுணமான தேவதைகள் வசுக்கள் ; (வாழ்க்கை யஜ்ஞத்திற்கு) பிராணசக்திகளே வசுக்கள் ; இவையன்றோ அனைத்துயிர்களையும் இங்கு வசிக்கச் செய்கின்றன.

---

14.4. எவனுக்கு நிச்சயம் உண்டோ—ஒ. காணக்கூடும் என்று அதில் நாட்டம் பெற்றவனுக்கு உண்மைநிலை தானே விளங்கும் (கட. 6.13). எப்போது இருதயத்திலுள்ள முடிச்சுகள் எல்லாம் இங்கேயே அவிழ்ந்து போகின்றனவோ அப்போதே சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனாகின்றான். இதுவே உபதேசத்தின் முடிவு. (கட. 6.15).

अथ यानि चतुश्चत्वारिꣳशद्वर्षाणि तन्माध्यंदिनꣳसवनं चतुश्चत्वारिꣳशदक्षरा त्रिष्टुप् त्रैष्टुभं माध्यंदिनꣳसवनं तदस्य रुद्रा अन्वायत्ताः प्राणा वाव रुद्रा एते हीदꣳ सर्वꣳ रोदयन्ति ॥ १६.३॥

अथ यान्यष्टाचत्वारिꣳशद्वर्षाणि तृतीयसवनमष्टाचत्वारिꣳशदक्षरा जगती जागतं तृतीयसवनं तदस्यादित्या अन्वायत्ताः प्राणा वावादित्या एते हीदꣳ सर्वमाददते ॥ १६.५ ॥

அத யானி சதுஶ்சத்வாரிம்ஶத் வர்ஷாணி தன்-மாத்த்யந்தினꣳ ஸவனம், சதுஶ்சத்வாரிꣳஶதக்ஷரா தரிஷ்டுப், த்ரைஷ்டுபம் மாத்த்யந்தினம் ஸவனம், ததஸ்ய ருத்ரா அன்வாயத்தா: ப்ராணு வாவ ருத்ரா ஏதே ஹீதꣳ ஸர்வம் ரோதயந்தி ॥ 16.3 ॥

அத யான்-யஷ்டாசத்வாரிꣳஶத் வர்ஷாணி த்ருதீயஸவனமஷ்டாசத்வாரிꣳஶதக்ஷரா ஜகதீ, ஜாகதம் த்ருதீயஸவனம், ததஸ்யாதித்யா அன்வாயத்தா:, ப்ராணு வாவாதித்யா, ஏதே ஹீதꣳ ஸர்வமாததததே ॥ 16.5 ॥

---

16.3. அதற்கு மேல் நாற்பத்துநான்கு வருஷங்கள் வரை நடுப்பகற் சவனம். நடுப்பகற் சவனம் திரிஷ்டுப்புடன் சம்பந்தமுடையது. திரிஷ்டுப் (சந்தமோ) நாற்பத்துநான்கு அக்ஷரங்களேயுடையது. அதற்கு (நடுப்பகற் சவனத்திற்கு) அனுகுணமான தேவதைகள் ருத்திரர்கள். (வாழ்க்கையஜ்ஞத்திற்கு) பிராணசக்திகளே ருத்திரர்கள். இவையன்றே அனைத்துயிர்களேயும் அழச் செய்கின்றன.

16.5. அதற்குமேல் நாற்பத்தெட்டு வருஷங்கள் வரை மாலைச் சவனம். மாலைச்சவனம் ஜகதீயுடன் சம்பந்தமுடையது. ஜகதீ (சந்தமோ) நாற்பத்தெட்டு அக்ஷரங்களேயுடையது. அதற்கு (மாலைச் சவனத்திற்கு) அனுகுணமான தேவதைகள் ஆதித்தியர்கள். (வாழ்க்கை யஜ்ஞத்திற்கு) பிராணசக்திகளே ஆதித்தியர்கள். இவையன்றே, அனைத்துயிர்களேயும் கவர்ந்து கொள்ளுகின்றன.

एतद्धस्म वै तद्विद्वानाह महिदास ऐतरेयः स किं म एतदुपतपसि योऽहमनेन न प्रेष्यामीति स ह षोडशं वर्षशत-मजीवत्प्र ह षोडशं वर्षशतं जीवति य एवं वेद ॥ १६.७ ॥

स यदशिशिषति यत्पिपासति यन्न रमते ता अस्य दीक्षाः ॥ १७.१ ॥

अथ यदश्नाति यत्पिबति यद्रमते तदुपसदैवेति ॥ १७.२॥

**ஏதத்-தஸ்ம வை தத் வித்வாஞஹ மஹிதாஸ ஐதரேய: ஸ கிம் ம ஏத-துபதபஸி யோऽஹமனேன ந ப்ரேஷ்யாமீதி ஸ ஹ ஷோடஶம் வர்ஷஶத-மஜீவத் ப்ரஹ ஷோடஶம் வர்ஷஶதஞ் ஜீவதி ய ஏவம் வேத ॥ 16.7 ॥**

**ஸ யதஶிஶிஷதி, யத் பிபாஸதி, யந் ந ரமதே தா அஸ்ய தீக்ஷா: ॥ 17.1 ॥**

**அத யதஶ்ஞதி, யத் பிபதி, யத் ரமதே, ததுபஸதைவேதி ॥ 17.2 ॥**

---

**16.7.** இதையறிந்த வித்வாஞகிய மஹிதாஸர் என்ற ஐதரேயர் கூறியதாவது : "(நோயே!) என்னை வருத்துவதால் (உனக்கு) என்ன பயன்? (யஜ்ஞரூபியாயுள்ள) நான் அதனுல் சாகமாட்டேன்." அவர் நூற்றிப்பதினறு வருஷங்கள் ஜீவித்திருந்தார். எவன் இங்ஙனம் (உபாசனையால்) அறிகின்ருனே அவனும் நூற்றிப்பதினறு வருஷங்கள் குறைவின்றி ஜீவித்திருப்பான்.

**17.1-2.** பசியுடனிருப்பதும் தாகத்துடனிருப்பதும் இன்பங்களைத் துறந்திருப்பதும் ஆகிய அவை (வாழ்க்கையை யஜ்ஞமாய்க் காணும் மனிதனுகிய) இவனுக்கு தீக்ஷை. இவன் உண்பதும் பருகுவதும் இன்பம் நுகர்வதும் உபஸதமாம்.

---

நூற்றிப் பதினறு வருஷங்கள்—காலை வயது (காயத்ரீ) 24, பகல் வயது (த்ருஷ்டுப்) 44, மாலை வயது (ஜகதீ) 48, ஆக 116.

17.2. உபஸத்—(உப, உபகதானி ஸங்கதானி ஏதாத்ருஶானி புராணி ஸத், ஸீதந்தி, விஶீர்ணனி பவந்தி யயா ஸா உபஸத்) எந்தக் கிரியையால் முப்புரமும் எரிக்கப்படுமோ அது உபஸத் எனப்படும். (புண்ணியத்தால் பாவமும், போகத்தால் புண்ணியமும் நாசமாஞல் முக்தி).

अथ यत्तपो दानमार्जवमहिंसा सत्यवचनमिति ता अस्य दक्षिणा: ॥ १७.४ ॥

तस्मादाहु: सोष्यत्यसोष्टेति पुनरुत्पादनमेवास्य तन्मरणमेवावभृथ: ॥ १७.५ ॥

तद्धैतद्घोर आंगिरस: कृष्णाय देवकीपुत्रायोक्त्वा उवाचापिपास एव स बभूव सोऽन्तवेलायां एतत्त्रयं प्रतिपद्येताक्षितमस्यच्युतमसि प्राण संशितमसीति तत्रैते द्वे ऋचौ भवत: ॥ १७.६ ॥

அத யத் தபோ தான-மார்ஜவ-மஹிம்ஸா ஸத்யவசனமிதி, தா அஸ்ய தக்ஷிணா: ॥ 17.4 ॥

தஸ்மா-தாஹு: ஸோஷ்யத்-யஸோஷ்டேதி புனருத்பாதன-மேவாஸ்ய தன்-மரண-மேவாவப்ருத: ॥ 17.5 ॥

தத்தைதத் கோர ஆங்கிரஸ: க்ருஷ்ணாய தேவகீபுத்ரா-யோக்த்வா உவாசாபிபாஸ ஏவ ஸ பபூவ, ஸோऽந்தவேலாயாம் ஏதத் த்ரயம் ப்ரதிபத்யேதாக்ஷிதமஸ்-யச்யுதமஸி ப்ராண ஸம்ஶித-மஸீதி தத்ரைதே த்வே ருசௌ பவத: ॥ 17.6 ॥

---

17.4. தவமும் தானமும் நேர்மையும் அஹிம்சையும் பொய் யாமையும் (வாழ்க்கையாகிய) இந்த யஜ்ஞத்தில் தக்ஷிணைகள்.

17.5. இவன் (புனிதமான) மறு பிறவியை எய்துத தலே (ஸோஷ்யதி, அஸோஷ்டா என்ற உச்சாரணத்துடன் எய்தப் பெறும்) ஸோமபானம். இவனுக்கு மரணமே அவபிருத ஸ்நானம்.

17.6. இதை தேவகீபுத்திரனாகிய கிருஷ்ணனுக்குக் கோர ஆங்கிரசர் தெளிவுறக் கூறி (மேலும் பின் வரும் மந்திரங்களையும்)

---

17.1—5. ஒ. (தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்-யாத்மா யஜமான:, ஶ்ரத்தா பத்னீ, ...ஹிருதயம் யூப:, காம ஆஜ்யம், மன்யு: பஶுஸ் தபோऽக்னி: ...யதஶ்னாதி தத்ஹவிர் யத்பிபதி ததஸ்ய ஸோமபானம் யத் ரமதே தது பஸத:...—யன் மரணந் ததவப்ருத:) இங்ஙனம் அறிந்த வித்வானுடைய யஜ்ஞத்தில் ஆத்மாவே யஜமானன், சிரத்தையே பத்னி, இருதயம் யூபஸ் தம்பம், காமம் நெய், பலிகொடுக்கப் படுவது கோபம், தவமே அக்னி, உண்பதெல்லாம் ஹவிஸ், பருகுவது ஸோமபானம், ஸந்தோஷிப்பது உபஸதம், மரணமே அவபிருதஸ்நானம். (தைத்திரீயம்: நாராயண வல்லீ)

आदित्प्रत्नस्य रेतसः उद्वयं तमसस्परि ज्योतिः पश्यन्त उत्तरꣳस्वः पश्यन्त उत्तरम् । देवं देवत्रा सूर्यमगन्म ज्योतिरुत्तमं ज्योतिरुत्तममिति ॥ १७.८ ॥

॥ इति तृतीयोऽध्यायः ॥

ஆதித் ப்ரத்னஸ்ய ரேதஸ:, உத்வயம் தமஸஸ்பரி ஜ்யோதி: பஶ்யந்த உத்தரம் ஸ்வ: பஶ்யந்த உத்தரம் । தேவந் தேவத்ரா ஸூர்யமகன்ம ஜ்யோதிருத்தமம் ஜ்யோதிருத்தமமிதி ॥ 17.8 ॥

॥ இதி த்ருதீயோऽத்த்யாய: ॥

---

உபதேசித்தார். அவர் (அதனால் திருப்தியடைந்து மற்ற கல்வி கேள்விகளில்) வேட்கை நீங்கியவரானார். (இங்ஙனம் உணர்ந்த) ஒருவன் மரணத் தருவாயில் பின்வரும் (மந்திரங்கள்) மூன்றில் சரண்புக வேண்டும் :—'அக்ஷிதமஸி,' 'அச்யுத மஸி', 'ப்ராண ஸꣳஶிதமஸி' என்று தொடங்கும் (யஜுர்) மந்திரங்களே இவை. இவ் விஷயத்தில் பின்வரும் மந்திரங்கள் இரண்டும் உள.

17.8. பழையதும் வித்துமாகிய பரம்பொருளின் உயர்ந்த ஜோதி வடிவம் இருளைப் போக்கிக்கொண்டு உயரக் கிளம்புவதை நாங்கள் எத்திக்கிலுங் கண்டவர்களாவோம். அவ்வுயர்ந்த ஜோதியை எங்களிடமும் (இருதயாகாசத்தில்) கண்டவர்களாவோம். தேவர்களின் பிரகாசத்துக்கும் காரணமாகிய உத்தம ஜோதிர்வடிவான தேவனை நாங்கள் அடைந்தவர்களாவோம். உத்தம ஜோதிர் வடிவான தேவனை (நாங்கள் அடைந்தவர்களாவோம்.)

இங்ஙனம் மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

---

17.8. வெளியே உதிக்கும் சூரியன் வெளி இருளைப் போக்குவது போல் உள்ளத்தில் உதிக்கும் ஞான சூரியன் உள் இருளைப் போக்குகிறான். இரண்டும் ஒரே பரம்பொருளின் சக்தி தான்.

ஒ (உத்யந்த-மஸ்தம்-யந்தம் ஆதித்ய-மபித்த்யாயன் குர்வன் ப்ராஹ்மணோ வித்வான் ஸகலம் பத்ரமஶ்னுதேऽஸாவாதித்யோ ப்ரஹ்மேதி ப்ரஹ்மைவ ஸன் ப்ரஹ்மாப்யேதி ய ஏவம் வேத) உதிக்கும்போதும் அஸ்தமிக்கும் போதும் இங்ஙனம் இந்த சூரியனே பிரம்மம் என்று சூரியனைத் தியானம் செய்யும் வித்வானாகிய பிராம்மணன் எல்லா நன்மைகளையும் எய்துகிறான்; இங்ஙனம் அறிந்த அவன் பிரம்மமாகவே இருந்து பிரம்மத்தையே அடைகிறான். (தை. ஆரண்யகம்)

## ॥ चतुर्थोऽध्यायः ॥

तदुह जानश्रुतिः पौत्रायणः षट्शतानि गवां निष्कमश्वतरीरथं तदादाय प्रतिचक्रमे तꣳहाभ्युवाद ॥ २.१ ॥

रैक्वेमानि षट्शतानि गवामयं निष्कोऽयमश्वतरीरथो नु म एतां भगवो देवताꣳशाधि यां देवतामुपास्स इति ॥ २.२ ॥

## சதுர்த்தோऽத்த்யாய :

**ததுஹ ஜானஶ்ருதி: பௌத்ராயண: ஷட்ஶதானி கவாம் நிஷ்கமஶ்வதரீ-ரதம் ததாதாய ப்ரதிசக்ரமே, தꣳஹாப்ப்யுவாத ॥ 2.1 ॥**

**ரைக்வேமானி ஷட்ஶதானி கவாமயம் நிஷ்கோऽயமஶ்வதரீ-ரதோ நு ம ஏதாம் பகவோ தேவதாꣳ ஶாதி, யாந் தேவதா-முபாஸ்ஸ இதி ॥ 2.2 ॥**

---

## நாலாவது அத்தியாயம்

**2.1.** பின் ஜானசுருதியின் கொள்ளுப்பேரன் அறுநூறு பசுக்களையும் காசுமாலையையும் சிறுகுதிரைகள் பூட்டிய தேரையும் உடன்கொண்டு அவரிடம் (ரைக்வரிடம்) சென்று பின்வருமாறு விண்ணப்பம் செய்தான்.

**2.2.** "ரைக்வரே! இவ்வறுநூறு பசுக்களையும் காசுமாலையையும் சிறுகுதிரைகள் பூட்டிய தேரையும் (ஏற்கவேண்டும்) ஐயனே! தாங்கள் எந்த தேவதையை உபாசிக்கிறீர்களோ அந்த தேவதையை எனக்கு உபதேசித்தருளப் பிரார்த்திக்கின்றேன்."

---

2.1. பூர்வகதை :—ஜானசுருதியின் கொள்ளுப்பேரன் பலதான தருமங்களைச் செய்தும் சத்திரம் சாவடிகளைக் கட்டிவைத்தும் மிகுந்த புகழ் பெற்றுக் கர்வித்திருந்தான். ஓரிரவு ஹம்ஸபக்ஷிகள் இவனுடைய மாளிகைக்கு மேல் பறந்து செல்லுகையில் பின்வருமாறு பேசிக்கொண்டதாக இவன் உணர்ந்தான். ஒரு பக்ஷி : "ஜானசுருதியின் கொள்ளுப்பேரன் கீர்த்தி ஸ்வர்க்கலோகத்தையும் வியாபித்திருக்கிறது. அவனை அவமதித்தால் நீ எரிந்துபோவாய்!" மற்றொருபக்ஷி : "அதோ வண்டியினடியில் உட்கார்ந்திருக்கும் ஞானி ரைக்வர் இருக்கின்றாரே அவருடைய பெருமையின் முன் இவன் எம்மாத்திரம்? அவரையல்லவா புகழவேண்டும்.

तमु ह परः प्रत्युवाच हारे त्वा शूद्र तवैव सह गोभिरस्त्विति तदु ह पुनरेव जानश्रुतिः पौत्रायणः सहस्रं गवां निष्कमश्वतरीरथं दुहितरं तदादाय प्रतिचक्रमे ॥ २.३ ॥

तꣳहाभ्युवाद रैक्वेदꣳ सहस्रं गवामयं निष्कोऽयमश्वतरीरथ इयं जायाऽयं ग्रामो यस्मिन्नास्सेऽन्वेव मा भगवः शाधीति ॥ २.४ ॥

தமு ஹ பர: ப்ரத்யுவாச ஹாரே த்வா ஶூத்ர தவைவ ஸஹ கோபி-ரஸ்த்விதி, தது ஹ புனரேவ ஜானஶ்ருதி: பௌத்ராயண: ஸஹஸ்ரங் கவாம் நிஷ்க-மஶ்வதரீரதந் துஹிதரம் ததாதாய ப்ரதி-சக்ரமே ॥ 2.3 ॥

தꣳஹாப்ப்யுவாத ரைக்வேதꣳ ஸஹஸ்ரங் கவாமயம் நிஷ்-கோऽய-மஶ்வதரீ ரத இயம் ஜாயாऽயங் க்ராமோ யஸ்மிந்-நாஸ்ஸேऽன்வேவ மா பகவ: ஶாதீதி ॥ 2.4 ॥

---

2.3. அவனை நோக்கி மற்றவர் (ரைக்வர்) "அடே! சூத்ரா! பசுக்கள் உட்பட இவையெல்லாம் உன்னிடமே இருக்கட்டும்" என்று பதிலளித்தார். பின் ஜானசுருதியின் கொள்ளுப்பேரன் ஆயிரம் பசுக்கள் காசுமாலை சிறு குதிரைகள் பூட்டிய தேர் இவற்றுடன் தன் பெண்ணையும் குருதக்ஷிணையாகக் கொண்டு திரும்பவும் சென்றான்.

2.4. அவரிடம் கூறுவான்: "ரைக்வரே! இவ்வாயிரம் பசுக்கள் காசுமாலை சிறுகுதிரைகள் பூட்டிய தேர் நீர் வசிக்கும்

---

எல்லா நற்காரியங்களின் பெருமையும் அவருடைய ஞானத்தில் அடங்கும்." இதைக் கேட்ட அரசன் தன் ஸேவகனிடம் சொல்லி ரைக்வர் எங்கே இருக்கிறார் என்று தேடச் சொன்னான். அவன் முதலில் அவரைக் காணவில்லை. பின் வண்டியின் அடையாளத்தால் கண்டு அரசனிடம் தெரிவித்தான். அரசன் அவரிடம் சென்றான்.

2.3. அரசனைப் பார்த்துச் சூத்ரா என்று கூறியதின் காரணம் அவன் உயர்குலத்தவனைப்போல் வணக்கத்தைக் காணிக்கையாய்க் கருதாமல் பொருளைக் கொடுத்து ஞானத்தைப் பெறலாம் என்று தன் செல்வச் செருக்கால் கருதியவனோ என்று சோதிப்பதற்கேயாகும்.

2.4. அரசன் அவமானத்தைப் பொருட்படுத்தாமல் மீண்டும் அணுகியதால் அவன் ஊக்கத்தைக் கருதியும் அவன் கன்னிகாதானம்

तस्या ह मुखमुपोद्गृह्णन्नुवाचाजहारेमाः शूद्रानेनैव मुखेनालापयिष्यथा इति ते हैते रैक्वपर्णानाम महावृषेषु यत्रास्मा उवास तस्मै होवाच ॥ २.५ ॥

वायुर्वाव संवर्गो यदा वा अग्निरुद्वायति वायुमेवाप्येति यदा सूर्योऽस्तमेति वायुमेवाप्येति यदा चन्द्रोऽस्तमेति वायु-मेवाप्येति ॥ 3.1 ॥

தஸ்யா ஹ முக-முபோத்க்ருஹ்ணன்-னுவாசாஜஹாரேமா: ஶூத்ரானேனைவ முகேனாலாபயிஷ்யதா இதி, தே ஹைதே ரைக்வ-பர்ணா நாம மஹாவ்ருஷேஷு யத்ராஸ்மா உவாஸ தஸ்மை ஹோவாச ॥ 2.5 ॥

வாயுர்-வாவ ஸம்வர்க்கோ, யதா வா அக்னி-ருத்வாயதி வாயு-மேவாப்யேதி, யதா ஸூர்யோऽஸ்தமேதி வாயு-மேவாப்யேதி, யதா சந்த்ரோऽஸ்தமேதி வாயு-மேவாப்யேதி ॥ 3.1 ॥

---

இந்தக் கிராமம் இவற்றுடன் என் பெண் இவளையும் மனைவியாக ஏற்றுக்கொண்டு, ஐயனே! உபதேசித்தருளவேண்டும்.''

2.5. அரசகன்னிகையாகிய அவளை முன்னிட்டு இவற்றை ஏற்றுக்கொண்டு, '' சூத்ரா! இவளை முன்னிட்டு என்னைப் பேசச் செய்து விட்டாய்,'' என்று கூறி உபதேசித்தார். மஹாவிருஷத்தில் இவர் வசித்து வந்த பிரதேசங்களே 'ரைக்வபர்ணம்' என்று (பின்) பிரசித்தி பெற்றவையாயின. இங்ஙனம் ரைக்வர் அவனுக்கு உபதேசித்தார் (என்பது வரலாறு).

3.1. வாயுவே ஸம்வர்க்கம் (அனைத்தையும் இழுத்துக் கொள்ளும் குணமுடையது); எப்போது தீ அணைகிறதோ அப்போது அது வாயுவில் ஒடுங்குகிறது; எப்போது சூரியன் அஸ்தமிக்கிறதோ அப்போது வாயுவில் (அதன் ஒளி) ஒடுங்கிறது; எப்போது சந்திரன் அஸ்தமிக்கிறதோ அப்போது வாயுவில் (அதன் ஒளி) ஒடுங்குகிறது.

---

செய்த அரசகுமாரியால் ஸந்தோஷமடைந்தவராகவும் பின்னர் உபதேசித்தார். ஞானிகளுடைய போக்கு விசித்திரமானது. அவர்களுடைய பெருமையையும் அவர்களுடைய செயலையும் ஆழங் காண்பது கடினம்.

यदाप उच्छुष्यन्ति वायुमेवापियन्ति वायुर्ह्येवैतान्सर्वान् संवृङ्क्त इत्यधिदैवतम् ॥ ३.२ ॥

अथाध्यात्मं प्राणो वाव संवर्गः स यदा स्वपिति प्राणमेव वागप्येति प्राणं चक्षुः प्राणꣳ श्रोत्रं प्राणं मनः प्राणो ह्येवैतान्सर्वान् संवृङ्क्त इति ॥ ३.३ ॥

तौ वा एतौ द्वौ संवर्गौ वायुरेव देवेषु प्राणः प्राणेषु ॥ ३.४ ॥

யதாப உச்சுஷ்யந்தி வாயு-மேவாபியந்தி, வாயுர்ஹ்யேவைதான் ஸர்வான் ஸம்வ்ருங்க்த இத்-யதிதைவதம் ॥ 3.2 ॥

அதாத்த்யாத்மம், ப்ராணோ வாவ ஸம்வர்க்க:, ஸ யதா ஸ்வபிதி ப்ராணமேவ வாகப்யேதி, ப்ராணஞ்சக்ஷு:, ப்ராணꣳஶ்ரோத்ரம், ப்ராணம் மன:, ப்ராணோ ஹ்யேவைதான் ஸர்வான் ஸம்வ்ருங்க்த இதி ॥ 3·3 ॥

தௌ வா ஏதௌ த்வௌ ஸம்வர்க்கௌ, வாயுரேவ தேவேஷு, ப்ராண: ப்ராணேஷு ॥ 3·4 ॥

---

3.2. எப்போது நீர் சுண்டிப் போகிறதோ அப்போது வாயுவில் ஒடுங்குகிறது ; வாயுவே இவைகளையெல்லாம் இழுக்கிறது. இங்ஙனம் அதிதைவதம் (வெளிப் பொருள்களில்).

3.3. இனி அத்தியாத்மம். பிராணனே ஸம்வர்க்கம் (அனைத்தையும் இழுத்துக் கொள்ளுங் குணமுடையது.) தூங்கும்போது வாக்குப் பிராணனிலேயே ஒடுங்குகிறது ; பிராணனிலேயே பார்வையும், பிராணனிலேயே கேள்வியும், பிராணனிலேயே மனதும் ; பிராணனே இவைகளையெல்லாம் இழுக்கிறது.

3.4. (தேவர்களிடத்தில்) பஞ்ச பூதங்களிடை வாயுவாகவும், (பிராணன்களில்) பஞ்சேந்திரியங்களின் இயக்கத்தில் முக்கியப் பிராணனாகவும் உள்ள இவ்விரண்டுமே ஸம்வர்க்கங்கள்.

सत्यकामो ह जाबालो जबालां मातरमामन्त्रयांचक्रे ब्रह्मचर्यं भवति विवत्स्यामि किं गोत्रोऽहमस्मीति ॥ ४.१ ॥

सा हैनमुवाच नाहमेतद्वेद तात यद्गोत्रस्त्वमसि बह्वहं चरन्ती परिचारिणी यौवने त्वामलभे साहमेतन्न वेद यद्गोत्रस्त्वमसि जबाला तु नामाहमस्मि सत्यकामो नाम त्वमसि स सत्यकाम एव जाबालो ब्रुवीथा इति ॥ ४.२ ॥

ஸத்யகாமோ ஹ ஜாபாலோ ஜபாலாம் மாதர-மாமந்த்ரயாஞ்-சக்ரே, ப்ரஹ்மசர்யம் பவதி விவத்ஸ்யாமி, கிங் கோத்ரோ஽ஹமஸ்-மீதி ॥ 4.1 ॥

ஸா ஹைனமுவாச, நாஹமேதத் வேத தாத யத் கோத்ரஸ்-த்வமஸி, பஹ்-வஹஞ் சரந்தீ பரிசாரிணீ யௌவனே த்வாமலபே, ஸாஹ-மேதந்-ந வேத, யத்கோத்ரஸ்-த்வமஸி, ஜபாலா து நாமா-ஹமஸ்மி, ஸத்யகாமோ நாமஸ்-த்வமஸி, ஸ ஸத்யகாம ஏவ ஜாபாலோ ப்ருவீதா இதி ॥ 4.2 ॥

---

4.1. ஸத்தியகாமன் என்ற ஜாபாலன் தன் தாயாகிய ஜபாலாவையணுகி "அம்மா, பிரம்மசாரியாக (குருகுலஞ் சென்று) வசிக்க விரும்புகிறேன்; நான் என்ன கோத்திரம்?" என்றான்.

4.2. அவள் இவனிடம் சொன்னதாவது—"அப்பா! என்ன கோத்திரம் நீ என்ற இது எனக்குத் தெரியாது. என் யௌவனத்தில் பல விதமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது உன்னைப் பெற்றேன். நீ என்ன கோத்திரம் என்ற அதை நான் தெரிந்துகொள்ளவில்லை. என் பெயர் ஜபாலா; உன் பெயர் ஸத்தியகாமன். அவ்வண்ணமே ஸத்தியகாமன் என்ற ஜாபாலன் என்றே (குருவிடம்) சொல்வாய்" என்றாள்.

---

4.2. என் யௌவனத்தில்...—'என் யௌவனத்தில் புருஷன் வீட்டில் அதிதிகளை ஆராதித்தல் முதலிய வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது கோத்திரத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமற் போனேன். உன்னைக் கருத்தரித்த பின் உன் தகப்பனார் இறந்துவிட்டார். அநாதையாய் விட்டேன். அதனால் உன் கோத்திரம் எனக்குத் தெரியாது.' (சங்கரர்).

स ह हारिद्रुमतं गौतममेत्योवाच ब्रह्मचर्यं भगवति वत्स्याम्युपेयां भगवन्तमिति ॥ ४.३ ॥

तꣳहोवाच किंगोत्रो नु सोम्यासीति स होवाच नाहमेतद्वेद भो यद्गोत्रोऽहमस्म्यपृच्छं मातरꣳ सा मा प्रत्यब्रवीद्बह्वहं चरन्ती परिचारिणी यौवने त्वामलभे साहमेतन्न वेद यद्गोत्रस्त्वमसि जबाला तु नामाहमस्मि सत्यकामो नाम त्वमसीति सोऽहꣳ सत्यकामो जाबालोऽस्मि भो इति ॥ ४.४ ॥

ஸ ஹ ஹாரித்ருமதங் கௌதம-மேத்யோவாச ப்ரஹ்மசர்யம் பகவதி வத்ஸ்யாம்-யுபேயாம் பகவந்த-மிதி ॥ 4.3 ॥

தꣳஹோவாச கிங் கோத்ரோனு ஸோம்யாஸீதி; ஸ ஹோவாச நாஹ-மேதத் வேத போ யத் கோத்ரோऽஹமஸ்மி, அப்ருச்சம் மாதரꣳ ஸா மா ப்ரத்யப்ரவீத் பஹ்-வஹஞ் சரந்தீ பரிசாரிணீ யௌவனே த்வாமலபே, ஸாஹ-மேதந் ந வேத யத்கோத்ரஸ்-த்வமஸி, ஜபாலா து நாமாஹமஸ்மி, ஸத்யகாமோ நாம த்வமஸீதி; ஸோऽஹꣳ ஸத்ய காமோ ஜாபாலோऽஸ்மி போ இதி ॥ 4.4 ॥

---

4.3. அவன் ஹாரித்ருமதர் என்ற கௌதமரிடம் சென்று “பெருமை வாய்ந்த தங்களிடம் பிரம்மசாரியாக வசிக்க விரும்பித் தங்களை வந்தடைந்தேன்” என்றான்.

4·4. “சித்தம் அழகியோனே! நீ எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன்?” என்று அவனை (அவர்) கேட்டார்.

“ஐயனே! நான் என்ன கோத்திரம் என்ற இதை அறியேன். என் தாயைக் கேட்டேன். அவள் ‘என் யௌனவத்தில் பலவித மான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது உன்னைப் பெற்றேன். நீ என்ன கோத்திரம் என்ற அதை நான் அறியவில்லை. என் பெயர் ஜபாலா; உன் பெயர் ஸத்தியகாமன்’ என்று பதில் கூறினள். ஆகையால் நான் ஸத்தியகாம ஜாபாலன் (என்ற இதுவே என் பிரவரம்) ஐயனே!”

---

4.4. ஒருவனுக்குக் கோத்திரமும் பிரவரமும் தெரியாமற் போனல் அவன் தனது ஆசாரியனுடைய கோத்திரத்தைச் சேர்ந்தவனுகக் கொள்ள வேண்டும். (ஆபஸ்தம்பர்.)

तँहोवाच नैतदब्राह्मणो विवक्तुमर्हति समिधँ सोम्याहरोपत्वा नेष्ये न सत्यादगा इति तमुपनीय कृशानामबलानां चतुःशतानां निराकृत्योवाचेमाः सोम्यानुसंव्रजेति ता अभिप्रस्थापयन्नुवाच नासहस्रेणावर्तयेयेति स ह वर्षगणं प्रोवास ता यदा सहस्रँ संपेदुः ॥ ४.५ ॥

தஃஹோவாச நைத-தப்ராஹ்மணோ விவக்து-மர்ஹதி, ஸமிதஃ ஸோம்யாஹரோபத்வா நேஷ்யே, ந ஸத்யா-தகா இதி, தமுபநீய க்ருஶாணு-மபலானுஞ் சது: ஶதானும் நிராக்ருத்யோவா-சேமா: ஸோம்யானுஸம்வ்ரஜேதி, தா அபிப்ரஸ்த்தாபயன்-னுவாச, நா-ஸஹஸ்ரேணுவர்த்தேயேதி, ஸ ஹ வர்ஷகணம் ப்ரோவாஸ, தா யதா ஸஹஸ்ரஃ ஸம்பேது: ॥ 4.5 ॥

---

4.5. (அவர்) அவனை நோக்கிக் கூறியதாவது:—"(உண்மையை) இங்ஙனம் தெளிவுபடக் கூறுபவனைப் பிராம்மணனல்ல என்று சொல்வது தகுதியன்று. சித்தம் அழகியோனே! ஸமித்தைக் கொண்டு வா. உனக்கு உபநயனம் செய்விக்கிறேன். நீ ஸத்தியத்தினின்று விலகவில்லை." அவனுக்கு உபநயனம் செய்வித்தபின், இளைத்தும் பலங்குன்றியும் இருந்த நானூறு பசுக்களைப் பொருக்கி, "ஸோம்யா இவைகளின் பின் செல்வாய்" என்றார். அவற்றை ஓட்டிக்கொண்டு கிளம்புகையில் "(இக்கூட்டம்) ஆயிரமாகாமல் திரும்பேன்" என்றான். எப்போது (அக்கூட்டம்) ஆயிரமாயிற்றோ அப்போது அவன் பல வருஷங்கள் வெளியே வசித்தவனாயினான்.

---

4.5. 'பிராம்மண குலத்தின் முக்கிய தர்மமாகிய ஸத்தியத்தினின்று விலகாமல் உள்ளதை உள்ளபடி கூறியதால் உன்னை ஏற்று உனக்கு உபநயனம் செய்விக்கிறேன்' என்று குரு கூறினார்.

மாடு மேய்த்தலால் ஞானோதயம் எப்படி ஏற்படும் எனின், எந்தத் தொழிலாயினும் முழு மனத்துடன் செய்யப்பட்டால் அது உள்ளத்தைப் பக்குவப்படுத்தும். தொழில் எது என்பது முக்கியமல்ல, எப்படிச் செய்யப்படுகிறதென்பது தான் முக்கியம். மனம் பக்குவமடைந்த போது ஞானோதயம் தானே உண்டாகும். அந்நிலையில் வானும் மண்ணும், ஒளியும் வெளியும், மலையும் நதியும், ஒவ்வொன்றும் உபகுருவாய் நின்று பேசாமல் பேசி ஞானத்தைப் புகட்டும். இதற்கு ஸத்தியகாமனுடைய கதை அத்தாட்சி.

प्राप हाचार्यकुलं तमाचार्योऽभ्युवाद सत्यकाम ३ इति भगव इति ह प्रतिशुश्राव ॥ ९.१ ॥

ब्रह्मविदिव वै सोम्य भासि को नु त्वानुशशासेत्यन्ये मनुष्येभ्य इति ह प्रतिजज्ञे भगवाꣳस्त्वेव मे कामे ब्रूयात् ॥ ९.२ ॥

ப்ராப ஹாசார்யகுலம் தமாசார்யோऽப்யுவாத ஸத்யகாம 3 இதி, பகவ இதி ஹ ப்ரதிஶுஶ்ராவ ॥ 9.1 ॥

ப்ரஹ்மவிதிவ வை ஸோம்ய பாஸி, கோ நு த்வானுஶஶாஸேத்யன்யே மனுஷ்யேப்ய இதி ஹ ப்ரதிஜஜ்ஞே, பகவான்ஸ்த்வேவ மே காமே ப்ரூயாத் ॥ 9.2 ॥

---

9.1. (பின் ஸத்தியகாமன்) குருகுலத்துக்கு மீண்டும் வந்து சேர்ந்தான். குரு "ஸத்தியகாமா!" என்று (அன்புடன் கூவி) அழைக்க "ஐயனே!" என்று மறு மொழி கூறுபவனாய் அணுகினான்.

9.2. "ஸோம்யா! நீ பிரம்மத்தை யறிந்தவன் போல் விளங்குகின்றாய். உனக்கு உபதேசித்தது யார்?" என்றார்.

---

பசுக் கூட்டம் ஆயிரம் ஆனபின் குரு குலத்துக்குத் திரும்பும்போது ஒரு நாள் அவன் கூட்டத்திலிருந்த ரிஷபம் நான்கு திசைகளும் நான்கு கலைகளாகப் பிரம்மத்தின் ஒரு கால் பங்கு என்றும் அதற்குப் பிரகாசவான் எனப் பெயர் என்றும் உபதேசித்தது. மறுநாள் மாலையில் ஸத்தியகாமன் அக்கினியை மூட்டி அதன் முன் கிழக்கு நோக்கி உட்கார்ந்த போது அக்கினி தேவன் பேசுவதுபோலிருந்தது. வானும் மண்ணும் அந்த ரிஷபமும் ஸமுத்திரமும் நான்கு கலைகளாகப் பிரம்மத்தின் ஒரு கால் பங்கு என்றும் அதற்கு அனந்தவான் எனப் பெயர் என்றும் அக்கினி உபதேசித்தது. அடுத்த நாள் மாலையில் அதே மாதிரி ஒரு ஹம்ஸம் அவனிடம் பறந்து வந்து பேசுவது போலிருந்தது. அந்த ஹம்ஸம் சூரியதேவனே. அக்கினியும், சூரியனும், சந்திரனும், மின்னலும் நான்கு கலைகளாகப் பிரம்மத்தின் ஒரு கால் பங்கு என்றும் அதற்கு ஜோதிஷ்மான் எனப் பெயர் என்றும் ஹம்ஸம் உபதேசித்தது. நாலாவது நாள் மாலை நீர்க்கோழி ஒன்று அவனிடம் வந்து பிராணனும், கண்ணும், சுரோத்திரமும், மனமும் நான்கு கலைகளாகப் பிரம்மத்தின் ஒரு கால் பங்கு என்றும் அதற்கு ஆயதனவான் எனப் பெயர் என்றும் உபதேசித்தது.

9.2. நீ பிரம்மத்தை யறிந்தவன்போல் விளங்குகின்றாய் —

(ப்ரஸன்-னேந்த்ரிய: ப்ரஹஸித-வதனஶ்ச நிஶ்சிந்த: க்ருதார்த்தோ ப்ரஹ்மவித் பவதி) இந்திரியங்களில் தெளிவுடையவனாகவும், சிரித்த முக

श्रुतꣳह्येव मे भगवद्दृशेभ्य आचार्याद्धैव विद्या विदिता साधिष्ठं प्रापयतीति तस्मै हैतदेवोवाचात्र ह न किंचन वीयायेति वीयायेति ॥ ९.३ ॥

उपकोसलो ह वै कामलायनः सत्यकामे जाबाले ब्रह्मचर्यमुवास तस्य ह द्वादशवर्षाण्यग्नीन्परिचचार स ह

ஶ்ருதꣳஹ்யேவ மே பகவத்த்ருஶேப்ய ஆசார்யாத்த்யேவ வித்யா விதிதா ஸாதிஷ்ட்டம் ப்ராபயதீதி, தஸ்மை ஹைதத்-தேவோவாசாத்ர ஹ ந கிஞ்சன வீயாயேதி, வீயாயேதி ॥ 9.3 ॥

உபகோஸலோ ஹ வை காமலாயன: ஸத்யகாமே ஜாபாலே ப்ரஹ்மசர்யமுவாஸ, தஸ்ய ஹ த்வாதஶவர்ஷாண்-யக்னீன்

---

"(உபதேசித்தவர்கள்) மனிதர்களினின்றும் வேறு. தேவரீரே எனக்கு என் ஆசை தீர உபதேசித்தருளுதல் வேண்டும்" என்று மறுமொழி பகர்ந்தான்.

9.3. தேவரீரைப் போன்றவர்களிடமிருந்து நான் கேட்டுள்ளதாவது, ஆசாரியனிடமிருந்து அறிந்த வித்தையே சிறந்த பயன் தருவதாகும் என்பதே. (குரு) அவனுக்கு (அவன் ஏற்கெனவே தேவதைகளின் கடாக்ஷத்தால் உணர்ந்திருந்த) அதே வித்தையை (மீண்டுந் தெளிவுறக்) கொஞ்சங்கூட விடாமல் உபதேசித்தார். கொஞ்சங்கூட விடாமல் (உபதேசித்தார்).

10.1. (பின்னர்) காமலரின் புத்திரனை உபகோஸலன் ஜாபால ஸத்தியகாமரிடம் (சிஷ்யனாகி) பிரம்மசரியமனுஷ்டித்தான். அவருடைய (வேள்வி) அக்கினிகளைப் பனிரண்டு வருஷங்கள் போற்றி வந்தான். அவர் (ஸத்தியகாமர், உபகோஸலன் நீங்க

---

முடையனாகவும், கவலையற்றவனாகவும், திருப்தியுற்றவனாகவும் பிரம்மத்தையறிந்தவன் இருப்பான். இந்த லக்ஷணங்களை அவனிடங் கண்டதால் குரு இங்ஙனம் கூறினார். (சங்கரர்).

9.2. தேவரீரே எனக்கு ஆசைதீர உபதேசித்தருளுதல் வேண்டும்—'தங்களைக் குருவாயடைந்த நான் வேறொரு மனிதரையும் குருவாய் நாடவில்லை. தெய்வீகமாகவும் மறைமுகமாகவும் நான் பெற்ற ஞானத்தையும் பெரிதாய்க் கருதவில்லை. தாங்களே நேராக உபதேசித்தால் தான் என் ஆசை தீரும். ஞானம் பயன் தருவதாகும்' என்று கூறினான். குருவும் ஸந்தோஷமாய் உபதேசித்தார்.

स्मान्यानन्तेवासिनः समावर्तयᳫँस्तᳫँ ह स्मैव न समावर्तयति ॥ १0.१ ॥

तं जायोवाच तप्तो ब्रह्मचारी कुशलमग्नीन् परिचचारीन् मा त्वाग्नयः परिप्रवोचं प्रब्रूह्यस्मा इति तस्मै हाप्रोच्यैव प्रवासांचक्रे ॥ १0.२ ॥

स ह व्याधिनानशितुं दध्रे तमाचार्यजायोवाच ब्रह्मचारिन्नशान किंनु नाश्नासीति स होवाच बहव इमे अस्मिन् पुरुषे कामा नानात्यया व्याधिभिः प्रतिपूर्णोऽस्मि नाशिष्यामीति ॥१0.३॥

பரிசசார, ஸ ஹ ஸ்மான்யா-னந்தேவாஸின: ஸமாவர்த்தயᳫँஸ்தᳫँ ஹஸ்மைவ ந ஸமாவர்த்தயதி ॥ 10.1 ॥

தஞ் ஜாயோவாச, தப்தோ ப்ரஹ்மசாரீ குஶல-மக்னீன் பரி சசாரீன், மா த்வாக்னய: பரிப்ரவோசம், ப்ரப்ரூஹ்யஸ்மா இதி, தஸ்மை ஹாப்ரோச்யைவ ப்ரவாஸாஞ்சக்ரே ॥ 10.2 ॥

ஸ ஹ வ்யாதினனஶிதுந் தத்ரே; தமாசார்யஜாயோவாச, ப்ரஹ்மசாரிந்-நஶான கிந் நு நாஶ்னஸீதி; ஸஹோவாச பஹவ இமே அஸ்மின் புருஷே காமா நானத்யயா வ்யாதிபி: ப்ரதிபூர்ணோஸ்மி, நாஶிஷ்யாமீதி ॥ 10.3 ॥

---

லாக) மற்ற சிஷ்யர்களுக்கு (அத்தியயனத்தைப் பூர்த்தியாக்கி) ஸமாவர்த்தனம் செய்வித்தார். அவனுக்கு (உபகோஸலனுக்கு) மட்டும் ஸமாவர்த்தனம் செய்யவில்லை.

10.2. அவரிடம் (ஸத்தியகாமரிடம்) அவர் மனைவி "இந்தப் பிரம்மசாரி தவஞ்செய்து செவ்வையாக அக்கினிகளைப் போற்றி வந்திருக்கிறான். (நீர் அவனுக்குபதேசித்து ஸமாவர்த்தனம் செய்யவில்லையென்று) அக்கினிகள் உங்களை வெறுக்காமலிருக்கும் பொருட்டு இவனுக்கு நீர் உபதேசித்தல் வேண்டும்" என்று கூறினாள். (மனைவி அங்ஙனங் கூறியும்) அவனுக்கு உபதேசம் ஒன்றுஞ் செய்யாமலேயே அவர் வெளிச் சென்று விட்டார்.

10.3. அவனோ (மனோ) வியாதியால் சாப்பாடு வேண்டாமென்றிருக்கலானான். அவனை நோக்கி குருபத்தினி "சிஷ்யா! சாப்பிடு; ஏன் சாப்பிடாமலிருக்கிறாய்?" என்றாள். அவன்,

अथ हाग्नयः समूदिरे तप्तो ब्रह्मचारी कुशलं नः पर्यचारी-
द्धन्तास्मै प्रब्रवामेति तस्मै होचुः ॥ १०.४ ॥

प्राणो ब्रह्म कं ब्रह्म खं ब्रह्मेति स होवाच विजानाम्यहं
यत्प्राणो ब्रह्म कं च तु खं च न विजानामीति ते होचुर्यद्वाव
कं तदेव खं यदेव खं तदेव कमिति प्राणं च हास्मै तदाकाशं
चोचुः ॥ १०.५ ॥

அத ஹாக்னய: ஸமூதிரே தப்தோ ப்ரஹ்மசாரீ குஶலந் ந: பர்யசாரீத்-தந்தாஸ்மை ப்ரப்ரவாமேதி தஸ்மை ஹோசு: ॥ 10.4 ॥

ப்ராணோ ப்ரஹ்ம, கம் ப்ரஹ்ம, க்கம் ப்ரஹ்மேதி, ஸ ஹோவாச விஜாநாம்யஹம் யத் ப்ராணோ ப்ரஹ்ம, 'க'ஞ்ச து 'க்க'ஞ் ச ந விஜாநாமீதி, தேஹோசுர்-யத்வாவ கம் ததேவ க்கம் யதேவ க்கம் ததேவ கமிதி, ப்ராணஞ் ச ஹாஸ்மை ததாகாஶஞ் சோசு: ॥ 10.5 ॥

---

"(அம்மா!) இவ்வுடல் கொண்ட இவனிடத்தில் (பூர்த்தியாகாத) பல ஆசைகள் பலவாறாய்க் குழம்பிக் கொண்டிருக்கின்றன. மனோ வியாதியால் முற்றும் பீடிக்கப்பட்டவனாயிருக்கிறேன். (அதனால் தான்) நான் சாப்பிடவில்லை" என்றான்.

10.4. பின் (மூன்று) அக்கினிகளும் "இந்தப் பிரம்மசாரி தவஞ் செய்து செவ்வகையாக நம்மைப் போற்றி வந்திருக்கிறான். அந்தோ! நாம் அவனுக்கு உபதேசிப்போம்" என்று தமக்குள் சொல்லிக் கொண்டன. (அவ்வாறே) அவனுக்கு உபதேசித்தன.

10.5. "பிராணன் பிரம்மம், க-பிரம்மம், க்க-பிரம்மம்" (என்று உபதேசித்தன). "பிராணன் பிரம்மம் என்பதை உணர்ந்து கொண்டேன். க-க்க-என்ற இவற்றை நான் உணரவில்லை." என்றான் அவன். "எது (விஷயசுகம்) க-வால் குறிக்கப்படுமோ அதுவே-க்க (இருதயத்திலுள்ள ஆகாசம்); எது-க்கவால் குறிக்கப் படுமோ, அதுவே-க" என்று இங்ஙனம் பிராணனைப்பற்றியும் (அது நிலைபெறும் இருதய) ஆகாசத்தைப் பற்றியும் அவை அவனுக்கு உபதேசித்தன.

---

10.5. க-பிரம்மம், க்க-பிரம்மம்—'க' எனும் அக்ஷரம் சுகத்தையும் 'க்க' எனும் அக்ஷரம் ஆகாசத்தையும் குறிக்கும். சுகம் ஆதியும் அந்தமும் உடையது; ஆகாசம் அசேதனம். அப்படியிருக்க இவை எப்படி பிரம்ம

ते होचुरुपकोसलैषा सोम्य तेऽस्मद्विद्यात्मविद्या चाचार्यस्तु ते गतिं वक्तेत्याजगाम हास्याचार्यस्तमाचार्योऽभ्युवादोपकोसल३ इति ॥ १४.१ ॥

भगव इति ह प्रतिशुश्राव ब्रह्मविद इव सोम्य ते मुखं भाति को नु त्वानुशशासेति को नु मानुशिष्याद्भो इतीहापेव

தே ஹோசு-ருபகோஸலைஷா ஸோம்ய தேऽஸ்மத்வித்யாத்மவித்யா சாசார்யஸ்து தே கதிம் வக்தேத்-யாஜகாம ஹாஸ்யாசார்யஸ்-தமா சார்யோऽப்ப்யுவாதோபகோஸல (3) இதி ॥ 14.1 ॥

பகவ இதி ஹ ப்ரதிஶுஶ்ராவ, ப்ரஹ்மவித இவ ஸோம்ய தே முகம் பாதி, கோ நு த்வானுஶஶாஸேதி, கோநு மானுஶிஷ்யாத் போ

---

14.1. "உபகோஸலா! சித்தம் அழகியோனே! எங்களைப் பற்றிய (அக்கினி) வித்தையும், ஆத்ம வித்தையும் உனக்கு (இங்ஙனம் எங்களால் கூறப்பட்டது). ஆசாரியர் உனக்கு மார்க்கத்தை உபதேசிப்பவராவார்" என்று அவை (அக்கினிகள்) கூறின.

ஆசாரியருந் திரும்பி வந்தார். அவனை நோக்கி 'உபகோஸலா!' என்று அழைத்தார்.

14.2. "ஐயனே!" என்று பதிலளித்து அவன் நின்றான். "ஸோம்யா! பிரம்மஞானியின் முகத்தைப் போல் உன் முகம் பிரகாசிக்கிறதே! உனக்கு யார் உபதேசித்தது?" என்றார்.

---

மாகும் என்பது சிஷ்யனுடைய சந்தேகம். இதற்கு அக்கினிகள் கூறிய பதில் என்னவென்றால் "இங்கு உபதேசிக்கப்பட்ட சுகம் விஷய சுகமன்று, இருதய குகையில் விளங்கும் ஆன்ம சுகம், அதுவே அழியாத பிரம்மம்." இரண்டாவதாக உபதேசிக்கப்பட்ட ஆகாசமும் அசேதனமான ஆகாசமன்று, ஆனந்தமயமான சிதாகாசம். ஆகையால் க என்றது க்க; க்க என்றது க என உபதேசிக்கப்பட்டது.

ஒ. (கோஹ்யே-வான்யாத் க: ப்ராண்யாத் யதேஷ ஆகாஶ ஆனந்தோ ந ஸ்யாத்) இந்த ஆனந்தம் ஆகாசத்திலில்லாமலிருந்தால் அபானனுலோ பிராணனுலோ எச்செயலை ஒருவன் செய்வான்? (தை. 2.7).

கண்டம் 11—13. கார்ஹபத்யாக்கினி, தக்ஷிணாக்கினி, ஆஹவனீயாக்கினி மூன்றும் பின்னர் தனித்தனியாகச் சூரியனிலும், சந்திரனிலும் மின்னலிலும் உபாசனையை உபதேசித்து அடங்கின.

14.3.—பி. சூ. 4.1.13.

निह्नुत इमे नूनमीदृशा अन्यादृशा इतीहाग्नीनभ्यूदे किं नु सोम्य किल तेऽवोचन्निति ॥ १४.२ ॥

इदमिति ह प्रतिजज्ञे लोकान्वाव किल सोम्य तेऽवोचन्नहं तु ते तद्वक्ष्यामि यथा पुष्करपलाश आपो न श्लिष्यत एवमेवंविदि पापं कर्म न श्लिष्यत इति ब्रवीतु मे भगवानिति तस्मै होवाच ॥ १४.३ ॥

இதீ-ஹாபேவ நிஹ்னுத இமே நூன-மீத்ருஶா அன்யாத்ருஶா இதீ-ஹாக்னீ-னப்ப்யூதே, கிந் நு ஸோம்ய கில தேऽவோசன்னிதி ॥ 14.2 ॥

இதமிதி ஹ ப்ரதிஜஜ்ஞே லோகான் வாவ கில ஸோம்ய தேऽவோசன்-னஹம் து தே தத் வக்ஷ்யாமி யதா புஷ்கரபலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யத ஏவமேவம் விதி பாபங் கர்ம ந ஶ்லிஷ்யத இதி, ப்ரவீது மே பகவானிதி, தஸ்மை ஹோவாச ॥ 14.3 ॥

---

"எனக்கு யார் உபதேசிப்பார்கள்? ஐயனே!" என்று (நடந்ததை அடக்கத்தால்) மறைப்பவன் போல் கூறி மேலும் "இப்போது இவ்வண்ணம் (அடங்கி) இருக்கும் இவ்வக்கினிகள் முன் வேறுவிதமாக இருந்தன," என்று (அவை உபதேசித்தன என்று குறிப்பதுபோல்) அக்கினிகளைச் சுட்டிக் காட்டினன்.

"இவ்வக்கினிகள் என்ன உபதேசித்தன?" என்று கேட்டார்.

14.3. "இது" என்று பதிலளித்தான்.

"அவை உலகங்களைப் பற்றியே கூறியிருக்கின்றன. எங்ஙனம் தாமரையிலையில் தண்ணீர் ஒட்டாதோ அங்ஙனம் எந்த ஞானத்தை உணர்ந்தவனிடம் பாவச் செயல் ஒட்டாதோ அதை நான் உனக்கு உபதேசிக்கிறேன்" என்றார்.

"ஐயனே, உபதேசித்தருளும்" என்றான். (அவ்வண்ணம்) அவனுக்கு உபதேசித்தார்.

य एषोऽक्षिणि पुरुषो दृश्यत एष आत्मेति होवाचैतदमृत-मभयमेतद्ब्रह्मेति तद्यप्यस्मिन्सर्पिर्वोदकं वा सिञ्चन्ति वर्त्मना एव गच्छति ॥ १५.१ ॥

अथ यदु चैवास्मिञ्छव्यं कुर्वन्ति यदि च नार्चिषमेवाभि-संभवन्ति ॥ तत्पुरुषोऽमानवः स एनान्ब्रह्म गमयत्येष देवपथो

ய ஏஷோऽக்ஷிணி புருஷோ த்ருஶ்யத ஏஷ ஆத்மேதி ஹோவா-சைத-தம்ருத-மபய-மேதத்-ப்ரஹ்மேதி தத்யப்-யஸ்மின் ஸர்ப்பிர்-வோதகம் வா ஸிஞ்சந்தி வர்த்மனு ஏவ கச்சதி ॥ 15. 1 ॥

அத யது சைவாஸ்மின் ஶவ்யங் குர்வந்தி யதி ச நார்ச்சிஷ-மேவாபிஸம்பவந்தி ॥ தத்புருஷோऽமானவ : ஸ ஏனுன் ப்ரஹ்ம

---

15.1. (கண்ணினுள் ஒளியாகவும் ஸாக்ஷியாகவும்) எந்தப் புருஷன் விளங்குகிருனே அவனே ஆத்மா. அவ்வாத்மா மரண மற்றது ; (அதனுல்) பயமற்றது ; அதுவே பிரம்மம். இதனுள் (கண்ணினுள்) நெய்யையோ நீரையோ விட்டால் பக்கத்தில் வழிந்து ஓடிப்போகிறது. (அதுபோல் எதுவும் ஆத்மாவைப் பற்ருது என்பதை அது சூசிப்பிக்கிறது.)

15.5. (இங்ஙனம் அறிந்த பிரம்மஞானி உடலை நீத்த பின்) அவனுக்குப் பிரேதக்கிரியைகள் செய்தாலுஞ் செய்யாவிட்டாலும் ஒளி நிறைந்த கதியையே (அர்ச்சிஸ் மார்க்கத்தையே) யடைகிருன். (அங்கு) ஒரு அமானுஷ்யமான புருஷன் உளன். அந்தப் புருஷன்

---

15.1. இது 'அக்ஷிவித்தை' எனப்படும்.

ஒ. (சக்ஷுஷஶ்-சக்ஷு:) கண்ணுக்குக் கண்ணுயுள்ளவன் எவனே (கேன. 1·2) அவனே பிரம்மம். (நேதம் யதித-முபாஸதே) இதுதான் பிரம் மம் என்று எதை உபாசிக்கிருர்களோ அது அன்று. (கேன. 1. 7)

எவ்வாறு எங்கும் நிறைந்த ஆகாயம் ஸூக்ஷ்மத்தன்மையால் களங்க மடைவதில்லையோ அவ்வாறே ஆத்மாவானது உடலில் எங்கும் நிறைந் துறையினும் களங்கமடைவதில்லை. (கீ. 13. 32)

15.5. (ந வர்த்ததே கர்மணு நோ கனீயான்) அவனுக்குக் கர்மத்தால் ஏற்றமோ தாழ்வோ இல்லை. (ப்ரு. 4. 4. 23)

ஒ.—கீ. 8. 24 ; பி. சூ. 4. 3. 6 ; மு. 1. 2. 6.

இங்கு கூறியது அனுவிருத்தி என்ற கிரமமுக்தி. இதனுல் ஸத்தியலோ கம் பெறப்படுகிறது. உயர்ந்த ஞான நிஷ்டர்களுக்கோ வெனின் போக்குவர வில்லாத 'ஸத்யோமுக்தி'. (ந தஸ்ய ப்ராணு உத்க்ராமந்தி) அவர்களுடைய

ब्रह्मपथ एतेन प्रतिपद्यमाना इमं मानवमावर्तं नावर्तन्ते नावर्तन्ते ॥ १५.५ ॥

॥ इति चतुर्थोऽध्यायः ॥

## ॥ पञ्चमोऽध्यायः ॥

ॐ यो ह वै ज्येष्ठं च श्रेष्ठं च वेद ज्येष्ठश्च ह वै श्रेष्ठश्च भवति प्राणो वाव ज्येष्ठश्च श्रेष्ठश्च ॥ १.१ ॥

கமயத்-யேஷ தேவபதோ ப்ரஹ்மபத ஏதேன ப்ரதிபத்யமாநு இமம் மானவ-மாவர்த்தம் நாவர்த்தந்தே நாவர்த்தந்தே ॥ 15. 5 ॥

॥ இதி சதுர்த்தோऽத்த்யாய: ॥

## ॥ பஞ்சமோऽத்த்யாய: ॥

ஓம் யோ ஹ வை ஜ்யேஷ்ட்டஞ்ச ஶ்ரேஷ்ட்டஞ்ச வேத, ஜ்யேஷ்ட்டஶ்ச ஹ வை ஶ்ரேஷ்ட்டஶ்ச பவதி, ப்ராணோ வாவ ஜ்யேஷ்ட்டஶ்ச ஶ்ரேஷ்ட்டஶ்ச ॥ 1. 1 ॥

---

இவனைப் பிரம்மத்தினிடஞ் சேர்ப்பிக்கிறான். இது தேவமார்க்கம், பிரம்மமார்க்கம். இவ்வழியடைந்தவர் இந்த மனுவின் சிருஷ்டியாகிய சுழலில் மீண்டும் வருவதில்லை, மீண்டும் வருவதில்லை.

நாலாவது அத்தியாயம் முற்றும்.

## ஐந்தாவது அத்தியாயம்

1.1 மூத்ததையுஞ் சிறந்ததையுஞ் எவன் அறிகிறானோ அவன் மூத்தவனாகவுஞ் சிறந்தவனாகவும் ஆவான். (அங்ஙனம்) மூத்ததுஞ் சிறந்ததும் பிராணன் (என அறியவேண்டும்).

---

பிராணன் போவதில்லை. எங்கும் நிறைந்த பிரம்மத்தில் அவர்கள் லயிக்கின்றனர். (ப்ரஹ்மைவ ஸன் ப்ரஹ்மாப்யேதி).

ஒ. (ஸதாத்மனி ப்ரஹ்மணி திஷ்ட்டதோ முனே: பூர்ணாத்வயானந்தமயாத்மனா ஸதா | ந தேஶ-காலாத்-யுசித ப்ரதீக்ஷா த்வங்-மாம்ஸ-விட்பிண்ட விஸர்ஜனாய ||) எப்போதும் பிரம்மத்திடம் இரண்டற நிலைபெற்றுப் பரிபூரணமான ஆத்மானந்தத்தில் திகழும் முனிவனுக்கு தோலும் மாம்ஸமும் மலமும் நிறைந்த இந்தப் பிண்டத்தை விடுவதற்கு உசிதமான காலத்தையோ தேசத்தையோ எதிர்பார்ப்பதென்பது கிடையாது. (விவேக சூடாமணி—சங்.)

स होवाच किं मे वासो भविष्यतीत्याप इति होचुस्तस्माद्वा एतदशिष्यन्तः पुरस्ताच्चोपरिष्टाच्चाद्भिः परिदधति लंबुको ह वासो भवत्यनग्नो ह भवति ॥ २.२ ॥

तद्धैतत्सत्यकामो जाबालो गोश्रुतये वैयाघ्रपद्यायोक्त्वोवाच यद्यप्येनच्छुष्काय स्थाणवे ब्रूयाज्जायेरन्नेवास्मिञ्छाखाः प्ररोहेयुः पलाशानीति ॥ २.३ ॥

ஸ ஹோவாச கிம் மே வாஸோ பவிஷ்யதீத்-யாப இதி ஹோசுஸ்-தஸ்மாத்வா ஏததஶிஷ்யந்த: புரஸ்தாச்சோபரிஷ்டாச்சாத்பி: பரிதததி லம்புகோ ஹ வாஸோ பவத்-யநக்னோ ஹ பவதி ॥ 2. 2 ॥

தத்தைதத் ஸத்யகாமோ ஜாபாலோ, கோஶ்ருதயே வையாக்ர-பத்யாயோக்த்வோவாச, யத்யப்யேனச்-சுஷ்காய ஸ்த்தாணவே ப்ரூயாஜ்-ஜாயேரன்-னேவாஸ்மின் ஶாகா: ப்ரரோஹேயு: பலாஶாநீதி ॥ 2. 3 ॥

---

2.2 'எனக்கு எது ஆடை' என்று அது (பிராணன்) கேட்டது. "தண்ணீர்" என்று அவை (இந்திரிய சக்திகள்) பதிலளித்தன. ஆகையால் சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் (அன்ன ரூபியான பிராணனை) ஆடையால் மூடுவதுபோல் தண்ணீரால் மூடுகின்றனர். அதனால் பிராணன் ஆடையுடையது போலும் ஆடைக் குறைவு நீங்கியது போலும் ஆகின்றது.

2.3 இதை ஜாபால ஸத்யகாமர் வியாக்கிரபாதருடைய குமாரனை கோசுருதிக்கு உபதேசித்து "இதைக் காய்ந்து போன கட்டையிடம் சொன்னால் கூட அதில் கிளைகள் முளைத்து இலைகள் தளிர்க்கும்" என்று கூறினார்.

---

2.2 சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும்—சாப்பிடுவதற்கு முன் (அம்ருதோபஸ்தரணமஸி) அமிருதத்துக்கு ஆதாரமாக இரு என்றும் சாப்பிட்டபின் (அம்ருதாபிதானமஸி) அமிருதத்துக்கு மூடியாயிரு என்றும் சொல்லிச் சிறிது நீர் உட்கொள்ளப்படுகிறது.

பி. சூ. 3. 3. 18.

2.3 இதைக் காய்ந்த கட்டையிடம் சொன்னால் கூட—இங்கு கூறியது பிராண வித்தை எனப்படும். உண்மைக்கு உயிர் உண்டு, சக்தி உண்டு என்பதை இது எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுகிறது. உலர்ந்த

श्वेतकेतुर्हारुणेयः पंचालानाꣳ समितिमेयाय तꣳह प्रवाहणो जैवलिरुवाच कुमारानु त्वाशिषत्पितेत्यनु हि भगव इति ॥ ३.१ ॥

वेत्थ यदितोऽधि प्रजाः प्रयन्तीति न भगव इति वेत्थ यथा पुनरावर्तन्त इति न भगव इति वेत्थ पथोर्देवयानस्य पितृयाणस्य च व्यावर्तना ३ इति न भगव इति ॥ ३.२ ॥

ஶ்வேதகேதுர்-ஹாருணேய: பஞ்சாலாநாꣳஸமிதி-மேயாய, தꣳஹ ப்ரவாஹணோ ஜைவலி-ருவாச, குமாராநு த்வாஶிஷத் பிதேத்-யநு ஹி பகவ இதி ॥ 3. 1 ॥

வேத்த யதிதோऽதி ப்ரஜா: ப்ரயந்தீதி, ந பகவ இதி; வேத்த யதா புனராவர்த்தந்த இதி, ந பகவ இதி; வேத்த பதோர் தேவயானஸ்ய பித்ருயாணஸ்ய ச வ்யாவர்த்தனா (3) இதி, ந பகவ இதி ॥ 3. 2 ॥

---

3.1. அருணரின் பேரனான சுவேதகேது பஞ்சால நாட்டினரின் ஸபைக்கு (ஒரு சமயம்) சென்றான். ஜீவலரின் புத்திரரான பிரவாஹணர் "பிள்ளாய்! உன் தகப்பனார் உனக்கு உபதேசஞ் செய்திருக்கிறாரா?" என்று கேட்டார். "ஆம்; ஐயனே!" என்றான்.

3.2. "பிரஜைகள் (இறந்தபின்) இங்கிருந்து கிளம்பி எங்கு செல்லுகின்றனர் என்று தெரியுமா?"

"ஐயனே! தெரியாது."

"எங்ஙனம் மீண்டுந் திரும்புகின்றனர் என்று தெரியுமா?"

"ஐயனே! தெரியாது."

"தேவயானம் பிதிருயாணம் என்ற இம்மார்க்கங்களின் பிரிவு எங்கு என்று தெரியுமா?"

"ஐயனே! தெரியாது."

---

கட்டையும் உயிர் கொண்டு தழைக்கும் என்றால் புத்திமானுக்கு அறிவு ஊட்டி உய்விக்கும் என்று சொல்லவேண்டியதில்லை. (கிமு ஜீவதே புருஷாய ப்ரூயாத்—சங்).

अथानु किमनुशिष्टोऽवोचथा यो हीमानि न विद्यात्कथꣳ सोऽनुशिष्टो ब्रुवीतेति स हाऽऽयस्तः पितुरर्धमेयाय तꣳहोवाचाननुशिष्य वाव किल मा भगवानब्रवीदनु त्वाऽशिषमिति ॥ ३.४ ॥

स ह गौतमो राज्ञोऽर्धमेयाय तस्मै ह प्राप्तायार्हांचकार स ह प्रातः सभाग उदेयाय तꣳहोवाच मानुषस्य भगवन् गौतम वित्तस्य वरं वृणीथा इति स होवाच तवैव राजन् मानुषं वित्तं यामेव कुमारस्यान्ते वाचमभाषथास्तामेव मे ब्रूहीति स ह कृच्छ्री बभूव ॥ ३.६ ॥

அதானு கிமனுஶிஷ்டோऽவோசதா யோ ஹீமானி ந வித்யாத் கதꣳ ஸோऽனுஶிஷ்டோ ப்ருவீதேதி ஸ ஹாऽऽயஸ்த: பிதுரர்த்தமேயாய தꣳ ஹோவாசானனுஶிஷ்ய வாவ கில மா பகவா-னப்ரவீ-தனு த்வாऽஶிஷமிதி ॥ 3. 4 ॥

ஸ ஹ கௌதமோ ராஜ்ஞோऽர்த்தமேயாய தஸ்மை ஹ ப்ராப்தாயார்ஹாஞ்சகார ஸ ஹ ப்ராத:ஸபாக உதேயாய தꣳஹோவாச மானுஷஸ்ய, பகவன் கௌதம, வித்தஸ்ய வரம் வ்ருணீதா இதி; ஸஹோவாச, தவைவ ராஜன் மானுஷம் வித்தம், யாமேவ குமாரஸ்யாந்தே வாச-மபாஷதாஸ்-தாமேவ மே ப்ரூஹீதி; ஸ ஹ க்ருச்ச்ரீ பபூவ ॥ 3. 6 ॥

---

3.4 "பின் ஏன் நீ உபதேசிக்கப் பெற்றவன் என்று கூறினாய்? எவன் இவ்விஷயங்களை அறியானோ அவன் எங்ஙனம் தன்னை உபதேசிக்கப் பெற்றவனாய்க் கூறுதல் கூடும்?" அவன் மன வருத்தத்துடன் தந்தையிடம் சென்று "அப்பா! எனக்கு (முழுதும்) கற்பிக்காமலே தாங்கள் கற்பித்து விட்டதாய்க் கூறிவிட்டீர்களே!" என்றான்.

3.6. (நடந்த விவரங்களைப் பின்னர் அவன் சொல்லக் கேட்டுத் தனக்கும் அக்கேள்விகளுக்கு விடை தெரியாதென்று கூறித் தந்தையாகிய) கௌதமர் அரசனிடம் சென்றார். அரசன் அங்ஙனம் வந்தவருக்குத் தக்க மரியாதை செய்தார். (அன்றிரவு கழித்து) காலையில் அரச சபை சேர்ந்தார். அரசர் "மனிதர்க்குரிய பொருளில் வேண்டியதை வரமாகக் கேளும்" என்றார்.

तꣳह चिरं वसेत्याज्ञापयांचकार तꣳ होवाच यथा मा त्वं गौतमावदो यथेयं न प्राक् त्वत्तः पुरा विद्या ब्राह्मणान् गच्छति तस्मादु सर्वेषु लोकेषु क्षत्रस्यैव प्रशासनमभूदिति तस्मै होवाच ॥ ३.७ ॥

तद्य इत्थं विदुः । ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते तेऽर्चिषमभिसंभवन्ति ॥ १०.१ ॥

3.7. தꣳ ஹ சிரம் வஸேத்-யாஜ்ஞாபயாஞ்சகார தꣳஹோவாச யதா மா த்வங் கௌதமாவதோ யதேயந் ந ப்ராக் த்வத்த: புரா வித்யா ப்ராஹ்மணான் கச்சதி, தஸ்மாது ஸர்வேஷு லோகேஷு க்ஷத்ரஸ்யைவ ப்ரஶாஸந-மபூ-திதி தஸ்மை ஹோவாச ॥ 3.7 ॥

தத்ய இத்தம் விது: । யேசேமேऽரண்யே ஶ்ரத்தா தப இத்யுபாஸதே தேऽர்ச்சிஷ-மபிஸம்பவந்தி ॥ 10. 1 ॥

---

கௌதமர் "அரசே! மனிதர்க்குரிய பொருள் தம்மிடமே இருக்கட்டும். என் குமாரனிடம் எந்த வார்த்தைகளைச் சொன்னீர்களோ அவற்றையே எனக்குக் கூறவேண்டும்" என்ருர். அரசன் சற்று வருந்தித் தயங்கிஞர்.

3.7. பின் அவரை நோக்கி "இங்கு நீண்ட காலம் வசித்திரும் (கூறுவோம்)" என்று கட்டளையிட்டார். மேலும் கூறியதாவது:—"கௌதமரே! நீர் கேட்ட இவ்வித்தை உமக்கு முன் பிராம்மணரிடம் சென்றதில்லை. உலகம் முழுவதிலும் க்ஷத்திரியர்களுடையதாகவே இந்த போதனை இருந்து வந்திருக்கிறது."

10.1. எவர்கள் மேலே குறிக்கப்பட்ட ஞானத்தை அறிந்தவர்களோ, எவர்கள் அரணியத்தில் சிரத்தையையும் தவத்தையும் கைக்கொண்டவர்களோ அவர்கள் (தேவயானம் என்ற) ஒளி நிறைந்த மார்க்கத்தை அடைகிருர்கள்.

---

3.7. க்ஷத்திரியர்களுடையதாகவே இந்த போதனை இருந்து வந்திருக்கிறது—ஒ. :(ஏவம் பரம்பரா ப்ராப்தம் இமம் ராஜர்ஷயோ விது: கீ. 4. 2. (கர்மணைவ ஹி ஸம்ஸித்தி-மாஸ்த்திதா ஜனகாதய:) கீ. 3. 20.

अथ य इमे ग्राम इष्टापूर्ते दत्तमित्युपासते ते धूममभिसं-
भवन्ति ॥ १०.३ ॥

तद्य इह रमणीयचरणा अभ्याशो ह यत्ते रमणीयां योनिमापद्येरन्ब्राह्मणयोनिं वा क्षत्रिययोनिं वा वैश्ययोनिं वाऽथ य इह कपूयचरणा अभ्याशो ह यत्ते कपूयां योनिमापद्येरञ्श्वयोनिं वा सूकरयोनिं वा चण्डालयोनिं वा ॥ १०.७ ॥

அத ய இமே க்ராம இஷ்டாபூர்த்தே தத்தமித்யுபாஸதே தே தூமமபிஸம்பவந்தி ॥ 10. 3. ॥

தத்ய இஹ ரமணீயசரணு அப்ப்யாஶோ ஹ யத்தே ரமணீ-யாம் யோனிமாபத்யேரன், ப்ராஹ்மணயோனிம் வா, க்ஷத்ரிய யோனிம் வா, வைஶ்யயோனிம் வாऽத ய இஹ கபூயசரணு அப்ப்யாஶோ ஹ யத்தே கபூயாம் யோனி-மாபத்யேரன், ஶ்வயோ-னிம் வா, ஸூகரயோனிம் வா, சண்டாளயோனிம் வா ॥ 10. 7 ॥

---

10.3. ஆனுல் எவர்கள் கிராமத்தில் வசிப்பவர்களாய் இஷ்டிகளேயும், பொது நலன்களேயும் தானத்தையும் (குறுகிய முறையில்) அனுஷ்டிப்பவர்களோ, அவர்கள் (பித்ருயாணம் என்ற) ஒளி குன்றிய மார்க்கத்தை அடைகிருர்கள்.

10.7. இங்கு நல்வழியில் நடந்தவர்கள் எவர்களோ அவர்கள் (சந்திர மண்டலத்தினின்று திரும்பி) சீக்கிரமே நற்பிறப்பை யடைகின்றனர்—பிராம்மணராகவோ, க்ஷத்திரியராகவோ வைசியராகவோ. இங்கு தீயவழியில் நடந்தவர்கள் எவர்களோ அவர்கள் சீக்கிரமே தீய பிறப்பையடைகின்றனர்—சண்டாளராகவோ, நாயாகவோ, பன்றியாகவோ.

---

10.1–3. ஒ. ப்ர. 1.9–10. பி. சூ. 4. 2. 10.

10.7. கீ. 14. 14—18; 16.19; பி. சூ. 3. 1. 8; 3. 1. 17; 3. 1. 23. 3.2-ல் சுவேதகேதுவைப் பிரவாஹணர் கேட்ட கேள்விகளுக்கு இங்கு விடை சொல்லப்படுகிறது.

अथैतयोः पथोर्न कतरेण च न तानीमानि क्षुद्राण्य-
सकृदावर्तीनि भूतानि भवन्ति जायस्व म्रियस्वेत्येतत्तृतीयꣳस्थानं
तेनासौ लोको न संपूर्यते तस्माज्जुगुप्सेत तदेष श्लोकः ॥ १०.८॥

अथ ह य एतानेवं पञ्चाग्नीन्वेद न स ह तैरप्या-
चरन्पाप्मना लिप्यते शुद्धः पूतः पुण्यलोको भवति य एवं वेद य
एवं वेद ॥ १०.१० ॥

அதைதயோ: பதோர் ந கதரேண ச ந தானீமானி க்ஷுத்-ராண்-யஸக்ரு-தாவர்த்தீனீ பூதானி பவந்தி, ஜாயஸ்வ ம்ரியஸ் வேத்-யேதத் த்ருதீயꣳ ஸ்த்தானம், தேநாஸௌ லோகோ ந ஸம் பூர்யதே தஸ்மாஜ்ஜுகுப்ஸேத ததேஷ ச்லோக: ॥ 10. 8 ॥

அத ஹ ய ஏதானேவம் பஞ்சாக்னீன் வேத, ந ஸ ஹ தைரப்யா-சரன் பாப்மனா லிப்யதே சுத்த: பூத: புண்யலோகோ பவதி, ய ஏவம் வேத, ய ஏவம் வேத ॥ 10. 10 ॥

---

10.8. அற்ப ஜந்துக்கள் இவ்விரண்டு மார்க்கங்களிலும் செல்லுபவையல்ல. பன்முறை மீண்டும் மீண்டும் இங்கேயே பிறப்பதும் இறப்பதுமாய்ச் சுழல்கின்றன. இது மூன்றாவது ஸ்தானம். ஆகையால் அவ்வுலகு நிரப்பப் பெறுவதில்லை. (இதை யெல்லாம் ஆலோசித்து) ஒருவன் வைராக்கியத்தை யடைய வேண்டும். இதைப் பற்றிப் பின் வரும் சுலோகம் உண்டு.

10.10. எவன் பஞ்சாக்கினிவித்தையை அறிந்தவனோ அவன் பாவிகளுடன் கூடியிருப்பினும் பாவத்தால் பற்றப்படான். அவன் (இயற்கையில்) சுத்தனாகவும் (அக்னிவித்தையால்) மனத் தூய்மை பெற்றவனாகவும் நின்று புண்ணிய உலகங்களை எய்துகிறான். எவன் எவன் இங்ஙனம் அறிந்தவனோ அவன் அவன் (அந்நிலைக் குரியவனாம்).

---

10.10. பஞ்சாக்கினிவித்தை:—(1) ஜீவன் மேலுலகங்களில் சஞ்சரித்துவிட்டுத் திரும்பிவரும்போது முதலில் ஆகாயமாகிற அக்கினியில் ஹோமம் செய்யப்படுகின்றான். (2) இரண்டாவதாக மழையுடன் கலக்கின்றான். இது இரண்டாவது ஆஹுதி. (3) மூன்றாவதாக மழையால் பூமியில் ஹோமம் செய்யப்பட்டுச் செடிகொடிகளுடன் கலக்கின்றான். (4) நான்காவதாகப் புருஷனுடைய ஜாடராக்னியில் ஹோமம் செய்யப்பட்டு நாளடைவில் அவன் வீரியத்துடன் கலக்கின்றான். (5) ஐந்தாவதாக ஸ்திரீயின் கருக்குழியிலுள்ள தீயில் ஹோமம் செய்யப்பட்டு உடல் தரிக்கின்றான்.

प्राचीनशाल औपमन्यवः सत्ययज्ञः पौलुषिरिन्द्रद्युम्नो भाल्लवेयो जनः शार्कराक्ष्यो बुडिल आश्वतराश्विस्ते हैते महाशाला महाश्रोत्रियाः समेत्य मीमाꣳसांचक्रुः को नु आत्मा किं ब्रह्मेति ॥ ११.१ ॥

ते ह संपादयांचक्रुरुद्दालको वै भगवन्तोऽयमारुणिः संप्रतीममात्मानं वैश्वानरमध्येति तꣳहन्ताभ्यागच्छामेति तꣳहाभ्याजग्मुः ॥ ११.२ ॥

ப்ராசீனஶால ஔபமன்யவ: ஸத்யயஜ்ஞ: பௌலுஷி-ரிந்த்ரத்யும்ந்னோ பால்லவேயோ, ஜன: ஶார்க்கராக்ஷ்யோ, புடில ஆஶ்வதராஶ்விஸ்-தே ஹைதே மஹாஶாலா மஹாஶ்ரோத்ரியா: ஸமேத்ய, மீமாꣳஸாஞ்சக்ரு:, கோ நு ஆத்மா, கிம் ப்ரஹ்மேதி ॥ 11. 1 ॥

தே ஹ ஸம்பாதயாஞ்சக்ரு-ருத்தாலகோ வை பகவந்தோऽயமாருணி: ஸம்ப்ரதீம-மாத்மானம் வைஶ்வாநர-மத்த்யேதி, தꣳ ஹந்தாப்ப்யாகச்சாமேதி, தꣳ ஹாப்ப்யாஜக்மு: ॥ 11. 2 ॥

---

11.1. பிராசீனசால ஔபமன்யவர், ஸத்யயஜ்ஞ பௌலுஷி, இந்திரத்யும்ன பால்லவேயர், ஜனஶ் ஶார்க்கராக்ஷ்யர், புடில ஆசுவதராசுவி என்ற ஐவரும் சிறந்த கிருஹஸ்தர்கள், கேள்வியிற் சிறந்தவர்கள். இவர்கள் ஒன்றுகூடி, ஆத்மா யார், பிரம்மம் எது என்று விசாரிக்கத் தொடங்கினர்.

11.2. அவர்கள் தீர்மானித்தாவது: "ஐயன்மீர்! உத்தாலக ஆருணி இப்போது வைசுவானர ஆத்மாவை அறிந்தவர்; அவரைச் சென்றடைவோம்". அங்ஙனமே அவரைச் சென்றடைந்தனர்.

स ह संपादयांचकार प्रक्ष्यन्ति मामिमे महाशाला महाश्रोत्रियास्तेभ्यो न सर्वमिव प्रतिपत्स्ये हन्ताहमन्यमभ्यनुशासानीति ॥ ११.३ ॥

तान्होवाचाश्वपतिर्वै भगवन्तोयं कैकयः संप्रतीममात्मानं वैश्वानरमध्येति तꣳहन्ताभ्यागच्छामेति तꣳहाभ्याजग्मुः ॥ ११.४॥

तेभ्यो ह प्राप्तेभ्यः पृथगर्हाणि कारयांचकार स ह प्रातः संजिहान उवाच न मे स्तेनो जनपदे न कदर्यो न मद्यपो

ஸ ஹ ஸம்பாதயாஞ்சகார ப்ரக்ஷ்யந்தி மாமிமே மஹாஶாலா மஹாஶ்ரோத்ரியாஸ்-தேப்ப்யோ ந ஸர்வமிவ ப்ரதிபத்ஸ்யே, ஹந்தாஹ-மன்ய-மப்ப்யநுஶாஸாநீதி ॥ 11.3 ॥

தான்ஹோவாசாஶ்வபதிர்-வை பகவந்தோயங் கைகய: ஸம்ப்ரதீம-மாத்மானம் வைஶ்வாநர-மத்த்யேதி தꣳஹந்தாப்ப்யாகச்சாமேதி, தꣳஹாப்ப்யாஜக்மு: ॥ 11.4 ॥

தேப்ப்யோ ஹ ப்ராப்தேப்ப்ய: ப்ருத-க்ர்ஹாணி காரயாஞ்சகார, ஸ ஹ ப்ராத: ஸஞ்ஜிஹான உவாச, ந மே ஸ்தேநோ, ஜனபதே ந

---

11.3. அவர் (உத்தாலக ஆருணி அவர்கள் வருவதைக் கண்டு தனக்குள்) தீர்மானித்துக் கொண்டார்: "இச்சிறந்த கிருஹஸ்தர்கள், கேள்வியிற் சிறந்தவர்கள், என்னைக் கேள்விகள் கேட்பார்கள்; அவர்களுக்கு நான் எல்லாவற்றையும் சொல்ல இயலாது; ஆகையால் அவர்களுக்கு (சொல்லக்கூடிய) இன்னொருவரைப்பற்றிக் கூறுவேன்".

11.4. (அவ்வாறே) அவர்களிடம் கூறியதாவது: "ஐயன்மீர்! இப்போது கேகய புத்திரனை அசுவபதி வைசுவானர ஆத்மாவை அறிந்தவராவர்; நாம் அவரைச் சென்றடைவோம்." அங்ஙனமே அவரைச் சென்றடைந்தனர்.

11.5. அங்ஙனம் வந்தடைந்த அவர்களுக்குத் தகுந்த மரியாதையைத் தனித்தனியே அவர் ஏற்பாடு செய்தார். மறுநாள் காலையில் நித்திரைவிட்டு எழுந்து அவர்களிடம் கூறியதாவது: "என் நாட்டில் திருடன் இல்லை, லோபி இல்லை, குடிகாரன் இல்லை, அக்கினியைப் பூஜிக்காதவன் இல்லை, கல்லாதவன் இல்லை, வியபிசாரம்

नानाहिताग्निर्नाविद्वान्न स्वैरी स्वैरिणी कुतो यक्ष्यमाणो वै भगवन्तोऽहमस्मि यावदेकैकस्मा ऋत्विजे धनं दास्यामि तावद्भगवद्भ्यो दास्यामि वसन्तु भगवन्त इति ॥ ११.५॥

ते होचुर्ये न हैवार्थेन पुरुषश्चरेत्तꣳहैव वदेदात्मानमेवेमं वैश्वानरꣳ संप्रत्यध्येषि तमेव नो ब्रूहीति ॥ ११.६ ॥

கதர்யோ, ந மத்யபோ, நாநாஹிதாக்னிர்-நாவித்வாந்-ந ஸ்வைரீ, ஸ்வைரீணீ குதோ, யக்ஷ்யமாணோ வை பகவந்தோ஽ஹமஸ்மி, யாவ-தேகைகஸ்மா ருத்விஜே தனந் தாஸ்யாமி, தாவத் பகவத்ப்-ப்யோ தாஸ்யாமி, வஸந்து பகவந்த இதி ॥ 11.5 ॥

தே ஹோசுர்-யே ந ஹைவார்த்தேன புருஷஶ்-சரேத், தꣳஹைவ வதே-தாத்மானமேவேமம் வைஶ்வாநரꣳ ஸம்ப்ரத்-யத்த்யேஷி, தமேவ நோ ப்ரூஹீதி ॥ 11.6 ॥

---

செய்பவன் இல்லை,—வியபிசாரி ஏது ? நான் ஒரு யஜ்ஞம் செய்யப் போகிறேன். அதில் ஒவ்வொரு ருத்விக்குக்கும் என்ன பொருள் கொடுக்கின்றேனோ அந்த அளவு உங்களுக்கும் கொடுக்கிறேன். தேவரீர்கள் தங்கி அருளுதல் வேண்டும்.''

11.6. அவர்கள் கூறியதாவது: "எந்த நோக்கத்தோடு ஒருவன் வருகின்றானோ அதைத் தெரிவிக்கவேண்டுமல்லவா ? இப்போது நீர் வைசுவானர ஆத்மாவை அறிந்திருக்கிறீர். அதை எங்களுக்கு உபதேசியுங்கள்.''

---

11.5. ஒ. கூற்றமில்லை யொர் குற்றமிலாமையாற்
சீற்றமில்லை தஞ் சிந்தையிற் செம்மையா
லாற்ற னல்லற மல்லதி லாமையா
லேற்ற மன்றி யிழிதகவில்லையே.

(கம்பராமாயணம் 2.39)

கள்வாரிலாமைப் பொருள் காவலுமில்லையாதுங்
கொள்வாரிலாமைக் கொடுப்பார்களுமில்லை மாதோ.

(ஷை 3.73).

तान्होवाच प्रातर्वः प्रतिवक्तास्मीति ते ह समित्पाणयः पूर्वाह्णे प्रतिचक्रमिरे तान्हानुपनीयैवैतदुवाच ॥ ११.७ ॥

औपमन्यव कं त्वमात्मानमुपास्स इति दिवमेव भगवो राजन्निति होवाचैष वै सुतेजा आत्मा वैश्वानरो यं त्वमात्मानमुपास्से तस्मात्तव सुतं प्रसुतमासुतं कुले दृश्यते ॥ १२.१ ॥

தான் ஹோவாச ப்ராதர்வ: ப்ரதிவக்தாஸ்மீதி, தே ஹ ஸமித்பாணய: பூர்வாஹ்ணே ப்ரதிசக்ரமிரே, தான் ஹானுபநீயைவைததுவாச ॥ 11.7 ॥

ஔபமன்யவ, கம் த்வமாத்மான-முபாஸ்ஸ இதி, திவமேவ பகவோ ராஜன்னிதி ஹோவாசைஷ வை ஸுதேஜா ஆத்மா வைஶ்வாநரோ, யம் த்வ-மாத்மான-முபாஸ்ஸே, தஸ்மாத் தவ ஸுதம் ப்ரஸுத-மாஸுதம் குலே த்ருஶ்யதே ॥ 12.1 ॥

---

11.7. "காலையில் உங்களுக்கு விடை கூறுகிறேன்" என்று அவர்களிடம் சொன்னார். அவர்களும் காலையில் ஸமித்தைக் கையுறையாகக் கொண்டு(அரசனிடம்) சென்றனர். அவரும் உபதேசத்துக்குரிய கிரியைகளை அபேக்ஷியாமலேயே இதை உபதேசித்தார்.

12.1. "ஔபமன்யவரே! எதை நீர் (வைசுவானர) ஆத்மாவாக உபாசிக்கிறீர்?" என்றார்.

"பூஜைக்குரிய அரசரே! தேவலோகத்தையே" என்று கூறினார்.

"நீர் எதை ஆத்மாவாக உபாசிக்கிறீரோ அது 'ஸுதேஜஸ்' எனும் வைசுவானர ஆத்மா. ஆகையால் தான் உமது குலத்தில் ஸுதம், ப்ரஸுதம், ஆஸுதம் எனும் யாகக் கிரியைகள் காணப்படுகின்றன."

---

11.5-7. தன்னை நாடி வந்தவர்களுக்குத் தானம் செய்ய வேண்டும் என்று எண்ணி அரசன் பொருளைக் கொடுத்தபோது அவர்கள் அதைப் பெற விரும்பாதது கண்டு, ஒருவேளை தன்னுடைய சொத்து பாவம் நிறைந்ததென்று அவர்கள் சந்தேகித்து மறுத்திருக்கலாம் என்று கருதித் தன் நாட்டில் பாவச் செயலுடைய மக்களே இல்லை என்று கூறினார். மேலும் அப்போது அந்தத் தானத்தைப் பெற விரும்பாவிட்டாலும் யஜ்ஞம் நடக்கும் போதாவது மற்றவர்களுடன் கூடிப் பெற்றுக் கொள்ளவேண்டும்

अथ होवाचोद्दालकमारुणिं गौतम कं त्वमात्मानमुपास्स इति पृथिवीमेव भगवो राजन्निति होवाचैष वै प्रतिष्ठात्मा वैश्वानरो यं त्वमात्मानमुपास्से तस्मात्त्वं प्रतिष्ठितोऽसि प्रजया च पशुभिश्च ॥ १७.१ ॥

அத ஹோவாசோத்தாலக-மாருணிங், கௌதம, கம் த்வமாத்மான முபாஸ்ஸ இதி, ப்ருதிவீமேவ பகவோ ராஜன்னிதி ஹோவாசைஷ வை ப்ரதிஷ்ட்டாத்மா வைஶ்வாநரோ, யம் த்வமாத்மானமுபாஸ்ஸே, தஸ்மாத் த்வம் ப்ரதிஷ்ட்டிதோऽஸி ப்ரஜயா ச பஶுபிஶ்ச ॥ 17.1 ॥

---

**17.1.** பின் உத்தாலக ஆருணியை நோக்கி,'' கௌதமரே! நீர் எதை (வைசுவானர) ஆத்மாவாக உபாசிக்கிறீர் ?'' என்று கேட்க, பிருதிவியையே, பூஜைக்குரிய அரசரே !'' என்று அவர் கூறினர்.

'' நீர் எதை ஆத்மாவாக உபாசிக்கிறீரோ அது பிரதிஷ்டை எனும் வைசுவானர ஆத்மா. ஆகையால் பிரஜைகளுடனும் பசுக்களுடனும் நீர் நிலைபெற்றவராகின்றீர்.''

---

என்றுங் கூறினர். ஆனல் அவர்கள் விரும்பியது ஞானதானமே என்று உணர்ந்தபோது, அவர்கள் விருப்பத்தைப் பூர்த்திசெய்வித்தார்.

சிறந்த கிருஹஸ்தர்களாகவும், கல்விகேள்விகளிற் சிறந்தவர்களாகவும் இருந்த பிராம்மணர்கள் உயர் குலப் பெருமையை விட்டு, கையில் ஸமித்தை எடுத்துக்கொண்டு, மரியாதையுடன் ஒரு அரசனையணுகி உபதேசத்தை நாடியதால், உபதேசத்தை நாடும் அனைவரும் அங்ஙனம் நடந்து கொள்ளவேண்டும் என்பது காட்டப்படுகின்றது. அரசனும் உபதேசத்துக்குரியவர்களுக்குக் கிரியைகளை அபேக்ஷியாமலேயே உபதேசித்ததால், மற்றவர்களும் அங்ஙனம் ஞானதானம் செய்வது கடமை என்பதும் குறிக்கப்பட்டதாகும். இது இவ்வரலாற்றின் கருத்து. (சங்.)

तान्होवाचैते वै खलु यूयं पृथगिवेममात्मानं वैश्वानरं विद्वाꣳसोऽन्नमात्थ यस्त्वेतमेवं प्रादेशमात्रमभिविमानमात्मानं वैश्वानरमुपास्ते स सर्वेषु लोकेषु सर्वेषु भूतेषु सर्वेष्वात्मस्वन्न-मत्ति ॥ १८.१ ॥

**தான் ஹோவைசைதே வை கலு யூயம் ப்ருத-கிவேம-மாத்-மானம் வைஶ்வாநரம் வித்வாꣳ ஸோऽன்ன-மாத்த, யஸ்த்வேத-மேவம் ப்ராதேஶ-மாத்ரமபி-விமான-மாத்மானம் வைஶ்வாநர-முபாஸ்தே, ஸர்வேஷு லோகேஷு, ஸர்வேஷு பூதேஷு, ஸர்வேஷ்-வாத்மஸ்-வன்ன-மத்தி ॥ 18.1 ॥**

---

**18.1. (முடிவில்) எல்லோரையும் நோக்கிக் கூறியதாவது: "வெவ்வேறானதுபோல் இந்த வைசுவானர ஆத்மாவை அறிந்தவர்களாய் நீங்கள் அன்னத்தைப் புசிக்கிறீர்கள். ஆனால் எவனொருவன் வைசுவானர ஆத்மாவைப் 'ப்ராதேசமாத்ரம்' என்றும் 'அபிவிமானம்' என்றும் உபாசிக்கின்றானோ அவன் எல்லா உலகங்களிலும், எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் அன்னத்தைப் புசிப்பவனாகிறான்."**

---

18.1. வெவ்வேறானது போல்—நீங்கள் எல்லோரும் ஆத்மாவை அளவுபட்டதாகக் கருதுகிறீர்கள்; உங்கள் அபிப்பிராயங்களில் வித்தியாசம் பிறவிக் குருடர்களுக்கு யானையைப் பற்றியுள்ள அபிப்பிராய பேதத்தைப் போன்றதாகும். (ஹஸ்திதர்ஶன இவ ஜாத்யந்த்தா:). வைசுவானர ஆத்மாவை உள்ளபடி உணர்ந்தவன், ஸர்வத்துக்கும் ஆத்மாவாக இருந்து கொண்டு அன்னத்தைப் புசிக்கிறான். பிண்டத்தில் மாத்திரம் அபிமானமுடைய அஞ்ஞானியைப் போல் அன்று. (வைஶ்வானரவித் ஸர்வாத்மா அன்னமத்தி, ந யதா அஜ்ஞ: பிண்டமாத்ராபிமான: ஸந்-நித்யர்த்த:). சங்.

ஸத்யயஜ்ஞர், இந்திரத்யும்னர், ஜனர், புடிலர் முதலியவர்களை அவ்வாறே கேட்க அவர்கள் முறையே சூரியனையும், வாயுவையும், ஆகாசத்தையும் ஜலத்தையும் உபாசிப்பதாகக் கூறினர்).

तस्य ह वा एतस्यात्मनो वैश्वानरश्च मूर्धैव सुतेजाश्चक्षुर्विश्वरूपः प्राणः पृथग्वर्त्मात्मा सन्देहो बहुलो बस्तिरेव रयिः पृथिव्येव पादावुर एव वेदिर्लोमानि बर्हिर्हृदयं गार्हपत्यो मनोऽन्वाहार्यपचन आस्यमाहवनीयः ॥ १८.२ ॥

तद्यद्भक्तं प्रथममागच्छेत्तद्धोमीयꣳ स यां प्रथमामाहुतिं जुहुयात्तां जुहुयात्प्राणाय स्वाहेति प्राणस्तृप्यति ॥ १९.१ ॥

தஸ்ய ஹ வா ஏதஸ்யாத்மநோ வைஸ்வாநரஸ்ச மூர்த்தைவ ஸுதேஜாஸ்-சக்ஷுர் விஸ்வரூப: ப்ராண: ப்ருதக் வர்த்மாத்மா ஸந்தேஹோ பஹுலோ, பஸ்திரேவ ரயி:, ப்ருதிவ்யேவ பாதா-வுர ஏவ வேதிர்-லோமானி பர்ஹிர்-ஹ்ருதயம் கார்ஹபத்யோ மநோऽன் வாஹார்யபசன, ஆஸ்ய-மாஹவனீய: ॥ 18.2 ॥

தத்யத்பக்தம் ப்ரதம-மாகச்சேத் தத்தோமீயꣳ ஸ யாம் ப்ரதம-மாஹுதிம் ஜுஹுயாத்-தாம் ஜுஹுயாத் ப்ராணாய ஸ்வாஹேதி, ப்ராணஸ்-த்ருப்யதி ॥ 19.1 ॥

---

18.2. இந்த வைசுவானர ஆத்மாவின் தலை (தேவலோகம்) ஸுதேஜஸ்; கண் (சூரியன்) விசுவரூபன்; மூச்சு (வாயு) பிருதக் வர்த்மா; உடல் (ஆகாசம்) பஹுளம்; மூத்திரக் கோசம் (ஜலம்) ரயி; பாதங்கள் (பிரதிஷ்டை) பிருதிவீ; மார்பு யாகமேடை; உரோமமே தர்ப்பை; இருதயம் கார்ஹபத்யாக்னி; மனம் தக்ஷிணாக்னி; வாய் ஆஹவனீயாக்னி.

19.1. ஆகையால் முதலில் எந்த அன்னம் வருகிறதோ அது ஹோமம் செய்தற்குரியது. முதல் ஆஹுதியைச் செய்யும் போது அதைப் 'ப்ராணாய ஸ்வாஹா' என்று செய்யவேண்டும். அதனால் பிராணன் திருப்தியடைகிறது.

प्राणेतृप्यति चक्षुस्तृप्यति चक्षुषि तृप्यत्यादित्यस्तृप्यत्यादित्ये तृप्यति द्यौस्तृप्यति दिवि तृप्यन्त्यां यत्किंच द्यौश्चादित्यश्चाधितिष्ठतस्तत्तृप्यति तस्यानुतृप्तिं तृप्यति प्रजया पशुभिरन्नाद्येन तेजसा ब्रह्मवर्चसेनेति ॥ १९.२ ॥

स य इदमविद्वानग्निहोत्रं जुहोति यथाङ्गारानपोह्य भस्मनि जुहुयात्तादृक्तत्स्यात् ॥ २४.१ ॥

பராணே த்ருப்யதி, சக்ஷுஸ்த்ருப்யதி, சக்ஷுஷி த்ருப்யத்-யாதித்யஸ்த்ருப்யத்-யாதித்யே த்ருப்யதி த்யௌஸ்த்ருப்யதி, திவித்ருப்யந்த்யாம் யத் கிஞ்ச த்யௌஶ்சாதித்யஶ்சாதி திஷ்ட்டதஸ் தத் த்ருப்யதி, தஸ்யானு த்ருப்திம் த்ருப்யதி ப்ரஜயா பஶுபி ரன்னாத்யேன தேஜஸா ப்ரஹ்மவர்ச்சஸேனேதி ॥ 19·2 ॥

ஸ ய இத-மவித்வா-னக்னிஹோத்ரஞ் ஜுஹோதி யதாங்காரா-னபோஹ்ய பஸ்மனி ஜுஹுயாத் தாத்ருக்-தத்-ஸ்யாத் ॥ 24.1 ॥

---

19.2. பிராணன் திருப்தியடைந்தால் கண் திருப்தியடைகிறது; கண் திருப்தியடைந்தால் சூரியன் திருப்தியடைகிறான்; சூரியன் திருப்தியடைந்தால் தேவலோகம் திருப்தி யடைகிறது; தேவலோகம் திருப்தியடைந்தால் தேவலோகத்துக்கும் சூரியனுக்கும் கீழே உள்ளதெல்லாம் திருப்தியடைகிறது. எல்லாந் திருப்தி யடைந்தால் பிரஜைகளுடனும் பசுக்களுடனும் அன்னத்துடனும் தேஜஸ்ஸுடனும் பிரம்மவர்ச்சஸ்ஸுடனும், (ஆஹுதி செய்யும்) அவன் திருப்தியடைகிறான்.

24.1. இதையறியாமல் ஒருவன் அக்னிஹோத்ரம் செய்தால், அது நெருப்பை விலக்கிச் சாம்பலில் ஹோமம் செய்ததுபோலாகும்.

---

24.1. இதையறியாமல்—செய்யும் செயலெல்லாம் அக்னிஹோத்ரம் என்று இதையறியாமல்.

உதாரணமாக உண்ணும் உணவு 'ப்ராணக்னிஹோத்ரம்' ஆகின்றதென்று அறியவேண்டும். அதனாலேயே 'ப்ராணயஸ்வாஹா, அபானயஸ்வாஹா, வ்யானயஸ்வாஹா, உதானயஸ்வாஹா, ஸமானயஸ்வாஹா' என்ற மந்திரங்கள் போஜனத்துக்கு முன் கூறப்படுகின்றன.

ஒ. வைசுவானர வித்தை. சா. 5.11

तद्यथेषीकातूलमग्नौ प्रोतं प्रदूयेतैवꣳहास्य सर्वे पाप्मानः प्रदूयन्ते य एतदेवं विद्वानग्निहोत्रं जुहोति ॥ २४.३ ॥

तस्मादु हैवंविद्यद्यपि चण्डालायोच्छिष्टं प्रयच्छेदात्मनि हैवास्य तद्वैश्वानरे हुतꣳ स्यादिति तदेष श्लोकः ॥ २४.४ ॥

यथेह क्षुधिता बाला मातरं पर्युपासते । एवꣳसर्वाणि भूतानि अग्निहोत्रमुपासत इत्यग्निहोत्रमुपासत इति ॥ २४.५ ॥

॥ इति पञ्चमोऽध्यायः ॥

தத்யதேஷீகா-தூல-மக்னௌ ப்ரோதம் ப்ரதூயேதைவꣳ ஹாஸ்யஸர்வே பாப்மான: ப்ரதூயந்தே, ய ஏத-தேவம் வித்வா-னக்னி ஹோத்ரஞ் ஜு ஹோதி ॥ 24.3 ॥

தஸ்மா-து ஹைவம்வித் யத்யபி சண்டாளாயோச்சிஷ்டம் ப்ரயச்சே-தாத்மனி ஹைவாஸ்ய தத் வைஶ்வானரே ஹு தꣳஸ்யா-திதி, ததேஷ ஶ்லோக: ॥ 24.4 ॥

யதேஹ க்ஷு திதா பாலா மாதரம் பர்யுபாஸதே । ஏவꣳ ஸர்வாணி பூதானி அக்னிஹோத்ரமுபாஸத இத்யக்னிஹோத்ர-முபாஸத இதி ॥ 24.5 ॥

॥ இதி பஞ்சமோऽத்த்யாய : ॥

---

24.3. புல்லின் ஈர்க்கு நெருப்பிலிடப்பட்டதும் எரிந்து போவதுபோல் இதையறிந்து அக்னிஹோத்திரம் செய்பவனுடைய பாவங்கள் அனைத்தும் எரிந்து போகின்றன.

24.4. ஆகையால் இதையறிந்த ஒருவன் தான் உண்ட உச்சிஷ்டத்தை ஒரு சண்டாளனுக்குக் கொடுப்பினும் அது தன்னிடமுள்ள வைசுவானராக்கினியில் ஹோமம் செய்ததாகவே ஆகும். அதைப்பற்றிப் பின்வரும் சுலோகம் உண்டு.

24.5. பசி மிகுந்த குழந்தைகள் தாயை நாடுவதுபோல் எல்லாப் பிராணிகளும் அக்னிஹோத்திரத்தை நாடுகின்றன.

ஐந்தாவது அத்தியாயம் முற்றும்

---

24.3. பலாப்பழத்தை உரிக்கும்போது கையில் எண்ணெய் தடவிக் கொண்டால் பிசின் ஒட்டாது. அதுபோல் மனதில் யோகம் கூடியவனைக் கர்மபலன் ஒட்டாது. (ரா. கி.)

## ॥ षष्ठोऽध्यायः ॥

ॐ श्वेतकेतुर्हारुणेय आस तꣳह पितोवाच श्वेतकेतो वस ब्रह्मचर्यं न वै सोम्यास्मत्कुलीनोऽननूच्य ब्रह्मबन्धुरिव भवतीति ॥ १.१ ॥

स ह द्वादशवर्ष उपेत्य चतुर्विꣳशतिवर्षः सर्वान् वेदानधीत्य महामना अनूचानमानी स्तब्ध एयाय तꣳह पितोवाच ॥ १.२ ॥

## ॥ ஷஷ்ட்டோऽத்த்யாய: ॥

ஓம் ஶ்வேதகேதுர்-ஹாருணேய ஆஸ தꣳஹ பிதோவாச, ஶ்வேத-கேதோ வஸ ப்ரஹ்மசர்யம், ந வை ஸோம்யாஸ்மத்-குலீனோऽந-னூச்ய ப்ரஹ்மபந்துரிவ பவதீதி ॥ 1.1 ॥

ஸ ஹ த்வாதஶவர்ஷ உபேத்ய, சதுர்விꣳஶதிவர்ஷ: ஸர்வான் வேதானதீத்ய மஹாமனா அனூசானமானீ ஸ்தப்த்த ஏயாய, தꣳஹ பிதோவாச ॥ 1.2 ॥

---

## ஆறுவது அத்தியாயம்

**1.1.** ஓம் அருணரின் பேரன் சுவேதகேது என்று ஒருவன் இருந்தான். அவனை நோக்கி அவன் தந்தை "சுவேதகேது! பிரம்மசாரியாக நீ வசிக்க வேண்டும். குழந்தாய்! நமது குலத்தோர் எவரும் வேதத்தைக் கற்காமல் பெயரால் மட்டும் பிராம்மணராக இருந்ததில்லை" என்றார்.

**1.2.** அவன் பன்னிரண்டு வயதில் (அங்ஙனமே குருகுலம்) சென்று இருபத்துநாலு வயது வரை எல்லா வேதங்களையுங் கற்றுத் தான் பெரியவன் என்றுங் கல்வியில் தனக்கு நிகரில்லை யென்றுங் கர்வங்கொண்டவனாய்த் திரும்பி வந்தான். அவனை நோக்கி அவன் தந்தை பின்வருமாறு கேட்டார்.

---

1.1-2. சுவேதகேதுவின் தகப்பனார் எல்லாங் கற்றவராயிருந்தும் தனது மகன் ஆசாரியனிடம் ஸேவை செய்து கல்வி கற்றுவர வேண்டும் என்று அவனைத் தகுந்த ஆசாரியனைத் தேடி யடையும்படி அனுப்பி வைத்தார்.

श्वेतकेतो यन्नु सोम्येदं महामना अनूचानमानी स्तब्धोऽस्युत तमादेशमप्राक्ष्यः। येनाश्रुतꣳ श्रुतं भवत्यमतं मतमविज्ञातं विज्ञातमिति। कथं नु भगवः स आदेशो भवतीति ॥ १.३ ॥

ஶ்வேதகேதோ, யன்னு ஸோம்யேதம் மஹாமனா அனூசான மானீ ஸ்தப்த்தோऽஸ்யுத தமாதேஶ-மப்ராக்ஷ்ய: । யேனாஶ்ருதꣳ ஶ்ருதம் பவத்-யமதம் மத-மவிஜ்ஞாதம் விஜ்ஞாதமிதி । கதந் நு பகவ: ஸ ஆதேஶோ பவதீதி ॥ 1.3 ॥

---

1.3. "சுவேத கேது! குழந்தாய்! ஏது, நீ பெரியவன் என்றும் கல்வியில் உனக்கு நிகரில்லை என்றும் கர்வித்திருப்பதாய்க் காண்கிறதே! எதனால் கேள்விக்கெட்டாதது கேட்கப்பட்டதாயும், நினைவுக் கெட்டாதது நினைக்கப்பட்டதாயும் அறிவிக் கெட்டாதது அறியப்பட்டதாயும் ஆகுமோ அந்த உபதேசத்தைக் குருவினிடம் கேட்டாயா?"

"ஐயனே! அப்படி யொரு உபதேசம் எங்ஙனம் கூடும்?"

---

நன்றாகக் காய்த்துப் பழுத்த மரத்தின் கிளைகள் வளைந்திருப்பதுபோல் கல்வியால் பக்குவமடைந்தவன் பணிவுடையவனாயிருப்பான். பணிவின்மை கல்வியின் குறைவைக் காட்டும். ஆத்ம ஞானத்தாலேயே கல்வி பூர்த்தியாகின்றது.

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்? (குறள்).

கற்றதுங் கேட்டதுந்தானே யேதுக்காகக்
கடபட மென்றுருட்டுதற்கோ? கல்லாலெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற்றின்பநிட்டை கூடவன்றோ? (தாயுமானவர்)

1.3. பி. சூ. 1.4.23. (ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞா-த்ருஷ்டாந்தானுபரோதாத்).

यथा सोम्यैकेन मृत्पिण्डेन सर्वं मृन्मयं विज्ञातꣳस्याद्वाचारंभणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम् ॥ १.४ ॥

न वै नूनं भगवन्तस्त एतदवेदिषुर्यद्धयेतदवेदिष्यन् कथं मे नावक्ष्यन्निति भगवाꣳस्त्वेवमेतद्ब्रवीत्विति तथा सोम्येति होवाच ॥ १.७ ॥

யதா ஸோம்யைகேன ம்ருத்பிண்டேன ஸர்வம் ம்ருன்மயம் விஜ்ஞாத ꣳஸ்யாத்,வாசாரம்பணம் விகாரோ நாமதேயம், ம்ருத்திகேத்யேவ ஸத்யம் ॥ 1.4 ॥

ந வை நூனம் பகவந்தஸ்-த ஏத-தவேதிஷுர் யத்த்-யேத-தவேதிஷ்யன் கதம் மே நாவக்ஷ்யன்னிதி, பகவாꣳஸ்த்வேவ-மேதத் ப்ரவீத்விதி, ததா ஸோம்யேதி ஹோவாச ॥ 1.7 ॥

---

1.4. "குழந்தாய்! எங்ஙனம் ஒரு பிடி மண்ணினால், மண்ணாலாகிய அனைத்தும் அறியப்பட்டதாகுமோ, வேறுபாடெல்லாம் பேசுமிடத்துப் பெயரளவிலேயாமோ, மண் ஒன்றே உண்மையோ அங்ஙனம்."

1.7. "எனது குருமார்களாகிய அப்பெரியோர்கள் இதை அறியமாட்டார்கள் போலும். அறிந்திருந்தால் எனக்குச் சொல்லியிருக்க மாட்டார்களா? ஐயனே! தாங்களே இதை உபதேசிக்க வேண்டும்" என்றான்.

"ஸோம்யா! அங்ஙனமே யாகட்டும்" என்று சொல்லலானார்.

---

1.4. பி. சூ. 2.1.14. (ததன்யத்வ-மாரம்பண ශப்தாதிப்ய:).

1.7. தன் குருமார்களுக்கு இது தெரியாதென்று சுவேதகேது கூறியதும் அவன் மனது பக்குவமடையாததையே காட்டுகிறது. மீண்டுங் குருகுலம் செல்ல விருப்பமில்லாமல் இங்ஙனம் கூறினான்.

सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयं तद्धैक आहुरस-देवेदमग्र आसीदेकमेवाद्वितीयं तस्मादसतः सज्जायत ॥ २.१ ॥

कुतस्तु खलु सोम्यैवꣳ स्यादिति होवाच कथमसतः सज्जायेतेति सत्त्वेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयम् ॥ २.२ ॥

तदैक्षत बहु स्यां प्रजायेयेति तत्तेजोऽसृजत तत्तेज ऐक्षत बहु स्यां प्रजायेयेति तदपोऽसृजत ॥ २.३ ॥

ஸதேவ ஸோம்யேத-மக்ர ஆஸீ-தேகமேவாத்விதீயம், தத்தைக ஆஹு-ரஸ-தேவேத-மக்ர ஆஸீ-தேக-மேவாத்விதீயம், தஸ்மா-தஸத: ஸஜ்ஜாயத ॥ 2.1 ॥

குதஸ்து கலு ஸோம்யைவꣳ ஸ்யாதிதி ஹோவாச, கதமஸத: ஸஜ்ஜாயேதேதி, ஸத்-த்வேவ ஸோம்யேத-மக்ர ஆஸீ-தேகமேவாத்-விதீயம் ॥ 2.2 ॥

ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி தத்தேஜோऽஸ்ருஜத, தத்தேஜ ஐக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி ததபோऽஸ்ருஜத ॥ 2.3 ॥

---

2.1. 'குழந்தாய்! ஆதியில் இது ஒன்றேயாக இரண்டற்றதாய் ஸத்தாக இருந்தது. சிலர் "இது அஸத்தாகவே ஆதியில் இருந்தது, அந்த அஸத்திலிருந்து ஸத் உண்டாயிற்று" என்று கூறுவர்'.

2.2. 'குழந்தாய்! அது எங்ஙனம் கூடும்? அஸத்திலிருந்து ஸத் எப்படி உண்டாகும்? குழந்தாய்! இது ஸத்தாகவேதான் ஆதியில் இருந்தது—ஒன்றாக, இரண்டற்றதாக.'

2.3. 'நான் பலவாக ஆவேன், வெகுவாக வளர்வேன்.' என்று கண்டு அது ஒளியைச் சிருஷ்டித்தது. அவ்வொளி 'நான் பலவாக ஆவேன்' என்று கண்டு நீரைச் சிருஷ்டித்தது.

---

2.1—2 ஒ. தை. 2.6-7.

பி. சூ. 1.1.4; 1.1.5; 1.4.23; 2.1.16; 2.1.18.
இங்கு கூறியது 'ஸத்வித்தை' எனப்படும்.

2.3. பி. சூ. 1.4.24. (அபித்த்யோபதேசாச்ச).

ता आप ऐक्षन्त बह्व्यः स्याम प्रजायेमहीति ता अन्नमसृजन्त तस्माद्यत्र क्वच वर्षति तदेव भूयिष्ठमन्नं भवत्यद्भ्य एव तदध्यन्नाद्यं जायते ॥ २.४ ॥

अन्नमशितं त्रेधा विधीयते तस्य यः स्थविष्ठो धातुस्तत्पुरीषं भवति यो मध्यमस्तन्मा ँ सं योऽणिष्ठस्तन्मनः ॥ ५.१ ॥

अन्नमय ँ हि सोम्य मन आपोमयः प्राणस्तेजोमयी वागिति भूय एव मा भगवान्विज्ञापयत्विति तथा सोम्येति होवाच ॥ ५.४ ॥

தா ஆப ஐக்ஷந்த, பஹ்வ்ய: ஸ்யாம ப்ரஜாயேமஹீதி, தா அன்னமஸ்ருஜந்த, தஸ்மாத் யத்ர க்வச வர்ஷதி ததேவ பூயிஷ்ட்டமன்னம் பவத்யத்ப்ப்ய ஏவ ததத்த்யன்னாத்யஞ் ஜாயதே ॥ 2.4 ॥

அன்னமஶிதந் த்ரேதா விதீயதே, தஸ்ய ய: ஸ்த்தவிஷ்ட்டோ தாதுஸ்-தத் புரீஷம் பவதி, யோ மத்த்யமஸ்-தன்மா ँஸம் யோऽணிஷ்ட்டஸ்-தன்மன: ॥ 5.1 ॥

அன்னமய ँ ஹி ஸோம்ய மன, ஆபோமய: ப்ராணஸ்-தேஜோமயீ வாகிதி, பூய ஏவ மா பகவான் விஜ்ஞாபயத்விதி, ததா ஸோம்யேதி ஹோவாச ॥ 5.4 ॥

---

2.4. அந் நீர்ப் பெருக்கு 'நாம் பலவாக ஆவோம்' என்று கண்டு அன்னத்தைச் சிருஷ்டித்தன. ஆகையால் எங்கேயாவது மழை பெய்தால் அங்கேயே ஏராளமான அன்னம் உண்டாகிறது. நீரிலிருந்தே உண்ணும் உணவு உண்டாகிறதன்றோ'' ?

5.1. 'உண்ட உணவு மூன்று விதமாகிறது. அதன் ஸ்தூல பாகம் எதுவோ அது மலமாகவும், எது நடுத்தரமோ அது மாம்ஸமாகவும், எது ஸூக்ஷ்ம பாகமோ அது மனமாகவும் ஆகிறது.'

5.4. 'குழந்தாய் ! மனம் அன்னமயமானது; பிராணன் நீர்மயமானது; வாக்கு ஒளிமயமானது.' 'ஐயனே ! மீண்டும் எனக்குத் தெளிவுபட உபதேசிக்க வேண்டும்' என்ன, 'அங்ஙனமே குழந்தாய் !' என்று கூறலானார்.

---

2.4. ஒ. (ஸோऽகாமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி) தை. 2.6. பி. சூ. 1.1.5—8.

षोडशकलः सोम्य पुरुषः पञ्चदशाहानि माऽशीः काममपः पिबाऽऽपोमयः प्राणो न पिबतो विच्छेत्स्यत इति ॥ ७.१ ॥

स ह पञ्चदशाहानि नाऽऽशाथ हैनमुपससाद किं ब्रवीमि भो इति ऋचः सोम्य यजूꣳषि सामानीति स होवाच न वै मा प्रतिभान्ति भो इति ॥ ७.२ ॥

तꣳ होवाच यथा सोम्य महतोऽभ्याहितस्यैकोऽङ्गारः खद्योतमात्रः परिशिष्टः स्यात्तेन ततोऽपि न बहु दहेदेवꣳ सोम्य ते षोडशानां कलानामेका कलाऽतिशिष्टा स्यात्तयैतर्हि वेदान्नानुभवस्यशानाथ मे विज्ञास्यसीति ॥ ७.३ ॥

ஷோடசகல: ஸோம்ய புருஷ: பஞ்சதசாஹானி மாऽசீ: காமமப: பிபாऽऽபோமய: ப்ராணோ, ந பிபதோ விச்சேத்ஸ்யத இதி ॥ 7.1 ॥

ஸ ஹ பஞ்சதசாஹானி நாऽऽசாத ஹைன-முபஸஸாத, கிம் ப்ரவீமி போ இதி ருச: ஸோம்ய யஜூꣳஷி ஸாமானீதி ஸ ஹோவாச ந வை மா ப்ரதிபாந்தி போ இதி ॥ 7.2 ॥

தꣳஹோவாச, யதா ஸோம்ய மஹதோऽப்யாஹிதஸ்-யைகோऽங்கார: கத்யோதமாத்ர: பரிசிஷ்ட: ஸ்யாத்,தேன ததோऽபி ந பஹு தஹே தேவꣳஸோம்ய தே ஷோடசாநாம் கலானாம் ஏகா கலாऽதிசிஷ்டா ஸ்யாத், தயைதர்ஹி வேதாந்-நானுபவஸ்-யசானாத மே விஜ்ஞாஸ்யஸீதி ॥ 7.3 ॥

---

7.1-3. "புருஷன் பதினாறு கலைகள் உள்ளவன். பதினைந்து நாள் சாப்பிடாமலிரு, ஆனால் வேண்டிய அளவு ஜலத்தைக் குடித்து வா. பிராணன் ஜலமயமானதால் பிராணன் போகாது" என்றார். அவன் அங்ஙனமே பதினைந்து நாள் சாப்பிடவில்லை. பின் அவரிடம் வந்து 'நான் என்ன சொல்லட்டும்?' என்றான். 'ருக் யஜுஸ் ஸாமங்கள்' என்றார். 'அவை என் மனதில் எழவில்லை ஐயனே!' என்றான். அவனிடம் அவர் கூறியதாவது—"குழந்தாய்! ஒரு பெருந் தீயில் மின்மினி மாதிரி ஒரு சிறு பொரி மாத்திரம் எஞ்சி நின்றால் அது வெகுவாக எரிக்காது; அவ்வாறே குழந்தாய்! உனது பதினாறு கலையில் ஒரு கலை மட்டும் எஞ்சி நிற்கிறது. அதனால் உனக்கு வேதம் பிரகாசிக்கவில்லை. இனிச் சாப்பிட்டால் மீண்டும் பிரகாசிக்கும். என் கருத்தை உணர்வாய்."

उद्दालको हारुणिः श्वेतकेतुं पुत्रमुवाच स्वप्नान्तं मे सोम्य विजानीहीति यत्रैतत्पुरुषः स्वपिति नाम सता सोम्य तदा संपन्नो भवति स्वमपीतो भवति तस्मादेनꣳ स्वपितीत्याचक्षते स्वꣳ ह्यपीतो भवति ॥ ८.१ ॥

स यथा शकुनिः सूत्रेण प्रबद्धो दिशं दिशं पतित्वाऽन्यत्रायतनमलब्ध्वा बन्धनमेवोपश्रयत एवमेव खलु सोम्य तन्मनो दिशं दिशं पतित्वान्यत्रायतनमलब्ध्वा प्राणमेवोपश्रयते प्राणबन्धनꣳ हि सोम्य मन इति ॥ ८.२ ॥

உத்தாலகோ ஹாருணி: ஶ்வேதகேதும் புத்ரமுவாச, ஸ்வப்னாந்தம் மே ஸோம்ய விஜானீஹீதி, யத்ரைதத் புருஷ: ஸ்வபிதி நாம, ஸதா ஸோம்ய ததா ஸம்பன்னோ பவதி, ஸ்வமபீதோ பவதி, தஸ்மாதேனꣳ ஸ்வபிதீத்-யாசக்ஷதே, ஸ்வꣳ ஹ்யபீதோ பவதி ॥ 8.1 ॥

ஸ யதா ஶகுனி: ஸூத்ரேண ப்ரபத்தோ திஶம் திஶம் பதித்வா ऽன்யத்ராயதன-மலப்த்வா, பந்தனமேவோபஶ்ரயத, ஏவமேவ கலு ஸோம்ய, தன்மனோ திஶந் திஶம் பதித்வான்யத்ராயதன-மலப்த்வா, ப்ராண-மேவோபஶ்ரயதே ப்ராணபந்தனꣳ ஹி ஸோம்ய மன இதி ॥ 8.2 ॥

---

8.1. உத்தாலாக ஆருணி தமது புத்திரனை சுவேதகேதுவை நோக்கி மீண்டுங் கூறுவார்; 'ஸ்வப்னத்தின் முடிவான நிலையை என்னிடமிருந்து அறிந்துகொள், குழந்தாய்! எப்போது இந்தப் புருஷன் தூங்குகிறானோ அப்போது இவன் ஸத்துடன் ஒன்றுபட்டு நிற்கிறான், தன்னிடமே லயிக்கிறான். ஆகையால் இவன் (ஸ்வபிதி) தூங்குகிறான் என்பதால் (ஸ்வꣳஹ்யபீதோபவதி) ஆத்மாவிடம் ஒடுங்கிவிட்டான் என்று பொருள்படக் கூறுகின்றனர்.

8.2. 'கயிற்றால் கட்டப்பட்ட ஒரு பறவையானது எங்ஙனம் திசைதோறும் பறந்தும் வேறெங்கும் உறைவிடங் காணாமல் கட்டப்

---

8.1. ஒ. (அத்ரைஷ தேவ: ஸ்வப்னே மஹிமான-மனுபவதி.) இந்த தேவன் ஸ்வப்னத்தில் தன் பெருமையை அனுபவிக்கிறான். (ப்ர. 4.5). பி. ஸூ. 1.1.9 (ஸ்வாப்யயாத்). பி. ஸூ. 3.2.8 (அத: ப்ரபோதோऽஸ்மாத்)

8.2. மனதிற்கு உறைவிடம் பிராணன்—இங்கு பிராணன் என்றது பிராணனுக்குப் பிராணனை ஆத்மா என்று உணரவேண்டும்.

यथा सोम्य मधु मधुकृतो निस्तिष्ठन्ति नानात्ययानां वृक्षाणाꣳ रसान् समवहारमेकताꣳ रसं गमयति ॥ ९.१ ॥

ते यथा तत्र न विवेकं लभन्तेऽमुष्याहं वृक्षस्य रसोऽस्म्यमुष्याहं वृक्षस्य रसोऽस्मीत्येवमेव खलु सोम्येमाः सर्वाः प्रजाः सति संपद्य न विदुः सति संपद्यामह इति ॥ ९.२ ॥

யதா ஸோம்ய மது மதுக்ருதோ நிஸ்திஷ்டந்தி நாநாத்யயாநாம் வ்ருக்ஷாணாꣳ ரஸான் ஸமவஹார-மேகதாꣳ ரஸங் கமயதி ॥ 9.1 ॥

தே யதா தத்ர ந விவேகம் லபந்தேऽமுஷ்யாஹம் வ்ருக்ஷஸ்ய ரஸோऽஸ்ம்-யமுஷ்யாஹம் வ்ருக்ஷஸ்ய ரஸோऽஸ்மீதி, ஏவமேவ கலு ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதி ஸம்பத்ய, ந விது: ஸதி ஸம்பத்யாமஹ இதி ॥ 9.2 ॥

---

பட்ட இடத்திலேயே நிலைபெறுமோ அங்ஙனமே, குழந்தாய்! மனமும் திசைதோறும் பறந்தும் வேறெங்கும் உறைவிடங் காணாமல் பிராணனிடமே நிலைபெறும். மனத்திற்கு உறைவிடம் பிராணன் என்று உணரவேண்டும்.'

9.1. 'குழந்தாய்! தேனீக்கள் எங்ஙனம் பல திக்குகளிலுள்ள மரங்களினின்று ரஸங்களைச் சேகரித்துப் பின் ஒரு ரஸமான தேனைச் செய்கின்றனவோ;

9.2. 'அந்த ரஸங்கள் எங்ஙனம் அறியாவோ, "நான் இந்த மரத்தின் ரஸம், நான் இந்த மரத்தின் ரஸம்" என்று; அங்ஙனமே குழந்தாய்! இப் பிராணிகள் எல்லாம் ஸத்தை அடைந்து (ஆழ்ந்த தூக்கத்தில்) ஸத்தை அடைந்துளோம் என்று அறிய மாட்டார்கள்.

---

௯. பறவைகள் எவ்வாறு தாம் வசிக்கும் மரத்தைச் சாருகின்றனவோ அவ்வாறே சக்திகளெல்லாம் கூடஸ்தனை ஆத்மாவிடம் அடங்குகின்றன.

तं इह व्याघ्रो वा सिंहो वा वृको वा वराहो वा कीटो वा पतङ्गो वा दꣳशो वा मशको वा यद्यद्भवन्ति तदा भवन्ति ॥ ९.३॥

स य एषोऽणिमैतदात्म्यमिदꣳ सर्वं तत्सत्यꣳ स आत्मा तत्त्वमसि श्वेतकेतो इति भूय एव मा भगवान् विज्ञापयत्विति तथा सोम्येति होवाच ॥ ९.४ ॥

इमाः सोम्य नद्यः पुरस्तात्प्राच्यः स्यन्दन्ते पश्चात्प्रतीच्यस्ताः समुद्रात्समुद्रमेवापियन्ति समुद्र एव भवन्ति ता यथा

**த இஹ வ்யாக்க்ரோ வா, ஸிꣳஹோ வா, வ்ருகோ வா, வராஹோ வா, கீடோ வா, பதங்கோ வா, தꣳஶோ வா, மஶகோ வா, யத்-யத் பவந்தி ததா பவந்தி ॥ 9.3 ॥**

**ஸ ய ஏஷோऽணிமைத-தாத்ம்யமிதꣳ ஸர்வம், தத் ஸத்யꣳ ஸ ஆத்மா தத்-த்வமஸி ஶ்வேதகேதோ இதி, பூய ஏவ மா பகவான் விஜ்ஞாபயத்விதி, ததா ஸோம்யேதி ஹோவாச ॥ 9.4 ॥**

**இமா: ஸோம்ய நத்ய: புரஸ்தாத் ப்ராச்ய: ஸ்யந்தந்தே பஶ்சாத் ப்ரதீச்யஸ்தா: ஸமுத்ராத் ஸமுத்ரமேவாபியந்தி ஸமுத்ர ஏவ**

---

9.3. 'அவை இங்கு புலியோ, சிங்கமோ, ஓநாயோ, பன்றியோ, புழுவோ, பூச்சியோ, கொசுவோ எப்படி இருக்கின்றனவோ அப்படியே மீண்டும் ஆகின்றன (தூங்கி யெழுந்தபின்னும்).

9·4. 'எது அணுமாத்திரமான ஸூக்ஷ்ம வஸ்துவோ அதையே ஆத்மாவாய்க் கொண்டது இது எல்லாம்; அதுவே ஸத்தியம்; அதுவே ஆத்மா; சுவேதகேதுவே! அதுவே நீயாக உளாய் (தத்-தவம் அஸி).' 'ஐயனே! மீண்டும் எனக்குத் தெளிவுற உபதேசிக்க வேண்டும்' என்ன, 'அங்ஙனமே, குழந்தாய்' என்று கூறலானார்.

10.1. 'குழந்தாய்! இந்நதிகள், கிழக்கு நதிகள் கீழ்த்திசையிலும், மேற்கு நதிகள் மேற்றிசையிலும், பாய்ந்து செல்லுகின்றன; ஸமுத்திரத்திலிருந்து(தோன்றி) ஸமுத்திரத்திலேயே மறைகின்றன,

---

9.4. 'தத்-த்வம் அஸி' என்பது ஸாம வேதத்தின் மகா வாக்கியம்.

तत्र न विदुरियमहमस्मीति । एवमेव खलु सोम्येमाः सर्वाः प्रजाः सत आगत्य न विदुः सत आगच्छामह इति ॥ स य एषो अणिमैतत्... ॥ 10.1 ॥

अस्य सोम्य महतो वृक्षस्य यो मूलेऽभ्याहन्याज्जीवन्स्रवेद्यो मध्येऽभ्याहन्याज्जीवन्स्रवेद्यो ऽग्रेऽभ्याहन्याज्जीवन्स्रवेत्स एष जीवेनात्मना प्रभूतः पेपीयमानो मोदमानस्तिष्ठति ॥ 11.1 ॥

பவந்தி தா யதா தத்ர ந விது-ரிய-மஹ-மஸ்மீதி । ஏவமேவ கலு ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸத ஆகத்ய ந விது: ஸத ஆகச்சாமஹ இதி ॥ ஸ ய ஏஷோ அணிமைதத்...... ॥ 10.1 ॥

அஸ்ய ஸோம்ய மஹதோ வ்ருக்ஷஸ்ய யோ மூலேऽப்ப்யாஹன்-யாஜ்-ஜீவன் ஸ்ரவேத் யோ மத்த்யேऽப்ப்யாஹன்யாஜ்-ஜீவன் ஸ்ரவேத்-யோऽக்ரேऽப்ப்யாஹன்யாஜ்-ஜீவன்ஸ்ரவேத், ஸ ஏஷ ஜீவேனாத்மனா ப்ரபூத: பேபீயமானோ மோதமானஸ்-திஷ்ட்டதி ॥ 11.1 ॥

---

ஸமுத்திரமாகவே ஆய்விடுகின்றன. அவை அந்நிலையில் 'நான் இது' என்று எங்ஙனம் அறியமாட்டாவோ அங்ஙனமே, குழந்தாய்! இப்பிராணிகள் எல்லாம் ஸத்திலிருந்து தோன்றி ஸத்திலிருந்து தோன்றினோம் என்று உணரவில்லை. எது அணுமாத்திரமான அந்த ஸூக்ஷ்ம வஸ்துவோ...... அதுவே நீயாக உளாய் (தத்-த்வம்-அஸி).'

11.1. 'குழந்தாய்! இந்தப் பெரிய மரத்தின் அடியில் ஒருவன் காயப்படுத்தினால் நீர் வடியும், ஆனால் பிழைத்திருக்கும்; நடுவில் வெட்டினாலும் நீர் வடியும், ஆனால் பிழைத்திருக்கும்; நுனியில் வெட்டினாலும் நீர் வடியும், ஆனால் பிழைத்திருக்கும். அது உயிர் வடிவான ஆத்மாவால் வியாபிக்கப்பட்டு, நீரைப் பருகிக் கொண்டு, ஆனந்தமாய் நிற்கிறது.

जीवापेतं वाव किलेदं म्रियते न जीवो म्रियत इति स य एषोऽणिमैतत्... ॥ ११.३ ॥

न्यग्रोधफलमंत आहरेतीदं भगव इति भिन्धीति भिन्नं भगव इति किमत्र पश्यसीत्यण्व्य इवेमा धाना भगव इत्यासामङ्गैकां भिन्धीति भिन्ना भगव इति किमत्र पश्यसीती न किञ्चन भगव इति ॥ १२.१ ॥

ஜீவாபேதம் வாவ கிலேதம் ம்ரியதே ந ஜீவோ ம்ரியத இதி; ஸ ய ஏஷோऽணிமைதத் ... ॥ 11.3 ॥

ந்யக்ரோதபல-மத ஆஹரேதீதம் பகவ இதி, பிந்தீதி, பின்னம் பகவ இதி கிமத்ர பஶ்யஸீத்-யண்வ்ய இவேமா தானா பகவ இத்-யாஸா-மங்கைகாம் பிந்தீதி, பின்னா பகவ இதி கிமத்ர பஶ்யஸீதி ந கிஞ்சன பகவ இதி ॥ 12·1 ॥.

---

11.3. '(ஆனால் ஒரு கிளையை மரத்தினின்று வெட்டி நீக்கி விட்டால்) உயிர் வடிவான ஆன்மா நீங்கியதால் இது பட்டுப் போகிறது; உயிர் வடிவான ஆன்மா சாவதில்லை. எது அணு மாத்திரமான அந்த ஸூக்ஷ்ம வஸ்துவோ...அதுவே நீயாக உளாய். (தத்-த்வம் அஸி).'

12.1. 'ஆலம் பழம் ஒன்றைக் கொண்டுவா.'

'இதோ ஐயனே.'

'அதைப் பிள.'

'பிளக்கப்பட்டது, ஐயனே.'

'அங்கு என்ன காண்கிறாய்?'

'அணுவடிவான விதைகள், ஐயனே!'

'குழந்தாய், அவற்றுள் ஒன்றைப் பிள.'

'பிளக்கப்பட்டது, ஐயனே.'

'அங்கு என்ன காண்கிறாய்?'

'ஒன்றுங் காணவில்லை.'

---

11.3. பி. ஸூ. 2.3.16 (சராசரவ்யபாஶ்ரயஸ்து ஸ்யாத்-தத்வ்யபதேஶோ பாக்த:...)

तꣳहोवाच यं वै सोम्यैतमणिमानं न निभालयस एतस्य वै सोम्यैषोऽणिम्न एवं महान्न्यग्रोधस्तिष्ठति । श्रद्धत्स्व सोम्येति स य एषोऽणिमैतत्...॥ १२.३ ॥

लवणमेतदुदकेऽवधायाथ मा प्रातरुपसीदथा इति स ह तथा चकार तꣳहोवाच यद्दोषा लवणमुदकेऽवाधा अङ्ग तदाहरेति तद्धावमृश्य न विवेद ॥ १३.१ ॥

த꣡ஹோவாச, யம் வை ஸோம்யைத-மணிமானம் ந நிபாலயஸ ஏதஸ்ய வை ஸோம்யைஷோऽணிம்ன ஏவம் மஹாந் ந்யக்ரோத-ஸ்திஷ்ட்டதி । ஶ்ரத்தத்ஸ்வ ஸோம்யேதி; ஸ ய ஏஷோऽணிமைதத் ... ॥ 12.3 ॥.

லவண-மேத-துதகேऽவதாயாத மா ப்ராத-ருபஸீததா இதி; ஸ ஹ ததா சகார; த꣡ஹோவாச யத்தோஷா லவண முதகே ऽபாதா அங்க ததாஹரேதி; தத்தாவம்ருஶ்ய ந விவேத ॥ 13.1 ॥

---

12.3. அவனை நோக்கிக் கூறுவார் "குழந்தாய்! எந்த (ஜீவசக்தியான) ஸூக்ஷ்மப் பொருளை நீ காணவில்லையோ, அந்த ஸூக்ஷ்மப் பொருளினின்றே இந்தப் பெரிய ஆலமரம் உண்டாகி நிற்கிறது. குழந்தாய்! அதில் சிரத்தை வைப்பாய். அணுமாத்திர மான அந்த ஸூக்ஷ்ம வஸ்து எதுவோ......அதுவே நீயாக உளாய் (தத்-த்வம் அஸி).'

13.1. 'இந்த உப்பை நீரில் போட்டுவைத்து என்னைக் காலை யில் பார்' என்றார். அவன் அப்படியே செய்தான். 'இரவில் நீரில் போட்ட உப்பைக் கொண்டுவா, குழந்தாய்' என்றார். அதைச் சோதித்து அவன் காணவில்லை. அது கரைந்து போயிற்று.

---

12.3. **சிரத்தை வைப்பாய்**—நம்பிக்கையின் சக்தி அகக்கண்ணைத் திறந்து வைக்கும். ஊனக்கண் காணாததை ஞானக்கண்ணால் காணலாம். விதையினுள் இருக்கும் மரத்தை ஊனக்கண் காணமுடியாவிடினும் ஞானக் கண் காண்கிறது. விதையினுள் மரம் முழுதும், அதின் பூவின் வாசனை யும், நிறமும், மற்ற எல்லாவிசேஷ குணங்களும், மறுபடி அம்மரத்தில் இத்தகைய விதைகள் நிறைந்த கனிகள் உண்டாக்கும் சக்தியும் அடங்கிக் கிடக்கின்றன. இந்த அதிசயத்தை ஆழ்ந்து சிந்தித்தால் ஸூக்ஷ்மமாகிய ஆன்ம சக்தியில் அனைத்தும் அடங்கியிருக்கும் ரகசியம் ஒருவாறு விளங்கும்.

यथा विलीनमेवाङ्गास्यान्तादाचामेति कथमिति लवणमिति मध्यादाचामेति कथमिति लवणमिति अन्तादाचामेति कथमिति लवणमिति अभिप्रास्यैनदथ मोपसीदथा इति तद्ध तथा चकार तच्छश्वत्संवर्तते तꣳहोवाचात्र वाव किल सत्सोम्य न निभालयसेऽत्रैव किलेति । स य एषो अणिमैतत्...॥ १३.२ ॥

யதா விலீனமேவாங்காஸ்யாந்தா-தாசாமேதி, கதமிதி, லவண மிதி; மத்த்யா-தாசாமேதி, கதமிதி, லவணமிதி ; அந்தா-தாசாமேதி, கதமிதி, லவணமிதி; அபிப்ராஸ்யைனதத மோபஸீததா இதி; தத்த ததா சகார, தச்சஸ்வத் ஸம்வர்த்ததே, த ꣳஹோவாசாத்ர வாவ கில ஸத் ஸோம்ய ந நிபாலயஸேऽத்ரைவ கிலேதி । ஸ ய ஏஷோ அணிமைதத் ... ॥ 13.2 ॥

---

13.2. ‘குழந்தாய்! மேல் நீரைச் சிறிது உண்டுபார். எப்படியிருக்கிறது?’ ‘உப்பாயிருக்கிறது.’ ‘நடுவிலிருந்து சிறிது உண்டு பார், எப்படியிருக்கிறது?’ ‘உப்பாயிருக்கிறது.’ ‘அடியிலிருந்து சிறிது உண்டுபார். எப்படியிருக்கிறது?’ ‘உப்பாயிருக்கிறது.’ ‘அதைக்கொட்டி விட்டு என்னிடம் வா’ என்றார். அவன் அங்ஙனமே செய்தான். அப்போதும் இப்போதும் அது இருக்கவே இருக்கிறது. ‘இங்கும் ஸத்தான வஸ்துவை நீ காணவில்லை எனினும் இங்கே இருக்கவே இருக்கிறது. அணுமாத்திரமான அந்த ஸூக்ஷ்ம வஸ்து எதுவோ...அதுவே நீயாக உளாய் (தத்—த்வம் அஸி)’

---

13.1-2. உலகம் முழுவதும் அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருள் எப்படி மறைந்துபோயிற்று என்பதற்கும் கரைந்துபோன உப்பைக் கண் காணாவிட்டாலும் நாவு உணர்வதுபோல் ஐந்து இந்திரியங்களுங்காணாவிட்டாலும் புத்தியில் அது பிரகாசிக்கும் என்பதற்கு இது உதாரணம்.

यथा सोम्य पुरुषं गन्धारेभ्योऽभिनद्धाक्षमानीय तं ततोऽतिजने विसृजेत्स यथा तत्र प्राङ्वोदङ्वाऽधरङ्वा प्रत्यङ्वा प्रध्मायीताभिनद्धाक्ष आनीतोऽभिनद्धाक्षो विसृष्टः ॥ १४.१ ॥

तस्य यथाभिनहनं प्रमुच्य प्रब्रूयादेतां दिशं गन्धारा एतां दिशं व्रजेति स ग्रामाद्ग्रामं पृच्छन् पण्डितो मेधावी गन्धारानेवोप-

யதா ஸோம்ய புருஷங் கந்தாரேப்ப்யோऽபிநத்தாக்ஷ-மானீய, தம் ததோऽதிஜனே விஸ்ருஜேத், ஸ யதா தத்ர ப்ராங்வோதங்வா ऽதரங்வா ப்ரத்மாயீதாபிநத்தாக்ஷ ஆனீதோऽபிநத்தாக்ஷோ விஸ்ருஷ்ட: ॥ 14.1 ॥

தஸ்ய யதாபிநஹனம் ப்ரமுச்ய ப்ரப்ரூயா-தேதாந் திஶங் கந்தாரா, ஏதாந்-திஶம் வ்ரஜேதி ; ஸ க்ராமாத்-க்ராமம் ப்ருச்சன்

---

14.1. " குழந்தாய் ! கந்தாரதேசத்தினின்று ஒரு மனிதனைக் கண்ணைக் கட்டிக் கொண்டுபோய் ஜனங்களில்லாத ஒரு இடத்தில் எவரோ விட்டுவிட்டால் அம்மனிதன் கிழக்கு நோக்கியோ வடக்கு நோக்கியோ தெற்குநோக்கியோ மேற்கு நோக்கியோ 'ஐயோ! கண்ணைக்கட்டிக் கொண்டு வரப்பட்டேன் ; கண்கட்டுடன் இங்கு விடப்பட்டேன் ' என்று எங்ஙனம் கதறுவானோ ;

14.2. " அதன்மேல் எவனோ ஒருவன் அவனுடைய கட்டை அவிழ்த்து விட்டு ' கந்தாரதேசம் இந்த திசையிலுள்ளது ; இந்த திசையில் செல் ' என்று சொன்னால், அவன் கிராமம் கிராமமாகக்

---

14.2. உதாரணத்தில் கூறப்பட்ட புருஷனைப்போல் ஜீவன் தீவினைகள் என்ற திருடர்களால் தன் சொந்த நாடாகிய பரமபதத்திலிருந்து கவரப்பட்டு ஸம்ஸாரமாகிய காட்டில் விடப்படுகிறான். அவன் கண்ணைக் கட்டுவது மோகம். ' இவன் என் மகன், இவர்கள் என் உறவினர், நான் இறந்து போவேன், என் செல்வம் அழிந்துவிடும், என் கதி என்ன ஆகும்? எனக்கு உதவுபவர் யாவர் ?' என்பது இவனுடைய கதறல். இப்படிக் கட்டுப் படாமல் கவலையில்லாமல் சுதந்திரத்துடன் சஞ்சரிக்கும் ஒரு முக்த புருஷன் அவ்வழி தெய்வ வசமாய் வர நேர்ந்து அவர் இவன் நிலைக்கிரங்கி ஞானோபதேசத்தால் மோகமாகிய கண்கட்டை அவிழ்த்துவிட்டு இவனுடைய சொந்த ஊருக்கு வழிகாட்டுகிறார்.

(தஸ்ய தாவதேவ சிரம் யாவந் ந விமோக்ஷ்யே) அவனுக்கு விடுதலையடையும் அதுவரை தான் தாமதம்—குரு கிடைக்கப்பெற்ற ஒருவ

संपद्येतैवमेवेहाचार्यवान् पुरुषो वेद तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्येऽथ संपत्स्य इति ॥ स य एषोऽणिमैतत् ... ॥ १४.२ ॥

॥ इति षष्ठोऽध्यायः ॥

பண்டிதோ மேதாவீ கந்தாரா-னேவோபஸம்பத்யேத, ஏவமேவேஹ ஆசார்யவான் புருஷோ வேத ; தஸ்ய தாவதேவ சிரம், யாவந் ந விமோக்ஷ்யேऽத ஸம்பத்ஸ்ய இதி ॥ ஸ ய ஏஷோ அணிமைதத் ... ॥ 14.2 ॥

॥ இதி ஷஷ்ட்டோऽத்த்யாய: ॥

---

கேட்டுக்கொண்டு நடக்கவேண்டிய வழி தெரிந்தவனைப் புத்திசாலியானவன் எங்ஙனம் கந்தார தேசத்தை மீண்டும் அடைவானோ, அங்ஙனமே ஆசாரியனைப்பெற்ற புருஷன் ஞானோதயம் பெறுகிறான். (ஞானம் உதித்தபின்) அவனுக்கு (பிராரப்தம் நசித்து) விடுதலையடையும் அதுவரை தான் தாமதம் ; அதன்மேல் பரம் பொருளுடன் ஒன்றுபடுகிறான். அணுமாத்திரமான அந்த ஸூக்ஷ்ம வஸ்து எதுவோ...அதுவே நீயாக உளாய் (தத்-த்வம் அஸி).''

ஆறுவது அத்தியாயம் முற்றும்

---

னுக்கு ஆன்மநிலை எய்துதலில் தாமதம் அவன் விடுதலையடையும் வரை தான். விடுதலையாவது கர்மவசத்தால் ஏற்பட்ட சரீரத்திலிருந்து விடுபடுதல். இந்தச் சரீரம் விழுந்த பின்னும் சஞ்சிதமாயுள்ள வேறு கர்மங்களுக்காக மறுபடி சரீரம் ஏற்படலாமே என்றால் அது இல்லை என்று சுருதி கூறுகிறது (அதுவரை தான் தாமதம் என்று). பலனைக் கொடுக்க ஆரம்பித்து விட்ட 'பிராரப்த' கருமத்துக்கும், ஆரம்பிக்காத 'சஞ்சித' கர்மத்துக்கும் வித்தியாசம் உண்டு. எய்துவிட்ட அம்பு அதன் வேகம் அடங்கிய பின்னரே நிற்கும். சஞ்சிதமோ எய்யப்படாத அம்பு போல் இருப்பது. ஞானத்தீ அதை எரித்துவிடும். (ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா —கீ. 4.37). ஒப்புயர்வற்ற பரம்பொருளைக் கண்டவனுக்கு அவனுடைய கருமங்கள் நாசமாகின்றன (மு. 2.2.8).

பி. சூ. 4.1.15 ; 4.1.19 ; 1.1.7.

பிரம்மஞானத்தை யடைந்துவிட்டவனுக்கு உடல் வாழ்க்கையால் யாதொரு பயனும் இல்லை (தஸ்ய கார்யம் ந வித்யதே—கீ 3.17). குறியில் பட்ட பின் அம்பு உடனே கீழே விழுந்தாலும் விழுந்து விடலாம் ; அல்லது குறியைத் துளைத்துக்கொண்டு அப்பால் சிறிது சென்று விழுந்தாலும் விழலாம். குறி எய்தியபின் அம்பினால் ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. குறி எய்தும் வரை தான் தாமதம். பாணை செய்து முடிந்தபின்

## ॥ सप्तमोऽध्यायः ॥

ॐ अधीहि भगव इति होपससाद सनत्कुमारं नारदस्तꣳ होवाच यद्वेत्थ तेन मोपसीद ततस्त ऊर्ध्वं वक्ष्यामीति ॥ १.१ ॥

सहोवाचर्ग्वेदं भगवोऽध्येमि यजुर्वेदꣳ सामवेदं अथर्वणं चतुर्थं इतिहासपुराणं पञ्चमं वेदानां वेदं पित्र्यꣳ राशिं दैवं निधिं

## ॥ ஸப்தமோத்த்யாய : ॥

ஓம் அதீஹி பகவ இதி ஹோபஸஸாத ஸனத்குமாரம் நாரதஸ் தꣳ ஹோவாச, யத் வேத்த தேன மோபஸீத, ததஸ்த ஊர்த்த்வம் வக்ஷ்யாமீதி ॥ 1.1 ॥

ஸ ஹோவாச ருக்வேதம் பகவோऽத்த்யேமி ; யஜுர்வேதꣳ ஸாமவேதம் அதர்வணஞ் சதுர்த்தம், இதிஹாஸபுராணம் பஞ்சமம், வேதானும் வேதம், பித்ருயம் ராஶிம் தைவம் நிதிம், வாகோ

---

1.1. ஓம். ‘ஐயனே! உபதேசம் செய்தருளும்’ என்று நாரதர் ஸனத்குமாரரை யணுகினர். ‘உமக்கு ஏற்கெனவே என்ன தெரியுமோ அதைத் தெரிவியும்; அதற்குமேல் உமக்கு உபதேசிப் போம்’ என்றார்.

1.2. ‘ஐயனே! ருக்வேதம் தெரியும்; யஜுர்வேதம் ஸாம வேதம்; நான்காவதாக அதர்வணவேதம், ஐந்தாவதாக இதிஹாஸ புராணம்; வேதங்களின் வேதமாகிய இலக்கணம், பிதிருகல்பம், கணித சாஸ்திரம், சகுனசாஸ்திரம், காலநிர்ணயம், தர்க்க சாஸ்திரம், நீதிசாஸ்திரம், நிருக்தம், சிக்ஷையாகிய வேதநூல், பூதவித்தை, போர்முறை, வானசாஸ்திரம், ஸர்ப்பவித்தை, கந்தர்வ வித்தை, இவற்றையெல்லாம் கற்றுள்ளேன், ஐயனே!’

---

குயவனுடைய சக்கரம் ஏற்கெனவே சுற்றிவிட்ட வேகத்தால் இன்னும் சிறிது நேரம் தானாகவே சுற்றி ஓய்வதுபோல் பிராரப்த வேகத்தால் சரீரம் உலகில் சுற்றி ஓயும். குருவின் அனுக்ரஹம் ஏற்படும் போது இவன் பெறுவது பிரம்மஸம்ஸ்பர்சம் (கீ. 6.28). அம்புபோல் சென்று குறியில் ஊடுருவுதல் பிராம்மீஸ்திதி (கீ 2.72). விதேஹமுக்தி, பிரம்மநிர்வாணம் (2.72)

1.1-2. ஆத்மஞானமில்லாமல் எந்த வித்தையும் உண்மையான உயர்ந்த நன்மையைத் தராது என்று காட்டுவதற்காக நாரத ஸநத்குமார

वाकोवाक्यमेकायनं देवविद्यां ब्रह्मविद्यां भूतविद्यां क्षत्रविद्यां नक्षत्रविद्या॰ सर्पदेवजनविद्यां एतद्भगवोऽध्येमि ॥ १.२ ॥

सोऽहं भगवो मन्त्रविदेवास्मि नात्मविच्छ्रुत॰ ह्येव मे भगवद्दृशेभ्यस्तरति शोकमात्मविदिति सोऽहं भगवः शोचामि तं मा भगवाञ्छोकस्य पारं तारयत्विति त॰ होवाच यद्वै किंचैतदध्यगीष्ठा नामैवैतत् ॥ १.३ ॥

வாக்ய மேகாயனந் தேவவித்யாம் ப்ரஹ்மவித்யாம் பூதவித்யாம் க்ஷத்ரவித்யாம் நக்ஷத்ரவித்யா॰ ஸர்ப்பதேவஜனவித்யாம், ஏதத் பகவோऽத்த்யேமி ॥ 1.2 ॥

ஸோऽஹம் பகவோ மந்த்ரவி-தேவாஸ்மி நாத்மவிச் ச்ருத॰ஹ்-யேவ மே பகவத்த்ருஶேப்ப்யஸ்-தரதி ஶோக-மாத்மவிதிதி, ஸோऽஹம் பகவ: ஶோசாமி தம் மா பகவான் ஶோகஸ்ய பாரம் தாரயத்விதி, த॰ ஹோவாச யத் வை கிஞ்சைத-தத்த்யகீஷ்ட்டா நாமைவைதத் ॥ 1.3 ॥

---

1.3. 'ஆயினும் நான், ஐயனே! மந்திரங்களை மட்டும் அறிந்தவனேயன்றி ஆத்மாவை யறிந்தவனல்லன். ஆத்மாவை யறிந்தவனே சோகத்தைக் கடப்பான் என்று தேவரீரைப் போன்றவர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். நான் சோகத்திற்குட்பட்டிருக்கிறேன். ஐயனே! என்னைத் தேவரீர் சோகத்தைத் தாண்டும்படி செய்விக்க வேண்டும்' என்றார். 'நீர் எதெது கற்றுள்ளீரோ அது எல்லாம் வெறும் பெயர் தான்' என்றார் (ஸநத்குமாரர்).

---

ஸம்வாதம் ஆரம்பிக்கப்படுகிறது. எல்லாவித்தைகளிலும் வல்லவரான நாரதரே வித்தியாகர்வத்தை விட்டு ஆத்மஞானத்துக்காக ஸநத்குமாரரை நாடினர் என்றதால், எவ்வளவு கற்றவராயினும் தகுந்த குருவை நாடி உபதேசம் பெறாமல் இந்த ஞானங்கைகூடாது என்பது குறிப்பிடப்படுகிறது. (ஆசார்யவான் புருஷோ வேத) ஆசாரியனைப்பெற்ற புருஷனே ஞானேதயம் பெறுகிறான். (சா. 7.14.2)

1·3. நாரதர்:—பூர்த்தியாகாத ஆசைகளால் ஏற்படும் கவலைகள் எல்லாம் ஆத்ம ஞானம் பெற்றால் அறவே ஒழியும் என்று தேவரீரைப் போன்ற பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். என்னை அக்கவலைகள் விட்டபாடில்லை. ஆகையால் தங்களைச் சரண் அடைகின்றேன். என்

अस्ति भगवो नाम्नो भूय इति नाम्नो वाव भूयोऽस्तीति तन्मे भगवान् ब्रवीत्विति ॥ १.५ ॥

वाग्वाव नाम्नो भूयसी ॥ २.१ ॥

मनो वाव वाचो भूयो यथा वै द्वे वामलके द्वे वा कोले द्वौ वाक्षौ मुष्टिरनुभवत्येवं वाचं च नाम च मनोऽनुभवति स यदा मनसा मनस्यति मन्त्रानधीयीयेत्यथाधीते कर्माणि कुर्वीतेत्यथ कुरुते...मनोह्यात्मा मनो हि लोको मनो हि ब्रह्म मन उपास्स्वेति ॥ ३.१ ॥

அஸ்தி பகவோ நாம்னோ பூய இதி, நாம்னோ வாவ பூயோ஽ஸ்தீதி, தன்மே பகவான் ப்ரவீத்விதி ॥ 1·5 ॥

வாக்வாவ நாம்னோ பூயஸீ ॥ 2·1 ॥

மனோ வாவ வாசோ பூயோ, யதா வை த்வே வாமலகே த்வே வா கோலே த்வௌ வாக்ஷௌ முஷ்டிரனுபவத்-யேவம் வாசஞ் ச நாம ச மனோ஽னுபவதி, ஸ யதா மனஸா மனஸ்யதி, மந்த்ரா-னதீ-யீயேத்-யதாதீதே, கர்மாணி குர்வீதேத்யத குருதே...மனோஹ்யாத்மா, மனோ ஹி லோகோ, மனோ ஹி ப்ர்ஹ்ம மன உபாஸ்-ஸ்வேதி ॥ 3·1 ॥

---

1·5. 'ஐயனே! பெயரிட்டுக் கூறிய இதினும் பெரிது உண்டோ?' 'பெயரிட்டுக் கூறியதினும் பெரிது உண்டு.' 'அதை எனக்குத் தேவரீர் உபதேசித்தருளல் வேண்டும்.'

2·1. 'வாக்குப் பெயரினும் பெரிது.'

3·1. 'மனது வாக்கினும் பெரிது. எங்ஙனம் கைப்பிடிக்குள் இரண்டு நெல்லிக்காயோ, இலந்தைப்பழமோ, தாளிக்காயோ அடங்கிப்போமோ அங்ஙனம் பெயரும் வாக்கும் மனத்தினுள் அடங்கும். மந்திரங்களை அத்தியயனம் செய்ய வேண்டுமென்று மனத்

---

உள்ளத்தில் திருப்தியை உண்டாக்கிப் பயமற்ற நிலைக்கு என்னை அழைத்துச் செல்லும்.

1·5. பி. சூ. 3·3·60. (காம்யாஸ்து யதாகாமம் ஸமுச்சீயேரந் ந வா பூர்வஹேத்-வபாவாத்).

संकल्पो वाव मनसो भूयान्यदा वै संकल्पयतेऽथ मनस्यत्यथ वाचमीरयति तामु नाम्नीरयति नाम्नि मन्त्रा एकं भवन्ति मन्त्रेषु कर्माणि ॥ ४.१ ॥

चित्तं वाव संकल्पाद्भूयः ॥ ५.१ ॥

ध्यानं वाव चित्ताद्भूयो ध्यायतीव पृथिवी ध्यायतीवान्तरिक्षं ध्यायतीव द्यौर्ध्यायन्तीव पर्वता ध्यायन्तीव देवमनुष्यास्तस्माद्य इह मनुष्याणां महत्तां प्राप्नुवन्ति ध्यानापादांशा इवैव ते भवन्त्यथ येऽल्पाः कलहिनः पिशुना उपवादिनस्तेऽथ ये प्रभवो ध्यानापादांशा इवैव ते भवन्ति ध्यानमुपास्स्वेति ॥ ६.१ ॥

ஸங்கல்போ வாவ மனஸோ பூயான் யதா வை ஸங்கல்பயதேऽத மனஸ்யத்-யத வாச-மீரயதி, தாமு நாம்னீரயதி, நாம்னி மந்த்ரா ஏகம் பவந்தி, மந்த்ரேஷு கர்மாணி ॥ 4·1 ॥

சித்தம் வாவ ஸங்கல்பாத்ப்பூய: ॥ 5·1 ॥

த்த்யானம் வாவ சித்தாத் பூயோ த்த்யாயதீவ ப்ருதிவீ த்த்யாயதீவாந்தரிக்ஷந் த்த்யாயதீவ த்யௌர்-த்த்யாயந்தீவ பர்வதா, த்த்யா-யந்தீவ தேவ மனுஷ்யாஸ்-தஸ்மாத் ய இஹ மனுஷ்யாணும் மஹத்-தாம் ப்ராப்னுவந்தி த்த்யானுபாதாம்ஶா இவைவ தே பவந்தி, அத யேऽல்பா: கலஹின: பிஶுனு உபவாதினஸ்தேऽதயே ப்ரபவோ த்த்யானுபாதாம்ஶா இவைவ தே பவந்தி த்த்யான-முபாஸ்ஸ்வேதி ॥ 6·1 ॥

---

தால் நினைத்த பின்தான் அத்தியயனம் செய்கிறுன், கருமங்களைச் செய்ய வேண்டுமென்று கருதியபின் தான் செய்கிறுன்;......... மனது தான் ஆத்மா, மனது தான் உலகம், மனது தான் பிரம்மம். ஆகையால் மனதை உபாசிப்பாய்.'

5·1. ' ஸங்கல்பத்தைக் காட்டிலுஞ் சித்தம் பெரிது.'

6·1. ' தியானம் சித்தத்தினும் பெரிது. பூமி தியானம் செய்கின்றது போலும்; அந்தரிக்ஷம் தியானம் செய்கின்றது போலும்;

---

4·1. ஸங்கல்பம் மனதினும் பெரிது. எப்போது ஒருவன் ஸங்கல்பிக்கிறுனே அப்போது யோசிக்கிறுன்; பேச ஆரம்பிக்கிறுன்; பேச்சுப் பெயர் வடிவாகிறது; பெயர் வடிவில் மந்திரங்கள் ஒடுங்குகின்றன; மந்திரங்களில் கருமங்கள் ஒடுங்குகின்றன.

विज्ञानं वाव ध्यानाद्भूयः ॥ ७.१ ॥

बलं वाव विज्ञानाद्भूयोऽपि ह शतं विज्ञानवतामेको बलवानाकंपयते स यदा बली भवत्यथोत्थाता भवति उत्तिष्ठन् परिचरिता भवति परिचरन्नुपसत्ता भवत्युपसीदन्द्रष्टा भवति श्रोता भवति मन्ता भवति बोद्धा भवति कर्ता भवति विज्ञाता भवति बलेन वै पृथिवी तिष्ठति बलेनान्तरिक्षं बलेन द्यौर्बलेन

விஜ்ஜானம் வாவ த்த்யானுத் பூய : ॥ 7·1 ॥

பலம் வாவ விஜ்ஞானுத்-பூயோऽபி ஹ ஶதம் விஜ்ஞானவதா-மேகோ பலவா-ஞகம்பயதே ஸ யதா பலீ பவத்யதோத்தாதா பவதி, உத்திஷ்டன் பரிசரிதா பவதி, பரிசரந்-நுபஸத்தா பவத்-யுபஸீதன் த்ரஷ்டா பவதி, ஶ்ரோதா பவதி, மந்தா பவதி, போத்தா

---

வானுலகு தியானம் செய்கின்றது போலும்; மலைகள் தியானம் செய்கின்றன போலும்; தேவர்களும் மனுஷ்யர்களும் தியானம் செய்கின்றனர் போலும். ஆகையால் மனிதர்களுள் இங்கு எவர் கள் பெருமை பெற்றவர்களோ அவர்கள் தியான பலத்தின் ஓரம்ச மாவது பெற்றவர்களேயாவர். அல்ப மனிதர்கள் கலகக்காரர்களா கவும் கோள் சொல்லுகிறவர்களாகவும் பிறரை நிந்திக்கிறவர்களாக வும் இருக்கின்றனர்; பெரியோர்களோ தியானத்தில் ஆழ்ந்தவர்க ளாவர். தியானத்தை உபாசிப்பாய்.'

7·1. தியானத்தைக் காட்டிலும் விஜ்ஜானம் பெரிது.

8·1. '(ஆத்ம) பலம் விஜ்ஞானத்தைக் காட்டிலும் பெரிது. ஒரு பலவான் நூறு விஜ்ஞானவான்களை ஆட்டிவைக்கக் கூடும். ஒருவனுக்குப் பலம் வந்தால் அவன் எழுவான், எழுந்து சேவை செய்வான், ஸேவை செய்து நல்லோர்களிடம் நெருங்குவான், நெருங்கிப் பார்ப்பவனுயுங் கேட்பவனுயும் சிந்திப்பவனுயும், அறிப வனுயும் அனுஷ்டிப்பவனுயும் தெளிபவனுயும் ஆகிருன். பலத் தால் தான் பூமி நிலை பெறுகிறது; பலத்தால்தான் அந்தரிக்ஷமும் பலத்தால்தான் வானுலகும்; பலத்தால் மலைகளும், பலத்தால்

---

7·1. பொக்கிஷத்திலுள்ள பணத்தை எண்ணும்போது மற்ற விவ காரங்களில் எண்ணம் செல்லுவதில்லை. அது போன்றது தியானம்.

पर्वता बलेन देवमनुष्या बलेन पशवश्च वयाꣳसि च तृणवनस्पतयः श्वापदान्याकीटपतङ्गपिपीलकं बलेन लोकस्तिष्ठति बलमुपास्स्वेति ॥ ८.१ ॥

यदा वै विजानात्यथ सत्यं वदति नाविजानन् सत्यं वदति विजानन्नेव सत्यं वदति विज्ञानं त्वेव विजिज्ञासितव्यमिति विज्ञानं भगवो विजिज्ञास इति ॥ १७.१ ॥

பவதி, கர்த்தா பவதி, விஜ்ஞாதா பவதி, பலேன வை ப்ருதிவீ திஷ்ட்டதி, பலேனந்தரிக்ஷம், பலேன த்யௌர், பலேன பர்வதா, பலேன தேவமனுஷ்யா, பலேன பஶவஶ்ச வயாꣳஸிச த்ருணவனஸ்பதய: ஶ்வாபதான்-யாகீடபதங்க பிபீலகம், பலேன லோகஸ்-திஷ்ட்டதி, பலமுபாஸ்ஸ்வேதி ॥ 8·1 ॥

யதா வை விஜாநாத்-யத ஸத்யம் வததி, நாவிஜானன் ஸத்யம் வததி, விஜானன்னேவ ஸத்யம் வததி, விஜ்ஞானந்த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யமிதி, விஜ்ஞானம் பகவோ விஜிஜ்ஞாஸ இதி ॥ 17.1 ॥

---

தேவர்களும் மனிதர்களும் பலத்தால் பசுக்களும் பறவைகளும் புற்பூண்டுகளும் மரங்களும் மிருகங்களும் புழுக்களும் பூச்சிகளும் எறும்புகளும்; பலத்தாலேயே உலகமும் நிலை பெறுகிறது. பலத்தை உபாசிப்பாய்.'

17.1. 'எப்போது ஒருவன் உண்மையறிவைப் பெறுகிறானே அப்போது ஸத்தியத்தைப் பேசுகிறான்; அறியாமல் ஸத்தியத்தைப் பேசக் கூடியவனாகான்; அறிந்த பின்பே ஸத்தியத்தைப் பேசக் கூடியவனாவான். இந்த விஜ்ஞானத்தையே அறிய விரும்ப வேண்டும்.' 'ஐயனே! இந்த விஜ்ஞானத்தை அறிய விரும்புகிறேன்.'

---

17.1. இந்த விஜ்ஞானத்தையே அறிய விரும்ப வேண்டும்—உண்மைப் பொருளின் அறிவு அதை விரும்பி நாடாதவனுக்கு வராது. ஆகையால் அதை யறிய ஆவல் கொள்ளவேண்டும்.

यदा वै श्रद्दधात्यथ मनुते नाश्रद्दधन्मनुते श्रद्दधदेव मनुते श्रद्धा त्वेव विजिज्ञासितव्येति श्रद्धां भगवो विजिज्ञास इति ॥ १९.१ ॥

यदा वै सुखं लभतेऽथ करोति नासुखं लब्ध्वा करोति सुखमेव लब्ध्वा करोति सुखं त्वेव विजिज्ञासितव्यमिति सुखं भगवो विजिज्ञास इति ॥ २२.१ ॥

யதா வை ஶ்ரத்ததாத்-யத மனுதே, நாஶ்ரத்ததன்-மனுதே, ஶ்ரத்தததேவ மனுதே, ஶ்ரத்தா த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யேதி ஶ்ரத்தாம் பகவோ விஜிஜ்ஞாஸ இதி ॥ 19.1 ॥

யதா வை ஸுகம் லபதேऽத கரோதி, நாஸுகம் லப்த்த்வா கரோதி, ஸுகமேவ லப்த்த்வா கரோதி, ஸுகந்த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யமிதி, ஸுகம் பகவோ விஜிஜ்ஞாஸ இதி ॥ 22.1 ॥

---

19.1. 'எப்போது சிரத்தை ஏற்படுமோ அப்போதே (விஞ்ஞானத்தைப் பெறச்) சிந்திப்பான்; சிரத்தை யில்லாதவன் சிந்திக்க மாட்டான்; சிரத்தையை முன்னிட்டே சிந்திக்கக்கூடும். இந்த சிரத்தையைத் தெரிந்து கொள்ள முயலவேண்டும்.' 'ஐயனே! சிரத்தையைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.'

22.1. 'எப்போது ஒருவன் சுகத்தையடைகிருனே அப்போதே (சிரத்தையுடன்) கருமஞ் செய்வான்; சுகங்காணுமல் கருமஞ்

---

19.1. ஒ. (ஶ்ரத்தாவான் லபதே ஜ்ஞானம்) சிரத்தை பொருந்தியவன் ஞானத்தை யடைகிருன்.

(ஶாஸ்த்ரஸ்ய குருவாக்யஸ்ய ஸத்ய-புத்த்யாவதாரணா। ஸா ஶ்ரத்தா கதிதா ஸத்ப்பிர் யயா வஸ்தூபலப்ப்யதே) சாஸ்திரத்திலும் குருவாக்கியத்திலும் உண்மையான திடநம்பிக்கை சிரத்தை என்று பெரியோர்களால் கூறப்படும். அதனுலேயே உண்மைப் பொருள் அடையப்படும். (விவேக சூடாமணி. சங்.)

புத்தியானது வாழ்க்கைப் போரில் வெகுதூரம் நம்முடன் வராது. ஆபத்தான ஸமயத்தில் நழுவி விடும். சிரத்தையே, நன்னம்பிக்கையே, புத்தியைவிடச் சிறந்த துணை. ஒருவன் தான் புத்திமான் என்ற அஹங்காரத்தை அறவே ஒழித்து ஆண்டவனிடம் தன்னை அர்ப்பணம் செய்த பின்னரே அந்த நம்பிக்கை நிலைபெறுகிறது. (காந்தி அடிகள்.)

यो वै भूमा तत्सुखं नाल्पे सुखमस्ति भूमैव सुखं भूमात्वेव विजिज्ञासितव्य इति भूमानं भगवो विजिज्ञास इति ॥ २३.१ ॥

यत्र नान्यत्पश्यति नान्यच्छृणोति नान्यद्विजानाति स भूमाऽथ यत्रान्यत्पश्यत्यन्यच्छृणोत्यन्यद्विजानाति तदल्पं यो वै

யோ வை பூமா தத் ஸுகம், நால்பே ஸுகமஸ்தி, பூமைவ ஸுகம், பூமாத்வேவ விஜிஜ்ஞாஸிதவ்ய இதி, பூமானம் பகவோ விஜிஜ்ஞாஸ இதி ॥ 23.1 ॥

யத்ர நான்யத் பஶ்யதி, நான்யச் ச்ருணோதி, நான்யத் விஜாநாதி, ஸ பூமாऽத யத்ரான்யத் பஶ்யத் - யன்யச்-ச்ருணோத்-யன்யத்

---

செய்யான்; சுகத்தை யடைந்தே கருமஞ் செய்வான். சுகத்தை ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டும்.'

'ஐயனே!' சுகத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்'.

23.1 'எது அளவுகடந்ததோ அதுவே சுகம்; அல்பத்தில் சுகமில்லை. அளவுகடந்ததே சுகம். அளவுகடந்ததைத் தெரிந்து கொள்ள வேண்டும்.'

'ஐயனே! அளவுகடந்ததைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.'

24.1 எங்கு வேறொன்றைக் காண்பதில்லையோ, வேறொன்றைக் கேட்பதில்லையோ, வேறொன்றை அறிவதில்லையோ, அது பூமா (அளவு கடந்தது); ஆனால் எங்கு வேறொன்றைக் காண்கிறானோ, வேறொன்றைக் கேட்கிறானோ, வேறொன்றை அறிகிறானோ, அது அல்பம். எது அளவு கடந்ததோ அது அழிவற்றது, எது

---

23.1 அல்பத்தில் சுகமில்லை—எது அல்பமோ அதை யடைந்தால் அது அதினும் பெரியதில் ஆசையை உண்டாக்குகிறது. அந்த ஆசை பூர்த்தியாகும் வரை அது துக்கத்துக்குக் காரணம். ஆகையால் அல்பத்தில் சுகம் உண்மையில் கிடையாது.

24.1 இது 'பூமாவித்தை' எனப்படும். ஒ. பி. சூ. 1. 3. 8 (பூமா ஸம்ப்ரஸாதா-தத்த்யுபதேஶாத்).

'அது எதில் நிலைபெறுகின்றது? தனது மகிமையில்—அல்லது தனது மகிமையிலுங்கூட இல்லை'—அதற்கு நிலை அதுவே. அல்லது அதற்கு வேறு நிலையிடமோ ஆதாரமோ இல்லை. ஒ. (ஸா காஷ்ட்டா

भूमा तदमृतमथ यदल्पं तन्मर्त्यꣳ स भगवः कस्मिन्प्रतिष्ठित इति स्वे महिम्नि यदि वा न महिम्नीति ॥ २४.१ ॥

अथात आत्मादेश एवात्मैवाधस्तादात्मोपरिष्टादात्मा पश्चादात्मा पुरस्तादात्मा दक्षिणत आत्मोत्तरत आत्मैवेदꣳ सर्वमिति स वा एष एवं पश्यन्नेवं मन्वान एवं विजानन्नात्मरति-

விஜாநாதி ததல்பம் ; யோ வை பூமா ததம்ருத-மத யதல்பம் தன்-மர்த்யꣳ ஸ பகவ: கஸ்மின் ப்ரதிஷ்ட்டித இதி ; ஸ்வே மஹிம்னி, யதி வா ந மஹிம்னீதி ॥ 24.1 ॥

அதாத ஆத்மாதேஶ ஏவாத்மைவாதஸ்தா - தாத்மோபரிஷ்டா - தாத்மா பஶ்சா-தாத்மா-புரஸ்தா-தாத்மா தக்ஷிணத, ஆத்மோத்தரத, ஆத்மைவேதꣳ ஸர்வமிதி, ஸ வா ஏஷ ஏவம் பஶ்யன்னேவம் மன் வான ஏவம் விஜானன்-னாத்மரதி-ராத்மக்ரீட ஆத்மமிதுன ஆத்மா

---

அல்பமோ, அது அழிவுடையது. 'ஐயனே ! அது எதில் நிலைபெறு கின்றது?' 'தனது மகிமையில்—அல்லது தனது மகிமையிலும் கூட இல்லை.'

25.1 இனி ஆத்மாவைப் பற்றிய உபதேசம். ஆத்மாவே கீழும், ஆத்மாவே மேலும், ஆத்மாவே பின்னும், ஆத்மாவே முன் னும், ஆத்மாவே வலத்தும், ஆத்மாவே இடத்தும், ஆத்மாவே இது எல்லாம். எவன் இங்ஙனம் காண்கிறானோ, சிந்திக்கிறானோ, அறி கிறானோ, ஆத்மாவிலேயே இன்பமும், ஆத்மாவிலேயே விளையாட் டும், ஆத்மாவிலேயே கூடிமகிழ்தலும், ஆத்மாவிலேயே ஆனந்த

---

ஸா பராகதி:) அதுவே எல்லை, அதுவே பராங்கதி. அதற்கப்பால் எதுவு மில்லை. (கட. 3. 11)

25.1. ஒ. எவன் உள்ளே சுகமுடையவனோ, உள்ளே களியாட்ட முடையவனோ அவ்வாறே எவன் உள்ளே ஒளி உள்ளவனோ அந்த யோகி உயிர் வாழும் பொழுதே பிரம்மமாய் பிரம்மத்தில் முக்தியை யடைகிறான். (கீ. 5.24).

இந்த உள்ளொளியின் பிரிவே துன்பம்.

எந்த மனிதன் ஆன்மாவிலேயே இன்புற்றவனாக, ஆன்மாவிலேயே திருப்தியடைந்தவனாக, ஆன்மாவிலேயே ஸந்தோஷத்தைப் பெற்றவனாக, உள்ளவனோ அவனுக்குச் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுமில்லை.

रात्मक्रीड आत्ममिथुन आत्मानन्दः स स्वराड् भवति तस्य सर्वेषु लोकेषु कामचारो भवति। अथ येऽन्यथाऽथो विदुरन्य-राजानस्ते क्षय्यलोका भवन्ति तेषाꣳ सर्वेषु लोकेषु अकामचारो भवति ॥ २५.२ ॥

तदेष श्लोको न पश्यो मृत्युं पश्यति न रोगं नोत दुःखताꣳ सर्वꣳ ह पश्यः पश्यति सर्वमाप्नोति सर्वश इति॥ आहारशुद्धौ सत्त्वशुद्धिः सत्त्वशुद्धौ ध्रुवा स्मृतिः स्मृतिलम्भे

னந்த: ஸ ஸ்வராட் பவதி; தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி। அத யேऽன்யதாதோ விது-ரன்யராஜானஸ்தே க்ஷய்யலோகா பவந்தி; தேஷாꣳ ஸர்வேஷு லோகேஷு அகாமசாரோ பவதி ॥ 25.2 ॥

தததேஷ ஶ்லோகோ ந பஶ்யோ ம்ருத்யும் பஶ்யதி, ந ரோகம் நோ-த து:க்கதாꣳ ஸர்வꣳ ஹ பஶ்ய: பஶ்யதி, ஸர்வமாப்னோதி, ஸர்வஶ இதி ॥ ஆஹாரஶுத்தௌ ஸத்வஶுத்தி:, ஸத்வஶுத்தௌ த்ருவா

---

மும் உடைய அவன் (ஸ்வராட்) தன்னைத்தானே ஆள்பவன் ஆகிறான்; அவன் எல்லா உலகங்களிலும் தன் இச்சைப்படி நடக்கக் கூடியவன் ஆகிறான். எவர்கள் இதற்குப் பிரிதாய்க் காண்கிறார்களோ அவர்கள் பிறரால் ஆளப்படுகின்றனர்; அவர்களுடைய உலகங்கள் அழிவுடையவை; அவர்கள் எவ்வுலகங்களிலும் தம் இச்சைப்படி நடக்கக்கூடியவர்கள் அல்லர்.

26.2. அதைப்பற்றிப் பின்வரும் சுலோகம் உண்டு. 'இதைக் காண்பவன் சாவைக்காணான், நோவைக்காணான், துக்கத்தைக் காணான்; இதைக் காண்பவன் அனைத்தையும் அறிவான்; எவ்வாற்

---

அவனுக்கு இங்கே ஒரு கர்மத்தைச் செய்ததால் பயன் இல்லை. ஒன்றைச் செய்யாததாலும் எப்பயனும் இல்லை. அவனுக்கு எல்லாப் பொருளிலும் பயனைக்கருதி நாடத்தகுந்ததும் ஒன்றுமில்லை. (கீ. 3.17-18).

26.2. கண்ணாடியில் முகத்தைத் தெளிவாய்க் காண்பதற்குக் கண்ணாடியின் சுத்தம் எப்படிக் காரணமோ அப்படி அந்தக் கரணத்தில் ஆத்மா

सर्वग्रन्थीनां विप्रमोक्षस्तस्मै मृदितकषायाय तमसस्पारं दर्शयति भगवान् सनत्कुमारस्तꣳ स्कन्द इत्याचक्षते तꣳ स्कन्द इत्याचक्षते ॥ २६.२ ॥

॥ इति सप्तमोऽध्यायः ॥

ஸ்ம்ருதி:, ஸ்ம்ருதி-லம்ப்பே ஸர்வக்ரந்தீனும் விப்ரமோக்ஷஸ்-தஸ்மை ம்ருதித-கஷாயாய தமஸஸ்-பாரந் தர்ஶயதி பகவான் ஸனத்-குமாரஸ்-தꣳ ஸ்கந்த இத்யாசக்ஷதே தꣳ ஸ்கந்த இத்யா சக்ஷதே ॥ 26.2 ॥

॥ இதிஸப்தமோऽத்த்யாய: ॥

---

ருனும் அனைத்தையும் அடைவான்' ஆஹாரம் சுத்தமானல் அந்தக் கரணம் சுத்தமாகும்; அந்தக் கரணம் சுத்தமானல் (கடவுளின்) நினைவு நிலை பெறும்; நினைவு நிலைபெற்றால் எல்லாக் கட்டுகளும் தளர்ந்துபோம். அவருடைய (நாரதருடைய) கலக்கம் நீங்கியபின் பகவான் ஸநத்குமாரர் இருள் கடந்த நிலையைக் காட்டியருளினர். அவரை (ஸநத்குமாரரை) ஸ்கந்தர் எனக் கூறுவர், ஸ்கந்தர் எனக் கூறுவர்.

ஏழாவது அத்தியாயம் முற்றும்

---

வைக் காண்பதற்கு அந்தக் கரணத்தின் சுத்தம் அவசியம். அதற்கு முதற் சாதனம் ஆஹார சுத்தி. ஆஹாரம் என்றால் வயிற்றுக்கு இடப்படும் உணவு மட்டும் அன்று; அந்தந்த இந்திரிய விஷயம் அததற்கு ஆஹாரமாம்.

நினைவு நிலைபெறும்—ஆத்மாவினிடத்தில் இடைவிடாத தியானம் ஊற்றெடுத்தது போல் உள்ளே நிகழ்ந்து கொண்டே இருக்கும்.

எல்லாக் கட்டுகளுந் தளர்ந்துபோம்—பல பிறவிகளில் கூட்டமாய்ச் சேர்ந்த கர்மத்தளைகள் தவிர்ந்துபோம்.

ஒ. உள்ளத்தெளிவில் இவனுடைய எல்லாத் துன்பங்களுக்கும் அழிவு ஏற்படுகின்றது. (கீ. 2.65).

கட. 6.15.

பி.சூ. 3.4.29.

## ॥ अष्टमोऽध्यायः ॥

अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म दहरोऽस्मिन्नन्तराकाशस्तस्मिन्यदन्तस्तदन्वेष्टव्यं तद्वाव विजिज्ञासितव्यमिति ॥ १.१ ॥

## ॥ அஷ்டமோऽத்யாய: ॥

**அத யதித-மஸ்மின் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம தஹ்ரோऽஸ்மின்-னந்தராகாசஸ்-தஸ்மின் யதந்தஸ்-த-தன்வேஷ்டவ்யம் தத்-வாவ விஜிஜ்ஞாஸிதவ்ய-மிதி ॥ 1.1 ॥**

---

## எட்டாவது அத்தியாயம்

**1.1.** இனி இந்த பிரம்மபுரத்தில் (சரீரத்தில்) தாமரை போன்ற சின்னஞ் சிறு மாளிகை உண்டு; அதனுள் சிற்றம்பலம்; அதில் உள்ளதெதுவோ அதைத் தேடவேண்டும், ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டும்.

---

1.1. இங்கு கூறியது 'தஹரவித்தை' எனப்படும். நிர்க்குணமாய் இரண்டற்றதாய்த் திக்கு தேசம் காலம் வர்த்தமானம் முதலிய வேறுபாடுகளற்றதாய் உள்ள பிரம்மம் சாதாரண ஜனங்களுக்குச் சூன்யம் போல் தோன்றுவதால் அவர்களுக்கு ஸ்தூலமாக விளங்கும்படி ஒரு உபாஸனு மார்க்கத்தைக் காட்டினுல் அதன் மூலம் அவர்கள் பின்பு உண்மையை உணர்ந்து கொள்வார்கள் என்று இது ஆரம்பிக்கப்படுகிறது.

இந்த இருதயத் தாமரை வீட்டில் கருவிகரணங்களை அடக்கி, வைராக்கியம், பிரம்மசரியம், ஸத்தியம் முதலிய ஸாதனங்களுடன் கூடி உபதேசிக்கப் போகிற முறையில் தியானம் செய்தால் பிரம்மத்தை அடையலாம் என்பது கருத்து. (சங்.)

'தஹர' என்ருல் 'சிறிய' என்று பொருள்படும். ஆகையால் தஹராகாசம் என்பது சிறிய இடம். இதனுள் ஒடுங்கியது போன்றிருப்பது ஒரு அந்தராகாசம். இது ஆகாசத்தைப் போல் உருவில்லாததாயும் ஸூக்ஷ்மமாயும் எங்கும் வியாபித்ததாயும் இருப்பதால் ஆகாசம் என வர்ணிக்கப் பட்டது. ஆனுல் அது ஆகாசமன்று. அது குருமுகமாய்க் கேட்டு ஆராய்ந்து அறிந்து அனுபவித்துக் கொள்ளவேண்டிய விஷயம்.

तं चेद्ब्रूयुर्यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म दहरोऽस्मिन्नन्तराकाशः किं तदत्र विद्यते यदन्वेष्टव्यं यद्वाव विजिज्ञासितव्यमिति स ब्रूयात् ॥ १.२ ॥

தஞ்சேத்-ப்ரூயுர்-யதித-மஸ்மின் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஶ்ம தஹரோऽஸ்மின்-னந்தராகாஶ:, கிங் ததத்ர வித்யதே ய-தன்வேஷ்டவ்யம் யத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்ய-மிதி ஸ ப்ரூயாத் ॥ 1.2 ॥

---

1.2. 'இந்தப் பிரம்மபுரத்தில் தாமரைபோன்ற சின்னஞ் சிறு மாளிகையில் உள்ள சிற்றம்பலத்தில், அங்கு தேடவேண்டியதாய் ஆராய்ந்தறியக் கூடியதாய் என்ன தான் இருக்கக் கூடும்?' என்று கேட்டால் அவர் (குரு) கூறுவதாவது:

---

1.2. சிறிய இடத்தில் சிறிய வஸ்து தானே அடங்கும் என்றால், அதில் அடங்குவது கர்ப்பக் கிருஹத்தில் கோயில் முழுதும் அடங்கியவாறு. எப்படி சிறு கண்ணாடியில் பெரிய வான வெளியின் பிரதி பிம்பத்தைக் காணலாமோ அப்படிச் சிற்றம்பலத்தில் உலகனைத்துங் காணலாம். எதற்கும் அடங்காத ஒன்றை வெளியென்றோ ஒளியென்றோ பெரிதென்றோ சிறிதென்றோ கூறுதல் உண்மையில் ஒவ்வாது. அது வெளிக்கு வெளியாயும், ஒளிக்கு ஒளியாயும், பெரிதுக்குப் பெரிதாயும், சிறிதுக்குச் சிறிதாயும், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததாயும் உள்ளது.

ஒ. (அணோரணீயான் மஹதோ மஹீயான்) கட. 2.20.

ஒ. உடம்பினை முன்ன மிழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயிற் கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே. —(திருமந்திரம்.)

பி. சூ. 1.3.14—23 ; 3.3.39.

यावान्वा अयमाकाशस्तावानेषोऽन्तर्हृदय आकाश उभे अस्मिन् द्यावापृथिवी अन्तरेव समाहिते उभावग्निश्च वायुश्च सूर्याचन्द्रमसावुभौ विद्युन्नक्षत्राणि यच्चास्येहास्ति यच्च नास्ति सर्वं तदस्मिन्समाहितमिति ॥ १.३ ॥

स ब्रूयान्नास्य जरयैतज्जीर्यति न वधेनास्य हन्यत एतत्सत्यं ब्रह्मपुरमस्मिन् कामाः समाहिता एष आत्मापहत-

யாவான்வா அயமாகாஶஸ் - தாவானேஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶ, உபே அஸ்மின் த்யாவாப்ருதிவீ அந்தரேவ ஸமாஹிதே, உபாவக்னிஶ்ச வாயுஶ்ச, ஸூர்யா-சந்த்ரமஸா-வுபௌ வித்யுந்-நக்ஷத்ராணி, யச்சாஸ்யேஹாஸ்தி யச்ச நாஸ்தி ஸர்வந் ததஸ்மின் ஸமாஹித-மிதி ॥ 1.3 ॥

ஸ ப்ரூயாந்-நாஸ்ய ஜரயைதஜ்-ஜீர்யதி ந வதேனாஸ்ய ஹன்யத ஏதத் ஸத்யம் ப்ரஹ்மபுர-மஸ்மின் காமா: ஸமாஹிதா, ஏஷ

---

1.3 'இவ்வாகாசம் எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியது இருதயத்தினுள்ளாகாசமும். வானுலகும் பூவுலகும் இதனுள்ளடங்கும். அக்கினியும் வாயுவும், சூரியனும் சந்திரனும், மின்னலும் நக்ஷத்திரங்களும், இன்னும் இங்கு எதெது இவனுக்கு உண்டோ எதெது இல்லையோ அது எல்லாம் இதனுள்ளடங்கும்.'

1.5 (மேலும்) அவர் கூறுவதாவது: 'இவனுடைய மூப்பால் இது மூப்படைவதில்லை; இவனுடைய சாவால் இது சாவதில்லை;

---

1.3. இங்கு எதெது உண்டோ எதெது இல்லையோ அது எல்லாம்—எதெது இல்லையோ என்றதால், இருந்து அழிந்து போனதும் இனி உண்டாகப்போவதும் குறிக்கப்படும்.

1.5. இது தான் அழியாத பிரம்மபுரம்—உலகத்தைப் பொறுத்து உடல் பிரம்மபுரம் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் அது அழிவுடையது. உள்ளத்தினுள்ளே உள்ள சிதாகாசந்தான் அழியாத பிரம்மபுரம்.

இதை அறியாத மக்கள் அளவுள்ளதும் அழிவுள்ளதுமான அற்பப் பயனையே நாடி அடைகின்றனர். பேரின்பத்தை அடைவதில்லை.

ஒ. 'தில்லை ஸ்தலமே ஸ்தலமப்பா...சுவாமி உண்டு என்பதும் அங்கே தான், இல்லை என்பதும் அங்கேதான். கடவுள் ஆனந்தத் தாண்டவம் ஆடுவதும் அங்கேதான், அசைவற்ற வெளியாயிருப்பதும் அங்கே தான். அறியாதாரும் அறிவைப் பெறுவதும் அங்கேதான், அறிந்தவர்கள் அனுப

पाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसंकल्पो यथा ह्येवेह प्रजा अन्वाविशान्ति यथानुशासनं यं यमन्तमभिकामा भवन्ति यं जनपदं यं क्षेत्रभागं तं तमेवोपजीवन्ति ॥ १.५ ॥

तद्यथेह कर्मजितो लोकः क्षीयत एवमेवामुत्र पुण्यजितो लोकः क्षीयते तद्य इहात्मानमननुविद्य व्रजन्त्येतांश्च सत्यान्

ஆத்மாபஹத-பாப்மா விஜரோ விம்ருத்யுர்-விஶோகோ விஜிகத்-ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்போ யதா ஹ்யேவேஹ ப்ரஜா அன்வாவிஶந்தி யதானுஶாஸனம் யம் யமந்த-மபிகாமா பவந்தி யம்-ஜனபதம் யம் க்ஷேத்ரபாகம் தம் தமேவோபஜீவந்தி ॥ 1.5 ॥

தத்யதேஹ கர்மஜிதோ லோக: க்ஷீயத ஏவமேவாமுத்ர புண்யஜிதோ லோக: க்ஷீயதே, தத்ய இஹாத்மான-மனனுவித்ய

---

இது தான் அழியாத பிரம்மபுரம். இதில் எல்லா ஆசைகளும் அடங்கும். இவ்வாத்மா, பாவமற்றது, மூப்பற்றது, சாவற்றது, சோகமற்றது, பசியற்றது, தாகமற்றது, ஸத்தியமான ஆசையுடையது, ஸத்தியமான ஸங்கல்பமுடையது. இங்கு மக்கள் எங்ஙனம் எந்தக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி வாழ்கிறார்களோ, எந்த நாட்டை எந்த பூமியின் ஒரு பகுதியை உள்ளத்தில் விரும்பியவர்களாய் எதெதை அண்டி உயிர் வாழ்கிறார்களோ, அங்ஙனமே (அந்தந்த அல்பப்பலனை அடைகிறார்கள், அழியாப்பொருளை அறிவதில்லை).'

1.6. எவ்வண்ணம் இங்கு கர்மத்தின் பயனாய் அடையப் பெற்ற உலகம் அழிவுள்ளதோ, அவ்வண்ணமே அங்கும் புண்ணி

---

விப்பதும் அங்கே தான்.'—(பி.ஆர். இராஜமய்யர் : கமலாம்பாள் சரித்திரம்).

பி. ஸூ. 1. 3. 8.

1.6. புண்ணியத்தின் பயனாய் அடையப்பெற்ற உலகம் அழிவுள்ளது—ஒ. மூன்று வேதங்களையும் கற்றவர்கள் வேள்விகளால்

कामाꣳस्तेषाꣳ सर्वेषु लोकेष्वस्य कामचारो भवत्यथ य इहात्मान-मनुविद्य व्रजन्त्येताꣳश्च सत्यान् कामाꣳ स्तेषाꣳ सर्वेषु लोकेषु कामचारो भवति ॥ १.६ ॥

स यदि पितृलोककामो भवति संकल्पादेवास्य पितरः समुत्तिष्ठन्ति तेन संपन्नो महीयते ॥ २.१ ॥

வ்ரஜந்த்-யேதாꣳஶ்ச ஸத்யான் காமாꣳ ஸ்தேஷாꣳ ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி ॥ 1.6 ॥

ஸ யதி பித்ருலோக காமோ பவதி, ஸங்கல்பாதேவாஸ்ய பிதர: ஸமுத்திஷ்ட்டந்தி, தேன ஸம்பன்னோ மஹீயதே ॥ 2.1 ॥

---

யத்தின் பயனாய் அடையப்பெற்ற உலகம் அழிவுள்ளது. எவர்கள் இங்கு ஆத்மாவையும் ஸத்தியமான ஆசைகளையும் அறியாமல் சென்று விடுகிறார்களோ அவர்களுக்கு எல்லா உலகங்களிலும் அடிமைத்தனம் ஏற்படுகிறது ; ஆனால் எவர்கள் இங்கு ஆத்மாவை யும் ஸத்தியமான ஆசைகளையும் அறிந்து செல்லுகிறார்களோ அவர்களுக்கு எல்லா உலகங்களிலும் சுதந்திரம் ஏற்படுகிறது.

2.1. அவன் பிதிருலோகத்தை விரும்பியவனானால் ஸங்கல்பத் தாலேயே அவனுடைய பிதிருக்கள் அவன் முன் தோன்றுவர்; அதனால் பிதிருலோகம் கிடைக்கப் பெற்றவனாய் அவன் மகிமை யடைவான்.

---

என்னைப் பூஜித்து ஸோமபானத்தால் பாவந்தேய்ந்தவர்களாய் சுவர்க்கம் செல்லுதலை வேண்டுகிறார்கள். அவர்கள் புண்ணிய பலனையுள்ள தேவேந் திர உலகை அடைந்து அவ்வானுலகில் பிரகாசிக்கின்ற தேவர்களுக்குரிய போகங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்கள் அந்த விசாலமான சுவர்க்க லோகத்தை அனுபவித்துப் புண்ணியந் தேய்ந்ததும் மீண்டும் மனித உலகையடைகின்றனர். (கீ. 9. 20-21).

காமசாரோ பவதி—ஒ. (அத ஏவசானன்யாதிபதி:) பி. சூ. 4.4.9.)

2.1. தை 3·5-ல் கூறியது போல் பிரம்மஞானி (காமான்னீ காமரூபீ) எண்ணிய போகங்களை யெல்லாம் அனுபவிப்பவனாயும் எண்ணிய ரூபத்தை யெல்லாம் எடுத்துக்கொள்ள வல்லவனாயும் எல்லாம் நிறைந்தவனாயும் இருப்பான். அவன் வேண்டுதல் வேண்டாமையிலாதவன். ஆனால் ஆண்டவனைப்போல் அவன் ஸத்யஸங்கல்ப முடையவன். அவன் எண் ணியது எண்ணியாங்கெய்தும்.

பி. சூ. 4.4.8.

यं यमन्तमभिकामो भवति यं कामं कामयते सोऽस्य संकल्पादेव समुत्तिष्ठन्ति तेन संपन्नो महीयते ॥ २.१० ॥

त इमे सत्याः कामा अनृतापिधानास्तेषाँ सत्यानाँ सतामनृतापिधानं यो यो ह्यस्येतः प्रैति न तमिह दर्शनाय लभते ॥ ३.१ ॥

யம் யமந்த-மபிகாமோ பவதி, யம் காமம் காமயதே, ஸோऽஸ்ய ஸங்கல்பாதேவ ஸமுத்திஷ்டந்தி, தேன ஸம்பன்னோ மஹீயதே ॥ 2.10 ॥

த இமே ஸத்யா: காமா அன்ருதாபிதானாஸ்-தேஷாँ ஸத்யானாँ ஸதா-மன்ருதாபிதானம் யோ யோ ஹ்யஸ்யேத: ப்ரைதி, ந த-மிஹ தர்ஶனாய லபதே ॥ 3.1 ॥.

---

2.10. எந்தெந்த இடத்தை விரும்பியவனாயினும் எந்த ஆசையில் மனம் வைத்தவனாயினும் அது அவனுடைய ஸங்கல்பத்தாலேயே முன் தோன்றும்; அது கிடைக்கப் பெற்றவனாய் அவன் மகிமையடைவான்.

3.1 இவ்வாசைகள் உண்மையில் பூர்த்தியாகக் கூடியவை எனினும் பொய்மையில் மறைந்து கிடக்கின்றன. ஸத்திய வடிவாய்த் தன்னிடமேயுள்ள அவைகளுக்குப் பொய்மைதான் மறைவு. இதனால் இவனுக்கு (பிரியமான) எவரெவர் இறந்து போயினரோ அவரை இங்கு அவன் காணப்பெறுவதில்லை.

---

2.1. ஒ. தெளிந்த சித்தமுடையவன் எந்தெந்த உலகத்தை மனதால் ஸங்கல்பிக்கின்றானோ எந்தெந்த போகங்களை விரும்புகின்றானோ அந்தந்த உலகத்தையும் அந்தந்த போகங்களையும் அடைகிறான். (மு. 3.1.10.)

अथ ये चास्येह जीवा ये च प्रेता यच्चान्यदिच्छन्न लभते सर्वं तदत्र गत्वा विन्दते ऽत्र ह्यस्यैते सत्याः कामा अनृतापिधानास्तद्यथा हिरण्यनिधिं निहितमक्षेत्रज्ञा उपर्युपरि संचरन्तो न विन्देयुरेवमेवेमाः सर्वाः प्रजा अहरहर्गच्छन्त्यत एतं ब्रह्मलोकं न विन्दन्त्यनृतेन हि प्रत्यूढाः ॥ ३.२ ॥

அத யே சாஸ்யேஹ ஜீவா, யே ச ப்ரேதா, யச்சான்ய-திச்ச்சந்ந லபதே, ஸர்வம் ததத்ர கத்வா விந்ததேऽத்ர ஹ்யஸ்யைதே ஸத்யா: காமா அன்ருதாபிதாஞஸ்-தத்-யதா ஹிரண்யநிதிம் நிஹிதமக்ஷேத்ரஜ்ஞா உபர்யுபரி ஸஞ்சரந்தோ ந விந்தேயு-ரேவமேவேமா: ஸர்வா: ப்ரஜா அஹ-ரஹர்-கச்ச்சந்த்-யத ஏதம் ப்ரஹ்மலோகம் ந விந்தந்த்-யன்ருதேன ஹி ப்ரத்யூடா: ॥ 3.2 ॥

---

3.2. உயிருடன் இருப்பவரோ இறந்தவரோ இவனுக்கு (பிரியமானவர்) எவராயினும், அல்லது இவன் எந்த வஸ்துவை விரும்பியடையவில்லையோ அதையும், எல்லாவற்றையும் அங்கு சென்று அடைகிறுன். பொய்மையால் மூடப்பெற்றதும் ஸத்திய மானவையுமான இவன் ஆசைகள் அங்கே உள்ளன. எங்ஙனம் பொற்குவியல் புதைத்து வைக்கப்பட்ட இடத்தின் மேல் அடிக்கடி நடமாடுபவர்களாயினும் (அது இருப்பதை) அறியாதவர்கள் அதைக் கண்டுகொள்ள மாட்டார்களோ, அங்ஙனமே இம் மக்கள் அனைவரும் நாள்தோறும் இந்தப் பிரம்ம லோகத்துக்குச் செல்லு பவர்களாயிருந்தும் அதைக்கண்டு கொள்வதில்லை—பொய்மையால் கவரப்பட்டவர்களாதலால்.

---

3.2. பி. சூ. 1.3.15 (கதி ஶப்தாப்ப்யாம்.)

நாள் தோறும் பிரம்மலோகத்துக்குச் செல்லுபவர்களா யிருந்தும்—ஸுஷுப்தியில் இருதய குகையில் பிரம்மபுரத்தில் போய்ச் சேருகின்றனர். எனினும் அஜ்ஞானத்தால் மூடப்பட்டு அதை உணர் வதில்லை.

स वा एष आत्मा हृदि तस्यैतदेव निरुक्तꣳ हृदयमिति तस्माद्धृदयमहरहर्वा एवंवित्स्वर्गं लोकमेति ॥ ३.३ ॥

अथ य एष संप्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरूपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यत एष आत्मेति होवाच एतदमृतमभयमेतद्ब्रह्मेति तस्य ह वा एतस्य ब्रह्मणो नाम सत्यमिति ॥ ३.४ ॥

ஸ வா ஏஷ ஆத்மா ஹ்ருதி தஸ்யைததேவ நிருக்தꣳ ஹ்ருதயமிதி, தஸ்மாத்-த்ருதய-மஹரஹர்வா ஏவம்-வித் ஸ்வர்க்கம் லோகமேதி ॥ 3.3 ॥

அத ய ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச் சரீராத் ஸமுத்தாய, பரஞ்ஜ்யோதி-ருபஸம்பத்ய, ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்யத ஏஷ ஆத்மேதி ஹோவாச, ஏத-தம்ருத-மபய-மேதத்-ப்ரஹ்மேதி; தஸ்ய ஹ வா ஏதஸ்ய ப்ரஹ்மணோ நாம ஸத்யமிதி ॥ 3.4 ॥

---

3.3. இந்த ஆத்மா ஹ்ருதயத்திலுள்ளவன். இச் சொல்லின் அமைப்பே (ஹ்ருதி-அயம்) ஹ்ருதயத்தில் இவன் உளன் என்று குறிக்கும். ஆனது பற்றியே இது ஹ்ருதயம் எனப்பட்டது. இங்ஙனம் உணர்ந்தவன் நாள் தோறும் ஸ்வர்க்கம் புகுகின்றான்.

3.4. இந்தத் தெளிவு பெற்ற ஜீவன் இச்சரீரத்தினின்று கிளம்பிப் பரஞ்சோதியை யடைந்து சுயவடிவத்தை எய்துகிறான். அவர் கூறியதாவது: இது தான் ஆத்மா, இதுவே (அமிருதம்) அழிவில்லாதது, (அபயம்) பயமில்லாதது, இதுவே பிரம்மம். இந்தப் பிரம்மத்தின் பெயர் 'ஸத்தியம்' என்பதாம்.

---

ஒ. மு. 3.1.6

3.3. பாதரஸம் தடவிய கண்ணாடியில் முகம் பிரதிபலிக்கும். அது போலச் சக்தியையுந் தூய்மையையும் பிரம்மசரியத்தால் காப்பாற்றிக் கொண்டிருப்பவனுடைய இருதயத்தில் பகவானுடைய திவ்ய ரூபம் பிரதி பலிக்கும். (ரா. கி.)

பிரம்மசரியமில்லாதவனுடைய மனம் ஓட்டைக்குடம் போன்றது (ரா. கி.)

3.3. நானென்னும் நினைவு உதிக்குமிடமே இருதயம் எனப்படும். அதற்கு வடிவு வகுத்தல் கற்பனை. இருதயம் மார்பகத்தின் வலத்தேயுளது; இடப்பக்கமே யில்லை. அதினின்று ஸஹஸ்ராரத்திற்கு ஒளி பாயும். ஸஹஸ்

तानि ह वा एतानि त्रीण्यक्षराणि सतीयमिति तद्यत्सत्तदमृतमथ यत्ति तन्मर्त्यं यद्यं तेनोभे यच्छति यदनेनोभे यच्छति तस्माद्यमहरहर्वा एवंवित्स्वर्गं लोकमेति ॥ ३.५ ॥

अथ य आत्मा स सेतुर्विधृतिरेषां लोकानामसंभेदाय नैतꣳ सेतुमहोरात्रे तरतो न जरा न मृत्युर्न शोको न सुकृतं न दुष्कृतꣳ सर्वे पाप्मानोऽतो निवर्तन्तेऽपहतपाप्मा ह्येष ब्रह्मलोकः ॥ ४.१ ॥

தானி ஹ வா ஏதானி த்ரீண்யக்ஷராணி, ஸ-தீ-ய-மிதி தத்யத் 'ஸத்'ததம்ருத-மத யத்'தி' தன் மர்த்யம் யத்'யம்' தேநோபே யச்சதி யதனேனோபே யச்ச்சதி, தஸ்மாத்ய-மஹரஹர்வா ஏவம்வித் ஸ்வர்க்கம் லோக-மேதி ॥ 3.5 ॥

அத ய ஆத்மா ஸ ஸேதுர் வித்ருதி-ரேஷாம் லோகானு-மஸம்ப்பேதாய, நைதꣳ ஸேது-மஹோராத்ரே தரதோ, ந ஜரா ந ம்ருத்யுர்ந ஶோகோ, ந ஸுக்ருதம் ந துஷ்க்ருதꣳ ஸர்வே பாப்மானோऽதோ நிவர்த்தந்தேऽபஹதபாப்மா ஹ்யேஷ ப்ரஹ்மலோக: ॥ 4.1 ॥

---

3.5. அதன் அக்ஷரங்கள், ஸ, த், யம் என்ற மூன்றும். ஸத் என்பது அமிருதம்; (அழிவற்றது); த் என்பது அழிவுள்ளது; யம் என்பது இரண்டையும் கூட்டுவிப்பதாம். இரண்டையும் கூட்டுவிப்பதாலேயே இது யம் என ஆயிற்று. இங்ஙனம் உணர்ந்தவன் நாள் தோறும் ஸ்வர்க்கம் புகுகின்றான்.

4.1. எந்த ஆத்மா இங்கு கூறப்பட்டதோ அது உலகங்கள் அழியாமலிருப்பதற்காக ஏற்பட்ட கரை, அணைக்கட்டு, இந்தச்

---

ராரத்தினின்று அவ்வொளி உடல் முழுவதும் பரவுங்கால் உலகானுபவங்களுறும். அவற்றை வெவ்வேறாய்க் காண்போன் ஸம்ஸாரியாகிறான். (ரமண மஹரிஷி)

3.4. இச்-சரீரத்தினின்று கிளம்பி—'நான் சரீரம் என்ற அபிமானத்தினின்று கிளம்பி' என்று கருத்து; 'இறந்துபோன பின்' என்று கருத்தல்ல. 'சுயவடிவை' எய்துதற்குச் சரீரத்தை விடவேண்டியதில்லை; பொய்யை மெய்யென்னும் அபிமானத்தைத் தான் விடவேண்டும்.
பி.சூ. 4.4.1. (ஸம்பத்யாவிர்ப்பாவ: ஸ்வேன ஶப்தாத்).

3.5. ஒ. தை 1.3. (எழுத்துக்களின் கூட்டத்தைப் பற்றிய உபாஸனை).

4.1. ஒ. பி. சூ. 3.2.31. (பரமத: ஸேது-உன்மான-ஸம்பந்த பேதவ்யபதேஶேப்ய:)

तस्माद्वा एतꣳ सेतुं तीर्त्वाऽन्धः सन्ननन्धो भवति विद्धः सन्नविद्धो भवति उपतापी सन्ननुपतापी भवति तस्माद्वा एतꣳ सेतुं तीर्त्वापिनक्तमहरेवाभिनिष्पद्यते सकृद्विभातो ह्येवैष ब्रह्मलोकः ॥ ४.२ ॥

தஸ்மாத்-வா ஏதꣳ ஸேதும் தீர்த்வா ऽந்த்த: ஸந்-நனந்த்தோ பவதி, வித்த: ஸந்-நவித்தோ பவதி, உபதாபீ ஸந்-நனுபதாபீ பவதி, தஸ்மாத் வா ஏதꣳ ஸேதுந் தீர்த்வாபிநக்த-மஹரேவாபிநிஷ்பத்யதே, ஸக்ருத்விபாதோ ஹ்யேவைஷ ப்ரஹ்மலோக: ॥ 4.2 ॥

---

கரையை இரவும் பகலும், மூப்பும் சாக்காடும் சோகமும், புண்ணியமும் பாவமும் தொடுவதில்லை. எல்லாப் பாவங்களும் அதினின்று திரும்பிவிடுகின்றன. பாவத்தைக் கடந்த நிலையே இந்தப் பிரம்ம லோகம்.

4.2. ஆகையால் இந்தக் கரையை அடைந்தால் குருடாயிருந்தவன் குருடு நீங்கியவனாகிறான், தாக்குண்டவன் தாக்கற்றவனாகிறான், வருத்தமடைந்தவன் வருத்தம் நீங்கியவனாகிறான். இந்தக் கரையை அடைந்தால் இரவே பகலாகிவிடுகிறது. இந்தப் பிரம்மலோகம் (தோன்றி மறையாத) ஒரே பிரகாசத்தை என்றும் உடையதன்றோ?

---

4.2. ஆழ்ந்த தூக்கத்தில் ஒருவன் உடலை முற்றும் மறந்து உடலிலுள்ள துன்பங்களையும் எப்படி மறந்துவிடுகிறானோ அப்படியே தூங்காத தூக்கமாகிய துரீய நிலையில் பிரம்மத்துடன் ஒன்றியவன் துன்பங்களெல்லாம் நீங்கியவனாகிறான். தூங்கி விழித்துக்கொண்டதும் துன்பத் தொடர்பு ஏற்படுகிறது. பிராம்மீஸ்திதி எய்தியபின் துன்பத்தொடர்பு இல்லை.

ஒ. (து:க்க-ஸம்யோக-வியோகம் யோக-ஸம்ஜ்ஞிதம்) (கீ. 6.23). பி. சூ. 3.2.32.

இரவே பகலாகிவிடுகிறது—ஒ. (ந தத்ர ஸூர்யோ பாதி) கட 5.15.

तद्य एवैतं ब्रह्मलोकं ब्रह्मचर्येणानुविन्दन्ति तेषामेवैष ब्रह्मलोकस्तेषाꣳ सर्वेषु लोकुषु कामचारो भवति ॥ ४.३ ॥

य आत्मापहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसंकल्पः सोऽन्वेष्टव्यः स विजिज्ञासितव्यः स सर्वाꣳश्च लोकानाप्नोति सर्वाꣳश्च कामान्यस्तमात्मानमनुविद्य विजानातीति ह प्रजापतिरुवाच ॥ ७.१ ॥

தத்ய ஏவைதம் ப்ரஹ்ம லோகம் ப்ரஹ்மசர்யேணனுவிந்தந்தி தேஷா-மேவைஷ ப்ரஹ்மலோகஸ்-தேஷாꣳ ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி ॥ 4.3 ॥

ய ஆத்மாபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:, ஸோऽன்வேஷ்டவ்ய: ஸ விஜிஜ்ஞாஸிதவ்ய:, ஸ ஸர்வாꣳஶ்ச லோகானப்னோதி ஸர்வாꣳஶ்ச காமான் யஸ்-தமாத்மான-மனுவித்ய விஜானதீதி ஹ ப்ரஜாபதி-ருவாச ॥ 7·1 ॥

---

4.3. எவர்கள் பிரம்மசரியத்தால் இந்தப் பிரம்மலோகத்தை எய்துகிறார்களோ அவர்களுக்கே இந்தப் பிரம்மலோகம் உரியதாம். அவர்களுக்கு எல்லா உலகங்களிலும் சுயேச்சை உண்டு.

7.1. ‘பாவமற்றதும், மூப்பற்றதும், சாவற்றதும், துன்பமற்றதும், பசிதாகமற்றதும் உண்மையான ஆசையும் உண்மையான விருப்பமும் உடையதும் ஆன ஆன்மா எதுவோ அதைத் தேடவேண்டும், அதை அறியவேண்டும். அதைத் தேடி அறிந்தவன் எல்லா உலகங்களையும் எல்லா ஆசைகளையும் அடைகிறான்’ என்று பிரஜாபதி கூறினார்.

---

4.3. பிரம்மசரியத்தால்—பிரம்மசரியத்தை உடைய ஸாதகர்களுக்கே பிரம்ம ஞானத்தால் பிரம்ம லோகம் கிட்டும். பெண்ணாசையுடையவர்கள் பிரம்ம ஞானத்தைப் பெற்றாலும் பிரம்ம லோகத்தை அடைய இயலாது. ஆகையால் பிரம்மசரியம் பிரம்மஞானிகளுக்கு ஒப்புயர்வற்ற ஸாதனம். (சங்.)

7.1. அதைத் தேடவேண்டும், அதை அறியவேண்டும்—அறிந்த பின் அது பாவமற்றதும் மூப்பற்றதும் சாவற்றதும் துன்பமற்றதும் தானா என்று ஆராயவும் வேண்டும். அந்த லக்ஷணங்கள் பொருந்தாமற்போனால் மீண்டுந் தேடவேண்டும், இந்திரன் அங்ஙனம் மீண்டும் மீண்டுந் தேடி

तद्धोभये देवासुरा अनुबुबुधिरे ते होचुर्हन्त तमात्मानमन्विच्छामो यमात्मानमन्विष्य सर्वाꣳश्च लोकानाप्नोति सर्वाꣳश्च कामानितीन्द्रो हैव देवानामभिप्रवव्राज विरोचनोऽसुराणां तौ हासंविदानावेव समित्पाणी प्रजापतिसकाशमाजग्मतुः ॥ ७.२ ॥

तौ ह द्वात्रिꣳशतं वर्षाणि ब्रह्मचर्यमूषतुः ॥ ७.३ ॥

**தத்தோபயே தேவாஸுரா அனுபுபுதிரே, தேஹோசுர்-ஹந்த தமாத்மான-மன்விச்சாமோ, யமாத்மான-மன்விஷ்ய ஸர்வாꣳஶ்ச லோகாஞப்ஞோதி, ஸர்வாꣳஶ்ச காமானிதீந்த்ரோ ஹைவ தேவாஞமபிப்ரவவ்ராஜ, விரோசஞோऽஸுராணும், தௌ ஹாஸம்விதாஞவேவ, ஸமித்பாணீ, ப்ரஜாபதி ஸகாஶ-மாஜக்மது: ॥ 7·2 ॥**

தௌ ஹ த்வாத்ரிꣳ ஶதம் வர்ஷாணி ப்ரஹ்மசர்ய-மூஷது: ॥ 7.2 ॥

---

7.2. இதைத் தேவர்களும் அசுரர்களுமாகிய இருவகையாரும் கேட்டனர். 'நல்லது! எந்த ஆன்மாவைத் தேடிக் கண்டால் எல்லா உலகங்களையும் எல்லா ஆசைகளையும் அடையலாமோ, அந்த ஆன்மாவை நாம் தேடிக் காண்போம்' என்று அவர்கள் சொல்லிக்கொண்டனர். தேவர்களில் இந்திரனும், அசுரர்களில் விரோசனனும் ஒருவரையொருவர் கலந்து பேசாமல் கையில் ஸமித்துடன் பிரஜாபதியின் சமீபம் சென்றனர்.

7.3. அவர்களிருவரும் அங்கு முப்பத்திரண்டு வருஷம் பிரம்மசரியமிருந்தனர்.

---

யறிந்தான். விரோசனன் மந்த புத்தியால் தேகத்தையே ஆத்மா என்று கொண்டு உண்மையை யறியாமற் போனன். இவர்கள் ஒருவருக்கொருவர் இயற்கையில் விரோதமுடையவராயினும் பிரம்ம வித்தையை நாடிக் குரு விடம் வணக்கத்துடன் வந்தமையால் விரோதத்தை மறந்து கூடியிருந்தனர்.

பி. சூ. 4.4.3. (ஆத்மா ப்ரகரணத்).

तौ ह प्रजापतिरुवाच एषोऽक्षिणि पुरुषो दृश्यत एष आत्मेति होवाचैतदमृतमभयमेतद्ब्रह्मेत्यथ योऽयं भगवोऽप्सु परिख्यायते यश्चायमादर्शे कतम एष इत्येष उ एवैषु सर्वेष्वन्तेषु परिख्यायत इति होवाच ॥ ७.४ ॥

தௌ ஹ ப்ரஜாபதிருவாச, ஏஷோऽக்ஷிணி புருஷோ த்ருஶ்யத ஏஷ ஆத்மேதி ஹோவாசைத-தம்ருத-மபய-மேதத்-ப்ரஹ்மேத்யத யோऽயம் பகவோऽப்ஸு பரிக்க்யாயதே யஶ்சாய-மாதர்ஶே-கதம ஏஷ இத்யேஷ உ ஏவைஷு ஸர்வேஷ்-வந்தேஷு பரிக்க்யாயத இதி ஹோவாச ॥ 7.4 ॥

---

**7.4.** அவர்களிடம் பிரஜாபதி கூறியதாவது: ‘கண்ணில் காணும் புருஷன் எவனோ அவனே ஆத்மா. அவ்வாத்மா சாவற்றது, பயமற்றது, அதுவே பிரம்மம்.’

‘ஐயனே! நீரில் எது காணப்படுகிறதோ, கண்ணாடியில் எது காணப்படுகிறதோ—இவ்வுருவங்களில் எது ஆத்மா?’

அவர் கூறியதாவது: ‘இவை எல்லாவற்றுள்ளும் காண்பவன் அவனே.’

---

7.4. ஒ. சா. 4.15·1 அக்ஷிவித்தை.

கண்ணாகிய சராளத்தின் வழியே காட்சிகளைக் காண்பவனைப் பிரஜாபதி குறிப்பிட்டார். ஆனால் இந்திரனும் விரோசனனும் கண்ணால் காணப்படும் தங்களுடைய உடல்களின் பிரதிபிம்பங்களை அவர் குறிப்பிட்டதாய்த் தவறாக எண்ணினார்கள். இது அவர்களுடைய தேகாபிமானத்தால் ஏற்பட்டது. எனினும் பிரஜாபதி அவர்களைக் கடிந்து கொள்ளாமல் அதுவும் ஆதிபௌதிகத்தில் ஆத்மாவின் பிம்பந்தான் என்று ஏற்றுக்கொள்வது போல் ‘இவை எல்லாவற்றுள்ளும் காண்பவன் அவனே’ என்று கூறினார். அவர்களே ஆராய்ந்து அறிந்து கொள்ளட்டும் என்று அவர்களுடைய தவறை எடுத்துக் காட்டவில்லை.

பின் அவர்களை ஒரு தட்டத்தில் நீரை வைத்து அதில் தங்களைப்பார்த்துக்கொள்ளச் சொன்னார். தங்கள் உருவங்களை உள்ளபடி காண்பதாய்க் கூறினார்கள். மறுபடி அலங்கரித்துக் கொண்டு பார்க்கச் சொன்னார்.

तौ होचतुर्यथैवेदमावां भगवः साध्वलंकृतौ सुवसनौ परिष्कृतौ च एवमेवेमौ भगवः साध्वलंकृतौ सुवसनौ परिष्कृतावित्येष आत्मेति होवाचैतदमृतमभयमेतद्ब्रह्मेति तौ ह शान्तहृदयौ प्रवव्रजतुः ॥ ८.३ ॥

தௌ ஹோசதுர்-யதைவேத-மாவாம் பகவ: ஸாத்த்வலங்க்ருதௌ, ஸுவஸநௌ, பரிஷ்க்ருதௌ ச ஏவமேவேமௌ பகவ: ஸாத்த்வலங்க்ருதௌ, ஸுவஸநௌ, பரிஷ்க்ருதாவித்யேஷ ஆத்மேதி ஹோவாசைத-தம்ருத-மபய-மேதத்-ப்ரஹ்மேதி, தௌ ஹ ஶாந்தஹ்ருதயௌ ப்ரவவ்ரஜது: ॥ 8.3 ॥

---

8.3. அவர்கள் கூறுவர்: 'ஐயனே! எங்ஙனம் நாங்கள் நன்ருய் அலங்கரிக்கப் பெற்றவர்களாய், நல்ல ஆடை உடுத்தவர்களாய், பரிசுத்தம் செய்யப்பட்டவர்களாய் இருக்கிருேமோ அங்ஙனமே இவைகளும் நன்ருய் அலங்கரிக்கப்பட்டவைகளாய், நல்ல ஆடை உடுத்தவைகளாய், பரிசுத்தம் செய்யப்பட்டவைகளாய்க் காண்கின்றன.'

'அதுவே ஆத்மா; சாவற்றது, பயமற்றது; அதுதான் பிரம்மம்' என்ருர் பிரஜாபதி. அவர்கள் உள்ளத்தில் திருப்தியடைந்தவர்களாய்ச் சென்றனர்.

---

அலங்கரிக்கப்பட்ட தங்கள் உருவங்களை அப்படியே காண்பதாய்க் கூறினுர்கள். 'அதுதான் ஆத்மா' என்ருர் பிரஜாபதி. தாங்கள் விசாரித்து அறிய வந்த 'மூப்பற்றதும், சாவற்றதும், பசிதாகமற்றதுமான' ஆத்மா அது எங்ஙனமாகும் என்று அவர்கள் யோசிக்கவில்லை. சரீரத்தை ஆத்மாவாகக் கொள்ளவேண்டும் என்று விரோசனன் தீர்மானித்தான். பிம்பத்தை ஆத்மாவாக உபாசிக்க வேண்டும் என்று இந்திரன் கருதினுன். அவர்களுடைய தீர்மானம் அவர்கள் புத்தியின் பரிபக்குவத்துக்குத் தகுந்தவாறு இருந்தது.

ஒ. ப்ரு 5.2.3. பி. சூ. 1.3.19

तौ हान्वीक्ष्य प्रजापतिरुवाचानुपलभ्याऽऽत्मानमननुविद्य व्रजतो यतर एतदुपनिषदो भविष्यन्ति देवा वाऽसुरा वा ते पराभविष्यन्तीति स ह शान्तहृदय एव विरोचनोऽसुरान् जगाम तेभ्यो हैतामुपनिषदं प्रोवाचाऽऽत्मैवेह मह्य्य आत्मा परिचर्य आत्मानमेवेह मह्य्यात्मानं परिचरन्नुभौ लोका-ववाप्नोतीमं चामुं चेति ॥ ८.४ ॥

तस्मादप्यद्येहाददानमश्रद्दधानमयजमानमाहुरसुरो बते-त्यसुराणाꣳ ह्येषोपनिषत्प्रेतस्य शरीरं भिक्षया वसनेनालंकारेणेति सꣳस्कुर्वन्त्येतेन ह्यमुं लोकं जेष्यन्तो मन्यन्ते ॥ ८.५ ॥

தௌ ஹான்வீக்ஷ்ய ப்ரஜாபதி-ருவாசானுபலப்ப்யாऽऽத்மான-மனனுவித்ய வ்ரஜதோ யதர ஏத-துபநிஷதோ பவிஷ்யந்தி, தேவா வாऽஸுராவா, தே பராபவிஷ்யந்தீதி; ஸ ஹ ஶாந்தஹ்ருதய ஏவ விரோசனோ ऽஸுரான் ஜகாம ; தேப்ப்யோ ஹைதா-முபநிஷதம் ப்ரோவாசாऽऽத்மைவேஹ மஹய்ய, ஆத்மா பரிசர்ய, ஆத்மானமே-வேஹ மஹய்யாத்மானம் பரிசரன் னுபௌ லோகா-வவாப்னோதீமஞ்-சாமுஞ்சேதி ॥ 8.4 ॥

தஸ்மா - தப்யத்யேஹாததான - மஶ்ரத்ததான - மயஜமான - மாஹு - ரஸுரோ - பதேத் - யஸுராணாꣳ ஹ்யேஷோபநிஷத், ப்ரேதஸ்ய ஶரீரம் பிக்ஷயா வஸனேனலங்காரேணேதி ஸꣳஸ்குர் வந்த்-யேதேன-ஹ்யமும் லோகம் ஜேஷ்யந்தோ மன்யந்தே ॥ 8.5 ॥

---

8.4. அவர்கள் போவதைக் கண்டு பிரஜாபதி கூறுவார்: "ஆத்மாவைக் காணுமலும் ஆத்மாவை அறிந்து கொள்ளாமலும் இருவரும் போகிருர்கள் ; தேவாஸுரர்களாகிய இவ்விருவர்களில் எவர்கள் இதையே உண்மையில் ஆத்மா எனக் கொள்ளுகிருர் களோ அவர்கள் (உண்மைக்கு) புறம்பானவர்கள்".

விரோசனன் திருப்தியடைந்தவனுகவே அசுரர்களிடம் சென்று இந்த உபநிஷதத்தை உபதேசித்தான். "(தேகமாகிய) ஆத்மாவையே பெருமைப்படுத்த வேண்டும், உபசரிக்க வேண்டும். ஆத்மாவை பெருமைப் படுத்தி உபசரித்தலால் இகபரமாகிய இரண்டு உலகங்களேயும் ஒருவன் அடைவான்."

8.5. ஆதலால் இப்போதும் தானமின்றிச் சிரத்தையின்றி யஜ்ஞமின்றி இருக்கும் ஒருவனைப் பார்த்து, "ஐயோ! அவன்

अथ हेन्द्रोऽप्राप्यैव देवानेतद्भयं ददर्श यथैव खल्वयमस्मिन् शरीरे साध्वलंकृते साध्वलंकृतो भवति सुवसने सुवसनः परिष्कृते परिष्कृत एवमेवायमस्मिन्नन्धेऽन्धो भवति स्रामे स्रामः परिवृक्णे परिवृक्णोऽस्यैव शरीरस्य नाशमन्वेष नश्यति ॥ ९.१ ॥

नाहमत्र भोग्यं पश्यामीति स समित्पाणिः पुनरेयाय तꣳ ह प्रजापतिरुवाच ॥ ९.२ ॥

அத ஹேந்த்ரோऽப்ராப்யைவ தேவா-னேதத்-பயந் ததர்ஶ, யதைவ கல்-வய-மஸ்மின் ஶரீரே ஸாத்த்-வலங்க்ருதே ஸாத்த்-வலங்க்ருதோ பவதி, ஸுவஸனே ஸுவஸன:, பரிஷ்க்ருதே பரிஷ்க்ருத, ஏவ-மேவாய-மஸ்மின்னந்த்தேऽந்த்தோ பவதி, ஸ்ராமே ஸ்ராம:, பரிவ்ருக்ணே பரிவ்ருக்ணோ ऽஸ்யைவ ஶரீரஸ்ய நாஶ-மன்வேஷ நஶ்யதி ॥ 9.1 ॥

நாஹ-மத்ர போக்யம் பஶ்யாமீதி, ஸ ஸமித்பாணி: புனரேயாய தꣳஹ ப்ரஜாபதிருவாச ॥ 9.2 ॥

---

அசுரர்களைச் சேர்ந்தவன். இதுதான் அசுரர்களுடைய உபநிஷத்து. அவர்கள் பிரேத சரீரத்தை அன்னத்தாலும் ஆடையாலும் ஆபரணங்களாலும் மேன்மைப்படுத்துகின்றனர். இதனால் அவர்கள் ஜயிக்கவேண்டிய உலகத்தை ஜயித்து விட்டதாய்க் கருதுகின்றனர்'' என்று கூறுவர்.

9.1-3. ஆனால் இந்திரனே தேவர்களிடம் போவதற்கு முன்பே இந்த பயத்தைக் கண்டான். ''எங்ஙனம் தேகம் அலங்கரிக்கப்பட்டபோது இது அலங்கரிக்கப்பட்டதாயும், தேகம் நல்ல ஆடையுடுத்தபோது இது நல்ல ஆடை உடுத்ததாயும், தேகம் பரிசுத்தமாயிருக்கும்போது இது பரிசுத்தமாயும் காண்கின்றதோ அங்ஙனமே தேகம் குருடானால் இது குருடாயும், தேகம் ஒற்றைக் கண்ணுடையதானால் இது ஒற்றைக் கண்ணுடையதாயும் தேகம் முடமானால் இதுவும் முடமாயும், தேகம் நாசமானால் இது நாசமாயும் போகுமன்றோ? இதில் நான் ஒரு இன்பத்தையுங் காணவில்லை'' என்று மீண்டும் ஸமித்பாணியாக வந்து சேர்ந்தான். (தன் சந்தேகத்தைத் தெரிவித்தான்). பிரஜாபதி அவனை நோக்கி, 'அது

---

9.3. பி. சூ. 4.4.2

एतं त्वेव ते भूयोऽनुव्याख्यास्यामि वसापराणि द्वात्रिꣳशतं वर्षाणीति स हापराणि द्वात्रिꣳशतं वर्षाण्युवास तस्मै होवाच ॥ ९.३ ॥

य एष स्वप्ने महीयमानश्चरत्येष आत्मेति होवाचैतदमृतमभयमेतद्ब्रह्मेति स ह शान्तहृदयः प्रवव्राज स हाप्राप्यैव देवानेतद्भयं ददर्श तद्यद्यपीदꣳ शरीरमन्धं भवत्यनन्धः स भवति यदि स्राममस्रामो नैवैषोऽस्य दोषेण दुष्यति ॥ १0.१ ॥

न वधेनास्य हन्यते नास्य स्राम्येण स्रामो घ्नन्ति त्वेवैनं विच्छादयन्तीवाप्रियवेत्तेव भवत्यपि रोदितीव नाहमत्र भोग्यं पश्यामीति ॥ १0.२ ॥

ஏதந் த்வேவ-தே பூயோऽனுவ்யாக்க்யாஸ்யாமி, வஸாபராணி த்வாத்ரிꣳஶதம் வர்ஷாணீதி, ஸ ஹாபராணி த்வாத்ரிꣳஶதம் வர்ஷாண்-யுவாஸ, தஸ்மை ஹோவாச ॥ 9.3 ॥

ய ஏ்ஷ ஸ்வப்னே மஹீயமானஶ்-சரத்-யேஷ ஆத்மேதி ஹோவாசைத-தம்ருத-மபய-மேதத் ப்ரஹ்மேதி, ஸ ஹ ஶாந்த-ஹ்ருதய: ப்ரவவ்ராஜ, ஸஹாப்ராப்யைவ தேவா-னேதத் பயந்ததர்ஶ, தத்-யத்-யபீதꣳ ஶரீரமந்த்தம் பவத்-யனந்த்த: ஸ பவதி, யதி ஸ்ராம-மஸ்ராமோ, நைவைஷோऽஸ்ய தோஷேண துஷ்யதி ॥ 10.1 ॥

ந வதேனஸ்ய ஹன்யதே, நாஸ்ய ஸ்ராம்யேண ஸ்ராமோ க்க்னந்தி த்வேவைனம் விச்சாதயந்தீவாப்ரியவேத்தேவ பவத்யபி ரோதிதீவ, நாஹ-மத்ர போக்யம் பஶ்யாமீதி ॥ 10.2 ॥

---

அப்படித்தான். உனக்கு மறுபடியும் விளக்குகிறேன். இன்னும் முப்பத்திரண்டு வருஷம் இங்கு வசி' என்றார். அவ்வாறே முப்பத்திரண்டு வருஷம் வசித்தபின் (பிரஜாபதி பின்வருமாறு) கூறினார்.

10.1-2-4. "எவன் ஸ்வப்னத்தில் பெருமைப் படுத்தப்பட்டவனைச் சஞ்சரிக்கிறானோ அவன் தான் ஆத்மா. அது சாவற்றது, பயமற்றது, அதுதான் பிரம்மம்," என்றார். அவன் உள்ளத்தில் திருப்தியடைந்தவனைச் சென்றான். தேவர்களை அடைவதற்கு

स समित्पाणिः पुनरेयाय तं ह प्रजापतिरुवाच ॥ १0.३ ॥

एतं त्वेव ते भूयोऽनुव्याख्यास्यामि वसापराणि द्वात्रिंशतं वर्षाणीति स हापराणि द्वात्रिंशतं वर्षाण्युवास तस्मै होवाच ॥ १0.४ ॥

तद्यत्रैतत्सुप्तः समस्तः संप्रसन्नः स्वप्नं न विजानात्येष आत्मेति होवाचैतदमृतमभयमेतद्ब्रह्मेति स ह शान्तहृदयः

ஸ ஸமித்பாணி : புனரேயாய, தஂஹ ப்ரஜாபதிருவாச ॥ 10.3 ॥
ஏதந்த்வேவ தே பூயோऽனுவ்யாக்க்யாஸ்யாமி, வஸாபராணி த்வாத்ரிஂஶதம் வர்ஷாணீதி, ஸ ஹாபராணி த்வாத்ரிஂஶதம் வர்ஷாண்-யுவாஸ, தஸ்மை ஹோவாச ॥ 10.4 ॥

தத்யத்ரைதத்-ஸுப்த: ஸமஸ்த: ஸம்ப்ரஸன்ன:, ஸ்வப்னந் ந விஜாநாத்-யேஷ ஆத்மேதி ஹோவாசைததம்ருத-மபய-மேதத் ப்ரஹ்மேதி, ஸ ஹ ஶாந்தஹ்ருதய: ப்ரவவ்ராஜ, ஸஹாப்ராப்யைவ

---

முன்பே இந்த பயத்தைக் கண்டான். " தேகம் குருடானபோது இது குருடாகாவிட்டாலும், ஒற்றைக் கண்ணனபோது இது ஒற்றைக் கண்ணகாவிட்டாலும், தேகத்தின் குறைகளால் இது குறைவடையாவிட்டாலும், தேகம் கொல்லப்படும்போது இது கொல்லப்படாவிட்டாலும், கொல்லப்படுவது போலும், துரத்தப் படுவது போலும், கண்ணீர் விடுவதுபோலும் தோன்றுவதால் இதிலும் நான் இன்பத்தைக் காணவில்லை" என்று மீண்டும் ஸமித்பாணியாக வந்து சேர்ந்தான். (தன் சந்தேகத்தைத் தெரிவித்தான்). பிராஜாபதி அவனை நோக்கி " அது அப்படித்தான். உனக்கு மறுபடியும் விளக்குகிறேன். இன்னும் முப்பத்திரண்டு வருஷம் இங்கு வசி" என்றார். அவ்வாறே முப்பத்திரண்டு வருஷம் வசித்தபின் பிரஜாபதி (பின்வருமாறு) கூறினர்.

11.1. " ஸுஷுப்தியில் பரம சாந்தனாக எவன் தூங்குகிறானோ கனவு காண்பதில்லையோ அவனே ஆத்மா; இது சாவற்றது, பயமற்றது, இது பிரம்மம்" என்று கூறினர். அவன் உள்ளத்தில் திருப்தியடைந்தவனாய்ச் சென்றான். தேவர்களை

प्रवव्राज सहाप्राप्यैव देवानेतद्भयं ददर्श नाहं खल्वयमेव१ संप्रत्यात्मानं जानात्ययमहमस्मीति नो एवेमानि भूतानि विनाशमेवापीतो भवति नाहमत्र भोग्यं पश्यामीति ॥ ११.१ ॥

स समित्पाणिः पुनरेयाय त१ ह प्रजापतिरुवाच। एतं त्वेव ते भूयोऽनुव्याख्यास्यामि नो एवान्यत्रैतस्माद्वसापराणि पञ्चवर्षाणीति सहापराणि पञ्चवर्षाण्युवास तान्येकशत१ ह वै वर्षाणि मघवान्प्रजापतौ ब्रह्मचर्यमुवास तस्मै होवाच ॥ ११.२ ॥

தேவானேதத் **ப**யந் **த**தர்ஶ, நாஹங்-கல்-வய - மேவ௱ ஸம்ப்ரத்-யாத்மானம் ஜானத்-யய-மஹ-மஸ்மீதி, நோ ஏவேமானி பூதானி விநாஶ-மேவாபீதோ **ப**வதி, நாஹ-மத்ர **போ**க்யம் பஶ்யாமீதி ॥ 11.1 ॥

ஸ ஸமித்பாணி: புனரேயாய த௱ஹ ப்ரஜாபதி-ருவாச ஏதந்த்வேவ தே **பூ**யோऽனுவ்யாக்க்யாஸ்யாமி நோ ஏவான்யத்-ரைதஸ்மாத்-வஸாபராணி பஞ்சவர்ஷாணீதி ஸஹாபராணி பஞ்சவர்-ஷாண்-யுவாஸ, தான்யேகஶத௱ ஹ வை வர்ஷாணி மகவான் ப்ரஜா-பதௌ **ப்**ரஹ்மசர்ய-முவாஸ, தஸ்மை ஹோவாச ॥ 11.2 ॥

---

அடைவதற்கு முன்பே இந்த பயத்தைக் கண்டான். "உண்மையில் (ஸுஷுப்தி காலத்தில்) தான் இன்னுன் என்றுவது மற்றவை இன்னதென்றுவது இவன் தெரிந்து கொள்ளவில்லை. நாசமடைந்தவன் போலிருக்கிறுன். இதிலும் நான் இன்பத்தைக் காணவில்லை" என்று எண்ணிஞன்.

11.2 மீண்டும் ஸமித்பாணியாக வந்து சேர்ந்தான். பிரஜாபதி அவனை நோக்கி, "அதையே உனக்கு மறுபடியும் விளக்குகிறேன். இன்னும் ஐந்து வருஷம் இங்கு வசி" என்றுர். அவன் இன்னும் ஐந்து வருஷம் இருந்தான். இங்ஙனம் நூற்றொரு வருஷங்கள் ஆயின. இதைக் குறித்துத்தான், "இந்திரன் பிரஜாபதியிடம் நூற்றொரு வருஷம் பிரம்மசரியம் இருந்தான்" என்று கூறுகின்றனர்.

பின் பிரஜாபதி அவனுக்குக் கூறியதாவது—.

मघवन्मर्त्यं वा इद९ शरीरमात्तं मृत्युना तदस्यामृतस्याशरीरस्याऽऽत्मनोऽधिष्ठानमात्तो वै सशरीरः प्रियाप्रियाभ्यां न वै सशरीरस्य सतः प्रियाप्रिययोरपहतिरस्त्यशरीरं वाव सन्तं न प्रियाप्रिये स्पृशतः ॥ १२.१ ॥

अशरीरो वायुरभ्रं विद्युत्स्तनयित्नुरशरीराण्येतानि तद्यथैतान्यमुष्मादाकाशात्समुत्थाय परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यन्ते ॥ १२.२ ॥

மகவன் மர்த்யம் வா இத९ ശரீரமாத்தம் ம்ருத்யுனா, ததஸ்யாம்ருதஸ்யாശரீரஸ்யாऽऽத்மனோऽதிஷ்ட்டான-மாத்தோ வை ஸஶரீர: ப்ரியாப்ரியாப்ப்யாம், ந வை ஸஶரீரஸ்ய ஸத: ப்ரியாப்ரியயோரபஹதி-ரஸ்த்-யஶரீரம் வாவ ஸந்தம் ந ப்ரியாப்ரியே ஸ்ப்ருஶத: ॥ 12.1 ॥

அஶரீரோ வாயு-ரப்ப்ரம் வித்யுத்-ஸ்தனயித்னு-ரஶரீராண்யேதானி, தத்யதைதான்-யமுஷ்மா-தாகாஶாத் ஸமுத்தாய, பரஞ்-ஜ்யோதி-ருபஸம்பத்ய, ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்யந்தே ॥ 12.2 ॥

---

12.1. "இந்திரா! இச்சரீரம் சாவுடையது, சாவினால் பீடிக்கப்பட்டது. சாவில்லாததும் சரீரமில்லாததுமான ஆத்மாவுக்கு இது இருப்பிடம். சரீரத்துடன் கூடிய இவன் விருப்பு வெறுப்பால் பீடிக்கப்படுகிறான். சரீரத்துடன் கூடிய இவனுக்கு விருப்பு வெறுப்பினின்று விடுதலை இல்லவே இல்லை. ஆனால் சரீரம் இல்லாதவனை விருப்பு வெறுப்புக்கள் தொடமாட்டா.

12.2-3. "காற்றுக்குச் சரீரமில்லை; மேகமும் மின்னலும் இடியும் சரீரமில்லாதவை; எங்ஙனம் இவை ஆகாயத்துக்கு மேலே

---

12.1. சரீரம் இல்லாதவனை—அசரீர ஸ்வரூப விஜ்ஞானத்தால் விழித்துக் கொண்டவனை.

சூரியனைக் கண்ட ஜலம் அருவமாகி, அதாவது உருவமற்றதாகி, மேல் நோக்கிச் செல்லுவதுபோல், பரஞ்ஜோதியின் ஒளிபட்டதும் இந்த ஆத்மா கிளம்பிப் பரஞ்ஜோதியுடன் கலந்து ஆனந்தநிலையை அடையும். (உபநிஷதப்பலகணி : ராஜாஜி).

மழை காலத்தில் காற்றின் ஓட்டமும் உருக்கருத்த மேகத்தின் சஞ்சாரமும் இடியும் மின்னலும் எல்லாம் சூரிய வெப்பத்தால் உண்டாகின்றன.

एवमेवैष संप्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योति-रूपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते स उत्तमः पुरुषः स तत्र पर्येति जक्षन् क्रीडन् रममाणः स्त्रीभिर्वा यानैर्वा ज्ञातिभिर्वा नोपजनꣳ स्मरन्निदꣳ स यथा प्रयोग्य आचरणे युक्त एवमेवाय-मस्मिञ्छरीरे प्राणो युक्तः ॥ १२.३ ॥

ஏவமேவைஷ ஸம்ப்ரஸாதோ-ऽஸ்மாச் சரீராத் ஸமுத்தாய, பரஞ்ஜ்யோதி-ருபஸம்பத்ய, ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்யதே, ஸ உத்தம: புருஷ:, ஸ தத்ர பர்யைதி ஜக்ஷன் க்ரீடன் ரமமாண:, ஸ்த்ரீபிர்வா, யானைர்வா ஜ்ஞாதிபிர்வா, நோபஜனꣳ ஸ்மரந்நிதꣳ ஶரீரꣳ ஸ யதா ப்ரயோக்ய ஆசரணே யுக்த, ஏவமேவாய-மஸ்மின் ஶரீரே ப்ராணோ யுக்த: ॥ 12.3 ॥

---

கிளம்பி உயர்ந்த ஒளியையடைந்து தமது சுய உருவத்துடன் விளங்குகின்றனவோ அங்ஙனமே தெளிவடைந்த இவன் இச்சரீரத்தி னின்று கிளம்பி பரஞ்ஜோதியை யடைந்து சுய உருவத்துடன் விளங்குகிறான். அவன் உத்தம புருஷன். அவன் அங்கே ஸ்திரீ களுடனும் வாகனங்களுடனும் உறவினர்களுடனும் கூடிச் சிரித் தும் விளையாடியும் மகிழ்ந்தும் உடன் பிறந்த சரீரத்தை நினை யாமல் உலவுகிறான். வண்டியில் குதிரை பூட்டப்பட்டதுபோல் இச்சரீரத்தில் பிராணன் பூட்டப்பட்டிருக்கிறது.

---

பின் அதே சூரிய வெப்பம் அதிகரிக்கும்போது காற்றும் மேகமும் இன்னும் உயர ஏறிச் சூரிய ஒளியில் ஒன்றுபட்டவை ஆகின்றன. தங்கள் பழைய உருவங்களை மறந்து விட்டவைபோலும் ஆனந்த வாழ்வை அடைந்தவை போலும் ஆகின்றன.

ஒ. பிரம்மமாயும் அதன் பிறப்பிடமாயும் சிருஷ்டிகர்த்தாவாயும் ஈச னையும் உள்ள பொன்போலொளிரும் புருஷனை எப்போது பார்க்குந் திறமை யுடைய வித்வான் பார்க்கிறானோ அப்போது அவன் புண்ணிய பாவங்களை உதறிவிட்டு மாசற்றவனாய்ப் பரம புருஷனுடன் ஸாம்யத்தை அடை கிறான். (மு-3.1.3)

அங்கே எல்லா ஆனந்தங்களையும் அடைகிறான். ஒ. (ஶரீரே பாப்மனோ ஹித்வா । ஸர்வான் காமான் ஸமஶ்னுத இதி) தை. 2.5.

பி. சூ. 4.4.2. (முக்த: ப்ரதிஜ்ஞானாத்).

(காமான்னீ காமரூப்யனு ஸஞ்சரன் ।) தை 3.10.5.

अथ यो वेदेदं मन्वानीति स आत्मा मनोऽस्य दैवं चक्षुः स वा एष एतेन दैवेन चक्षुषा मनसैतान् कामान् पश्यन् रमते य एते ब्रह्मलोके ॥ १२.५ ॥

அத யோ வேதேதம் மன்வானீதி ஸ ஆத்மா மனோ஽ஸ்ய தைவஞ் சக்ஷு: ஸ வா ஏஷ ஏதேன தைவேன சக்ஷுஷா மனஸைதான் காமான் பஶ்யன் ரமதே ய ஏதே பரஹ்மலோகே ॥ 12.5 ॥

---

12.5. "இதை நான் நினைக்கிறேன்" என்று எவன் உணர்கிறானோ அவன் ஆத்மா; மனது அவனுடைய தெய்வக்கண். இந்தத் தெய்வக் கண்ணாகிய மனதாலன்றோ அவன் விரும்பியவற்றைக் கண்டு களிக்கிறான்—எவை பிரம்மலோகத்தில் (காணக் கிடைப்பனவோ அவற்றை).

---

12.5. விரும்பியவற்றைக் கண்டு களிக்கிறான் :—

இவனுக்கு வேண்டுதல் வேண்டாமை இல்லை. எனினும் விளையாட்டாக (பகவான் லீலை புரிவதுபோல்) எதை நினைத்தாலும் அதை யடைகிறான்.

ஒ. தெளிந்த சித்தமுடையவன் எந்த எந்த உலகத்தை மனதால் ஸங்கல்பிக்கிறானோ எந்தெந்த போகங்களை விரும்புகிறானோ அந்தந்த உலகத்தையும் அந்தந்த போகங்களையும் அடைகிறான். (மு. 3.1.10)

12.5. மனது அவனுடைய தெய்வக்கண் :—மற்ற இந்திரியங்களெல்லாம் நிகழ்கால உணர்ச்சிமட்டும் உடையன; ஆகையால் அவை தெய்வீக சக்தி வாய்ந்தன அன்று; மனதோ முக்காலத்தையும் உணர்வது, ஸூக்ஷ்மமானதையும் தூரத்திலுள்ளதையும் அறியக்கூடியது. கண்ணுக்குக் கண்ணாயிருப்பது. ஆகையால் அது தெய்வக்கண். ஒ. திவ்யந் ததாமி தே சக்ஷு: (கீ. 11.8.)

எவை பிரம்மலோகத்தில் காணக் கிடைப்பனவோ:—அந்த ஆசைகள்—உலக விஷயங்களில் உள்ள ஆசைகளுக்குக் கீழே புதையல்போல் உள்ள ஆத்மரதியும் ஆத்மக்கிரீடையும் பிரம்மலோகத்தில் பூர்த்தி பெறும் ஆசைகள்.

तं वा एतं देवा आत्मानमुपासते तस्मात्तेषाꣳ सर्वे च लोका आत्ताः सर्वे च कामाः स सर्वाꣳश्च लोकानाप्नोति सर्वाꣳश्च कामान्यस्तमात्मानमनुविद्य विजानातीति ह प्रजापतिरुवाच प्रजापतिरुवाच ॥ १२.६ ॥

தம் வா ஏதம் தேவா ஆத்மான-முபாஸதே, தஸ்மாத் தேஷாꣳ ஸர்வே ச லோகா ஆத்தா:, ஸர்வே ச காமா:, ஸ ஸர்வாꣳஶ்ச லோகாளுப்னோதி, ஸர்வாꣳஶ்ச காமான்-யஸ்-தமாத்மான-மனு வித்ய விஜாளுதீதி ஹ ப்ரஜாபதி-ருவாச, ப்ரஜாபதி-ருவாச ॥ 12.6 ॥

---

12.6. "தேவர்கள் இந்த ஆத்மாவை உபாசிக்கிருர்கள். ஆகையால் எல்லா உலகங்களும் எல்லா விருப்பங்களும் அவர்களால் அடையப்படுகின்றன. எவனெருவன் இவ்வாத்மாவை அறிந்து உணர்கின்ருனே அவனும் எல்லா உலகங்களேயும் எல்லா விருப்பங் களேயும் அடைகிருன்" என்று பிரஜாபதி கூறினர், பிரஜாபதி கூறினர்.

---

12.6. தேவர்கள் இந்த ஆத்மாவை உபாசிக்கிருர்கள்—விரோசனனேப் பின்பற்றி அசுரர்கள் தேகத்தையே ஆத்மா என்று கொண்டனர். இந்திரனேப் பின்பற்றித் தேவர்கள் தேகத்தை ஆத்மா அல்ல என்று கண்டு பிரஜாபதி உபதேசித்த வண்ணம் அந்தராத்மாவை நாடுகிருர்கள். அதனல் எல்லா நலங்களேயும் பெறுகிருர்கள்.

12.6. எவனெருவன் :—'அதிர்ஷ்டசாலிகளான தேவர்களுக்கு அப் பெரும் பேறு கிட்டலாம். குறைந்த ஆயுளும் குறுகிய புத்தியும் உடைய தற் கால மனிதர்களுக்கு அது கிட்டாது' என்று சிலர் கூறலாம். அந்த எண் ணத்தை நீக்குவதற்காக, 'தற்காலத்திலுங்கூட எவனெருவன் இந்திரனேப் போல் ஆத்மாவை அறிகிருனே அவனும் எல்லா உலகங்களேயும் எல்லா விருப்பங்களேயும் அடைகிருன்' என்று கூறப்படுகிறது. (அத: ஸர்வேஷா மாத்மஞானம் தத்பலப்ராப்திஶ்ச துல்யைவ பவதீத்யர்த்த:) ஆகையால் ஆத்மஞானமும் அதன் பலனேயடைதலும் எல்லோருக்கும் ஸமம் என்பது கருத்து.

(சங்.)

श्यामाच्छबलं प्रपद्ये शबलाच्छ्यामं प्रपद्येऽश्व इव रोमाणि विधूय पापं चन्द्र इव राहोर्मुखात्प्रमुच्य धूत्वा शरीरमकृतं कृतात्मा ब्रह्मलोकमभिसंभवामीत्यभिसंभवामीति ॥ १३.१ ॥

आकाशो वै नाम नामरूपयोर्निर्वहिता ते यदन्तरा तद्ब्रह्म तदमृतꣳ स आत्मा प्रजापतेः सभां वेश्म प्रपद्ये यशोऽहं

ஶ்யாமாச்-சபளம் ப்ரபத்யே, ஶபளாச்-ச்யாமம் ப்ரபத்யேऽஶ்வ இவ ரோமாணி விதூய பாபஞ், சந்த்ர இவ ராஹோர்-முகாத் ப்ர-முச்ய தூத்வா ஶரீர-மக்ருதங் க்ருதாத்மா ப்ரஹ்மலோக-மபிஸம்ப்-பவாமீத் யபிஸம்ப்பவாமீதி ॥ 13.1 ॥

ஆகாஶோ வை நாம நாமரூபயோர்-நிர்வஹிதா, தே யதந்தரா தத் ப்ரஹ்ம ததம்ருதꣳ ஸ ஆத்மா, ப்ரஜாபதே: ஸபாம் வேஶ்ம ப்ர-பத்யே யஶோऽஹம் பவாமி ப்ராஹ்மணாநாம், யஶோ ராஜ்ஞாம்,

13·1. இருட்டான இருதய குகையிலுள்ள பிரம்மத்தினின்று பலவண்ணமாய் விரிந்துள்ள இவ்வுலகை அடைகிறேன். பல வண்ணமாய் விரிந்துள்ள இதினின்றும் இருதய குகையிலுள்ள பிரம்மத்தை அடைகிறேன். குதிரை ரோமங்களை உதறிவிடுவது போல் பாவத்தை உதறிவிட்டு, சந்திரன் ராகுவின் வாயிலிருந்து விடுபடுவதுபோல் விடுபட்டுச் சரீரத்தை விடுத்துச் செய்யவேண்டியதைச் செய்து முடித்துச் செயலிலடங்காத பிரம்மலோகத்தை அடைகிறேன், ஆம், அடைகிறேன்.

14.1. (உருவில்லாத) ஆகாசம் என்று குறிப்பிடப்படுவது எதுவோ அதுவே பெயரையும் உருவத்தையும் உடைய உலகை வெளிப்படுத்துவது. எதற்குள் இவை அடங்குமோ அதுவே பிரம்மம், அமிருதம், ஆத்மா. நான் பிரஜாபதியின் ஸபையை, வாசஸ்தானத்தை, அடைகிறேன். பிராம்மணர்களிடமுள்ள பெருமையாகவும், க்ஷத்திரியர்களின் பெருமையாகவும், வைசியர்களின் பெருமையாகவும் நானே ஆவேன். அந்தப் பெருமையை நான்

13.1. ஸமாதி நிலையினின்று ஜாக்கிர உலகத்துக்கும், ஜாக்கிர உலகினின்று ஸமாதி நிலைக்கும் செல்லுகிறேன். முடிவில் சரீரத்தை விட்டுக் கிளம்பிப் பிரம்மலோகத்தை அடைகிறேன் என்று கருத்து.

14.1. ஆகாசம்—ஒ. எப்போதும் எங்கும் உலவுவதும் அளவு கடந்ததும் ஆகிய காற்று எவ்வாறு ஆகாசத்தில் இருப்புடையதோ அவ்வாறு எல்லாப் பொருள்களும் என்னிடம் இருப்புடையன என்று உணர்வாய் (கீ. 9.6).

भवामि ब्राह्मणानां यशो राज्ञां यशो विशां यशोऽहमनुप्रापत्सि स हाहं यशसां यशः श्येतमदत्कमदत्कꣳ श्येतं लिन्दुमाभिगां लिन्दुमाभिगाम् ॥ १४.१ ॥

तद्धैतद्ब्रह्मा प्रजापतय उवाच प्रजापतिर्मनवे मनुः प्रजाभ्य आचार्यकुलाद्वेदमधीत्य यथाविधानं गुरोः कर्मातिशेषेणाभि-

யஶோ விஶாம், யஶோऽஹ-மனுப்ராபத்ஸி ஸ ஹாஹம் யஶஸாம் யஶ:, ஶ்யேத-மதத்க-மதத்கꣳஶ்யேதம் லிந்துமாபிகாம் லிந்துமாபி காம் ॥ 14.1 ॥

தத்தைதத் ப்ரஹ்மா ப்ரஜாபதய உவாச, ப்ரஜாபதிர்-மனவே, மனு: ப்ரஜாப்ப்ய, ஆசார்ய-குலாத்-வேத-மதீத்ய, யதாவிதானம்

---

நாடுகின்றேன். பெருமைக்கும் பெருமை நானே யாவேன். இரத்த வர்ணமானதும் பல்லில்லாமல் பக்ஷிப்பதும் வழுக்கிவிழச் செய்வதுமான ஸ்தானத்தை (யோனியை) நான் இனி ஒருக்காலும் அடையாமலிருப்பேனாக, அடையாமலிருப்பேனாக!

15.1. இதைப் பிரம்மா பிரஜாபதிக்குச் சொன்னார்; பிரஜாபதி மனுவுக்குச் சொன்னார்; மனு பிரஜைகளுக்குச் சொன்னார். ஆசாரிய குலத்தில் விதிப்படி குருவுக்கு பணிவிடை செய்து எஞ்சிய காலத்தில் விதிப்படி வேதத்தைக் கற்று ஸமாவர்த்தனத்துக்குப் பின்

---

காற்று எங்கும் சஞ்சரிப்பது போல் பிராணிகள் பல யோனிகளில் பிறந்திறந்து சுழல்வனவாயினும் காற்று ஆகாயத்தில் தோன்றி ஆகாயத்தில் ஒடுங்குவதுபோல் உலகனைத்தும் பிரம்மத்திடம் தோன்றி பிரம்மத்திடமே லயமடைகின்றது. காற்று ஆகாயத்தைக் கறைப்படுத்தாதவாறு உலகு பிரம்மத்தைச் சிறிதும் பற்றாது.

14.1. பிரஜாபதி—இங்கு சதுர்முகப் பிரம்மாவைக் குறிக்கும்.

பெருமைக்குப் பெருமை—ஒ. எந்தெந்த வஸ்து பெருமையுடையதாகவோ அழகுடையதாகவோ சக்தியுடையதாகவோ உளதோ அது எல்லாம் என்னுடைய சக்தியின் ஒரு அம்சத்தில் தோன்றியது என்று அறிதல் வேண்டும். (கீ. 10.41).

பிராம்மணனுடைய ஞானமும் க்ஷத்திரியனுடைய வீரியமும் வைசியனுடைய செல்வமும் நானே.

ஞானத்தையும் வீரியத்தையும் செல்வத்தையும் விழுங்கும் யோனித் துவாரத்தை அடைந்து பிறவியில் இனி நழுவி வீழாமல் இருப்பேனாக!

பி. சூ. 1.3. 16-17; 4.3-14

समावृत्य कुटुंबे शुचौ देशे स्वाध्यायमधीयानो धार्मिकान् विदधदात्मनि सर्वेन्द्रियाणि संप्रतिष्ठाप्य अहिंसन्सर्वभूतानि

குரோ: கர்மாதிஶேஷேணுபிஸமாவ்ருத்ய, குடும்பே ஶுசௌ தேஶே ஸ்வாத்த்யாய-மதீயாேநா தார்மிகான் விதத-தாத்மனி ஸர்வேந்த்ரியாணி ஸம்ப்ரதிஷ்ட்டாப்ய, அஹிம்ஸன் ஸர்வபூதானி அன்யத்ர தீர்த்தேப்ப்ய:, ஸ கல்வேவம் வர்த்தயன் யாவ-தாயுஷம்,

---

குடும்பத்திலிருந்து கொண்டு பரிசுத்தமான இடத்தில் தன் வேதத்தைத் தொடர்ந்து அத்தியயனம் செய்பவனையும், தார்மீகர்களான புத்திரர்களைப் பெற்று எல்லா இந்திரியங்களையும் ஆத்மாவினிடத்தில் நிலை பெறச் செய்தவனையும், விதிக்கப்பட்ட கர்மாக்களிலன்றி மற்ற எல்லா விடத்திலும் எல்லாப் பிராணிகளிடத்தும் அஹிம்ஸையைப் பாராட்டுபவனையும், ஆயுள் முழுதும் உள்ளவன்

---

15.1. பிரஜாபதி—இங்கு இச்சொல் பிரஜாபதிகளில் ஒருவரான காசியபரைக் குறிக்கும்.

ஸமாவர்த்தனத்துக்குப் பின்—ஸாதாரணமாக குருகுலத்தில் பனிரண்டு வருஷம் பிரம்மசரிய விரதத்துடன் இருந்து அத்தியயனத்தைப் பூர்த்தி செய்து குருவிடம் விடை பெற்றுத் திரும்புதல் ஸமாவர்த்தனம். அங்ஙனம் கல்வியைப் பூர்த்தி செய்தவனுக்கு ஸ்நாதகன் என்று பெயர். கல்வியைப் பூர்த்தி செய்வதற்காக ஸ்நாதகன் தேச யாத்திரை செய்தால் அவன் மிகுந்த மரியாதையுடன் வரவேற்கப்பட்டு எல்லோராலும் ஆதரிக்கப் பட வேண்டும். பிறகு அவன் கிருஹஸ்தாசிராமத்திற் புகுதற் குரியவன்.

பிரம்மலோகத்தை யடைகிறான்—உலகத்தில் வாழ்வாங்கு வாழுங் கிருஹஸ்தனும் உலகைத் துறந்து வாழும் உத்தம ஞானிகள் எய்தும் உயர்ந்த பதவியை யடைவான் என்பதில் ஐயமில்லை.

ஒ. க்ருஷ்ணோ போகீ, ஶுகஸ்த்யாகீ, ராஜாநௌ ஜநக-ராகவௌ । வஸிஷ்ட்ட: கர்ம-கர்த்தா ச த ஏதே ஜ்ஞானின: ஸமா: ॥ விசார ஸாகரம்.

ஒ. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும். (திருக்குறள்)

अन्यत्र तीर्थेभ्यः स खल्वेवं वर्तयन्यावदायुषं ब्रह्मलोकमभि-
संपद्यते न च पुनरावर्तते न च पुनरावर्तते ॥ १५.१ ॥

॥ इत्यष्टमोऽध्यायः ॥

ॐ आप्यायन्तु ममांगानि...ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

॥ इति छान्दोग्योपनिषत्समाप्ता ॥

ப்ரஹ்மலோக-மபிஸம்பத்யதே, ந ச புனராவர்த்ததே, ந ச புனரா-
வர்த்ததே ॥ 15.1 ॥

॥ இத்யஷ்டமோऽத்த்யாய: ॥

ஓம் ஆப்யாயந்து மமாங்கானி...

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

॥ இதி சாந்தோக்யோபநிஷத் ஸமாப்தா ॥

---

எவனோ அவன் பிரம்ம லோகத்தை யடைகிறான், மீண்டும் திரும்பி வருவதில்லை, திரும்பி வருவதில்லை.

எட்டாவது அத்தியாயம் முற்றும்.

ஓம். என்னுடைய அங்கங்களை எல்லாவற்றையும் உபநிஷத்தில்
உறையும் பிரம்மம் வலிமை பெறச் செய்யட்டும்......

முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

இங்ஙனம் சாந்தோக்கியோபநிஷத்து முற்றும்.

---

**உபநிஷத்தின் விஷயச் சுருக்கம்—**

உத்கீத வித்தையில் முதல் அத்தியாயம் ஆரம்பிக்கிறது. உத்கீதம் எனப் பெயர் பெற்ற ஓம் என்ற அக்ஷரத்தை உபாசிக்கவேண்டும் என்றும் ஓங்காரத்தின் மகிமையை யறிந்து, சிரத்தையுடனும், யோகமுறைப்படியும், செய்யப்படுங் கருமமே வீரியமுடையதாகும் என்றும் உபதேசிக்கப்படுகிறது.

அடுத்தபடி உபதேசிக்கப்படுவது அக்ஷி வித்தையும் ஆகாச வித்தையும். சூரியனிடம் உபாசிக்கப்படும் புருஷன் எவனோ அவனே கண்ணில் ஒளியாயிருப்பவனும். ஆ-எங்கும், காசம்-பிரகாசிப்பது, ஆகாசம்.

அங்ஙனம் பிரகாசிப்பது பிரம்மமே. ஆகையால் ஆகாசம் எனுஞ் சொல் பிரம்மத்தையே குறிக்கும்.

பின் உஷஸ்தியின் கதையால் ஆபத்தருமம் கூறப்படுகிறது.

இரண்டாவது அத்தியாயத்தில் தருமத்தின் ஸ்கந்தங்கள் மூன்று என்பதும், மூன்று உலகங்களும், மூன்று வேதங்களும், மூன்று வியாஹிருதிகளும் ஓங்காரத்தில் ஒடுக்கம் என்பதும், நரம்புகள் ஒரு காம்பிலிருந்து கிளம்பி இலைகளை ஊடுருவி வியாபிப்பதுபோல் ஓங்காரம் அனைத்திலும் வியாபித்திருக்கிற தென்பதும் உபதேசிக்கப்படுகிறது.

மதுவித்தை, காயத்திரீ மந்திரத்தின் மகிமை, சாண்டில்ய வித்தை, புருஷ வாழ்க்கை ஒரு யஜ்ஞம் என்பது முதலியன மூன்றாவது அத்தியாயத்தின் விஷயங்கள். மனத்தின் வடிவினதாயும், பிராணனை உடலாய்க் கொண்டதாயும், பிரகாசம் பெருந்தியதாயும், பொய்யாத ஸங்கல்பம் உடையதாயும், ஆகாயம் போன்று எங்கும் பரவி நிற்கும் இயற்கை உடையதாயும், எல்லாக் கருமங்களும் எல்லா ஆசைகளும் எல்லா வாசனைகளும் எல்லா ருசிகளுந் தானே யாகி இவ்வுலகனைத்தையும் வியாபித்து நிற்பதாயும் உள்ளது பிரம்மம் என்ற உறுதியான நம்பிக்கையுடன் உபாசிக்க வேண்டும். இதுவே என் ஆத்மாவாகி, நெல்லினும் யவத்தினும் கடுகினும் தினையினும் நுண்ணியதாய், என் இருதயத்தினுள் விளங்குவதாம். இதுவே பூமியினும் பெரியதாயும், வானுலகினும் பெரியதாயும், இவ்வுலகங்ளெல்லாவற்றினும் பெரியதாயும் உள்ளதாம்.

வேதத்தின் கருத்தை உணர்ந்தவனுக்குத் தினசரி வாழ்க்கையே தொடர்ந்ததோர் யஜ்ஞமாக அமைகின்றது. பசியுடனிருப்பதும் தாகத்துடனிருப்பதும் இன்பங்களைத் துறந்திருப்பதும் தீக்ஷை. உண்பதும் பருகுவதும் இன்பம் நுகர்வதும் உபஸதம். தவமும் தானமும் நேர்மையும் அஹிம்ஸையும் பொய்யாமையும் தக்ஷிணைகள். மரணமே அவபிருத ஸ்நாநம்.

ரைக்வர் என்ற பிரம்ம ஞானியின் பெருமை, ஸத்தியகாமன் கதை, அக்கினி உபாஸனை முதலியன நான்காவது அத்தியாயத்தில் கூறப்படுவன. ஞானிகளுடைய போக்கு விசித்திரமானது, அவர்களுடைய பெருமையையும் செயலையும் ஆழங்காண்பது கடினம் என்பது ரைக்வருடைய கதையினின்று தெரிகிறது. பிரம்மசாரியின் முக்கிய தருமம் ஸத்தியத்தினின்று தவறாமை என்பதும் அங்ஙனம் உள்ளதை உள்ளபடி கூறியதால், ஸத்தியகாமனுடைய கோத்திரம் தெரியாதபோதும் குரு

அவனுக்கு உபநயனம் செய்வித்துச் சிஷ்யனுய் ஏற்றுக்கொண்டார் என்பதும், அவன் மாடுமேய்க்குந் தொழிலால் ஞானம் பெற்றதால் உடலை வருத்திச் செய்யும் பணியே ஞானுேதயத்துக்குச் சிறந்த ஸாதனம் என்பதும், மனம் சேவையால் பக்குவமடைந்தபோது வானும், மண்ணும், மலையும், நதியும், ஒவ்வொன்றும் உபகுருவாய் நின்று பேசாமல் பேசி ஞானத்தைப் புகட்டும் என்பதும் ஸத்தியகாமனுடைய கதையால் விளங்குகிறது. காமலரின் புத்திரனுன உபகோஸலன் ஸத்தியகாமரிடம் குருகுல வாஸம் செய்த வரலாறும் அக்கினி உபாஸனையால் ஞானம் பெற்றவாறும் பின்னர் கூறப்படுகிறது.

ஐந்தாவது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் பிராண வித்தை கூறப்படுகிறது. இதை ஜாபால ஸத்தியகாமர் வியாக்கிரபாதருடைய குமாரரான கோசுருதிக்கு உபதேசித்து " இதைக் காய்ந்துபோன கட்டையிடம் சொன்னுல் கூட அதில் கிளைகள் முளைத்து இலைகள் தளிர்க்கும் " என்று கூறினுர். உண்மைக்கு உயிர் உண்டு, சக்தி உண்டு என்பதை இது அழகாக எடுத்துக் காட்டுகிறது. உலர்ந்த கட்டையும் உயிர் கொண்டு தழைக்கும் என்ருல் புத்திமானுக்கு அறிவூட்டி உய்விக்கும் என்று சொல்லவேண்டியதில்லை.

இதற்குமேல் இவ்வத்தியாயத்தில் உபதேசிக்கப்படுவது பஞ்சாக்கினி வித்தை. சுவேதகேதுவும் அவன் தந்தையும் ராஜரிஷியாகிய பிரவாஹணரிடம் இவ் வித்தையைத் தெரிந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. பிரவாஹணர், " இதற்கு முன் இவ்வித்தை பிராம்மணரிடம் சென்றதில்லை; உலகம் முழுவதிலும் க்ஷத்திரியர்களுடையதாகவே இருந்து வந்திருக்கிறது" என்று கூறிவிட்டு உபதேசித்தார்.

ஆருவது அத்தியாயத்தில் சுவேதகேதுவின் கதையும் ஸாமவேதத்தின் சிகரமாக விளங்கும் தத்-த்வ-மஸி மஹா வாக்கியத்தின் உபதேசமும் அடக்கம். சுவேதகேதுவைப் பார்த்து அவன் தகப்பனுர் உத்தாலகர், " சுவேதகேது ! நீ குருகுலத்தில் பிரம்மசாரியாக இருந்து கல்வி கற்று வர வேண்டும். நமது குலத்தோர் எவரும் வேதத்தைக் கற்காமல் பெயரால் மட்டும் பிராம்மணராக இருந்ததில்லை " என்ருர். அதன்படி சுவேதகேதுவும் பனிரண்டு வயது முதல் இருபத்து நான்கு வயது வரை குருகுலவாஸம் செய்து வித்தியா கர்வத்துடன் வீடு திரும்பிவந்தான். " மகனே ! எல்லாம் படித்தறிந்து விட்டதாக நீ எண்ணுகிருய் போலிருக்கிறது. படிப்புக்கு எட்டாத பொருளை எப்படி உணர்வது என்று கேட்டுத் தெரிந்து

கொண்டாயா?'' என்று தகப்பனார் கேட்டார். "எனது குருமார் களாகிய பெரியோர் இதை அறியமாட்டார் போலும். அறிந்திருந்தால் சொல்லியிருக்க மாட்டார்களா? நீங்களே இதை உபதேசிக்க வேண்டும்,'' என்றான். "அங்ஙனமே யாகுக'' என்று தகப்பனார் உபதேசிக்கலானார்.

'குழந்தாய்! நதிகள் கிழக்கிலும் மேற்கிலும் பாய்ந்து செல்லுகின்றன. ஸமுத்திரத்திலிருந்து தோன்றி ஸமுத்திரத்திலேயே மறைகின்றன. ஸமுத்திரமாகவே ஆய்விடுகின்றன. அவை 'நான் இது' என்று எங்ஙனம் அறியமாட்டாவோ அங்ஙனமே, குழந்தாய்! இப்பிராணிகளெல்லாம் ஸத்தி லிருந்து தோன்றி ஸத்திலிருந்து தோன்றினோம் என்று உணரவில்லை. எது அணுமாத்திரமான ஸூக்ஷ்ம வஸ்துவோ அதுவே நீயாக உளாய், (தத்-த்வ-மஸி).

'உன் கண்ணுக்குத் தெரியாமல் ஒரு சிறு ஆலவிதைக்குள் நுட்பமாக இலைகளும் கிளைகளும் விழுதுகளுங்கொண்ட ஆலமரம் எப்படி அடங்கி யிருக்கிறதோ அவ்வாறே உலகம் முழுதும் ஆத்மசக்தியில் அடங்கியிருக் கிறது (தத்-த்வ-மஸி).

'தண்ணீரில் போட்ட உப்பு தண்ணீரில் கரைந்து கண்ணுக்குத் தெரியாமல் போனாலும் எப்படி தண்ணீர் முழுவதிலும் வியாபித்து இருக்கிறதோ, அப்படியே இவ்வுலகில் பரம் பொருள் மறைந்து நிற்கிறது. அதுவே ஸத்து. அதுவே ஆன்மா. நீயும் அதுவே (தத்-த்வ-மஸி).

'ஒருவனைக் கண்ணைக் கட்டிக் காட்டில் திருடர் கொண்டு போய் விடுவது போல், முன்செய்த கருமங்கள் நமது ஞானத்தை மறைத்து ஆசைகளாகிய மோகக் கட்டுகளால் கண்ணைக் கட்டி, உலகம் என்ற காட்டில் நம்மைக் கொண்டுவந்து விட்டிருக்கின்றன. நாம் இருக்கும் இடம் எது, நம்முடைய ஊருக்குத் திரும்பிப் போக வழி எது என்றறியாமல் பயத்திலும் மயக்கத்திலும் கிடக்கிறோம். தகுந்த ஆசிரியன் கிடைத்துக் கட்டுகளை அவிழ்த்தால் கண்கள் திறந்து, வழிதேடி, ஊர்போய்ச் சேரலாம். இல்லாவிடில் எந்த முயற்சியும் பயன்தராது'.

ஏழாவது அத்தியாயத்தில் நாரதருக்கு ஸநத்குமாரர் பூமாவித்தையை உபதேசித்த வரலாறு கூறப்படுகிறது. நாரதர் ஸநத்குமாரரை யணுகி ஆத்மஞான உபதேசம் வேண்டினார். "உமக்கு ஏற்கெனவே என்ன தெரியுமோ, அதைச் சொல்லும்; அதன்மேல் உபதேசிப்போம்'' என்றார் ஸநத்குமாரர். நாரதர் "ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வண

வேதம், இதிகாச புராணங்கள், கர்மங்கள், மந்திரங்கள், கணிதம், ஜோதிஷம், கால அளவு, வியாகரணம், காவியம், அலங்காரம், பூதநூல், ஆயுள்நூல், வான சாஸ்திரம், நாட்டியம், ஸங்கீதம் இன்னும் எத்தனையோ கலைகள் படித்திருக்கிறேன். எனினும் ஆத்மாவைப் பற்றி அறியவில்லை. ஆத்மஞானம் அடைந்தால் தான் துக்கந் தீரும் என்று கேட்டிருக்கிறேன். ஆகையால் அந்த ஞானத்தை நாடுகிறேன் '' என்றார். ஸநத்குமாரர், '' நீர் படித்தவை எல்லாம் வெறும் பெயர்களைப் பற்றினவையே. பெயரை விட மேலானது ஒன்று உண்டு. அதுவே மெய்ப்பொருள் '' என்று உப தேசத்தை ஆரம்பித்தார். '' எது (பூமா) அளவு கடந்ததோ அதுவே சுகம்; அல்பத்தில் சுகமில்லை. அளவு கடந்ததைத் தெரிந்துகொள்ளவேண்டும். எங்கு வேறொன்றைக் காண்பதில்லையோ, வேறொன்றைக் கேட்பதில்லையோ வேறொன்றை அறிவதில்லையோ அது பூமா. அது அழிவற்றது. அதுவே ஆத்மா. ஆத்மாவிலேயே இன்பமும், ஆத்மாவிலேயே விளையாட்டும், ஆத்மாவிலேயே கூடி மகிழ்தலும், ஆத்மாவிலேயே ஆனந்தமும் உடையவன் (ஸ்வராட்) தன்னைத் தானே ஆள்பவன் ஆகிறான். ஆகாரம் சுத்தமானால் அந்தக்கரணம் சுத்தமாகும். அந்தக்கரணம் சுத்தமானால் கடவுளின் நினைவு நிலைபெறும். நினைவு நிலைபெற்றால் எல்லாக் கட்டுகளும் தளர்ந்து போம்.''

எட்டாவது அத்தியாயத்தில் தஹரவித்தை உபதேசிக்கப்படுகிறது. பேரம்பலத்தில் உள்ளதெல்லாம் (தஹர ஆகாசத்தில்) சிற்றம்பலத்தில் அடக்கம். ஆனால் அவித்தையால் அறிவிழந்த மக்கள் தமது உள்ளத்திலேயே உள்ள இப்பொக்கிஷத்தை உணர்வதில்லை. எங்ஙனம் பொற்குவியல் புதைத்து வைக்கப்பட்ட இடத்தின் மேல் அடிக்கடி நடமாடுபவர்களாயினும் (அது இருப்பதை) அறியாதவர்கள் அதைக் கண்டுகொள்ள மாட்டார்களோ அங்ஙனமே இம்மக்கள் அனைவரும் நாள்தோறும் இந்தப் பிரம்மலோகத்துக்குச் செல்லுபவர்களாயிருந்தும் அதைக் கண்டுகொள்வதில்லை என்பது விளக்கப்படுகின்றது.

முடிவில் இந்திரனையும் விரோசனனையும் பற்றிய கதையால் ஸாதகர்களின் பக்குவத்துக்குத் தகுந்தபடி உபதேசம் பயன்தருகிறதென்பது விளக்கப்படுகிறது. விரோசனன் தன் அறிவுக்குத் தகுந்தபடி ' சரீரமே ஆத்மா, அதுவே பூஜிக்கத்தக்கது. அதைச் சரியாகப் போற்றி வளர்த்தால் எல்லாச் சுகமும் அடைவோம். தானம், தருமம், வேள்வி எதுவும் அவசியமில்லை ' என்று தீர்மானமடைந்தான். இந்திரன் படிப்படியாக எண்ணங்

களை ஆராய்ந்து உண்மையறிவு பெற்றான். அவன் அறிந்தது என்னவெனின் : "இந்தத் தேகம் அழியும் பொருள். அது மரணத்தில் அகப்பட்டுக் கிடக்கும் வஸ்து. மரணமற்றதும் சரீரமற்றதுமான ஆத்மா, தேகத்தில் மறைந்து வசிக்கிறது. அது தேகத்தினுள் வசிக்கும்போது, தானே தேகமாகவும், தேகமே தானாகவும் மயங்கி, தேகத்தின் இன்ப துன்பங்களுள் கட்டுண்டு கிடக்கிறது. சூரியனைக் கண்ட ஜலம் அருவமாகி, அதாவது உருவமற்றதாகி மேல் நோக்கிச் செல்லுவது போல், பரஞ்ஜோதியின் ஒளிபட்டதும் இந்த ஆத்மாவும் கிளம்பிப் பரஞ்ஜோதியுடன் கலந்து ஆனந்த நிலையை அடையும்."

ஜீவன்முக்தன் இவ்வுலகில் வாழ்பவனாயினும் ஆன்ம உலகிலேயே வாழ்கிறான் என்று விளக்கி உபநிஷத்து முடிவடைகிறது. அவன் வாழ்க்கை பிறரும் ஆன்ம உலகிற்கு ஏறுவதற்கு வைத்த நூலேணிபோல் இருக்கிறது. அவதார புருஷராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்க்கை இதற்கு அரிய சான்றாகவும் அவருடைய உபதேசமொழிகள் உபநிஷத்தின் உண்மைகளுக்குத் தெளிந்த வியாக்கியானமாகவும் விளங்குகின்றன. 'ஶ்யாமாச் சபளம் ப்ரபத்யே ஶபளாச்ச்யாமம்' என்ற உபநிஷத்தின் கருத்தையே ஸ்ரீ ராமகிருஷ்ணர் தன் ஸமாதி அனுபவத்தை விளக்கும்போது "லீலையிலிருந்து நித்தியத்துக்கும், நித்தியத்திலிருந்து லீலைக்கும் ஏறவும் இறங்கவும் செய்கிறேன்" என்று கூறியருளினார். இதுவே ஆன்ம வாழ்க்கையின் லக்ஷியம்.

இங்ஙனம் சாந்தோக்கியோபநிஷத்துக்கு ஸ்ரீராமகிருஷ்ண தீபம் எனும் உரைமுற்றும்.

ॐ

# ॥ बृहदारण्यकोपनिषत् ॥

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते । पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

## ॥ ப்ருஹதாரண்யகோபநிஷத் ॥

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே। பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஶிஷ்யதே ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

---

## பிருஹதாரணியகோபநிஷத்து

ஓம் அது பூர்ணம். இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதமாயுள்ளது. பூர்ணத்தினின்று பூர்ணத்தை யெடுத்தும் பூர்ணமே மிஞ்சி நிற்கின்றது.

முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

---

**உபநிஷத்தின் பெயருந் தொடர்பும்**—இது பெரியதாயிருப்பதாலும் பல விஷயங்களைத் தன்னுள் அடங்கிக்கொண்டிருப்பதாலும் அரணியத்தில் படிக்கப்படுவதாலும் பிருஹதாரணியகோபநிஷத்து எனப் பெயர் பெற்றது. இது சுக்ல யஜுர் வேதம் சதபதப்பிராம்மணத்தைச் சேர்ந்தது. சதபதப் பிராம்மணத்தில் இரண்டு சாகைகள் (கிளைகள்) உண்டு; ஒன்று காண்வ சாகை, மற்றொன்று மாத்த்யந்தினசாகை. இந்த உபநிஷத்துக் காண்வ சாகையில் 17-வது கண்டத்தில் 3–8 அத்தியாயங்களாகவும் மாத்த்யந்தின சாகையில் 14-வது கண்டத்தில் 4–9 அத்தியாயங்களாகவும் அமைந்திருக்கிறது. சங்கராசாரியர் காண்வ சாகைப்பாடத்தைத் தழுவிப் பாஷ்யம் எழுதியிருக்கிறார்.

## ॥ प्रथमोऽध्याय: ॥

अथात: पवमानानामेवाभ्यारोह: स वै खलु प्रस्तोता साम प्रस्तौति स यत्र प्रस्तुयात्तदेतानि जपेत्। असतो मा सद्गमय तमसो मा ज्योतिर्गमय मृत्योर्मामृतं गमयेति ॥ ३.२८ ॥

## ப்ரதமோऽத்த்யாய: ॥

அதாத: பவமாநாநா-மேவாப்ப்யாரோஹ: ஸ வை கலு ப்ரஸ்தோதா ஸாம ப்ரஸ்தௌதி ஸ யத்ர ப்ரஸ்துயாத் ததேதானி ஜபேத் । அஸதோ மா ஸத்கமய, தமஸோ மா ஜ்யோதிர்-கமய, ம்ருத்யோர்-மாம்ருதங் கமயேதி ॥ 3.28 ॥

---

## முதல் அத்தியாயம்

3.28. இப்போது பவமான மந்திரங்களின் ஜபம் (கூறப் படும்). ப்ரஸ்தோதா என்பவர் ஸாம கானத்தால் ஸ்தோத்திரம் செய்கிறார். அவர் எங்கு ஸ்தோத்திரம் செய்யவேண்டுமோ அங்கு இவற்றை ஜபிக்கட்டும். ''(அஸத்தினின்று) என்னை ஸத்துக்கு அழைத்துச் செல். இருளினின்று என்னை ஒளிக்கு அழைத்துச் செல் ; சாவினின்று என்னைச் சாகாமைக்கு அழைத்துக் செல்.''

---

இதன் ஆறு அத்தியாயங்களில் முதலிரண்டும் மதுகாண்டம் என்றும், நடு இரண்டும் யாஜ்ஞவல்கிய காண்டம் அல்லது முனிகாண்டம் என்றும், கடை இரண்டும் கிலகாண்டம் என்றும் கூறப்படும். ஒவ்வொரு காண்டத் திலும் உபதேசம், உபபத்தி (அதின் விளக்கம்), உபாசனை இம்மூன்றும் அடங்கும்.

3.28. அஸதோ மா ஸத் கமய—இந்த மந்திரம் இதை ஜபிப்ப வனுக்கு மேன்மையைத் தருவதால் 'அப்ப்யாரோஹம்' எனப்படும். இது யாகத்தில் பாடப்பட்டால் யஜமானனுக்கு விரும்பிய பலனை அளிக்கும். யாகம் இல்லாமல் இது மட்டும் ஜபம் செய்யப்பட்டாலும் உயர்ந்த நன்மை யைத் தரும்.

அஸத்—தீமை ; தீய எண்ணங்கள். (தமஸ்)—இருள் ; அஜ்ஞான இருள்.

(ஜோதி) ஒளி—ஞான ஒளி. தீமையும் அறியாமையுமே சாவு (ம்ருத்யு). நன்மையும் ஞானமுமே சாகாமை (அம்ருதம்). முதலிரண்டு மந்திரங் களின் கருத்தையே மூன்றாவது மந்திரம் விவரிக்கின்றது. ('ம்ருத்யோர் மா அம்ருதங் கமய' என்று.)

आत्मैवेदमग्र आसीत् । पुरुषविधः ॥ ४.१ ॥

सहैतावानास यथा स्त्रीपुमांसौ संपरिष्वक्तौ स इममेवात्मानं द्वेधा पातयात्ततः पतिश्च पत्नी चाभवतां तस्मादिदमर्धबृगलमिव स्व इति ह स्माह याज्ञवल्क्यः तस्मादयमाकाशः स्त्रिया पूर्यत एव तां समभवत् ततो मनुष्या अजायन्त ॥ ४.३ ॥

ஆத்மைவேத-மக்ர ஆஸீத் புருஷவிதः ॥ 4.1 ॥

ஸ ஹைதாவானாஸ யதா ஸ்த்ரீபுமாம்ஸௌ ஸம்பரிஷ்வக்தௌ, ஸ இமமேவாத்மானம் த்வேதா பாதயாத் ததः பதிஶ்ச பத்னீஶ்சாபவதாம், தஸ்மாதித-மர்த்தப்ருகளமிவ ஸ்வ இதி ஹ ஸ்மாஹ யாஜ்ஞவல்க்யः । தஸ்மா-தயமாகாஶः ஸ்த்ரியா பூர்யத ஏவ தாம் ஸமபவத் ததோ மனுஷ்யா அஜாயந்த ॥ 4.3 ॥

---

4.1. ஆதியில் இது (விராட்) புருஷ வடிவான ஆத்மாவாகவே இருந்தது.

4.3. அவ்விராட் புருஷன் பெண்ணும் ஆணும் இறுகத் தழுவியது போன்ற உருவினனாயினன். பின் தனது சரீரத்தை இரண்டாகப் பிரித்துக் கொண்டான். அதினின்று பதி பத்னிகள் தோன்றினார்கள். ஆகையால் இது ஒரு கடலையின் பாதி போன்றது என்று கூறினார் யாக்ஞவல்கியர். இவ்வுலகம் ஸ்திரீயினால் பூர்த்தியாகிறது. அவளுடன் கூடியதால் மனிதர்கள் பிறந்தார்கள்.

---

4.1. ஸ்தூல ஸூக்ஷ்ம காரண நிலையில், ஈசுவரனுக்குத் தனித் தனியே விராட், ஹிரண்யகர்ப்பன், ஈசுவரன் என்று பெயர்; ஜீவனுக்கு வைசுவாநரன், தைஜஸன், ப்ராஜ்ஞன் என்று பெயர்.

விராட் புருஷனுடைய ஸ்வரூபம் புருஷ ஸூக்தத்தில் வர்ணிக்கப் பட்டிருக்கிறது.

4.3. ஈசுவரனும் அவனது சக்தியும், சூரியனும் ஒளியும் போலப் பிரிக்கமுடியாதது. இதைத்தான் 'அர்த்தநாரீசுவர' வடிவம் குறிக்கும். ஒரு கடலையின் இரண்டு பருப்பும் கூடியிருந்தால் தான் முளைக்கும்; அப்போது தான் அதற்குப் பூரணத்வம் உண்டு.

स यो त एकैकमुपास्ते न स वेद अकृत्स्नो ह्येषोऽत एकैकेन भवत्यात्मेत्येवोपासीतात्र ह्येते सर्व एकं भवन्ति। तदेतत्पदनीयमस्य सर्वस्य यदयमात्मानेन ह्येतत्सर्वं वेद। यथा ह वै पदेनानुविंदेदेवं कीर्तिं श्लोकं विंदते य एवं वेद ॥ ४.७ ॥

तदेतत्प्रेयः पुत्रात्प्रेयो वित्तात्प्रेयोऽन्यस्मात्सर्वस्मादन्तरतरं यदयमात्मा। आत्मानमेव प्रियमुपासीत ॥ ४.८ ॥

ஸ யோத ஏகைக-முபாஸ்தே ந ஸ வேத, அக்ருத்ஸ்னோ ஹ்யே-ஷோऽத ஏகைகேன பவத்-யாத்மேத்யேவோபாஸீதாத்ர-ஹ்யேதே ஸர்வ ஏகம் பவந்தி, ததேதத்-பதநீயமஸ்ய ஸர்வஸ்ய, யதயமாத்-மானேன ஹ்யேதத் ஸர்வம் வேத। யதா ஹ வை பதேனானுவிந்தே-தேவம் கீர்த்திம்ஶ்லோகம் விந்ததே, ய ஏவம் வேத ॥ 4.7 ॥

ததேதத் ப்ரேய: புத்ராத் ப்ரேயோ, வித்தாத் ப்ரேயோऽன்யஸ்-மாத் ஸர்வஸ்மா-தந்தரதரம், யதய-மாத்மா। ஆத்மான-மேவ ப்ரியமுபாஸீத ॥ 4.8 ॥

---

4.7. எவனொருவன் இவற்றை ஒவ்வொன்றாகப் பிரித்து உபாசிக்கின்றானோ அவன் அறிந்தவனல்ல. ஒவ்வொன்றாய்ப்பிரிப் பதால் இது பூர்ணத்துவ மற்றதாகிறது. ஒரே ஆத்மாவாகத்தான் உபாசிக்கவேண்டும். அப்போது (ஆத்மாவாகிய) ஒன்றில் அனைத் தும் ஒன்றுபடுகின்றது. இது எல்லாவற்றிற்கும் எது ஆத்மாவோ அது அடையாளங்களால் உணரப்படவேண்டும். இதனால் ஒருவன் இது எல்லாவற்றையும் உணர்ந்தவனாகிறான். எங்ஙனம் அடிச் சுவடுகளின் அடையாளத்தால் (ஒருவரைப்) பின்பற்றியடை கிறாரோ அங்ஙனமே (உணரவேண்டும்). எவன் அங்ஙனம் உணர்ந்தவனோ அவன் புகழையும் முக்தியையும் எய்துகிறான்.

4.8. இந்த ஆத்மா புத்திரனைவிடப் பிரியமானது; செல் வத்தைவிடப் பிரியமானது; மற்றும் எல்லாவற்றையும் விடப் பிரிய மானது. எல்லாவற்றையும் விடச் சமீபமானது. ஆத்மாவையே பிரியமானதாக உபாசிக்கவேண்டும்.

---

4.7. விராட் புருஷன் தியானத்திலாழ்ந்து முன் கல்பங்களில் இருந்த படி உலகைச் சிருஷ்டித்தான். எந்தப் பரமாத்ம சக்தியால் விராட் புருஷன் உலகைச் சிருஷ்டித்தானோ அதே ஆத்ம சக்தி சிருஷ்டிக்கப்பட்ட அனைத் துள்ளும் உறைகின்றது. அதை யறிய வேண்டும்.

ब्रह्म वा इदमग्र आसीत्तदात्मानमेवावेदहं ब्रह्मास्मीति तस्मात्तत्सर्वमभवत् तद्यो यो देवानां प्रत्यबुध्यत स एव तदभवत्तथर्षीणां तथा मनुष्याणां तद्धैतत्पश्यन्नृषिर्वामदेवः प्रतिपेदेऽहं मनुरभवꣳ सूर्यश्चेति तदिदमप्येतर्हि य एवं वेदाहं

**ப்ரஹ்ம வா இதமக்ர ஆஸீத் ததாத்மான-மேவாவேதஹம் ப்ரஹ்மாஸ்மீதி, தஸ்மாத் தத் ஸர்வமபவத், தத்யோ யோ தேவானும் ப்ரத்யபுத்த்யத, ஸ ஏவ ததபவத் ததர்ஷீணும், ததா மனுஷ்யாணும் தத்தைதத் பஶ்யன் ருஷிர்-வாமதேவ: ப்ரதிபேதேऽஹம் மனுரபவꣳ ஸூர்யஶ்சேதி, ததிதமப்யேதர்-ஹி ய ஏவம் வேதாஹம் ப்ரஹ்மாஸ்மீதி, ஸ இதꣳ ஸர்வம் பவதி, தஸ்ய ஹ ந தேவாஶ்ச நாபூத்யா ஈஶதே, ஆத்மாஹ்யேஷாꣳ ஸ பவத்-யத யோऽன்யாம் தேவதாமுபாஸ்தே**

---

**4.10.** இது ஆதியில் பிரம்மமாகவே இருந்தது. 'நான் பிரம்மமாக இருக்கிறேன்' என்று இது தன்னைத்தானே உணர்ந்தது. அதினின்று இது அனைத்துமாக ஆயிற்று. தேவர்களில் எவரெவர் இதை உணர்ந்தனரோ அவர்கள் அதுவே ஆயினர்; அங்ஙனமே ரிஷிகளிலும் மனிதர்களிலும். இதைக் கண்டறிந்த ரிஷி வாமதேவர், "நானே மனுவாயிருந்தேன், சூரியனுயிருந்தேன்" என்று கூறினர். இப்போதும் எவனொருவன் இவ்வாறே (அஹம் பிரஹ்மாஸ்மி) 'நான் பிரம்மமாயிருக்கிறேன்' என்று அறிகிருனே அவன் இது அனைத்துமாக ஆகிருன். அவனுடைய பெருமையைக் குறைவு படுத்த தேவர்களாலும் இயலாது; அவன் அவர்களுக்குங்கூட ஆத்மாவன்றோ? ஆனல் எவனொருவன்

---

4.10. **அவனுடைய பெருமையைக் குறைவுபடுத்தத் தேவர்களாலும் இயலாது** :—(ஸேயம் ப்ரஹ்மவித்யயா ஸர்வபாவாபத்திராஸீன் மஹதாம் தேவாதீனும் வீர்யாதிஶயாத் । நேதானீமைதம்-யுகீனும் விஶேஷதோ மனுஷ்யாணும் அல்பவீர்யத்வாதிதி ஸ்யாத் கஸ்யசித் புத்தி: தத் வ்யுத்தாபனய ஆஹ । ந ஹி மஹாவீர்யேஷு வாமதேவாதிஷு ஹீனவீர்யேஷு வா வார்த்தமானிகேஷு மனுஷ்யேஷு ப்ரஹ்மணே விஶேஷஸ்-தத்விஜ்ஞானஸ்ய வாஸ்தி ।) இந்தப் பிரம்ம வித்தையால் அனைத்துமாயிருக்கும் பாவனை, வீரியத்தின் மிகுதியால் மகிமை பொருந்திய தேவர்களுக்கு அமைந்தது. இந்த யுகத்தில் உள்ளவர்களுக்கு, அதுவும் முக்கியமாய் மனிதர்களுக்கு வீரியக் குறைவால் அது இயலாது என்று எவருக்காவது எண்ணம் ஏற்படலாம். அதைப் போக்குவதற்காக இது கூறப்படுகிறது. மகாவீரியம் பொருந்திய வாமதேவர் முதலிய ரிஷிகளுக்கும் வீரியங்

ब्रह्मास्मीति स इदꣳ सर्वं भवति तस्य ह न देवाश्च नाभूत्या ईशते, आत्मा ह्येषाꣳ स भवत्यथ योऽन्यां देवतामुपास्तेऽन्योसौ अन्योऽहमस्मीति न स वेद यथा पशुरेवꣳ स देवानाम् ॥ ४.१० ॥

॥ इति प्रथमोऽध्यायः ॥

## ॥ द्वितीयोऽध्यायः ॥

दृप्तबालाकिर्हानूचानो गार्ग्य आस स होवाचाजातशत्रुं काश्यं ब्रह्म ते ब्रवाणीति ॥ १.१ ॥

ऽன்யோஸௌ, அன்யோऽஹமஸ்மீதி, ந ஸ வேத; யதா பஶுரேவꣳ ஸ தேவானாம் ॥ 4.10 ॥

॥ இதி ப்ரதமோऽத்த்யாய: ॥

## ॥ த்விதீயோऽத்த்யாய : ॥

த்ருப்தபாலாகிர்-ஹானூசானோ கார்க்ய ஆஸ, ஸ ஹோவாசா-ஜாதஶத்ரும் காஶ்யம் ப்ரஹ்ம தே ப்ரவாணீதி ॥ 1.1 ॥

---

வேறான தேவதையை உபாசிக்கின்றானோ—இது வேறு நான் வேறு என்று—அவன் அறியாதவன் அவன் தேவர்களுக்குப் பசுவைப் போன்றவன்.

முதல் அத்தியாயம் முற்றும்.

## இரண்டாவது அத்தியாயம்

1·1. (வேதங்களின் கருத்துக்களை விளக்குந் திறமையால்) பெருமிதமடைந்த ஒருவர் இருந்தார். அவர் பலாகியின் புத்திரர், கார்க்கியர். அவர் காசி ராஜனான அஜாதசத்துருவிடம் பிரம்ம ஞானத்தை உபதேசிப்பதாய்க் கூறினார்.

---

குறைந்த தற்கால மனிதர்களுக்கும் பிரம்மத்தைப் பற்றிய வரை வேற்றுமையோ பிரம்ம ஞானத்தில் வேற்றுமையோ இல்லை (சங்.)

பி. சூ. 1.1.30; 4.1.3; 4.4.4.

स होवाच गार्ग्यो य एवासावादित्ये पुरुष एतमेवाह
ब्रह्मोपास इति ॥ १.२ ॥

स होवाचाजातशत्रुरेतावन्नू ३ इत्येतावद्धीति नैतावता
विदितं भवतीति स होवाच गार्ग्य उपत्वायानीति ॥ १.१४ ॥

स होवाचाजातशत्रुः प्रतिलोमं चैतद्यद्ब्राह्मणः क्षत्रियमुपेयाद्ब्रह्म
मे वक्ष्यतीति व्येव त्वा ज्ञपयिष्यामीति तं पाणावादायोत्तस्थौ

ஸ ஹோவாச கார்க்யோ ய ஏவாஸாவாதித்யே புருஷ ஏதமேவாஹம் ப்ரஹ்மோபாஸ இதி ॥ 1.2 ॥

ஸ ஹோவாசாஜாதசத்ரு-ரேதா வந்நூ3 இத்யேதாவத்தீதி, நைதாவதா விதிதம் பவதீதி, ஸ ஹோவாச கார்க்ய உபத்வாயாநீதி ॥ 1.14 ॥

ஸ ஹோவாசாஜாதசத்ரு:, ப்ரதிலோமஞ்சைதத் யத் ப்ராஹ்மண: க்ஷத்ரியமுபேயாத்-ப்ரஹ்ம மே வக்ஷ்யதீதி, வ்யேவ த்வா ஜ்ஞபயிஷ்யாமீதி, தம் பாணாவாதாயோத்தஸ்தௌ, தௌ ஹ

---

1.2. கார்க்கியர் "சூரியனிடம் எந்தப் புருஷன் இருக்கிருனே அவனைப் பிரம்மமாய் உபாசிக்கின்றேன்" என்ருர். (பின் கிரமமாகச் சந்திரன், மின்னொளி, ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், முதலிய பிரதீகங்களில் பிரம்மோபாஸனையைக் கூறினர். முடிவாக "ஹிரண்யகர்ப்ப ஆத்மாவில் எந்தப் புருஷன் இருக்கிருனே அவனைப் பிரம்மமாய் உபாசிக்கின்றேன்" என்ருர்.)

1.14. அவரை நோக்கி, "இவ்வளவு தானு?" என்ருர் அஜாதசத்துரு. "இவ்வளவு தான்" என்ருர். "இவ்வளவால் அறிய வேண்டியது அறியப்பட்டதாகாது." "அங்ஙனமாயின் உம்மைக் குருவாயடைகிறேன்" என்ருர் கார்க்கியர்.

1.15. அவரை நோக்கி அஜாதசத்துரு "இது முறை மாறுபட்டதாகும்—இவன் பிரம்மத்தை உபதேசிப்பான் என்று ஒரு க்ஷத்திரியனைப் பிராம்மணன் அடைவது. எனினும் உமக்குத் தெளிவுபடக் கூறுகிறேன்" என்று அவர் கையைப் பிடித்துக்கொண்டு எழுந்தார். அவர்கள் இருவரும் தூங்கிக்கொண்டிருந்த ஒரு

तौ ह पुरुषꣳ सुप्तमाजग्मतुः। तं पाणिनापेषं बोधयांचकार सहोत्तस्थौ ॥ १.१५ ॥

स होवाचाजातशत्रुर्यत्रैष एतत्सुप्तोऽभूद्य एष विज्ञानमयः पुरुषः क्वैष तदाभूत्कुत एतदागादिति तदु ह न मेने गार्ग्यः ॥ १.१६ ॥

स होवाचाजातशत्रुर्यत्रैष एतत्सुप्तोऽभूद्य एष विज्ञानमयः पुरुषस्तदेषां प्राणानां विज्ञानेन विज्ञानमादाय य एषोऽन्तर्हृदय

புருஷꣳ ஸுப்த-மாஜக்மது: தம் பாணிநாபேஷம் போதயாஞ் சகார, ஸ ஹோத்தஸ்த்தள ॥ 1.15 ॥

ஸ ஹோவாசாஜாதஶத்ருர்-யத்ரைஷ ஏதத் ஸுப்தோऽபூத் ய ஏஷ விஜ்ஜானமய: புருஷ:, க்வைஷ ததாபூத் குத ஏத-தாகா-திதி, தது ஹ ந மேனே கார்க்ய: । 1.16 ॥

ஸ ஹோர்வாசாஜாதஶத்ருர்-யத்ரைஷ ஏதத் ஸுப்தோऽபூத் ய ஏஷ விஜ்ஜானமய: புருஷஸ்-ததேஷாம் ப்ராணானாம் விஜ்ஞா-னேன விஜ்ஞான-மாதாய, ய ஏஷோऽந்தர்-ஹ்ருதய ஆகாஶஸ்-

---

மனிதனை வந்தடைந்தனர். (அஜாதசத்துரு) அவனைத் தட்டி யெழுப்ப அவன் எழுந்தான்.

1.16. "இந்த விஞ்ஞான மயமான புருஷன் தூக்கத்தில் ஆழ்ந்தபோது எங்கே இருந்தான்? எங்கிருந்து மீண்டும் வந் தான்?" என்று அஜாதசத்துரு கேட்டார். கார்க்கியர் அதை அறிய வில்லை.

1.17. அஜாதசத்துரு கூறுவார்: "இந்த விஞ்ஞான மயமான புருஷன் தூக்க நிலையில் தன் விஞ்ஞான சக்தியால் இந்திரியங் களின் சக்திகளைக் கவர்ந்துகொண்டு, இருதய ஆகாசத்தில் அந்த ராத்மாவிடம் ஒடுங்குகிறான். அவற்றை (இந்திரிய சக்திகளை) எப்

---

1.17. ஒ—ஸதா ஸோம்ய ததா ஸம்பன்னோ பவதி. சா. 6.8.1.

आकाशस्तस्मिञ्छेते तानि यदा गृह्णात्यथ हैतत्पुरुषः स्वपिति नाम तद्गृहीत एव प्राणो भवति गृहीता वाग्गृहीतं चक्षुर्गृहीतँ श्रोत्रं गृहीतं मनः ॥ १.१७ ॥

**தஸ்மின் சேதே; தானி யதா க்ருஹ்ணத்யத ஹைதத் புருஷ: ஸ்வபிதி நாம, தத் க்ருஹீத ஏவ ப்ராணோ பவதி, க்ருஹீதா வாக்‌க்ருஹீதஞ் சக்ஷுர்-க்ருஹீதஂ ஶ்ரோத்ரங் க்ருஹீதம் மன: ॥ 1.17 ॥**

---

**போது உட்கவர்கின்றானோ அப்போதே இப்புருஷன் தூங்குகிறான் என்பது பிரசித்தம். அப்போது கிராணேந்திரியம் (முகரும் சக்தி) உட்கவரப்படுகின்றது; வாக்கு உட்கவரப்படுகின்றது; கண் உட்கவரப்படுகின்றது; காது உட்கவரப்படுகின்றது; மனதும் உட்கவரப்படுகின்றது.**

---

ஸ்வப்ன காலத்தில் பிராணன் உட்கவரப்படுகின்றது. 'கிராணேந்திரியம்' என்றதால் பிராணன் குறிக்கப்பட்டது.

1.20. ஒ—நான் அனைத்துக்கும் பிறப்பிடம். என்னிடமிருந்தே அனைத்தும் பிரவிருத்தித்து இயங்குகின்றது. (கீ. 10.8).

ஒ—மு. 1.1.7; 2.1.1.

ஜீவலோகத்தில் அனாதியான என்னுடைய அம்சமே ஜீவனாகத் தோன்றி அதனதன் இயல்பில் நிற்கும் மனதுடன் கூடிய ஆறு இந்திரியங்களையும் இழுக்கிறது (கீ. 15.7).

ஈசுவராம்சமே ஜீவன் என்பதற்குப் பின்வருங் கதை ஸம்பிரதாயமாய்ச் சொல்லப்படுகிறது:—ஒரு அரசகுமாரன் பிறந்தது முதல் பெற்றோர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு ஒரு வேடன் வீட்டில் வளர்ந்து வந்தான். தான் அரசகுமாரன் என்று அறியாமல் அவன் பெரியவனான பின்னுந் தன்னை வேடன் மகன் என்றே எண்ணி வேடத்தொழிலையே மேற்கொண்டான். அவனுடைய பிறப்பின் உண்மையை அறிந்த ஒரு பெரியவர் அவனைச் சந்தித்து அவன் யார் என்றும் அவன் எப்படி அதிருஷ்ட வசமாக வேடன் வீட்டில் வளர நேரிட்டதென்றும் விளக்கிக் கூறினார். அதன் மேல் அவன் தன் முன்னோர்களுடைய அரசுரிமையை நாடி மேற்கொண்டு அரசகுமாரனாக விளங்கினான்.

அதே மாதிரி (நெருப்பினிடம் தோன்றிய நெருப்புப் பொரிபோல்) ஈசுவராம்சமாய்த் தோன்றிய இந்த ஜீவன் ஈசுவரனை விட்டுப் பிரிந்து, இந்த உலகமாகிய காட்டில் உடலாகிய வேடன் வீட்டில் புகுந்து, தன்னை உடலே என்று நினைத்து, 'நான் பருத்தவன், நான் இளைத்தவன், நான்

स यथोर्णनाभिस्तन्तुनोच्चरेद्यथाग्नेः क्षुद्रा विस्फुलिंगा व्युच्चरन्त्येवमेवास्मादात्मनः सर्वे प्राणाः सर्वे लोकाः सर्वे देवाः सर्वाणि भूतानि व्युच्चरन्ति तस्योपनिषत्सत्यस्य सत्यमिति प्राणा वै सत्यं तेषामेष सत्यम् ॥ १.२० ॥

ஸ யதோர்ண நாபிஸ்-தந்துனோச்சரேத் யதாக்னே: க்ஷுத்ரா விஸ்ப்புலிங்கா வ்யுச்சரந்த்-யேவமேவாஸ்மா-தாத்மன: ஸர்வே ப்ராணா: ஸர்வே லோகா: ஸர்வே தேவா: ஸர்வாணி பூதானி வ்யுச்சரந்தி, தஸ்யோபநிஷத் ஸத்யஸ்ய ஸத்யமிதி, ப்ராணா வை ஸத்யம் தேஷா-மேஷ ஸத்யம் ॥ 1.20 ॥

---

1.20. சிலந்திப்பூச்சி (தன்னிடமிருந்துண்டான) நூலின் வழி எங்ஙனம் சஞ்சரிக்கிறதோ, நெருப்பிலிருந்து உண்டான சிறு பொறிகள் எங்ஙனம் சஞ்சரிக்கின்றனவோ (நெருப்பின் ஒளி யுடன்) அங்ஙனமே ஆத்மாவிடமிருந்து எல்லா இந்திரியங்களும், எல்லா உலகங்களும், எல்லாப் பொருட்களும் வெளிப்போந்து சஞ் சரிக்கின்றன; எல்லா தேவர்களும் (வெளிப்போந்து சஞ்சரிக்கின் றனர்). அதின் உபநிஷத்து (ஸத்யஸ்ய ஸத்யம்) ஸத்தியத்துக்கு ஸத்தியம். பிராணன்கள் ஸத்தியம். அவற்றிற்கு இது ஸத் தியம்.

---

சுகப்படுகிறேன், நான் துக்கப்படுகிறேன்' என்று இவ்வாறாக எண்ணிக் கொண்டு தன் உண்மை நிலையுணராது வாழ்கிறான். இவன் தகுந்த குரு வைச் சந்திக்கும்போது அவர் இவன் உண்மை நிலையை விளக்கிக் காட்டு கிறார். அதன்மேல் அரசபுத்திரன் அரசுரிமையைப் பெற்று அதில் நிலைத் ததுபோல் இவன் ஈசுவராம்சம் என்பதை உணர்ந்து பிரம்மப் பதவியில் நிலைபெறுகிறான். (சங்.)

(அம்ஶாதி-ஶ்ருதி-ஸ்ம்ருதி-வாதாஶ்-சைகத்வார்த்தா ந து பேத-ப்ரதி-பாதகா:) சுருதிஸ்ம்ருதிகளில் ஜீவனை அம்சமாய்க் கூறியவிடத்தும் கருத்து ஏகத்துவமேயல்லாமல் பேதமன்று. (பரமாத்ம வ்யதிரேகேண ஸம் ஸாரீ நாம நான்யத் வஸ்த்-வந்தர-மஸ்தி) பரமாத்மாவினின்று பிரிதாக ஸம் ஸாரி என்று தனி வஸ்து ஒன்றும் இல்லை.

ஸத்யஸ்ய-ஸத்யம்:—பஞ்ச பூதங்கள் உலகிற்குக் காரணம் ஆகை யால் அது ஸத்தியம். பஞ்ச பூதங்களுக்குங் காரணம் பிரம்மம். ஆகை யால் அது ஸத்தியத்தின் ஸத்தியம். பொய்யாகிய உடம்பு மெய்யெனப்படு வது உள்ளே மெய்ப்பொருளிருத்தலால்.

பிராணன்கள் ஸத்தியம்:—பிராணன்கள் கருவிகரணங்களைக் குறிக்கும்.

द्वे वाव ब्रह्मणो रूपे मूर्तं चैवामूर्तं च मर्त्यं चामृतं च स्थितं च यच्च सच्च त्यच्च ॥ ३.१ ॥

तदेतन्मूर्तं यदन्यद्वायोश्चान्तरिक्षाच्च तन्मर्त्यमेतत्स्थितमेतत्सत्तस्यैतस्य मूर्तस्यैतस्य मर्त्यस्यैतस्य स्थितस्यैतस्य सत एष रसो य एष तपति सतो ह्येष रसः ॥ ३.२ ॥

த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே, மூர்த்தஞ் சைவாமூர்த்தஞ்ச, மர்த்யஞ் சாம்ருதஞ்ச ஸ்த்திதஞ்ச யச்ச, ஸச்ச த்யச்ச ॥ 3.1 ॥

ததேதன்-மூர்த்தம் யதன்யத் வாயோஶ்சாந்தரிக்ஷாச்ச, தன் மர்த்ய-மேதத் ஸ்த்தித-மேதத் ஸத்; தஸ்யைதஸ்ய மூர்த்தஸ்யைதஸ்ய மர்த்யஸ்யைதஸ்ய ஸ்த்திதஸ்ய ஏதஸ்ய ஸத ஏஷ ரஸோ ய ஏஷ தபதி ஸதோ ஹ்யேஷ ரஸ: ॥ 3.2 ॥

---

3.1. பிரம்மத்தின் நிலை இரண்டு என்பது தெளிவு—உருவம், அருவம் — அழிவுள்ளது, அழிவில்லாதது — ஓரிடத்துள்ளது, எங்கும் பரந்து நிற்பது—பிரத்தியக்ஷம், அபரோக்ஷம்.

3.2 (பஞ்சபூதங்களில்) வாயுவும் ஆகாயமும் அல்லாதவை உருவமுடையவன; இவை அழிவுடையன; இவை ஓரிடத்துள்ளன; இவை பிரத்தியக்ஷம். இங்ஙனம் உருவுடையதும், அழிவுடையதும், ஓரிடத்துள்ளதும் பிரத்தியக்ஷமானதுமான இவற்றின் ஸாரம் எவன் (வானத்தினின்று) எரிக்கின்ருனே அவன் (சூரியன்). பிரத்தியக்ஷத்தின் ஸாரம் அவன்.

---

3.1. பி. சூ. 3.2.22.

3.2. மூர்த்தம்—

(i) பிருதிவி, அப்பு, தேயு; இவற்றின் ஸாரம் சூரிய மண்டலம் என உபாசிக்க (ஆதிபௌதிகத்தில்).

(ii) சரீரம்; அதின் ஸாரம் கண் என உபாஸிக்க (அத்த்யாத்மத்தில்).

அமூர்த்தம்—

(iii) வாயு ஆகாசம்; இவற்றின் ஸாரம் ஆதித்தியபுருஷன் (அதிதைவம்).

(iv) பிராணன் : இதின் ஸாரம் ஆத்மா. (அத்தியாமத்தில்).

मैत्रेयीति होवाच याज्ञवल्क्य उद्यास्यन्वा अरेऽहमस्मात्स्था-
नादस्मि हन्त तेऽनया कात्यायन्यान्तं करवाणीति ॥ ४.१ ॥

सा होवाच मैत्रेयी यन्नु म इदं भगो सर्वा पृथिवी वित्तेन पूर्णा स्यात् कथं तेनामृता स्यामिति। नेति होवाच याज्ञवल्क्यः यथैवोपकरणवतां जीवितं तथैव ते जीवितꣲ स्यादमृतत्वस्य तु नाशास्ति वित्तेनेति ॥ ४.२ ॥

மைத்ரேயீதி ஹோவாச யாஜ்ஞவல்க்ய உத்யாஸ்யன் வா அரேऽஹ-மஸ்மாத் ஸ்த்தாநு-தஸ்மி, ஹந்த தேऽனயா காத்யாயன்யாऽந்தங் கரவாணீதி ॥ 4.1 ॥

ஸாஹோவாச மைத்ரேயீ யந்நு ம இதம் பகோ ஸர்வா ப்ருதிவீ வித்தேன பூர்ணு ஸ்யாத், கதம் தேநாம்ருதா-ஸ்யாமிதி। நேதி ஹோவாச யாஜ்ஞவல்க்ய:, யதைவோபகரணவதாஞ் ஜீவிதம் ததைவ தே ஜீவிதꣲ ஸ்யா-தம்ருதஸ்ய து நாஶாஸ்தி வித்தேனேதி ॥ 4.2 ॥

---

4.1. யாஜ்ஞவல்கியர் கூறியது: "பிரியே! மைத்ரேயீ! இந்த (கிருஹஸ்த) ஆசிரமத்திலிருந்து நான் மேலே (ஸந்நியாஸ ஆசிரமத்துக்குப்) போக விரும்புகிறேன். ஆகையால் உனக்கும் காத்தியாயனிக்கும் பாகம் பிரித்து வைத்து விடுகிறேன்."

4.2. மைத்திரேயி கூறியது: "நாதா! செல்வத்தால் நிறைந்த இந்த பூமி எல்லாம் எனக்கிருந்தாலும் அதனுல் நான் அமிருதத்வத்தை (சாகாநிலையை) அடைவேனு?" "இல்லைதான்" என்றுர் யாஜ்ஞவல்கியர். "போக சாதனங்களுடன் வாழ்பவர்களின் வாழ்க்கை எவ்வாறுனதோ அவ்வாறுனதாகவே இருக்கும் உன் வாழ்க்கையும். செல்வத்தைக் கொண்டு அமிருதத்வத்துக்கு ஆசைப்படவும் இயலாது."

---

4.2. (ந வித்தேன தர்ப்பணீயோ மனுஷ்ய:) மனிதன் ஒருபோதும் பொருளால் திருப்தியடையக் கூடியவனன்று. (கட. 1.27)

सा होवाच मैत्रैयी येनाहं नामृता स्यां किमहं तेन कुर्यां यदेव भगवान्वेद तदेव मे ब्रूहीति ॥ ४.३ ॥

स होवाच याज्ञवल्क्यः प्रिया बतारे नः सती प्रियं भाषस एह्यास्स्व व्याख्यास्यामि ते व्याचक्षणस्य तु मे निदिध्यासस्वेति ॥ ४.४ ॥

स होवाच न वा अरे पत्युः कामाय पतिः प्रियो भवति आत्मनस्तु कामाय पतिः प्रियो भवति। न वा अरे जायायै

**ஸா** ஹோவாச மைத்ரேயீ, யேனுஹம் நாம்ருதா ஸ்யாம், கிமஹம் தேன குர்யாம், யதேவ **ப**கவான் வேத ததேவ மே **ப்**ரூஹீதி ॥ 4.3 ॥

ஸ ஹோவாச யாஜ்ஞவல்க்ய:, ப்ரியா **ப**தாரே ந: ஸதீ, ப்ரியம் **ப்**ாஷஸ, ஏஹ்யாஸ்ஸ்வ வ்யாக்க்யாஸ்யாமி தே வ்யாசக்ஷணஸ்ய து மே நிதித்த்யாஸஸ்வேதி । 4.4 ॥

ஸ ஹோவாச, ந வா அரே பத்யு : காமாய பதி : ப்ரியோ **ப**வதி ஆத்மனஸ்து காமாய பதி: ப்ரியோ **ப**வதி, ந வா அரே ஜாயாயை காமாய ஜாயா ப்ரியா **ப**வந்த்-யாத்மனஸ்து காமாய ஜாயா ப்ரியா

---

4.3. "எதனுல் நான் அமிருதத்வத்தை அடைய முடியாதோ அதைக் கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன்? தாங்கள் எதை (அமிருதத்வத்துக்குச் சாதனமாக) அறிவீர்களோ அதையே எனக்குங் கூறியருளுதல் வேண்டும்" என்ருள் மைத்ரேயி.

4.4. யாஜ்ஞவல்கியர் கூறியதாவது: "எனக்கு நீ (எப்பொழுதும்) பிரியமுள்ளவளாகவே இருந்திருக்கிருய்; (இப்பொழுது) பிரியமானதைப் பேசுகிருய். வா, உட்கார், சொல்லுகிறேன். சொல்லும்போது அதைக் கவனித்து நிச்சயமாக அறி."

4.5. யாஜ்ஞவல்கியர் கூறுவார்: "கணவன் பொருட்டன்று, பிரியத்துக்குரியவனுகக் கணவன் ஆவது; ஆத்மாவின் பொருட்டே கணவன் பிரியத்துக்குரியவனுகிருன். மனைவி பொருட்டன்று,

---

4.5. கணவனைக் காதலிப்பது கணவனைக் காதலிக்க அல்ல; பரமாத்மாவைக் காதலிக்கப் பயில்வதற்காகவே. கணவன் மனைவியைக் காதலிப்பது இதற்காகவே. இதுவே காதலின் பயனும் உண்மைப் பொருளும் ஆகும். பெற்ற மக்களிடம் உள்ளங்கரைவதும் இதற்காகவே. மனைவி, கணவன், மக்கள், செல்வம், பசுக்கள் இவைகளினுள் நிற்கும்

कामाय जाया प्रिया भवत्यात्मनस्तु कामाय जाया प्रिया भवति । न वा अरे पुत्राणां कामाय...न वा अरे वित्तस्य कामाय... न वा अरे सर्वस्य कामाय सर्वं प्रियं भवत्यात्मनस्तु कामाय सर्वं प्रियं भवति आत्मा वा अरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यो मैत्रेय्यात्मनो वा अरे दर्शनेन श्रवणेन मत्या विज्ञानेनेदꣳ सर्वं विदितम् ॥ ४.५ ॥

பவதி। நவா அரே புத்ராணும் காமாய...ந வா அரே வித்தஸ்ய...ந வா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம் ப்ரியம் பவதி, ஆத்மனஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி; ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்த்யாஸிதவ்யோ, மைத்ரேய்யாத்மனோ வா அரே தர்ஶனேன ஶ்ரவணேன மத்யா விஜ்ஞானேனேதꣳ ஸர்வம் விதிதம் ॥ 4.5 ॥

---

பிரியத்துக்குரியவளாக மனைவி ஆவது; ஆத்மாவின் பொருட்டே மனைவி பிரியத்துக்குரியவளாகிருள். புத்திரர்களின் பொருட்டன்று, பிரியத்துக்குரியவர்களாகப் புத்திரர்கள் ஆவது; ஆத்மாவின் பொருட்டே புத்திரர்கள் பிரியத்துக்குரியவர்களாகிருர்கள். செல்வத்தின் பொருட்டன்று பிரியத்துக்குரியதாகச் செல்வம் ஆவது; ஆத்மாவின் பொருட்டே செல்வம் பிரியத்துக்குரியதாகிறது......... அனைத்தின் பொருட்டுமன்று பிரியத்துக்குரியதாக அனைத்தும் ஆவது; ஆத்மாவின் பொருட்டே அனைத்தும் பிரியத்துக்குரியதாகிறது. ஆகையால், ப்ரியே! ஆத்மாவே பார்க்கப்பட வேண்டும், கேட்கப்படவேண்டும், நினைக்கப்படவேண்டும், நிச்சயமாக அறியப்படவேண்டும். ப்ரியே மைத்ரேயி! ஆத்மாவின் தரிசனத்தாலும், கேள்வியினுலும், நினைவினுலும் நிச்சய அறிவினுலுமே இது எல்லாம் அறியப்பட்டதாகும்.

---

பரம்பொருளைக் கண்டு அதனுடன் கலந்து ஒன்ருவதற்கு உள்ளம் பொங்கவேண்டும். இந்தப் பயிற்சி பெறுவதே அவைகளைக் காதலித்து அனுபவித்து வாழ்வதன் உண்மைப் பயன். குலாபிமானம் ஜாதியபிமானமுங் கூடப் பாரமாத்மிக பக்திப் பயிற்சியே யாகும்.

எங்கும் பரவி நிற்கும் மெய்ப் பொருளைக் கண்டு காதலிக்கவே வேதம் ஓதுதல், கலைகள் கற்றல், பூததயை முதலியன அமைந்திருப்பதாய்க் கருதுவாய். பரம்பொருளை மறந்து, வேறெந்தப் பொருளைத் தேடி வாழ்ந்தாலும், அது ஏமாற்றத்தையே தரும்.'

—(உபநிஷதப்பலகணி : ராஜாஜி.)

ब्रह्म तं परादात् योऽन्यत्रात्मनो ब्रह्म वेद क्षत्रं तं परादाद् योऽन्यत्रात्मनः क्षत्रं वेद लोकास्तं परादुर्योऽन्यत्रात्मनो लोकान् वेद देवास्तं परादुर्योऽन्यत्रात्मनो देवान् वेद भूतानि तं परादुर्योऽन्यत्रात्मनो भूतानि वेद सर्वं तं परादाद् योन्यत्रात्मनः सर्वं वेद इदं ब्रह्म इदं क्षत्रमिमे लोका इमे देवा इमानि भूतानि इदꣳ सर्वं यदयमात्मा ॥ ४.६ ॥

ப்ரஹ்ம தம் பராதாத் யோऽன்யத்ராத்மனோ ப்ரஹ்ம வேத; க்ஷத்ரம் தம் பராதாத் யோऽன்யத்ராத்மன: க்ஷத்ரம் வேத; லோகாஸ் தம் பராதுர் யோऽன்யத்ராத்மனோ லோகான் வேத; தேவாஸ்-தம் பராதுர் யோऽன்யத்ராத்மனோ தேவான் வேத; பூதானி தம் பராதுர்-யோऽன்யத்ராத்மனோ பூதானி வேத; ஸர்வம் தம் பராதாத் யோऽன் யத்ராத்மன: ஸர்வம் வேத; இதம் ப்ரஹ்ம இதம் க்ஷத்ரமிமே லோகா இமே தேவா இமானி பூதானி இதꣳ ஸர்வம் யதயமாத்மா ॥ 4.6 ॥

---

4.6. "ஆத்மாவுக்கு (தனக்கு) அன்னியனாகப் பிராம்மணனை எவன் கருதுகிறானோ அவனைப் பிராம்மணன் தள்ளிவிடுவான்; ஆத்மாவுக்கு அன்னியனாக க்ஷத்திரியனை எவன் கருதுகிறானோ அவனை க்ஷத்திரியன் தள்ளிவிடுவான்; ஆத்மாவுக்கு அன்னியமாக உலகங்களை எவன் கருதுகிறானோ அவனை உலகங்கள் தள்ளிவிடும்; ஆத்மாவுக்கு அன்னியமாக தேவர்களை எவன் கருதுகிறானோ அவனைத் தேவர்கள் தள்ளிவிடுவார்கள்; ஆத்மாவுக்கு அன்னியமாக பூதங்களை எவன் கருதுகிறானோ அவனைப் பூதங்கள் தள்ளிவிடும்; ஆத்மாவுக்கு அன்னியமாக அனைத்தையும் எவன் கருதுகிறானோ அவனை அனைத்துந் தள்ளிவிடும்; இந்தப் பிராஹ்மணனும் க்ஷத்திரியனும் இவ்வுலகங்களும் தேவர்களும் பூதங்களும் இவ் வனைத்தும் (அயமாத்மா என்று கூறப்பட்ட) ஆத்மாவே.

---

4. 5. சிரவண மனன நிதித்தியாஸனம்—உடல் முதலியவற்றி னின்று நீ வேறு என்று உன் உள்ளத்தினுள்ளே கேட்டலே சிரவணம். அவ்வுண்மையை விசாரித்தலே மனனம் (நூற்பொருளாராய்வதன்று). ஸ்வரூபானுபவமே நிதித்தியாஸனம்.

நிதித்தியாஸனத்தில் மனதிற்கு ஏற்படும் பிரம்மாகாரவிருத்தி பிரயத் தினத்தால் வளைத்த மரக்கிளை போன்றது; பிரயத்தினம் நீங்கியதும் கிளை

स यथा वीणायै वाद्यमानायै न बाह्यान् शब्दान् शक्नुयाद्ग्रहणाय वीणायै तु ग्रहणेन वीणावादस्य वा शब्दो गृहीतः ॥ ४.९ ॥

स यथार्द्रैधाग्नेरभ्याहितात्पृथग्धूमा विनिश्चरन्त्येवं वा अरेऽस्य महतो भूतस्य निःश्वसितमेतद्यदृग्वेदो यजुर्वेदः

ஸ யதா வீணாயை வாத்யமாநாயை ந பாஹ்யான் ஶப்தான் ஶக்னுயாத் க்ரஹணாய வீணாயை து க்ரஹணேன வீணாவாதஸ்ய வா-ஶப்தோ க்ருஹீத: ॥ 4·9 ॥

ஸ யதார்த்ரைதாக்னே-ரப்ப்யாஹிதாத் ப்ருதக் தூமா விநிஶ்-சரந்த்-யேவம் வா அரேऽஸ்ய மஹதோ பூதஸ்ய நி:ஶ்வஸித மேதத்-யத்-ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோऽதர்வாங்கிரஸ

---

4.9. "வீணை வாசிக்கப்படும்போது வெளிவரும் ஸ்வரங்களைப் பிடிக்க முடியாதெனினும் வீணையையோ வீணைவாசிப்பவரையோ பிடிப்பதால் சப்தம் எப்படிப் பிடிக்கப்படுமோ அவ்வாறே—(சப்த ஜாலமாகிற உலகிற்கு மூலகாரணமாகிய ஆத்மாவைக் கண்டு பிடித்தாலன்றி உலகம் பிடிபடாது.)

4.10. "ப்ரியே! ஈர விறகால் மூட்டப்பெற்ற தீயிலிருந்து பிரிந்து புகைகள் எங்ஙனம் கிளம்பிச் செல்கின்றனவோ, அங்

---

நிமிர்ந்து விடுகிறது. ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டபின்பே பிரம்மாகார விருத்தி ஸ்வபாவமாய் வளைந்த மரக்கிளை போல் நிலைத்து நிற்கும்.

பி. சூ. 1.4.19 ; 2.1.22.

4.9. 'பரம்பொருளைத் தனியாகக் காணவோ, அடையவோ மனித வாழ்வில் முடியாது. மற்றப் பொருள்களில் அது உள்ளூடு நிற்பதை அறிந்து அப்பொருளின் வழியாகவே அதை அடைய முடியும். பேரிகையிலும் சங்கிலும் ஒலி உண்டாகிறது. ஒலியை மட்டும் எடுத்துப் பிடித்துக் கொள்ள முடியாது. சங்கையும், பேரிகையையும், அவற்றைக் கோஷிக்கச் செய்பவனையும் அடைந்து ஒலியைப் பெறலாம். வீணையின் நாதத்தை மட்டும் தனியாக எடுத்துக் வைத்துக்கொள்ள முடியாது. வீணையைப் பெற்று நாதத்தையும் கேட்கலாம். இவ்வாறே பரம் பொருளையுங் காணலாம்'

—(உபநிஷதப்பலகணி : ராஜாஜி).

4.10. ஒ—நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகளுக்கெல்லாம் ஆவியுமாக்கையுந்தானே அழிப்போடளிப்பவன் தானே.

(நம்மாழ்வார்)

सामवेदोऽथर्वांगिरस इतिहासः पुराणं विद्या उपनिषदः श्लोकाः सूत्राण्यनुव्याख्यानानि व्याख्यानान्यस्यैवैतानि सर्वाणि निःश्वसितानि ॥ ४.१० ॥

स यथा सैन्धवखिल्य उदके प्रास्त उदकमेवानुविलीयेत न हास्योद्ग्रहणायेव स्याद्यतो यतस्त्वाददीत लवणमेवैवं वा अर

இதிஹாஸ: புராணம் வித்யா உபநிஷத: ஶ்லோகா: ஸூத்ராண்-யனு-வ்யாக்க்யானானி வ்யாக்க்யானான்-யஸ்யைவைதானி ஸர்வாணி நி:ஶ்வஸிதானி ॥ 4·10 ॥

ஸ யதா ஸைந்த்தவ கில்ய உதகே ப்ராஸ்த உதகமேவானுவிலீ-யேத, ந ஹாஸ்யோத்க்ரஹணாயேவ ஸ்யாத் யதோ யதஸ்த்-வாததீத லவண-மேவைவம் வா அர இதம் மஹத்ப்பூதம் அனந்த-மபாரம்

---

ஙனமே இந்த மகாபூதமாகிய பரமாத்மாவினிடமிருந்து மூச்சுக் காற்றுப்போல் தோன்றியவை ரிக் வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வாங்கிரஸம், இதிஹாஸம், புராணம், வித்தைகள், உப நிஷத்துக்கள், சுலோகங்கள், மந்திரங்கள், ஸூத்திரங்கள், விவரணங்கள், வியாக்கியானங்கள்; இவையனைத்தும் (பரமாத்மா வின்) மூச்சுக் காற்றே.

4.12. "ப்ரியே! எங்ஙனம் உப்புக்கட்டி நீரில் போடப்பட்டது நீரில் கரைந்துவிடுகிறதோ, அதை எங்ஙனம் எடுக்க முடிய வில்லையோ, ஆனால் எந்த இடத்திலிருந்து நீரை எடுத்தாலும் அது எங்ஙனம் உப்பாக இருக்குமோ, அங்ஙனமே எல்லையற்றதும்

---

4.10. பரமாத்வை ஒரு புருஷனுக்கு ஒப்பிட்டால் சுருதி ஸ்ம்ருதிகளை அவன் பிரயத்தினமின்றி விடும் மூச்சுக் காற்றுக்கு ஒப்பிடலாம். பரமாத் மாவை அக்கினிக்கு ஒப்பிட்டால் சுருதி ஸ்ம்ருதிகளைப் புகைக்கு ஒப்பிட லாம்; புகையை யறிந்தால் எப்படி அக்கினியை யறிந்ததாகாதோ அவ் வாறே சுருதி ஸ்ம்ருதிகளை யறிந்தாலேயே பரமாத்மாவை அறிந்ததாகாது. உஷ்ணம் ஏறி விறகு பற்றியெரியும்போது அக்னிஜ்வாலையைக் காண்பது போல் வைராக்கியம் முதிர்ந்து ஞானம் உதிக்கும்போது பரமாத்மாவைக் காணலாம்.

ஒ. (பி. சூ. 1·1·3.)

4.12. உப்புக் கட்டிக்கு உள் என்றும் புறம் என்றும் வேறுபாடில்லை. நீரில் கலந்தால் மறைந்து, அவ்வளவும் உப்பு என்ற உணர்ச்சியாகவே

इदं महद्भूतं अनन्तमपारं विज्ञानघन एवैतेभ्यो भूतेभ्यः समुत्थाय तान्येवाऽनु विनश्यति न प्रेत्य संज्ञास्तीति स होवाच याज्ञवल्क्यः ॥ ४.१२ ॥

सा होवाच मैत्रेय्यत्रैव मा भगवानमूमुहन्न प्रेत्य संज्ञास्तीति स होवाच याज्ञवल्क्यो न वा अरेऽहं मोहं ब्रवीम्यलं वा अर इदं विज्ञानाय ॥ ४.१३ ॥

விஜ்ஞானகன ஏவைதேப்ப்யோ பூதேப்ப்ய: ஸமுத்தாய, தான்யேவாऽனுவிநஶ்யதி, ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞாஸ்தீதி, ஸ ஹோவாச யாஜ்ஞவல்க்ய: ॥ 4.12 ॥

ஸா ஹோவாச மைத்ரேய்யத்ரைவ மா பகவா-னமூமுஹந்-ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞாஸ்தீதி; ஸ ஹோவாச யாஜ்ஞவல்க்யோ ந வா அரேऽஹம் மோஹம் ப்ரவீம்-யலம் வா அர இதம் விஜ்ஞானய ॥ 4.13 ॥

---

கடத்தற்கரியதுமாகிய இந்தப் பெரிய வஸ்து (மஹத்பூதம் எனப்படும் ஆத்மா) விஞ்ஞான கனமாகவே உள்ளது. (எந்தப் பஞ்ச மஹா பூதங்களின் சேர்க்கையால் உருப்படைத்ததுபோல் தோன்றிற்றோ) அந்தப் பஞ்ச பூதங்களினின்று பிரிந்து கிளம்பி அவற்றுடன் (விஞ்ஞானகனத்தில்) மறைந்து போகிறது. மறைந்து போனபின் (ஸம்ஞ்ஞை) அறிவு இல்லை. ப்ரியே! இதுதான் நான் உனக்குக் கூறுவது " என்று யாஞ்ஞவல்கியர் சொன்னார்.

4.13. இதைக் கேட்ட மைத்ரேயி கூறியதாவது:—"மறைந்து போனபின் அறிவு இல்லை என்று கூறியதில் தேவரீர் என்னை மயங்க செய்துவிட்டீர்கள்." யாஜ்ஞவல்கியர் கூறுவார்: "மைத்ரேயி, மயக்கந்தரும் வார்த்தை எதுவும் நான் சொல்லவில்லை. உண்மை அறிவுக்கு இது போதும்."

---

தீர்ந்துபோய்விடுகிறது. ஆத்மா இவ்வுலகை விட்டுப் பரமாத்மாவிடம் லயித்தபின் தனித்து நிற்கும் உலகமும் இல்லை, தானும் இல்லை.

ஒ.சா. 6.13.

4.13. விஞ்ஞானகனமாயுள்ள வஸ்துவில் கலந்தால் அறிவு எங்ஙனம் இல்லாமற் போகும் என்பது மைத்ரேயியின் சந்தேகம்.

यत्र हि द्वैतमिव भवति तदितर इतरं जिघ्रति तदितर इतर पश्यति तदितर इतरं विजानाति यत्र वा सर्वं आत्मैवाभूत्तत्केन कं जिघ्रेत्तत्केन कं पश्येत् तत्केन कं विजानीयाद्येनेद९ सर्वं विजानाति तं केन विजानीयाद्विज्ञातारमरे केन विजानीयादिति ॥ ४.१४ ॥

अयमात्मा सर्वेषां भूतानां मध्वस्यात्मनः सर्वाणि भूतानि मधु यश्चायमस्मिन्नात्मनि तेजोमयोऽमृतमयः पुरुषो यश्चा-

யத்ர ஹி த்வைதமிவ பவதி ததிதர இதரம் ஜிக்க்ரதி, ததிதர இதரம் பஶ்யதி, ததிதர இதரம் விஜாநாதி, யத்ர வா ஸர்வம் ஆத்மை-வாபூத், தத் கேன கம் ஜிக்க்ரேத், தத் கேன கம் பஶ்யேத், தத் கேன கம் விஜாநீயாத்; யேனேத९ ஸர்வம் விஜாநாதி, தம் கேன விஜாநீயாத், விஜ்ஞாதார-மரே கேன விஜாநீயாதிதி ॥ 4.14 ॥

அயமாத்மா ஸர்வேஷாம் பூதாநாம் மத்த்-வஸ்யாத்மன: ஸர்-வாணி பூதானி மது, யஶ்சாயமஸ்மின்-னாத்மனி தேஜோமயோ

4.14. "எந்நிலையில் இரண்டென்ற பாவனை உண்டோ அந்நிலையில்தான் ஒருவன் மற்றொன்றை முகர்கிறான், ஒருவன் மற்றொன்றைக் காண்கிறான், ஒருவன் மற்றொன்றை அறிகிறான்; எந்நிலையில் எல்லாம் ஆத்மாவாய் விளங்குமோ அந்நிலையில் எதனால் எதை முகர்வான், எதனால் எதைப் பார்ப்பான், எதனால் எதை அறிவான்? எதனால் இது எல்லாம் அறியப்படுகிறதோ அதை எதனால் அறியக்கூடும்? ப்ரியே! அறிபவனை எதைக்கொண்டுஅறியக்கூடும்?"

5.14. ஈசுவரனுடைய சரீரவடிமான இந்தக் காரிய காரணப் பிரபஞ்சம் எல்லாப் பிராணிகளுக்கும் மது; இந்தப்பிரபஞ்சத்துக்கு

4.14. நெருப்பு எங்ஙனம் தன்னைத்தானே எரிக்காதோ அங்ஙனம் ஆத்மா தன்னையே ஒரு திருச்யப் பொருள்போல் காணமுடியாது. அறிவு என்பதே பரம்பொருள். அதற்கு மேல் பரம்பொருளை அறிவது எவ்வாற்றும்; 'இது அன்று, அது அன்று' என்றே பரம்பொருளுக்கு மறுப்பிலக்கணங் கூற முடியும். வேறு இலக்கணங்கள் கூறமுடியாது. அறிபவனும் அறியப்படும் பொருளும் ஒன்றேயான பிறகு 'அறிதல்' என்பது ஏது? பி.சூ. 4.4.16.

5.14. ஒ—சா. 3.1.1. மதுவித்தை. அசுவினிதேவர்கள் தேவவைத்தியர்கள்.

यमात्मा तेजोमयोऽमृतमयः पुरुषो अयमेव स योऽयमात्मे-दममृतमिदं ब्रह्मेदꣳ सर्वम् ॥ ५.१४ ॥

इदं वै तन्मधु दध्यङ्ङाथर्वणोऽश्विभ्यामुवाच तदेतदृषिः पश्यन्नवोचत् । रूपꣳ रूपं प्रतिरूपो बभूव तदस्य रूपं प्रति-

ஸம்ருதமய: புருஷோ யஶ்சாய-மாத்மா தேஜோமயோऽம்ருதமய: புருஷோ அயமேவ ஸ யோऽயமாத்மேத-மம்ருத-மிதம் ப்ரஹ்மேதꣳ ஸர்வம் ॥ 5.14 ॥

இதம் வை தன்-மது தத்த்யங்ஙாதர்வணோऽஶ்விப்யா-முவாச, ததேதத்-ருஷி:பஶ்யன்-னவோசத்। ரூபꣳ ரூபம்-ப்ரதிரூபோ-பபூவ தத-ஸ்ய ரூபம் ப்ரதிசக்ஷணாய । இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே ।

---

எல்லாப் பிராணிகளும் மது. இந்தப் பிரபஞ்சத்தில் தேஜோமய மாயும் அமிருதமயமாயும் உள்ள புருஷன் எவனோ அவனும் இந்த ஜீவாத்மாவிடம் தேஜோமயமாயும் அமிருதமயமாயும் உள்ள புருஷன் எவனோ அவனும் (எல்லாப் பிராணிகளுக்கும் மது; எல்லாப் பிராணிகளும் அவர்களுக்கு மது). (இங்ஙனம் நான்கு வகையாகப் பிரித்துக் கூறப்பட்ட) அனைத்தும் ஆன்மாவே. இதுவே அமிருதம், இதுவே பிரம்மம், இதுவே எல்லாம்.

5.19. இதுதான் அதர்வத்தில் சிறந்த ததீசிமுனிவர் அசுவினீ தேவர்களுக்கு உபதேசித்த மதுவித்தை. இதைக் கண்ட ரிஷி (கக்ஷீவான்) கூறியதாவது: (அப்பரம்பொருள்) ஒவ்வொரு உருவத்திலும் அதே உருவமாக ஆயிற்று. அவ்விதம் உருக்கொண்டது தன்னை வெளிக்காட்டுவதற்காக. அந்தப் பரம்பொருள் (இந்திரன்) மாயைகளால் பல ரூபங்களை யடைந்தது. அதுதான் பிரம்மம், ஆதியில்லாதது, முடிவில்லாதது, அகமில்லாதது, புறமில்லாதது.

---

5.19. ததீசி முனிவர் அசுவினிதேவர்களை நோக்கி "மது வித்தையை நான் யாருக்காவது உபதேசித்தால் என் தலையை வெட்டி விடுவதாக இந்திரன் கூறியிருக்கிறான். என் தலைக்கு ஆபத்து இல்லாமலிருந்தால் தான் நான் உபதேசிக்கக்கூடும்" என்றார். அசுவினீதேவர்கள், "அந்த ஆபத்திலிருந்து நாங்கள் காப்பாற்றுகிறோம். உங்கள் தலையைக் கொய்து நாங்கள் பத்திரப்படுத்தி விட்டு உங்களுக்குக் குதிரைத் தலையைப் பொருத்துகிறோம். குதிரை முகத்தால் எங்களுக்கு உபதேசம் செய்யுங்கள். இந்திரன் அந்தத் தலையை வெட்டட்டும். பின்னர் நாங்கள் பழைய தலையை முன்போலவே பொருத்திவிடுகிறோம்" என்

चक्षणाय । इंद्रो मायाभिः पुरुरूप ईयते । तदेतद्ब्रह्मापूर्वमनपर-
मनन्तरमबाह्यमयमात्मा ब्रह्म सर्वानुभूरित्यनुशासनम् ॥ ५.१९॥

॥ इति द्वितीयोऽध्यायः ॥

## ॥ तृतीयोऽध्यायः ॥

ॐ जनको ह वैदेहो बहुदक्षिणेण यज्ञेनेजे तत्र ह कुरु-
पंचालानां ब्राह्मणा अभिसमेता बभूवुस्तस्य ह जनकस्य वैदेहस्य

தததேத் ப்ரஹ்மாபூர்வ-மனபர-மனந்தர-மபாஹ்ய-மய-மாத்மா ப்ரஹ்ம ஸர்வானுபூ-ரித்யனுசாஸநம் ॥ 5.19 ॥

॥ இதி த்விதீயோऽத்த்யாய: ॥

## த்ருதீயோऽத்த்யாய:

ஓம் ஜனகோ ஹ வைதேஹோ பஹுதக்ஷிணேன யஜ்ஞே னேஜே, தத்ர ஹ குருபஞ்சாலானும் ப்ராஹ்மணு அபிஸமேதா பபூ-வுஸ்-தஸ்ய ஹ ஜனகஸ்ய வைதேஹஸ்ய விஜிஜ்ஞாஸா பபூவ க:

---

'அயமாத்மாப்ரஹ்ம'—இவ்வாத்மாவே பிரம்மம், எல்லாவற்றையும் அனுபவிப்பது. இது (வேதத்தின்) முடிவான உபதேசம்.

இரண்டாவது அத்தியாயம் முற்றும்.

## மூன்ருவது அத்தியாயம்

1.1. விதேஹ மன்னராகிய ஜனகர் தக்ஷிணை மிகுந்த ஒரு யக்ஞத்தைச் செய்தார். அதற்குக் குரு பாஞ்சால தேசங்களி லிருந்து பிராமணர்கள் வந்து கூடினுர்கள். இவர்களுள் எவர்

---

றனர். ததீசி ஒப்புக்கொண்டார். எல்லாம் யோசித்தவாறு முடிந்தது. (சதபதப்பிராமணம் 14.1.1. 22-24). இது முடியுமா என்ருல், ஞானிக்கு முடியாதது ஒன்றுமில்லை. ஒ—"இந்த உபதேசத்தை ஒரு உலர்ந்த கட்டையின் மேல் தெளித்தாலும் அது தளிர்த்து இலையுங் கிளையுங் கொள்ளும்."
(சா. 5.2.3)

1.1. பி. சூ. 3.4.3.

विजिज्ञासा बभूव कः स्विदेषां ब्राह्मणानामनूचानतम इति स ह गवां सहस्रमवरुरोध दश दश पादा एकैकस्याः शृंगयोराबद्धा बभूवुः ॥ १.१ ॥

तान्होवाच ब्राह्मणा भगवंतो यो वो ब्रह्मिष्ठः स एता गा उदजतामिति । ते ह ब्राह्मणा न दधृषुरथ ह याज्ञवल्क्यः स्वमेव ब्रह्मचारिणमुवाचैताः सोम्योदज सामश्रवा ३ इति ता होदाचकार ते ह ब्राह्मणाश्चुक्रुधुः कथं नो ब्रह्मिष्ठो ब्रुवीतेत्यथ ह

ஸ்விதேஷாம் ப்ராஹ்மணா-மனூசானதம இதி, ஸ ஹ கவாம் ஸஹஸ்ர-மவருரோத, தச தச பாதா ஏகைகஸ்யா: ஶ்ருங்கயோ-ராபத்தா பபூவு: ॥ 1.1 ॥

தான் ஹோவாச ப்ராஹ்மணா பகவந்தோ யோ வோ ப்ரஹ்மிஷ்ட்ட: ஸ ஏதா கா உதஜதாமிதி। தே ஹ ப்ராஹ்மணா ந தத்ருஷுரத ஹ யாஜ்ஞவல்க்ய: ஸ்வமேவ ப்ரஹ்மசாரிண-முவாசைதா: ஸோம்யோதஜ ஸாமஶ்ரவா (3) இதி, தா ஹோதாசகார, தே ஹ ப்ராஹ்மணாஶ்-சுக்ருது: கதந்நோ ப்ரஹ்மிஷ்ட்டோ ப்ருவீதேத்யத

---

பிரம்ம வித்தையிற் சிறந்தவர் என அறியவேண்டும் என்ற விருப்பம் ஜனகருக்கு உண்டாயிற்று. அங்கு அவர் ஆயிரம் பசுக்களைக் கட்டினார். ஒவ்வொன்றின் கொம்புகளிலும் பத்துப் பத்துப் பாதம் தங்கம் கட்டப்பட்டது.

1.2. "பெரியோர்களாகிய பிராம்மணர்களே! உங்களுக்குள் எவர் பிரம்மவித்தையிற் சிறந்தவரோ (பிரம்மிஷ்ட்டரோ) அவர் இப்பசுக்களை ஓட்டிச் செல்லலாம்" என்று (ஜனகர்) அவர்களை நோக்கிக் கூறினார். அந்தப் பிராம்மணர்கள் (ஒருவரும்) துணிந்து முன் வரவில்லை. அப்போது யாஜ்ஞவல்கியர் தன் பிரம்மசாரி ஒருவனை நோக்கி "குழந்தாய்! ஸாமம் அத்தியயனம் செய்பவனே, இப்பசுக்களை ஓட்டிப்போ" என்றார். அங்ஙனமே அவைகளை ஓட்டிப்போனான். (அதைக்கண்டு) அந்தப் பிராம்மணர்கள் "இவர் எப்படி தன்னைப் பிரம்ம வித்தையிற் சிறந்தவர் எனச் சொல்லிக் கொள்வார்?" என்று கோபங்கொண்டனர். அங்கு வைதேஹ ஜனகருடைய ஹோதாவாக ஆசுவலர் இருந்தார். அவர் "நமக்குள் நீர் தான் பிரம்மிஷ்ட்டரோ?" என்று அவரை (யாஜ்ஞவல்கிய

जनकस्य वैदेहस्य होताश्वलो बभूव स हैनं पप्रच्छ त्वं नु खलु नो याज्ञवल्क्य ब्रह्मिष्ठोऽसी3 ति स होवाच नमो वयं ब्रह्मिष्ठाय कुर्मो गोकामा एव वयं स्म इति तꣳ ह तत एव प्रष्टुं दध्रे होताऽश्वलः ॥ १.२ ॥

याज्ञवल्क्येति होवाच यदिदं सर्वं मृत्युनाप्तं सर्वं मृत्युनाभिपन्नं केन यजमानो मृत्योराप्तिमतिमुच्यत इति होत्रर्त्विजाग्निना वाचा वाग्वै यज्ञस्य होता तद्येयं वाक्सोऽयमग्निः स होता स मुक्तिः सातिमुक्तिः ॥ १.३ ॥

ஹ ஜனகஸ்ய வைதேஹஸ்ய ஹோதாஶ்வலோ பபூவ, ஸ ஹைனம் பப்ரச்ச த்வந் நு கலு நோ யாஜ்ஞவல்க்ய ப்ரஹ்மிஷ்ட்டோஸீ (3) இதி; ஸ ஹோவாச நமோ வயம் ப்ரஹ்மிஷ்ட்டாய குர்மோ கோ காமா ஏவ வயம் ஸ்ம இதி, தꣳ ஹ தத ஏவ ப்ரஷ்டுந் தத்ரே ஹோதா ऽஶ்வல: ॥ 1.2 ॥

யாஜ்ஜவல்க்யேதி ஹோவாச யதிதம் ஸர்வம் ம்ருத்யுனுப்தம் ஸர்வம் ம்ருத்யுனுபிபன்னம் கேன யஜமானே ம்ருத்யோ-ராப்தி-மதி-முச்யத இதி, ஹோத்ரர்த்விஜாக்னினு வாசா வாக்வை யஜ்ஞஸ்ய ஹோதா, தத்யேயம் வாக் ஸோऽயமக்னி: ஸ ஹோதா ஸ முக்தி : ஸாதிமுக்தி : ॥ 1·3 ॥

---

ரைக்) கேட்டார். அவர் "நாம் பிரம்மிஷ்ட்டருக்கு நமஸ்காரம் செய்வோம். நாம் (எல்லோருமே) பசுக்களிடம் ஆசை கொண்ட வர்கள் மட்டுமே யாவோம்" என்றூர். அதன்மேல் ஹோதா ஆசுவலர் அவரைக் கேள்விகள் கேட்க நிச்சயித்தார்.

1·3. "யாஜ்ஜவல்கியரே ! இது எல்லாம் மரணத்தால் பீடிக் கப்பட்டிருக்கின்றதே, மரணத்தால் விழுங்கப்படுவதாயிருக்கின்றதே, அந்த மரணப் பீடையை யஜமானன் எதனுல் கடந்து செல்

---

1.3. ஒ. (அக்னிர்-மே வாசி ஶ்ரித : । வாக் ஹ்ருதயே । ஹ்ருதயம் மயி । அஹ-மம்ருதே । அம்ருதம் ப்ரஹ்மணி) அக்கினி என் வாக்கில் உளது ; வாக்கு இருதயத்தில் ; இருதயம் என்னிடத்தில் ; நான் அமிருதத்தில் ; அமிருதம் பிரம்மத்தில். (மஹாந்யாஸம்).

अथ हैनमुषस्तश्चाक्रायणः पप्रच्छ याज्ञवल्क्येति होवाच यत्साक्षादपरोक्षाद्ब्रह्म य आत्मा सर्वान्तरस्तं मे व्याचक्ष्वेत्येष त आत्मा सर्वान्तरः कतमो याज्ञवल्क्य सर्वान्तरो यः प्राणेन प्राणिति स त आत्मा सर्वान्तरो योऽपानेनापानीति स त आत्मा

அத ஹைந-முஷஸ்தஶ்-சாக்ராயண: பப்ரச்ச, யாஜ்ஜவல்க்-யேதி ஹோவாச, யத்-ஸாக்ஷா-தபரோக்ஷாத் ப்ரஹ்ம, ய ஆத்மா ஸர்-வாந்தரஸ்-தம்-மே வ்யாசக்ஷ்வேத்-யேஷ த ஆத்மா ஸர்வாந்தர:, கதமோ யாஜ்ஜவல்க்ய ஸர்வாந்தரோ, ய: ப்ராணேன ப்ராணிதி ஸ த

---

லலாம்?'' என்ருர். "ருத்விக் என்ற ஹோதாவால், அக்கினியால், வாக்கால், வாக்கே யஜ்ஞத்தில் ஹோதா. அந்த வாக்கு எதுவோ அதுவே அக்கினியாகவும் உளது. அதுதான் (அந்த அனுபவ அறிவுதான்) முக்தி (மரணத்தினின்று விடுதலை); அதுதான் அதி முக்தி (மரணத்தைக் கடந்து செல்லுதல்.)

4·1. பின் இவரை நோக்கி உஷஸ்தர் என்ற சாக்ராயணர் கேட்கத் தொடங்கினர். அவர் கூறியதாவது: "யாஜ்ஞவல்கியரே! எந்தப் பிரம்மம் தனக்குத் தானே நேரில் காணக்கூடிய தாயும் வேருென்றை வேண்டாததாயும் அனைத்தையும் வியாபித்து அனைத்தினுள்ளும் உறையும் ஆத்மாவாயும் உள்ளதோ "அதை எனக்கு விளக்கிக் கூறும்.'' "இந்த உம்முடைய ஆத்மா தான் அனைத்தினுள்ளும் உறைவது.'' "யாஜ்ஞவல்கியரே! (என்னுடைய) எந்த ஆத்மா அனைத்தினுள்ளும் உறைவது?''

"எந்த ஆத்மா பிராண வாயுவால் பிராணனை இயக்குகிறதோ அந்த உன் ஆத்மா தான் அனைத்துள்ளும் உறைவது; அபானனுல் அபானக்கிரியை செய்கிற அந்த உன் ஆத்மா தான் அனைத்துள்

---

1.3. மரணத்தினின்று விடுதலை :—விஷயப்பற்றே மரணம். அதினின்று விடுதலையே முக்தி. இங்ஙனம் விஷயப்பற்றின் நீக்கமாகிய முக்தியைச் சாதனமாய்க் கொண்டு அக்கினியின் அதிதெய்வ ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்தல் அதிமுக்தி.

4.1. எந்த ஆத்மா அனைத்தினுள்ளும் உறைவது?—ஜாக்ரத் ஸாக்ஷியான ஜீவாத்மாவா, ஸ்வப்னஸாக்ஷியான அந்தராத்மாவா, ஸுஷுப்தி ஸாக்ஷியான பரமாத்மாவா?

விடை (4.2ல் காண்க.)—ஜாக்ரத்-ஸ்வப்ன-ஸுஷுப்தியாகிய மூன்று அவஸ்தைகளுக்கும் ஸாக்ஷியாயுள்ள கூடஸ்தனே அனைத்துள்ளும் உறை

सर्वान्तरो यो व्यानेन व्यानीति स त आत्मा सर्वान्तरो य उदानेनोदानिति स त आत्मा सर्वान्तर एष त आत्मा सर्वान्तरः ॥ ४.१ ॥

स होवाचोषस्तश्चाक्रायणो यथा विब्रूयादसौ गौरसावश्व इत्येवमेवैतद्व्यपदिष्टं भवति यदेव साक्षादपरोक्षाद्ब्रह्म य आत्मा सर्वान्तरस्तं मे व्याचक्ष्वेत्येष त आत्मा सर्वान्तरः कतमो याज्ञवल्क्य सर्वान्तरः। न दृष्टेर्द्रष्टारं पश्येर्न श्रुतेः श्रोतारं

ஆத்மா ஸ்ர்வாந்தரோ, யோऽபானேனுபானீதி ஸ த ஆத்மா ஸர்வாந்தரோ, யோ வ்யானேன வ்யானீதி ஸ த ஆத்மா ஸர்வாந்தரோ, ய உதானேனுதானிதி ஸ த ஆத்மா ஸர்வாந்தர ஏஷ த ஆத்மா ஸர்வாந்தர : ॥ 4·1 ॥

ஸ ஹோவாசோஷஸ்தஶ்-சாக்ராயணோ யதா விப்ரூயா-தஸௌ கௌ-ரஸாவஶ்வ இத்யேவ-மேவைதத் வ்யபதிஷ்டம் பவதி, யதேவ ஸாக்ஷா-தபரோக்ஷாத் ப்ரஹ்ம ய ஆத்மா ஸர்வாந்தரஸ்-தம் மே வ்யாசக்ஷ்வேத்-யேஷ த ஆத்மா ஸர்வாந்தர:, கதமோ யாஜ்ஞ-

---

ளும் ; வியானனுல் வியானக்கிரியை செய்கிற அந்த உன் ஆத்மா தான் அனைத்துள்ளும் ; உதானனுல் உதானக்கிரியை செய்கிற அந்த ஆத்மா தான் அனைத்துள்ளும் உளது.''

4·2. சாக்ராயண உஷஸ்தர் அவரை நோக்கிக் கூறுவார் : ''(மாட்டை அல்லது குதிரையை வர்ணிக்கச் சொன்னுல்) இது மாடு இது குதிரை என்று எப்படி வர்ணிப்பார்களோ அப்படியே உம்மால் இது விவரிக்கப்பட்டதாகிறது ; எது தனக்குத் தானே காணக் கூடியதாயும் வேறென்றை வேண்டாததாயும் உள்ள பிரம் மமோ எது அனைத்தினுள்ளும் உறையும் ஆத்மாவாக உள்ளதோ

---

யும் ஆத்மா. அவன் எல்லாவற்றையும் அறிபவன். ஆனுல் அவனை அறிய முடியாது. (ந விஜ்ஞாதேர் விஜ்ஞாதாரம் விஜாநீயா:).

4.2. ஒ—உரையற்றதொன்றை உரை செய்யும் ஊமர்காள்
கரையற்றதொன்றைக் கரை காணலாகுமோ ?
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்றிருந்தான் புரிசடையோனே. —திருமந்திரம்

श्रृणुयान्न मतेर्मन्तारं मन्वीथा न विज्ञातेर्विज्ञातारं विजानीया: । एष त आत्मा सर्वान्तरोऽतोऽन्यदार्तं ततो होषस्तश्चाक्रायण उपरराम ॥ ४.२ ॥

अथ हैनं कहोल: कौषीतकेय: पप्रच्छ याज्ञवल्क्येति होवाच यदेव साक्षादपरोक्षाद्ब्रह्म य आत्मा सर्वान्तर: तं मे व्याचक्ष्वेत्येष त आत्मा सर्वान्तर: कतमो याज्ञवल्क्य सर्वान्तरो योऽशनाया-

வல்க்ய ஸர்வாந்தர: । ந த்ருஷ்டேர்-த்ரஷ்டாரம் பஶ்யேர் ந ஶ்ருதே: ஶ்ரோதாரஂ ஶ்ருணு யாந்-ந மதேர் மந்தாரம் மன்வீதா ந விஜ்ஞாதேர் விஜ்ஞாதாரம் விஜாநீயா: । ஏஷ த ஆத்மா ஸர்வாந்தரோऽதோऽன்யதார்த்தம், ததோ ஹோஷஸ்தஶ்-சாக்ராயண உபரராம ॥ 4.2 ॥

அத ஹைநங் கஹோல: கௌஷீதகேய: பப்ரச்ச, யாஜ்ஞவல்க்யேதி ஹோவாச, யதேவ ஸாக்ஷா-தபரோக்ஷாத் ப்ரஹ்ம ய ஆத்மா ஸர்வாந்தர:, தம் மே வ்யாசக்ஷ்வேத்-யேஷ த ஆத்மா ஸர்வாந்தர:, கதமோ யாஜ்ஞவல்க்ய ஸர்வாந்தரோ, யோऽஶனாயாபிபாஸே ஶோகம்

---

அதை எனக்கு நன்கு விளக்கிக் கூறும்.'' "இந்த உம்முடைய ஆத்மா தான் அனைத்தினுள்ளும் உறைவது.'' "யாஜ்ஞவல்கியரே! என்னுடைய எந்த ஆத்மா அனைத்தினுள்ளும் உறைவது?'' "காக்ஷியைக் காண்பவனைக் காணமுடியாது; கேள்வியைக் கேட்பவனைக் கேட்க முடியாது; நினைவை நினைப்பவனை நினைக்க முடியாது; அறிவை அறிபவனை அறிய முடியாது; இந்த உம்முடைய ஆத்மா தான் அனைத்தினுள்ளும் உறைவது. இதினின்றும் வேறானதெல்லாம் அழிவுள்ளது.'' அதன்பின் சாக்ராயண உஷஸ்தர் சாந்தமடைந்தார்.

5.1. பின் கஹோலர் என்ற கௌஷீதகேயர் அவரைக் கேட்க ஆரம்பித்தார். "யாஜ்ஞவல்கியரே! எந்தப் பிரம்மம் தனக்குத் தானே நேரில் காணக்கூடியதாயும் வேறொன்றை வேண்டாததாயும்

---

5.1. கௌஷீதகேயர்—குஷீதகர் குமாரன். இவர் கேட்டதும் உஷஸ்தர் கேட்டதும் வெவ்வேறு ஆத்மா அன்று. 'ஏஷ தே ஆத்மா' என்ற பிரதி வசனம் ஒரே ஆத்மாவைக் குறிக்கும்.

पिपासे शोकं मोहं जरां मृत्युमत्येति एतं वै तमात्मानं विदित्वा ब्राह्मणा: पुत्रैषणायाश्च वित्तैषणायाश्च लोकैषणायाश्च व्युत्थायाथ

மோஹஞ் ஜராம் ம்ருத்யு-மப்யேதி, ஏதம் வை தமாத்மானம் விதித்வா ப்ராஹ்மணு: புத்ரைஷணுயாச்ச வித்தைஷணுயாச்ச லோகைஷணுயாச்ச வ்யுத்தாயாத பிக்ஷாசர்யஞ் சரந்தி, யா ஹ்யேவ

---

அனைத்தையும் வியாபித்து அனைத்தினுள்ளும் உறையும் ஆத்மா வாயும் உள்ளதோ அதை எனக்கு நன்கு விளக்கிக்கூறும்'' என்றார்.

"இந்த உம்முடைய ஆத்மா தான் அனைத்தினுள்ளும் உறைவது.''

"யாஜ்ஞவல்கியரே! என்னுடைய எந்த ஆத்மா அனைத்தினுள்ளும் உறைவது?''

"பசி, தாகம், சோகம், மோஹம், மூப்பு, மரணம் இவைகளை யெல்லாங் கடந்து எது இருக்கிறதோ அது தான். இந்த ஆத்மாவை அறிந்து தான் பிராம்மணர்கள் மக்களைப் பெறவேண்டுமென்ற ஆசை; பொருளைச் சேமிக்க வேண்டுமென்ற ஆசை; (இறந்தபின்) சிறந்த உலகங்களை அடையவேண்டுமென்ற ஆசை இவைகளை விட்டுக் கிளம்பிப் பிச்சையால் பெறுவதைக்கொண்டு வாழ்கின்றனர்.

---

5.1. **பசி தாகம் இவைகளைக் கடந்து**—ஒ (ந லிப்யதே லோக து:க்கேன பாஹ்ய:) உலகத்துள்ள துன்பத்தால் இவ்வாத்மா பாதிக்கப்படுவதில்லை (கட. 5.11).

**சோகம்**—ஆசை பூர்த்தியாகாததால் ஏற்படும் துன்பம்.

**மோஹம்**—ஒன்றை வேறொன்றாக எண்ணி மயங்குதல். பசி, தாகம், சோகம், மோஹம், மூப்பு, மரணம் என்ற இவை எல்லாப் பிராணிகளையும் பற்றித் தொடர்ந்து கடலின் அலைகளைப் போலவும், இரவு பகல்களைப் போலவும் மாறி மாறி வந்து ஆட்டிவைக்கின்றன. இதுவே ஸம்ஸாரம் எனப்படுவது. ஆத்மா அஸம்ஸாரி.

எவ்வளவு ஆழங் கிணறு வெட்டவேண்டும்? தண்ணீர் வரும் வரை. பின் அடியைச் சுத்தம் செய்தால் நீர் தானே சுரந்து கொண்டிருக்கும். அதுபோல ஆத்மானந்தம் சுரக்கும் வரை தான் உனக்குக் கருமம். பின் அந்த வற்றாத நீரை எடுத்து உன் தாகத்தையும் பிறர் தாகத்தையும் போக்குவது தான் நீ செய்ய வேண்டியது.

भिक्षाचर्यं चरन्ति ॥ या ह्येव पुत्रैषणा सा वित्तैषणा या वित्तैषणा सा लोकैषणा उभे ह्येते एषणे एव भवतस्तस्माद्ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य बाल्येन तिष्ठासेद्बाल्यं च पाण्डित्यं च निर्विद्याथ मुनिरमौनं च

புத்ரைஷணு ஸா வித்தைஷணு, யா வித்தைஷணு ஸா லோகைஷணு, உபே ஹ்யேதே ஏஷணே ஏவ பவதஸ்-தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேன திஷ்டாஸேத், பால்யஞ்ச பாண்டித்யஞ்ச நிர்வித்யாத முனி-ரமௌனஞ்ச

---

எது மக்களாசையோ அதுவே பொருளாசையாகிறது; எது பொருளாசையோ அதுவே உலக ஆசையாகிறது. (முன்னுள்ளதும் பின்னுள்ளதும் ஸாத்திய ஸாதன பேதத்தால் இரண்டாயினும்) இவை இரண்டும் ஆசைகளேயன்ரே? ஆகையால் பிராம்மணன் அடைந்த பாண்டித்தியத்தை வெறுத்து (ஒன்றுமறியாத பாலனைப்போல்) ஞான பலத்துடன் மட்டும் நிற்கிருன். பின் பாண்டித்தியத்தையும் ஞான பலத்தையுங்கூட விடுத்து (மனனத்

---

(தஸ்மாத் ப்ரஹ்மவிதோ நாஸ்தி கர்ம, கர்ம ஸாதனம் வா । அதோ யேऽதிக்ராந்தா ப்ராஹ்மணு: ஸர்வம் கர்ம, கர்ம ஸாதனஞ்ச ஸர்வம் தேவ-பித்ருமானுஷ நிமித்தம் யஜ்ஞோபவீதாதி । தேந ஹி தைவம் பித்ர்யம் மானுஷஞ் ச கர்ம க்ரியதே । 'நிவீதம் மனுஷ்யாணும்' இத்யாதிஶ்ருதே: । ) ஆகையால் பிரம்ம ஞானிகளுக்குக் கர்மமும் இல்லை, கர்ம ஸாதனமும் இல்லை. இவைகளைத் தாண்டிச் சென்ற பிராம்மணர்கள் தேவகர்மம், பித்ருகர்மம், மனுஷ்யகர்மம் என்ற எல்லாவற்றையும் யஜ்ஞோபவீதத்துடன் விட்டுவிடுகின்றனர். யஜ்ஞோபவீதத்துடனன்ரே தேவ பித்ரு மனுஷ்ய கர்மங்கள் செய்யப்படுகின்றன. 'பூணூலை மாலையாகப் போட்டுக்கொண்டு மனுஷ்ய கர்மம்' என்பது முதலியன சுருதி. (சங்.)

(வித்வான் லிங்கவர்ஜித: 'தஸ்மா-தலிங்கோ தர்மஜ்ஞோऽவ்யக்த லிங்கோऽவ்யக்தாசார:' இத்யாதி ஸ்ம்ருதிப்ப்ய:) வித்வான் அடையாளங்களில்லாதவன். "ஆகையால் தர்மத்தை யறிந்தவன் அடையாளங்களில்லாதவன், அடையாளங்களும் ஆசாரங்களும் இவையென்று கண்டு பிடிக்க முடியாதவன்" என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. (சங்).

(கேனஸ்யாத் யேனஸ்யாத்) எந்த ஆசாரம் உடையவனுயிருப்பினும்—'துர்நடத்தையுடையவனுயினும்' என்று பொருள் கொள்ளுதல் கூடாது. ஏனெனில் ஞானியின் ஆசாரமே உலகத்தார்க்குப் பிரமாண

मौनं च निर्विद्याऽथ ब्राह्मणः ; स ब्राह्मणः केन स्याद्येन स्यात्तेनेदृश एवातोऽन्यदार्तं ततो ह कहोलः कौषीतकेय उपरराम ॥ ५.१ ॥

மௌனஞ்ச நிர்வித்யாऽத ப்ராஹ்மண: ; ஸ ப்ராஹ்மண: கேன ஸ்யாத் யேனஸ்யாத் தேனேத்ருஶ ஏவாதோऽன்யதார்த்தம் ; ததோ ஹ கஹோல: கௌஷீதகேய உபரராம ॥ 5.1 ॥

---

தில் ஆழ்ந்த) முனியாகிருன். பின் மௌனத்தையும் மௌனமின்மையையும் விடுத்து பிரம்மஞானியாகிருன். அந்தப் பிரம்மஞானி எவ்வண்ணம் இருப்பான் எனின், எந்த ஆசாரம் உடையவனாய் இருப்பினும் அவ்வண்ணத்தில் இங்கு கூறியபடி பிரம்மஞானியாகவே தான் விளங்குவான். இந்நிலையைக் காட்டிலும் வேருனதெல்லாம் அழிவுடையதே.'' இதைக் கேட்டுக் கஹோலர் என்ற கௌஷீதகேயர் ஒழிவடைந்தார்.

---

மாய் விளங்குவதால் காமம், குரோதம், கபடம், பொய் முதலியன கலந்த துர்நடத்தை ஞானியிடம் இருக்காது. அப்படியிருக்குமாயின் அவன் ஞானியன்று. ஞானிகளுக்கு உதாரணம் ஜனகன், பிரஹ்லாதன், வாமதேவர், ஜடபரதர்.

ஒ. ஸர்வதா வர்த்தமானோபி (கீ. 13.23 ; 6.31.)

பாலைக் கடைந்து வெண்ணெய்யை நீரிலோ மோரிலோ போட்டு வைத்தாலும் மறுபடி நீருடனும் மோருடனும் கலக்காது. மேலேயே மிதக்கும். அதுபோல பிரம்மஞானியின் மனம் சுற்றிலுமுள்ள பொருள்களுடன் கலக்காமல் பிரமத்தினிடமே திரண்டு நிலைபெறும். (ரா. கி.)

பி. சூ. 3.3.35 ; 3.4.9 ; 3.4.47.

உலகனைத்தையும் திருணமாய்க் கருதி உதறித்தள்ளி, உள்ளத்தில் உறையும் பரம்பொருளின் ஒளி ஒன்றையே நாடிச்செல்லும் மனோநிலை ஒவ்வொருவருக்கும் ஒரு சமயம் வரவே வரும். அந்நிலை எய்திய அவன் அடிமைத்தனத்தினின்று விடுபட்டு ஆன்மவீரனாகிருன். அவன் ஸ்திதப்ரஜ்ஞன் எனப்படுகிருன். ஒ—கீ. 2.55.

ஒரு கம்பியில் மின்சார சக்தி பாய்ந்து செல்லுவதற்கு, அது பூமியைத் தொடாமலிருக்க வேண்டும். அதுபோல் மனத்தில் ஞானசக்தி பாய்ந்து செல்ல, அது உலகவிஷயங்களிற் பற்றின்றி இருக்கவேண்டும்.

மௌனம்—(ஜிஸ் நே பாயா உஸ் நே சுப் ஆயா) எவன் அடைந்தவனோ அவன் மௌனத்தில் அடங்கியவனுவான். கபீர்தாஸ்.

अथ हैनमुद्दालक आरुणिः पप्रच्छ याज्ञवल्क्येति होवाच मद्रेष्ववसाम पतञ्चलस्य काप्यस्य गृहेषु यज्ञमधीयानास्तस्याऽसीद्भार्या गन्धर्वगृहीता तमपृच्छाम कोऽसीति सोऽब्रवीत्कबन्ध आथर्वण इति सोऽब्रवीत्पतञ्चलं काप्यं याज्ञिकांश्च वेत्थ नु त्वं काप्य तत्सूत्रं येनायं च लोकः परश्च लोकः सर्वाणि च भूतानि संदृब्धानि भवन्तीति सोऽब्रवीत्पतञ्चलः काप्यो नाहं

அத ஹைன-முத்தாலக ஆருணி: பப்ரச்ச, யாஜ்ஞவல்க்யேதி ஹோவாச, மத்ரேஷ்-வவஸாம பதஞ்சலஸ்ய காப்யஸ்ய க்ருஹேஷு, யஜ்ஞ-மதீயாஞஸ்-தஸ்யாஸீத் பார்யா கந்தர்வ-க்ருஹீதா தமப்ருச்-சாம கோऽஸீதி, ஸோऽப்ரவீத் கபந்த ஆதர்வண இதி; ஸோ அப்ரவீத் பதஞ்சலங் காப்யம் யாஜ்ஞிகாம்ஶ்ச, வேத்த நு த்வம் காப்ய தத் ஸூத்ரம் யேனாயஞ்ச லோக: பரஶ்ச லோக: ஸர்வாணி ச பூதானி ஸந்த்ருப்தானி பவந்தீதி; ஸோऽப்ரவீத் பதஞ்சல: காப்யோ நாஹந்

---

7.1. அதன்பின் உத்தாலக ஆருணி கேட்கத் தொடங்கினர். "யாஜ்ஞவல்கியரே! மத்ரதேசத்தில் பதஞ்சல காப்யர் வீட்டில் நாங்கள் யஜ்ஞநூலை அத்தியயனம் செய்துகொண்டு வசித்து வந்தோம். அச்சமயம் அவருடைய மனைவி கந்தர்வனால் பீடிக்கப் பட்டிருந்தாள். நீ யார்? என்று அவனைக் கேட்டோம். 'நான் கபந்தன் என்ற ஆதர்வணன்' என்று கூறிவிட்டு அவன் பதஞ் சலரையும் அத்தியயனம் செய்பவர்களையும் நோக்கி 'எந்த ஸூத் திரத்தினால் இகமும் பரமும் எல்லா உயிர்களும் ஒன்ருகப் பிணைக் கப்பட்டுள்ளன என்று உங்களுக்குத் தெரியுமா?' என்ருன். அதற் குப் பதஞ்சலர் 'நான் அதை அறியேன் ஐயனே!' என்ருர். அவன் பதஞ்சலரையும் அத்தியயனம் செய்பவர்களையும் நோக்கி, 'காப்பியரே! இகத்தையும் பரத்தையும் எல்லா உயிர்களையும் உள்-

---

7.1. எந்த ஸூத்திரத்தினல்?—ஒ. (மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ) சரட்டில் மணிநிரைகள் போல ஈதெல்லாம் என்னிடத்தில் கோக்கப்பட்டுள்ளது. (கீ. 7·7).

तद्भगवन्वेदेति सोऽब्रवीत्पतञ्चलं काप्यं याज्ञिकाꣳश्च वेत्थ नु त्वं काप्य तमन्तर्यामिणं य इमं च लोकं परं च लोकꣳ सर्वाणि च भूतानि योऽन्तरो यमयतीति सोऽब्रवीत्पतञ्चलः काप्यो नाहं तं भगवन्वेदेति सोऽब्रवीत्पतञ्चलं काप्यं याज्ञिकाꣳश्च यो वै तत्काप्य सूत्रं विद्यात्तं चान्तर्यामिणमिति स ब्रह्मवित्स लोकवित्सदेववित्स वेदवित्स भूतवित् स आत्मवित्स सर्वविदिति तेभ्योऽब्रवीत्तदहं वेद

தத் பகவன் வேதேதி, ஸோऽப்ரவீத் பதஞ்சலங் காப்யம் யாஜ்ஞிகாꣳ ஶ்ச வேத்த நு த்வம் காப்ய தமந்தர்யாமிணம் ய இமஞ்ச லோகம் பரஞ் ச லோகꣳஸர்வாணி ச பூதானி யோऽந்தரோ யமயதீதி; ஸோऽப்ரவீத் பதஞ்சல: காப்யோ நாஹம் தம் பகவன் வேதேதி; ஸோऽப்ரவீத் பதஞ்சலங் காப்யம் யாஜ்ஞிகாꣳஶ்ச யோ வை தத் காப்ய ஸூத்ரம் வித்யாத் தஞ் சாந்தர்யாமிணமிதி, ஸ ப்ரஹ்மவித் ஸ லோக வித் ஸ தேவவித் ஸ வேதவித் ஸ பூதவித் ஸ ஆத்மவித் ஸ ஸர்வவிதிதி,

---

ளிருந்து ஆட்டிவைக்கும் அந்தர்யாமியை நீங்கள் அறிவீர்களா?' என்றான். பதஞ்சல காப்பியர் 'ஐயனே! நான் அவரை அறியேன்' என்றார். மீண்டும் அவன் பதஞ்சலகாப்பியரையும் அத்தியயனம் செய்பவர்களையும் நோக்கி, 'அந்த ஸூத்திரத்தையும் அந்தர்யாமி யையும் எவன் அறிகிறானோ, அவன் தான் பிரம்மத்தை அறிந்த வன், உலகங்களை அறிந்தவன், தேவர்களை அறிந்தவன், வேதங்களை அறிந்தவன், பூதங்களை அறிந்தவன், தன்னை (ஆத்மாவை) அறிந் தவன், எல்லாவற்றையுமறிந்தவன்' என்று கூறிப் பின் அங்கிருந்த வர்களுக்கு (அதை விளக்கமாக) எடுத்துரைத்தான். அதை நான் அறிவேன். யாஜ்ஞவல்கியரே, நீர் அந்த ஸூத்திரத்தையும் அந்தர் யாமியையும் அறியாமலிருந்தும் பிரம்மஞானிக்கென விடுக்கப் பட்ட பசுக்களை ஓட்டிப்போவீராயின் உமது தலை வீழ்ந்துபோம்.''

'அந்த ஸூத்திரத்தையும் அந்தர்யாமியையும் நான் அறி வேன், கௌதமரே!' என்றார். 'எனக்குத் தெரியும், தெரியும் என்று எவரும் சொல்லிவிடலாம், எப்படித் தெரியுமோ அதை விளங்கச் சொல்லும்' என்றார்.

तच्चेत्त्वं याज्ञवल्क्य सूत्रमविद्वाꣳस्तं चान्तर्यामिणं ब्रह्मगवीरुदजसे मूर्धा ते विपतिष्यतीति वेद वा अहं गौतम तत्सूत्रं तं चान्तर्यामिणमिति यो वा इदं कश्चिद्ब्रूयाद्वेद वेदेति यथा वेत्थ तथा ब्रूहीति ॥ ७.१ ॥

स होवाच वायुर्वै गौतम तत्सूत्रं वायुना वै गौतम सूत्रेणायं च लोकः परश्च लोकः सर्वाणि च भूतानि संन्दृब्धानि भवन्ति तस्माद्वै गौतम पुरुषं प्रेतमाहुः व्यस्रꣳसिषतास्यांगानीति वायुना हि गौतम सूत्रेण संदृब्धानि भवन्तीत्येवमेवैतद्याज्ञवल्क्यांतर्यामिणं ब्रूहीति ॥ ७.२ ॥

தேப்ப்யோऽப்ரவீத் ஸ ததஹம் வேத தச்சேத் த்வம் யாஜ்ஞவல்க்ய ஸூத்ரமவித்வாꣳஸ்தஞ் சாந்தர்யாமிணம் ப்ரஹ்மகவீ-ருதஜஸே, மூர்த்தா தே விபதிஷ்யதீதி; வேத வா அஹங் கௌதம தத் ஸூத்ரம் தஞ்சாந்தர்யாமிணமிதி, யோ வா இதங் கஶ்சித் ப்ரூயாத் வேத வேதேதி, யதா வேத்த ததா ப்ரூஹீதி ॥ 7.1 ॥

ஸ ஹோவாச வாயுர்வை கௌதம தத் ஸூத்ரம், வாயுனா வை கௌதம ஸூத்ரேணாயஞ்ச லோக: பரஶ்ச லோக: ஸர்வாணி ச பூதானி ஸந்த்ருப்தானி பவந்தி, தஸ்மாத் வை கௌதம புருஷம் ப்ரேத-மாஹு: வ்யஸ்ரꣳஸிஷதாஸ்யாங்கானீதி, வாயுனா ஹி கௌதம ஸூத்ரேண ஸந்த்ருப்தானி பவந்தீத்-யேவமேவைதத் யாஜ்ஞவல்க்யாந்தர்யாமிணம் ப்ரூஹீதி ॥ 7·2 ॥

---

7.2. "கௌதமரே! வாயுவே அந்த ஸூத்ரம். வாயுவினலேயே இகமும் பரமும் எல்லா உயிர்களும் ஒன்ருகக் கட்டப்பட்டுள்ளன. கௌதமரே! அக்காரணத்தால் தான் இறந்து போன புருஷனைப்பற்றிக் கூறுகையில் அவனுடைய அங்கங்கள் கட்டு விட்டுப் போயின என்கின்றனர். கௌதமரே, வாயுவாகிய ஸூத்திரத்தாலேயே எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன."

"யாஜ்ஞவல்கியரே! அதுசரி. அந்தர்யாமியைப் பற்றிச் சொல்லும்"

यः पृथिव्यां तिष्ठन् पृथिव्या अन्तरो यं पृथिवी न वेद यस्य पृथिवी शरीरं यः पृथिवीमन्तरो यमयत्येष त आत्मान्तर्याम्यमृतः ॥ ७.३ ॥

यः सर्वेषु भूतेषु तिष्ठन्सर्वेभ्यो भूतेभ्योऽन्तरो यं सर्वाणि भूतानि न विदुर्यस्य सर्वाणि भूतानि शरीरं यः सर्वाणि भूतान्यन्तरो यमयत्येष त आत्मा अन्तर्याम्यमृतः ॥ ७.१५ ॥

ய: ப்ருதிவ்யாம் திஷ்ட்டன், ப்ருதிவ்யா அந்தரோ, யம் ப்ருதிவீ ந வேத, யஸ்ய ப்ருதிவீ ஶரீரம், ய: ப்ருதிவீமந்தரோ யமயத்-யேஷ த ஆத்மாந்தர்யாம்-யம்ருத : ॥ 7.3 ॥

ய: ஸர்வேஷு பூதேஷு திஷ்ட்டன் ஸர்வேப்ப்யோ பூதேப்ப்யோऽந்தரோ யம் ஸர்வாணி பூதானி ந விதுர்-யஸ்ய ஸர்வாணி பூதானி ஶரீரம், ய: ஸர்வாணி பூதான்யந்தரோ யமயத்-யேஷ த ஆத்மா அந்தர்யாம்-யம்ருத : ॥ 7.15 ॥

---

7.3. "எவர் பிருதிவியிலிருந்து கொண்டு பிருதிவியினுள் உறைகிறாரோ, எவரைப் பிருதிவி அறிந்து கொள்ளவில்லையோ, எவருக்குப் பிருதிவி உடலாகின்றதோ, எவர் பிருதிவியின் உள் நின்று அதை ஆள்கின்றாரோ அவர்தான் உன்னுடைய ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்றவர்.

7.15. "எவர் எல்லாப் பிராணிகளிடமும் இருந்துகொண்டு எல்லாப் பிராணிகளின் உள்ளும் உறைகின்றாரோ, எவரை எல்லாப் பிராணிகளும் அறிந்துகொள்ளவில்லையோ, எவருக்கு எல்லாப் பிராணிகளும் உடலாகின்றனவோ, எவர் எல்லாப் பிராணிகளுக்கும் உள் நின்று அவற்றை ஆள்கின்றாரோ, அவர் தான் உன்னுடைய ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்றவர்.

---

7.3. பி. சூ. 2.3.13.

7.15. ஒவ்வொரு பிராணிக்கும் உள்ள சரீரமும் இந்திரியங்களும் அந்தர்யாமிக்கும் சரீரமும் இந்திரியங்களும் ஆக அமைகின்றன. பிராணிக்கு இவை கர்மவசத்தால் அமைந்தவை. அந்தர்யாமிக்குக் கர்மத் தொடர்பின்றி அமைந்தவை.

ஒ—பார்ப்பவனுக்கு உள் நின்று பார்ப்பவனாகவும், நினைப்பவனுக்குப் பின் நின்று நினைப்பவனாகவும், தாங்குபவனாகவும், அனுபவிப்பவனாகவும்.

यो विज्ञाने तिष्ठन् विज्ञानादन्तरो यं विज्ञानं न वेद यस्य विज्ञान१ शरीरं यो विज्ञानमंतरो यमयत्येष त आत्मान्तर्याम्यमृतः ॥ ७.२२ ॥

अदृष्टो द्रष्टाऽश्रुतः श्रोताऽमतो मन्ताऽविज्ञातो विज्ञाता नान्योऽतोऽस्ति द्रष्टा नान्योऽतोऽस्ति श्रोता नान्योऽतोऽस्ति मन्ता

யோ விஜ்ஞானே திஷ்ட்டன் விஜ்ஞானு-தந்தரோ,யம் விஜ்ஞானம் ந வேத, யஸ்ய விஜ்ஞான१ ஶரீரம், யோ விஜ்ஞான-மந்தரோ யமயத்-யேஷ த ஆத்மாந்தர்யாம்-யம்ருத : ॥ 7.22 ॥

அத்ருஷ்டோ த்ரஷ்டாऽஶ்ருத: ஶ்ரோதாऽமதோ மந்தாऽவிஜ்ஞாதோ விஜ்ஞாதா; நான்யோऽதோऽஸ்தி த்ரஷ்டா, நான்யோऽதோऽஸ்தி ஶ்ரோதா, நான்யோऽதோऽஸ்தி மந்தா, நான்யோ ऽ

---

7.22. "எவர் அறிவில் இருந்துகொண்டு அறிவினுள் உறைகிறரோ, எவரை அறிவு அறிந்துகொள்ளவில்லையோ, எவருக்கு அறிவு உடலாகின்றதோ, எவர் அறிவினுள் நின்று அதை ஆள்கின்றரோ, அவர் தான் உன்னுடைய ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்றவர்.

7.23. "அவர் காணப்படாமல் காண்பவர், கேட்கப்படாமல் கேட்பவர், நினைக்கப்படாமல் நினைப்பவர், அறியப்படாமல் அறிபவர்; அவரைக்காட்டிலும் வேருகக் காண்பவர் இல்லை,

---

மகேசுவரனுகவும் இச்சரீரத்திலேயே எழுந்தருளியுள்ள பரமபுருஷன் பரமாத்மா எனப்படுகிருன். (கீ. 13.22).

ஒ—(யா தேவீ ஸர்வபூதேஷு ஶக்தி ரூபேண ஸம்ஸ்த்திதா ।
யா தேவீ ஸர்வபூதேஷு புத்தி ரூபேண ஸம்ஸ்த்திதா ।)

எந்த தேவி எல்லாப் பொருள்களிலும் சக்திவடிவாயிருக்கின்ருளோ, எந்த தேவி எல்லாப் பிராணிகளிலும் புத்திவடிவாய் இருக்கின்ருளோ—(தேவீ மாஹாத்மியம் : அத். 5: மார்க்கண்டேய புராணம்)

7.23. ஒ—'அது எங்குங் கைகால்களுடையது; எங்குங் கண்ணுந் தலையும் வாயுமுடையது; எங்குங் காதுகளையுடையது; உலகில் அனைத்தையும் வியாபித்து நிற்கின்றது. அறிவாயும் அறியத்தக்கதாயும் அறிவினல் அடையவேண்டிய பொருளாயும் எல்லோருடைய இருதயத்திலும் நிலையுள்ளதாயும் விளங்குவது அது. (கீ. 13.13, 17)

பி. சூ. 3.2.30

नान्योऽतोऽस्ति विज्ञातैष त आत्मा अन्तर्याम्यमृतोऽतोऽन्यदार्त
ततो होद्दालक आरुणिरुपरराम ॥ ७.२३ ॥

अथ वाचक्नव्युवाच ब्राह्मणा भगवन्तो हन्ताहमिमं द्वौ प्रश्नौ प्रक्ष्यामि तौ चेन्मे वक्ष्यति न वै जातु युष्माकं इमं कश्चिद्ब्रह्मोद्यं जेतेति पृच्छ गार्गीति ॥ ८.१ ॥

தோऽஸ்தி .விஜ்ஞாதைஷ த ஆத்மா அந்தர்யாம்-யம்ருதோऽதோऽன்யதார்த்தம் ததோ ஹோத்தாலக ஆருணி-ருபரராம ॥ 7.23 ॥

அத வாசக்னவ்-யுவாச ப்ராஹ்மணு பகவந்தோ ஹந்தாஹ-மிமந்த்வௌ ப்ரஶ்நௌ ப்ரக்ஷ்யாமி, தௌ சேன்-மே வக்ஷ்யதி ந வை ஜாது யுஷ்மாகம் இமம் கஶ்சித் பரஹ்மோத்யம் ஜேதேதி, ப்ருச்ச கார்க்கீதி ॥ 8.1 ॥

---

அவரைக் காட்டிலும் வேருகக் கேட்பவர் இல்லை, அவரைக் காட்டிலும் வேருக நினைப்பவர் இல்லை, அவரைக் காட்டிலும் வேருக அறிபவர் இல்லை. அவர் தான் உன்னுடைய ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்றவர். மற்ற எல்லாம் அழிவுள்ளது.''

இதைக்கேட்டு உத்தாலக ஆருணி ஒழிவடைந்தார்.

8.1. பிறகு வாசக்னுவின் புத்திரியான கார்க்கி : "பிராம்மணர்களே ! நான் இவரை இரண்டு கேள்விகள் கேட்க அனுமதியுங்கள். இவர் அக்கேள்விகளுக்கு விடையளித்துவிட்டால் உங்களில் ஒருவரும் இந்தப் பிரம்மவாதியை ஜயிக்கமுடியாது" என்ருர். (பிராம்மணர்கள்) "கார்க்கி, கேள்" என்றனர்.

---

இனி அன்றுந் திருவுருவங் காணுதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் — என்றுந் தான்
எவ்வுருவோ நும் பிரான் என்போர்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவமோது ?

—காரைக்காலம்மையார்.

सा होवाचाहं वै त्वा याज्ञवल्क्य यथा काश्यो वा वैदेहो वोग्रपुत्र उज्ज्यं धनुरधिज्यं कृत्वा द्वौ बाणवन्तौ सपत्नाधिव्याधिनौ हस्ते कृत्वोपोत्तिष्ठदेवमेवाहं त्वा द्वाभ्यां प्रश्नाभ्यां उपोदस्थां तौ मे ब्रूहीति पृच्छ गार्गीति ॥ ८.२ ॥

ஸா ஹோவாசாஹம் வை த்வா யாஜ்ஞவல்க்ய யதா காஶ்யோ வா வைதேஹோ வோக்ரபுத்ர உஜ்ஜ்யந் தனுரதிஜ்யங் க்ருத்வா, த்வௌ பாணவந்தௌ ஸபத்னாதிவ்யாதினௌ ஹஸ்தே க்ருத்வோபோத்திஷ்ட்ட-தேவமேவாஹம்-த்வா த்வாப்ப்யாம் ப்ரஶ்-னாப்ப்யாம் உபோதஸ்த்தாம், தௌ மே ப்ரூஹீதி, ப்ருச்ச கார்க்கீதி ॥ 8.2 ॥

---

8.2. "யாஜ்ஞவல்கியரே! காசிராஜனின் வீரபுத்திரனோ, விதேஹ வீரபுத்திரரோ தளர்ந்த வில்லை நிமிர்த்தி நாணேற்றிக் கொண்டு, எதிரிகளை மிகவருத்தும் பாணங்களைக் கையிலெடுத்துக் கொண்டு எதிரில் அருகாமையில் எப்படி நிற்பார்களோ அப்படி நான் உமக்கு முன் இரண்டு கேள்விகளுடன் நிற்கிறேன். அவை கட்குப் பதில் சொல்லும்." "கார்க்கியே, கேள்" என்றார்.

---

வாசக்னுவின் புத்திரியான கார்க்கி—உபநிஷத் காலத்தில் கார்க்கியைப் போல் பிரம்மவாதினிகளான ஸ்திரீகள் வித்வான்களின் சபைகளில் கலந்துகொண்டு வாதஞ் செய்தார்கள் என்பதற்கு இது அத்தாட்சி. கார்க்கி, மைத்ரேயி முதலிய ஸ்திரீகள் சில ஸம்பிரதாயங்களில் பிரம்மயக்ஞ தர்ப்பணத்தில் ரிஷிகளின் கூட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

குந்தி அதர்வ மந்திரங்களைக் கற்றதாக மகாபாரதங் கூறுகிறது. (ததஸ் தாமனவத்யாங்கீம் ப்ராஹாமாஸ ஸ த்விஜ: | மந்த்ரக்ராமாந் ததா ராஜன்-னதர்வ ஶிரஸி ஸ்த்திதம்) ம. பா. வனபர். 30. 20.

सा होवाच यदूर्ध्वं याज्ञवल्क्य दिवो यदवाक् पृथिव्या यदन्तरा द्यावापृथिवी इमे यद्भूतं च भवच्च भविष्यच्चेत्याचक्षते कस्मिंस्तदोतं च प्रोतं चेति ॥ ८.६ ॥

आकाश एव तदोतंच प्रोतं चेति कस्मिन्नु खल्वाकाश ओतश्च प्रोतश्चेति ॥ ८.७ ॥

स होवाचैतद्वै तदक्षरं गार्गि ब्राह्मणा अभिवदन्त्यस्थूलमनण्वह्रस्वमदीर्घमलोहितमस्नेहमच्छायं अमात्रमनन्तरमबाह्यं न तदश्नाति किंचन न तदश्नाति कश्चन ॥ ८.८ ॥

ஸா ஹோவாச யதூர்த்த்வம் யாஜ்ஞவல்க்ய திவோ, யதவாக் ப்ருதிவ்யா, யதந்தரா த்யாவாப்ருதிவீ, இமே யத் பூதஞ்ச பவச்ச பவிஷ்யச்-சேத்-யாசக்ஷதே கஸ்மிஂஸ்த-தோதஞ்ச ப்ரோதஞ் சேதி ॥ 8.6. ॥

ஆகாஶே ஏவ ததோதஞ்ச ப்ரோதஞ் சேதி, கஸ்மின்னு கல்வாகாஶ ஓதஶ்ச ப்ரோதஶ்-சேதி ॥ 8.7 ॥

ஸ ஹோவாசைதத்வை ததக்ஷரங் கார்க்கி ப்ராஹ்மணு அபிவதந்த்-யஸ்த்தூல-மநண்- வஹ்ரஸ்வ-மதீர்க்க-மலோஹித-மஸ்நேஹ-மச்சாயம்...அமாத்ர-மநந்தர-மபாஹ்யம் ந ததஶ்ஞுதி கிஞ்சன, ந ததஶ்ஞுதி கஶ்சன ॥ 8.8 ॥

---

8.6. "எது வானத்திற்கு மேலும், பூமிக்குக் கீழும் வானத்திற்கும் பூமிக்கும் இடையிலும் உள்ளதெனவும், எது இறந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் உள்ளதெனவும் கூறப்படுகிறதோ அது எதில் குறுக்கும் நெடுக்குமாகக் கோக்கப் பட்டுள்ளது?" என்று கேட்டாள்.

8.7. "ஆகாயத்தில் அது குறுக்கும் நெடுக்குமாகக் கோக்கப் பட்டுள்ளது." "எதனிடம் ஆகாயம் குறுக்கும் நெடுக்குமாகக் கோக்கப்பட்டிருக்கிறது?"

8.8. "கார்க்கி! பிரம்ம ஞானிகள் அதை அக்ஷரம் (அழிவற்றது) எனக் கூறுகிறார்கள். அது ஸ்தூலமுமன்று, ஸூக்ஷ்மமும்

---

8.8. பி. சூ. 1.3.10; 3.2.11.
ஒ.—நைனஞ்சிந்தந்தி சஸ்த்ராணி...(கீ. 2.23.)

एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि सूर्या-चंद्रमसौ विधृतौ तिष्ठत एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि द्यावा-पृथिव्यौ विधृते तिष्ठतः...यो वा एतदक्षरं गार्गि अविदित्वाऽस्मिंल्लोके जुहोति यजते तपस्तप्यते बहूनि वर्षसहस्राण्यन्तवदे-

ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸனே கார்க்கி, ஸூர்யா-சந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்ட்டத ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸனே கார்க்கி த்யாவா-ப்ருதிவ்யௌ வித்ருதே திஷ்ட்டத:... யோ வா ஏததக்ஷரங் கார்க்கி அவிதித்வாऽஸ்மிம்ல்லோகே ஜுஹோதி, யஜதே, தபஸ்-தப்யதே பஹூனி வர்ஷ-ஸஹஸ்ராண்-

---

அன்று; குட்டையுமன்று நெட்டையுமன்று; (நெருப்புப் போல்) சிவந்ததன்று; (தண்ணீர் போல்) ஈரமுள்ள தன்று; நிழலுள்ள தன்று; அளவுள்ள தன்று; அதற்கு உள்ளுமில்லை புறமுமில்லை; அது ஒன்றையும் உண்பது மில்லை, ஒன்றால் உண்ணப்படுவது மில்லை'' என்றார்.

8. 9-10. ''இந்த அக்ஷரத்தின் கட்டளையாலேயே சூரியனும் சந்திரனும் தத்தம் ஸ்தானங்களில் வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த அக்ஷரத்தின் கட்டளையாலேயே வானமும் பூமியும் தத்தம் ஸ்தானங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன....கார்க்கி! இந்த அக்ஷரத்தை அறியாமல் எவன் ஒருவன் இவ்வுலகில் பல்லாயிர வருஷங்கள் ஹோமம் செய்தாலும், யாகம் செய்தாலும், தவஞ் செய்தா

---

8. 9-10. ஒ—'' நேரேதா னிரவு பகல் கோடா வண்ணம்
நித்தம் வர உங்களை இந்நிலைக்கே வைத்தார்
யாரே அங்கவர் பெருமை என்னே என்பேன் ''
—தாயுமானவர்

ஒ—(க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஶந்தி.) புண்ணியந் தேய்ந் ததும் மீண்டும் அழிவுள்ள இவ்வுலகிற் புகுகின்றனர் (கீ. 2.21).
பி. சூ. 1.3.11; 1.3.16.

க்ருபண :—பெரும்பேற்றை எய்துதற்குரிய மனிதப் பிறவியை அடைந்தும் அதைப் பயன் படுத்திக்கொள்ளாமல் வீணாக்குபவன்

वास्य तद्भवति यो वा एतदक्षरं गार्गि विदित्वास्माँल्लोकात्प्रैति स कृपणोऽथ य एतदक्षरं गार्गि विदित्वास्माँल्लोकात्प्रैति स ब्राह्मणः ॥ ८.९-१० ॥

अस्मिन्नु खल्वक्षरे गार्गि आकाश ओतश्च प्रोतश्चेति ॥ ८.११ ॥

யந்தவதேவாஸ்ய தத்ப்பவதி; யோ வா ஏததக்ஷரங் கார்க்கி அவிதித்வா஽ஸ்மா⁴ லோகாத் ப்ரைதி ஸ க்ருபணோ஽த ய ஏததக்ஷரங் கார்க்கி விதித்வா஽ஸ்மா⁴ லோகாத் ப்ரைதி ஸ ப்ராஹ்மண: ॥ 8. 9-10. ॥

அஸ்மின்னு கல்வக்ஷரே கார்க்கி ஆகாஶ ஓதஶ்ச ப்ரோதஶ்சேதி ॥ 8.11 ॥

---

லும், அது எல்லாம் முடிவுடையதாகும். கார்க்கி! இந்த அக்ஷரத்தை அறியாமல் ஒருவன் இவ்வுலகை விட்டுச் சென்ருல் அவன் கிருபணன் எனப்படுவான்; இந்த அக்ஷரத்கை அறிந்துகொண்டு ஒருவன் இவ்வுலகை விட்டுச் சென்ருல் அவன் பிராம்மணன் எனப்படுவான்.

8.11. “ கார்க்கி! இந்த அக்ஷர வஸ்துவில்தான் ஆகாயம் குறுக்கும் நெடுக்குமாகக் கோக்கப்பட்டிருக்கிறது.”

---

கிருபணன். அவன் கருமமாகிற பணத்தினல் விலைக்கு வாங்கப்பட்ட அடிமை போன்றவன்.

8.11. (யதேவ ஸாக்ஷா-தபரோக்ஷாத் ப்ரஹ்ம, ய ஆத்மா ஸர்வாந்தரோ஽ஶநாயாதி ஸம்ஸார-தர்மாதீதோ, யஸ்மிந்-நாகாஶ ஓதஶ்ச ப்ரோதஶ்ச ஏஷா பரா காஷ்ட்டா, ஏஷா பராகதி-ரேதத் பரம் ப்ரஹ்ம, ஏதத் ப்ருதிவ்யாதே-ராகாஶாந்தஸ்ய ஸத்யஸ்ய ஸத்யம்) எந்த பிரம்மம் தனக்குத் தானே நேரில் காணக்கூடியதாயும் வேருென்றை வேண்டாததாயும் உளதோ, எது அனைத்துள்ளும் அந்தராத்மாவாய்ப் பசி முதலிய உலகப் பிணிகளைக் கடந்ததோ, எதினிடம் ஆகாசம் குறுக்கும் நெடுக்கும் கோக்கப்பட்டுள்ளதோ, அதுவே எல்லை நிலம், அதுவே பராங்கதி, அதுவே பரப்பிரம்மம், அதுவே பிருதிவி முதல் ஆகாசம் வரையுள்ள விவகார உண்மைப் பொருள்களில் பரமார்த்த உண்மையாயுள்ளது. (சங்.)
பி.சூ. 1.3.10.

सा होवाच ब्राह्मणा भगवन्तस्तदेव बहुमन्येध्वं यदस्मान्नमस्कारेण मुच्येध्वं न वै जातु युष्माकमिमं कश्चिद्ब्रह्मोद्यं जेतेति ततो ह वाचक्नव्युपरराम ॥ ८.१२ ॥

अथ होवाच ब्राह्मणा भगवन्तो यो वः कामयते स मा पृच्छतु सर्वे वा मा पृच्छत यो वः कामयते तं वः पृच्छामि सर्वान्वा वः पृच्छामीति ते ह ब्राह्मणा न दधृषुः ॥ ९.२७ ॥

॥ इति तृतीयोऽध्यायः ॥

ஸா ஹோவாச **ப்**ராஹ்மணு **ப**கவந்தஸ்-ததேவ **ப**ஹுமன்-யேத்**த்**வம், யதஸ்மாந்-நமஸ்காரேண முச்யேத்**த்**வம், ந வை ஜாது யுஷ்மாக-மிமங்-கஶ்சித் **ப்**ரஹ்மோத்**ய**ஞ் ஜேதேதி, ததோ ஹ வாசக்-னவ்-யுபரராம ॥ 8.12 ॥

அத ஹோவாச **ப்**ராஹ்மணு **ப**கவந்தோ யோ வ: காமயதே ஸ மா ப்ருச்சது ஸர்வே வா மா ப்ருச்சத, யோ வ: காமயதே தம் வ: ப்ருச்சாமி ஸர்வான் வா வ: ப்ருச்சாமீதி, தே ஹ **ப்**ராஹ்மணு ந **த**த்ருஷு: ॥ 9.27. ॥

॥ இதி த்ருதீயோऽத்**த்**யாய: ॥

---

8.12. "பெருமை வாய்ந்த பிராம்மணர்களே! இவரை நமஸ்கரித்து நீங்கள் விடுபடுவீர்களாயின் அதையே நீங்கள் பெரிதாய்க் கருதவேண்டும். இந்தப் பிரம்மவாதியை ஜயிக்கக்கூடியவர் உங்களில் ஒருவரும் இல்லை" என்று கூறி வாசக்னவி (கார்க்கி) ஒழிவடைந்தாள்.

9.27. "பெருமை வாய்ந்த பிராம்மணர்களே! உங்களில் யார் என்னைக் கேள்வி கேட்க விரும்பினாலும் கேட்கலாம்; எல்லோருமே கேட்டாலும் கேட்கலாம்; அல்லது உங்களில் யார் விரும்புகிறீர்களோ அவர்களைக் கேள்வி கேட்கிறேன்; எல்லோரையுமே வேண்டுமானாலும் கேட்கிறேன்" என்றார் (யாஜ்ஞவல்கியர்). அந்தப் பிராம்மணர்கள் துணியவில்லை.

மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

## ॥ चतुर्थोऽध्यायः ॥

जनको ह वैदेह आसांचक्रेऽथ ह याज्ञवल्क्य आवव्राज तꣳहोवाच याज्ञवल्क्य किमर्थमचारीः पशूनिच्छन्नण्वन्तानीत्युभयमेव सम्राडिति होवाच ॥ १.१ ॥

यदेव कश्चिदब्रवीत्तच्छृणवामेत्यब्रवीन्मे सत्यकामो जाबालो मनो वै ब्रह्मेति यथा मातृमान्पितृमानाचार्यवान्ब्रूयात्तथा

## ॥ சதுர்த்தோऽத்த்யாய: ॥

ஜனகோ ஹ வைதேஹ ஆஸாஞ் சக்ரேऽத ஹ யாஜ்ஞவல்க்ய ஆவவ்ராஜ, தꣳ ஹோவாச யாஞ்ஞவல்க்ய கிமர்த்தமசாரீ: பஶூநிச்சந்-நண்வந்தானீத்-யுபய-மேவ ஸம்ராடிதி ஹோவாச ॥ 1.1 ॥

யதேவ கஶ்சிதப்ரவீத்-தச்-ச்ருணவாமேத்-யப்ரவீன்-மே ஸத்ய-காமோ ஜாபாலோ மனோ வை ப்ரஹ்மேதி; யதா மாத்ருமான் பித்ரு-

---

## நான்காவது அத்தியாயம்

1.1. விதேஹ மன்னராகிய ஜனகர் சபையில் வீற்றிருக்கையில் யாஜ்ஞவல்கியர் வந்தார்.

"யாஜ்ஞவல்கியரே! எதை நாடி வந்தீர்? பசுக்களை விரும்பியா, ஸூக்ஷ்மமான விஷயங்களைப் பற்றிப் பேசவா?" என்றார்.

"அரசே! இரண்டையுங் குறித்தே," என்றார்.

1·6. "உமக்கு எவராவது உபதேசித்தது ஒன்று சொல்லும், கேட்போம்."

---

1.1. உலக வாழ்க்கையிலிருந்துகொண்டே ஆத்ம ஞானத்தைப் பெற்றவர்க்கு உதாரணமாக ஜனங்கள் எப்போதும் ஜனகமஹாராஜாவைச் சொல்லுகின்றனர். மானிட ஜீவிய சரித்திரம் முழுவதிலும் இந்த உதாரணம் ஒன்றே தான் காணப்படுகிறது. நீ உலகில் இருந்துகொண்டே ஜனகரைப்போல் இருப்பதாக நினைந்து ஏமாந்துவிடாதே. பல மக்களைப் பெறுவதாலேயே பலருக்கு 'ஜனகர்' (பிதா) எனும் பெயர் பொருத்தமாகும். ஜனகரைப் போன்று ஞானம் பெற்றதாலன்று. அந்த ஞானம் அரிதினும் அரிது.
(ரா. கி.)

तज्जाबालोऽब्रवीन्मनो वै ब्रह्मेत्यमनसो हि किंस्यादित्यब्रवीत्तु ते तस्यायतनं प्रतिष्ठा न मे अब्रवीदित्येकपाद्वा एतत्सम्राडिति स वै नो ब्रूहि याज्ञवल्क्य मन एवायतनमाकाशः प्रतिष्ठाऽऽनन्द इत्येनदुपासीत का आनन्दता याज्ञवल्क्य मन एव सम्राडिति होवाच मनसा वै सम्राट् स्त्रियमभिहार्यते तस्यां प्रतिरूपः पुत्रो

மா-ஞசார்யவான் ப்ரூயாத் ததா தஜ்-ஜாபாலோऽப்ரவீன்-மனோ வை ப்ரஹ்மேத்-யமனஸோ ஹி கிம் ஸ்யா-தித்யப்ரவீத் து தே தஸ்யாயதனம் ப்ரதிஷ்டாம், ந மே அப்ரவீ-தித்யேகபாத்வா ஏதத் ஸம்ராடிதி, ஸ வை நோ ப்ரூஹி யாஜ்ஞவல்க்ய, மன ஏவாயதன-மாகாஶ: ப்ரதிஷ்டாऽऽனந்த இத்யேன-துபாஸீத ; காऽऽனந்ததா யாஜ்ஞவல்க்ய, மன ஏவ ஸம்ராடிதி ஹோவாச மனஸா வை ஸம்ராட் ஸ்த்ரிய-மபிஹார்யதே, தஸ்யாம் ப்ரதிரூப: புத்ரோ ஜாயதே, ஸ

---

"ஜாபால ஸத்தியகாமர் எனக்குபதேசித்ததாவது, மனமே பிரம்மம் என்பதாகும்."

"(ஞானம் புகட்டத்) தாயை உடையவரும் தகப்பனை உடையவரும் ஆசாரியனை உடையவரும் எப்படி உபதேசிப்பாரோ அப்படி (வழக்கம்போல்) மனம் பிரம்மம் என்று ஜாபாலர் உபதேசித்திருக்கிறார். (அது உண்மைதான்) மனது இல்லாதவனுக்கு என்ன உண்டு? ஆனால் அதற்கு (பிரம்மத்துக்கு) ஆயதனம் (இருப்பிடம்) இன்னதென்றும், பிரதிஷ்டை (அடிப்படை) இன்னதென்றும் உபதேசித்தாரா?"

"எனக்கு உபதேசிக்கவில்லை."

"(அப்படியாயின் நீர் அறிந்தது) பிரம்மத்தின் கால் பங்கு தான்."

"ஆயின் நீர் அதை எமக்கு உபதேசியும், யாஜ்ஞவல்கியரே!"

"மனந் தான் அதின் ஆயதனம், ஆகாசம் பிரதிஷ்டை, அதை ஆனந்தம் என்று உபாசிக்கவேண்டும்."

"யாஜ்ஞவல்கியரே! ஆனந்தத்தின் வடிவம் என்ன?"

"அரசே! மனமே (ஆனந்தப்பிரம்மத்தின் வடிவம்). அரசே! மனத்தாலேயன்றோ ஒருவன் ஸ்திரீயை விரும்பி நாடுவதும், அவளிடம் தன் வடிவுடைய புத்திரன் பிறப்பதும். அவன் ஆனந்த

जायते स आनन्दो मनो वै सम्राट् परमं ब्रह्म नैनं मनो जहाति सर्वाण्येनं भूतान्यभिरक्षन्ति देवो भूत्वा देवानप्येति य एवं विद्वानेतदुपास्ते हस्त्यृषभꣳसहस्रं ददामीति होवाच जनको वैदेहः सहोवाच याज्ञवल्क्यः पिता मेऽमन्यत नाननुशिष्य हरेतेति ॥ १.६ ॥

जनको ह वैदेहः कूर्चादुपावसर्पन्नुवाच नमस्तेऽस्तु याज्ञवल्क्यानु माशाधीति स होवाच यथा वै सम्राण्महान्तमध्वानमेष्यन् रथं वा नावं वा समाददीतैवमेवैताभिरुपनिषद्भिः

ஆனந்தோ மனோ வை ஸம்ராட் பரமம் ப்ரஹ்ம, நைனம் மனோ ஜஹாதி ஸர்வாண்யேனம் பூதான்யபிரக்ஷந்தி; தேவோ பூத்வா தேவானப்யேதி, ய ஏவம் வித்வானேத-துபாஸ்தே ஹஸ்திருஷபꣳ ஸஹஸ்ரம் ததாமீதி ஹோவாச ஜனகோ வைதேஹ:, ஸ ஹோவாச யாஜ்ஞவல்க்ய: பிதாமே஽மன்யத நானனுஶிஷ்ய ஹரேதேதி ॥ 1.6 ॥

ஜனகோ ஹ வைதேஹ: கூர்ச்சா-துபாவஸர்ப்பன்-னுவாச, நமஸ்தே஽ஸ்து யாஜ்ஞவல்க்யானு மாஶாதீதி; ஸ ஹோவாச யதா வை ஸம்ராண்-மஹாந்த-மத்த்வான-மேஷ்யன், ரதம் வா நாவம் வா ஸமாததீதைவ-மேவைதாபி-ருபநிஷத்ப்பி: ஸமாஹிதாத்மாஸ்-

---

வடிவாகிறான். அரசே! மனமே பரப்பிரம்மம். (இங்ஙனம் அறிந்த) இவனை மனம் விட்டகலாது. இவனை எல்லா ஜீவர்களும் நாடிவருகின்றனர். இங்ஙனம் அறிந்து இதை உபாசிப்பவன் தெய்வமாயிருந்து தெய்வங்களுடன் ஒன்றுபடுகிறான்.''

''யானை போன்ற ரிஷபத்துடன் கூடிய ஆயிரம் பசுக்களை உமக்கு அளிக்கின்றேன்,'' என்றார், வைதேஹ ஜனகர்.

''(ஞானத்தை) முழுவதும் போதிக்காமல் (தானத்தை) வாங்கிக்கொள்ளக்கூடாதென்று என் தகப்பனார் கருதி வந்தார்'' என்றார் யாஜ்ஞவல்கியர்.

2·1. வைதேக ஜனகர் தன் ஆசனத்திலிருந்து எழுந்து ''யாஜ்ஞவல்கியரே! உம்மை நமஸ்கரிக்கின்றேன்; எனக்கு உபதேசியுங்கள்'' என்று பிரார்த்தித்தார். ''அரசே! எங்ஙனம் நீண்ட

समाहितात्मास्येवं वृन्दारक आढ्यः सन्नधीत वेद उक्तोपनिषत्क इतो विमुच्यमानः क्व गमिष्यसीति नाहं तद्भगवन्वेद यत्र गमिष्यामीत्यथ वै तेऽहं तद्वक्ष्यामि यत्र गमिष्यसीति ब्रवीतु भगवानिति ॥ २.१ ॥

स एष नेति नेत्यात्माऽगृह्यो नहि गृह्यते अशीर्यो नहि शीर्यतेऽसङ्गो नहि सज्जतेऽसितो न व्यथते न रिष्यत्यभयं वै

யேவம் வ்ருந்தாரக ஆட்ட்ய: ஸந்நதீத வேத உக்தோபநிஷத்க இதோ விமுச்யமான: க்வ கமிஷ்யஸீதி; நாஹம் தத்ப்பகவன் வேத யத்ர கமிஷ்யாமீத்யத வை தேऽஹம் தத் வக்ஷ்யாமி யத்ர கமிஷ்யஸீதி, ப்ரவீது பகவானிதி ॥ 2·1 ॥

ஸ ஏஷ நேதி நேத்யாத்மாऽக்ருஹ்யோ ந ஹி க்ருஹ்யதே, அஶீர்யோ ந ஹி ஶீர்யதேऽஸங்கோ ந ஹி ஸஜ்ஜதேऽஸிதோ ந வ்யததே, ந ரிஷ்யத்-யபயம் வை ஜனக ப்ராப்தோஸீதி ஹோவாச

---

பிரயாணம் செல்ல விரும்புபவன் தேரையோ படகையோ தேடிக் கொள்வானே அங்ஙனம் நீர் இவ்வுபநிஷதங்களுடன் கூடியவரா யிருக்கின்றீர். தவிர எல்லோருடைய மதிப்புக்கும் உரியவராயும், செல்வம் படைத்தவராயும், வேதங்களைக் கற்றவராயும், உபநிஷ தங்கள் உபதேசிக்கப் பெற்றவராயும் இருக்கிறீர். இங்கிருந்து விடுபட்டபின் நீர் எங்கு செல்வீர் (எதை அடைவீர்) கூறும்," என்றார்.

"ஐயனே! நான் எங்கு செல்வேன் (எதை அடைவேன்) என்று அறியேன்."

"ஆயின், நீர் எங்கு செல்வீர் (எதை அடைவீர்) என்பதை நான் உமக்குக் கூறுகிறேன்."

"ஐயனே! கூறி யருளுங்கள்."

2.4. "(நீர் அடைவது பரமாத்மா.) அவ்வாத்மாவை (நேதி, நேதி) 'அல்ல,' 'அல்ல' என்று தான் கூறலாம். அது அறிவுக் குப் பிடிபடாதது, பிடிப்படுவதல்ல; அழிவில்லாதது, அழிக்கப்படுவ

जनक प्राप्तोसीति होवाच याज्ञवल्क्यः स होवाच जनको वैदेहोऽभयं त्वागच्छताद्याज्ञवल्क्य यो नो भगवन्नभयं वेदयसे नमस्तेस्त्विमे विदेहा अयमहमस्मि ॥ २.४ ॥

जनकꣳह वैदेहं याज्ञवल्क्यो जगाम स मेने न वदिष्य इत्यथ ह यज्जनकश्च वैदेहो याज्ञवल्क्यश्चाग्निहोत्रे समूदाते तस्मै ह याज्ञवल्क्यो वरं ददौ स ह कामप्रश्नमेव वव्रे तꣳ हास्मै ददौ तꣳ सम्राडेव पूर्वं पप्रच्छ ॥ ३.१ ॥

யாஜ்ஞவல்க்ய:, ஸ ஹோவாச ஜனகோ வைதேஹோऽபயந் த்வாகச்-சதாத்; யாஜ்ஞவல்க்ய யோ நோ பகவன்-னபயம் வேதயஸே நமஸ் தேऽஸ்த்-விமே விதேஹா அயமஹமஸ்மி ॥ 2.4 ॥

ஜனகꣳ ஹ வைதேஹம் யாஜ்ஞவல்க்யோ ஜகாம, ஸ மேனே ந வதிஷ்ய இத்யத ஹ யஜ்ஜனகஶ்ச வைதேஹோ யாஜ்ஞவல்க்யோ வரந் ததௌ, ஸ ஹ காமப்ரஶ்ன-மேவ வவ்ரே, தꣳ ஹாஸ்மை ததௌ, தꣳ ஸம்ராடேவ பூர்வம் பப்ரச்ச ॥ 3.1 ॥

---

தல்ல ; பற்றில்லாதது, பற்றப்படுவதல்ல ; கட்டுப்படாதது, கட்டப் படுவதல்ல, நஷ்டப்படுவதல்ல. அந்த பயமற்ற நிலையை நீர் அடைந்தவராவீர் !'' என்றார், யாஜ்ஞவல்கியர்.

'' யாஜ்ஞவல்கியரே ! தேவரீர் எந்த பயமற்ற நிலையை எனக்கு உபதேசித்தீரோ அந்த பயமற்ற நிலை உம்மையடைந்து நிலைத்திருக் கட்டும். உம்மை நமஸ்கரிக்கின்றேன். இந்த விதேக நாடும் அடியேனும் உமக்கடிமை,'' என்றார் வைதேஹ ஜனகர்.

3.1. வைதேக ஜனகரிடம் யாஜ்ஞவல்கியர் (ஒரு சமயம்) பேசுவதில்லை என்று எண்ணிக்கொண்டு சென்றார். (ஆனால் முன் னொரு தடவை) வைதேக ஜனகருக்கு அக்னிஹோத்ரத்தைப்பற் றிப் பேசியபோது) யாஜ்ஞவல்கியர் ஒரு வரம் கொடுத்திருந்தார். அவர் விரும்பிய கேள்விகளைக் கேட்பதையே வரமாக விரும்பினார். யாஜ்ஞவல்கியரும் அதை அளித்திருந்தார். (அதை நினைந்து) அரசரே முதலில் கேட்க ஆரம்பித்தார்.

याज्ञवल्क्य किं ज्योतिरयं पुरुष इति। आदित्यज्योतिः सम्राडिति होवाचाऽऽदित्येनैवायं ज्योतिषाऽऽस्ते पल्ययते कर्म कुरुते विपल्येतीत्येवमेवैतद्याज्ञवल्क्य ॥ ३.२ ॥

अस्तमित आदित्ये याज्ञवल्क्य चन्द्रमस्यस्तमिते शान्तेऽग्नौ शान्तायां वाचि किं ज्योतिरेवायं पुरुष इति आत्मैवास्य ज्योतिर्भवतीत्यात्मनैवायं ज्योतिषास्ते पल्ययते कर्म कुरुते विपल्येतीति ॥ ३.६ ॥

யாஜ்ஞவல்க்ய கிஞ் ஜ்யோதி-ரயம் புருஷ இதி। ஆதித்ய ஜ்யோதி: ஸம்ராடிதி ஹோவாசாऽऽதித்யேனைவாயஞ்ஜ்யோதிஷாऽऽஸ்தே பல்யயதே கர்மகுருதே விபல்யேதீத்-யேவமேவைதத் யாஜ்ஞ வல்க்ய ॥ 3.2 ॥

அஸ்தமித ஆதித்யே, யாஜ்ஞ்வல்க்ய, சந்த்ரமஸ்-யஸ்தமிதே, ஶாந்தேऽக்னௌ, ஶாந்தாயாம் வாசி, கிஞ் ஜ்யோதி-ரேவாயம் புருஷ இதி ; ஆத்மைவாஸ்ய ஜ்யோதிர்ப்பவதீத்-யாத்மனை-வாயஞ் ஜ்யோதிஷாஸ்-தே பல்யயதே கர்ம குருதே, விபல்யேதீதி ॥ 3.6 ॥

---

3.2 "யாஜ்ஞவல்கியரே! இந்தப் புருஷனுக்கு ஒளியாவது எது?"

"அரசே! சூரியன் தான் ஒளி. சூரிய ஒளியாலேயே இவன் இருக்கிறான், வெளியே செல்கிறான், வேலை செய்கிறான், திரும்பி வருகிறான்," என்றார்.

"யாஜ்ஞவல்கியரே! அது சரிதான்."

3.6. "ஆனால் யாஜ்ஞவல்கியரே! சூரியனும் அஸ்தமித்துச் சந்திரனும் அஸ்தமித்து அக்கினியும் ஒடுங்கி வாக்குங் கூட மௌனமாகிவிட்டால் இந்தப் புருஷனுக்கு ஒளியாவது எது?"

"ஆத்மாவே இவனுக்கு ஒளியாகிறது, ஆத்ம ஒளியாலேயே இவன் இருக்கிறான், வெளியே செல்கிறான், வேலைசெய்கிறான், திரும்பி வருகிறான்."

---

3.6. ஆத்ம ஒளியாலேயே—இந்த ஒளி சரீரத்தைச் சேர்ந்ததன்று. குருடனும் கனவு காணும்போது, தான் ஏற்கெனவே கண்ட காக்ஷிகளைக் காண்கிறான். இது மனத்தைச் சேர்ந்ததும் அன்று. மனமும் அன்னமய மேயாதலால் அதற்கும் சுய ஒளி கிடையாது. இவ்வொளி எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்கிறது ; இதை வேறொன்றும் பிரகாசிக்கச் செய்யாது.

कतम आत्मेति योऽयं विज्ञानमयः प्राणेषु हृद्यन्तर्ज्योतिः पुरुषः स समानः सन्नुभौ लोकावनुसंचरति ध्यायतीव लेलायतीव स हि स्वप्नो भूत्वेमं लोकमतिक्रामति मृत्यो रूपाणि ॥ ३.७ ॥

கதம ஆத்மேதி யோऽயம் விஜ்ஞானமய: ப்ராணேஷு ஹ்ருத்யந்தர்-ஜ்யோதி: புருஷ:, ஸ ஸமான: ஸன்னுபௌ லோகாவனுஸஞ்சரதி, த்யாயதீவ லேலாயதீவ, ஸ ஹி ஸ்வப்னோ பூத்வேமம் லோக-மதிக்ராமதி ம்ருத்யோ ரூபாணி ॥ 3.7 ॥

---

3.7. "எந்த ஆத்மா?"

"எந்த ஆத்மா (வெளியே சஞ்சாரம் செய்யும்) பிராணன்களுக்கு (இந்திரிய வியாபாரங்களுக்கு) விஜ்ஞானமயமாகவும், இருதயத்தில் (புத்தி குகையில்) உள்ளே புருஷனாகிய ஒளியாகவும் உள்ளதோ அந்த ஆத்மா தான். அது (கூடும் பொருளுடன்) ஸமானமாயிருந்து கொண்டு, இரண்டு உலகங்களிலும் (உள்ளும் வெளியும், இகத்தும் பரத்தும்) தியானம் செய்வது போலும், ஊசலாடுவது போலும் சஞ்சரிக்கிறது. அது ஸ்வப்னத்தில் இருந்து சாவினால் கவரப்பட்ட வடிவங்களையுடைய இவ்வுலகைத் தாண்டிச் செல்கிறது.

---

3.7. ஆத்ம ஒளி புத்தியின் மூலமாக மனத்திலும், மனத்தின் மூலமாக இந்திரியங்களிலும், இந்திரியங்களின் மூலமாக மற்ற அவயவங்களிலும் காணப்படுகிறது. அதனால் தான் ஜடமாகிய உடலும் சைதன்யம் உடையதாகக் காணப்படுகிறது.

ஆத்ம ஒளி எது எதைப் பிரகாசிக்கச் செய்கிறதோ அதனதன் வடிவத்தை அடைந்தாற்போல் காண்கிறது. சூரிய ஒளியானது ஒரு வர்ணக் கண்ணாடி வழி வந்தால் அந்த வர்ணத்தையடைவது போல் ஆத்ம ஒளி புத்தி வழிவரும்போது (த்யாயதீவ) நினைப்பதுபோல் காண்கிறது. உண்மையில் ஆத்மா ஒன்றையும் நினைப்பதில்லை.

பி. சூ. 2.3.24; 2.3.31.

स वा अयं पुरुषो जायमानः शरीरमभिसंपद्यमानः पाप्मभिः सꣳसृज्यते स उत्क्रामन् म्रियमाणः पाप्मनो विजहाति ॥ ३.८ ॥

तस्य वा एतस्य पुरुषस्य द्वे एव स्थाने भवत इदं च परलोक स्थानं च सन्ध्यं तृतीयꣳस्वप्नस्थानं तस्मिन् सन्ध्ये स्थाने तिष्टन्नेते उभे स्थाने पश्यतीदं च परलोक स्थानं च ।......

ஸ வா அயம் புருஷோ ஜாயமான:, ஶரீர-மபிஸம்பத்யமான:, பாப்மபி: ஸ꣱ஸ்ருஜ்யதே, ஸ உத்க்ராமன், ம்ரியமாண:, பாப்மனோ விஜஹாதி ॥ 3.8 ॥

தஸ்ய வா ஏதஸ்ய புருஷஸ்ய த்வே ஏவ ஸ்த்தானே பவத இதஞ்ச பரலோகஸ்த்தானஞ்ச, ஸந்த்த்யந் த்ருதீய꣱ ஸ்வப்ன-ஸ்த்தானந் தஸ்மின் ஸந்த்த்யே ஸ்த்தானே திஷ்ட்டன்னேதே உபே

---

3.8. இந்தப்புருஷன் பிறக்கும்போது சரீரத்தையடைந்து பாவங்களுடன் கூடுகிறான். சாகும்போது சரீரத்தை விட்டுக் கிளம்பிப் பாவங்களை உதறிவிடுகிறான்.

3.9. இந்தப் புருஷனுக்கு இரண்டு இருப்பிடங்களே உள்ளன—இதுவும் பரலோகஸ்தானமும். இவை கூடுமிடம் மூன்றாவதான ஸ்வப்னஸ்தானம். அந்த ஸந்திஸ்தானத்தில் நின்று கொண்டு இதையும் பரலோக ஸ்தானத்தையும், இரண்டையும் பார்க்கிறான்...எப்போது தூங்குகிறானோ, அப்போது எல்லாவற்றை

---

3.8. பாவங்களுடன் கூடுகிறான்—சரீரத்தில் ஆத்மபாவனை ஏற்படும்போதே இவன் பிறக்கிறான். அப்போதே காரியகரணங்களுடன்கூடி தர்மத்தையும் அதர்மத்தையுஞ் செய்கிறான். இந்தக் கூட்டுறவே பாவங்களுடன் கூடுதலாம். இந்தக் கூட்டுறவு விடும்போது அச்சரீரத்துடன் அது சம்பந்தமான பிராரப்த நாசத்தால் பாவங்களை உதறிவிடுகிறான்.

ஒ—ஞானியானவன் சரீரம் நழுவும் முன்னரே (ஶரீரே பாப்மனோ ஹித்வா) சரீரத்தில் அதன் பாவங்களை நீத்து பிரம்மானந்தத்தை யனுபவிக்கிறான். (தை. 2.5).

இறப்பும் பிறப்பும், உறக்கமும் விழிப்பும் போல.

ஒ—உறங்குவதுபோலுஞ் சாக்காடு உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு. பி. சூ. 2.3.16.

स यत्र प्रस्वपित्यस्य लोकस्य सर्वावतो मात्रामुपादाय स्वयं विहत्य स्वयं निर्माय स्वेन भासा स्वेन ज्योतिषा प्रस्वपित्यत्रायं पुरुषः स्वयं ज्योतिर्भवति ॥ ३.९ ॥

आराममस्य पश्यन्ति न तं पश्यति कश्चनेति ॥ ३.१४ ॥

स वा एष एतस्मिन् संप्रसादे रत्वा चरित्वा दृष्ट्वैव पुण्यंच पापं च पुनः प्रतिन्यायं प्रतियोन्या द्रवति स्वप्नायैव स यत्त

ஸ்த்தானே பஶ்யதீதஞ்ச பரலோக ஸ்த்தானஞ்ச ।...ஸ யத்ர ப்ரஸ்வபித்-யஸ்ய லோகஸ்ய ஸர்வாவதோ மாத்ரா-முபாதாய ஸ்வயம் விஹத்ய ஸ்வயம் நிர்மாய ஸ்வேன பாஸா ஸ்வேன ஜ்யோதிஷா ப்ரஸ்வபித்-யத்ராயம் புருஷ: ஸ்வயஞ் ஜ்யோதிர்பவதி ॥ 3.9 ॥

ஆராம மத்ர பஶ்யந்தி ந தம் பஶ்யதி கஶ்சனேதி ॥ 3.14 ॥

ஸ வா ஏஷ ஏதஸ்மின் ஸம்ப்ரஸாதே ரத்வா, சரித்வா, த்ருஷ்ட்-வைவ புண்யஞ் ச பாபஞ் ச, புன: ப்ரதிந்யாயம் ப்ரதியோன்யா-

---

யும் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகினின்று ஒரு அம்சத்தை எடுத்துக்கொண்டு, தன்னையே ஸம்ஹரித்துத் தன்னை மீண்டும் சிருஷ்டித்துக் கொண்டு, தன்னுடைய காந்தியால், தன்னுடைய ஒளியால் கனவு காண்கிறன். இங்கு இந்தப் புருஷன் ஸ்வயஞ் ஜோதியாகிறன்.

3.14. "இவனுடைய விளையாட்டு வனத்தை எல்லோரும் பார்க்கிறர்கள். இவனைப் பார்ப்பவர் எவரும் இல்லை." என்பர்.

3.15. "இவன் (ஸ்வப்னத்தில்) புண்யத்தையும் பாவத்தையும் பார்த்துக்கொண்டு மகிழ்ந்து திரிந்து விட்டுத் துன்பம் நீங்கிய

---

3.15. தொடர்பாகிய மனைவி, மக்கள், சுற்றம், உடைமை இவற்றுடன் கூடிய உடல் இரயில் வண்டித்தொடர் போன்றது. எஞ்ஜின் அந்தக்கரணம். வண்டியில் ஏறிச் செல்லும் பிரயாணி ஜீவன். பிராரப்த வேகத்தால் ஓடுமிடத்தில் ஓடி, நிற்குமிடத்தில் நிற்பதை இவன் பார்த்துக் கொண்டிருக்கும் சாக்ஷி. இவன் இறங்குமிடம் வந்ததும் வண்டியை விட்டு இறங்கிவிடுகிறன்.

किंचित्पश्यत्यनन्वागतस्तेन भवत्यसंगो ह्ययं पुरुष इत्येवमेवैतद्याज्ञवल्क्य सोऽहं भगवते सहस्रं ददाम्यत ऊर्ध्वं विमोक्षायैव ब्रूहीति ॥ ३.१५ ॥

तद्यथा महामत्स्य उभे कूलेऽनुसंचरति पूर्वं चापरं चैवमेवायं पुरुष एतावुभावन्तावनुसंचरति स्वप्नांतं च बुद्धांतं च ॥ ३.१८ ॥

த்ரவதி ஸ்வப்நாயைவ; ஸ யத் தத்ர கிஞ்சித் பஶ்யத்-யனன்வாகதஸ்-தேன-பவத்-யஸங்கோ ஹ்யயம் புருஷ இத்யேவமேவைதத் யாஜ்ஞ-வல்க்ய ஸோऽஹம் பகவதே ஸஹஸ்ரந் ததாம்-யத ஊர்த்த்வம் விமோக்ஷாயைவ ப்ரூஹீதி ॥ 3.15 ॥

தத்யதா மஹாமத்ஸ்ய உபே கூலேऽனுஸஞ்சரதி, பூர்வஞ் சாபரஞ்சைவ-மேவாயம் புருஷ ஏதாவுபாவந்தா-வனுஸஞ்சரதி, ஸ்வப்நாந்தஞ்ச புத்தாந்தஞ்ச ॥ 3.18 ॥

---

நிலையை (ஸுஷுப்தியை) அடைகிறான். சென்ற வழியிலேயே திரும்பி மீண்டும் ஸ்வப்நாவஸ்தைக்கு வருகிறான். அங்கு எதைதைப் பார்க்கிறானோ அதனால் தொடரப் படுவதில்லை; ஏனெனில் இந்தப் புருஷன் பற்றில்லாதவன்.'' ''யாஜ்ஞவல்கியரே! அது அப்படித்தான் (என்று அறிந்துகொண்ட) அடியேன் தேவரீருக்கு ஆயிரம் (பசுக்களைத்) தருகிறேன். இதற்கு மேலும் மோக்ஷத்திற் குரியதையே உபதேசித்தருள்வீர்.''

3.18. ''எங்ஙனம் ஒரு பெரிய மீன் இரு கரைகளுக்கும் முன்னும் பின்னும் சென்று சஞ்சரிக்குமோ அங்ஙனமே இப்

---

எஞ்ஜின் பூட்டப்பெற்று இரயில் வண்டியோடுவது போன்றது ஜாக்கிரம். எஞ்ஜின் பிரிந்து போய்த் தண்ணீர் குடித்துப் புதிய கரி யெடுத்துக் கொண்டு திரும்பி வருவது ஸ்வப்னம். அப்போது வண்டி

तद्यथास्मिन्नाकाशे श्येनो वा सुपर्णो वा विपरिपत्य श्रान्तः संहृत्य पक्षौ संलयायैव ध्रियत एवमेवायं पुरुष एतस्मा अन्ताय धावति यत्र सुप्तो न कंचन कामं कामयते न कंचन स्वप्नं पश्यति ॥ ३.१९ ॥

यदेव जाग्रद्भयं पश्यति तदत्राविद्यया मन्यतेऽथ यत्र देव इव राजेवाहमेवेदं सर्वोऽस्मीति मन्यते सोऽस्य परमो लोकः ॥ ३.२० ॥

தத்யதாஸ்மின்னுகாஶே ஶ்யேனோ வா ஸுபர்ணோ வா விபரிபத்ய, ஶ்ராந்த: ஸம்ஹ்ருத்ய பக்ஷௌ, ஸம்லயாயைவ த்ரியத ஏவமேவாயம் புருஷ ஏதஸ்மா அந்தாய தாவதி, யத்ர ஸுப்தோ ந கஞ்சன காமங் காமயதே, ந கஞ்சன ஸ்வப்னம் பஶ்யதி ॥ 3.19 ॥

யதேவ ஜாக்ரத்ப்பயம் பஶ்யதி, ததத்ராவித்யயா மன்யதேऽத யத்ர தேவ இவ ராஜேவாஹமேவேதம் ஸர்வோऽஸ்மீதி மன்யதே, ஸோऽஸ்ய பரமோ லோக: ॥ 3.20 ॥

---

புருஷன் ஸ்வப்னம் ஜாக்கிரமாகிய இரு நிலைகளுக்கும் சென்று சஞ்சரிக்கிறான்.

3.19. "எங்ஙனம் ஒரு பருந்தோ கருடனோ வான வெளியில் பறந்து களைத்துப் போய்ச் சிறகுகளை அசையாமல் பரப்பிக்கொண்டு கூட்டை நோக்கிச் செல்லுமோ அங்ஙனமே இப்புருஷன் ஆழ்ந்து உறங்கும் எந்நிலையில் ஒரு ஆசைக்கும் ஆசைப்படுவதில்லையோ ஒரு கனவையுங் காண்பதில்லையோ அந்நிலையை நோக்கி ஆர்வத்துடன் செல்லுகிறான்.

3.20. "ஜாக்ரத்தில் எதாவது பயத்தைப் பார்த்தால் அதை இங்கும் (ஸ்வப்னத்தில்) அவித்யா வாஸனையால் பார்ப்பது போல்

---

விடப்பட்ட இடத்தில் அசைவற்றிருக்கும். எஞ்ஜினும் செயலற்று வண்டியும் ஓடாமல் நிற்கும் நிலை ஸுஷுப்தி. (ரமண மஹரிஷி).

3.19. ஒரு கனவையுங் காண்பதில்லையோ—ஜாக்கிரத்தில் காண்பதுங் கனவேயாம். (ஜாகரிதேऽபி யத்-தர்ஶனம் ததபி ஸ்வப்னம் மன்யதே ஶ்ருதி:)

तद्वा अस्यैतदतिच्छन्दा अपहतपाप्माऽभयꣳ रूपं तद्यथा प्रियया स्त्रिया संपरिष्वक्तो न बाह्यं किंचन वेद नान्तरमेवमेवायं पुरुषः प्राज्ञेनात्मना संपरिष्वक्तो न बाह्यं किंचन वेद नान्तरं तद्वा अस्यैतदाप्तकाममात्मकाममकामꣳ रूपꣳ शोकान्तरम् ॥ ३.२१ ॥

தத்வா அஸ்யைத-ததிச்சந்தா அபஹதபாப்மாऽபயꣳ ரூபம், தத் யதா ப்ரியயா ஸ்த்ரியா ஸம்பரிஷ்வக்தோ, ந பாஹ்யங் கிஞ்சன வேத நாந்தர-மேவ-மேவாயம் புருஷ: ப்ராஜ்ஞேனாத்மனா ஸம்பரிஷ்-வக்தோ ந பாஹ்யங் கிஞ்சன வேத நாந்தரம் தத்வா அஸ்யை-ததாப்த-காம-மாத்மகாம-மகாமꣳரூபꣳ ஶோகாந்தரம் ॥ 3.21 ॥

---

எண்ணுகிறான். (மேலும் ஜாக்ரத்தில் வித்யா உபாஸனையால் தன்னை தேவனாகக் காண்பது போல் ஸ்வப்னத்திலும் தன்னை) தேவனைப் போலவும் அரசனைப் போலவும் எண்ணுகிறான். 'இது எல்லாம் நான், அனைத்தும் நானாகவே இருக்கிறேன்' என்று (அவித்தையையும் வித்தையையுங் கடந்த நிலையில்) எங்கு காண்கிறானோ அதுதான் இவனுடைய ஒப்புயர்வற்ற நிலை. (இதுதான் மோக்ஷம், விடுதலை).

3.21. "இதுதான் இவனுக்கு (அதிச்சந்தம்) ஆசைகள் ஒழிந்த நிலை, (அபஹதபாப்மா) பாவங்கள் தேய்ந்த நிலை, (அபயம்) பயமற்ற நிலை. எங்ஙனம் பிரியமான மனைவியால் இறுகத் தழுவப்பெற்ற நிலையில் ஒருவன் உள்ளும் புறம்பும் யாதொன்றையும் அறிய மாட்டானோ அங்ஙனமே இந்தப்புருஷன் (சுஷுப்தியில்) பிராஜ்ஞனாகிய ஆத்மாவால் தழுவப்பெற்று உள்ளும் புறம்பும் யாதொன்றையும் அறிவதில்லை. இது தான் இவனுக்கு (ஆப்தகாமம் ரூபம்.) ஆசைகள் பூர்த்தியான நிலை, (ஆத்ம காமம்) ஆத்மா ஒன்றே விரும்பப்படும் நிலை, (அகாமம்) ஆசை எழாத நிலை, (சோகாந்தரம்) துன்பங்கடந்த நிலை.

---

3.21. பி. சூ. 1.3.42; 3.3.31.

अत्र पिताऽपिता भवति माताऽमाता लोका अलोका देवा अदेवा वेदा अवेदा अत्र स्तेनो अस्तेनो भवति......तापसो ऽतापसोऽनन्वागतं पुण्येनानन्वागतं पापेन तीर्णोहि तदा सर्वान् शोकान् हृदयस्य भवति ॥ ३.२२ ॥

यद्वै तन्न विजानाति विजानन्वै तन्न विजानाति न हि विज्ञातुर्विज्ञातेर्विपरिलोपो विद्यतेऽविनाशित्वान्न तु तद्द्वितीयमस्ति ततोऽन्यद्विभक्तं यद्विजानीयात् ॥ ३.३० ॥

அத்ர பிதாऽபிதா பவதி, மாதாऽமாதா, லோகா அலோகா, தேவா அதேவா, வேதா அவேதா, அத்ர ஸ்தேனோ அஸ்தேனோ பவதி... த்ாபஸோऽதாபஸோனன்வாகதம் புண்யேனனன்வாகதம் பாபேன தீர்ணோஹி ததா ஸர்வான் ஶோகான் ஹ்ருதயஸ்ய பவதி ॥ 3.22 ॥

யத் வை தந்-ந விஜானதி விஜானன் வை தந்-ந விஜானதி, ந ஹி விஜ்ஞாதுர் விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதேऽவிநாஶித்வாந்-ந து தத்-த்விதீயமஸ்தி, ததோऽன்யத் விபக்தம் யத் விஜாநீ யாத் ॥ 3.30 ॥

---

3.22. "இங்கு தகப்பன் தகப்பனுக இல்லை; தாய் தாயல்லள்; உலகங்கள் உலகங்களன்று; தேவர்கள் தேவர்களன்று; வேதங்கள் வேதங்களன்று. இங்கு திருடன் திருடனல்லாதவனுகிருன்; தவசி தவசியாயில்லை; புண்ணியத்தாலுந் தொடரப்படுவதில்லை, பாவத்தாலும் தொடரப்படுவதில்லை. இருதயத்திலுள்ள துன்பங்கள் அனைத்தையும் கடந்தவனுகிருன்.

3.30. "ஏனென்ருல் இவன் (ஸுஷுப்தியில் எது ஒன்றையும்) அறிவதில்லை. அறிபவனுயிருந்தும் அறிவதில்லை. அறிபவனுடைய அறியும் சக்திக்கு ஒருபோதும் அழிவில்லையாதலால், அது அழிவில்லாதது. அதற்குப் புறம்பாக, வேறுபட்டதாக, இரண்டாவதாக அறியப்படுவதற்கு (அந்நிலையில்) எதுவும் இல்லை. (அது தான் அங்கு அறியாமைக்குக் காரணம்).

---

3.22. குழந்தையின் நிலை ஞானியின் நிலைக்கு ஒப்பாவது போல், ஸுஷுப்தி நிலை ஸமாதி நிலைக்கு ஒப்பாகிறது.

यत्र वा अन्यदिव स्यात् तत्रान्योऽन्यत्पश्येदन्योऽन्यज्जिघ्रे-दन्योऽन्यद्रसयेदन्योन्यद्वदेदन्योन्यच्छृणुयादन्योऽन्यन्मन्वीतान्यो ऽन्यत्स्पृशेदन्योऽन्यद्विजानीयात् ॥ ३.३१ ॥

सलिल एको द्रष्टाऽद्वैतो भवत्येष ब्रह्मलोकः सम्राडिति हैनमनुशशास याज्ञवल्क्य एषास्य परमा गतिरेषास्य परमा

யத்ர வா அன்யதிவ ஸ்யாத், தத்ரான்யோऽன்யத் பஶ்யே-தன் யோऽன்யஜ் - ஜிக்க்ரே-தன்யோऽன்யத்-ரஸயயேத், அன்யோऽன் யத் வதேத், அன்யோऽன்யச்-ச்ருணுயாத், அன்யோऽன்யன்-மன் வீத, அன்யோऽன்யத் ஸ்ப்ருஶேத், அன்யோऽன்யத் விஜாநீயாத் ॥ 3.31 ॥

ஸலில ஏகோ த்ரஷ்டாऽத்வைதோ பவத்-யேஷ ப்ரஹ்மலோக: ஸம்ராடிதி ஹைந-மனுஶஶாஸ யாஜ்ஞவல்க்ய ஏஷாஸ்ய பரமா கதி-

---

3·31. (ஜாக்ரத்ஸ்வப்னங்களாகிய) எந்நிலைகளில் வேறுபட் டதுபோல் ஒன்று இருக்கிறதோ அங்கு வேறுபட்ட இவன் வேறுபட்ட ஒன்றைப் பார்க்கிறான், வேறுபட்ட இவன் வேறுபட்ட ஒன்றை முக ருகிறான், வேறுபட்ட இவன் வேறுபட்ட ஒன்றை ருசிக்கிறான், வேறுபட்ட இவன் வேறுபட்ட ஒன்றைக் கேட்கிறான், வேறுபட்ட இவன் வேறுபட்ட ஒன்றை எண்ணுகிறான், வேறுபட்ட இவன் வேறுபட்ட ஒன்றைத் தொடுகிறான், வேறுபட்ட இவன் வேறுபட்ட ஒன்றை அறிகிறான்.

3·32. "(த்ரஷ்டாவாகிய) இவன் நீரைப்போல் ஒன்றுபட்டவ னாகவும் இரண்டற்றவனாகவும் ஆகிறான். அரசே! இதுதான் பிரம்மலோகம்" என்று யாஜ்ஞவல்கியர் உபதேசித்தார். "இது தான் இவனுக்குப் பராங்கதி, இதுதான் இவனுக்கு உயர்ந்த செல்

---

3·31. கூறியதையே கூறுவதுபோலிருப்பது இங்கு குற்றமாகாது; ஆத்ம விஷயம் அறிவதற்கு மிகக் கடினமாயிருப்பதால். ஒரே மந்திரத் தைத் திருப்பித் திருப்பி ஜபம் செய்வதும் இக்காரணத்தாலேயே.

ஒ—' ஆவ்ருத்தி-ரஸக்ருத் உபதேஶாத் '.
' உருவேறத் திருவேறும் '

3.22. நீரைப்போல் :—ஒ—(யதோதகம் ஶுத்தே ஶுத்தம்...) எங் ஙனம் சுத்தமான ஜலத்தில் விடப்பட்ட சுத்த ஜலம் ஒன்றாகவே ஆகிறதோ அங்ஙனமே உண்மை உணர்ந்த முனியின் ஆத்மா ஆகிறது (கட. 4.15).

संपदेषोऽस्य परमो लोक एषोऽस्य परम आनन्द एतस्यैवानन्दस्य अन्यानि भूतानि मात्रामुपजीवन्ति ॥ ३.३२ ॥

स यो मनुष्याणां राद्धः समृद्धो भवत्यन्येषामधिपतिः सर्वैर्मानुष्यकैर्भोगैः संपन्नतमः स मनुष्याणां परम आनन्दोऽथ ये शतं मनुष्याणामानन्दाः स एकः पितॄणां जितलोकानामानन्दः...

ரேஷாஸ்ய பரமா ஸம்பதேஷோऽஸ்ய பரமோ லோக ஏஷோऽஸ்ய பரம ஆனந்த ஏதஸ்யைவானந்தஸ்ய அன்யானி பூதானி மாத்ரா-முப-ஜீவந்தி ॥ 3.32 ॥

ஸ யோ மனுஷ்யாணும் ராத்த: ஸம்ருத்தோ பவதி, அன்யே-ஷாமதிபதி:, ஸர்வைர்-மானுஷ்யகைர்ப் போகை: ஸம்பன்ன தம:, ஸ மனுஷ்யாணும் பரம ஆனந்தோऽத யே ஶதம் மனுஷ்யாணு-மானந்தா: ஸ ஏக: பித்ருணும் ஜிதலோகாணுமானந்த:...

---

வம், இதுதான் இவனுக்கு உயர்ந்த உலகம், இதுதான் இவனுக்குப் பரமானந்தம். இந்த ஆனந்தத்தின் ஒரு திவலையைக் கொண்டு தான் பிரிதான பிராணிகளெல்லாம் வாழ்கின்றன.''

3.33. ''மனிதர்களுள் அங்கங்களின் வன்மை நிறைந்தவனையும் செல்வம் நிறைந்தவனையும் பிறரை ஆள்பவனையும் மனிதர் விரும்பும் போக சாதனங்கள் அனைத்தும் சூழப்பெற்றவனையும் உள்ளவன் எவனே அவனே மனித ஆனந்தத்தின் எல்லையிலுள்ளவன். இந்த மனித ஆனந்தத்தின் நூறு பங்கு எதுவோ அது நல்ல

---

இந்த ஆனந்தத்தின் ஒரு திவலையைக் கொண்டு :—ஒ. (ஸ்வாத்மானந்த-லவீ-பூத-ப்ரஹ்மாத்-யானந்த-ஸந்ததி:) பிரம்மாதிகளின் ஆனந்த பரம்பரை எந்த ஆத்மானந்தத்தின் ஒரு திவலையாகிறதோ—(லலிதா ஸஹஸ்ர நாமம்).

பி. சூ. 4·4·16.

3.33. ஒ. தை. 2.8.

ஒ-(யச் ச காமஸுகம் லோகே யச் ச திவ்யம் மஹத் ஸுகம் | த்ருஷ்ணா-க்ஷயஸுகஸ்யைதே நார்ஹத: ஷோடஶீங்-கலாம்) எது இவ்வுலகில் காம

ये शतं प्रजापतिलोक आनन्दाः स एको ब्रह्मलोक आनन्दो यश्च श्रोत्रियोऽवृजिनोऽकामहतोऽथैष एव परम आनन्द एष ब्रह्मलोकः सम्राडिति होवाच याज्ञवल्क्यः सोऽहं भगवते सहस्रं ददाम्यत ऊर्ध्वं विमोक्षायैव ब्रूहीत्यत्र ह याज्ञवल्क्यो बिभयांचकार मेधावी राजा सर्वेभ्यो मान्तेभ्य उदरौत्सीदिति ॥ ३.३३ ॥

யே ஶதம் ப்ரஜாபதிலோக ஆனந்தா: ஸ ஏகோ ப்ரஹ்மலோக ஆனந்தோ, யஶ்ச ஶ்ரோத்ரியோऽவ்ருஜிநோऽகாமஹதோऽதைஷ ஏவ பரம ஆனந்த ஏஷ ப்ரஹ்மலோக: ஸம்ராடிதி ஹோவாச யாஜ்ஞவல்க்ய:, ஸோऽஹம் பகவதே ஸஹஸ்ரந் ததாம்யத ஊர்த்த்வம் விமோக்ஷாயைவ ப்ரூஹீத்-யத்ர ஹ யாஜ்ஞவல்க்யோ பிபயாஞ்சகார, மேதாவீ ராஜா ஸர்வேப்ப்யோ மாந்தேப்ப்ய உதரௌத்ஸீ-திதி ॥ 3.33 ॥

---

உலகங்களை ஜயித்த பிதிரர்களின் ஆனந்தம். (இதன் நூறு பங்கு கந்தர்வர்களுடைய ஆனந்தம். இதன் நூறு பங்கு கர்மத்தினல் தேவத் தன்மையடைந்தவர்களின் ஆனந்தம். இதன் நூறு பங்கு தேவர்களாவே பிறந்தவர்களின் ஆனந்தம். இதன் நூறு பங்கு பிரஜாபதி (விராட்) உலக ஆனந்தம்.) இதன் நூறு பங்கு பிரம்ம லோக ஆனந்தம். எவன் வேதத்தைக் கற்றுணர்ந்து, பாவமற்ற வாழ்க்கை நடத்துபவனுய், ஆசைகளில் ஆழ்ந்து மடியாதவனுய் உள்ளவனே அவனுடைய ஆனந்தம் பரம ஆனந்தம். அரசே! இதுதான் பிரம்மலோகம்'' என்ருர், யாஜ்ஞவல்கியர்.

''இங்ஙனம் அறிந்துகொண்ட அடியேன் தேவரீருக்கு ஆயிரம் பசுக்களைத் தருகிறேன். இதற்கு மேலும் மோக்ஷத்துக்குரியதையே உபதேசித்தருள்வீர்.'' புத்தியிற் சிறந்த அரசன் தான் முடிவெனக் கூறுவதனைத்தையும் தாண்டி அதற்கப்பாலுங் கூறும்படி வற் புருத்துவார் போலும் என்று யாஜ்ஞவல்கியர் இவ்விடத்தில் அஞ்சி ஞர்.

---

சுகமோ, எது தேவலோகத்தில் பெரிய சுகமோ அது எல்லாம் ஆசை நசித் தவனுடைய சுகத்தின் வீசம் பங்கு கூட ஆகாது. (ம. பா. 12·173·47)

तद्यथाऽनः सुसमाहितमुत्सर्जद्यायादेवमेवायꣳ शरीर आत्मा प्राज्ञेनात्मनान्वारूढमुत्सर्जन्याति यत्रैतदूर्ध्वोच्छ्वासी भवति ॥ ३.३५ ॥

स यत्रायमणिमानं न्येति जरया वोपतपता वाणिमानं निगच्छति तद्यथाम्रं वौदुंबरं वा पिप्पलं वा बन्धनात्प्रमुच्यत एवमेवायं पुरुष एभ्योऽङ्गेभ्यः संप्रमुच्य पुनः प्रतिन्यायं प्रतियोन्याद्रवति प्राणायैव ॥ ३.३६ ॥

தத்யதாऽந: ஸுஸமாஹித-முத்ஸர்ஜத்யாயாதேவ - மேவாயꣳ ஶரீர ஆத்மா ப்ராஜ்ஞேனத்மனன்வாரூட-முத்ஸர்ஜன் யாதி யத்ரைததூர்த்வோச்ச்வாஸீ பவதி ॥ 3.35 ॥

ஸ யத்ராய-மணிமானம் ந்யேதி ஜரயா வோபதபதா வாணிமானம் நிகச்சதி, தத்யதாம்ரம் வௌதும்பரம் வா, பிப்பலம் வா, பந்தனத் ப்ரமுச்யத ஏவமேவாயம் புருஷ ஏப்ப்யோऽங்கேப்ப்ய: ஸம்ப்ரமுச்ய, புன: ப்ரதிந்யாயம் ப்ரதியோன்யாத்ரவதி ப்ராணயைவ ॥ 3.36 ।

---

3·35. எங்ஙனம் அதிக பாரம் ஏறின வண்டி (தாளாமல்) திணறிக்கொண்டு (வண்டிக்காரனுடன்) செல்லுமோ, அங்ஙனமே இச்சரீரத்தில் ஜீவாத்மா பிராஜ்ஞனகிய பரமாத்மாவால் செலுத்தப் பட்டுச் செல்லுகிருன். எப்போது மேல் மூச்சு வாங்குகிறதோ அப்போது இவனும் திணறுகிருன் (பிரயாண காலத்தில்).

3.36. எப்போது மூப்பினலோ, உடலை வாட்டும் நோயினலோ, இவன் மெலிந்த நிலையையடைகின்றுனே, அப்போது மாம்பழமோ, அத்திப்பழமோ, அரசம்பழமோ (மரத்துடன் இருந்த) பிடிப்பை விட்டு நழுவதுபோல் இப்புருஷன் (சரீர விருக்ஷத்தின்) அங்கங்களுடன் உள்ள பற்றினின்று விடுபட்டு வந்த வழியிலேயே நழுவி மீண்டும் உயிர் வாழும் பொருட்டுக் குறிப்பான பிறப்பிடத்தை நோக்கி விரைகிருன்.

तद्यथा राजानमायान्तमुग्राः प्रत्येनसः सूतग्रामण्योऽन्नैः पानैरावसथैः प्रतिकल्पन्तेऽयमायात्ययमागच्छतीत्येवꣳ हैवं विदꣳ सर्वाणि भूतानि प्रतिकल्पन्त इदं ब्रह्मायातीदमागच्छतीति ॥ ३.३७ ॥

एवमेवात्मानमन्तकाले सर्वे प्राणा अभिसमायन्ति यत्रैतदूर्ध्वोच्छ्वासी भवति ॥ ३.३८ ॥

தத்-யதா ராஜான-மாயாந்த-முக்ரா: ப்ரத்யேனஸ: ஸூதக்ராமண்யோऽன்னை: பானை-ராவஸதை: ப்ரதிகல்பந்தேऽயமாயாத்-யயமாகச்சதீத்-யேவꣳஹைவம் விதꣳஸர்வாணி பூதானி ப்ரதிகல்ப்யந்த இதம் ப்ரஹ்மாயாதீத-மாகச்சதீதி ॥ 3.37 ॥

ஏவமே-வாத்மான-மந்தகாலே ஸர்வே ப்ராணா அபிஸமாயந்தி, யத்ரைத-தூர்த்த்வோச்ச்வாஸீ பவதி ॥ 3.38 ॥

---

3.37. எங்ஙனம் தண்டல்காரர்களும் காவல்காரர்களும் சூதர்களும் கிராமணிகளும் (தங்கள் கிராமத்துக்கு) வரும் அரசனை எதிர்நோக்கி அன்னத்துடனும் பானத்துடனும் தங்க இடத்துடனும் 'அவர் இதோ வருகிறார், வந்துவிட்டார்' என்று சொல்லிக் கொண்டு ஆயத்தமாயிருப்பார்களோ, அங்ஙனமே எல்லாப் பொருள்களும் "இந்தப் பிரம்மா வருகிறார், இதோ அவர் வந்துவிட்டார்" என்று சொல்லிக்கொண்டு இவனை எதிர்நோக்கி நிற்பனவாம்.

3.38. அங்ஙனமே அந்தியகாலத்திலும் இவன் மேல் மூச்சு விடும்போது எல்லாப் பிராணன்களும் (இந்திரியங்களும்) ஜீவாத்மாவைச் சூழ்ந்து நிற்கின்றன.

---

3.37. நாம் பிறந்தபோது எப்படி நமக்கு வரவேற்பு இங்கே காத்திருந்ததோ அப்படியே நாம் இறக்கும்போதும் அங்கே வரவேற்புக் காத்திருக்கும்.

तमुत्क्रामन्तं प्राणोऽनूत्क्रामति प्राणमनूत्क्रामन्तꣳ सर्वे प्राणा अनूत्क्रामन्ति सविज्ञानो भवति सविज्ञानमेवान्ववक्रामति तं विद्याकर्मणी समन्वारभेते पूर्वप्रज्ञा च ॥ ४.२ ॥

तद्यथा तृणजलायुका तृणस्यान्तं गत्वाऽन्यमाक्रममाक्रम्यात्मानमुपसꣳहरत्येवमेवायमात्मेदꣳ शरीरं निहत्याऽविद्यां गमयित्वाऽन्यमाक्रममाक्रम्यात्मानमुपसꣳहरति ॥ ४.३ ॥

தமுத்க்ராமந்தம் ப்ராணோऽனூத்க்ராமதி, ப்ராணமனூத்க்ராமந்தꣳஸர்வே ப்ராணா அனூத்க்ராமந்தி, ஸவிஜ்ஞானோ ப்வதி, ஸவிஜ்ஞான-மேவான்வவக்ராமதி, தம்-வித்யாகர்மணீ ஸமன்வாரபேதே, பூர்வப்ரஜ்ஞா ச ॥ 4·2 ॥

தத் யதா த்ருணஜலாயுகா த்ருணஸ்யாந்தங்-கத்வாऽன்ய-மாக்ரம-மாக்ரம் - யாத்மான-முபஸꣳஹரத்-யேவமேவாய-மாத்மேதꣳ ஶரீரம் நிஹத்யாऽவித்யாங் கமயித்வாऽன்ய-மாக்ரம-மாக்ரம்-யாத்மான-முபஸꣳஹரதி ॥ 4·3 ॥

---

4.2. கிளம்பிச் செல்லும் இவனைப் பின்பற்றி முக்கியப் பிராணன் செல்லுகிறது. முக்கியப் பிராணனைப் பின்பற்றி மற்ற எல்லாப் பிராணன்களும் இந்திரியங்களும் செல்லுகின்றன. பின் இவன் (ஸ்வப்னத்தில் போல) விஜ்ஞான வடிவினன் ஆகிறான். அவ் விஜ்ஞானத்தை யனுசரித்து (வேறொரு சரீரத்தில்) புகுகிறான். அறிவின் வாசனையும் கர்ம வாசனையும் முந்தைய நிகழ்ச்சிகளின் பிரஜ்ஞையும் இவனைத் தொடர்ந்து செல்லுகின்றன.

4.3. எங்ஙனம் அட்டைப்புழு ஒரு புல்லின் நுனிக்கு வந்ததும் வேறொன்றைப் பற்றிக்கொண்டு உடலைச் சுருக்கி இழுத்துக் கொள்ளுமோ, அங்ஙனமே இந்த ஜீவனும் (வாழ்க்கை முடிவுக்கு

---

4.2. கர்மவாசனையும் முந்தைய நிகழ்ச்சிகளின் பிரஜ்ஞையும்—ஒ. எப்போது சரீரத்தை அடைகிறானோ எப்போது விட்டுக்கிளம்புகிறானோ அப்போது காற்றானது உறைவிடத்திலிருந்து வாசனைகளைப்போல இவற்றைக் கவர்ந்து கொண்டு செல்லுகிறான். (கீ. 15.8)

அந்த முன் பழக்கத்தாலேயே தான் உணராவிடினுங்கூட அவன் கவரப்படுகிறான். (கீ. 6.44)

பி. சூ. 3.1.1 ; 3.1.3 ; 4.2.17 ; 4.2.4

4.3. ஒருவன் தூங்கும்போது சரீரத்தைக் கீழே அசேதனம்போல்

तद्यथा पेशस्कारी पेशसो मात्रामुपादायान्यन्नवतरं कल्याणतरꣳ रूपं तनुत एवमेवायमात्मेदꣳ शरीरं निहत्याविद्यां गमयित्वान्यन्नवतरं कल्याणतरꣳ रूपं कुरुते पित्र्यं वा गान्धर्वं वा दैवं वा प्राजापत्यं वा ब्राह्मं वाऽन्येषां वा भूतानाम् ॥ ४.४ ॥

स वा अयमात्मा ब्रह्म। विज्ञानमयो मनोमयः प्राणमयश्चक्षुर्मयः श्रोत्रमयः पृथिवीमय आपोमयो वायुमयो आकाशमयस्तेजोमयोऽतेजोमयः काममयोऽकाममयः क्रोध-

தத் யதா பேசஸ்காரீ பேசஸோ மாத்ரா-முபாதாயான்யந்-நவதரங்-கல்யாணதரꣳ சரீரந்-நிஹத்யாவித்யாங் கமயித்வான்யந்-நவதரங் கல்யாணதரꣳரூபம் குருதே, பித்ர்யம் வா, காந்தர்வம் வா தைவம் வா, ப்ராஜாபத்யம் வா, ப்ராஹ்மம் வாऽன்யேஷாம் வா பூதாநும் ॥ 4.4 ॥

ஸ வா அயமாத்மா ப்ரஹ்ம। விஜ்ஞானமயோ மனோமய: ப்ராணமயஶ்-சக்ஷுர்மய: ப்ருதிவீமய ஆபோமயோ வாயுமய

---

வந்ததும் அவித்தை வடிவான) உடலை விட்டு (விட்டதனால்) அதை உயிரற்றதாக்கி, வேறொன்றைப் பற்றிக்கொண்டு தன்னைச் சுருக்கி இழுத்துக் கொள்ளுகிறான்.

4.4. ஒரு தட்டான் எங்ஙனம் ஒரு தங்கக்கட்டியினின்று ஒரு சிறு பகுதியை எடுத்துப் புதிதாயும் அழகாயும் உள்ள வேறு உருவத்தை அமைப்பானோ, அங்ஙனமே இந்த ஜீவன் உடலை விட்டு அதை உயிரற்றதாய் வீழ்த்திவிட்டு (பஞ்சபூதங்களில் ஒரு பகுதியை எடுத்து) புதிதாயும் அழகாயும் உள்ள வேறு உருவத்தைப் பிதிரர்கள் உலகுக்குத் தகுந்தவாறோ கந்தர்வ உலகத்துக்குத் தகுந்தவாறோ, தேவ உலகுக்குத் தகுந்தவாறோ, பிரஜாபதி உலகுக்குத் தகுந்தவாறோ, பிரம்மாவின் உலகுக்குத் தகுந்தவாறோ அல்லது மற்ற ஜீவர்களின் உலகுக்குத் தகுந்தவாறோ (குணகர்மங்களுக்குத் தக்கபடி, சிருஷ்டித்துக் கொள்ளுகிறான்.

4.5. இந்த ஆத்மா பிரம்மமே தான். விஜ்ஞானமயமானவனும், மனோமயமானவனும், பிராணமயமானவனும், கண்வழியாய்ப்

---

கிடத்திவிட்டு ஸ்வப்ன சரீரத்தில் புகுவதுபோல் மரணத்துவாரத்தில் சரீரத்தைக் கிடத்திவிட்டு ஜீவன் வேறு சரீரத்தில் புகுகின்றான்.

4.4. ஒ. கட. 5.6-7.

मयोऽक्रोधमयो धर्ममयोऽधर्ममयस्सर्वमयस्तद्यदेतदिदंमयोऽदोमय इति यथाकारी यथाचारी तथा भवति साधुकारी साधुर्भवति पापकारी पापो भवति पुण्यः पुण्येन कर्मणा भवति पापः पापेन ॥ अथो खल्वाहुः काममय एवायं पुरुष इति स यथाकामो भवति तत्क्रतुर्भवति यत्क्रतुर्भवति तत्कर्म कुरुते यत्कर्म कुरुते तदभिसंपद्यते ॥ ४.५ ॥

ஆகாஶமயஸ் - தேஜோமயோऽதேஜோமய: காமமயோऽகாமமய: க்ரோதமயோ ऽக்ரோதமயோ தர்மமயோ ऽதர்மமயஸ் ஸர்வமயஸ்-தத்யதேத-திதம்மயோऽதோமய இதி, யதாகாரீ யதாசாரீ ததா பவதி, ஸாதுகாரீ ஸாதுர்ப்பவதி, பாபகாரீ பாபோ பவதி, புண்ய: புண்யேன கர்மணு பவதி, பாப: பாபேன ॥ அதோ கல்வாஹு: காமமய ஏவாயம் புருஷ இதி, ஸ யதாகாமோ பவதி தத் க்ரதுர்-ப்பவதி, யத் க்ரதுர்-ப்பவதி தத் கர்ம குருதே, யத் கர்ம குருதே ததபிஸம்-பத்யதே ॥ 4.5 ॥

---

பார்ப்பவனும், காதுவழியாய்க் கேட்பவனும், பிருதிவிமயமான வனும், அப்புமயமானவனும், வாயுமயனமானவனும் ஆகாசமய மானவனும், ஒளிநிறைந்த வடிவினனும், ஒளியிழந்த வடிவினனும், ஆசை நிறைந்தவனும், ஆசையற்றவனும், கோபம் நிறைந்தவனுங் கோபமற்றவனும், தர்மரூபியும் அதர்மரூபியும், எல்லாவடிவினனும் இது என (அருகில்) உள்ளவனும், அது என (தொலைவில்) உள்ள வனும் இவனே. எங்ஙனம் செய்கிறானோ எங்ஙனம் நடக்கிறானோ அங்ஙனமே ஆய்விடுகிறான். நல்லதைச் செய்பவன் நல்லவ னாகிறான். பாவத்தைச் செய்பவன் பாவியாகிறான். புண்ணியச் செயலால் புண்ணிய முடையவனாகவும், பாவச்செயலால் பாவ முடையவனாகவும் ஆகிறான்.

---

4.5. புருஷன் ஆசைவடிவினன்—ஒ. (யத்யத்தி குருதே கர்ம தத்தத் காமஸ்ய லக்ஷணம்) எந்தெந்தச் செயலைச் செய்தாலும் அது எல்லாம் ஆசையின் லக்ஷணம்.

(மனு)

इति नु कामयमानो अथाकामयमानो योऽकामो निष्काम आप्तकाम आत्मकामो न तस्य प्राणा उत्क्रामन्ति ब्रह्मैव सन् ब्रह्माप्येति ॥ ४.६ ॥

இதி நு காமயமானோ, அதாகாமயமானோ, யோऽகாமோ நிஷ்காம ஆப்தகாம ஆத்மகாமோ, ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி, ப்ரஹ்மைவ ஸன் ப்ரஹ்மாப்யேதி ॥ 4.6 ॥

---

இப்புருஷனை ஆசைவடிவினன் எனக் கூறுவர். ஆசை எங்ஙனமோ அங்ஙனம் நிச்சயம் ஏற்படுகிறது; நிச்சயம் எங்ஙனமோ அங்ஙனம் செயல் செய்கிறான்; எங்ஙனம் செயல் செய்கிறானோ அங்ஙனம்(பயனை) அடைகிறான்.

4.6. இதுவரை ஆசை நிறைந்தவனைப்பற்றி (கூறினோம்). இனி ஆசையற்றவனைப்பற்றி (கூறுவோம்). எவன் ஆசையில்லாதவனோ, ஆசையிலிருந்து விடுபட்டவனோ, ஆசைகளின் பூர்த்தி எய்தியவனோ, ஆத்மா ஒன்றையே விரும்புபவனோ, அவனுடைய பிராணன்கள் கிளம்பி எங்குஞ் செல்லுவதில்லை. பிரம்மமாகவே இருந்து அவன் பிரம்மத்தில் ஐக்கியமாகிறான்.

---

4.6. ஒருவன் எங்ஙனம் (நிஷ்காம:) ஆசை விடுபட்டவனாகிறான்? ஆசை பூர்த்தி எய்துவதால். (ஆப்தகாம:) எங்ஙனம் ஆசை பூர்த்தி எய்தியவனாகிறான்? ஆத்மா ஒன்றையே விரும்புவதால் (ஆத்மகாம:). ஆத்மாவே உள்ளற்றது, வெளியற்றது, அனைத்துமாயிருப்பது, அறிவுமாயிருப்பது. அதில் நிலைபெற்றால் அடையவேண்டியது பின் எதுவும் இல்லை. ஆகையால் அவனுக்குக் கருமம் இல்லை (ஸர்வாத்ம-தர்ஶின: காமயிதவ்யாபாவாத் கர்மானுபபத்தி:). கருமம் இன்மையால் போக்குவரவில்லை. ஆகையால் அவனுடைய மனோசக்தி முதலியவை சரீரத்தை விட்டுக் கிளம்புவதில்லை. அவன் கருமஞ்செய்யலாம்; ஆனால் கருமம் அவனைப் பற்றாது. சரீரம் உடையவனைப் போலிருந்தாலும் சரீரம் அவனுக்கு நிழல் போலவே. சரீரம் விழுந்த பின்பு தான் முக்தி என்பது அவனுக்கு இல்லை. (ந-ஶரீரபாதோத்தர காலம்.) சாவிலும் வாழ்விலும் அவன் தன்மை ஒன்றே. அவன் பிரம்மமாகவே இருக்கிறான். (சங்.

ஒ. பி. சூ. 4.4.4; 4.2.12.

तद्यथाऽहिनिर्ल्वयनी वल्मीके मृता प्रत्यस्ता शयीतैवमेवेदं शरीरं शेतेऽथायमशरीरोऽमृतः प्राणो ब्रह्मैव तेज एव सोऽहं भगवते सहस्रं ददामीति होवाच जनको वैदेहः ॥ ४.७ ॥

अणुः पन्था विततः पुराणो मां स्पृष्टोऽनुवित्तो मयैव ॥ तेन धीरा अपियन्ति ब्रह्मविदः स्वर्गं लोकमित ऊर्ध्वं विमुक्ताः ॥ ४.८ ॥

தத் யதாऽஹி நிர்ல்வயனீ வல்மீகே ம்ருதா ப்ரத்யஸ்தா ஶயீதைவமேவேதம் ஶரீரம் ஶேதேऽதாய-மஶரீரோऽம்ருத: ப்ராணோ ப்ரஹ்மைவ தேஜ ஏவ, ஸோऽஹம் பகவதே ஸஹஸ்ரம் ததாமீதி ஹோவாச ஜனகோ வைதேஹ: ॥ 4.7 ॥

அணு: பந்தா விதத : புராணோ மாம்ஸ்ப்ருஷ்டோऽனுவித்தோ மயைவ। தேன தீரா அபியந்தி ப்ரஹ்மவித : ஸவர்க்கம் லோக-மித ஊர்த்த்வம் விமுக்தா: 4.8 ॥

---

4.7. எங்ஙனம் பாம்புச் சட்டை புற்றருகில் விடப்பட்டு உயிரற்றுக் கிடக்குமோ, அங்ஙனமே (முக்தனுடைய) இச்சரீரமுங் கிடக்கும். அப்பொழுது இவன் சரீரமில்லாதவனுப் பிராணனுகவே பிரம்மமாகவே தேஜோவடிவினனுகவே ஆய்விடுகிறுன்.

"(இங்ஙனம் உபதேசிக்கப் பெற்ற) அடியேன் தேவரீருக்கு ஆயிரம் (பசுக்களைத்) தருகிறேன்" என்றுர், வைதேக ஜனகர்.

4.8. இந்தப் பழைய மார்க்கம் விசாலமானதெனினும் ஸூக்ஷ்மமானது. இது என்னைத்தொட்டது; என்னுல் அனுபவிக்கப்பட்டது. இதனுல் தீரர்களாகிய பிரம்ம ஞானிகள் இதன் பிறகு (பிறவியிலிருந்து விடுபட்டவர்களாய்) ஸ்வர்க்க உலகத்தை அடைகிருர்கள்.

---

4.7. (ஸர்ப்பவத் தத்ரைவ வர்த்தமானேऽப்யஶரீர ஏவ ந பூர்வவத் புன: ஸஶரீரோ பவதி) பாம்பு சட்டை உரித்தபின் அதனருகிலிருந்தாலும் அதனுள் மீண்டும் புகாது. அவ்வாறு ஞானியானவன் சரீரபந்தனம் விட்டபின் மீண்டும் முன்போல் சரீரியாக மாட்டான். (சங்.)

ஆயிரம் பசுக்களைத் தருகிறேன்—மோக்ஷ தர்மத்தைப் பற்றிய உபதேசம் இங்கே பூர்த்தியடைவதால் ஏன் ஜனகர் தன்னையும் விதேஹ

आत्मानं चेद्विजानीयादयमस्तीति पूरुषः। किमिच्छन्
कस्य कामाय शरीरमनुसंज्वरेत् ॥ ४.१२ ॥

यस्यानुवित्तः प्रतिबुद्ध आत्माऽस्मिन् संदेह्ये गहने प्रविष्टः।
स विश्वकृत्स हि सर्वस्य कर्ता तस्य लोकाः स उ लोक एव
॥ ४.१३ ॥

ஆத்மானஞ் சேத் விஜாநீயா-தயமஸ்தீதி புருஷ: । கிமிச்சன் கஸ்ய காமாய ஶரீர-மனு-ஸஞ்ஜ்வரேத் ॥4.12 ॥

யஸ்யானுவித்த: ப்ரதிபுத்த ஆதமாऽஸ்மின் ஸ்ந்தேஹ்யே கஹனே ப்ரவிஷ்ட: ॥ ஸ விஶ்வக்ருத் ஸ ஹி ஸர்வஸ்ய கர்த்தா தஸ்ய லோகா: ஸ உ லோக ஏவ ॥ 4.13 ॥

---

4.12. ஒரு புருஷன் தன்னை ‘ நான் இது வாயிருக்கிறேன் ’ என்று அறிந்து விட்டால் எதை விரும்பி, யாருடைய விருப்பத்துக்காகச் சரீரத்தைப் பின்பற்றி அத்துடன் வருந்த வேண்டும் ?’

4.13. சங்கடங்கள் நிறைந்ததும் ஞானத்தை மறைப்பதுமான இச்சரீரத்தில் புகுந்துறையும் ஆத்மா எவனால் அறியப்பட்டதோ, அனுபவிக்கப்பட்டதோ, அவன் தான் உலகத்தை சிருஷ்டித்தவன்; அவன் தான் அனைத்துக்குங் கர்த்தா; உலகங்களெல்லாம் அவனுடையவையே ; அவனே உலகெல்லாமும்.

---

நாட்டையும் சேர்த்து ஆத்மஸமர்ப்பணம் செய்யவில்லை? ஒ. (நமஸ்தேऽஸ்த்விமே விதேஹா அயமஹமஸ்மி 4.2.4). அத்தியாத்ம வித்தையில் ரசிகரான ஜனகர், அங்ஙனம் செய்தால் யாஜ்ஞவல்கியர் உபதேசத்தை நிறுத்திவிடுவார் என்று எண்ணியும், மேலுங்கேட்க விரும்பியும், அங்ஙனம் கூறினர் போலும். யாஜ்ஞவல்கியர் அவர் குறிப்புக் கிணங்கி இந்த மோக்ஷ தர்மத்தின் பெருமையைக் கூறி அதற்குப் பரம ஸாதனமான ஸந்நியாஸத்தையும் (4.4.23-ல்) கூறி உபதேசத்தை முடிக்கிறார். (சங்.)

4.12. ஆத்மானஞ் சேத் விஜாநீயாத்—(சேதிதி ஆத்ம வித்யாயா துர்லபந் தர்ஶயதி). சேத் (அறிந்துவிட்டால்) என்னும் சொல்லால் ஆத்ம வித்தை அடைதற்கரிது என்பது காட்டப்படுகிறது. (சங்.)

ஒ—மனிதர்களில் ஆயிரவர்க்குள் ஒருவன் சித்திபெற முயற்சிக்கின்றான் ; முயற்சி செய்யும் சித்தர்களுள் யாரோ ஒருவன் என்னை உண்மையில் உணர்கின்றான். (கீ.7.3)

इहैव सन्तोऽथ विद्मस्तद्वयं न चेदवेदीर्महती विनष्टिः
ये तद्विदुरमृतास्ते भवन्त्यथेतरे दुःखमेवापियन्ति ॥ ४.१४ ॥

यदैतमनुपश्यत्यात्मानं देवमञ्जसा । ईशानं भूतभव्यस्य
न ततो विजुगुप्सते ॥ ४.१५ ॥

இஹைவ ஸந்தோऽத வித்மஸ்-தத்-வயந்-ந சே-தவேதீர்-மஹதீ
விநஷ்டி: । யே தத்விது-ரம்ருதாஸ்தே பவந்த்-யதேதரே து:க்க
மேவாபியந்தி । 4.14 ॥

யதைத-மனுபஶ்யத்-யாத்மானந் தேவ-மஞ்ஜஸா । ஈஶானம்
பூதபவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே ॥ 4.15 ॥

---

4.14. இங்கு (இச்சரீரத்தில்) இருந்துகொண்டே எப்படியோ நாம் அதை (ஆத்மாவை) அறிந்துகொண்டோம். இல்லாமற் போனுல் அறியாதவர்களாகிப் பெரும் நஷ்டத்துக்குள்ளா யிருப்போம். எவர்கள் அதை (ஆத்மாவை) அறிந்தவர்களோ அவர்கள் சாகாதவர்கர்களாகிருர்கள். பிறரோ எனில் துன்பத் தையே அடைகிருர்கள்.

4.15. உண்டாயதற்கும் உண்டாகப் போவதற்கும் இறை வனுயும் ஒளிவடிவினனுயும் உள்ள ஆத்மாவை ஒருவன் எப் போது ஸாக்ஷாத்தாகக் கண்டுகொண்டானே அப்போது அதனுல் அவன் தனக்கு வேருன தேகத்தின் ஸம்ரக்ஷணையை விரும்புதில்லை.

---

இது எனக்கு, இது என் புத்திரனுக்கு, இது என் மனைவிக்கு என்று பொருள் ஈட்டுபவர்களாய் மீண்டும் மீண்டும் பிறந்திறந்துழல்பவர் சரீர ரோகத்தை யனுபவிக்கின்றனர். ஆத்மதர்சிகளுக்கு அது இல்லை. (சங்.)

ஒ—கங்கைக் கரையிலுள்ளவன் குடிநீருக்குக் கிணறு தேட மாட்டான். சூரியன் உதித்துவிட்டால் விளக்கு வேண்டியதில்லை. மந்த மாருதம் வீசுகையில் விசிறி தேவையில்லை. (ரா. கி.)

4.14. ஒ. கேன. 2.5.

यस्मादर्वाक्संवत्सरोऽहोभिः परिवर्तते। तद्देवा ज्योतिषां ज्योतिरायुर्होपासतेऽमृतम् ॥ ४.१६ ॥

तमेव धीरो विज्ञाय प्रज्ञां कुर्वीत ब्राह्मणः। नानुध्यायाद्बहून्शब्दान्वाचो विग्लापनꣳहि तदिति ॥ ४.२१ ॥

யஸ்மா-தர்வாக்-ஸம்வத்ஸரோऽஹோபி : பரிவர்த்ததே । தத்தேவா ஜ்யோதிஷாஞ்ஜ்-யோதி-ராயுர்-ஹோபாஸதேऽம்ருதம் ॥ 4.16 ॥

தமேவ தீரோ விஜ்ஞாய ப்ரஜ்ஞாங் குர்வீத ப்ராஹ்மண: । நானுத்-த்யாயாத் பஹூன் ஶப்தான் வாசோ விக்லாபனꣳஹி த-திதி ॥ 4.21 ॥

---

4.16. காலவடிவான ஸம்வத்ஸரம் பகல்களுடன் எவனுக்குக் கீழ்ப்பட்டுச் சுழல்கின்றதோ, அந்த ஜோதிக்கு ஜோதியான பரமாத்மாவை ஆயுளாகவும் அமிருதமாகவும் தேவர்கள் உபாசிக்கின்றனர்.

4.21. பிரம்மநாட்டமுடைய புத்திமான் (உபதேசத்தால்) இதை அறிந்து பிரஜ்ஞையை அடையட்டும். பல சாஸ்திரங்களை அப்பியாஸம் செய்யவேண்டாம். அது வாக்குக்குச் சிரமமேயாகும்.

---

4.15. வேற்றுமையைக் காண்பவனுக்குப் பயமுண்டு. அவன் ஸம்ரக்ஷணையை விரும்புவான். ஒற்றுமையைக் கண்டு கொண்டவனுக்குப் பயமில்லை. (ஏகத்வ-தர்ஶீ ந பிபேதி குதஶ்சன । அதோ ந ததா விஜுகுப்ஸதே) சங்.

4.21. பிரஜ்ஞையை அடையட்டும்—சாஸ்திரத்தாலும் ஆசாரியனாலும் உபதேசிக்கப்பட்ட விஷயத்தின் ஸாரத்தை யுணர்ந்து ஸந்நியாஸம், சமம், தமம், உபரதி, திதிக்ஷை, ஸமாதானம் முதலிய ஸாதனங்களைக் கைக்கொள்ளவேண்டும்.

ஒ—ஓமித்யேவம் த்யாயத ஆத்மானம். மு. 2.2.6.
(அன்யா வாசோ விமுஞ்சத). மற்ற வார்த்தைகளை விட்டொழிக. மு. 2.2.5.

ஒ—கீ. 2.52-53.

பல நூல்களைப் படிப்பதால் பகவத் பிரேமை உண்டாகிவிடுமா? பஞ்சாங்கத்தில் இவ்வளவு மழை பெய்யும் என்று குறிப்பிட்டிருக்கிறது. பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிந்தால் ஒரு துளி ஜலங்கூட வராது. (ரா.கி.)

स वा एष महानज आत्मा योऽयं विज्ञानमयः प्राणेषु य
एषोऽन्तर्हृदय आकाशस्तस्मिन् शेते सर्वस्य वशी सर्वस्येशानः
सर्वस्याधिपतिः स न साधुना कर्मणा भूयान्नो एवासाधुना
कनीयानेष सर्वेश्वर एष भूताधिपतिरेष भूतपाल एष सेतुर्विधरण

ஸ வா ஏஷ மஹா-னஜ ஆத்மா யோऽயம் விஜ்ஞானமய: ப்ராணேஷு, ய ஏஷோऽந்தர்-ஹ்ருதய ஆகாஶஸ்-தஸ்மின் ஶேதே, ஸர்வஸ்ய வஶீ, ஸர்வஸ்யேஶான:, ஸர்வஸ்யாதிபதி:, ஸ ந ஸாதுனு கர்மணு பூயாந் நோ ஏவாஸாதுனு கநீயா-நேஷ ஸர்வேஶ்வர ஏஷ பூதாதிபதி-ரேஷ பூதபால ஏஷ ஸேதுர்-விதரண ஏஷா

---

4.22. இந்த ஆத்மா பெரிது, பிறப்பில்லாவது, (இந்திரியங்கள்) பிராணன்களிடையில் விஜ்ஞானமயமாயிருப்பது இருதய ஆகாசத்தினுள் உறைவது, அனைத்தையும் தன் வசம் கொண்டது, அனைத்தையும் ஆள்வது, அனைத்துக்கும் அதிபதி; நல்ல கர்மத்தால் அது பெருமை யடைவதில்லை ; அவ்வாறே கெட்ட

---

ஆழமில்லாத குளத்தில் நீர் குடிக்க வேண்டுமானுல் அதைக் கலக்காமல் மெதுவாகக் குடிக்கவேண்டும். கலக்கிவிட்டால் அடியிலுள்ள சேறு மேலே கிளம்பிவிடும். சாஸ்திரத்தைப் பற்றி வீண்வாதத்தில் இறங்கினுல் உன் மூளை கலங்கிவிடும் (ரா. கி.)

தர்மக் கிரந்தங்களெல்லாம் ஈசுவரனை நாடும் வழியைச் சொல்லுகின்றன. வழி தெரிந்தபின் அவனிடம் செல்ல முயற்சி தான் அடுத்துச் செய்ய வேண்டிய காரியம். அதைச் செய்யாமல் கிரந்தத்தை மட்டுந் திருப்பித் திருப்பி வாசிப்பதால் என்ன உபயோகம் உண்டாகப்போகிறது? (ரா. கி.)

(ஶப்த ஜாலம் மஹாரண்யஞ் சித்தப்ப்ரமண-காரணம் | அத: ப்ரயத்னுத் ஜ்ஞாதவ்யந் தத்வஜ்ஞாத் தத்வமாத்மான:) சொற்களின் விரிவு பெரிய காடு போன்றது. சித்தத்தைப் பிரமிக்கச் செய்யக் காரணமாகும். ஆகையால் ஆத்ம தத்துவத்தைத் தத்துவஞானிகளிடமிருந்து நேரில் பெற முயற்சிக்க வேண்டும். (விவேக சூடாமணி : சங்.)

பி. சூ. 4.1.1.

4.22. ஸர்வஸ்ய வஶீ—ஒ. (ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே) இந்த அக்ஷரத்தின் கட்டளையாலேயே. (ப்ரு. 3.8.9)

வேதானுவசனேன—(வேதானுவசன ஶப்தேன நித்ய: ஸ்வாத்த்யாயோ விதீயதே) வேதானுவசனம் என்ற சொல்லால் இடைவிடாத அத்தி

एषां लोकानामसंभेदाय तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति यज्ञेन दानेन तपसाऽनाशकेनैतमेव विदित्वा मुनिर्भवति एतमेव प्रव्राजिनो लोकमिच्छन्तः प्रव्रजन्ति एतद्ध स्म वै तत्पूर्वे विद्वांसः प्रजां न कामयन्ते किं प्रजया करिष्यामो येषां नोऽयमात्माऽयं लोक इति ते ह स्म पुत्रैषणायाश्च वित्तैषणायाश्च लोकैषणायाश्च

லோகாநா-மஸம்ப்பேதாய; தமேதம் வேதாநுவசனேன ப்ராஹ்-மணா விவிதிஷந்தி, யஜ்ஞேன தானேன தபஸாऽநாசகேநைத-மேவ விதித்வா முனிர்ப்பவதி; ஏத-மேவ ப்ரவ்ராஜிநோ லோக-மிச்சந்த: ப்ரவ்ரஜந்தி; ஏதத்-தஸ்மவை-தத் பூர்வே வித்வாம்ஸ: ப்ரஜாந்-ந காமயந்தே கிம் ப்ரஜயா கரிஷ்யாமோ, யேஷாந் நோऽயமாத்மாऽயம்

---

கர்மத்தால் சிறுமையடைவதில்லை. இந்த ஆத்மாவே ஸர்வவேசுவரன், உண்டாயவற்றிற்கெல்லாம் அதிபதி, எல்லாப் பொருள்களையும் பரிபாலிப்பவர்; இவ்வுலகங்கள் பிரிந்து போகாமல் சேர்த்துப் பிடிக்கும் கரைபோன்றிருப்பவர். இந்த ஆத்மாவை வேதாப்பியாஸத்தால் பிரம்ம நாட்டமுடையவர்கள் யஜ்ஞத்தாலும் தானத்தாலும் தவத்தாலும் உபவாஸத்தாலும் நாடுகிறார்கள். இதை அறிந்து ஒருவன் முனிவனாகிறான். இவ்வாத்ம வாழ்க்கையையே தங்கள் உலகனைத்துமாய்க் கொண்ட வைராக்கிய சீலர்கள் (வீட்டைவிட்டு) ஸந்நியாஸிகளாய்க் கிளம்புகிறார்கள். இதனாலேயே

---

யயனம் விதிக்கப்படுகின்றது. (தத்தி தபஸ்-தத்தி தப: தை 1.6) அதுவே சிறந்த தவம். இதனால் மனதிலுள்ள அழுக்கு நீங்கும். (ஜ்ஞான-முத்-பத்யதே பும்ஸாம் க்ஷயாத் பாபஸ்ய-கர்மண:) பாவச் செயல்களின் அழுக்கு நீங்கியதும் மனிதனுக்கு ஞானமுதிக்கும். (சங்.)

யஜ்ஞத்தாலுந் தானத்தாலும்—ஒ. யஜ்ஞமுந் தானமுந் தவமுமே விவேகிகளுக்குப் பரிசுத்தமளிப்பவை. (கீ. 18.5)

அநாசகேன—(காமானசன-மநாசகம் ந து போஜன-நிவ்ருத்தி: | போஜன நிவ்ருத்தௌ ம்ரியத ஏவ நாத்மவேதனம்) அநாசகம் என்றது காமநுகர்ச்சியை விடுதல், போஜனத்தை விடுதல் அன்று, போஜனத்தை அறவே விட்டால் மரிப்பானே யன்றி ஆத்மஞான மடையமாட்டான். (சங்.)

முனி :—(மனனான்-முனிர் யோகீ பவதி)—மனனத்தால் முனியாக, யோகியாக ஆகிறான். (சங்.)

व्युत्थायाथ भिक्षाचर्यं चरन्ति या ह्येव पुत्रैषणा सा वित्तैषणा या वित्तैषणा सा लोकैषणोभे ह्येते एषणे एव भवतः॥ स एष नेति नेत्यात्माऽगृह्यो न हि गृह्यतेऽशीर्यो न हि शीर्यतेऽसङ्गो

லோக இதி; தே ஹஸ்ம புத்ரைஷணாயாஶ்ச வித்தைஷணாயாஶ்ச லோகைஷணாயாஶ்ச வ்யுத்தாயாத பிக்ஷாசர்யஞ் சரந்தி, யாஹ்யேவ புத்ரைஷணா ஸா வித்தைஷணா யா வித்தைஷணா ஸா லோகைஷணோபே ஹ்யேதே ஏஷணே ஏவ பவத:॥ ஸ ஏஷ நேதி நேத்-

---

பூர்வீக வித்வான்கள் பிரஜையால் நாம் என்ன செய்யப்போகிறோம் என்று பிரஜைகளை இச்சிப்பதில்லை. நமக்கு இந்த ஆத்மாதான் உலகம் என்று கொண்டு அவர்கள் மக்களாசையையும் பொருளாசையையும் உலக ஆசையையும் விட்டுக் கிளம்பிப் பிச்சையால் வாழும் விரதமுடையவர்களாய்ச் சஞ்சரிக்கிறார்கள். எது மக்களாசையோ அதுவே பொருளாசை; எது பொருளாசையோ அதுவே உலக ஆசை. (முன்னதும் பின்னதும் ஸாத்திய ஸாதன பேதத்தால் இரண்டாயினும்) இரண்டும் ஆசைகளேயன்றோ? அவ்வாத்மா (நேதி, நேதி) இல்லை, இல்லை என்று விளக்கப்படும். அது பிடிபடாதது, ஆகையால் பிடிக்கப்படுவதில்லை; அழிவில்லாதது,

---

ஸந்நியாஸிகளாய்க் கிளம்புகிறார்கள்—வெளி உலக போகங்களை இச்சிப்பவர்களுக்குப் புத்திரன் முதலிய ஸாதனங்கள் எங்ஙனம் விதிக்கப்பட்டனவோ அங்ஙனமே ஆத்ம உலகத்தை இச்சிப்பவர்களுக்கு எல்லா ஆசைகளின் நிவிருத்தியும் ஸந்நியாஸமும் விதிக்கப்பட்டன. கானலை நீரென்று எண்ணி முதலில் அதை நோக்கிச் சென்றவன், அது கானல் என்று கண்டுகொண்டபின் எப்படி அதை நோக்கி மீண்டும் செல்ல மாட்டானோ, அப்படி ஞானமுதித்தபின் மண்ணாசை பெண்ணாசைகளில் நாட்டம் ஏற்படாது. அது சம்பந்தமான கருமங்களில் பிரவிருத்தி ஏற்படாது. (ஸர்வங்-கர்மாகிலம் பார்த்த-ஜ்ஞானே பரிஸமாப்யதே—கீ. 4.33) "மிச்சமின்றி எல்லாக் கருமமும் ஞானத்தில் முடிவடைகின்றது." (சங்.)

பி. சூ. 1.3.43; 3.3.39; 3.4.34; 4.1.14.

ஒ. அச்சேத்யோऽயம். (கீ. 2.24).

புத்ரைஷணாயாஶ்ச—(புத் இதி நரகஸ்யாக்க்யா து:க்கஞ்ச நரகம் விது: । புதி த்ராணாத் தத: புத்ர: இஹேச்சந்தி பரத்ரச ॥ ந மாம்ஸபேஶல:

न हि सज्यतेऽसितो न व्यथते न रिष्यत्येतमु हैवैते न तरत इत्यत: पापमकरवमित्यत: कल्याणमकरवमित्युभे उ हैवैष एते तरति नैनं कृताकृते तपत: ॥ ४.२२ ॥

**யாத்மாऽக்ருஹ்யோ ந ஹி க்ருஹ்யதேऽஶீர்யோ ந ஹி ஶீர்யதேऽஸங்கோ ந ஹி ஸஜ்யதேऽஸிதோ ந வ்யததே நரிஷ்யத்யேதமு-ஹைவைதே ந தரத இத்யத: பாபமகரவமித்யத: கல்யாணமகரவமித்யுபே உ ஹைவைஷ ஏதே தரதி நைநங் க்ருதாக்ருதே தபத: ॥ 4.22 ॥**

---

**அழிக்கப்படுவதில்லை ; பற்றில்லாதது, பற்றடைவதில்லை ; கட்டுப்படாதது, ஆகையால் துன்பத்திற்குட்படுவது மில்லை, துன்புறுவது மில்லை. (இங்ஙனம் அறிந்த) இவனை 'இதற்காக நான் பாவஞ் செய்தேன், இதற்காக நான் புண்ணியஞ் செய்தேன்' என்ற இவை தாண்டுவதில்லை ; இவ்விரண்டையும் இவன் தாண்டுகிறான். செய்தனவும் செய்யாதனவும் இவனைத் துன்புறுத்தமாட்டா.**

---

புத்ர: நாऽவித்வான் நாऽப்யகர்மக்ருத் । ஸ்வயம் ந யாதி ய: ஸ்வர்க்கம் கதம் ஸ பிதரம் தரேத் ॥ ) 'புத்' என்பது நரகம். நரகமாவது துன்பம். அத்துன்பத்திலிருந்து இகத்திலும் பரத்திலுங் காக்கப்படுவதற்குப் புத்திரனை இச்சிக்கின்றனர். புத்ரன் மாம்ஸத்தினாலான உருவன்று. கல்லாதவனும், கருமஞ் செய்யாதவனும் புத்ரனாகான். எவன் தானே ஸ்வர்க்கம் செல்லவில்லையோ அவன் தந்தையை எப்படிச் செல்லும்படி செய்வான்? (வியாஸர் கூறியதெனப் போதானயர் குறிப்பிடுவது).

லோகைஷணா—(ஸ்வப்னோபமமமும் லோகம் ஹி அஸதாம் ஶ்ரவணப்ரியம்) கனவுபோன்ற இந்த உலகைப் பற்றிக் கேட்க அஸத்துக்களுக்குப் பிரியம். (பாகவதம் 11.21.31)

ஒ—காமாத்மான:ஸ்வர்க்கபரா: । (கீ. 2.43)

**செய்தனவும் செய்யாதனவும் இவனைத் துன்புறுத்த மாட்டா—**

ஒ. தை. 2.9. ஆசைவாய்ப்பட்டுச் சரீர போஷணைக்காகவும் குடும்ப போஷணைக்காகவும் எத்தனையோ தீமைகளைச் செய்தேன், நல்லதைச் செய்யாமற் போனேன் என்ற வருத்தம் ஞானியைத் தொடுவதில்லை. அவ்வாறே இறந்தபின் ஸ்வர்க்காதி போகங்களை அனுபவிக்கலாம் என்று எண்ணிச் செய்த நற்கருமங்களை நினைத்தும் ஞானி மகிழ்வதில்லை. பாவங்களைப் போல் புண்ணியங்களையும் ஞானி தாண்டிச் செல்கிறான்.

ஆத்மாவை அறியாதவனுக்கு அவன் செய்த கருமம் அதற்குரிய பயனைத் தரும் ; அவன் செய்யவேண்டிச் செய்யாது விடுத்தது பிரத்யவாய பய

एष नित्यो महिमा ब्राह्मणस्य न वर्धते कर्मणा नो कनीयान्। तस्यैव स्यात्पदवित्तं विदित्वा न लिप्यते कर्मणा पापकेनेति तस्मादेवं विच्छान्तो दान्त उपरतस्तितिक्षुः समाहितो भूत्वाऽऽत्मन्येवात्मानं पश्यति सर्वमात्मानं पश्यति नैनं पाप्मा

ஏஷ நித்யோ மஹிமா ப்ராஹமணஸ்ய ந வர்த்ததே கர்மணு நோ கனீயான் । தஸ்யைவ ஸ்யாத் பதவித்தம் விதித்வா ந லிப்யதே கர்மணு பாபகேனேதி ; தஸ்மாதேவம்-விச்சாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வாऽத்மன்யேவாத்மானம் பஶ்யதி, ஸர்வமாத்மானம் பஶ்யதி, நைநம் பாப்மா தரதி, ஸர்வம் பாப்மா

---

4.23. "இதுதான் பிரம்மத்தை யறிந்தவனுடைய அழியாத மகிமை. செயலால் அது வளர்வது மில்லை, குறைவது மில்லை. அந்தப் பதவியை அறிந்து அடைந்தவனுக ஒருவன் ஆகவேண்டும். அதை அறிந்தால் பாவச்செயலால் தொடப்படுவதில்லை. ஆகை

---

னைத் தரும். ஞானியை இரண்டும் பற்ருது. (ஜ்ஞாணுக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே—கீ. 4.37). ஞானத்தீ எல்லாக் கருமத்தையுஞ் சாம் பலாகச் செய்துவிடும். (சங்.)

பிரஜையால் நாம் என்ன செய்யப் போகிருேம் என்று—ஒ. (ருண மோசன கர்த்தார: பிது: ஸந்தி ஸுதாதய: | பந்த-மோசன கர்த்தா து ஸ்வஸ்மா-தன்யோ ந கஶ்சன) கடனிலிருந்து விடுவிக்கத் தகப்ப னுக்குப் பிள்ளை முதலியவர்கள் உண்டு. பந்தத்திலிருந்து விடுவிக்கக் கூடியவன் தன்னைத்தவிற ஒருவனுங் கிடையாது.

(விவேகசூடாமணி: சங்.)

நேதி நேதி : ஒ. ஆணல்லன் பெண்ணல்லன் அலியுமல்லன்
காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்கால் பேணுமுருவாகு மல்லனுமாம்
கோணை பெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே.

—(நம்மாழ்வார்)

4.23. (விரஜ:) அழுக்கற்றவனுயும்—காமமே (ரஜ:) அழுக்கு. பி. சூ. 3.4.27.

ஒ. (ஜ்ஞாணும்ருதேன த்ருப்தஸ்ய க்ருதக்ருத்யஸ்ய யோகின: | ந சாஸ்தி கிஞ்சித் கர்த்தவ்யம் அஸ்தி சேந் ந ஸ தத்வவித்॥) ஞாணமிருதத்தால்

तरति सर्वं पाप्मानं तरति नैनं पाप्मा तपति सर्वं पाप्मानं तपति विपापो विरजो विचिकित्सो ब्राह्मणो भवत्येष ब्रह्मलोकः सम्राडेनं प्रापितोऽसीति होवाच याज्ञवल्क्यः सोऽहं भगवते विदेहान् ददामि मां चापि सह दास्यायेति ॥ ४.२३ ॥

**னந் தரதி; நைநம் பாப்மா தபதி, ஸர்வம் பாப்மானந் தபதி; விபாபோ விரஜோ விசிகித்ஸோ ப்ராஹ்மணோ பவத்-யேஷ ப்ரஹ்மலோகः ஸம்ரா-டேனம் ப்ராபிதோஸீதி ஹோவாச யாஜ்ஞவல்க்யः, ஸோஹம் பகவதே விதேஹான் ததாமி, மாஞ்சாபி ஸஹ தாஸ்யாயேதி ॥ 4.23 ॥**

---

யால் இங்ஙனம் அறிந்தவன் அமைதியுடையவனாகவும் அடக்கமுடையவனாகவும் ஆசைகளை விட்டவனாகவும் பொறுமை உடையவனாகவும் ஆத்மநிஷ்டனாகவும் ஆகித் தன்னிடத்திலேயே ஆத்மாவைக் காண்கிறான். இவனைப் பாவம் தாண்டுவதில்லை; இவன் எல்லாப் பாவங்களையும் தாண்டுகிறான்; இவனைப் பாவம் எரிப்பதில்லை, இவன் எல்லாப் பாவங்களையும் எரிக்கிறான். பாவமற்றவனாயும் அழுக்கற்றவனாயும் சந்தேகமற்றவனாயும் பிராம்மணனாயும் ஆகிறான். இதுதான் பிரம்மலோகம். அரசே! இதை நீர் அடைந்தவராய் விட்டீர்'' என்றார் யாஜ்ஞவல்கியர்.

"இங்ஙனம் அருளப்பெற்ற அடியேன் தேவரீருக்கு விதேக நாடுகளையும் சேவை புரிவதற்காக அடியேனையுந் தருகின்றேன்'' என்றார் (ஜனகர்).

---

திருப்தியடைந்து, கிருதகிருத்தியனாயிருக்கும் யோகிக்குச் செய்யவேண்டிய காரியம் என்று ஒன்றுமில்லை; அப்படியிருப்பின் அவன் தத்துவ ஞானியன்று. (உத்தரகீதை 1.2.3).

ஒ. (ந ஹன்யதே, ந ஜீயதே, த்வோதோ நைனமஂஹோ அஶ்நோதி, அந்திதோ ந தூராத்) இவன் நோயால் கொல்லப்படமாட்டான்; சத்துருக்களால் ஜயிக்கப்படமாட்டான்; பாவம் இவனை உண்ணாது (இவன் பாவத்தை உண்டுவிடுவான்); பாவம் இவனுக்குப் பக்கத்திலும் வராது, எட்டியும் நில்லாது. (யஜுஸ் ஸந்தியாவந்தனம்.)

स वा एष महानज आत्माऽजरोऽमरोऽमृतोऽभयो ब्रह्माभयं वै ब्रह्माभयꣳ हि वै ब्रह्म भवति य एवं वेद ॥ ४.२५ ॥

॥ इति चतुर्थोऽध्यायः ॥

## ॥ पञ्चमोऽध्यायः ॥

त्रयाः प्राजापत्याः प्रजापतौ पितरि ब्रह्मचर्यमूषुर्देवा मनुष्या असुरा उषित्वा ब्रह्मचर्यं देवा ऊचुर्ब्रवीतु नो भवानिति

ஸ வா ஏஷ மஹா-னஜ ஆத்மாऽஜரோऽமரோऽம்ருதோऽபயோ ப்ரஹ்மாபயம் வை ப்ரஹ்மாபயம் ஹி வை ப்ரஹ்ம பவதி ய ஏவம் வேத ॥ 4.25 ॥

இதி சதுர்த்தோ ऽத்த்யாய: ॥

## பஞ்சமோऽத்த்யாய: ॥

த்ரயா: ப்ராஜாபத்யா: ப்ரஜாபதௌ பிதரி ப்ரஹ்மசர்ய மூஷுர்-தேவா-மனுஷ்யா- அஸுரா, உஷித்வா ப்ரஹ்மசர்யந்

4.25. இந்த ஆத்மா பெரியவர், பிறப்பில்லாதவர், மூப்பில்லாதவர், இறவாதவர், அழியாதவர், பயமில்லாத பிரம்மம். பிரம்மமே பயமில்லாதது. இங்ஙனம் அறிந்தவன் பயமில்லாத பிரம்மமாகவே ஆகிறான்.

நான்காவது அத்தியாயம் முற்றும்.

## ஐந்தாவது அத்தியாயம்

2.1. தேவர்கள் மனிதர்கள் அசுரர்களாகிய பிரஜாபதியின் மக்கள் முவ்வகையினரும் தகப்பனாகிய பிரஜாபதியிடம் பிரம்மசாரிகளாக இருந்தார்கள். பிரம்மசரியம் இருந்தபின் 'எங்களுக்குத் தேவரீர் உபதேசம் செய்யுங்கள்' என்று தேவர்கள்

4.25. பி. சூ. 2.3.9; 2.3.17

2.3. ஒருவனுக்குத் தன் குறை தெரியும்போது குறிப்பாலேயே அவனுக்கு அறிவுணர்த்த இயலும் என்பது இக்கதையால் தெளிவாகிறது. தேவர்கள் இயற்கையாகவே இந்திரிய அடக்கமற்றவர்கள் என்பதையும், மனிதர்கள் லோபிகள் என்பதையும், அசுரர்கள் இம்சிக்கும் இயல்புடையவர்கள் என்பதையும் அவரவர்கள் உணர்ந்திருந்தனர். இக்குணங்களை

तेभ्यो हैतदक्षरमुवाच द इति व्यज्ञासिष्टा ३ इति व्याज्ञासिष्मेति होचुर्दाम्यतेति न आत्थेत्योमिति होवाच व्यज्ञासिष्टेति ॥ २.१ ॥

अथ हैनं मनुष्या ऊचुर्ब्रवीतु नो भवानिति तेभ्यो हैतदक्षरमुवाच द इति व्यज्ञासिष्टा३ इति व्याज्ञासिष्मेति होचुर्दत्तेति न आत्थेत्योमिति होवाच व्यज्ञासिष्टेति ॥ २.२ ॥

தேவா ஊசுர்-ப்ரவீது நோ பவானிதி, தேப்ப்யோஹைத-தக்ஷர-முவாச, த இதி, வ்யஜ்ஞாஸிஷ்டா 3 இதி, வ்யஜ்ஞாஸிஷ்மேதி ஹோசுர்-தாம்யதேதி ந ஆத்தேத்-யோமிதி ஹோவாச, வ்யஜ்ஞாஸிஷ்டேதி ॥ 2.1 ॥

அத ஹைனம் மனுஷ்யா ஊசுர்-ப்ரவீது நோ பவானிதி, தேப்ப்யோ ஹைத-தக்ஷர-முவாச, த இதி, வ்யஜ்ஞாஸிஷ்டா 3 இதி, வ்யாஜ்ஞாஸிஷ்மேதி ஹோசுர்-தத்தேதி ந ஆத்தேத்-யோமிதி ஹோவாச, வ்யஜ்ஞாஸிஷ்டேதி ॥ 2.2 ॥

---

கேட்டனர். அவர்களுக்கு 'த' என்ற இவ்வக்ஷரத்தைக் கூறித் 'தெரிந்துகொண்டீர்களா?' என்றூர். 'தெரிந்துகொண்டோம், (தாம்யத) அடக்கமுடையவர்களாயிருங்கள் என்று தாங்கள் உபதேசித்தீர்கள்' என்றனர். 'ஆம். நீங்கள் தெரிந்துகொண்டது சரி' என்றூர்.

2·2. பின் மனிதர்கள் இவரையணுகி, 'எங்களுக்குத் தேவரீர் உபதேசம் செய்யுங்கள்' என்று கேட்டனர். அவர்களுக்கும் 'த' என்ற இவ்வக்ஷரத்தையே கூறித் 'தெரிந்துகொண்டீர்களா ?' என்றூர். 'தெரிந்துகொண்டோம், (தத்த) தானம் செய்யுங்கள் என்று தாங்கள் உபதேசித்தீர்கள்' என்றனர். 'ஆம். நீங்கள் தெரிந்து கொண்டது சரி' என்றூர்.

---

மாற்றுவதற்காக தமம், தானம், தயை முறையே உபதேசிக்கப்பட்டதாகின்றது. (சங்).

ஒ. (த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஶனமாத்மன: | காம: க்ரோதஸ்-ததா லோபஸ்-தஸ்மா-தேதத் த்ரயந் த்யஜேத் ||) ஆத்மாவிற்கு நாசம் விளைக்கும் இந்த நரகவாயில் மூவகைத்து. காமம், கோபம், லோபம் என்பன ; ஆகையால் இம்மூன்றையுந் தள்ளவேண்டும். (கீ. 16.21).

இங்கே தேவர்கள் எனவும் அசுரர்கள் எனவுங் குறிப்பிடப்பட்டவர்

अथ हैनमसुरा ऊचुर्ब्रवीतु नो भवानिति तेभ्यो हैतदेवाक्षरमुवाच द इति व्यज्ञासिष्टा ३ इति व्यज्ञासिष्मेति होचुर्दयध्वमिति न आत्थेत्योमिति होवाच व्यज्ञासिष्टेति तदेतदेवैषा दैवी वागनुवदति स्तनयित्नुर्द द द इति दाम्यत दत्त दयध्वमिति तदेतत्त्रयं शिक्षेद्दमं दानं दयामिति ॥ २.३ ॥

एष प्रजापतिर्यद्धृदयमेतद्ब्रह्मैतत्सर्वम् ॥ ३.१ ॥

அத ஹைனமஸுரா ஊசுர்-ப்ரவீது நோ பவானிதி, தேப்ப்யோ ஹைத-தேவாக்ஷர-முவாச த இதி, வ்யஜ்ஞாஸிஷ்டா இதி, வ்யஜ்ஞாஸிஷ்மேதி ஹோசுர்-தயத்த்வமிதி ந ஆத்தேத்யோமிதி ஹோவாச, வ்யஜ்ஞாஸிஷ்டேதி, தததேத தேவைஷா தேவீ வாகனுவததி ஸ்தனயித்னுர்-த-த-த இதி, தாம்யத, தத்த, தயத்த்வமிதி, தததேதத்-த்ரயஃ ஶிக்ஷேத்-தமந் தானந் தயாமிதி ॥ 2.3 ॥

ஏஷ ப்ரஜாபதிர்-யத்-த்ருதய-மேதத் ப்ரஹ்மைதத் ஸர்வம் ॥3.1॥

---

2.3. பின் அசுரர்கள் இவரையணுகி, 'எங்களுக்குத் தேவரீர் உபதேசம் செய்யுங்கள்' என்று கேட்டனர். அவர்களுக்கும் 'த' என்ற இவ்வக்ஷரத்தையே கூறித் 'தெரிந்துகொண்டீர்களா?' என்றார். 'தெரிந்துகொண்டோம் (தயத்த்வம்) தயை உடையவர்களாயிருங்கள் என்று தாங்கள் உபதேசித்தீர்கள்' என்றனர். 'ஆம். நீங்கள் தெரிந்துகொண்டது சரி' என்றார். இந்த தெய்வ வாக்கையே மேகம் (இடிக்கும்போது) த-த-த—தாம்யத, தத்த, தயத்த்வம் என்று திருப்பிச் சொல்லுகிறது. தமம், தானம், தயை இம் மூன்றையும் அப்பியசிக்கவேண்டும்.

3.1. எது ஹிருதயமோ (புத்தியோ) அதுதான் பிரஜாபதி, அது தான் பிரம்மம், அது தான் எல்லாம்.

---

களும் மனிதர்களைவிட வேறல்லர். (மனுஷ்யாஞ-மேவாதாந்தா யேடன்யை-ருத்தமைர்-குணை:ஸம்பன்னஸ்-தே தேவா: । லோபப்ரதாந மனுஷ்யா: । ததா ஹிம்ஸாபரா:, க்ரூரா, அஸுரா:) மனிதர்களிடையே எவர்கள் எல்லா நற்குணங்களும் பொருந்தியிருந்தும் இந்திரிய அடக்கமற்றவர்களோ அவர்கள் தேவர்கள். லோபித்தனம் மிகுந்தவர்கள் மனிதர்கள். இம்சையும் குரூர ஸ்வபாவமும் உடையவர்கள் அசுரர்கள். ஆகையால், மூன்று உபதேசங்களும் மனிதர்க்கே கூறப்பட்டனவாகக்கொள்ளலாம். (சங்.)

तद्वै तदेव तदास सत्यमेव स यो हैतं महद्यक्षं प्रथमजं वेद सत्यं ब्रह्मेति जयतीमाँल्लोकान् जित इन्न्वसावसद्य एवमेतन्महद्यक्षं प्रथमजं वेद सत्यं ब्रह्मेति सत्यँ ह्येव ब्रह्म ॥ ४.१ ॥

आप एवेदमग्र आसुस्ता आपः सत्यमसृजन्त सत्यं ब्रह्म ब्रह्म प्रजापतिं प्रजापतिर्देवाँस्ते देवाः सत्यमेवोपासते तदेतत्त्र्यक्षरँ सत्यमिति स इत्येकमक्षरं तीत्येकमक्षरं यमित्येकमक्षरं प्रथमो-

தத் வை ததேவ ததாஸ, ஸத்யமேவ ஸ யோ ஹைதம் மஹத் யக்ஷம் ப்ரதமஜம் வேத, ஸத்யம் ப்ரஹ்மேதி ஜயதீமா௺லோகாஞ் ஜித இந்ந்வஸாவஸத் ய ஏவமேதன் மஹத்யக்ஷம் ப்ரதமஜம் வேத, ஸத்யம் ப்ரஹ்மேதி, ஸத்ய௺ஹ்யேவ ப்ரஹ்ம ॥ 4.1 ॥

ஆப ஏவேத-மக்ர ஆஸுஸ்-தா ஆப: ஸத்ய-மஸ்ருஜந்த, ஸத்யம் ப்ரஹ்ம, ப்ரஹ்ம, ப்ரஜாபதிம், ப்ரஜாபதிர்-தேவா௺ஸ்தே தேவா: ஸத்யமேவோபாஸதே, ததேதத்-த்ரியக்ஷர௺ஸத்யமிதி ஸ இத் யேகமக்ஷரம், தீத்யேகமக்ஷரம், யமித்யேகமக்ஷரம், ப்ரதமோத்-

---

4.1. அந்த ஹ்ருதயப்பிரம்மம் ஸ்த்யப் பிரம்மமாகவே இருந்தது. பெரியதும் பூசிக்கத் தகுந்ததும் முதலிலுண்டானது மான இதை எவன் ஸத்யப் பிரம்மம் என்று அறிகிருனே அவன் இவ்வுலகங்களை யெல்லாம் ஜயிக்கிருன்; பெரிதும் பூஜிக்கத்தகுந்த தும் முதலிலுண்டானதுமான இதை எவன் அஸத்து என்று கருதுகிருனே அவன் உலகங்களால் ஜயிக்கப் படுவதுபோல. ஸத்யம் பிரம்மம் என்றும் ஸத்யமே பிரம்மம் என்றும் அறிய வேண்டும்.

5.1. ஆதியில் இது (இவ்வுலகம்) நீராகவே (நீர்போல் அமூர்த்தமான அவ்வியாகிருத பஞ்சபூதங்களாகவே) இருந்தது. அவ்வியாகிருதங்கள் ஸத்யத்தை (வ்யாக்ருத பஞ்ச மகா பூதங்களை) சிருஷ்டித்தன. ஸத்யமே பிரம்மம். அந்த பிரம்மம் பிரஜாபதியை (விராட்புருஷனை சிருஷ்டித்தது). பிரஜாபதி தேவர் களை (சிருஷ்டித்தார்). அந்த தேவர்கள் ஸத்யத்தையே உபாசிக் கிருர்கள். அந்த ஸத்யம் மூன்று அக்ஷரங்களை உடையது;

---

4.1. பி. சூ. 3.3.38.

त्तमे अक्षरे सत्यं मध्यतोऽनृतं तदेतदनृतमुभयतः सत्येन परिगृही-
त१ सत्यभूयमेव भवति नैवं विद्वा१समनृत१ हिनस्ति ॥ ५.१ ॥

तद्यत्तत्सत्यमसौ स आदित्यो य एष एतस्मिन्मण्डले पुरुषो यश्चायं दक्षिणेऽक्षन्पुरुषस्तावेतावन्योन्यस्मिन्प्रतिष्ठितौ रश्मिभिरेषोऽस्मिन्प्रतिष्ठितः प्राणैरयममुष्मिन्स यदोत्क्रमिष्यन् भवति शुद्धमेवैतन्मण्डलं पश्यति नैनमेते रश्मयः प्रत्यायन्ति ॥ ५.२ ॥

தமே-அக்ஷரே ஸத்யம்,மத்த்யதோऽன்ருதம் ததேத-தன்ருத-முபயத: ஸத்யேன பரிக்ருஹீத१, ஸத்யபூயமேவ பவதி, நைவம் வித்வா१ஸ மன்ருத१ஹினஸ்தி ॥ 5.1 ॥

தத்யத்-தத்-ஸத்ய-மஸௌ ஸ ஆதித்யோ, ய ஏஷ ஏதஸ்மின் மண்டலே புருஷோ, யச்சாயம் தக்ஷிணேऽக்ஷன் புருஷஸ்-தாவேதா-வன்யோன்யஸ்மின் ப்ரதிஷ்ட்டிதௌ, ரச்மிபி-ரேஷோऽஸ்மின் ப்ரதிஷ்ட்டித:, ப்ராணை-ரயமமுஷ்மின், ஸ யதோத்க்ர-மிஷ்யன் பவதி, சுத்த-மேவைதன்-மண்டலம் பச்யதி நைன-மேதே ரச்மய: ப்ரத்யாயந்தி ॥ 5.2 ॥

'ஸ' என்பது ஒரு அக்ஷரம் 'த்' என்பது ஒரு அக்ஷரம், 'ய'ம் என்பது ஒரு அக்ஷரம். முதல் அக்ஷரமும் கடைசி அக்ஷரமும் உண்மையானவை; நடுவில் உள்ளது பொய்யானது; அந்தப் பொய்யெழுத்து இருபுறமும் மெய்யால் அணைக்கப்பட்டிருப்பதால் ஸத்யமே மேலெழுந்து நிற்கிறது. இங்ஙனம் அறிந்தவனைப் பொய் வருத்தாது.

5.2. அந்த ஸத்யம் எதுவோ அதுதான் இந்த ஆதித்யன். இந்த (சூரிய) மண்டலத்தில் உள்ள புருஷன் எவனோ அவனும் வலது கண்ணில் உள்ள புருஷன் எவனோ அவனும் இருவரும் ஒருவரிடம் ஒருவர் இருக்கின்றனர். கிரணங்களால் அவன் இவனிடம் இருக்கிறான். பிராணன்களால் (இந்திரியங்களால்) இவன் அவனிடம் இருக்கிறான். இவன் எப்போது கிளம்பும் (மரண) சமயமோ அப்போது அம்மண்டலம் (உஷ்ணமும் கிரணமும் இன்றி) சுத்தமாய்த் தோன்றுகிறது. அதன் பின் கிரணங்கள் இவனை நாடி அடைவதில்லை.

5.2. பி. சூ. 3.3.38.

मनोमयोऽयं पुरुषो भाः सत्यस्तस्मिन्नन्तर्हृदये यथा व्रीहिर्वा यवो वा स एष सर्वस्येशानः सर्वस्याधिपतिः सर्वमिदं प्रशास्ति यदिदं किंच ॥ ५.६ ॥

वाचं धेनुमुपासीत तस्याश्चत्वारः स्तनाः स्वाहाकारो वषट्कारो हन्तकारः स्वधाकारस्तस्य द्वौ स्तनौ देवा उपजीवन्ति स्वाहाकारं च वषट्कारं च हन्तकारं मनुष्याः स्वधाकारं पितरस्तस्याः प्राण ऋषभो मनो वत्सः ॥ ८.१ ॥

**மனோமயோऽயம் புருஷோ பா: ஸத்யஸ்-தஸ்மிந்-நந்தர்-ஹ்ருதயே, யதா வ்ரீஹிர்-வா, யவோ வா, ஸ ஏஷ ஸர்வஸ்யேஶான: ஸர்வஸ்யாதிபதி:, ஸர்வமிதம் ப்ரஶாஸ்தி, யதிதங்-கிஞ்ச ॥ 5.6 ॥**

**வாசந்-த்தேனு முபாஸீத, தஸ்யாஶ்-சத்வார: ஸ்தனா:, ஸ்வாஹாகாரோ, வஷட்காரோ, ஹந்தகார:, ஸ்வதாகாரஸ்-தஸ்ய த்வௌ ஸ்தனௌ தேவா உபஜீவந்தி, ஸ்வாஹாகாரஞ் ச வஷட்காரஞ்ச, ஹந்தகாரம் மனுஷ்யா:, ஸ்வதாகாரம் பிதரஸ்-தஸ்யா: ப்ராண ருஷபோ மனோ வத்ஸ: ॥ 8.1 ॥**

---

5.6. இந்தப் புருஷன் மனோமயமானவன்; இருதயத்தினுள்ளே (சிறியதாய்) நெல்லளவிலோ, யவ அளவிலோ ஜோதி ஸ்வரூபியாய்த் தோன்றுபவன். அவன்தான் அனைத்துக்கும் ஈசுவரன்; அனைத்துக்கும் அதிபதி; இங்கு உள்ளது அனைத்தையும் அவனே அடக்கியாள்கிறான்.

8.1. (வேத) வாக்கைக் கறவைப் பசு என உபாசிக்க வேண்டும். அதற்கு (வேதமாகிற பசுவுக்கு) முலைக் காம்புகள் நான்கு: ஸ்வாஹாகாரம், வஷட்காரம், ஹந்தகாரம், ஸ்வதாகாரம். அவற்றில் (யஜ்ஞயாகாதிகளில்) ஸ்வாஹாகாரம், வஷட்காரம் என்னும் இரண்டையும் பற்றித் தேவர்கள் ஜீவிக்கிறார்கள்; (தானத்தில்) ஹந்தகாரத்தால் மனிதர்களும், (சிராத்தக்கிரியையில்) ஸ்வதாகாரத்தால் பிதிருக்களும் (ஜீவிக்கிறார்கள்). (பிராணனால் வாக்குப் பிறப்பதால்) அப்பசுவுக்கு உரிய ரிஷபம் பிராணன். (மனதின் தூண்டு

---

8.1. ஸ்வாஹா:—(ஸுஷ்டு ஆஹூயதே அநயா இதி வ்யுத்பத்தி:) 'ஸ்வாஹா' என்று சொல்லிச் செய்தால் ஆஹுதி நன்றாய்ச் செய்யப்

एतद्वै परमं तपो यद्व्याहितस्तप्यते परमꣳ हैव लोकं जयति य एवं वेद। एतद्वै परमं तपो यं प्रेतमरण्यꣳ हरन्ति परमꣳ हैव लोकं जयति य एवं वेद। एतद्वै परमं तपो यं प्रेतमग्नावभ्यादधति परमꣳ हैव लोकं जयति य एवं वेद ॥ ११.१ ॥

॥ इति पञ्चमोऽध्यायः ॥

ஏதத் வை பரமந்தபோ, யத்-வ்யாஹிதஸ்-தப்யதே, பரமꣳஹைவ லோகஞ் ஜயதி ய ஏவம் வேத । ஏதத் வை பரமம் தபோ, யம் ப்ரேத-மரண்யꣳஹரந்தி, பரமꣳஹைவ லோகஞ்-ஜயதி ய ஏவம் வேத ॥ ஏதத் வை பரமந் தபோ, யம் ப்ரேத-மக்னௌ அப்ப்யாதததி, பரமꣳஹைவ லோகஞ் ஜயதி ய ஏவம் வேத ॥ 11.1 ॥

॥ இதி பஞ்சமோऽத்த்யாய: ॥

---

தலால் மேற்கூறிய கர்மங்களின் பெருக்கம் ஏற்படுவதால்) அப்பசுவுக்கு மனது கன்றுக் குட்டியாம்.

11.1. நோயால் பீடிக்கப்பட்டு வருந்துதல் கூட உண்மையில் பெருந்தவமாகும் என்று எவன் அறிகிருனே அவன் உயர்ந்த உலகை அடைகிருன். இறந்துபோன இவன் உடலைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகிருர்களே, அதுவும் பெருந்தவம் என்று எவன் அறிகிருனே அவன் உயர்ந்த உலகை அடைகிருன். இறந்துபோன இவன் உடலைத் தீயில் இடுகிருர்களே அதுவுங் கூடப் பெருந்தவம் என்று எவன் அறிகிருனே அவன் உயர்ந்த உலகைஅடைகிருன்.

ஐந்தாவது அத்தியாயம் முற்றும்.

---

பட்டதாதிறது. 'ஸ்வாஹா' எனும் பதத்தால் 'ஸ்வத்வ-ஹாநம்', அதாவது அஹங்கார மமங்காரங்களினின்று விடுபடுதல் குறிக்கப்படும்.

ஓ. தேவேப்ப்ய: ஸ்வாஹா । பித்ருப்ப்ய: ஸ்வதாஸ்து । பூதேப்ப்யோ நம: । மனுஷ்யேப்ப்யோ ஹந்த । (நாரயணோபநிஷத்).

11.1. தவத்தால் அஹங்காரத்தைத் தியாகம் செய்யவேண்டும் என்பது இயற்கை நியதி. தானகவே ஒருவன் அங்ஙனம் செய்ய மறந்து விட்டால், இயற்கை அவனைத் தவிக்கச்செய்து, 'நான், என்னுடையது' என்று அவன் போற்றினதையெல்லாம் அவனிடமிருந்து கவர்ந்து கொள்ளுகிறது.

வெல்லத்தையும் வெல்லப் பொம்மையாக்குமுன் மறுபடி உருக்கி வார்க்கவேண்டும். அதுபோல நல்லவருங் கூடத் துன்பத்தால் உருக்கப் பட்டுத்தான் திருவடிவம் பெறவேண்டும்.

## ॥ षष्ठोऽध्यायः ॥

अथ वꣳशः । आदित्यानीमानि शुक्लानि यजूꣳषि वाजसनेयेन याज्ञवल्क्येनाख्यायन्ते ॥ ५.३ ॥

सांजीवी पुत्रो माण्डूकायनेर्माण्डूकायनिर्माण्डव्या-न्माण्डव्यः कौत्सात्कौत्सो माहित्थे-र्माहित्थिर्वामकक्षायणाद्वाम-

## ॥ ஷஷ்ட்டோऽத்த்யாய: ॥

அத வꣳஶ:। ஆதித்யானீமானி ஶுக்லானி யஜூꣳஷி வாஜஸனேயேன யாஜ்ஞவல்க்யே-ஞக்க்யாயந்தே ॥ 5.3 ॥

ஸாஞ்ஜீவீ புத்ரோ மாண்டூகாயனேர்-மாண்டூகாயனிர் மாண் டவ்யான்-மாண்டவ்ய: கௌத்ஸாத்-கௌத்ஸோ மாஹித்தேர்-மாஹித்திர்வாமகக்ஷாயணாத்-வாமகக்ஷாயண: ஶாண்டில்யாச்-சாண்டில்யோ வாத்ஸாத்-வாத்ஸ: குஶ்ரே: குஶ்ரிர்யஜ்ஞவசஸோ

## ஆறுவது அத்தியாயம்

5.3. இனி பரம்பரை. சூரியனிடமிருந்து வந்த இச்சுக்ல யஜுர் மந்திரங்கள் சூரியன் அருள்பெற்ற யாஜ்ஞவல்கியரால் கூறப்படுகின்றன.

5.4. ஸாஞ்ஜீவீபுத்ரன் மாண்டூகாயனியிடமிருந்து (உபதேசம் பெற்றார்). மாண்டூகாயனி மாண்டவ்யரிடமிருந்து; மாண்டவ்யர் கௌத்ஸரிடமிருந்து; கௌத்ஸர் மாஹித்தியிடமிருந்து; மாஹித்தி வாமகக்ஷாயனரிடமிருந்து; வாமகக்ஷாயனர் சாண்டில்யரிட மிருந்து; சாண்டில்யர் வாத்ஸரிடமிருந்து; வாத்ஸர் குச்ரியிட மிருந்து; குச்ரி ராஜஸ்தம்பர் புத்திரரான யஜ்ஞவசஸ்ஸிட மிருந்து; ராஜஸ்தம்பர் புத்திரரான யஜ்ஞவசஸ் கவஷியின் புத்திரரான துரரிடமிருந்து, கவஷியின் புத்திரரான துரர் பிரஜா

---

மனித பாஷையில் எது 'விபத்து' எனக் கூறப்படுகிறதோ அதுவே தேவபாஷையில் 'ஸம்பத்து' எனப்படும். இது பெரியோர் கண்ட ரகசியம்.

5.4. ஸாஞ்ஜீவீ புத்ரன், மாண்டூகாயனி முதலானவர்கள் பரம் பரையாக பிரஜாபதியிடமிருந்து வந்த எந்த சுக்லயஜுர் வேதத்தை அத்தியயனம் செய்தார்களோ அதையே சூரியனுடைய அருளால் யாஜ்ஞ-வல்கியர் அடைந்து உலகில் விளங்கும்படி செய்தார்.

कक्षायण: शाण्डिल्याच्छाण्डिल्यो वात्साद्वात्स: कुश्रेः कुश्रिर्यज्ञवचसो राजस्तंबायनाद्यज्ञवचा राजस्तंबायनस्तुरात्कावषेयात्तुरः कावषेय: प्रजापते: प्रजापतिर्ब्रह्मणो ब्रह्म स्वयंभु ब्रह्मणे नमः ॥ ६.४ ॥

॥ इति षष्ठोऽध्याय: ॥

ॐ पूर्णमद: पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते । पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

ॐ शान्ति: शान्ति: शान्ति: ॥

॥ इति बृहदारण्यकोपनिषत्समाप्ता ॥

ராஜஸ்தம்பாயனுத்- யஜ்ஞவசா ராஜஸ்தம் பாயனஸ்துராத்காவஷேயாத்-துர: காவஷேய: ப்ரஜாபதே:-ப்ரஜாபதிர்ப்ரஹ்மணோப்ரஹ்மஸ்வயம்ப்பு, ப்ரஹ்மணே நம: ॥ 5.4 ॥

॥ இதி ஷஷ்டோऽத்யாய: ॥

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத்பூர்ணமுதச்யதே । பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஶிஷ்யதே ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

॥ இதி ப்ருஹதாரண்யகோபநிஷத் ஸமாப்தா ॥

---

பதியிடமிருந்து; பிரஜாபதி (சப்த) பிரம்மத்தினிடமிருந்து; (சப்தப்) பிரம்மமோ தான் தானுகவே (என்றும்) இருப்பது. அந்த (சப்தப்) பிரம்மத்துக்கு நமஸ்காரம்.

ஆருவது அத்தியாயம் முற்றும்.

ஓம். அது பூர்ணம். இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதயமாயுள்ளது. பூர்ணத்தினின்று பூர்ணத்தையெடுத்தும் பூர்ணமே மிஞ்சி நிற்கின்றது.

ஓம் மூவ்வகையிலும் சாந்தி நிலவுக.

இங்ஙனம் பிருஹதாரணியகோபநிஷத்து முற்றும்.

---

தைத்திரீயோபநிஷத்தின் முன்னுரையில் யாஜ்ஞவல்கியர் சுக்லயஜுர் வேதத்தைச் சூரியனிடம் கற்ற வரலாறு காண்க.

**உபநிஷத்தின் விஷயச்சுருக்கம் :—**

முதல் அத்தியாயத்தின் ஆரம்பத்தில் யஜ்ஞத்தில் நிகழும் சில உபாஸனைகளின் உட்கருத்துக்களும் மந்திரங்களை உபயோகிக்கும் முறைகளும் உபதேசிக்கப்படுகின்றன. உதாரணமாக ' அஸதோ மா ஸத் கமய, தமஸோ மா ஜ்யோதிர்.கமய, ம்ருத்யோர்-மா அம்ருதம் கமய '- அஸத்தினின்று என்னை ஸத்துக்கு அழைத்துச் செல்; இருளினின்று என்னை ஒளிக்கு அழைத்துச் செல்; சாவினின்று என்னைச் சாகாமைக்கு அழைத்துச் செல், என்பது பவமான மந்திரம். இது யாகத்தில் ஜபிக்கப்பட்டால் யஜமானனுக்கு விரும்பிய பலனையளிக்கும். யாகம் இல்லாமல் இது மட்டும் ஜபிக்கப்பட்டாலும் உயர்ந்த நன்மையைத் தரும்.

விராட்புருஷ வடிவில் பரம்பொருள் பலவாருய்ப் பரந்து நிற்பினும் ஒன்றே என்பது விளக்கப்படுகிறது. வேற்றுமைகளை நீக்கி ஒற்றுமையையே நாடவேண்டும். எவனொருவன் வெவ்வேருகப் பிரித்து உபாசிக்கிருனோ அவன் அறிந்தவனல்ல. அறியவேண்டிய ஒன்று ஆத்மா தான். ஆத்மா புத்திரனைவிடப் பிரியமானது; செல்வத்தைவிடப் பிரியமானது; எல்லாவற்றையும்விடச் சமீபமானது; ஆத்மாவையே பிரியமானதாக உபாசிக்க வேண்டும். எவரெவர் இதை உணர்ந்தனரோ அவர்கள் அதுவே ஆயினர். இதைக் கண்டறிந்த ரிஷி வாமதேவர், "நானே மனுவாயிருந்தேன், சூரியனு யிருந்தேன்" என்று கூறினர். இப்போதும் எவனொருவன் நான் பிரம்மமாயிருக்கிறேன் என்று அறிகிருனோ அவனுடைய பெருமையைக் குறைக்கத் தேவர்களாலும் இயலாது.

இரண்டாவது அத்தியாயம் அஜாத சத்துரு-பாலாகி உபாக்கியானத்தில் ஆரம்பிக்கிறது. பிரம்ம ஞானம் க்ஷத்திரிய அரசனுல் பிராம்மணனுக்கு உபதேசிக்கப்படுகிறது. அஜாதசத்துரு கார்க்கியரை நோக்கி, "இது முறை மாறுபட்டதாகும், இவன் பிரம்மத்தை உபதேசிப்பான் என்று ஒரு க்ஷத்திரியனைப் பிராம்மணன் நாடுவது. எனினும் உமக்குக் கூறுகிறேன்," என்ருர். இதற்குப் பின் யாஜ்ஞவல்கியர் மைத்திரேயிக்குச் செய்த உபதேசம் விளக்கப்படுகிறது. யாஜ்ஞவல்கியர் இல்லறம் முடித்து வனம்போக விரும்பியபோது, தம் மனைவிகள் இருவரில் மைத்திரேயியைக் கூப்பிட்டு, "உனக்கும் காத்தியாயனிக்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்து விடுதல் நலமல்லவா?" என்ருர். மைத்திரேயி, "முக்தி தராத செல்வத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வேன்? தாங்கள் வனம் போகுமுன் எனக்கு ஞானத்தை உபதேசித்தருள்வீராக" என்ருள். யாஜ்ஞவல்கியர் "கணவனைக் காதலிப்பது கணவனைக் காதலிக்க அல்ல; பரமாத்மாவைக்

காதலிக்கப் பயில்வதற்காகவே. கணவன் மனைவியைக் . காதலிப்பதும் இதற்காகவே். இதுவே காதலின் பயனும் உண்மைப் பொருளும் ஆகும். மனைவி, கணவன், மக்கள், செல்வம், பசுக்கள் இவைகளினுள் நிற்கும் பரம்பொருளைக் கண்டு அதனுடன் கலந்து ஒன்றுவதற்கு உள்ளம் பொங்க வேண்டும். பரம்பொருளை மறந்து, வேறெந்தப் பொருளைத் தேடி வாழ்ந் தாலும் அது ஏமாற்றத்தையே தரும். பரம்பொருளைத் தனியாகக் காணவோ அடையவோ மனித வாழ்வில் முடியாது. வீணையின் நாதத்தை மட்டுந் தனியாக எடுத்து வைத்துக்கொள்ள முடியாது. வீணையைப் பெற்று நாதத்தைக் கேட்கலாம். இவ்வாறே பரம்பொருளையுங் காணலாம்," என்று உபதேசித்தார்.

இதன் பின் கூறப்படுவது மதுவித்தை. இந்தப்பிரபஞ்சம் பிராணி களுக்கு மது. பிரபஞ்சத்துக்குப் பிராணிகள் மது. ஆத்மா எல்லாப் பிராணிகளுக்கும் மது. இவ்வுபாஸனையைத் ததீசிமுனிவர் அசுவினீ தேவர்களுக்கு உபதேசித்தார். இது இங்கு கூறப்படுவதால் முதலிரண்டு அத்தியாயங்களும் **மதுகாண்டம்** எனப்படும்.

மூன்றுவது அத்தியாயத்தில் யாஜ்ஞுவல்கியர் ஜனகமகாராஜன் ஸபையில் கூடியிருந்த வித்வான்களுடன் பிரம்மத்தைப் பற்றி விவாதித்தது கூறப்படுகிறது. இதுவும் அடுத்த அத்தியாயமும் **யாஜ்ஞுவல்கிய காண்டம்** எனப்படும். ஜனகமகாராஜா ஒரு யஜ்ஞும் செய்தபோது பல பிராம்மணர்கள் வந்து கூடினுர்கள். அரசன் ஆயிரம் பசுக்களின் கொம்பு களில் பத்துப் பத்துப் பொற்காசு கட்டிவிட்டு அக்கூட்டத்தில் பிரம்ம வித்தையிற் சிறந்தவர் அப்பசுக்களை ஓட்டிச் செல்லலாம் என்று சொன் ஞர். ஒருவரும் முன் வராமல் தயங்கியபோது யாஜ்ஞுவல்கியர் தன் சிஷ்யன் ஒருவனைக் கூப்பிட்டு அவற்றை ஓட்டிப்போகச் சொன்ஞர். அப்போது, " நீர்தான் பிரம்மிஷ்டரோ ?" என்று மற்றப் பிராம்மணர்கள் அவரை எதிர்த்தனர். யாஜ்ஞுவல்கியர் அவர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் தக்க பதில் கூறி அவர்களை ஜயித்தார்.

" எந்தப் பிரம்மம் தனக்குத் தானே நேரில் காணக்கூடியதாயும் வேறொன்றை வேண்டாததாயும் அனைத்தையும் வியாபித்து அனைத்துள்ளும் உறையும் ஆத்மாவாயும் உள்ளதோ அதை எனக்கு நன்கு விளக்கிக் கூறும் " என்று கஹோலர் கேட்க, யாஜ்ஞுவல்கியர் விளக்கினுர்.

உத்தாலக ஆருணி அந்தர்யாமியைப் பற்றிக் கேட்க யாஜ்ஞுவல்கியர் கூறுவார் : " எவர் எல்லாப் பிராணிகளிடமும் இருந்து கொண்டு எல்லாப் பிராணிகளின் உள்ளத்திலும் உறைகின்ருரோ, எனினும் எவரை எல்லாப்

பிராணிகளும் அறிந்துகொள்ள வில்லையோ, எவருக்கு எல்லாப் பிராணி களும் உடலாகின்றனவோ, எவர் எல்லாப் பிராணிகளுக்கும் உள் நின்று அவற்றை ஆள்கின்றாரோ அவர்தான் அந்தர்யாமி, அழிவற்றவர். அவர் காணப்படாமல் காண்பவர், கேட்கப்படாமல் கேட்பவர், நினைக்கப்படாமல் நினைப்பவர், அறியப்படாமல் அறிபவர்.''

கார்க்கி ஸூத்ராத்மாவைப் பற்றிக் கேட்க, யாஜ்ஞவல்கியர் கூறுவார்: "பிரம்மஞானிகள் இதை அக்ஷரம் எனக் கூறுகிறார்கள். இந்த அக்ஷரத்தின் கட்டளையாலேயே வானமும் பூமியும் தத்தம் ஸ்தானங்களில் வைக்கப் பட்டிருக்கின்றன. இந்த அக்ஷரத்தை அறியாமல் ஒருவன் இவ்வுலகில் பல்லாயிர வருஷங்கள் ஹோமம் செய்தாலும், யாகம் செய்தாலும், தவஞ் செய்தாலும் அது எல்லாம் அழிவுடையதாகும்.''

நாலாவது அத்தியாயம் யாஜ்ஞவல்கியர் பின்னொரு முறை ஜனகரைத் தனிமையில் சந்தித்து அவருடன் பல நுட்பமான விஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்ததைக் கூறுவது. இதில் முக்கியமாக ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி எனும் அவஸ்தைகளின் தத்துவம் ஆராயப்படு கிறது. எங்ஙனம் ஒரு பெரிய மீன் இரு கரைகளுக்கும் முன்னும் பின்னுஞ் சென்று சஞ்சரிக்குமோ, அங்ஙனமே இப்புருஷன் ஸ்வப்னம் ஜாக்கிரமாகிய இரு நிலைகளுக்கும் மாறிமாறிச் சென்று சஞ்சரிக்கிறான். எங்ஙனம் ஒரு பருந்தோ கருடனோ வானவெளியில் பறந்து களைத்துப் போய்ச் சிறகுகளை அசைவின்றிப் பரப்பிக்கொண்டு கூட்டை நோக்கிச் செல்லுமோ அங்ஙனமே இப்புருஷன் ஸுஷுப்தியை நோக்கிச் செல்லு கிறான். இவன் அறிபவனாயிருந்தும் ஸுஷுப்தியில் ஒன்றையும் அறிவ தில்லை. அறிவுக்குப் புறம்பாக அறியப்படுவதற்கு அந்நிலையில் எதுவும் இல்லை. அறிபவன் மட்டுந் தனித்திருக்கிறான். இவன் நீரைப்போல் ஒன்று பட்டவனாகவும் இரண்டற்றவனாகவும் ஆகிறான். அந்நிலையிலுள்ள மறைவு நீங்கினால் அதுவே பிரம்மலோகம். அதுவே பரமானந்தம். அந்த ஆனந்தத்தின் ஒரு திவலையைக் கொண்டுதான் பிராணிகளெல்லாம் வாழ்கின்றன.

ஒரு தட்டான் எங்ஙனம் ஒரு தங்கக் கட்டியினின்று ஒரு சிறு பகுதியை எடுத்துப் புதிதாயும் அழகாயும் உள்ள வேறு உருவத்தை அமைப்பானோ அங்ஙனமே இந்த ஜீவன் உடலை விட்டு, அதை உயிரற்ற தாய் வீழ்த்திவிட்டு, (பஞ்ச பூதங்களில் ஒரு பகுதியை எடுத்துப்) புதிதாயும் அழகாயும் உள்ள வேறு உருவத்தைப் பிதிரர்கள் உலகுக்குகந்தவாறோ, தேவ உலகுக்குகந்தவாறோ, மனித உலகுக்குகந்தவாறோ, பிரம்மாவின்

உலகுக்குகந்தவாறே, மற்ற ஜீவர்களின் உலகுக்குகந்தவாறே, (குணகர்மங்களுக்குத் தக்கபடி), சிருஷ்டித்துக்கொள்ளுகிறான். எங்ஙனம் செய்கிறானோ எங்ஙனம் நடக்கிறானோ அங்ஙனமே ஆய்விடுகிறான். நல்லதைச் செய்பவன் நல்லவனாகிறான். பாவத்தைச் செய்பவன் பாவியாகிறான்.

எவன் ஆசையிலிருந்து விடுபட்டவனோ, ஆத்மா ஒன்றையே விரும்புபவனோ, அவனுடைய பிராணன்கள் கிளம்பி எங்குஞ் செல்வதில்லை. பிரம்மமாகவே இருந்து அவன் பிரம்மத்தில் ஐக்கியமாகிறான். பாம்பு சட்டை உரித்தபின் அதனருகிலிருந்தாலும் அதனுள் மீண்டும் புகாது. அவ்வாறு ஞானியானவன் சரீரபந்தம் விட்டபின் மீண்டும் முன்போலச் சரீரியாகமாட்டான்.

ஒரு புருஷன் தன்னை, "நான் இதுவாயிருக்கிறேன்" என்று அறிந்து விட்டால், எதை விரும்பி, யாருடைய விருப்பத்துக்காகச் சரீரத்தைப் பின்பற்றி அதனுடன் வருந்த வேண்டும்?

பிரம்ம நாட்டமுடைய புத்திமான் இதையறிந்து பிரஜ்ஞையை அடையட்டும். பல சாஸ்திரங்களை அப்பியாஸம் செய்யவேண்டாம். பல விஷயங்களை விவாதிக்கவும் சிந்திக்கவும் வேண்டாம். அதனால் மனம் சிதறிப்போகும்.

ஜீவன் முக்தனுடைய மகிமை ஒரு செயலால் வளர்வதுமில்லை, குறைவதுமில்லை. அவன் அமைதியுடையவனாகவும், அடக்கமுடையவனாகவும், ஆசைகளை விட்டவனாகவும், பொறுமையுடையவனாகவும், ஆத்மநிஷ்டனாகவும் இருப்பான். பாவமற்றவனாயும், பயமற்றவனாயும், அழுக்கற்றவனாயும், சந்தேகமற்றவனாயும் இருப்பான்.

**அத்தியாயங்கள் ஐந்தும் ஆறும்** சிதறிப்போன பல விஷயங்களைப் பேசுகின்றனவாதலால் இவ்விரண்டு அத்தியாயங்களுஞ் சேர்ந்து கில காண்டம் எனப்படும்.

தேவர்களும், மனிதர்களும், அசுரர்களும் பிரஜாபதியிடம் உபதேசத்தை நாடிச் சென்றனர். மூவர்க்கும் அவர் 'த' என்ற ஒரு எழுத்தையே உபதேசமாய்க் கூறினர். தாங்கள் இந்திரிய அடக்கமற்றவர்கள் என்று உணர்ந்திருந்த தேவர் 'தாம்யத' அடக்கமுடையவர்களாயிருங்கள் என்று அவர் உபதேசித்ததாய்க் கொண்டனர். தாங்கள் லோபிகள் என்று உணர்ந்திருந்த மனிதர் 'தத்த' தானம் செய்யுங்கள் என்று அவர் உபதேசித்ததாய்க் கொண்டனர். தாங்கள் இம்சிக்கும் இயல்புடையவர்கள் என்று உணர்ந்திருந்த அசுரர், 'தயத்த்வம்' தயைஉடையவர்களாயிருங்

கள் என்று உபதேசித்ததாய்க் கொண்டனர். ஒருவனுக்குத் தன் குறை தெரியும்போது குறிப்பாலேயே அவனுக்கு அறிவுணர்த்த இயலும் என்பது இக்கதையால் தெளிவாகின்றது.

ஞானத்திற்குத் தவமே சிறந்த ஸாதனம் என்பதும், நோவும் சாவுங் கூடத் தவமெனவே கருதப்படவேண்டு மென்பதும் மேலே உபதேசிக்கப் படுகிறது.

ஆருவது அத்தியாயத்தில் முக்கியப்பிராண உபாஸனையும் பஞ்சாக்னி வித்தையும் கூறப்படுகிறது. நல்ல மக்களைப் பெறவிரும்பும் கிருஹஸ்தர் கள் அனுஷ்டிக்கக்கூடிய சில கிரியைகளும் இங்கு விவரிக்கப்படுகின்றன. இக்கிரியைகட்கு உபநிஷத்துடன் நெருங்கிய தொடர்பின்மையால் அவை இத்தொகுதியிலும் உரையிலும் விடப்பட்டன.

ஸாஞ்ஜீவீ புத்திரன், மாண்டூகாயனி முதலானவர்கள் பரம்பரையாகப் பிரஜாபதியிடமிருந்து வந்த எந்தச் சுக்லயஜுர் வேதத்தை அத்தியயனம் செய்தார்களோ அதையே சூரியனுடைய அருளால் யாஜ்ஞவல்கியரும் அடைந்து உலகில் விளங்கும்படி செய்தார்.

இங்ஙனம் பிருஹதாரணியகோபநிஷத்துக்கு
ஸ்ரீராமகிருஷ்ண தீபம் எனும்
உரை முற்றும்.

உபநிஷத்ஸாரம் முற்றும்

# ॥ ब्रह्मसूत्राणि ॥

## ॥ प्रथमोऽध्यायः ॥

### ॥ प्रथमः पादः ॥

अथातो ब्रह्मजिज्ञासा ॥ १.१ ॥

जन्मादि अस्य यतः ॥ १.२ ॥

शास्त्र-योनित्वात् ॥ १.३ ॥

तत्तु समन्वयात् ॥ १.४ ॥

## பிரம்மசூத்திரங்கள்

### முதல் அத்தியாயம்

(ஸமன்வயம்)

### அத். 1: முதல் பாதம்

**1.1.** இனிப் பிரம்மத்தைப் பற்றிய விசாரணை.

**1.2.** இவ்வுலகிற்கு உற்பத்தி முதலியன எதனிடமிருந்தோ (அதுவே பிரம்மம்).

**1.3.** (அதைப்பற்றிய ஞானம்) சாஸ்திரத்திலிருந்தே பிறக்கும். (சாஸ்திரமும் பிரம்மத்திடமிருந்தே பிறந்ததால்).

**1.4.** அதுவும் ஸமன்வயத்தால்.

---

**ஸூத்திரத்திற்கு விஷயமான உபநிஷத் வாக்கியங்கள்**

1.1. ஸத்யம்-ஜ்ஞானம்-அனந்தம் ப்ரஹ்ம—தை. 2.1.

1.2. யதோ வா இமானி பூதானி ஜாயந்தே—தை. 31.

1.3. அஸ்ய மஹதோ பூதஸ்ய நி:ச்வஸித-மேதத் யத் ருக்வேத:—ப்ரு. 2.4.10.

1.4. ஸதேவ ஸோம்ய இத-மக்ர ஆஸீத், ஏகமேவாத்விதீயம் । சா. 6.2.1.

ईक्षतेः न, अशब्दम् ॥ १.५ ॥

गौणश्चेत्, न, आत्मशब्दात् ॥ १.६ ॥

तन्निष्ठस्य मोक्षोपदेशात् ॥ १.७ ॥

हेयत्वावचनाच्च ॥ १.८ ॥

स्वाप्ययात् ॥ १.९ ॥

---

1.5. பார்ப்பதாய்க் கூறப்படுவதால் (அந்த ஆதிகாரணம்) பிரகிருதி அன்று; சுருதி அதைக் கூறவில்லை.

1.6. உபசாரத்தால் அப்படிக் கூறப்பட்டதெனின் அதுவும் பொருந்தாது; ஏனெனின் ஆதிகாரணம் ஆத்மா எனவே கூறப் பட்டுள்ளது.

1.7. (பிரகிருதியும் ஆத்மா எனும் சொல்லால் குறிக்கப் படலாம் என்றால் அது பொருந்தாது)—அதில் நிலைபெற்றவனுக்கு மோக்ஷம் கூறப்படுதலால்.

1.8. விலக்குதல் கூறப்படாமையால் (பிரகிருதியையே ஆதி காரணமாய் வழிபட்டு அதன் வழி ஆத்மாவை யடைவதற்கு அப்படிக் கூறப்பட்டதெனின் அதுவும் ஒவ்வாது. ஏனெனின் பிரகிருதியை விலக்கி அப்பாற் செல்வது கூறப்படவில்லை).

1.9. (ஸுஷுப்தியில் ஜீவனுக்குத்) தன்னிடமே உள்ள 'ஸத்' தில் ஒடுக்கம் கூறப்படுவதாலும் (அந்த 'ஸத்' அசேதனப் பிரகிருதியாயிருக்கமுடியாது).

---

1.4. தத்-த்வ-மஸி । சா. 6.15.2.

ப்ரஹ்ம வா இதமக்ர ஆஸீத் । ப்ரு. 1.4.10.

ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி । கேன. 1.5.

1.5. ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி । சா. 6.2.2-3.

1.6. ஸ ய ஏஷோ அணிமைத-தாத்ம்ய-மிதம் ஸர்வம் । சா. 6.8.7.—6.15.3.

1.7. தஸ்ய தாவதேவ சிரம் யாவந் ந விமோக்ஷ்யே । சா. 6.14.2.

1.9. யத்ரைதத் புருஷ: ஸ்வபிதி நாம ஸதா ஸோம்ய ததா ஸம்பன்னோ பவதி ஸ்வமபீதோ பவதி । சா. 6.8.1.

गति-सामान्यात् ॥ १.१० ॥

श्रुतत्वाच्च ॥ १.११ ॥

आनन्दमयोऽभ्यासात् ॥ १.१२ ॥

विकार-शब्दान्नेति चेत्, न, प्राचुर्यात् ॥ १.१३ ॥

तद्धेतु-व्यपदेशाच्च ॥ १.१४ ॥

मांत्रवर्णिकमेव च गीयते ॥ १.१५ ॥

---

1.10. (வேதாந்தத்தின்) போக்கு ஒரே மாதிரியிருப்பதால் (மற்ற இடங்களில் ஆதிகாரணமாய்க் கூறப்பட்டது எதுவோ அதையே தான் இங்குங் கொள்ளவேண்டும்).

1.11. சுருதியின் கொள்கை அதுவேயாம்.

**1.12.** (அப்பியாசத்தால்) மீண்டும் மீண்டும் கூறப்படுவதால் ஆனந்தமயத்தில் (புச்சம் என்றது பிரம்மத்தைக் குறிக்கும்).

1.13. (புச்சம் என்றது) ஒரு பகுதியைக் குறிக்கும் சொல் லாதலால் அது ஒவ்வாதென்ருல், அது தவறு; சொற்பெருக்கத்தால் அப்படி ஏற்பட்டது.

1.14. (ஆனந்தமயத்திற்கும் பிரம்மம்) அடிப்படைக்காரண மாயிருப்பதாலும் (அதின் ஒரு பகுதியாய்க் கொள்ள முடியாது).

1.15. மந்திரத்தில் ('ப்ரஹ்மவிதாப்னோதி பரம்') என்று கூறியதே (பின்வரும் ப்ராஹ்மணத்தில் 'ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்ட்டா' என்று) பாடப்பெறுகிறது.

---

1.10. சா. 7.26.1; ப்ர. 3.3; தை. 2.1; ஸர்வே வேதா யத்-பத-மா-மனந்தி । கட. 1.2.15.

1.12. அன்யோऽந்தர ஆத்மா ஆனந்த மய:...ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்ட்டா । தை. 2.5.

1.13. பிரம்மம் ஆனந்தமய கோசத்தின் வாலாக இருக்கமுடியாது. 'புச்சம்' என்ருல் அடிப்படையான ஆதாரம் என்றே கொள்ளவேண்டும். முன் பல இடங்களில் 'புச்சம்' என்ற சொல் வந்ததால் இங்கும் அதை யனுசரித்து அச்சொல் வந்ததே யன்றி 'வால்' என்ற கருத்தல்ல.

1.14. இதஂ ஸர்வமஸ்ருஜத । யதிதங் கிஞ்ச । தை. 2.6.
காரணங் காரியத்தின் பகுதியாகாது.

नेतरोऽनुपपत्तेः ॥ १.१६ ॥

भेद-व्यपदेशाच्च ॥ १.१७ ॥

कामाच्च नानुमानापेक्षा ॥ १.१८ ॥

अस्मिन्नस्य च तद्योगं शास्ति ॥ १.१९ ॥

अन्तस्तद्धर्मोपदेशात् ॥ १.२० ॥

भेद-व्यपदेशाच्चान्यः ॥ १.२१ ॥

---

1.16. மற்றொன்று (ஜீவாத்மா) இங்கு குறிக்கப்படவில்லை; அது பொருந்தாததால்.

1.17. (ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும்) பேதங் கூறப்படுவதாலும்.

1.18. 'அகாமயத' என்ற சொல் இருத்தலால் (ஆனந்தமயமாகிய பிரகிருதி வடிவம் பிரம்மத்தைக் குறிக்கும் என்று) ஊகித்தல் ஒவ்வாது.

1.19. (இந்த) பிரம்மத்திடம் (இந்த) ஜீவனுடைய கூட்டுறவைச் சுருதி கூறுவதாலும்.

1.20. (கண்ணிலும் சூரியனிலும்) உள்ளுறைவதும் (பிரம்மம்) ; அதின் லக்ஷணம் உபதேசிக்கப்படுதலால்.

1.21. (வேறிடத்தில்) வேற்றுமை குறிக்கப்படுதலாலும் ஜீவனையும் சூரியனையும்விட (பிரம்மம்) வேறு.

---

1.17. ரஸோ வை ஸ: | ரஸஂஹ்யேவாயம் லப்த்வானந்தீ பவதி | தை. 2.7.

1.18. ஸோऽகாமயத | தை. 2.6.

1.19. உ-தர-மந்தரங் குருதே | அத தஸ்ய பயம் பவதி | தை. 2.7.

1.20. அத ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷ: | சா. 1.6.8. 'அத ய ஏஷோऽந்தரக்ஷிணி புருஷ: | 1.7.5-8.

1.21. ய ஆதித்யே திஷ்ட்டன்-னாதித்யாதந்தரோ யமாதித்யோ ந வேத | ப்ரு. 3.7.9.

आकाशस्तल्लिङ्गात् ॥ १.२२ ॥

अत एव प्राणः ॥ १.२३ ॥

ज्योतिः, चरणाभिधानात् ॥ १.२४ ॥

छन्दोभिधानान्नेति चेत्, न, तथा चेतोऽर्पण-निगदात्तथा हि दर्शनम् ॥ १.२५ ॥

भूतादि-पादव्यपदेशोपपत्तेश्चैवम् ॥ १.२६ ॥

उपदेश-भेदात्, नेति चेत्, न, उभयस्मिन्नप्यविरोधात् ॥ १.२७ ॥

---

1.22. ஆகாசம் (பிரம்மம்); அதின் அடையாளங்களால்.

1.23. அதே காரணத்தால் பிராணனும் (பிரம்மம்).

1.24. ஜோதியும் (பிரம்மம்); பாதங்கள் கூறப்படுதலால்.

1.25. (காயத்ரீ) சந்தஸ்தான் இங்கு கூறப்பட்டது, பிரம்மம் அல்ல எனின், அது ஒவ்வாது; (பிரம்மத்திடம்) சித்தத்தை அர்ப்பணம் செய்யவே (காயத்ரி உபாசனே) கூறப்பட்டதாலும் அதுவே பின்னும் காணப்படுகிறது.

1.26. பூதங்கள் முதலியன பாதமாய்க் கூறப்படுதல் அப்போதே பொருந்துமாதலாலும்.

1.27. (இரண்டு இடங்களிலும்) உபதேச பேதத்தால் அப்படியல்ல என்றால், அது தவறு; இரண்டிடங்களிலும் கூறியதில் விரோதம் இல்லாததால்.

---

1.22. அஸ்ய லோகஸ்ய கா கதிரித்யாகாஶ இதி | சா. 1.9.1-2. ஏஷ ம ஆத்மாऽந்தர்ஹ்ருதயே ஜ்யாயான் ப்ருதிவ்யா | சா. 3.14.3.

1.23. கதமா ஸா தேவதேதி, ப்ராண இதி ஹோவாச | சா. 1.11.4-5 ப்ராணஸ்ய ப்ராணம் | ப்ரு. 4.4.18.

1.24. அத யதத: பரோ திவோ ஜ்யோதி: ...அஸ்மின்னந்த: புருஷே ஜ்யோதி: | சா. 3.13.7.

பாதோऽஸ்ய ஸர்வா பூதானி | சா. 3.12.6.

1.25. கரயத்ரீ வா இத९ ஸர்வம் |

1.26. ஸைஷா சதுஷ்பதா காயத்ரீ | சா. 3.12.3-4.

1.27. 'த்ரிபாதஸ்யாம்ருதம் திவி' | சா. 3.12.6 || அத யதத: பரோ திவ: | சா. 3.13.7

प्राणः, तथानुगमात् ॥ १.२८ ॥

न वक्तुः आत्मोपदेशादिति चेत्, अध्यात्म-संबन्ध-भूमा ह्यस्मिन् ॥ १.२९ ॥

शास्त्रदृष्ट्या तु उपदेशो वामदेववत् ॥ १.३० ॥

जीव-मुख्यप्राण-लिङ्गात् नेतिचेत्, न, उपासा त्रैविध्या-दाश्रितत्वादिह तद्योगात् ॥ १.३१ ॥

---

1.28. பிராணன் (பிரம்மம்); அங்ஙனம் ஒத்து வருவதால்.

1.29. பேசுபவன் தன்னைப்பற்றியே கூறுவதால் பிரம்மம் குறிக்கப்படவில்லை என்றால் அத்தியாத்ம ஸம்பந்தமான குறிப்பே இங்கு நிறைந்திருக்கிற தென்போம்.

1.30. வாமதேவரைப்போல் (இந்திரனும்) சாஸ்திர திருஷ்டி யால் (தன்னையே பிரம்மமாகப்) பேசுகின்றான்.

1.31. ஜீவ லக்ஷணமும் முக்கியப் பிராண லக்ஷணமும் கூறப் படுதலால் அங்ஙனம் அல்ல எனின் அது தவறு; அப்படிக் கொண் டால் உபாஸனை (பிரம்மம், ஜீவன், பிராணன் என) மூன்றாகும்; பிராணன் பிரம்மம் என்று வேறிடங்களில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பதாலும், இங்கும் பிரம்ம லக்ஷணம் பிராணனிடம் கூறி யிருத்தலாலும் பிராணன் பிரம்மம் என்றே கொள்ளப்படும்.

---

1.28. ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா । கௌஷீ 3.1.
ஆனந்தோ஽ஜரோம்ருத: । கௌஷீ. 3.8.

1.30. அஹம் மனுரபவம் ஸூர்யஶ்ச । ப்ரு. 1.4.10.

## ॥ द्वितीयः पादः ॥

सर्वत्र प्रसिद्धोपदेशात् ॥ २.१ ॥

विवक्षित-गुणोपपत्तेश्च ॥ २.२ ॥

अनुपपत्तेस्तु न शारीरः ॥ २.३ ॥

कर्म-कर्तृ-व्यपदेशाच्च ॥ २.४ ॥

शब्दविशेषात् ॥ २.५ ॥

स्मृतेश्च ॥ २.६ ॥

---

### அத் 1 : இரண்டாம் பாதம்

2.1. (மனோமயம் பிரம்மம்) அவ்வுபதேசம் எங்கும் பிரசித்த மாயிருத்தலால்.

2.2. கூறப்புகுங் குணங்கள் ஆங்கே பொருத்தமாயிருத் தலாலும்.

2.3. பொருந்தாமையால் சரீரம் படைத்த ஜீவனன்று.

2.4. கர்மம், கர்த்தா (அடையப்படுதுவது, அடைபவன்) கூறப்படுதலாலும் (ஜீவனன்று).

2.5. சொற்களின் வேற்றுமையாலும்.

2.6. ஸ்மிருதியாலும்.

---

2.1-2. ஸர்வங் கல்விதம் ப்ரஹ்ம தஜ்-ஜ-லானிதி ஶாந்த உபாஸீதாத கலு க்ரதுமய:...மனோமய: ப்ராண-ஶரீரோ பாரூப: ஸத்யஸங்கல்ப ஆகாஶாத்மா । சா. 3.14.1-2.

2.4. ஏதத் ப்ரஹ்மைதமித: ப்ரேத்யாபி-ஸம்பவிதாஸ்மீதி । சா. 3.14.4.

2.6. ஈஶ்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுன திஷ்டதி । கீ. 18.61.

अर्भकौकस्त्वात् तद्व्यपदेशाच्च नेति चेत्, न निचाय्यत्वादेवं व्योमवच्च ॥ २.७ ॥

संभोगप्राप्तिरिति चेत् न वैशेष्यात् ॥ २.८ ॥

अत्ता चराचरग्रहणात् ॥ २.९ ॥

प्रकरणाच्च ॥ २.१० ॥

गुहां प्रविष्टावात्मानौ हि तद्दर्शनात् ॥ २.११ ॥

---

2.7. இருப்பிடம் (இருதயம்) சிறியதெனக் குறிக்கப்படுவதாலும், அங்ஙனமே அதுவும் சிறியதாய்க் கூறப்படுவதாலும், அது பிரம்மாயிருக்க இயலாதெனின், (நாம் கூறுவோம்) அப்படியன்று, தியானத்துக்காகவும், ஆகாயத்தைப்போன்றும் அப்படி கூறப்பட்டது.

2.8. (இருதயத்தில் உறைவதால் ஜீவனைப்போல் பிரம்மத்துக்கும்) ஸம்போகப் பிராப்தி (சுகதுக்க அனுபவம்) உண்டு எனின், அது ஒவ்வாது, (ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும் உள்ள) வேறுபாட்டால்.

2.9. உண்பவன் (அத்தா) பிரம்மம்; சராசரமனைத்தும் கிரகிக்கப்படுவதால்.

2.10. அதுவே (பிரகரணம்) சந்தர்ப்பமாதலால்.

2.11. குகையில் புகுந்தவர்கள் இரண்டு ஆன்மாக்கள் (ஜீவனும் ஈசுவரனும்); அங்ஙனமே (அந்த உபநிஷத்தில்) காணப்படுவதால்.

---

2.7. ஏஷ ம ஆத்மாऽந்தர்ஹ்ருதயேऽணீயான் வ்ரீஹேர்-வா யவாத்வா । சா. 3.14.3.

2.9. யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ் ச உபே பவத ஓதன: । கட. 2.25.

2.10. அன்யத்ர தர்மா-தன்யத்ராऽதர்மா-தன்யத்ராஸ்மாத் க்ருதாக்ருதாத் । கட. 2.14.

2.11. ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்த்தே । கட. 3.1.

विशेषणाच्च ॥ २.१२ ॥

अदृश्यत्वादि-गुणको धर्मोक्तेः ॥ २.२१ ॥

विशेषण-भेदव्यपदेशाभ्यां नेतरौ ॥ २.२२ ॥

रूपोपन्यासाच्च ॥ २.२३ ॥

## ॥ तृतीयः पादः ॥

द्युभ्वा-द्यायतनं स्व-शब्दात् ॥ ३.१ ॥

मुक्तोपसृप्य-व्यपदेशात् ॥ ३.२ ॥

---

2.12. (பின் கூறப்படும்) அடை மொழிகளாலும்.

2.21. அதிருச்யம் முதலிய குணங்களையுடையது பிரம்மமே; அக்குணங்கள் பிரம்மத்துக்கே பொருந்துவனவாதலால்.

2.22. (பிரம்மத்துக்குரிய) விசேஷ குணங்களும் வேற்றுமைகளும் கூறப்படுவதால் (பிரகிருதியும் ஜீவனுமாகிய) இரண்டன்று.

2.23. ஸ்வரூபம் விவரித்துக் கூறப்படுவதாலும்.

### அத் 1 : மூன்றும் பாதம்

3.1. (த்யு பூ ஆதி) வானுலகு, பூவுலகு முதலியவற்றிற்கு ஆதாரமாயுள்ளது (பிரம்மம்), ஆத்ம சப்தத்தால்.

3.2. முக்தர்களால் அடையப்படுவதென்று கூறியுள்ளதால்.

---

2.12. ஆத்மானம் ரதினம் வித்தி । கட. 3.3.

2.21. யத்த-தத்ரேச்'ய-மக்ராஹ்ய-மகோத்ர-மவர்ண-மசக்ஷு: ச்'ரோத்ரம் ததபாணிபாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் தத்பூதயோனிம் பரிபச்'யந்தி தீரா: । மு. 1.1.6.

2.22. திவ்யோ ஹ்யமூர்த்த: புருஷ: ஸ பாஹ்யாப்ப்யந்தரோ ஹ்யஜ: । மு. 2.1.2.

7.23. புருஷ ஏவேதம் விச்'வம், கர்ம தபோ, ப்ரஹ்ம பராம்ருதம் । மு. 2.1.10.

3.1. யஸ்மின் த்யௌ: ப்ருதிவீ சாந்தரிக்ஷம் ஓதம் மன: ஸஹ ப்ராணைச்'ச ஸர்வை: । மு. 2.2.5.

3.2. ததா வித்வான் நாமரூபாத்-விமுக்த: பராத்பரம் புருஷ-முபைதி திவ்யம் । மு. 3.2.8.

प्रकरणात् ॥ ३.६ ॥

स्थित्यदनाभ्याम् च ॥ ३.७ ॥

भूमा संप्रसादा-दध्युपदेशात् ॥ ३.८ ॥

धर्मोपपत्तेश्च ॥ ३.९ ॥

अक्षर-मंबरान्त-धृतेः ॥ ३.१० ॥

सा च प्रशासनात् ॥ ३.११ ॥

---

3.6. அதுவே (பிரகரணம்) சந்தர்ப்பமாதலால்.

3.7. (பற்றற்ற) நிலையும் (புண்ணிய பாவங்களைப்) புசிப்பதும் (முறையே ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும்) கூறப்படுதலால் (உலகுக்கு ஆதாரமாய்க் கூறியது பிரம்மமே).

3.8. ஸுஷுப்திக்கு அப்பாற்பட்டது பூமா ; உபதேசத்தால்.

3.9. (கூறியுள்ள) குணங்கள் (பிரம்மத்துக்கே) பொருத்தமாதலாலும்.

3.10. அக்ஷரம் (பிரம்மம்), ஆகாயம் வரை தாங்குவதால்.

3.11. அதுவும் (பிரகிருதியாயிருக்க முடியாது, பரமபுருஷனைத் தானிருக்கவேண்டும்). கட்டளையிடுவதால்.

---

3.6. கஸ்மின்னு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதீதி । மு. 1.1.3.

ஸ யோ ஹ வை தத்பரமம் ப்ரஹ்ம வேத, ப்ரஹ்மைவ பவதி । மு. 3.2.9.

3.7. த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே । தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அனஶ்னன்-னன்யோ அபிசாகஶீதி । மு. 3.1.1.

3.10. ஸ ஹோவா-சைதத்வை ததக்ஷரங் கார்க்கி ப்ராஹ்மணா அபிவதந்தி । ப்ரு. 3.8.8.

அஸ்மின்னு கல்வக்ஷரே கார்க்யாகாஶ ஓதஶ்ச ப்ரோதஶ்சேதி । ப்ரு. 3.8.11.

3.11. ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸனே கார்க்கி ஸுர்யா சந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத: । ப்ரு. 3.8.9.

ईक्षति-कर्म-व्यपदेशात् सः ॥ ३.१३ ॥

दहर उत्तरेभ्यः ॥ ३.१४ ॥

गतिशब्दाभ्यां, तथा हि दृष्टं लिङ्गं च ॥ ३.१५ ॥

धृतेश्च, महिम्नोऽस्यास्मिन्नुपलब्धेः ॥ ३.१६ ॥

---

3.13. பார்க்குஞ் செயலை உரைப்பதால், அவனே (பிரம்மமாய்த் தியானிக்கப்பட வேண்டியவன்).

3.14. (தஹரம்) சிற்றம்பலம் (பிரம்மம்); அடுத்துவரும் வாக்கியங்களால்.

3.15. (பிரம்மத்திடம்) செல்லுவது சொல்லப்படுவதாலும் (பிரம்மலோகம் என்ற) சொல்லாலும் (தஹராகாசம் பிரம்மமே); அவ்வாறே (ஜீவன் பிரம்மத்திடம் செல்லுதல்) காணப்படுகிறது (சுருதியினின்று); அடையாளமும் (இருக்கிறது).

3.16. (தஹராகாசம் உலகத்தைத்) தாங்குவதாய்க் கூறியிருப்பதாலும், இந்த மஹிமை இதனிடமே (பிரம்மத்தினிடமே) பொருந்தும் என்பது அறியப்படுதலாலும்.

---

3.13. யதா பாதோதரஸ் த்வசா விநிர்முச்யத ஏவம் ஹ வை ஸ பாப்மனா விநிர்முக்த: ஸ ஸாமபிருந்நீயதே ப்ரஹ்மலோகம் ஸ ஏதஸ்மாஜ்-ஜீவகனாத் பராத்பரம் புரிசயம் புருஷமீக்ஷதே । ப்ர. 5.5.

3.14. அத யதித-மஸ்மின் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஸ்ம தஹரோऽஸ்மின்னந்தராகாஶஸ்-தஸ்மின்யதந்தஸ்ததன்வேஷ்டவ்யம் தத் வாவ விஜிஜ்ஞாஸிதவ்யமிதி । சா. 8.1.1.

ஸ ப்ரூயாத் யாவான் வா அயமாகாஶஸ்தாவானேஷோऽந்தர்ஹ்ருதய-ஆகாஶ உபே அஸ்மின் த்யாவா-ப்ருதிவீ அந்தரேவ ஸமாஹிதே । சா. 8.1.3.

3.15. ஹிரண்ய-நிஹித-மக்ஷேத்ரஜ்ஞா உபர்யுபரி ஸஞ்சரந்தோ ந விந்தேயு-ரேவமேவேமா: ஸர்வா: ப்ரஜா அஹரஹர்கச்சந்த்ய ஏதம் ப்ரஹ்மலோகம் ந விந்தந்த்-யன்ருதேன ஹி ப்ரத்யூடா: । சா. 8.3.2.

ஸதா ஸோம்ய ததா ஸம்பன்னோ பவதி ஸ்வமபீதோ பவதி । சா. 6.8.1.

3.16. அத ய. ஆத்மா ஸ ஸேதுர்வித்ருதிரேஷாம் லோகானா-மஸம்பேதாய । சா. 8.4.1.

ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸனே கார்க்கி । ப்ரு. 3.8-9.

प्रसिद्धेश्च ॥ ३.१७ ॥

इतर-परामर्शात् स इति चेत्, न, असंभवात् ॥ ३.१८ ॥

उत्तराच्चेत्, आविर्भूत-स्वरूपस्तु ॥ ३.१९ ॥

अन्यार्थश्च परामर्शः ३.२० ॥

अल्पश्रुतेः इति चेत्, तदुक्तम् ॥ ३.२१ ॥

---

3.17. (ஆகாசம் பிரம்மம் என்பது) பிரசித்தமாதலாலும்.

3.18. மற்றவன் பேசப்படுதலால், அவன் (தஹராகாசத்தால் குறிக்கப்பட்டவன் ஜீவன்) எனின், அது சற்றும் ஒவ்வாது.

3.19. மேலே வரும் வாக்கியங்களால் (ஜீவன் தான்) எனின், (அங்கு ஜீவனைக் குறித்தது பிரம்மத்தினின்று அபேதமான) ஸ்வரூபத்தின் விளக்கம்.

3.20. அந்தக் குறிப்பின் நோக்கமும் வேறு. (ஜீவனை விளக்க அன்று) பிரம்மத்தை விளக்கவே.

3.21. சுருதி அது சிறியதென்று கூறுவதால் (அல்ல) எனின், அது (தியானத்துக்காக என்று ஏற்கெனவே) விளக்கப்பட்டது.

---

3.17. ஆகாஶோ வை நாம நாமரூபயோர்-நிர்வஹிதா । சா. 8.14.1.

அஸ்ய லோகஸ்ய கா கதி-ரித்-யாகாஶ இதி । சா. 1.9.1.

3.18. அத ய ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச் சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதி-ருபஸம்பத்ய । சா. 8.3.4.

யாவான் வா அயமாகாஶஸ்-தாவானேஷோऽந்தர்-ஹ்ருதய ஆகாஶ: । சா. 8.1.3.

3.19. ஏஷோऽக்ஷிணி புருஷ: । சா. 8.7.4.

தத் யத்ரைதத் ஸுப்த: ஸமஸ்த: ஸம்ப்ரஸன்ன: ஸ்வப்னம் ந விஜாநாத்-யேஷ ஆத்மேதி । சா. 8.11.1.

ஏவமேவைஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச் சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதி-ருபஸம்பத்ய ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்யதே । சா. 8.12.3.

अनुकृतेस्तस्य च ॥ ३.२२ ॥

अपि च स्मर्यते ॥ ३.२३ ॥

शब्दादेव प्रमितः ॥ ३.२४ ॥

हृद्यपेक्षया तु मनुष्याधिकारत्वात् ॥ ३.२५ ॥

तदुपर्यपि बादरायणः, संभवात् ॥ ३.२६ ॥

---

3.22. அதைப் பின்பற்றி அனைத்தும் பிரகாசிப்பதாலும், அதனுடைய ஒளியே அனைத்தையும் விளக்குவதாலும் அது பிரம்மம்.

3.23. மேலும் ஸ்மிருதியும் அங்ஙனமே கூறுகிறது.

3.24. (அங்குள்ள ஈசானன் எனும்) சொல்லாலேயே (அங்குஷ்ட்ட மாத்ரன் என்று) அளவு படுத்தப்பட்டவன் (பிரம்மம்).

3.25. இருதயத்தில் உபாசனையைக் குறித்து (பிரம்மம் அங்குஷ்ட்ட மாத்திரம் எனப்பட்டது ; வெவ்வேறு பிராணிகளின் இருதயம் வெவ்வேறு அளவாயிற்றே என்றால் இந்த உபாசனையால்) அதிகாரம் மனிதனுக்குக் கூறியதால் (அங்ஙனம்).

3.26. மேலுலக வாசிகளுக்கும் (தேவர்களுக்கும் அதிகாரம்) கூடுமாதலால் என்பது பாதராயணர் (அபிப்பிராயம்).

---

3.22. தமேவ பாந்த-மனுபாதி ஸர்வந் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி । மு. 2.2.11. கட. 5.15.

3.23. ந தத் பாஸயதே ஸூர்யோ...கீ. 15.6.
யதாதித்ய கதந் தேஜோ...கீ. 15. 12.

3.24. அங்குஷ்ட்ட மாத்ர: புருஷோ மத்த்ய ஆத்மனி திஷ்டதி । கட. 4.12.

3.26. இந்திரன் பிரம்ம ஞானத்தை நாடிப் பிரம்மசரியம் இருந்த கதையும் (சா. 8.11.3), வருணன் தன் புத்திரனாகிய பிருகுவுக்கு உபதேசம் செய்ததும் (தை 3.) தேவர்களுக்கும் இதில் அதிகாரம் உண்டு என்பதை நிரூபிக்கிறது.

विरोधः कर्मणीति चेत्, न, अनेक-प्रतिपत्ते-र्दर्शनात् । ३.२७ ॥

मध्वादिष्वसंभवा-दनधिकारं जैमिनिः ॥ ३.३१ ॥

ज्योतिषि भावाच्च ॥ ३.३२ ॥

भावं तु बादरायणः, अस्ति हि ॥ ३.३३ ॥

कंपनात् ॥ ३.३९ ॥

ज्योतिर्दर्शनात् ॥ ३.४० ॥

---

3.27. (தேவர்கள் மனிதர்களைப் போல் சரீர முடையவர்கள் எனின் அவர்கள் எங்ஙனம் பல யாகங்களில் ஒரே சமயத்தில் இருக்கமுடியும்) கர்மாக்களில் விரோதம் ஏற்படும் எனின், அது சரியல்ல; பல உருவங்களைத் தரித்தல் (அவர்களுக்கு ஒரே காலத்தில் இயலுமெனச்) சுருதியில் காணப்படுவதால்.

3.31. மது வித்தை முதலியவற்றில் (சூரியன் முதலிய தேவர்களே உபாசிக்கப்படுவதாலும், அந்த தேவர்கள் தங்களையே உபாசிக்க இயலாததாலும்) இது கூடாததால் (தேவர்களுக்கு) அதிகாரம் இல்லை என்பது ஜைமினி (அபிப்பிராயம்).

3.32. ஜோதிகளாக (சூரிய சந்திரர்களைப் போலத் தேவர்கள்) இருப்பதாலும் (அவர்களுக்கு இருதயம் முதலிய அங்கங்கள் இல்லையாதலாலும் கூடாது என்பதும் ஒரு ஆக்ஷேபனை).

3.33. எனினும் (அதிகாரம்) உண்டு என்பது பாதராயணர் (அபிப்பிராயம்); (மனிதர்க்குடைய உரிமை தேவர்களுக்கும்) இருக்கவே இருக்கிறது.

3.39. (பிராணன் பிரம்மம்; பிராணனில் எல்லாம் உண்டாகிப் பிராணனில்) அசைவதால்.

3.40. ஜோதி (பிரம்மம்); அங்ஙனம் காட்டப்பட்டிருப்பதால்.

---

3.27. சா. 7.26.2.

3.39. யதிதங் கிஞ்ச ஜகத் ஸர்வம் ப்ராண ஏஜதி நி: ஸ்ருதம் । கட. 6.2.

3.40. பரஞ்ஜ்யோதி-ருபஸம்பத்ய ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்-பதே । சா. 8.12.3.

सुषुप्त्युत्क्रान्त्योर्भेदेन ॥ ३.४२ ॥

पत्यादिशब्देभ्यः ॥ ३.४३ ॥

॥ चतुर्थः पादः ॥

आनुमानिकमित्येकेषामिति चेत्, न, शरीररूपकविन्यस्त-गृहीतेः दर्शयति च ॥ ४.१ ॥

---

3.42. ஸுஷுப்தியிலும் மரணத்திலும் (ஜீவனைத் தழுவி நிற்கும் பிராஜ்ஞனாக) வேறாகக் கூறப்பட்டது (பிரம்மம்).

3.43. பதி முதலிய சொற்களால் (விவரிக்கப்படுவது பிரம்மம்).

**அத். 1: நாலாம் பாதம்**

4.1. (சுருதியில்) சில இடங்களில் கூறப்படுவது அனுமானிக்கப்படும் பிரகிருதி எனின் அது ஒவ்வாது; ஏனெனில் (கடோபநிஷத்தில் வரும் அவ்யக்தம் எனும் சொல்) சரீரத்தைக் குறிக்கும் உவமையில் பொருந்துவதால்; சுருதி அதை விளக்கவும் செய்கிறது.

---

3.42. தத் யதா ப்ரியயா ஸ்த்ரியா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யங் கிஞ்சன வேத நாந்தர-மேவ-மேவாயம் புருஷ: ப்ராஜ்ஞேனாத்மனா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யங் கிஞ்சன வேத நாந்தரம்... தத் வா அஸ்யைததாப்த காம-மாத்மகாம-மகாமꣳ ரூபம் ஶோகாந்தரம் | ப்ரு. 4.3.21.

தத்யதாऽந: ஸுஸமாஹித-முத்ஸர்ஜத்யாயா-தேவ-மேவாயꣳ ஶாரீர ஆத்மா ப்ராஜ்ஞேனாத்மனான்வாரூட-முத்ஸர்ஜன்-யாதி | ப்ரு. 4.3.35.

3.43. ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ பூதாதிபதி-ரேஷ பூதபால ஏஷ ஸேதுர் விதரண ஏஷாம் லோகானா-மஸம்பேதாய | ப்ரு. 4.4.22.

4.1. மஹத: பரமவ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர: | கட. 3.11.

ஆத்மானம் ரதினம் வித்தி ஶரீரம் ரதமேவ து | புத்திந் து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹ-மேவச | கட. 3.3.

இரண்டு மந்திரங்களையும் ஒப்பிட்டால், புருஷன் ஆத்மா என்றும், மஹத் என்றது ஸமஷ்டி புத்தி என்றும் விளங்கும். மஹத்துக்கும் புருஷனுக்கும் இடையிலுள்ள அவ்யக்தம், ஆத்மாவுக்கும் புத்திக்கும் இடையிற் கூறின சரீரம் என்பதும் விளங்கும்.

सूक्ष्मं तु तदर्हत्वात् ॥ ४.२ ॥

तदधीनत्वादर्थवत् ॥ ४.३ ॥

ज्ञेयत्वावचनाच्च ॥ ४.४ ॥

वदतीति चेत्, न, प्राज्ञो हि प्रकरणात् ॥ ४.५ ॥

त्रयाणामेव चैवमुपन्यासः प्रश्नश्च ॥ ४.६ ॥

महद्वच्च ॥ ४.७ ॥

---

4.2. (வியக்தமாயுள்ள சரீரம் அவ்யக்தம் எனப்படாது எனின், சரீரத்துக்குக் காரணமான) சூக்ஷ்மமான (பஞ்ச பூதங்கள் என்போம். (ஸ்தூலத்தைச் சூக்ஷ்மத்தால் குறிப்பது) பொருந்துமாதலால்.

4.3. (சூக்ஷ்மமாகிய) அது (ஈசுவரனுக்கு) அதீனமாயிருப்ப தால் பொருத்தமாகும்.

4.4. (பிரகிருதிபுருஷ பேதத்தை யறிந்தால் முக்தி என்பர் சாங்கியர் ; அங்ஙனம்) அறியத்தக்க வஸ்துவாக (அவ்யக்தம்) கூறப் படாததால் (அது பிரகிருதியன்று).

4.5. (சுருதி அங்ஙனம்) கூறுகிறது எனின், இல்லை ; பிர கரணத்தில் பேசப்படுவது பிராஜ்ஞன்.

4.6. (இங்கு அக்னி வித்தை, ஜீவாத்மஸ்வரூபம், பரமாத்ம ஸ்வரூபம் என்ற) மூன்றுவிஷயங்களைப் பற்றியே (யமனுடைய) உபந்நியாஸமும் (நசிகேதஸ்ஸினுடைய) கேள்வியும்.

4.7. ‘மஹத்’ எனுஞ் சொல்லைப் போலவே (அவ்யக்தமும் ஸாங்கியத் தத்துவத்தைக் கூறவில்லை.)

---

4.3. மாயாந்-து ப்ரக்ருதிம் வித்யான்-மாயினந் து மஹேஶ்வரம் ।
ஶ்வே 4.10.

4.5. அனாத்யனந்தம் மஹத: பரந் த்ருவம் நிசாய்ய தன்-ம்ருத்யு-முகாத் ப்ரமுச்யதே । கட. 3.15.

4.7. புத்தேராத்மா மஹான் பர: । கட. 3.10. இந்த இடத்தில் (மஹான்) மஹத் என்றது புத்தியை விட வேறு என்று தெரிகிறது. ஆத் மாவின் ஒரு நிலையைக் குறிப்பதாகும். அவ்வாறே அவ்வியக்தத்துக்கும் இங்கு அர்த்தம் வேறு.

वाक्यान्वयात् ॥ ४.१९ ॥

प्रतिज्ञासिद्धेर्लिङ्ग-माश्मरथ्यः ॥ ४.२० ॥

उत्क्रमिष्यत एवंभावादित्यौडुलोमिः ॥ ४.२१ ॥

अवस्थितेरिति काशकृत्स्नः ॥ ४.२२ ॥

प्रकृतिश्च प्रतिज्ञादृष्टान्तानुपरोधात् ॥ ४.२३ ॥

---

4.19. (கேட்கத்தக்கது, நினைக்கத்தக்கது என்றது பிரம்மம்). வாக்கியத்தின் சந்தர்ப்பத்தாலுந் தொடர்பாலும் (இது அபேத வாதம்).

4.20. (விஜ்ஞானேன இதம் ஸர்வம் விதிதம் என்ற) பிரதிஜ்ஞை ஸித்திப்பதற்கு அடையாளமாயிருப்பதால் (இது ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும் 'பேதாபேத'த்தைக் கூறுகிறது என்று ஆச்மரத்யர் (அபிப்பிராயம்).

4.21. சரீரத்தினின்று விடுதலை பெற்ற பின்னரே இந்த நிலை; (அதாவது ஜீவனும் பிரம்மமும் அபேதம் என்பது; அதற்கு முன் பேதமுண்டு) என்று ஔடுலோமி கூறுகிறார். (இது ஸத்ய-பேத-வாதம்).

4.22. (பிரம்மமே ஜீவனாக) ஸ்திதி பெற்றிருப்பதால் (அங்ஙனம் கூறப்பட்டது) என்று காசக்ருத்ஸனர். (இது அபேதம்).

4.23. பிரகிருதியும் (உபாதான காரணமும் பிரம்மமே); (யேனாச்ருதம் ச்ருதம் பவதி முதலிய) பிரதிஜ்ஞைக்கும் (ஏகேன ம்ருத்பிண்டேன முதலிய) திருஷ்டாந்தத்துக்கும் விரோத மில்லாமலிருப்பதால்.

---

4.19. ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: । ப்ரு. 2.4.5.

4.23. யேனாச்ருத ஃச்ருதம் பவத்-யமதம் மதம் அவிஜ்ஞாதம் விஜ்ஞாதமிதி...யதா ஸோம்யைகேன ம்ருத் - பிண்டேன ஸர்வம் ம்ருன்மயம் விஜ்ஞாத ஃ ஸ்யாத் । சா. 6.1.3-4.

ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீ-தேகமேவாத்விதீயம் । சா. 6.2.1.

अभिध्योपदेशाच्च ॥ ४.२४ ॥

साक्षाच्चोभयाम्नानात् ॥ ४.२५ ॥

आत्मकृतेः परिणामात् ॥ ४.२६ ॥

योनिश्च हि गीयते ॥ ४.२७ ॥

एतेन सर्वे व्याख्याता व्याख्याताः ॥ ४.२८ ॥

---

**4.24.** இச்சித்தது என்ற உபதேசத்தாலும் (பஹுஸ்யாம், நானே பல ஆகவேண்டும் என்று கூறியிருப்பதால் உபாதான காரணம் பிரம்மமே).

**4.25.** (சிருஷ்டி, லயம்) இரண்டும் நேராக பிரம்மத்தையே (காரணமாக உடையதென்று) கூறியிருப்பதால்.

**4.26.** பரிணமத்தால் அது தன்னைத்தானே சிருஷ்டித்துக் கொண்டதால் (பிரம்மம் உபாதான காரணம்).

**4.27.** (யோனி) உற்பத்திஸ்தானம் என்றும் பாடப் பெற்றிருப் பதால் (உபாதான காரணம்).

**4.28.** இதனால் (வேதாந்தத்துக்கு எதிரான வாதங்கள் எல்லாம் பொருத்த மற்றன என்று) எல்லாம் விளக்கப்பட்டது.

---

4.24. ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி । சா. 6.2.3.

4.25. யதோ வா இமானி பூதானி ஜாயந்தே । யேன ஜாதானி ஜீவந்தி । யத் ப்ரயந்த்-யபிஸம்விஶந்தி । தத் விஜிஜ்ஞாஸஸ்வ । தத்ப்ரஹ்மேதி । தை. 3.1.

4.26. ததாத்மானஂ-ஸ்வய-மகுருத । தை. 2.7.

2.27. தத்வ்யயம் தத் பூதயோனிம் பரிபஶ்யந்தி தீரா: । மு. 1.1.6.

## ॥ द्वितीयोऽध्यायः ॥

### ॥ प्रथमः पादः ॥

न विलक्षणत्वादस्य, तथात्वं च शब्दात् ॥ १.४ ॥

दृश्यते तु ॥ १.६ ॥

तर्काप्रतिष्ठानादपि ; अन्यथानुमेयमिति चेत् , एवमप्यविमोक्षप्रसङ्गः ॥ १.११ ॥

तदनन्यत्व-मारम्भण-शब्दादिभ्यः ॥ १.१४ ॥

---

## இரண்டாவது அத்தியாயம்

### (விரோத பரிஹாரம்)

### அத். 2 : முதல் பாதம்

**1.4.** இலக்ஷண வேற்றுமையால் (பிரம்மம்) இந்த உலகத்தின் காரணமாக இருக்க முடியாது ; அங்ஙனமே சுருதியிலிருந்தும் (காணப்படுகிறது என்பது எதிர்வாதம்).

**1.6.** (இல்லை ; பிரம்மமே காரணம் என்றுதான்) காணப்படுகிறது.

**1.11.** தர்க்கத்துக்கு ஒரு முடிவென்பது இல்லாமையாலும் (அது வேதாந்தத்தின் அனுபவத்தை வெல்லமுடியாது); வேறு யுக்தியால் இதை அனுமானிக்க வேண்டுமெனின் அந்த யுக்தியும் இந்தக் குற்றத்திலிருந்து விடுபடமுடியாது. (பிரம்மம் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாததால் சுருதியை ஒட்டியே யுக்தி செல்லவேண்டும்).

**1.14.** ‘ஆரம்பணம்’ முதலிய சொற்களிலிருந்து அதின் (காரிய காரணத்தின்) பேதமின்மை (விளங்குகின்றது).

---

1.14. நேஹ நாநாஸ்தி கிஞ்சன । கட 2.4.11.

வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம் । சா. 6.1.4.

सत्त्वाच्चावरस्य ॥ १.१६ ॥

असद्व्यपदेशान्नेति चेत्, न, धर्मान्तरेण वाक्यशेषात् ॥ १.१७ ॥

युक्तेः शब्दान्तराच्च ॥ १.१८ ॥

पटवच्च ॥ १.१९ ॥

इतरव्यपदेशाद्धिताकरणादि-दोषप्रसक्तिः ॥ १.२१ ॥

अधिकं तु भेदनिर्देशात् ॥ १.२२ ॥

---

**1·16.** (இவ்வுலகமாகிய) காரியம் ஸத்தாகவே (சிருஷ்டிக்கு முன்னும்) இருந்ததால்.

**1.17.** அது 'அஸத்' என்று கூறப்பட்டிருப்பதால் இல்லை எனின், அது ஒவ்வாது. அதே வாக்கியத்தின் மிகுதியில் வேறு லக்ஷணம் கூறப்பட்டிருப்பதால்.

**1.18.** யுக்தியினாலும் வேறு சுருதியினாலும் (காரிய காரண அபேதம் விளங்குகிறது).

**1.19.** (மடித்துவைத்த) துணி (விரிக்கப்பட்டது) போல் (காரியம் காரணத்தினின்று வேறுபட்டதல்ல).

**1.21.** மற்றவன் (ஜீவன் பிரம்மமே என்று) கூறப்பட்டிருப்பதால், தனக்கு ஹிதமானதைச் செய்து கொள்ளாத குற்றம் ஏற்படும். (பிரம்மமே யாகிய ஜீவன் தனக்கு விருப்பமில்லாத துன்பத்தை எங்ஙனம் சிருஷ்டித்துக் கொள்வான் ?)

**1.22.** (ஜீவன் சிருஷ்டிகர்த்தா அல்ல என்ற) பேதங் கூறப்பட்டிருப்பதால் (பிரம்மம் ஜீவனைவிட) அதிகமானது.

---

1.16. ஸதேவ ஸோம்யேத-மக்ர ஆஸீ-தேகமேவாத்விதீயம் । சா. 6.2.1.

1.17. ஆதித்யோ ப்ரஹ்மேத்-யாதேஶஸ் - தஸ்யோபவ்யாக்யான-மஸதே-வேதமக்ர ஆஸீத் । தத் ஸதாஸீத் தத் ஸமபவத் । சா. 3.19.1.

1.18. சா. 6.2.1.

1.22. ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: । ப்ரு. 2.4.5.

अश्मादिवच्च तदनुपपत्तिः ॥ १.२३ ॥

उपसंहार-दर्शनान्नेति चेत्, न, क्षीरवद्धि ॥ १.२४ ॥

देवादिवदपि लोके ॥ १.२५ ॥

कृत्स्न-प्रसक्तिर्निरवयवत्वशब्द-कोपो वा ॥ १.२६ ॥

श्रुतेस्तु, शब्द-मूलत्वात् ॥ १.२७ ॥

---

1·23. (ஸச்சிதாநந்தப் பிரம்மத்தினின்று நல்லதுந்தீயதுங் கலந்த உலகம் எங்ஙனம் வரக்கூடும் எனின், பூமியிலிருந்து மதிப்புயர்ந்த ரத்னமும் மதிப்பற்ற) கல் முதலியனவும் (உண்டாவது காணப்படுவது) போல்; ஆக்ஷேபணை பொருந்தாது.

1.24. (புதிதாய் ஒன்றை உண்டாக்குவதற்கு) உபகரணங்களைச் சேகரிப்பது அவசியம். அது இங்கு நிகழாததால் (பிரம்மம் உலகுக்குக் காரணம்) அன்று எனின், அது ஒவ்வாது; பால் (தயிராவது) போலவும்.

1.25. உலகில் தேவர் முதலியோர் போல் (வெளிப்பொருள் ஒன்றையும் வேண்டாமல் பிரம்மம் உலகைச் சிருஷ்டிக்க இயலும்).

1.26. (பிரம்மமே உலகமாகிறது என்றால்) முழுதும் உலகமாக மாறி பிரம்மமே இல்லாமற் போகலாம்; அல்லது (ஒருபாகம் மாறி மிகுதி மாறாமலிருக்கிறதென்றால்) நிரவயவமான பிரம்மத்துக்கு அவயவம் (பாகுபாடு) கற்பித்த குற்றம் ஏற்படும் (என்பது எதிர்வாதம்).

1.27. சுருதி வாக்கியங்கள் இரண்டு பக்ஷத்தையுங் கூறுவதால் அது அப்படித்தான்; பிரம்மத்தைப் பற்றிய ஞானத்துக்குச் சுருதியே ஆதாரம்.

---

1.24. ந தஸ்ய கார்யங் கரணஞ்-ச வித்யதே ந தத் ஸமஶ்-சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே । பராஸ்ய। ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞான-பல-க்ரியா ச । ஶ்வே. 6.8.

1.27. பாதோऽஸ்ய ஸர்வாபூதானி, த்ரிபாதஸ்யாம்ருதந்திவீதி । சா. 3.12.6.

आत्मनि चैवं विचित्राश्च हि ॥ १.२८ ॥

स्वपक्ष-दोषाच्च ॥ १.२९ ॥

सर्वोपेता च तद्दर्शनात् ॥ १.३० ॥

विकरणत्वान्नेति चेत् तदुक्तम् ॥ १.३१ ॥

न प्रयोजनवत्वात् ॥ १.३२ ॥

लोकवत्तु लीला-कैवल्यम् ॥ १.३३ ॥

---

1.28. ஜீவாத்மாவிடத்திலும் இம்மாதிரி விசித்திரங்கள் நிகழ்வதால் (அது பொருந்தும்).

1.29. எதிர்வாதிகளின் கக்ஷிக்கும் அவர்கள் கூறும் தோஷம் உண்டு.

1.30. (பிரம்மம்) எல்லாம் உடையது; அது (சுருதியிலிருந்து) காணப்படுவதால்.

1.31. அதற்குக் கரணங்கள் இல்லாததால் (பிரம்மம் சிருஷ்டிக்க) இயலாது எனின், அவ்விஷயம் ஏற்கெனவே விளக்கப்பட்டது (2.1.4 ; 2.1.25ல்).

1·32. பிரயோஜனத்தைக் கருதியே (கருமத்தில் பிரவிருத்தி ஏற்படும்) ; ஆதலால் (பிரம்மம் சிருஷ்டிகர்த்தா) அல்ல (என்பது எதிர்வாதம்).

1.33. உலகத்தில் போல (சிருஷ்டிகாரியம் ஒரு பிரயோஜனத்தையும் வேண்டாத) வெறும் விளையாட்டே.

---

1.28. அத ரதான் ரதயோகான் பத: ஸ்ருஜதே | ப்ரு. 4.3.10.

1.30. ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ: | சா. 3.14.4. ய ஆத்மாபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்-விஶோகோऽவிஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யஸங்கல்ப: | சா. 8.7.1.

1.31. புண்யோ வை புண்யேன கர்மணா பவதி பாப: பாபேன | ப்ரு. 3·2.13.

वैषम्य-नैर्घृण्ये न, सापेक्षत्वात्, तथा हि दर्शयति ॥ १.३४॥

न कर्माविभागादिति चेत्, न अनादित्वात् ॥ १.३५ ॥

उपपद्यते चाप्युपलभ्यते च ॥ १.३६ ॥

सर्व-धर्मोपपत्तेश्च ॥ १.३७ ॥

[ द्वितीयपादे सांख्यादि-मतानां दुष्टत्वप्रदर्शनं त्यक्तम् ]

* * * *

॥ तृतीयः पादः ॥

न वियत्, अश्रुतेः ॥ ३.१ ॥

अस्ति तु ॥ ३.२ ॥

---

1.34. பக்ஷபாதமும் கொடுமையும் (பிரம்மத்துக்குக் கூறுதல்) ஒவ்வாது ; (அவரவர் புண்ணிய பாவத்தை) அபேக்ஷித்துப் பலனை அளித்தலால் ; அங்ஙனமே சுருதி கூறுகிறது.

1·35. (சிருஷ்டிக்கு முன்) கர்மவிபாகமில்லாததால் அது ஒவ்வாதென்பது சரியல்ல ; (உலகம்) அனாதியாதலால்.

1.36. (சிருஷ்டி அனாதியென்பது) யுக்திக்கு ஒத்திருக்கிறது, சுருதியாலுங் காணப்படுகிறது.

1.37. (சிருஷ்டிக்கு இன்றியமையாத) குணங்களனைத்தும் (பிரம்மத்தினிடமே) பொருந்துமாதலாலும்.

**[அத். 2 : இரண்டாம்பாதம் ஸாங்கிய, வைசேஷிக, பௌத்த வாதங்களின் கண்டனம்**—விடப்பட்டது.]

* * *

**அத். 2 : மூன்றும் பாதம்**

3.1. ஆகாசம் சிருஷ்டிக்கப்பட்டதல்ல ; சுருதி அதைக் கூற வில்லை (என்பது எதிர்வாதம்).

3.2. சுருதி கூறியிருக்கிறது.

---

1.36. ஸூர்யா-சந்த்ரமஸௌ தாதா யதா-பூர்வ-மகல்பயத் । தை. நாராயணவல்லி.

3.2. ஆத்மன ஆகாஶ: ஸம்பூத: । தை. 2.1.

गौणी असंभवात् ॥ ३.३ ॥

शब्दाच्च ॥ ३.४ ॥

स्याच्चैकस्य ब्रह्मशब्दवत् ॥ ३.५ ॥

प्रतिज्ञाऽहानिरव्यतिरेकाच्छब्देभ्यः ॥ ३.६ ॥

यावद्विकारं तु विभागो लोकवत् ॥ ३.७ ॥

एतेन मातरिश्वा व्याख्यातः ॥ ३.८ ॥

---

3.3. உபசாரத்துக்காக அப்படிக் கூறியிருக்கிறது; (ஆகாசத்தைச் சிருஷ்டித்தல்) இயலாது. (எதிர்வாதம்).

3.4. சுருதியாலும் (ஆகாசம் அனுதி, அமிருதம் எனக் காணப்படுகிறது(என்பது எதிர் வாதம்).

3.5. ('அன்னம் பிரம்மம்' முதலிய இடங்களில் உபசாரமாய்க் கூறப்பட்ட) பிரம்ம சப்தத்தைப்போல், (ஆத்மன ஆகாஶ: ஸம்பூத: என்பதில், ஸம்பூத: எனும்) ஒரு சொல்லுக்கு (உண்மையாகவும் உபசாரமாகவும் அர்த்தம்) ஏற்படலாம் (என்பது எதிர் வாதம்).

3.6. (எது ஒன்றையறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ எனும்) பிரதிஜ்ஞை பொய்யாகாமலிருப்பது (பிரம்மத்தினின்று) பிரிதாக ஒன்றும் இல்லாமையால் தான் ஏற்படும். இது சுருதி வாக்கியங்களால் ஸ்தாபிக்கப்படுகிறது.

3.7. எப்போது ஒன்று (விகாரத்தையடைகிறதோ) சிருஷ்டிக்கப் படுகிறதோ அப்போது அது (விபாகப்படுகிறது) பிரிதாய்க் காணப்படுகிறது உலகத்தில். (ஆகாசம் பிரிதாய்க் காணப்படுவதால் அது சிருஷ்டிக்கப்பட்டதேயாம்).

3.8. இதனுல் வாயுவும் (சிருஷ்டிக்கப்பட்டதென்பது) விளக்கப் பட்டது.

---

3.4. அதாமூர்த்தம் வாயுஶ்சாந்தரிக்ஷஞ்-சைத-தம்ருதம் । ப்ரு. 2.3.3.

असंभवस्तु सतः, अनुपपत्तेः ॥ ३.९ ॥
तेजोऽतः, तथा ह्याह ॥ ३.१० ॥
आपः ॥ ३.११ ॥
पृथिवी, अधिकार-रूप-शब्दान्तरेभ्यः ॥ ३.१२ ॥
तदभिध्यानादेव तु तल्लिङ्गात् सः ॥ ३.१३ ॥
विपर्ययेण तु क्रमोऽतः उपपद्यते च ॥ ३.१४ ॥

---

3·9. ஸத்தாக உள்ளதற்கு (பிரம்மத்துக்கு) உத்பத்தி இல்லை; அது ஒவ்வாததால்.

3.10. அக்னி அதினின்று (வாயுவினின்று உண்டாயிற்று); அங்ஙனமே சுருதி கூறுகிறது.

3.11. அப்பு (அக்னியினின்று உண்டாயிற்று).

3.12. பிருதிவி (அப்புவிலிருந்து உண்டாயிற்று என்பது) அதிகார விஷயத்தாலும், ('யத்க்ருஷ்ணம் ததன்னஸ்ய' என்று) வர்ணக்குறிப்பாலும் வேறு சுருதி வாக்கியங்களாலும் (தெளிவாகின்றது).

3.13. (ஒன்றிலிருந்து மற்றொன்று இவ்வண்ணம் உண்டானது) அவனுடைய (ஈசுவரனுடைய) ஸங்கல்பத்தாலேயே; அதற்குரிய அடையாளங்களால் அவனே (சிருஷ்டிகர்த்தா என உணர்கிறோம்).

3.14. திரும்பவும் இதே கிரமத்தில் (பிரளயம் ஏற்படுகிறது); என்பது பொருத்தம்.

---

3.9. கத-மஸத: ஸஜ்-ஜாயேதேதி । சா. 6.2.2.
ஸ வா ஏஷ மஹானஜ ஆத்மா-ஜரோऽமரோऽம்ருத: । ப்ரு. 4.4.25.
3.10. வாயோ-ரக்னி: தை. 2.1
3.11. அக்னே-ராப: தை. 2.1
3.12. அத்ப்ப்ய: ப்ருதிவீ. தை 2.1
யத்க்ருஷ்ணம் ததன்னஸ்ய. சா 6.4.1.
3.13. ய: ப்ருதிவ்யாந் திஷ்ட்டன் ப்ருதிவ்யா அந்தர: । ப்ரு. 3.7.3.

अन्तरा विज्ञानमनसी क्रमेण तल्लिङ्गादिति चेत्, न, अविशेषात् ॥ ३.१५ ॥

चराचरव्यपाश्रयस्तु स्यात् तद्व्यपदेशो भाक्तः, तद्भावभावित्वात् ॥ ३.१६ ॥

न आत्मा, अश्रुतेर्नित्यत्वाच्च ताभ्यः ॥ ३.१७ ॥

ज्ञोऽत एव ॥ ३.१८ ॥

---

3.15. (பிரம்மத்துக்கும் பஞ்சபூதங்களுக்கும்) இடையில் புத்தியும் மனதும் வரிசைக் கிரமத்தில் வரும் அடையாளங்களால் (சிருஷ்டியிலும் பிரளயத்திலும் அவை இடையில் வரவேண்டுமே) என்றால், அது அங்ஙனமன்று, அவை பஞ்சபூதங்களினின்று வேறல்லவாதலால்.

3.16. சராசரத்தை ஆசிரயித்து (பிறப்பும் இறப்பும்) உளது ; ஆனால் அங்ஙனம் கூறியது உபசாரமாக ; (பிறப்பு இறப்பு என்ற) அந்த பாவனை சரீரபாவனையாலேயே ஏற்பட்டது. (ஆத்மாவுக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை)

3.17. ஜீவாத்மா (சிருஷ்டிக்கப்பட) இல்லை ; சுருதி அங்ஙனங் கூறாததால் ; அது நித்யம் என்பது சுருதிகளிலிருந்தே காணப் படுவதாலும்.

3.18. அக்காரணத்தாலேயே (ஜீவாத்மா) ஞான வடிவினன்.

---

3.15. ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மன: ஸர்வேந்த்ரியாணி ச । கம் வாயுர்-ஜ்யோதி-ராப: ப்ருதிவீ விஶ்வஸ்ய தாரிணீ ॥ மு-2. 1. 3.

அன்னமயꣳஹி ஸோம்ய மன ஆபோமய: ப்ராணஸ்-தே ஜோமயீ வாகிதி । சா. 6.6.5.

3.16. ஜீவாபேதம் வாவ கிலேதம் ம்ரியதே, ந ஜீவோ ம்ரியத இதி । சா. 6.11.3.

ஸ வா அயம் புருஷோ ஜாயமான:ஶரீரமபிஸம்பத்யமான: । ப்ரு. 4.3.8.

3.17. அஜோ நித்ய: । கட 2.18.

ஸ வா ஏஷ மஹானஜ ஆத்மா । ப்ரு.4.4.25.

उत्क्रान्ति-गत्यागतीनाम् ॥३.१९ ॥

स्वात्मना च उत्तरयोः ॥ ३.२० ॥

न अणुः अतच्छ्रुतेरिति चेत्, न, इतराधिकारात् ॥ ३.२१॥

स्वशब्दोन्मानाभ्यां च ॥ ३.२२ ॥

अविरोधश्चन्दनवत् ॥ ३.२३ ॥

अवस्थिति-वैशेष्यादिति चेत्, न, अभ्युपगमात् हृदि हि ॥ ३.२४ ॥

---

3.19. (சரீரத்தை விட்டுக்) கிளம்புதல், (வேறுலகங்களுக்குப்) போதல் (அங்கிருந்து) வருதல் இவற்ருல் (ஜீவாத்மா அணு வடிவினன் என்பது எதிர்வாதம்).

3.20. (ஆத்மா அளவற்றவனுயிருப்பின் சரீரத்தை உதறி விடுதல் கூடும் என்று ஒப்புக்கொண்டாலும்) பின் கூறப்பட்டவை (போதலும் வருதலும்) ஆத்மாவுடன் (சம்பந்திப்பதால் ஆத்மா அணுவே).

3.21. அணுவல்ல எனும் சுருதி வாக்கியங்களிலிருந்து ஆத்மா அணுவல்ல எனின், அது ஒவ்வாது; அது மற்றவனை (பரமாத்மாவைப்) பற்றியது.

3.22. (ஜீவாத்மாவைப் பற்றிய) நேரான சுருதி வாக்கியத் தாலும் அணுவாக அளவு கூறப்பட்டமையாலும்.

3.23. (அணுவாயின் சரீரம் முழுவதும் வியாபித்தல் எங்ஙனமெனின்) அதனுல் விரோதமில்லை; சந்தனத்தைப் போல் (அதன் வாசனை வியாபித்திருத்தல் கூடும்).

3.24. (சந்தனம் வாசனையளிப்பது போல் ஆத்மா இல்லை) அது இட விசேஷத்தால் எனின் அது ஒவ்வாது; (ஆத்மாவும் ஒரு இடத்தில்) இருதயத்திலிருப்பதாகவே சுருதி ஒப்புக்கொள்வதால்.

---

3.22. ஏஷோऽணுராத்மா । மு.3.1.9.

3.24. ஹ்ருத்-யந்தர்-ஜ்யோதி: புருஷ: । ப்ரு.4.3.7.

गुणाद्वा लोकवत् ॥ ३.२५ ॥
व्यतिरेको गन्धवत् ॥ ३.२६ ॥
तद्गुणसारत्वात् तु तद्व्यपदेशः, प्राज्ञवत् ॥ ३.२९ ॥
यावदात्मभावित्वाच्च न दोषः, तद्दर्शनात् ॥ ३.३० ॥
पुंस्त्वादिवत् तु अस्य सतोऽभिव्यक्तियोगात् ॥ ३.३१ ॥
नित्योपलब्ध्यनुपलब्धि-प्रसङ्गोऽन्यतर-नियमो वाऽन्यथा ॥ ३.३२ ॥

---

3.25. உலகில் (ஒரு விளக்கு ஓரிடத்திலிருந்து கொண்டு அறை முழுதும் பிரகாசிக்கச் செய்வது) போல் (அதனுடைய ஞானமாகிய) குணத்தால் (வியாபிக்கலாம்).

3.26. (ஞானத்தின் ஒளி) பரவுதல் வாசனையைப் போல். (இதுவரை எதிர்வாதம்).

3.29. (ஆத்மா அணு என்ற) அந்தக் குறிப்பு அந்த (புத்தி) குண ஸாரத்தால்; பிராஜ்ஞனைப்போல் (பிரம்மத்தையும் அணு என்று கூறியுள்ளதைப் போல்.)

3.30. (புத்தி சம்பந்தம் இல்லாதபோது எங்ஙனமெனின்) ஸம்ஸாரித்வம் உள்ளவரை (புத்தி சம்பந்தம் நீங்காததலால்) தோஷமில்லை; அங்ஙனம் சுருதியில் கூறப்படுகிறது.

3.31. (ஸுஷுப்தியில் புத்தி சம்பந்தம் இல்லையே எனின், உண்டு;) ஆண்மை (பும்ஸ்த்வம் குழந்தைப் பருவத்தில் மறைந்திருப்பதே வாலிபத்தில் வெளிப்படுவது முதலியது) போல் இதுவும் (மறைந்து) இருந்தே வெளிப்படுவதால் (ஸுஷுப்தியிலும் உண்டு).

3.32. (புத்தியையோ அந்தக்கரணத்தையோ ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றால்) இல்லாவிட்டால் எப்போதும் (வெளி விஷயங்களின்) உணர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கும், அல்லது உணர்ச்சி ஏற்படாமலே போகும், அல்லது (ஜீவாத்மாவுக்கோ இந்திரியங்களுக்கோ) இரண்டில் ஒன்றுக்குக் குறை ஏற்படும்.

---

3.30. ஸ ஸமான:ஸன்-னுபௌ லோகாவனுஸஞ்சரதி த்யாயதீவ லேலாயதீவ । ப்ரு.4.3.7.

3.32. அன்யத்ரமனா அபூவம் நாதர்ஶ-மன்யத்ரமனா அபூவம் நாஶ்ரௌஷமிதி । ப்ரு. 1.5.3.

कर्ता शास्त्रार्थवत्वात् ॥ ३.३३ ॥

विहारोपदेशात् ॥ ३.३४ ॥

उपादानात् ॥ ३.३५ ॥

व्यपदेशाच्च क्रियायाम्, न चेन्निर्देश-विपर्ययः ॥ ३.३६ ॥

उपलब्धिवत् अनियमः ॥ ३.३७ ॥

शक्तिविपर्ययात् ॥ ३.३८ ॥

समाध्यभावाच्च ॥ ३.३९ ॥

---

3.33. (ஜீவாத்மா) கர்த்தா (என ஒப்புக்கொண்டால் தான்) சாஸ்திரம் அர்த்தமுடையதாகும்.

3.34. ஸஞ்சாரம் உபதேசிக்கப்படுவதால் (ஜீவாத்மா கர்த்தா).

3.35. (இந்திரியங்களை) கிரகித்துச் செல்லுவதாலும்.

3.36. செயல் சம்பந்தமாக (ஜீவாத்மாவைக் கர்த்தாவாகச் சுருதி) கூறுவதாலும்; இல்லாவிட்டால் கூறியது வேறு விதமாயிருக்கும்.

3.37. வெளி விஷயங்களின் உணர்ச்சியில் போலவே (பிரியத்தையும் பிரியமில்லாததையும் உணர்வது போல் இரண்டையுமே செய்கிறது; இதில் பிரியத்தையோ நல்லதையோ தான் செய்ய வேண்டும் என்ற) நியமம் இல்லை.

3.38. (புத்தியே தான் கர்த்தா என்றால், அதற்கு வேறு ஒரு கரணம் கூறவேண்டிவரும்). சக்தி மாறுதலால் (அது ஒவ்வாது).

3.39. (ஜீவாத்மா கர்த்தா அல்ல என்றால்) ஸமாதிகூட இயலாததாலும்.

---

3.34-35. ஸ யதா மஹாராஜோ ஜானபதான் க்ருஹீத்வா, ஸ்வே ஜனபதே யதாகாமம் பரிவர்த்தேதைவ-மேவைஷ ஏதத் ப்ராணான் க்ருஹீத்வா ஸ்வே ஶரீரே யதாகாமம் பரிவர்த்ததே । ப்ரு. 2.1.18.

3.36. விஜ்ஞானம் யஜ்ஞந் தனுதே । கர்மாணி தனுதேऽபி ச । தை. 2.5.

यथा च तक्षोभयथा ॥ ३.४० ॥

परात्तु तच्छ्रुतेः ॥ ३.४१ ॥

कृतप्रयत्नापेक्षस्तु विहित-प्रतिषिद्धावैयर्थ्यादिभ्यः ॥ ३.४२ ॥

अंशो नानाव्यपदेशात्, अन्यथा चापि दाशकितवादित्व-मधीयत एके ॥ ३.४३ ॥

मन्त्रवर्णाच्च ॥ ३.४४ ॥

अपि च स्मर्यते ॥ ३.४५ ॥

---

3.40. எங்ஙனம் தச்சன் (ஆயுதங்களை உபயோகிக்கும்போது தச்சனாகவும் மற்றபோது சாதாரண மனிதனாகவும்) இருக்கின்றானோ அங்ஙனம் (ஜீவாத்மா புத்தியுடன் கூடிக் கர்த்தாவாகவும் அகர்த்தா வாக ஆனந்தமாகவும்) இரண்டாகவும் இருக்கின்றது.

3.41. அதுவும் (கர்த்ருத்வமும்) பரமேசுவரனிடமிருந்தே; சுருதி கூறுவதால்.

3.42. (பரமேசுவரன் ஜீவாத்மாவைச் செயலில் புகுத்துதலும்) செய்த கருமத்தை அபேக்ஷித்தே; விதிகளும் விலக்குகளும் அப் போது தான் வியர்த்தமாகா.

3.43. (ஜீவாத்மா பரமாத்மாவின்) அம்சம்; பேதங் கூறப்படு தலால்; அல்லவாகவும் (பேதமற்றதாகவும்) உளது; (பிரம்மமே) செம்படவன் முதலியவனும் எனச் சில சாகைகளில் படிக்கப்படுவ தால்.

3.44. மந்திர வர்ணங்களிலிருந்தும் (அம்சம் என்பது காணப்படுகிறது).

3.45. ஸ்மிருதியிலும் அங்ஙனமே கூறப்பட்டுள்ளது.

---

3.44. பாதோऽஸ்ய ஸர்வா பூதானி । சா. 3.12.6.

3.45. மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத: ஸனாதன: । கீ. 15.7.

प्रकाशादिवत् नैवं परः ॥ ३.४६ ॥
स्मरन्ति च ॥ ३.४७ ॥
अनुज्ञापरिहारौ देहसंबन्धात् ज्योतिरादिवत् ॥ ३.४८ ॥
असन्ततेश्च अव्यतिकरः ॥ ३.४९ ॥
आभास एव च ॥ ३.५० ॥
अदृष्टानियमात् ॥ ३.५१ ॥
अभिसन्ध्यादिष्वपि चैवम् ॥ ३.५२ ॥
प्रदेशादिति चेत्, न, अन्तर्भावात् ॥ ३.५३ ॥

---

3.46. ஒளி முதலியவை (எதன்மேல் பட்டாலும் அதனுடைய குண தோஷங்களால் பற்றப்படாதது) போல் பரமேசுவரனும் பற்றப்படுவதில்லை.

3.47. ஸ்மிருதிகளும் அவ்வாறே கூறுகின்றன.

3.48. ஒளி (யாகசாலை, மயானம் முதலிய இடத்தைப் பொறுத்து விதிவிலக்குகளுக்கு உட்படுவது) போல் தேக ஸம்பந்தத்தால் (ஜீவாத்மாவுக்கு) விதி விலக்குகள்.

3.49. (ஜீவாத்மாவுக்குத் தன் சரீரத்துக்கப்பால் வேறு சரீரங்களில்) வியாபகமில்லாததால் (ஒருவனுடைய கரும பலனை மற்றொருவன் அனுபவிப்பான் என்ற) குழப்பம் இல்லை.

3.50. (ஜீவாத்மா பரமாத்மாவின்) பிரதிபிம்பமே.

3.51. (ஆன்மாக்கள் பல, ஒவ்வொன்றும் ஸர்வவியாபி என்னும் வாதத்தில்) அதிருஷ்டத்தைப் பற்றி ஒரு நியமமும் இல்லாததால் (அது குழப்பத்துக்கு இடம்).

3.52. (அபிஸந்தி) தீர்மானங்கள் முதலிய விஷயத்திலும் அப்படியே (குழப்பத்துக்கு இடம்).

3.53. (சுக துக்க அனுபவங்களில் வித்தியாஸம்) தேச பேதத்தால் எனின் அது ஒவ்வாது; ஆத்மா (ஒவ்வொன்றும் எல்லா சரீரங்களையும்) வியாபித்திருப்பதால். (இதனால் ஸாங்கியர், வைசேஷிகர், நையாயிகர் முதலியவர்களுடைய எதிர் வாதங்கள் நிராகரிக்கப்பட்டன).

## ॥ चतुर्थः पादः ॥

तथा प्राणाः ॥ ४.१ ॥

अणवश्च ॥ ४.७ ॥

श्रेष्ठश्च ॥ ४.८ ॥

न वायुक्रिये, पृथगुपदेशात् ॥ ४.९ ॥

चक्षुरादिवत्तु तत्सहशिष्ट्यादिभ्यः ॥ ४.१० ॥

अकरणत्वाच्च न दोषः तथा हि दर्शयति ॥ ४.११ ॥

पञ्चवृत्तिर्मनोवद्व्यपदिश्यते ॥ ४.१२ ॥

---

### அத். 2 : நாலாம் பாதம்

4.1. இந்திரியங்களும் அவ்வாறே (பிரம்மத்திடமிருந்து தோன்றியவைகளே. அவை அநாதியல்ல).

4.7. (அவை) சிறியவை (ஸூக்ஷ்மமானவை).

4.8. முக்கியப் பிராணனும் (பிரம்மத்திடமிருந்து தோன்றியதே. அநாதியல்ல).

4.9. (முக்கியப் பிராணன்) வாயுவுமல்ல, இந்திரியக் கிரியையுமல்ல, வேறாக உபதேசிக்கப்பட்டிருப்பதால்.

4.10. கண் முதலியவற்றைப் போல் (பிராணன் ஆத்மாவுக்கு அடங்கியதே); அவற்றுடன் ஒன்றாக உபதேசிக்கப்படுவதாலும் வேறு காரணங்களாலும்.

4.11. (பிராணன் இந்திரியங்களைப்போல்) கரணமாயில்லாதது தோஷமல்ல ; சுருதி அங்ஙனமே கூறுகிறது.

4.12. மனது (ஒன்றாயினும், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் எனப் பல விருத்திகளையுடையது) போல் (பிராணனும்) ஐந்து விருத்திகளையுடையதென உபதேசிக்கப்படுகிறது.

---

4.1. ஏதஸ்மாஜ்-ஜாயதே ப்ராணோ மன: ஸர்வேந்திரியாணி ச । மு. 2.1.3.

4.8.-9.8. மு. 2.1.3.

4.11. ப்ராணேன ரக்ஷன்-னவரங்-குலாயம் । (பிராணனால் இந்த இழிவான கூண்டாகிய சரீரத்தை ரக்ஷித்துக்கொண்டு) ப்ரு. 4.3.12.

4.12. அஹமேவைதத் பஞ்சதாத்மானம் ப்ரவிபஜ்யைதத் பாணமவஷ்டப்ப்ய விதாரயாமீதி । ப்ர. 2.3.

## ॥ तृतीयोऽध्यायः ॥

### ॥ प्रथमः पादः ॥

तदन्तरप्रतिपत्तौ रंहति संपरिष्वक्तः, प्रश्ननिरूपणाभ्याम् ॥ १.१ ॥

प्राणगतेश्च ॥ १.३ ॥

कृतात्ययेऽनुशयवान्, दृष्टस्मृतिभ्याम्, यथा इतं अनेवं च ॥ १.८ ॥

---

## மூன்ருவது அத்தியாயம்

### (ஸாதனம்)

### அத். 3 : முதல் பாதம்

**1.1.** இன்னெரு சரீரத்தையுடைவதற்கு (ஜீவாத்மா) பூத தன்மாத்திரைகளால் சூழப்பட்டுச் செல்லுகிறது ; சுருதியில் நிகமும் கேள்வியாலும் விடையாலும் (இது தெரிகிறது).

**1.3.** இந்திரியங்கள் உடன் செல்வதாலும் (பூத தன்மாத்திரைகள் செல்லுகின்றன).

**1.8.** புண்ணியம் முடிந்ததும், ஸஞ்சித கர்மத்துடன் ஜீவாத்மா எப்படிச் சென்றதோ அவ்வழியாகவும் அதற்கு மாருகவும் (இவ்வுலகுக்குத் திரும்பி வருகிறதென்பது) சுருதிஸ்மிருதிகளால் காணப்படுகிறது.

---

1.1. சா. 5.3.3. ப்ரு. 4.4.2.

1.3. த-முத்க்ராமந்தம் ப்ராணோऽனூத்க்ராமதி ப்ராண-மனூத்க்ராமந்தஂ ஸர்வே ப்ராணாऽனூத்க்ராமந்தி । ப்ரு. 4.4.2.

1.8. தஸ்மின் யாவத் ஸம்பாத-முஷித்வாऽதைத-மேவாத்வானம் புனர்நிவர்த்ததே । சா. 5.10.5.

தத்ய இஹ ரமணீயசரணா அப்ப்யாஶோ ஹ யத்தே ரமணீயாம் யோனி-மாபத்யேரன் । சா. 5.10.7.

संयमने त्वनुभूयेतरेषामारोहावरोहौ, तद्गति-दर्शनात् ॥ १.१३ ॥

विद्याकर्मणोरिति तु प्रकृतत्वात् ॥ १.१७ ॥

नातिचिरेण, विशेषात् ॥ १.२३ ॥

अन्याधिष्ठिते पूर्ववत्, अभिलापात् ॥ १.२४ ॥

रेतःसिग्योगोऽथ ॥ १.२६ ॥

योनेः शरीरम् ॥ १.२७ ॥

---

1.13. (யாகாதி புண்ணிய கர்மங்களைச் செய்யாத) ஏனையோர்க்கு யமலோகத்துப் போய் (அங்கு பாவத்தின் பயனை) அனுபவித்துத் திரும்பி வருதல்; அந்த கதி சுருதியால் கூறப்படுவதால்.

1.17. (பிரம்மலோகத்துக்கும் சந்திரலோகத்துக்கும் போதலும் வருதலும்) ஞான மார்க்கத்திலும் கர்ம மார்க்கத்திலும் உள்ளவர்களைப் பற்றியதே என்பது பிரகிருதத்திலிருந்து காணப்படுவதால்.

1.23. (சந்திரலோகத்திலிருந்து இறங்கி வருதல்) வெகுநேரம் பிடிப்பதில்லை; விசேஷமாய்க் கூறப்படுவதால்.

1.24. முன்பு (ஆகாசம் முதலிய இடங்களில் இறங்கி வந்தது) போல் வேறொரு ஜீவன் இருக்குமிடத்தில் (செடி கொடிகளில் இறங்குகிறது); அங்ஙனம் சுருதி கூறுவதால்.

1.26. பின்பு (ஜீவன்) ரேதஸ்ஸை விஸர்ஜனம் செய்யக் கூடிய ஒருவனிடம் சேருகிறது.

1.27. (பின்) யோனியிலிருந்து சரீரம் (உண்டாகிறது).

---

1.13. அயம் லோகோ நாஸ்தி பர இதி மானீ புன: புனர்-வஶமாபத்யதே மே | கட. 2.6.

1.17. அதைதயோ: பதோர் ந கதரேண ச ந தானீமானி க்ஷுத்ராண்-யஸக்ருதாவர்த்தீனி பூதானி பவந்தி, ஜாயஸ்வ-ம்ரியஸ்வேத்யேதத் த்ருதீயஂ ஸ்த்தானம் | சா. 5.10.8.

1.23. யோ யோ ஹ்யன்னமத்தி யோ ரேத: ஸிஞ்சதி, தத்பூய ஏவ பவதி | சா. 5.10.6.

சா. 5.10.7.

## ॥ द्वितीयः पादः ॥

संध्ये सृष्टिराह हि ॥ २.१ ॥

मायामात्रं तु कार्त्स्न्येन अनभिव्यक्तस्वरूपत्वात् ॥ २.३ ॥

सूचकश्च हि श्रुतेः, आचक्षते च तद्विदः ॥ २.४ ॥

पराभिध्यानात्तु तिरोहितम्, ततो ह्यस्य बन्धविपर्ययौ ॥ २.५ ॥

---

### அத். 3 : இரண்டாம் பாதம்

2.1. (ஜாக்கிரத்துக்கும் ஸ்வப்னத்துக்கும்) இடையில் (உண்மையாக) சிருஷ்டி (ஏற்படுகிறது); சுருதி அங்ஙனங் கூறுவதால் (என்பது எதிர்வாதம்).

2.3. (ஸ்வப்ன உலகம்) மாயாமாத்ரம் ; (உண்மையல்ல) ; அதன் ஸ்வரூபம் (சிருஷ்டி) அனைத்துடனும் (ஒத்துக்) காணப்படாததால்.

2.4. (ஸ்வப்னம் மாயையாயினும் சூசகம்) குறிப்பு உண்மையாக இருக்கும், சுருதி கூறுவதால் ; அதன் தத்துவத்தை உணர்ந்தவர்கள் அங்ஙனங் கூறுகின்றனர்.

2.5. மறைந்துள்ளது (ஜீவனும் ஈசுவரனும் ஒன்று என்ற அறிவு) பரமேசுவரனுடைய தியானத்தால் (விளக்கம் பெறும்) ; அவனிடமிருந்தே (பரமேசுவரனிடமிருந்தே) இவனுக்குப் பந்தமும் மோக்ஷமும்.

---

2.1. ந தத்ர ரதா ந ரத-யோகா ந பந்தானோ பவந்த்-யத-ரதான் ரத யோகான் பத: ஸ்ருஜதே । ப்ரு. 4.3.10.

2.4. ஸ யதி ஸ்த்ரியம் பஶ்யேத் ஸம்ருத்தங் கர்மேதி வித்யாத் । சா. 5.2.8.

2.5. ஜ்ஞாத்வா தேவம் ஸர்வ-பாபாபஹானி: க்ஷீணை: க்லேஶைர்-ஜன்ம-ம்ருத்யு-ப்ரஹாணி: । தஸ்யாபித்த்யானாத் த்ருதீயம் தேஹ-பேதே விஶ்வைஶ்வர்யங் கேவல ஆப்த காம: ॥ ஶ்வே. 1.11.

देहयोगाद्वा सोऽपि ॥ २.६ ॥

तदभावो नाडीषु, तच्छ्रुतेः, आत्मनि च ॥ २.७ ॥

अतः प्रबोधोऽस्मात् ॥ २.८ ॥

स एव तु, कर्म-अनुस्मृति-शब्द-विधिभ्यः ॥ २.९ ॥

मुग्धेऽर्धसंपत्तिः, परिशेषात् ॥ २.१० ॥

---

2.6. (அந்த அறிவின் மறைவாகிய) அதுவும் தேகத்துடன் கூடியதால்.

2.7. அது (ஸ்வப்னம்) இல்லாத நிலை (ஸுஷுப்தி) நாடிகளிலும் ஆத்மாவிடத்திலும் (நிகழ்கிறது); சுருதி அங்ஙனங் கூறுவதால்.

2.8. ஆகையால் விழிப்பு இதனிடமிருந்தே (பிரம்மத்திடமிருந்தே).

2.9. (ஸுஷுப்திக்கு முன் இருந்த) அதே ஜீவன் தான் (ஸுஷுப்தியினின்று விழித்தெழுந்து வருபவனும்); கர்மம், ஞாபகம், சுருதி, விதி முதலியவற்றால் (இது காணப்படுகிறது).

2.10. மூர்ச்சையில், பாதி ஸுஷுப்தி (எனலாம்); (மற்ற நிலைகளை ஆராய்ந்தபின் இதுவே) எஞ்சி நிற்பதால்.

---

2.7. தத்யத்ரைதத் ஸுப்த: ஸமஸ்த: ஸம்ப்ரஸன்ன:, ஸ்வப்னம் ந விஜானத்-யாஸு ததா நாடீஷு ஸ்ருப்தோ பவதி । சா. 8.6.3.

ய ஏஷோऽந்தர் ஹ்ருதய ஆகாஶஸ் தஸ்மின் ஶேதே । ப்ரு. 2.1.17.

அத யதா ஸுஷுப்தோ பவதி யதா ந கஸ்யசன வேத ஹிதா நாம நாட்யோ த்வாஸப்ததி-ஸஹஸ்ராணி ஹ்ருதயாத் புரீதத-மபிப்ரதிஷ்டந்தே । ப்ரு. 2.1.19.

ஸதா ஸோம்ய ததா ஸம்பன்னோ பவதி, ஸ்வமபீதோ பவதி । சா. 6.8.1.

2.8. ஏவமேவ கலு ஸோம்ய இமா: ஸர்வா: ப்ரஜா: ஸத ஆகத்ய, ந விது: ஸத ஆகச்சாமஹ இதி । சா. 6.8.1.

न स्थानतोऽपि परस्योभयलिङ्गम् सर्वत्र हि ॥ २.११ ॥
न भेदादिति चेत्, न, प्रत्येकं अतद्वचनात् ॥ २.१२ ॥
अपि चैवमेके ॥ २.१३ ॥
अरूपवदेव हि तत्प्रधानत्वात् ॥ २.१४ ॥
प्रकाशवच्च, अवैयर्थ्यात् ॥ २.१५ ॥

---

2.11. ஸ்தான(பேத)த்தாலுங்கூடப் பரப்பிரம்மத்துக்கு (முரண்பாடான) இரண்டு அடையாளங்கள் பொருந்தமாட்டா ; எல்லா இடத்திலும் (பிரம்மம் நிர்க்குணம் என்று) சுருதி கூறுவதால் ; (மற்றது உபாசனைக்காக).

2.12. பேதங்கூறப்படுவதால் இல்லையெனின், அது ஒவ்வாது; அங்ஙனங் கூறப்பட்ட ஒவ்வொன்றுக்கும் அதன் மறுப்புக் கூறப் படுதலால்.

2.13. மேலும் சிலர் இங்ஙனம் (தெளிவுபடக் கூறியுள்ளனர்).

2.14. (பிரம்மம்) உருவமில்லாததே ; (சுருதி வாக்கியங்களில்) அதுவே பிரதானமாய்க் காணப்படுவதால்.

2.15. (உபாதியால் உருவத்தையடையும்) ஒளியைப்போல் (பிரம்மமும் உபாதியால் உருப்பெற்றதாய்த் தோன்றுகிறது); இதனால் (பிரம்மத்துக்கு உருவங் கூறும் சுருதி வாக்கியங்கள்) வியர்த்தமாகா.

---

2.11. ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ: । சா. 3.14.2. (இது உபாசனைக்காக)

அஸ்தூல-மனண்-வஹ்ரஸ்வ-மதீர்க்க-மலோஹித-மஸ்நேஹ-மச்சாயம்। ப்ரு. 3.8.8.

அசப்த-மஸ்பர்ஶ-மரூப-மவ்யயம் ததாऽரஸம் நித்ய-மகந்தவச்ச யத் । கட. 3.15.

2.12. யஶ்சாய-மஸ்யாம் ப்ருதிவ்யாந் தேஜோமயோऽம்ருதமய: புருஷோ, யஶ்சாய-மத்த்யாத்மம் ஶாரீரஸ்தேஜோமயோऽம்ருதமய: புருஷோ, ऽயமேவ ஸ யோऽயமாத்மேத-மம்ருத-மிதம் ப்ரஹ்மேதம் ஸர்வம் ॥ ப்ரு. 2.5.1.

2.13. ம்ருத்யோ:ஸ ம்ருத்யுமாப்னோதி ய இஹ நானேவ பஶ்யதி । கட. 1.4.11. ப்ரு. 4.4.19.

आह च तन्मात्रम् ॥ २.१६ ॥

दर्शयति च, अथो अपि स्मर्यते ॥ २.१७ ॥

अत एव च उपमा सूर्यकादिवत् ॥ २.१८ ॥

अम्बुवदग्रहणात् तु, न तथात्वम् ॥ २.१९ ॥

वृद्धि-ह्रास-भाक्त्व-मन्तर्भावात्, उभयसामञ्जस्यादेवम् ॥ २.२० ॥

---

2.16. அதுவாகவே (விஜ்ஞான-கனமாகவே) உளதென்று (சுருதி) கூறுகிறது.

2.17. சுருதி காட்டுவதன்றி ஸ்மிருதியும் அங்ஙனமே கூறுகிறது.

2.18. அதனாலேயே சூரிய பிம்பம் முதலியது போன்ற உவமை (பிரம்மத்துக்குக் கூறப்படுகிறது).

2.19. (சூரியனுக்கு) ஜலத்தைப்போல் (பிரம்மத்துக்குப் புறம்பாக வேறென்று) காணப்பெறாததால், உவமை பொருந்தாது (என்பது எதிர்வாதம்).

2.20. (பிரம்மம் உபாதிகளுக்கு) உள்ளே இருப்பதால் வளர்ந்தது போலுங் குறைந்தது போலும் காணப்படுகிறது; இந்த ஒற்றுமையால் (உவமை) பொருந்தும்.

---

2.16. ஸ யதா ஸைந்தவ-கனோऽனந்தரோऽபாஹ்ய: க்ருத்ஸ்னோ ரஸ கன ஏவைவம் வா அரேऽயமாத்மாऽனந்தரோऽபாஹ்ய: க்ருத்ஸ்ன: ப்ரஜ்ஞானகன ஏவ । ப்ரு. 4.5.13.

2.17. அதாத ஆதேஸோ நேதி நேதி ந ஹ்யேதஸ்மாதிதி நேத்-யன்யத்-பரமஸ்த்யத நாமதேயம் । ப்ரு. 2.3.6.

அனாதிமத் பரம்-ப்ரஹ்ம ந ஸத்-தன்னாஸதுச்யதே । கீ. 13.12.

அவ்யக்தோऽய-மசிந்த்யோऽய-மவிகார்யோऽய-முச்யதே । கீ. 2.25.

दर्शनाच्च ॥ २.२१ ॥

प्रकृतैतावत्त्वं हि प्रतिषेधति, ततो ब्रवीति च भूयः ॥ २.२२ ॥

तदव्यक्तं आह हि ॥ २.२३ ॥

अपि च संराधने, प्रत्यक्षानुमानाभ्याम् ॥ २.२४ ॥

प्रकाशादिवच्च अवैशेष्यं प्रकाशश्च कर्मणि, अभ्यासात् ॥ २.२५ ॥

---

2.21. சுருதியாலும்.

2.22. இதுவரை கூறியதை (நேதி, நேதி என்ற சொற்களால்) சுருதி மறுக்கிறது ; அப்பாலும் பேசுகிறது.

2.23. அது (இந்திரியங்களுக்கு) விளங்காதது (அவ்வியக்தம்) என்று சுருதி கூறுகிறதே.

2.24. எனினும் ஸமாதியில் (அனுபவிக்கப்படுகிறது) என்பது பிரத்தியக்ஷ அனுமானங்களால் (சுருதிஸ்மிருதிகளால்) விளங்குகிறது.

2.25. (ஸ்வயம்பிரகாச) பிரம்மத்துக்கும் கர்மாவினால் அதற்கேற்படும் தோற்றத்துக்கும் வித்தியாஸமில்லை; ஒளி முதலியவற்றிற்போல ; (சுருதி அங்ஙனம்) அடிக்கடி கூறுவதால்.

---

2.21. ஸ வா அயம் புருஷ: ஸர்வாஸு பூர்ஷு புரிஶய: । ப்ரு. 2.5.18.

2.22. த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்சைவாமூர்த்தஞ்ச । ப்ரு. 2.3.1.

ஸ்தூலம் (மூர்த்தம்), ஸூக்ஷ்மம் (அமூர்த்தம்) இவ்விரண்டையும் 'நேதி, நேதி' என்று இருமுறை கூறி மறுக்கிறது. அப்பால் பிரம்மம் 'ஸத்யஸ்ய-ஸத்யம்' என்று பேசுகிறது.

2.23. ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா நான்யைர்-தேவைஸ்-தபஸா கர்மணா வா । மு. 3.1-8.

2.24. கஶ்சித் தீர: ப்ரத்யகாத்மானமைக்ஷ-தாவ்ருத்த-சக்ஷு-ரம்ருதத்வமிச்சன் । கட. 4.1.

ஸர்வபூதஸ்த்தமாத்மானம் ஸர்வபூதானி சாத்மனி । ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்ஶன: ॥ கீ. 6.29.

अतो अनन्तेन, तथा हि लिङ्गम् ॥ २.२६ ॥

उभयव्यपदेशात् तु, अहिकुण्डलवत् ॥ २.२७ ॥

प्रकाशाश्रयवद्वा, तेजस्त्वात् ॥ २.२८ ॥

पूर्ववद्वा ॥ २.२९ ॥

प्रतिषेधाच्च ॥ २.३० ॥

परमतः सेतून्मान-संबन्ध-भेद व्यपदेशेभ्यः ॥ २.३१ ॥

---

2.26. ஆகையால் எல்லையற்ற பரம்பொருளுடன் (ஜீவன் ஒன்றுகிறான்); அங்ஙனமே (சுருதியில்) அடையாளம் (காணப்படுகிறது).

2.27. (பேதமும் அபேதமும்) இரண்டும் உபதேசிக்கப்படுவதால் பாம்பும் அதன் குண்டலமும் போல் (பிரம்மமும் ஜீவனும் எனக் கொள்ளலாம் என்பர்).

2.28. (இரண்டும்) பிரகாசிப்பதால், ஒளிக்கிரணமும் ஒளி மண்டலமும் போலவாவது (என்பர் பேதாபேதவாதிகள்).

2.29. அல்லது (அபேதம் என்று) முன்கூறியவாறு. (இதுவே ஸித்தாந்தம்).

2.30. (நேதி நேதி என்று) விலக்கப்படுவதாலும் (பிரம்மத்தைத் தவிற வேறு ஒன்றும் இல்லை என்பதே முடிவு).

2.31. ஸேது (கரை), அளவு, ஸம்பந்தம், பேதம் முதலியன கூறப்படுவதலால் அதற்கும் (அதாவது பிரம்மத்துக்கும்) மேலாக ஒன்று உண்டு (என ஊகிக்கப்படும் என்பது எதிர்வாதம்).

---

2.25. ஸ ய ஏஷோ அணிமைத-தாத்ம்யமிதꣳ ஸர்வம் தத்-ஸத்யꣳ ஸ ஆத்மா தத்-த்வமஸி ஶ்வேதகேதோ இதி । சா. 6.8.16.

2.26. ஸ யோ ஹ வை தத்பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி । மு. 3.2.9.

2.27. த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா । மு. 3.1.1.

2.30. நான்யோ஽தோ஽ஸ்தி த்ரஷ்டா । ப்ரு. 3.7.23.

2.31. அத ய ஆத்மா ஸ ஸேதுர் வித்ருதி-ரேஷாம் லோகானுமஸம்பேதாய । சா. 8.4.1.

सामान्यात्तु ॥ २.३२ ॥

बुद्ध्यर्थः पादवत् ॥ २.३३ ॥

स्थानविशेषात्, प्रकाशादिवत् २.३४ ॥

उपपत्तेश्च ॥ २.३५ ॥

तथान्यप्रतिषेधात् ॥ २.३६ ॥

अनेन सर्वगतत्वं आयाम-शब्दादिभ्यः ॥ २.३७ ॥

फलमतः, उपपत्तेः ॥ २.३८ ॥

---

2.32. (பிரம்மத்தைப் பற்றி 'ஸேதும் தீர்த்வா' என்றது) ஏனெனில் உவமைக்காக.

2.33. பாதங் கூறப்பட்ட மாதிரி (அளவு கூறியதும்) புத்திக்கு எட்டும் பொருட்டு (உபாஸனைக்காக).

2.34. (ஸம்பந்தம், பேதம் முதலியன) இட வேற்றுமையால் ஏற்பட்டவை; ஒளி முதலியவை (ஒரே ஒளி அறையின் உள் ஒளி, வெளி ஒளி என்று வேறுபடுவது) போல.

2.35. (சுருதிவாக்கியங்களை ஆராய்ந்தறிவதாலும்) யுக்திக்குப் பொருத்தமாயிருத்தலாலும்.

2.36. அவ்வாறே மற்றதெல்லாம் மறுக்கப்பட்டதாலும்.

2.37. இதனால் (பிரம்மம் ஸர்வகதம்) எங்கும் நிறைந்தது என்பது விளங்குகிறது; அதன் பரப்பைப்பற்றிய சுருதிவாக்கியங்களால்.

2.38. (கருமங்களின்) பலன் அவனிடமிருந்தே; யுக்திக்குப் பொருந்தியிருப்பதால்.

---

ததேதத் சதுஷ்பாத் ப்ரஹ்ம । சா. 3.18.2.

தத் யதா ப்ரியயா ஸ்த்ரியா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யங் கிஞ்சன வேத । ப்ரு. 4.3.21.

2.32. தஸ்மாத் வா ஏதஂ ஸேதும் தீர்த்வா । (தீர்த்வா என்றால் தாண்டி என்று அர்த்தமல்ல; நன்கறிந்து என்று பொருள்). சா. 8.4.2.

2.36. ப்ரஹ்மை-வேதம் । மு. 2.2.11

2.37. நித்ய: ஸர்வகத: ஸ்தாணு: । கீ. 2.24.

श्रुतत्वाच्च ॥ २.३९ ॥

धर्मं जैमिनिः, अत एव ॥ २.४० ॥

पूर्वं तु बादरायणः, हेतुव्यपदेशात् ॥ २.४१ ॥

॥ तृतीयः पादः ॥

सर्ववेदान्तप्रत्ययं चोदनाद्यविशेषात् ॥ ३.१ ॥

स्वाध्यायस्य तथात्वेन हि समाचारे अधिकाराच्च सववच्च तन्नियमः ॥ ३.३ ॥

---

2.39. சுருதி கூறுவதாலும்.

2.40. (சுருதி, யுக்தி என்ற) அக்காரணங்களைக் கொண்டே தர்மம் (அபூர்வம் எனப்படுவது கரும பலனைத் தருகிறது) என்று ஜைமினி (கூறுகிறார்).

2.41. ஆனால் பாதராயணரோ முன் கூறியதையே முடிவாகக் கூறுகிறார். (பரமேசுவரனே கரும பலனையளிப்பவன். அவனே கருமம் உட்பட அனைத்துக்கும்) காரணமாய்க் கூறப்பட்டிருப்பதால்.

**அத் 3 : மூன்றாம் பாதம்**

3.1. (வெவ்வேறிடங்களில்) வேதாந்தத்தில் விளக்கப்பட்ட (ஸமான) வித்தைகள் (வெவ்வேறல்ல); கட்டளைகளில் வித்தியாஸமின்மையால்.

3.3. (சிரத்தில் அக்னியைத் தாங்கும் சிரோவ்ரதம் என்பது போன்ற கிரியை வித்தையை வேற்றுமைப்படுத்த மாட்டாது. அது ஸ்வாத்தியாயத்துக்கு ஏற்பட்ட நியமம்; 'ஸமாசாரம்' எனும் நூலில் அங்ஙனமே கூறப்பட்டுள்ளது. அதிகாரத்தாலும் ஏழு ஆஹுதியில் போல அந்த நியமம்.

---

2.39. ஸ வா ஏஷ மஹா-னஜ ஆத்மாऽன்னாதோ வஸுதான: । ப்ரு. 4.4.24.

2.41. யோ யோ யாம் யாம் தனும் பக்த:...லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹி தான் । கீ. 7.21-22.

3.3. நைத-தசீர்ணவ்ரதோऽதீதே । மு. 3.2.11.

दर्शयति च ॥ ३.४ ॥

उपसंहारे अर्थाभेदात् विधिशेषवत् समाने च ॥ ३.५ ॥

अन्यथात्वं शब्दादिति चेत्, न अविशेषात् ॥ ३.६ ॥

न वा, प्रकरण-भेदात् परोवरीयस्त्वादिवत् ॥ ३.७ ॥

संज्ञातश्चेत्, तदुक्तम्, अस्ति तु तदपि ॥ ३.८ ॥

---

3.4. சுருதியும் அதை விளக்குகிறது.

3.5. (வெவ்வேறு சாகைகளில் கூறப்பட்ட ஸமான வித்தைகளில்) ஒரே விதமான உபாஸனைகளில் (வெவ்வேறு சாகைகள் கூறும் விவரங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்); நோக்கத்தில் வேறுபாடின்மையால் ;—(அக்னி ஹோத்ரம் முதலிய) அங்கக்கிரியா விதிகளிற் போல.

3.6. (ஆனால் ஒன்றுபோல் தோன்றினாலும் பிருஹதாரணியகத்திலும் சாந்தோக்கியத்திலும் கூறப்படும் உத்கீதவித்தை வெவ்வேருகக் கருதப்படும்.) சப்த பேதத்தால் வெவ்வேறு எனின், அது ஒவ்வாது, (அவற்றுள் முக்கியமான அம்சங்களில்) வித்தியாசமில்லை (என்பது எதிர்வாதம்).

3.7. அது அப்படியல்ல ; பிரகரண பேதத்தால் உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் உபாசித்தல் (உத்கீதத்தைக் கண்ணில் உபாசித்தல்) முதலியவற்றில் போல.

3.8. பெயர் ஒன்ருயிருக்கிறதே எனின், அது ஏற்கெனவே விளக்கப்பட்டது. (உபாஸனை விஷயம் வேருயின் பெயர் ஒன்ருயினும் வித்தை வேறேயாம்). அதுவுங்கூட இருக்கிறது. (அக்னி ஹோத்ரம், தர்சபூர்ணமாஸம் முதலிய கிரியைகள் காடகம் எனும் பொதுப் பெயரால் வழங்கினும் அவை வெவ்வேருவது போல).

---

3.4. ஸர்வே வேதா யத்பத-மாமனந்தி । கட. 2.15.

3.6. அத ஹேம-மாஸன்யம் ப்ராணமூசுஸ்-த்வம் ந உத்காயேதி ததேதி தேப்ய ஏஷ ப்ராண உதகாயத் । ப்ரு. 1.3.7.

அத ஹ ய ஏவாயம் முக்ய: ப்ராணஸ்-தமுத்கீத-முபாஸாஞ்சக்ரிரே । சா. 1.2.7.

3.7. ஓமித்யேத-தக்ஷரமுத்கீத-முபாஸீத । சா. 1.1.1.
தே ஹ வாசமூசுஸ்த்வம் ந உத்காயேதி । ப்ரு. 1.3.2.

3.8. சா. 1.1.6 ; சா. 1.9.2. (உத்கீத உபாஸனை).

आनन्दादयः प्रधानस्य ॥ ३.११ ॥

प्रियशिरस्त्वाद्यप्राप्तिः उपचयापचयौ हि भेदे ॥ ३.१२ ॥

इतरे तु अर्थसामान्यात् ॥ ३.१३ ॥

आध्यानाय, प्रयोजनाभावात् ॥ ३.१४ ॥

आत्मशब्दाच्च ॥ ३.१५ ॥

---

3.11. பிரம்மத்தின் ஆனந்தம் முதலிய லக்ஷணங்கள் (வெவ்வேறிடத்தில் கூறப்பட்டவை உபாஸனையில் கூட்டிக்கொள்ளப்பட வேண்டும்).

3.12. பிரியம் தலை (மோதம் வலப்பக்கம், ப்ரமோதம் இடப்பக்கம்) முதலிய லக்ஷணங்களை எல்லா இடத்திலும் சேர்க்கக்கூடாது; (ஆனந்தத்தில்) ஏற்றக் குறைவு பேதமுள்ள இடத்தில்தான் பொருந்தும்.

3.13. (அனந்தம், ஆனந்தம் முதலிய) இதர லக்ஷணங்கள் (கூட்டிக்கொள்ளப்பட வேண்டும் ; அவற்றின்) குறிப்பு ஒன்றேயாதலால்.

3.14. ('இந்த்ரியேப்ப்ய: பராஹ்யர்த்தா' என்ற மந்திரத்தில் கூறிய விஷயம் பிரம்மத்தை) தியானிப்பதற்காகவே ; (இந்திரியங்கள் முதலியவற்றின் தராதரத்தை விளக்கும் வேறு) பிரயோஜனம் இல்லாததால்.

3.15. ஆத்ம சப்தத்தாலும்.

---

3.14. இந்த்ரியேப்ப்ய: பராஹ்யர்த்தா அர்த்தேப்ப்யஶ்ச பரம் மன:... புருஷாந் ந பரங் கிஞ்சித் ஸா காஷ்ட்டா ஸா பராகதி: । கட. 3.10-11.

3.15. ஏஷ ஸர்வேஷு பூதேஷு கூடோத்மா ந ப்ரகாஶதே । கட. 3.12.

आत्मगृहीतिः इतरवत्, उत्तरात् ॥ ३.१६ ॥
अन्वयादिति चेत्, स्यात् अवधारणात् ॥ ३.१७ ॥
कार्याख्यानादपूर्वम् ॥ ३.१८ ॥
सांपराये तर्तव्याभावात्, तथा हि अन्ये ॥ ३.२७ ॥

---

3.16. ('ஆத்மா வா இத-மேக ஏவாக்ர ஆஸீத்' எனும் மந்திரத்தில் குறிப்பிட்டது) பரமாத்மா எனக் கொள்ளவேண்டும்; மற்ற வாக்கியங்களில் போல; மேலே கூறப்படும் லக்ஷணத்தால்.

3.17. அன்வயத்தால் (அவ்விடத்தில் பொருத்தத்தால், ஹிரண்யகர்ப்பன் குறிக்கப்படுகிறான், பரமாத்மா அன்று) எனின், பரமாத்மா தான் என்போம்; (ஆத்மா ஒன்றே ஆதியில் இருந்ததென்று) தெளிவுறக் கூறப்படுதலால்.

3.18. (பிராண வித்தையில் ஆபோசனம் எனும்) காரியம் ஏற்கெனவே கூறப்பட்டிருப்பதால், முன் கூறப்படாததே (உபாஸனை மட்டுமே) இங்கு கூறப்பட்டதாகும்.

3.27. (ஞானிக்கு) அடைய வேண்டியது ஒன்றும் இல்லாததால், மரண காலத்தில் (புண்ணியங்களையும் பாவங்களையும் விட்டுவிடுகிறான்); வேறு சுருதிகளும் அங்ஙனமே கூறுகின்றன.

---

3.16. ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் । ஐ. 1.1.

ஆத்மன ஆகாஶ: ஸம்பூத: । தை. 2.1.

ஸ ஈக்ஷத லோகான்னு ஸ்ருஜா இதி । ஸ இமான் லோகா-னஸ்ருஜத । ஐ. 1.1-2.

3.18. ஸ ஹோவாச கிம் மே வாஸோ பவிஷ்யதீத்யாப இதி ஹோசுஸ்-தஸ்மாத்வா ஏததஶிஷ்யந்த: புரஸ்தாச்சோபரிஷ்டாச் சாத்பி: பரிதததி । சா. 5.2.2.

தத் வித்வாம்ஸ: ஶ்ரோத்ரியா அஶிஷ்யந்த ஆசாமந்த்-யஶித்வாசாமந்த்யேதமேவ ததன்னமனக்னங் குர்வந்தோ மன்யந்தே । ப்ரு. 6.1.14.

3.27. அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம் । சா. 8.13.1.

गतेरर्थवत्वं उभयथा, अन्यथा हि विरोधः ॥ ३.२९ ॥

उपपन्नः तल्लक्षणार्थोपलब्धेः लोकवत् ॥ ३.३० ॥

अनियमः सर्वासाम्, अविरोधः शब्दानुमानाभ्याम् ॥ ३.३१ ॥

यावदधिकारं अवस्थितिः आधिकारिकाणाम् ॥ ३.३२ ॥

इयदामननात् ॥ ३.३४ ॥

---

3.29. (தேவயானத்தில்) செல்லுதல் அர்த்தமுடையது இரு வேறு வகையில் (ஸகுண உபாஸகர் அதில் செல்லுவர்; நிர்க்குண உபாஸகர் செல்லமாட்டார்); இல்லையெனின் முரண்படும்.

3.30. (மேற்கூறியது) யுக்திக்குப் பொருந்தும்; அதற்குரிய லக்ஷணங்கள் காணப்படுவதால்; உலகத்தில் உள்ளவாறு; (ஒரு கிராமத்துக்குப் போக ஒரு பாதையில் பயணம் செல்லவேண்டும்; வியாதியிலிருந்து விடுபடப் பயணம் செல்ல வேண்டியதில்லை).

3.31. (தேவயானத்தில் செல்லுதல், ஸகுண உபாஸனை) எல்லாவற்றிற்கும் பொது; அதில் நியமமில்லை; சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமில்லாததால்.

3.32. அதிகாரத்துடன் அவதரித்தவர்களுக்கு அதிகாரம் உள்ள வரை (உடலில்) இருப்பு உண்டு.

3.34. ('ருதம்பிபந்தௌ' எனும் மந்திரத்திலும், 'த்வாஸுபர்ணௌ' எனும் மந்திரத்திலும் ஒரே பொருள்) இவ்வண்ணம் என வர்ணிக்கப்பட்டிருப்பதால் (இரண்டும் ஒரே வித்தை).

---

3.29. ததா வித்வான் புண்ய-பாபே விதூய நிரஞ்ஜன: பரமம் ஸாம்யமுபைதி । மு. 3.1.3. (நிர்க்குண உபாஸகராகிய இவருக்குப் போக்குவரவு இல்லை).

3.31. தத்ய இத்தம் விதுர்-யேசேமேऽரண்யே ஶ்ரத்தா தப இத்யுபாஸதே தேऽர்ச்சிஷ-மபிஸம்பவந்தி । சா. 5.10.1.

3.34. த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா । மு. 3.1.1.

ருதம்பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே । கட. 3.1.

अन्तरा भूतग्रामवत् स्वात्मनः ॥ ३.३५ ॥

अन्यथा भेदानुपपत्तिरिति चेत्, न, उपदेशान्तरवत् ॥ ३.३६ ॥

व्यतिहारः, विशिंषन्ति हि इतरवत् ॥ ३.३७ ॥

सैव हि सत्यादयः ॥ ३.३८ ॥

---

3.35. 'அந்தரா' எனக் கூறியவிடங்களில் (ஒரே வித்தையாக) ஒரே ஆத்மா தான் உபதேசிக்கப்பட்டது; பஞ்சபூதக் கூட்டமாகிய சரீரத்தில் போல.

3.36. வெவ்வேறு வித்தை எனக் கொள்ளாவிட்டால் வெவ்வேறாகக் கூறியது பொருந்தாதெனின், அது ஒவ்வாது; வேறு இடத்தில் (சாந்தோக்கியத்தில்) உபதேசத்தைப் போல (என்பதைக் கவனிக்க).

3.37. (தன்னைப் பிரம்மமாக உபாசிப்பது போலவே, பிரம்மத்தைத் தானாக உபாசித்தல்) வ்யதிஹாரம்; இதைச் சுருதி கட்டளையிடுகிறது. மற்ற இடங்களில் போல.

3.38. (இரண்டு இடங்களிலும்) ஸத்தியம் முதலிய குணங்கள் கூறப்படுதலால் (ஸத்திய வித்தை) ஒன்றே.

---

3.35. யத் ஸாக்ஷா-தபரோக்ஷாத் ப்ரஹ்ம ய ஆத்மா ஸர்வாந்தரஸ்-தம் மே வ்யாசக்ஷ்வ இதி । ப்ரு. 3.4.1.

யோऽशனாயாபிபாஸே ஶோகம் மோஹஞ் ஜராம் ம்ருத்யு-மத்யேதி । ப்ரு. 3.5.1.

3.38. ஏதம் மஹத்யக்ஷம் ப்ரதமஜம் வேத ஸத்யம் ப்ரஹ்மேதி ஜயதீ-மா'லோகான் । ப்ரு. 5.4.1.

தத்-யத்-ஸத்ய-மஸௌ ஆதித்யோ ய ஏஷ ஏதஸ்மின் மண்டலே புருஷோ யஶ்சாயந் தக்ஷிணேऽக்ஷன்புருஷஸ்-தா-வேதா-வன்யோன்யஸ்மின் ப்ரதிஷ்ட்டிதௌ । ப்ரு. 5.5.2.

कामादीतरत्र तत्र च, आयतनादिभ्यः ॥ ३.३९ ॥

विकल्पः, अविशिष्ट-फलत्वात् ॥ ३.५९ ॥

काम्यास्तु यथाकामं समुच्चीयेरन्न वा, पूर्वहेत्वभावात् ॥ ३.६० ॥

---

3.39. (தஹர வித்தையில் சாந்தோக்கியத்தில் கூறப்பட்ட) ஸத்யகாமம் முதலிய லக்ஷணங்களை (பிருஹதாரணியகத்தில்) வேறு இடத்திலும், அங்குள்ளதை இங்கும் (சேர்த்துக் கொள்ள வேண்டும்); இடம் முதலியன ஒன்ருயிருப்பதால் (இரண்டும் ஒரே வித்தை).

3.59. (பிரம்ம வித்தையில்) பயன் ஒன்றேயாதலால், இச்சைப் படி (ஒரே வித்தையைப் பற்றுக).

3.60. காமிய உபாஸனையிலோவெனின் இச்சைப்படி (பல வித்தைகளைக்) கூட்டிக்கொள்ளவோ குறைக்கவோ செய்யலாம்; முன் கூறிய காரணமின்மையால்.

---

3.39. அத யதிதமஸ்மின் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஶ்ம । சா. 8.1.1.

ஸ வா ஏஷ மஹா-னஜ ஆத்மா யோயம் விஜ்ஞானமய: ப்ராணேஷு ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶஸ்-தஸ்மின்ஶேதே ஸர்வஸ்யவஶீ ஸர்வஸ்யேஶான: ஸர்வஸ்யாதிபதி: । ப்ரு. 4.4.22.

3.60. ஸ த ஏதமேவம் வாயுந் திஶாம் வத்ஸம் வேத ந புத்ரரோதஂ ரோதிதி । சா. 3.15.2.

ஸ யோ நாமப்ரஹ்மேத்யுபாஸ்தே யாவந் நாம்னோ கதம் தத்ராஸ்ய யதா காமசாரோ பவதி யோ நாமப்ரஹ்மேத்யுபாஸ்தேऽஸ்தி பகவோ நாம்னோ பூய இதி । சா. 7.1.5.

## ॥ चतुर्थः पादः ॥

पुरुषार्थोऽतः शब्दादिति बादरायणः ॥ ४.१ ॥

शेषत्वात्पुरुषार्थवादो यथाऽन्येषु इति जैमिनिः ॥ ४.२ ॥

आचार-दर्शनात् ॥ ४.३ ॥

तच्छ्रुतेः ॥ ४.४ ॥

---

### அத். 3: நாலாம் பாதம்

4.1. இதினின்று (பிரம்மஞானத்தினின்று) புருஷார்த்தம் (மனித வாழ்க்கையின் பயன் எய்தப்படும்); சுருதி அங்ஙனங் கூறுவதால் என்கிறார் பாதராயணர்.

4.2. மற்ற இடங்களில் உள்ள அர்த்தவாதத்தைப் போலப் புருஷனை (கர்த்தாவைத்) துதிப்பதற்காகவே அங்ஙனம் கூறப் பட்டது; (ஞானம் கருமத்திற்கு) அங்கமேயாதலால் என்று ஜைமினி கூறுகிறார்.

4.3. (ஜனகர், அசுவபதி முதலியோர் ஞானம் பெற்ற பின்னும் கர்மத்தைச் செய்தனர் என்ற) ஆசார தர்சனத்தால்.

4.4. சுருதிகளாலும்.

---

4.1. தரதி ஶோக-மாத்ம விதிதி । சா. 7.1.3.

ஸ யோ ஹ வை தத் பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி । மு. 3.2.9.

ப்ரஹ்மவிதாப்னோதி பரம் । தை. 2.1.

4.3. ஜனகோ ஹ வைதேஹோ பஹுதக்ஷிணேன யஜ்ஞே-னேஜே । ப்ரு. 3.1.1.

தான் ஹோவாசாஶ்வபதிர்-வை பகவந்தோயங் கைகய: ஸம்ப்ரதீம-மாத்மானம் வைஶ்வானர-மத்த்யேதி, த஁ஹந்தாப்ப்யாகச்சாமேதி, த஁ஹாப்-ப்யாஜக்மு: । தேப்ப்யோஹ ப்ராப்தேப்ப்ய: ப்ருதகர்ஹாணி காரயாஞ்சகார ஸ ஹ ப்ராத: ஸஞ்ஜிஹான உவாச நமே ஸ்தேனோ ஜனபதே, ந கதர்யோ, ந மத்யபோ, ந அனாஹிதாக்னி:, நாவித்வான் ந ஸ்வைரீ ஸ்வைரிணீ குதோ யக்ஷ்யமாணோ வை பகவந்தோ஽ஹமஸ்மி । சா. 5.11.4-5.

4.4. யதேவ வித்யயா கரோதி ஶ்ரத்தயோபநிஷதா ததேவ வீர்யவத்த-ரம் பவதீதி । சா. 1.1.10.

नियमाच्च ॥ ४.७ ॥
अधिकोपदेशात्तु बादरायणस्यैवम्, तद्दर्शनात् ॥ ४.८ ॥
तुल्यं तु दर्शनम् ॥ ४.९ ॥
अध्ययनमात्रवत: ॥ ४.१२ ॥
न, अविशेषात् ॥ ४.१३ ॥
कामकारेण च.एके ॥ ४.१५ ॥

---

4.7. (ஞானத்துடன் கருமஞ் செய்யப்பட வேண்டும் என்ற) நியமத்தாலும் (இது வரை பூர்வமீமாம்ஸகர் எதிர் வாதம்.)

4.8. (கர்த்தாவுக்கும்) அதீசுவரனுகை (பரமாத்மா) உபதேசிக்கப் பட்டிருப்பதால், பாதராயணயருடைய கொள்கையே பொருத்தம்; சுருதி அங்ஙனம் காட்டுவதால்.

4.9. (ஆசார) தர்சனம் (இரண்டு பக்ஷத்திலும், ஞானிகள் கர்மம் செய்தலிலும் செய்யாமையிலும்) ஸமமாயிருக்கிறது.

4.12. வேதத்தை அத்தியயனம் செய்தவர்களுக்கு மட்டுந் தான் (யாகாதிகள் கூறப்பட்டன; உபநிஷத்தால் ஞானம் பிறந்தவர் களுக்கன்று).

4.13. (கருமஞ்செய்துகொண்டு நூறுண்டு வாழ வேண்டும் என்று பொதுவாய்ச் சொன்னதால்) அது ஞானியைக் கட்டுப் படுத்தாது; அவனைப் பற்றிக் குறிப்பாக ஒன்றுஞ் சொல்லவில்லை.

4.15. இஷ்டப்படி சிலர் (ஞானம் பெற்றபின் கருமஞ் செய்யாமலிருக்கலாம், சிலர் செய்யவுஞ் செய்யலாம்).

---

4.7. குர்வன்னேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச் சதஸ்ஸமா: । ஈச. 2.

4.8. ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்யஜ்ஞானமயந்தப: । மு. 1.1.9.
ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸனே கார்க்கி । ப்ரு. 3.8.9.

4.9. ஏதம் வை தமாத்மானம் விதித்வா ப்ராஹ்மண: புத்ரைஷணா யாச்ச வித்தைஷணாயாச்ச லோகைஷணாயாச்ச வ்யுத்தாயாத பிக்ஷாசர்யஞ் சரந்தி । ப்ரு. 3.5.1.

ஏதாவதரே கல்வம்ருதத்வமிதி ஹோக்த்வா யாஜ்ஞவல்க்யோ விஜஹார । ப்ரு. 4.5.5.

उपमर्दं च ॥ ४.१६ ॥

ऊर्ध्वरेतःसु च, शब्दे हि ॥ ४.१७ ॥

परामर्शं जैमिनिः अचोदना च, अपवदति हि ॥ ४.१८ ॥

अनुष्ठेयं बादरायणः, साम्यश्रुतेः ॥ ४.१९ ॥

अत एव चाग्नीन्धना-द्यनपेक्षा ॥ ४.२५ ॥

---

4.16. (ஞானம் பிறந்தபின் கர்மத்திற்கு அதிகார) நாசம் கூறப்படுகிறது.

4.17. (ஊர்த்வரேதசுகளாக) பிரம்மசரியத்தில் நிலை பெற்ற வர்களுக்கு (அதாவது ஸந்நியாஸிகளுக்கு—ஞானமார்க்கம் கூறப் பட்டது); சுருதியில் (இந்த நாலாவது ஆசிரமம்) கூறப்பட் டுள்ளது.

4.18. (ஸந்நியாஸத்தைப்பற்றி) விளக்கம் ஏற்பட்டதேயன்றி கட்டளை இல்லை; (வேறு வாக்கியங்களில் ஸந்நியாஸத்துக்கு) அபவாதம் கூறப்படுகிறது என்பது ஜைமினியின் அபிப்பிராயம்.

4.19. (ஸந்நியாஸம்) அனுஷ்டிக்க வேண்டியது; (நான்கு ஆசிரமங்களையும்) ஒரே மாதிரி சுருதி கூறுவதால் என்பது பாதராயணர் அபிப்பிராயம்.

4.25. ஆகையால் (வேள்விக்காக) அக்னி மூட்ட வேண்டிய அவசியம் (ஸந்நியாஸிக்கு) இல்லை.

---

4.16. யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத் கேன கம் பஶ்யேத்— ப்ரு. 4.5.15.

4.17. த்ரயோ தர்மஸ்கந்தா யஜ்ஞோऽத்யயனந் தான-மிதி...ஸர்வ ஏதே புண்யலோகா பவந்தி ப்ரஹ்ம ஸꣳஸ்தோऽம்ருதத்வமேதி। சா. 2.23.1-2.

ஏதமேவ ப்ரவ்ராஜிநோ லோக-மிச்சந்த: ப்ரவ்ரஜந்தி। ப்ரு. 4.4.22. மு. 1.2.11.

4.18. ஆசார்யாய ப்ரியந்தன-மாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவச்- சேத்ஸீ:। தை. 1.11.

शमदमाद्युपेतः स्यात्तथाऽपि तु, तद्विधेस्तदङ्गतया तेषां अवश्यानुष्ठेयत्वात् ॥ ४.२७ ॥

सर्वान्नानुमतिश्च प्राणात्यये, तद्दर्शनात् ॥ ४.२८ ॥

अबाधाच्च ॥ ४.२९ ॥

शब्दश्चातोऽकामकारे ॥ ४.३१ ॥

विहितत्वाच्चाश्रम-कर्मापि ॥ ४.३२ ॥

सहकारित्वेन च ॥ ४.३३ ॥

---

4.27. எனினும், சமம், தமம் முதலியவற்றுடன் கூடியவனுயிருக்க வேண்டும்; ஞானத்துக்கு அங்கமாக அவசியம் அவை அனுஷ்டிக்கப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருப்பதால்.

4.28. உயிருக்கு ஆபத்து நேரிட்டபோது தான், எந்த அன்னத்தையும் ஏற்க அனுமதியுண்டு; அதைச் சுருதி கூறுவதால்.

4.29. (ஆஹாரசுத்தௌ ஸத்வசுத்தி: எனும்) சுருதிக்கு முரண்படாமலிருக்கவும்.

4.31. மனம் போனபடி நடக்கக்கூடாதென்று அதனால் தான் சுருதி கூறுகிறது.

4.32. விதிக்கப்பட்டிருப்பதால் (அந்தந்த ஆசிரமிகளால் அந்தந்த) ஆசிரம கர்மங்கள் (ஞானத்தில் இச்சையில்லாதவர்களாலுங்கூடச்) செய்யப்படவேண்டும்.

4.33. (ஞானத்தை விரும்புபவர்களால் ஞானத்திற்குச்) சாதனமாகவும் செய்யப்படவேண்டும்.

---

4.27. தஸ்மா-தேவம்விச்-சாந்தோ, தாந்த, உபரதஸ்-திதிக்ஷு:, ஸமாஹிதோ பூத்வாऽத்மன்யேவாத்மானம் பஶ்யதி। ப்ரு. 4.4.23.

4.28. ஏவம் விதி கிஞ்சன அனன்னம் பவதீதி। சா. 5.2.1.

4.29. ஆஹாரசுத்தௌ ஸத்வசுத்தி:। சா. 7.26.2.

सर्वथापि त एव, उभयलिङ्गात् ॥ ४.३४ ॥
अनभिभवं च दर्शयति ॥ ४.३५ ॥
अन्तरा चापि तु तद्दृष्टेः ॥ ४.३६ ॥
अपि च स्मर्यते ॥ ४.३७ ॥
विशेषानुग्रहश्च ॥ ४.३८ ॥
अतस्त्वितरत् ज्यायो, लिङ्गाच्च ॥ ४.३९ ॥

---

4.34. (ஞானத்துக்குச் சாதன மென்றோ, ஆசிரமக் கடமை யென்றோ) எவ்வகையிலும் அக்கருமங்கள் (அனுஷ்டிக்கப்பட வேண்டும்); இரண்டு லக்ஷணங்களுங் காணப்படுவதால்.

4.35. (பிரம்மசரியம் அனுஷ்டிப்பவனை காமக்குரோதாதிகள்) அடிமைப்படுத்தாததையும் காட்டுகிறது.

4.36. (மனைவியிழந்தவர் போன்று இரண்டு ஆசிரமங்களுக்கு) இடையில் நிற்பவர்களுக்கும் (ஞானத்துக்கு அதிகாரமுண்டு); அது காணப்படுவதால்.

4.37. ஸ்மிருதியும் அதைக் கூறுகிறது.

4.38. (உபவாஸம், ஜபம், பிரார்த்தனை முதலிய) விசேஷ கர்மாக்களின் அனுக்கிரஹத்தாலும் (ஆசிரமங்களுக்கு இடையிலுள்ளவர்கள் ஞானத்தைப் பெறலாம்).

4.39. ஆனால் இதைவிட மற்றது (எதாவதொரு ஆசிரமத்தில் இருத்தல்) சிறந்தது; (சுருதிஸ்மிருதிகளில் காணும்) அடையாளங்களாலும்.

---

4.34. தமேவம் வேதானுவசனேன ப்ராஹ்மணா விவிதிஷந்தி, யஜ்ஞேன தானேன தபஸாऽநாசகேன । ப்ரு. 4.4.22.

அனாச்ரித: கர்மபலங் கார்யங் கர்ம கரோதி ய: । கீ. 6.1.

4.35. ஏஷ ஹ்யாத்மா ந நச்யதி யம் ப்ரஹ்மசர்யேணானுவிந்ததே । சா. 8.5.3.

4.36. உ-ம். ரைக்வர், கார்க்கி. சா. 4.1. ப்ரு. 3.6; 3.8.

4.39. ப்ரு. 4.4.22.

तद्भूतस्य तु नातद्भावः, जैमिनेरपि, नियमातद्रूपाभावेभ्यः ॥ ४.४० ॥

बहिस्तूभयथापि, स्मृतेः आचाराच्च ॥ ४.४३ ॥

सहकार्यन्तरविधिः पक्षेण तृतीयं तद्वतः विध्यादिवत् ॥ ४.४७ ॥

कृत्स्न-भावात्तु गृहिणोपसंहारः ॥ ४.४८ ॥

मौनवदितरेषा-मप्युपदेशात् ॥ ४.४९ ॥

---

4.40. அதை (ஸந்நியாஸ ஆசிரமத்தை) அடைந்தவனுக்கு அதினின்று நழுவுதல் (கீழ் ஆசிரமத்துக்கு வருதல்) கூடாது; நழுவுதலைத் தடுக்கும் நியமம் இருப்பதால்; ஜைமினியின் அபிப்பிராயமும் அதுவே.

4.43. (இதற்குப் பிராயச்சித்தம் உண்டு என்றும் இல்லை என்றும் அபிப்பிராய பேதம் உளதெனினும்) இருவகையிலும் (ஸந்நியாஸத்தினின்று நழுவியவர்) பஹிஷ்கரிக்கத் தக்கவரே; ஸ்மிருதியாலும் ஆசாரத்தாலும்.

4.47. (ஞானத்தைப் பின்பற்றியவனுக்கு பாண்டித்யம், பாலஸ்வபாவம் இரண்டுக்கும் அப்பால்) மூன்றுவதாக (மௌனம்) இடைவிடாத தியானமாகிய இன்னொரு ஸாதனமும் (ஞானத்துக்கு) அங்கமாக விதிக்கப்பட்டுள்ளது; மற்ற விதிகளைப் போல (இதுவும் முக்கியமான விதி).

4.48. (கிருஹஸ்தாசிரமம்) மற்ற எல்லா ஆசிரமங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதால், (சாந்தோக்கிய உபநிஷத்து) கிருஹஸ்தனுடைய கடமைகளைக் கூறுவதுடன் உபஸம்ஹாரம் (முடிவு) செய்யப்படுகிறது.

4.49. முனித்தன்மை (ஸந்நியாஸம்) போலவே (பிரம்மசரியம், வானப்பிரஸ்தம் ஆகிய மற்ற ஆசிரமங்களின் அனுஷ்டானமும் (அவசியம்); சுருதி உபதேசிப்பதால்.

---

4.47. தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய, பால்யேன திஷ்ட்டாஸேத், பால்யஞ்ச பாண்டித்யஞ்ச நிர்வித்யாத முனி: । ப்ரு. 3.5.1.

अनाविष्कुर्वन्नन्वयात् ॥ ४.५० ॥

ऐहिकमप्यप्रस्तुत-प्रतिबन्धे, तद्दर्शनात् ॥ ४.५१ ॥

एवं मुक्तिफलानियमः, तदवस्थावधृतेः तदवस्थावधृतेः।
॥ ४.५२ ॥

---

4.50. (அஹங்காரமில்லாமல், காமக்குரோதாதிகளின்) ஆக்கிரமமில்லாமல் இருத்தலே (பாலஸ்வபாவம்); இக்கருத்தே அவ்விடத்தில் பொருத்தமாதலால் (குழந்தையைப்போல் சுத்தம் அசுத்தம், நன்மை தீமை அறியாமலிருத்தல் அன்று).

4.51. இங்கேயே (இந்த ஜன்மத்திலேயே) ஸாதனத்துக்குள்ள பிரதிபந்த நீக்கம் ஏற்பட்டதும் (ஞானோதயம் ஏற்படக்கூடும்; பிரதிபந்தமிருந்தால் அடுத்த ஜன்மத்தில் ஏற்படலாம்) அங்ஙனம் காணப்படுவதால்.

4.52. இங்ஙனம் (ஞானோதயத்திற்குப் போல்) முக்தியாகிய பலத்திற்கு நியமம் இல்லை. (ஞானோதயம் ஏற்பட்டதும் முக்தி சித்திக்கிறது). அந்நிலை அங்ஙனம் என்று சுருதி உறுதி கூறுவதால், அந்நிலை அங்ஙனம் என்று சுருதி கூறுவதால்.

---

4.51. இஹைவ தைர்-ஜித: ஸர்க்கோ யேஷாம் ஸாம்யே ஸ்த்திதம் மன: கீ. 5.19.

அநேக ஜன்ம ஸம்ஸித்தஸ்-ததோ யாதி பராங்கதிம் । கீ. 6.45.

4.52. ஸ யோ ஹ வை தத்பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி। மு. 3.2.9.

## ॥ चतुर्थोऽध्यायः ॥

### ॥ प्रथमः पादः ॥

आवृत्तिः असकृत् उपदेशात् ॥ १.१ ॥

लिङ्गाच्च ॥ १.२ ॥

आत्मेति तूपगच्छन्ति, ग्राहयन्ति च ॥ १.३ ॥

---

## நாலாவது அத்தியாயம்

### (பலம்)

### முதல் பாதம்

**1.1. (சிரவண-மனன-நிதித்தியாஸனத்தின்) ஆவிருத்தி (இடைவிடாத அப்பியாசம்) அவசியம்; பல தடவை உபதேசத்தால்.**

**1.2. அடையாளத்தாலும்.**

**1.3. (பிரம்மமே) ஆத்மா என்று (சுருதிகள்) தீர்மானிப்பதுடன் (அங்ஙனம் அனுபவித்தறியும்படி) உபதேசிக்கவுஞ் செய்கின்றன.**

---

1.1. ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்-யாஸிதவ்ய: । ப்ரு 2.4.5.

தமேவ தீரோ விஜ்ஞாய ப்ரஜ்ஞாங் குர்வீத ப்ராஹ்மண: । நானுத்த்யாயாத் பஹூன் ஶப்தான் வாசோ விக்லாபனம் ஹி ததிதி ॥ ப்ரு. 4.4.21.

1.2. கௌஷீதகி: புத்ரமுவாச ரஶ்மீம் ஸ்த்வம் பர்யாவர்த்தயாத் பஹவோ வை தே பவிஷ்யந்தீதி । சா. 1.5.2.

' தத்-த்வ-மஸி ' முதலிய மஹா வாக்கியங்களின் ஆவிருத்தியும் அடையாளம்.

1.3. ப்ரஹ்ம வா இதமக்ர ஆஸீத் ததாத்மான-மேவாவேதஹம் ப்ரஹ்மாஸ்மீதி । ப்ரு. 1.4.10.

न प्रतीके, न हि सः ॥ १.४ ॥

ब्रह्मदृष्टिः, उत्कर्षात् ॥ १.५ ॥

आसीनः, संभवात् ॥ १.७ ॥

ध्यानाच्च ॥ १.८ ॥

अचलत्वं चापेक्ष्य ॥ १.९ ॥

स्मरन्ति च ॥ १.१० ॥

यत्रैकाग्रता तत्र अविशेषात् ॥ १.११ ॥

---

1.4. (உபாஸிப்பது, பிரம்மத்தை) பிரதீகத்தில் அல்ல; அது பிரம்மம் அன்று.

1.5. (பிரதீகத்தை) பிரம்ம திருஷ்டியுடன் பார்க்கவேண்டும்; (அதனால் பிரதீகம்) உயர்த்தப்படுவதால். (பிரம்மத்தைத் தாழ்த்தாமல் பிரதீகத்தை உயர்த்தவேண்டும்).

1.7. (உபாஸனை) உட்கார்ந்துகொண்டு பழகவேண்டும்; அங்ஙனந்தான் கூடுமாதலால்.

1.8. தியானமும் (அங்ஙனமே) ஆதலால்.

1.9. (மலைகள் தியானம் செய்வதுபோல் என்றதால்) அசையாமையை அபேக்ஷித்தும் (அசைந்து கொண்டோ நடந்து கொண்டோ உபாஸனை பொருந்தாது).

1.10. ஸ்மிருதிகளும் அவ்வாறே கூறுகின்றன.

1.11. எங்கே (ஏகாக்ரதை ஏற்படுகின்றதோ) மனங்குவிகின்றதோ, அங்கே (பழகுக); (இடத்தைப் பற்றி) வேறு நியமம் இல்லை.

---

1.4. மனோ ப்ரஹ்மேத்-யுபாஸீத | ப்ரு. 3.18.1.

1.10. ஶுசௌ தேஶே ப்ரதிஷ்ட்டாப்ய ஸ்திர-மாஸன-மாத்மன: | கீ. 6.11.

आप्रायणात्, तत्रापि हि दृष्टम् ॥ १.१२ ॥

तदधिगम उत्तरपूर्वाघयोः अश्लेषविनाशौ, तद्-व्यपदेशात् ॥ १.१३ ॥

इतरस्याप्येवं असंश्लेषः, पाते तु ॥ १.१४ ॥

अनारब्धकार्ये एव तु पूर्वे, तदवधेः ॥ १.१५ ॥

---

1.12. மரணம் வரை (அங்ஙனமே பழகுக); அங்கும் (மரண காலத்திலுங்) கூட தியானம் கூறப்படுவதைக் காண்பதால்.

1.13. அதை (பிரம்மத்தை) அடைந்து விட்டால் பிந்தியதும் முந்தியதுமான பாவங்களின் பற்றின்மையும் நாசமும் முறையே ஏற்படுகிறது; அங்ஙனம் சுருதி கூறுவதால்.

1.14. அவ்வாறே மற்றதின் (புண்ணியத்தின்) பற்றின்மை யும் (ஏற்படுகிறது); சரீரம் வீழ்ந்ததும் (விதேஹ முக்தி ஸித்திக் கிறது).

1.15. முந்திய கர்மங்களில் பிராரப்த கர்ம மல்லாதவையே (அதாவது ஸஞ்சித கர்மங்களே ஞானத்தால் நாசமடைகின்றன); (பிராரப்தத்தின் வேகமோ எனின்) மரணத்தை எல்லையாயுடைய தெனச் சுருதி கூறுவதால்.

---

1.12. யம் யம் வாபி ஸ்மரன் பாவம் । கீ. 8.6.

1.13. தத்யதேஷீகாதூல-மக்னௌ ப்ரோதம் ப்ரதூயேத, ஏவꣳ ஹாஸ்ய ஸர்வே பாப்மான: ப்ரதூயந்தே, ய ஏததேவம் வித்வா-னக்னி-ஹோத்ரஞ் ஜுஹோதி । சா. 5.24.3.

பித்யதே ஹ்ருதயக்ரந்திஶ்ச்சித்யந்தே ஸர்வ ஸம்ஶயா: । க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் த்ருஷ்டே பராவரே ॥ மு. 2.2.8.

யதா புஷ்கரபலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யந்த ஏவ-மேவம்விதி பாபங் கர்ம ந ஶ்லிஷ்யத இதி । சா. 4.14.3.

1.14. அத: பாபமகரவ-மித்யத: கல்யாண-மகரவமித்யுபே உ ஹை வைஷ ஏதே தரதி நைனங் க்ருதாக்ருதே தபத: । ப்ரு 4.4.22.

1.15. ஆசார்யவான் புருஷோ வேத தஸ்ய தாவதேவ சிரம் யாவந் ந விமோக்ஷ்யே஽த ஸம்பத்ஸ்ய இதி । சா. 6.14.2.

अग्निहोत्रादि तु तत्कार्यायैव, तद्दर्शनात् ॥ १.१६ ॥

अतोऽन्यापि ह्येकेषामुभयोः १.१७ ॥

यदेव विद्ययेति हि ॥ १.१८ ॥

भोगेन त्वितरे क्षपयित्वा संपद्यते ॥ १.१९ ॥

## ॥ द्वितीयः पादः ॥

वाङ्मनसि, दर्शनात् शब्दाच्च ॥ २.१ ॥

अत एव च सर्वाण्यनु ॥ २.२ ॥

---

1.16. அக்னி ஹோத்ரம் முதலிய நித்ய கர்மங்களின் பலனோவெனின் (ஞானோதயத்தில் நாசமடைவதில்லை); ஞானத்தின் பலனாகிய முக்திக்கே உதவுகிறது ; அங்ஙனம் சுருதியில் காண்பதால்.

1.17. இதினின்று (நித்ய கர்மாவினின்று) வேறான (காமிய) கர்மங்களைப் பற்றியுஞ் சில சாகைகள் பேசியுள்ளன. (ஆனால் அவை ஞான சாதனமல்ல வென்பதே ஜைமினி, பாதராயணர்) இருவருடைய கொள்கையும்.

1.18. 'எது வித்தையுடனேயோ' என்றதால் (அங்ஙனம் கூடாமல் செய்த நித்ய கர்மமும் வித்தையுடன் செய்ததைப் போல் வீரிய முடையதல்லாவிட்டாலும் வீணல்ல என்பது அபிப்பிராயம்).

1.19. (பிராரப்த) புண்ணிய பாவங்களை அனுபவித்துத் தீர்த்து (பிரம்மத்துடன்) ஒன்றுபடுகிறான்.

### அத். 4 : இரண்டாம் பாதம்

2.1. (பிரயாண காலத்தில்) வாக்கு மனதில் (ஒடுங்குகிறது); அங்ஙனம் காணப்படுவதாலும், சுருதியாலும்.

2.2. அதே காரணத்தால் (இந்திரியங்கள்) அனைத்தும் பின் பற்றி (மனத்தில் ஒடுங்குகின்றன).

---

1.18. யதேவ வித்யயா கரோதி । சா. 1.1.10.

2.1. புருஷஸ்ய ப்ரயதோ வாங்மனஸி ஸம்பத்யதே, மன: ப்ராணே, ப்ராணஸ் தேஜஸி, தேஜ: பரஸ்யாந் தேவதாயாம் । சா. 6.8.6.

2.2. தேஜோ ஹ வா-உதானஸ்தஸ்மாதுபசாந்த-தேஜா: । புனர்ப்பவ-மிந்த்ரியைர்-மனஸி ஸம்பத்யமானை: । ப்ர. 3.9.

तन्मनः प्राणे, उत्तरात् ॥ २.३ ॥

सोऽध्यक्षे, तदुपगमादिभ्यः ॥ २.४ ॥

भूतेषु, तच्छ्रुतेः ॥ २.५ ॥

न एकस्मिन् , दर्शयतो हि ॥ २.६ ॥

समाना च आसृत्युपक्रमात्, अमृतत्वं च अनुपोष्य ॥ २.७॥

तदाऽपीतेः, संसारव्यपदेशात् ॥ २.८ ॥

---

2.3. அம்மனம் பிராணனில் (ஒடுங்குகிறது என்பது) அதே சுருதி வாக்கியத்தின்) பிற்பகுதியிலிருந்து (தெரிகிறது).

2.4. அது (பிராணன்) அத்தியக்ஷனாகிய ஜீவனிடத்தில்; அதனிடம் செல்லுதல் முதலியன கூறப்படுதலால்.

2.5. (ஜீவன் பிராணனுடன்) பூதங்களில் (ஒடுங்குகிறது); அது சுருதியிலிருந்து காணப்படுதலால்.

2.6. (ஜீவன் பிராணனுடன் ஒடுங்குதல்) ஒரு பூதத்தில் மட்டும் அல்ல; (சுருதியும் ஸ்மிருதியும்) அங்ஙனம் கூறுவதால்.

2.7. (ஸகுணப் பிரம்ம உபாஸகனுக்கும் அங்ஙனம் உபாஸியாதவனுக்கும் அவரவர் தனி) மார்க்கம் ஆரம்பமாகும் வரை (செல்லும் வகை) பொது; (ஸகுண உபாஸகனுடைய) அமிருதத்துவமும் (வியாவஹாரிகமே, அஜ்ஞானத்தை அவன்) எரிக்காததால்.

2.8. (அவனுடைய) சரீரம் (ஞானத்தால் பிரம்மத்தில்) லயிக்கும் வரை (இருக்கும்); அதுவரை ஸம்ஸாரம் கூறப்படுவதால்.

---

2.3. யச்சித்தஸ்-தேனைஷ ப்ராணமாயாதி । ப்ர. 3.10.

2.4. ஆத்மானமந்தகாலே ஸர்வே ப்ராணா அபிஸமாயந்தி யத்ரைததூர்த்த்-வோச்ச்வாஸீ பவதி । ப்ரு. 4.3.38.

உத்க்ராமந்தம் ப்ராணோऽனூத்க்ராமதி । ப்ரு. 4.4.2.

2.5. ப்ராணஸ்-தேஜஸா யுக்த: । ப்ர. 3. 10. (பிராணன் முதலில் ஜீவனிடம் ஒடுங்கி, ஜீவனும் பிராணனுமாக அடுத்த ஜன்மத்துக்கு ஆதாரமான தேயு முதலிய பூதங்களில் ஒடுங்குகின்றன).

सूक्ष्मं प्रमाणतश्च, तथा उपलब्धेः ॥ २.९ ॥
न उपमर्देन, अतः ॥ २.१० ॥
अस्यैव च उपपत्तेः एष ऊष्मा ॥ २.११ ॥
प्रतिषेधादिति चेत्, न, शारीरात् ॥ २.१२ ॥
स्पष्टो हि एकेषाम् ॥ २.१३ ॥
स्मर्यते च ॥ २.१४ ॥

---

2.9. (அந்த சரீரம்) அளவில் ஸூக்ஷ்மமானது ; அங்ஙனம் அனுபவத்தால் தெரிவதால்.

2.10. ஆகையால் (ஸ்தூல சரீர) நாசத்தால் (ஸூக்ஷ்ம சரீரம் நாசமடைவது) இல்லை.

2.11. இந்த ஸூக்ஷ்ம சரீரத்தினுடையதே (உடலின்) உஷ்ணம் என்பது பொருந்தும்.

2.12. (பிரம்ம ஞானியின் பிராணன் பிரிந்து செல்வதில்லை; ஏனெனில் அது) மறுக்கப்பட்டிருப்பதால் எனின், அது ஒவ்வாது; சரீரியினிடத்திருந்து (பிரிவை சுருதி மறுத்ததேயன்றி சரீரத்திலிருந்து பிரிவை மறுக்கவில்லை என்பது எதிர்வாதம்).

2.13. சில சாகைகளில் (சரீரத்திலிருந்து பிராணன் பிரிவதில்லை யென்பது) ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருப்பதால் (மேலே கூறியது தவறு).

2.14. ஸ்மிருதியும் அங்ஙனமே கூறுகிறது.

---

2.12. யோऽகாமோ நிஷ்காம ஆப்தகாம ஆத்மகாமோ, ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி, ப்ரஹ்மைவ ஸன் ப்ரஹ்மாப்யேதி । ப்ரு. 4.4.6.

2.13. யாஜ்ஞவல்க்யேதி ஹோவாச, யத்ராயம் புருஷோ ம்ரியத உ தஸ்மாத் ப்ராணா: க்ராமந்த்-யாஹோ 3, நேதி, நேதி ஹோவாச யாஜ்ஞ வல் க்யோऽத்ரைவ ஸமவநீயந்தே ॥ ப்ரு. 3.2.11.

2.14. வழியில்லாத இவனுடைய வழியைக் காணமல் தேவர்களும் மோஹிக்கின்றனர். (ம. பா. 12.270.22).

तानि परे तथा हि आह ॥ २.१५ ॥

अविभागः, वचनात् ॥ २.१६ ॥

तदोकोग्रज्वलनं, तत्प्रकाशितद्वारः, विद्यासामर्थ्यात् तच्छेषगत्यनुस्मृतियोगाच्च, हार्दानुगृहीतः शताधिकया ॥२.१७॥

रश्म्यनुसारी ॥ २.१८ ॥

---

2.15. அவைகள் (பிராணன்கள்) பரப்பிரம்மத்திடம் (ஒடுங்குகின்றன); அங்ஙனம் சுருதி கூறுகிறது.

2.16. (நிர்க்குணப் பிரம்ம ஞானியின் கலைகள் பிரம்மத்தில் லயிக்கும் நிலை விபாகமற்றது) இரண்டற்றது; சுருதிவசனத்தால்.

2.17. (ஸகுண உபாஸகனின் பிரயாண காலத்தில் இருதயமாகிய) இருப்பிடத்தின் உச்சியில் ஒளி தோன்றுகிறது; (ஜீவன் செல்லும்) துவாரம் அதனால் பிரகாசமுடையதாகிறது; வித்தையின் ஸாமார்த்தியத்தாலும், அதினின்றுண்டான கதியைப்பற்றிய தியானத்தாலும், யோகதாரணையாலும், இருதயத்தில் உறைபவனுடைய அனுக்கிரகத்தாலும், நூற்றொன்றாவதாகிய (ஸுஷும்ன நாடி) வழியாகச் செல்லுகிறான்.

2.18. (ஸகுண உபாஸகனின் ஜீவன்) சூரியகிரணத்தைப் பின்பற்றி (பிரம்மலோகம்) செல்லுகிறது.

---

2.15. ஏவமேவாஸ்ய பரித்ரஷ்டுரிமா: ஷோடஶகலா: புருஷாயணா: புருஷம் ப்ராப்யாஸ்தங் கச்சந்தி । ப்ர. 6.5.

கதா: கலா: பஞ்சதஶ ப்ரதிஷ்ட்டா தேவாஶ்ச ஸர்வே ப்ரதிதேவதாஸு । கர்மாணி விஜ்ஞானமயஶ்ச ஆத்மா பரேऽவ்யயே ஸர்வ ஏகீபவந்தி । மு. 3.2.7.

2.16. பித்யேதே தாஸாம் நாமரூபே புருஷ இத்யேவம் ப்ரோச்யதே । ப்ர. 6.5.

2.17. ஏதஸ்ய ஹ்ருதயஸ்யாக்ரம் ப்ரத்யோததே, தேன ப்ரத்யோதேனைஷ ஆத்மா நிஷ்க்ராமதி சக்ஷுஷ்டோ வா மூர்த்னோ வாऽன்யேப்யோவா ஶரீர-தேஶேப்ப்யஸ்-தமுத்க்ராமந்தம் ப்ராணோऽனூத்க்ராமதி । ப்ரு. 4.4.2.

2.18. அத யத்ரைததஸ்மாச்சரீரா-துத்க்ராமத்-யதைதைரேவ ரஶ்மிபிரூர்த்த்வ-மாக்ரமதே । சா. 8.6.5.

निशि न इति चेत्, न, संबन्धस्य यावद्देहभावित्वात्, दर्शयति च ॥ २.१९ ॥

अतश्च अयनेऽपि दक्षिणे ॥ २.२० ॥

योगिनः प्रति च स्मर्यते, स्मार्ते च एते ॥ २.२१ ॥

॥ तृतीयः पादः ॥

अर्चिरादिना तत्प्रथितेः ॥ ३.१ ॥

वायुमब्दात्, अविशेषाभ्याम् ॥ ३.२ ॥

---

2.19. இரவில் (சூரியகிரணம்) இல்லை என்றால் அது ஒவ்வாது; (சூரியகிரணத்துக்கும் நாடிகளுக்கும் உள்ள) ஸம்பந்தம் சரீரம் உள்ளவரை (ஸூக்ஷ்மமாக) இருப்பதால்; சுருதியும் இதைக் கூறுகிறது.

2.20. அதே காரணத்தால் தக்ஷிணாயனத்திலுங் கூட (அங்ஙனமே).

2.21. (தக்ஷிணாயனம் உத்தராயணம், இரவு பகல் முதலிய கால வித்தியாசங்களால் கதி வித்தியாசத்தை வேறுவிதமாகவும்) யோகிகளைப்பற்றி ஸ்மிருதிகள் கூறுகின்றன. (யோகமும் ஸாங்கியமும் ஆகிய) இவை இரண்டும் ஸ்மிருதியில் அடக்கம்.

### அத் 4. : மூன்றும் பாதம்

3.1. (ஸகுணப்பிரம்ம உபாஸகனின் ஜீவன் மரணத்துக்குப் பின்) அர்ச்சிராதி மார்க்கத்தில் (செல்லுகிறது); அது பிரசித்தமாதலால்.

3.2. ஸம்வத்ஸர தேவதையிடமிருந்து வாயு தேவதையிடம் (செல்லுகிறது); இதைப்பற்றிக் குறிப்பிடும் சுருதி, குறிப்பிடாத சுருதி இவற்றினின்று காணப்படுவதால்.

---

2.20. அர்ச்சிஷோऽஹரஹ்ன ஆபூர்யமாணபக்ஷம்...சா. 5.10.1. என்ற கிரமத்தில் அக்னி, பகல் முதலிய சொற்கள் அந்தந்த அபிமானி தேவதைகளைக் குறிப்பன, காலத்தையன்று. பீஷ்மர் உத்தராயணத்துக்காகக் காத்திருந்தது ஆசாரத்தை யொட்டியும் தகப்பன் கொடுத்திருந்த வரத்தால் மரணம் இச்சைப்படி அமையும் என்பதையும் நிரூபிக்க.

3.2. யதா வை புருஷோऽஸ்மால்லோகாத் ப்ரைதி ஸ வாயு-மாகச்சதி

तडितोऽधिवरुणः संबन्धात् ॥ ३.३ ॥
आतिवाहिकाः, तल्लिङ्गात् ॥ ३.४ ॥
उभयव्यामोहात् तत्सिद्धेः ॥ ३.५ ॥
वैद्युतेनैव ततः तच्छ्रुतेः ॥ ३.६ ॥
कार्यं बादरिः, अस्य गत्युपपत्तेः ॥ ३.७ ॥
विशेषितत्वाच्च ॥ ३.८ ॥

---

3.3. மின்னல் தேவதைக்குமேல் வருணன்; ஸம்பந்தத்திலிருந்து காணப்படுவதால்.

3.4. இவை (ஜீவனை அழைத்துச் செல்லும்) ஆதிவாஹிக தேவதைகள்; அதற்குள்ள அடையாளங்களால்.

3.5. (மார்க்கம், மரணமடைந்த ஜீவன்) இரண்டுக்கும் பிரஜ்ஞையின்மையால் (அழைத்துப்போக ஆதிவாஹிக தேவதைகள் அவசியம் என்பது) ஸித்திக்கிறது.

3.6. மின்னலில் சந்திக்கும் தேவதையே அதற்கு மேல் (உலகங்களுக்கும் அழைத்துச் செல்லுகிறது); அது சுருதியிலிருந்து தெரிகிறதால்.

3.7. (அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்வோர் அடைவது ஸகுணப்பிரம்மம் அல்லது) கார்யப்பிரம்மம் என்று பாதரி கூறுகிறார்; அதற்குத்தான் கதி பொருந்தும்; (நிர்க்குணப் பிரம்மத்திடம் போக்கு வரவில்லை, அது எங்கும் நிறைந்ததால்).

3.8. (பிரம்மத்தின் உலகங்களுக்கு என்று) விசேஷங் கூறப்பட்டிருப்பதாலும்.

---

தஸ்மை ஸ தத்ர விஜிஹீதே யதா ரதசக்ரஸ்ய கம் தேன ஸ ஊர்த்த்வ ஆக்ரமதே ஸ ஆதித்ய-மாகச்சதி। ப்ரு. 5.10.1.

3.6. ஆதித்யாச்சந்த்ரமஸஞ் சந்த்ரமஸோ வித்யுதந் தத்புருஷோ ऽமானவ:। ஸ ஏனான் ப்ரஹ்ம கமயதி। சா. 4.15.5.

ஆதித்யாத்வைத்யுதந் தான் வைத்யுதான் புருஷோ மானஸ ஏத்ய ப்ரஹ்மலோகான் கமயதி। ப்ரு. 6.2.15.

3.8. ப்ரஹ்ம லோகான் கமயதி। ப்ரு. 6.2.15.

பிரம்ம உலகங்கள் என்றதால் அது பரப்பிரம்ம நிலையன்று.

सामीप्यात्तु तद्व्यपदेशः ॥ ३.९ ॥

कार्यात्यये तदध्यक्षेण सह अतः परम्, अभिध्यानात् ॥ ३.१० ॥

स्मृतेश्च ॥ ३.११ ॥

परं जैमिनिः मुख्यत्वात् ॥ ३.१२ ॥

दर्शनाच्च ॥ ३.१३ ॥

न च कार्ये प्रतिपत्त्यभिसन्धिः ॥ ३.१४ ॥

---

3.9. (ஸகுணப் பிரம்மமும்) பிரம்ம பதத்தால் குறிக்கப்படுவது அதற்கு ஸமீபமாயிருப்பதால்.

3.10. பிரம்மலோகமும் லயமடையும்போது அவ்வுலகத்தின் அத்தியக்ஷனுடன் (ஸகுணப் பிரம்மத்துடன்) கூட அதற்கும் பரமானதை (பரப்பிரம்மத்தை அங்குள்ள ஜீவர்கள் அடைகிருர்கள்); சுருதி கூறுவதால்.

3.11. ஸ்மிருதியிலிருந்தும் (அங்ஙனமே காணப்படுகிறது).

3.12. பரப்பிரம்மமே அடையப்படுகிறதென்று ஜைமினி கூறுகிருர் ; (பிரம்மத்திற்கு அதுவே) முக்கியார்த்தமாதலால்.

3.13. சுருதியிலும் அங்ஙனமே காணப்படுவதால்.

3.14. (ப்ரபத்யே) அடையவேண்டுமென்ற ஆசை காரியப் பிரம்மத்தில் பொருந்தாது (என்பது எதிர்வாதம்).

---

3.10. ப்ரஹ்மலோகேஷு பரா: பராவதோ வஸந்தி, தேஷாம் ந புனராவ்ருத்தி: । ப்ரு. 6.2.15.

3·14. ஆகாஶோ வை நாம நாமரூபயோர்-நிர்வஹிதா தே யதந்தரா தத் ப்ரஹ்ம ததம்ருதꣳ ஸ ஆத்மா, ப்ரஜாபதே: ஸபாம் வேஶ்ம ப்ரபத்யே, யஶோஹம் பவாமி ப்ராஹ்மணானாம் । சா. 8.14.1.

अप्रतीकालम्बनान्नयतीति बादरायणः, उभयथाऽदोषात्, तत्क्रतुश्च ॥ ३.१५ ॥

विशेषं च दर्शयति ॥ ३.१६ ॥

॥ चतुर्थः पादः ॥

संपद्याविर्भावः, स्वेन-शब्दात् ॥ ४.१ ॥

मुक्तः, प्रतिज्ञानात् ॥ ४.२ ॥

---

3.15. பிரதீகத்தில் பிடிப்பில்லாதவர்களையே (மார்க்க தேவதை பிரம்மலோகத்துக்கு) அழைத்துச் செல்லுகிறது என்று பாதராயணர் (கூறுகிறார்; இப்படி உபாஸகர்களை) இரண்டாக (பிரித்துக் கூறுதல்) தோஷமில்லாததாலும்; என்ன எண்ணு கிறானோ அப்படி ஆகிறான் ஆதலாலும்.

3.16. (பிரதீக உபாஸனைக்கு) விசேஷத்தையும் சுருதி கூறு கிறது.

### அத். 4: நாலாம் பாதம்

4.1. (ஜீவன் பரஞ்ஜோதியை) அடைந்தால் ஆவிர்ப்பாவம் (ஸ்வரூப விளக்கம்) ஏற்படுகிறது; 'ஸ்வேன' (தன்னுடைய) என்ற சப்தத்தால்.

4.2. (ஸ்வரூப விளக்கம் ஏற்பட்டவன்) முக்தனாகிறான்; (சுருதியின்) பிரதிஜ்ஞையால்.

---

3.16. ஸ யோ நாம ப்ரஹ்மேத்யுபாஸ்தே, யாவந்-நாம்னோ கதம் தத்-ராஸ்ய யதாகாமசாரோ பவதி | சா. 7·1·5·

ஸ யோ வாசம் ப்ரஹ்மேத்-யுபாஸ்தே | சா. 7.2.2.

4.1 அத ய ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்-சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதி-ரூபஸம்பத்ய ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்யத ஏஷ ஆத்மேதி ஹோவாச ததம்ருத-மபய-மேதத் ப்ரஹ்மேதி | சா. 8.3.4.

4.2. ஏவந்த்வேவ தே பூயோऽனுவ்யாக்க்யாஸ்யாமி | சா. 8.9.3 8.10.4; 8.11.3.

आत्मा, प्रकरणात् ॥ ४.३ ॥

अविभागेन, दृष्टत्वात् ॥ ४.४ ॥

ब्राह्मेण, जैमिनिः, उपन्यासादिभ्यः ॥ ४.५ ॥

चिति तन्मात्रेण, तदात्मकत्वादित्यौडुलोमिः ॥ ४.६ ॥

एवमप्युपन्यासात् पूर्वभावात् अविरोधं बादरायणः ॥ ४.७ ॥

---

4.3. (ஜீவன் அடையும் பரஞ்ஜோதி) ஆத்மஜோதியே; பிரகரணத்தால்.

4.4. (முக்தியடைந்த ஜீவனைப் பிரம்மத்திடமிருந்து பிரியாத தாக) இரண்டற்றதாக (அறியவேண்டும்); சுருதியினின்று காணப் படுவதால்.

4.5. பிரஹ்ம குணங்களுடன் (முக்தியடைந்த ஜீவன் இருக் கிறான்) என்பது ஜைமினியின் அபிப்பிராயம்; (அதைப்பற்றிய) விவரணம் முதலியவற்றிலிருந்து.

4.6. சுத்த சைதன்யமாகவே இருக்கிறான், அதுவே அவன் தன்மையாதலால் என்பது ஔடுலோமியின் அபிப்பிராயம்.

4.7. அப்படியே இருப்பினும் (முன் ஜைமினி கூறியபடி) குணங்களுடன் கூடியிருத்தலுக்கும் விரோதமன்று என்பது பாதராயணர் அபிப்பிராயம்.

---

4.2. அசரீரம் வாவ ஸந்தம் ந ப்ரியா-ப்ரியே ஸ்ப்ருஶ்த: । சா. 8.12.1.

ஏவமேவைஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதி-ருபஸம்பத்ய ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்யந்தே । சா. 8.12.3.

4.3. ப்ரகரண ஆரம்பம்:—ய ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: ஸோऽன்வேஷ்டவ்ய: । சா. 8.7.1.

இதுவேதான் பரஞ்ஜ்யோதி எனும் பதத்தாலுங் குறிக்கப்படுவது. தத்தேவா ஜ்யோதிஷாஞ் ஜ்யோதிராயுர்ஹோபாஸதேऽம்ருதம் । ப்ரு 4.4.16.

4.4. தத் த்வம் அஸி । சா. 6.8.7.

அஹம் ப்ரஹ்மாஸ்மி । ப்ரு. 1.4.10.

ப்ரஹ்மைவ ஸன் ப்ரஹ்மாப்யேதி । ப்ரு. 4.46.

4.5. ஸ ஸர்வாஂஶ்ச லோகானாப்னோதி ஸர்வாஂஶ்ச காமான் । சா. 8.7.1.

संकल्पादेव तु तच्छ्रुतेः ॥ ४.८ ॥

अत एव च अनन्याधिपतिः ॥ ४.९ ॥

अभावं बादरिः, आह हि एवम् ॥ ४.१० ॥

भावं जैमिनिः, विकल्पामननात् ॥ ४.११ ॥

द्वादशाहवत् उभयविधं बादरायणोऽतः ॥ ४.१२ ॥

तन्वभावे संध्यवत्, उपपत्तेः ॥ ४.१३ ॥

---

4.8. (முக்தன்) ஸங்கல்பத்தாலேயே (தன் விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறான்); அது சுருதியிலிருந்து (தெரிகிறது).

4.9. அதனாலேயே அவனுக்கு வேறு அதிபதி இல்லை.

4.10. (முக்தனுக்குச் சரீரம்) இன்மை பாதரி (அபிப்பிராயம்); சுருதி அங்ஙனம் கூறுகிறது.

4.11. (சரீரமும் இந்திரியங்களும்) உண்டு என்று ஜைமினி கருதுகிறார்; பல ரூபங்களைத் தரிக்கக்கூடும் என்று சுருதி கூறுவதால்.

4.12. இதினின்று பாதராயணர் இரண்டு விதமாகவும் (இருக்கலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்); 'த்வாதசாஹம்' எனும் யாகத்தைப்போல்.

4.13. சரீரமில்லாதபோது ஸ்வப்னத்தில் போல் (விருப்பங்களின் பூர்த்தி ஏற்படக்கூடும்); அது யுக்திக்குப் பொருந்துமாதலால்.

---

4.8. ஸ யதி பித்ருலோக-காமோ பவதி ஸங்கல்பாதேவாஸ்ய பிதர: ஸமுத்திஷ்ட்டந்தி | சா. 8.2.1.

4.9. தேஷாம் ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி | சா. 8.1.6.

4.10. மனோஸ்ய தைவஞ்சக்ஷு: ஸ வா ஏஷ ஏதேன தைவேன சக்ஷுஷா மனஸைதான் காமான் பஶ்யன் ரமதே | சா. 8.12.5.

4.11. ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி பஞ்சதா ஸப்ததா நவதா சைவ சா. 7.26.2.

भावे जाग्रद्वत् ॥ ४.१४ ॥

प्रदीपवत् आवेशः, तथा हि दर्शयति ॥ ४.१५ ॥

स्वाप्यय-संपत्त्योः अन्यतरापेक्षम्, आविष्कृतं हि ॥ ४.१६ ॥

जगद्व्यापारवर्जम्, प्रकरणात्, असन्निहितत्वाच्च ॥ ४.१७ ॥

---

4.14. சரீரமிருந்தால் ஜாக்கிரத்தில் போல்.

4.15. (முக்தன் பல சரீரங்களில் ஒரே சமயத்தில் புகுதல்) தீபத்தைப்போல் (ஒரு விளக்கு பல விளக்குகளை ஏற்றுவதுபோல் நிகழக்கூடும்); அங்ஙனமே சுருதி காட்டுகிறது.

4.16. (அந்நிலையில் ஒருவன் எதை அறிவான், எங்ஙனம் அறிவான், அங்கே இரண்டாவதில்லை, முதலிய சுருதி வாக்கியங்கள்) ஸுஷுப்தி அல்லது பிரம்மத்தில் இரண்டறக் கலந்த நிலையாகிய இரண்டுள் ஒன்றைப் பற்றியவை; இது சுருதியாலேயே விளக்கப்படுகிறது.

4.17. (முக்தர்கள் ஜகத் வியாபாரம்) சிருஷ்டித் தொழில் முதலியன நீங்கலாக (எல்லாச் சக்திகளையும் பெறுகிறார்கள்). (சிருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹார கர்த்தாவைப் பேசும் இடத்தில்) ஈசுவரனே குறிக்கப்படுதலாலும் முக்தியடைந்த ஜீவர்கள் குறிக்கப்படாததாலும்.

---

4.16. யத்ர வா அஸ்ய ஸர்வ-மாத்மைவாபூத் । தத் கேன கம் விஜாநீயாத் யேனேதஂ ஸர்வம்-விஜாநாதி தம் கேன விஜாநீயாத் விஜ்ஞாதாரமரே கேன விஜாநீயாதிதி । ப்ரு. 2.4.14.

ந து தத்-த்விதீயமஸ்தி ததோऽன்யத்-விபக்தம் யத்-விஜாநீயாத் । ப்ரு. 4.3.30.

ஸலில ஏகோ த்ரஷ்டாऽத்வைதோ பவதி । ப்ரு. 4.3.32.

प्रत्यक्षोपदेशादिति चेत्, न, आधिकारिक-मण्डलस्थोक्तेः ॥ ४.१८ ॥

विकारावर्ति च तथा हि स्थितिमाह ॥ ४.१९ ॥

दर्शयतश्च एवं प्रत्यक्षानुमाने ॥ ४.२० ॥

भोग-मात्र-साम्य-लिङ्गाच्च ॥ ४.२१ ॥

---

4.18. நேராக உபதேசத்தால் (முக்தர்கள் ஸர்வ சக்திகளையும் அடைவதாய்க் காணப்படுகிறது எனின், அது ஒவ்வாது; அதிகாரத்தைக் கொடுப்பவனும் சூரிய மண்டலம் முதலியவற்றில் வசிப்பவனும் ஆகிய ஈசுவரனை (முக்தன் அடைவதாகக்) கூறியிருப்பதால்.

4.19. சிருஷ்டித்த அனைத்துக்குமப்பால் (பரமேசுவரனின் ஒரு நிலை உளது); அங்ஙனம் (இரு வகை) இருப்பைச் சுருதி கூறுகிறது.

4.20. பிரத்யக்ஷ அனுமானங்களும் அங்ஙனமே நிரூபிக்கின்றன.

4.21. போகத்தில் மட்டும் (ஈசுவரனுடன் முக்தனுக்கு) ஸமத்துவத்தைக் காட்டும் அடையாளங்கள் இருப்பதனாலும் (சிருஷ்டி முதலியவற்றில் முக்தனுக்கு அதிகாரமில்லை).

---

4.18. ஆப்னோதி ஸ்வாராஜ்யம் | தை. 1.6.

ஆப்னோதி மனஸஸ்பதிம் | தை. 1.6.

4.19. தாவானஸ்ய மஹிமா ததோஜ்யாயாꣳஶ்ச பூருஷ: | பாதோऽஸ்ய ஸர்வா பூதானி த்ரிபாதஸ்யாம்ருதந் திவி | சா. 3.12.6.

4.20. ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் | மு. 2.2.10.

ந தத் பாஸயதே ஸூர்யோ ந ஶஶாங்கோ ந பாவக: | கீ. 15.6.

4.21. யதைதாம் தேவதாம் ஸர்வாணி பூதானி அவந்தி ஏவꣳஹைவம் விதꣳஸர்வாணி பூதான்யவந்தி | (இந்த தேவனாகிய ஹிரணியகர்ப்பனை எல்லாப் பிராணிகளும் எப்படி வணங்குகின்றனவோ அப்படியே இந்த முக்தனையும் எல்லாப் பிராணிகளும் வணங்குகின்றன). ப்ரு. 1.5.20.

अनावृत्तिः शब्दात्, अनावृत्तिः शब्दात् ॥ ४.२२ ॥

---

**4.22. (முக்தர்கள் மீண்டும் இவ்வுலகுக்குத்) திரும்பி வருதல் இல்லை, சுருதிகூறுவதால்; திரும்பிவருதல் இல்லை, சுருதி கூறுவதால்.**

---

4.21. ஏதஸ்யை தேவதாயை ஸாயுஜ்யஃஸலோகதாஞ்ஜயதி । (இந்த தேவதையாகிய ஹிரணியகர்ப்பனுடைய உலகத்தையும் ஸாயுஜ்யப் பதவியையும் எய்துகின்றான்). ப்ரு. 1.5.23.

4.22. தயோர்த்த்வ-மாயன்-னம்ருதத்வமேதி । (அவ்வழியால் மேலே சென்று அமிருதத்வமடைகின்றனர்). சா. 8.6.6.

தேஷு ப்ரஹ்மலோகேஷு பரா: பராவதோ வஸந்தி தேஷாம் ந புனராவ்ருத்தி: (அந்த ஹிரணியகர்ப்ப உலகங்களில் மேலோர்களாகிய அவர்கள் பல்லாண்டு வசிக்கின்றனர். இவ்வுலகுக்கு மீண்டும் வரவேண்டிய கட்டுப்பாடு அவர்களுக்கு இல்லை). ப்ரு. 6.2.15.

**பிரம்ம சூத்திரங்கள் முற்றும்**

---

# பிரம்ம சூத்திரங்களின் அகராதி


அகரணத்வாச்ச நதோஷ : 2.4.11
அக்ஷரமம்பராந்த 1.3.10
அக்னிஹோத்ராதி து 4.1.16
அசலத்வஞ்சாபேக்ஷ்ய 4.1.9
அணவஶ்ச 2.4.7
அத ஏவ ச ஸர்வாண்யனு 4.2.2
அத ஏவ சாக்னீந்தனாதி 3.4.25
அத ஏவ சானன்யாதிபதி: 4.4.9
அத ஏவ சோபமா 3.2.18
அத ஏவ ப்ராண: 1.1.23
அத: ப்ரபோதோऽஸ்மாத் 3.2.8
அதஶ்சாயனேऽபி 4.2.20
அதஸ்த்விதரஜ்-ஜ்யாய: 3.4.39
அதோऽனந்தேன ததா 3.2.26
அதோऽன்யாபி ஹி 4.1.17
அத்தா சராசரக்ரஹணாத் 1.2.9
அதாதோ ப்ரஹ்ம 1.1.1
அத்ருஶ்யத்வாதி குணகோ 1.2.21
அத்ருஷ்டாநியமாத் 2.3.51
அதிகந்து பேதநிர்தேஶாத் 2.1.22
அதிகோபதேஶா 3.4.8
அத்த்யயனமாத்ர 3.4.12
அனபிபவஞ்ச 3.4.35
அனாரப்தகார்யே 4.1.15
அனாவிஷ்குர்வந்நன்வயாத் 3.4.50
அனாவ்ருத்தி : ஶப்தாத் 4.4.22
அநியம: ஸர்வாஸாம் 3.3.31
அனுக்ருதேஸ்தஸ்ய 1.3.22
அனுஜ்ஞாபரிஹாரௌ 2.3.48
அனுபபத்தேஸ்து ந 1.2.3
அனுஷ்ட்டேயம் பாத 3.4.19
அனேன ஸர்வகதத்வம் 3.2.37
அந்தராசாபி து 3.4.36
அந்தராபூதக்ராம 3.3.35
அந்தரா விஜ்ஞான 2.3.15
அந்தஸ்தத்தர்மோ 1.1.20
அன்யதாத்வம் ஶப்த 3.3.6
அன்யதா பேதானுப 3.3.36
அன்யாதிஷ்ட்டிதேஷு 3.1.24
அன்யார்த்தஶ்ச பரா 1.3.20
அன்வயாதிதி சேத் 3.3.17
அபி ச ஸ்மர்யதே 1.3.23
,, ,, 2.3.45
,, ,, 3.4.37
அபிசைவ மேகே 3.2.13
அபிச ஸம்ராதனே 3.2.24
அப்ரதீகாலம்ப 4 3.15
அபாதாச்ச 3.4.29
அபாவம் பாதரி-ராஹ 4.4.10
அபித்த்யோபதேஶா 1.4.24
அபிஸந்த்த்யாதி 2.3.52
அம்புவதக்ரஹணாத் 3.2.19
அம்ஶோ நானா 2.3.43
அரூபவதேவஹி 3.2.14
அர்ச்சிராதினா தத் 4.3.1
அர்ப்பகௌகஸ்த்வா 1.2.7
அல்பஶ்ருதேரிதி 1.3.21
அவஸ்த்திதி வைஶே 2.3.24
அவஸ்த்திதேரிதி 1.4.22
அவிபாகேன த்ருஷ்ட 4.4.4
அவிபாகோ வசனாத் 4.2.16
அவிரோதஶ்சந்தன 2.3.23
அஶ்மாதிவச்ச தததனுப 2.1.23
அஸத் வ்யபதேஶாத் 2.1.17
அஸந்ததேஶ்சாவ்யதி 2.3.49
அஸம்பவஸ்து ஸதோ 2.3.9
அஸ்தி து 2.3.2
அஸ்மின்னஸ்ய ச 1.1.19
அஸ்யைவசோபபத்தே 4.2.11
ஆகாஶஸ்தல்லிங்காத் 1.1.22
ஆசாரதர்ஶனாத் 3.4.3
ஆதிவாஹிகஸ்த 4.3.4
ஆத்மக்ருதே: பரிணா 1.4.26
ஆத்மக்ருஹீதிரிதரவத் 3.3.16
ஆத்மனி சைவம் 2.1.28
ஆத்ம ஶப்தாச்ச 3.3.15
ஆத்மா ப்ரகரணாத் 4.4.3
ஆத்மேதிதூபகச்ச 4.1.3

| | |
|---|---|
| ஆத்த்யாநய ப்ரயோஜந | 3.3.14 |
| ஆனந்தமயோ | 1.1.12 |
| ஆனந்தாதய: | 3.3.11 |
| ஆநுமானிகமப்யேகேஷாம் | 1.4.1 |
| ஆப: | 2.3.11 |
| ஆப்ராயணாத் தத்ராபி ஹி | 4.1.12 |
| ஆபாஸ ஏவ ச | 2.3.50 |
| ஆவ்ருத்தி-ரஸக்ருத் | 4.1.1 |
| ஆஸீன : ஸம்பவாத் | 4.1.7 |
| ஆஹ ச தன்மாத்ரம் | 3.2.16 |
| இதர பராமர்ஶாத் | 1.3.18 |
| இதர வ்யபதேஶாத்தி | 2.1.21 |
| இதரஸ்யாப்யேவம் | 4.1.14 |
| இதரேத்வர்த்தஸாமா | 3.3.13 |
| இயதாமனநாத் | 3.3.34 |
| ஈக்ஷதிகர்மவ்யப | 1.3.13 |
| ஈக்ஷதேர் நாஶப்தம் | 1.1.5 |
| உத்க்ரமிஷ்யத ஏவ | 1.4.21 |
| உத்க்ராந்தி கத்யா | 2.3.1 |
| உத்தராச்சேதாவிர்ப் | 1.3.19 |
| உபதேஶபேதாந்நேதி | 1.1.27 |
| உபபத்தேஶ்ச | 3.2.35 |
| உபபத்யதேசாப்யு | 2.1.36 |
| உபபன்னஸ்தல்லக்ஷணா | 3.3.30 |
| உபமர்த்தஞ்ச | 3.4.16 |
| உபலப்த்திவதநியம : | 2.3.37 |
| உபஸம்ஹாரதர்ஶநாத் | 2.1.24 |
| உபஸம்ஹாரோர்த்தா | 3.3.5 |
| உபாதாநாத் | 2.3.35 |
| உபயவ்யபதேஶாத் | 3.2.27 |
| உபயவ்யாமோஹாத் | 4.3.5 |
| ஊர்த்த்வரேத: ஸு | 3.4.17 |
| ஏதேன மாதிரிஶ்வா | 2.3.8 |
| ஏதேன ஸர்வே | 1.4.28 |
| ஏவம் முக்திபலா | 3.4.52 |
| ஏவமப்யுபந்யாஸாத் | 4.4.7 |
| ஐஹிகமப்யப்ரஸ்துத | 3.4.51 |
| கம்பநாத் | 1.3.39 |
| கர்த்தா ஶாஸ்த்ரார்த்த | 2.3.33 |
| கர்மகர்த்ருவ்யப | 1.2.4 |
| காமகாரேணசைகே | 3.4.15 |
| காமாச்ச நாநுமாந | 1.1.18 |
| காமாதீதரத்ர | 3.3.39 |
| காம்யாஸ்து யதா | 3.3.60 |
| கார்யம் பாதரிரஸ்ய | 4.3.7 |
| கார்யாக்க்யாநதபூர் | 3.3.18 |
| கார்யாத்யயே தத | 4.3.10 |
| க்ருதப்ரயத்நபேக்ஷ | 2.3.42 |
| க்ருதாத்யயேநுஶய | 3.1.8 |
| க்ருத்ஸ்னபாவாத்து | 3.4.48 |
| க்ருத்ஸனப்ரஸக்தி | 2.1.26 |
| கதிஶப்தாப்ப்யாம் | 1.3.15 |
| கதிஸாமான்யாத் | 1.1.10 |
| கதேரர்த்தவத்வம் | 3.3.29 |
| குஹாத்வா லோகவத் | 2.3.25 |
| குஹாம்ப்ரவிஷ்டௌ | 1.2.11 |
| கௌணஶ்சேந்நாத்ம | 1.1.6 |
| கௌண்யஸம்பவாத் | 2.3.3 |
| ,, ,, | 2.4.2 |
| சக்ஷுராதிவத்து தத் | 2.4.10 |
| சராசரவ்யபாஶ்ரய | 2.3.16 |
| சிதி தன்மாத்ரேண | 4.4.6 |
| சந்தோபிதாநாத் | 1.1.25 |
| ஜகத்வ்யாபார | 4.4.17 |
| ஜன்மாத்யஸ்ய யத: | 1.1.2 |
| ஜீவமுக்க்யப்ராண | 1.4.17 |
| ஜ்ஞேயத்வாவசநாச்ச | 1.4.4 |
| ஜ்ஞோऽத ஏவ | 2.3.18 |
| ஜ்யோதிர்தர்ஶநாத் | 1.3.40 |
| ஜ்யோதிஶ்சரணாபி | 1.1.24 |
| ஜ்யோதிஷிபாவாச்ச | 1.3.32 |
| தச்ச்ருதே: | 3.4.4 |
| தடிதோऽதி | 4.3.3 |
| தத்து ஸமன்வயாத் | 1.1.4 |
| ததாऽன்யப்ரதிஷே | 3.2.36 |
| ததா ப்ராணா: | 2.4.1 |
| தததிகம உத்தர | 4.1.13 |
| ததீனத்வாதர்த்தவத் | 1.4.3 |
| ததனன்யத்வமா | 2.1.14 |
| ததந்தர ப்ரதிபத்தௌ | 3.1.1 |
| ததபாவோ நாடீஷு | 3.2.7 |
| ததபித்த்யாநதேவ | 2.3.13 |
| ததவ்யக்தமாஹ ஹி | 2.2.23 |
| ததாऽபீதே: | 4.2.8 |

| | |
|---|---|
| ததுபர்யபி பாதராயண: | 1.3.26 |
| ததோகோக்ரஜ்வல | 4.2.17 |
| தத்குணஸாரத்வா | 2.3.29 |
| தத்தேதுவ்யபதேஶாச்ச | 1.1.14 |
| தத்பூதஸ்ய து | 3.4.40 |
| தந்நிஷ்ட்டஸ்ய மோக்ஷோ | 1.1.7 |
| தன்மன: ப்ராண | 4.2.3 |
| தன்வபாவே ஸந்த்ய | 4.4.13 |
| தர்க்காப்ரதிஷ்ட்டானாதபி | 2.1.11 |
| தானி பரே ததாஹ்யாஹ | 4.2.15 |
| துல்யந்து தர்ஶனம் | 3.4.9 |
| தேஜோऽதஸ்ததாஹ் | 2.3.10 |
| த்ரயாணாமேவசைவ | 1.4.6 |
| தர்ஶனாச்ச | 3.1.20 |
| ,, | 3.2.21 |
| ,, | 4.3.13 |
| தர்ஶயதஶ்சைவம் | 4.4.20 |
| தர்ஶயதி ச | 3.3.4 |
| தர்ஶயதிசாதோ | 3.2·17 |
| தஹர உத்தரேப்ப்ய: | 1.3.14 |
| த்ருஶ்யதே து | 2.1.6 |
| தேவாதிவதபி லோகே | 2.1.25 |
| தேஹயோகாத்வா | 3.2.6 |
| த்யுப்ப்வாத்யாயதன | 1.3.1 |
| த்வாதஶாஹவத் | 4.4.12 |
| தர்மஞ்ஜைமினி | 3.2.40 |
| தர்மோபபத்தேஶ்ச | 1.3.9 |
| த்ருதேஶ்ச மஹிம்னோ | 1.3.16 |
| த்த்யானாச்ச | 4.1.8 |
| ந கர்மாவிபாகா | 2.1.35 |
| ந ச கார்யே ப்ரதி | 4.3.14 |
| ந ப்ரதீகே ந ஹி | 4.1.4 |
| ந ப்ரயோஜனவத் | 2.1.32 |
| ந பேதாதிதி சேத் | 3.2.12 |
| ந வக்துராத்மோப | 1.1.29 |
| ந வா ப்ரகரணபேதாத் | 3.3.7 |
| ந வாயுக்ரியே ப்ருதக் | 2.4.9 |
| ந வியதஶ்ருதே: | 2.3.1 |
| ந விலக்ஷணத்வாத் | 2.1.4 |
| ந ஸ்த்தானதோऽபி | 3.2.11 |
| நாணுரதச்சருதே | 2.3.21 |
| நாதிசிரேண விஶேஷாத் | 3.1.23 |
| நாத்மா ஶ்ருதேர் நித்ய | 2.3.17 |
| நித்யோபலப்த்யனு | 2.3.32 |
| நியமாச்ச | 3.4.7 |
| நிஶி நேதிசேந் ந | 4.2.19 |
| நேதரோऽனுப்பத் | 1.1.16 |
| நைகஸ்மின் தர்ஶயதோ ஹி | 4.2.6 |
| நோபமர்தேனாத: | 4.2.10 |
| பஞ்சவ்ருத்திர்மனோவத் | 2.4.12 |
| படவச்ச | 2.1.19 |
| பத்யாதிஶப்தேப்ப்ய: | 1.3.43 |
| பரஞ்ஜைமினிர்முக்ய | 4.3.12 |
| பரமத: ஸேதூன்மான | 3.2.31 |
| பராத்து தச்ச்ருதே: | 2.3.41 |
| பராபித்யானாத்து | 3.2.5 |
| பராமர்ஶஞ் ஜைமினி | 3.4.18 |
| பலமதஉபபத்தே: | 3.2.38 |
| பும்ஸ்த்வாதிவத்த்வ | 2.3.31 |
| புருஷார்த்தோऽத:ஶப் | 3.4.1 |
| பூர்வந்து பாதராய | 3.2.41 |
| பூர்வவத்வா | 3.2.29 |
| ப்ருதிவ்யதிகாரரூப | 2.3.12 |
| ப்ரகரணாச்ச | 1.2.10 |
| ப்ரகரணாத் | 1.3.6 |
| ப்ரகாஶவச்சாவைய | 3.2.15 |
| ப்ரகாஶாதிவச்ச | 3.2.25 |
| ப்ரகாஶாதிவந்நைவம் | 2.3.46 |
| ப்ரகாஶாஶ்ரயவத்வா | 3.2.28 |
| ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞா | 1.4.23 |
| ப்ரக்ருதைதாவத்வம் | 3.2.22 |
| ப்ரதிஜ்ஞாஸித்தேர்லிங் | 1.4.20 |
| ப்ரதிஜ்ஞாஹானிரவ் | 2.3.6 |
| ப்ரதிஷேதாச்ச | 3.2.30 |
| ப்ரதிஷேதாதிதி | 4.2.12 |
| ப்ரத்யக்ஷோபதேஶா | 4.4.18 |
| ப்ரதீபவதாதேஶ: | 4.4.15 |
| ப்ரதேஶாதிதிசேத் | 2.3.53 |
| ப்ரஸித்தேஶ்ச | 1.3.17 |
| ப்ராணகதேஶ்ச | 3.1.3 |
| ப்ராணஸ்ததானுகமாத் | 1.1.28 |
| ப்ரியஶிரஸ்த்வாத்ய | 3.3.12 |
| பஹிஸ்தூபயதா | 3.4.43 |
| பாவஞ்ஜைமினிர்விகல்ப | 4.4.11 |

பாவந்து பாதராயண: 1.3.33
பாவே ஜாக்ரவத் 4.4.14
புத்த்யர்த்த:பாதவத் 3.2.33
பூதாதி பாதவ்யபதே 1.1.26
பூதேஷு தச்ச்ருதே: 4.2.5
பூமாஸம்ப்ரஸாதா 1.3.8
பேதவ்யபதேஶாச்சா 1.1.17
போகமாத்ரஸாம்யலிங்கா 4.4.21
போகேனத்விதரே 4.1.19
ப்ரஹமத்ருஷ்டிருத்கர்ஷாத் 4.1.5
ப்ராஹ்மேணஜைமினி: 4-4.5
மத்த்வாதிஷ்வஸம்பவாத் 1.3.31
மந்த்ரவர்ணா 2.3.44
மஹத்வச்ச 1.4.7
மாந்த்ரவர்ணிகமேவ 1.1.15
மாயாமாத்ரந்து 3.2.3
முக்த:ப்ரதிஜ்ஞானாத் 4.4.2
முக்தோபஸ்ருப்யவ்ய 1.3.2
முக்தேऽர்த்தஸம்பத்தி: 3.2.10
மௌனவதிதரேஷாம் 3.4.49
யத்ரைகாக்ரதா 4.1.11
யதாச தக்ஷோபயதா 2.3.40
யதேவ வித்யயேதி 4.1.18
யாவததிகாரம் 3.3.32
யாவதாத்மபாவித்வாத் 2.3.30
யாவத்விகாரந்து 2.3.7
யுக்தே: ஶப்தாந்தரா 2.1.18
யோகின: ப்ரதி ச 4.2.21
யோனிஶ்ச ஹி கீயதே 1.4.27
யோனே: ஶரீரம் 3.1.27
ரஶ்ம்யனுஸாரீ 4.2.18
ரூபோபன்யாஸாச்ச 1.2.23
ரேத:ஸிக்யோகோऽத 3.1.26
லிங்காச்ச 4.1.2
லோகவத்து லீலா 2.1.33
வததீதிசேந் ந 1.4.5
வாக்யான்வயாத் 1.4.19
வாங்மனஸி 4.2.1
வாயுமப்தாதவிசே 4.3.2
விகரணத்வாந்நேதி 2.1.31
விகல்போऽவிஶிஷ்ட 3.3.59
விகாராவர்த்தி ச 4.4.19
விகாரஶப்தாந்நேதி 1.1.1
வித்யாகர்மணோரிதி 3.1.17
விபர்யயேண து க்ரமோ 2.3.14
விரோத: கர்மணீதி 1.3.27
விவக்ஷிதகுணோப 1.2.2
விஶேஷஞ்ச தர்ஶயதி 4.3.16
விஸேஷண பேதவ்ய 1.2.22
விஶேஷணாச்ச 1.2.12
விஶேஷானுக்ரஹஶ் 3.4.38
விஶேஷிதத்வாச்ச 4.3.8
விஹாரோபதேஶாத் 2.3.34
விஹிதத்வாச்ச 3.4.32
வைத்யுதேனைவ 4.3.6
வைஷம்யநைர்க்ருண்யே 2.1.34
வ்யதிரேகோ கந்தவத் 2.3.26
வ்யதிஹாரோவிஶிம் 3.3.37
வ்யபதேஶாச்ச 2.3.36
ஶக்திவிபர்யயாத் 2.3.38
ஶப்தவிஶேஷாத் 1.2.5
ஶப்தஶ்சாதோऽகாம 3.4.31
ஶப்தாச்ச 2.3.4
ஶப்தாதேவப்ரமித: 1.3.24
ஶமதமாத்யுபேத: 3.4.27
ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா து 1.1.30
ஶாஸ்த்ரயோநித்வாத் 1.1.3
ஶேஷத்வாத் புருஷார்த்த 3.4.2
ஶ்ருதத்வாச்ச 1.1.11
,, 3.2.39
ஶ்ருதேஸ்து ஶப்தமூல 2.1.27
ஶ்ரேஷ்டஶ்ச 2.4.8
ஸம்யமனேத்வனு 3.1.13
ஸ ஏவ து கர்மானு 3.2.9
ஸங்கல்பாதேவ து 4.4.8
ஸத்வாச்சாவரஸ்ய 2.1.16
ஸந்த்த்யே ஸ்ருஷ்டி 3.2.1
ஸமாத்த்யபாவாச்ச 2.3.39
ஸமானாசாஸ்ருத்யுப 4.2.7
ஸம்பத்யாவிர்ப்பாவ: 4-4.1
ஸம்போகப்ராப்திரிதி 1.2.8
ஸர்வத்ர ப்ரஸித்தோப 1.2.1
ஸர்வதாபி த ஏவோ 3.4.34
ஸர்வதர்மோபபத்தேஶ்ச 2.1.37

ஸர்வவேதாந்தப்ரத்யயம் 3.3.1
ஸர்வான்னுனுமதிஶ்ச 3.4.28
ஸர்வோபேதாச தத்தர்ஶ 2.1.30
ஸஹகாரித்வேசை 3.4.33
ஸஹகார்யந்தரவிதி 3.4.47
ஸாக்ஷாச்சோபயாம்னு 1.4.25
ஸா ச ப்ரஶாஸனாத் 1.3.11
ஸாமான்யாத்து 3.2.32
ஸாமீப்யாத்து 4.3.9
ஸாம்பராயேதர்த்தவ்யா 3.3.29
ஸுஷுப்த்யுத்க்ராந்த் 1.3.47
ஸூக்ஷ்மந்து ததர்ஹத் 1.4.2
ஸூக்ஷ்மம் ப்ரமாணத: 4.2.2
ஸூசகஶ்சஹி ஶ்ருதே 3.2.4
ஸைவ ஹி ஸத்யா 3.3.38
ஸோऽத்த்யக்ஷே தது 4.2.4
ஸ்த்தான விஶேஷாத் 3.2.34
ஸ்த்தித்யதனுப்ப்யாஞ்ச 1.3.7
ஸ்பஷ்ட்டோஹ்யேகே 4.2.13
ஸ்மரந்தி ச 2.3.47
,, 4.1.10
ஸ்மர்யதே ச 4.2.14
ஸ்ம்ருதேஶ்ச 1.2.6
ஸ்ம்ருத்யவகாஶ 2.1.1
ஸ்யாச்சைகஸ்ய 2.3.4
ஸ்வபக்ஷதோஷாச்ச 2.1.29
ஸ்வஶப்தோன்மானு 2.3.22
ஸ்வாத்மனுசோத்தர 2.3.20
ஸ்வாத்த்யாயஸ்ய ததா 3.3.3
ஸ்வாப்யயஸம்பத்யோ 4.4.16
ஹ்ருத்யபேக்ஷயா து 1.3.22
ஹேயத்வாவசனுச்ச 1.1.8


பிரம்ம சூத்திரங்களின் அகராதி

முற்றும்

# உபநிஷத மந்திரங்களின் அகராதி

## அ


அகாமோ நிஷ்காம ஆப்தகாம ப்ரு. 4.4.6
அக்ஷராத் பரத: பர: மு. 2.1.2
அக்ருஹ்யோ நஹி ப்ரு. 4.2.4
அக்னிர் மூர்த்தா மு. 2.1.14
அக்னிர் யதைகோ கட. 5.9
அக்னிஷ்டே பாதம் சா. 4.6
அக்னே நய ஸுபதா ஈ. 18
அங்குஷ்ட்டமாத்ர: கட. 4.12
அஜரோऽமரோऽம்ரு ப்ரு. 4.4.25.
அஜோ நித்ய: கட. 1.2.18
அணு: பந்தா விதத: ப்ரு. 4.4.8
அணோரணீயான் கட. 2.2.20
அத ய ஆத்மா ஸ ஸேது: சா. 8.4.1
அத ய ஏஷ ஸம்ப்ரஸாத: சா. 8.3.4
அத ய ஏஷோऽந்தரக்ஷி சா. 1.7.5
அத ய ஏஷோऽந்தராதித் சா. 1.6.6
அத யதாஸுஷுப்தோ ப்ரு. 2.1.19
அத யதிதம்ஸ்மின் ப்ரஹ் சா. 8.1.1
அத யோऽன்யாம் தேவ ப்ரு. 1.4.10
அத ரதான் ரதயோகா ப்ரு. 4.3.10
அதாமூர்த்தம் வாயுஶ்ச ப்ரு. 2.3 3
அதிதீர்க்கே ஜீவிதே கட. 1.1.28
அதாத ஆதேஶோ நேதி ப்ரு. 2.3.6
அத: பாப மகரவமிதி ப்ரு. 4.4.22
அத்ரபிதாऽபிதா பவதி ப்ரு. 4.3.22
அத்ர ப்ரஹ்ம ஸமஶ்னு கட. 6.14
அத்ருஷ்டோ த்ரஷ்டா ப்ரு. 3.7.23
அத்ரைவ ஸமவலீயந் ப்ரு. 3.2.11
,, ,, ப்ரு. 4.4.7
அத்ரைஷ தேவ: ஸ்வப்னே ப்ர. 4.5
அநந்தா நாம தே லோகா: கட. 1.3
அநித்யைர் த்ரவ்யை: கட. 2.10
அநிருக்தேऽநிலயனே தை. 2.7
அந்தந்தம: பிரவிஶந்தி ஈ. 9
அந்தேனைவ நீயமானு கட. 2.5.
அபயம் வை ஜனக ப்ரு. 4.2.4
அபயம் வை ப்ரஹ்ம ப்ரு. 4.4.25

அபூர்வமனபரமனந்த ப்ரு. 2.5.19
அம்ருதஸ்ய து நாஶா ப்ரு. 1.4.2
அயமாத்மா ப்ரஹ்ம ப்ரு. 4.44.
,, ,, மா. 2.
அயமாத்மா ஸர்வே ப்ரு. 2.5.14
அயம்புருஷ: ப்ராஜ்ஞே ப்ரு. 4.3.21
அயம்லோகோ நாஸ்திபர கட. 2. 6
அரா இவ ரத-நாபௌ மு. 2.26.
அர்ச்சிஷோடஹரஹ்ன சா. 5.10.1
அர்த்தப்ருகளமிவ ப்ரு. 1.4.3
அலூக்ஷா தர்ம கர்மா தை.1.11.4
அவிதித்வாடஸ்மில்லோ ப்ரு 3.8.9
அவித்யாயாமந்தரே கட. 2.5
அனன்ய ப்ரோக்தே கட. 2.8
அனஶ்னன்னன்யோ மு. 3.1.1
அனுத்யனந்தம் மஹத: கட. 3.15
அன்யச்ச்ரேயோ கட. 2.1
அன்யத்ர தர்மாதன்ய கட. 2.14
அன்யாவாசோ விமுஞ்சத மு. 2.2.5
அன்யத்ர மனு அபூவம் ப்ரு. 1.5.3
அன்ன மயஂஹி ஸோம்ய சா. 6.6.5
அன்னம் ந நிந்த்யாத் தை. 3.7
அன்னம் ந பரிசக்ஷீத தை. 3.8
அன்னம் பஹுகுர்வீத தை. 3.9
அன்யதேவ தத் விதிதாத் கே. 1.3
அன்யதேவாஹுர்-வித்யயா ஈ. 10
அன்யோடந்தர ஆத்மா தை. 2.5
அன்யோடஹமஸ்மீதி ப்ரு. 1.4.10
அஶரீரம் வாவஸந்தம் சா. 8.12.1
அஶரீரோ வாயுரப்ப்ரம் சா. 8.12.2
அஶ்வ இவ ரோமாணி சா. 8.13.1
அஸங்கோ ந ஹி ஸஜ்ஜ ப்ரு. 3.2.4
அஸதோ மா ஸத்கமய ப்ரு. 1.3.28
அஸத்வா இதமக்ர தை. 2.7
அஸந்நேவ ஸ பவதி தை. 2.6
அஸம்பூதி ஈ. 14
அஸ்தமித ஆதித்யே ப்ரு. 4.3.3
அஸ்தூல மனணு ப்ரு. 3.8.8
அஸ்தீதி ப்ருவத: கட. 6. 12
அஸ்மாக-மேவாயம் விஜ கே. 3.1
அஸ்மின்னந்த: புரு சா. 3.13.7
அஸ்மின்னு கல்வக்ஷரே ப்ரு. 3.8.11
அஸ்ய மஹதோ பூத ப்ரு. 2.4.10
அஸ்ய லோகஸ்ய கா கதி சா. 1.9.1
அஹமஸ்மி ப்ரதமஜா தை. 3:10.6
அஹமேவைதத் பஞ்சதா ப்ர. 2.3.
அஹம் ப்ரஹ்மாஸ்மீதி ப்ரு. 1.4.10
அஹம் மனுரபவம் ப்ரு. 1.4.10
அஹரஹர் ப்ரஹ்ம கமயதி ப்ர. 4.4
அஹிம்ஸன் ஸர்வபூத சா. 8.15.1

## ஆ

ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம தை. 1.6.2
ஆகாஶோ வை நாமரூப சா. 8.14.1
ஆசார்யாய ப்ரியந்தனம் தை. 1.11
ஆசார்யவான் புருஷோ சா. 6.14.2
ஆதித்யோ ஹ வை ப்ர. 3.8
ஆத்மக்ரீட: மு. 3.1.4
ஆத்மரதி-ராத்மக்ரீட: சா. 7.2.5
ஆத்மன ஆகாஶ: ஸம்பூ தை. 2.1
ஆத்மஹனோ ஜனா: ஈ. 3
ஆத்மனா விந்ததே வீர்யம் கே. 2.4
ஆத்மாவா அரேத்ரஷ்ட ப்ரு. 2.4.5
ஆத்மாவா இதமேக ஏவா ஐ. 1.1
ஆத்மானஞ் சேத் விஜா ப்ரு. 4.12
ஆத்மான-மந்தகாலே ப்ரு. 4.3.38
ஆத்மானமேவ ப்ரியமு ப்ரு. 1.4.8
ஆத்மானம் ரதினம் கட. 3.3
ஆப்தகாம-மாத்மகாமம் ப்ரு. 4.3.21
ஆப்னோதி மனஸஸ்பதிம் தை. 1.6
ஆப்னோதி ஸ்வாராஜ்யம் தை. 1.6
ஆவி: ஸந்நிஹிதம் மு. 2.2.1
ஆனந்தபுக் மா. 5.3
ஆனந்தம் ப்ரஹ்மேதி தை. 3.5
ஆனந்தம் ப்ரஹ்மணோ தை. 2.9
ஆனந்தாத்யேவ தை. 3.6
ஆஶா ப்ரதீக்ஷே கட. 1.8
ஆஶ்சர்யோ வக்தா கட. 2.2.7

## இ

இதஂஸர்வமஸ்ருஜத தை. 2.6
இதஂஸர்வம் யதயமாத்மா
ப்ரு. 2.4.6
இத்யத: பாபமகரவம் ப்ரு. 4.4.22
இந்த்ரியாணாம் ப்ருதக் கட. 66.

இந்த்ரியாணி பராண் டக.3.4
இந்த்ரியேப்ப்ய: பராஹ் கட. 3.10
இந்த்ரோ மாயாபி: ப்ரு. 2.5.19
இமா நத்ய: ஸ்யந்த ப்ர. 6.5
இமா: ஸர்வா: ப்ரஜா: சா. 8.3.2
இமா: ஸோம்ய நத்ய: சா. 6.10.1
இஹ சேதவேதீததஸத் கே. 2.5
இஹசேதஶகத்போத்தும் கட. 6.4
இஹைவ ஸர்வே ப்ரவிலீய மு. 3.2.2

உ

உதர-மந்தரங் குருதே தை. 2.7
உத்க்ராமந்தம் ப்ராணே ப்ரு. 4.4.2
உத்தாலகோ ஹாருணி: சா. 6.8
உத்திஷ்ட்டத ஜாக்ரத கட. 3.14
உத்வயந் தமஸஸ்பரி சா. 3.17.7
உமாம் ஹைமவதீம் கே. 3.12

ஊ

ஊர்த்த்வமூலோ஽வாக் கட. 6.1
ஊர்த்த்வோச்ச்வாஸீ ப்ரு. 4.3.35

ரு

ருதம் பிபந்தௌ கட. 3.1

ஏ

ஏகதா பவதி த்ரிதா
ஏகமேவாத்விதீயம் சா. 6.2.1
ஏகாத்ம ப்ரத்யய ஸார: மா. 7
ஏகீ பூத: மா. 5
ஏகோவஶீ கட. 5.12
ஏதத்வை பரமந் தப: ப்ரு. 5.11.1
ஏதத் ஸாம காயன் தை. 3.10.5
ஏதம் வை தமாத்மானம் ப்ரு. 3.5.1
ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ரா மு. 2.1.3
ஏதஸ்மின்னு கல்வக்ஷ ப்ரு. 3.8.11
ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரு. 3.8.9
ஏதஸ்யை-வானந்தஸ்ய ப்ரு. 4.3.32
ஏதாவதே கல்வம்ருத ப்ரு. 4.5.15
ஏதை-ருபாயைர்-யததே மு. 3.2.4
ஏவம் விச்சாந்தோ ப்ரு. 4.4.23
ஏஷ நித்யோ மஹிமா ப்ரு. 4.4.23
ஏஷம ஆத்மா஽ந்தர் சா. 3.14.3
ஏஷ ஸர்வேஶ்வர ப்ரு. 4.4.22
ஏஷோ஽க்ஷிணி புருஷ: சா. 8.7.4
ஏஷோ஽ணுராத்மா மு. 3.1.9

ஓ

ஓதஞ்ச ப்ரோதஞ்சேதி ப்ரு. 3.8.3
ஓமிதி ப்ரஹ்ம தை. 1.8
ஓமித்-யேதத் கட. 2.2.15
ஓமித்-யேத-தக்ஷரமிதம் மா. 1
ஓமித்யேத-தக்ஷரமுத்கீ சா. 1.1.1
ஓமித் யேவம் மு. 2.2.6

க

கச்சித்தீர: ப்ரத்யகாத் கட. 2.4.1
கதமஸத: ஸஜ்ஜாயேத சா. 6.2.2
கதமா ஸா தேவதேதி சா. 1.11.4
கஸ்மின்னு பகவோ விஜ் மு. 1.1.3
காமசாரோ பவதி சா. 8.1.6
காமமய ஏவாயம் புரு ப்ரு. 4.4.5
காம: ஸங்கல்போ ப்ரு. 1.5.3
காமான்னீ காமரூபீ தை. 3.10.5
காமாயே஽ஸ்ய ஹ்ருதி கட. 6.15
கிஞ்ஜ்யோதிரயம் புருஷ: ப்ரு. 4.3.6
கிமஹம்பாபமகரவம் தை. 2.9
கிமிச்சன் கஸ்யகாமாய ப்ரு. 4.4.12
கிம்ப்ரஜயாகரிஷ்யாமோ ப்ரு. 4.4.22
குர்வந்நேவேஹ கர்மா ஈ. 2
கேனஸ்யாத் யேன ப்ரு. 3.5.1
கேனேஷிதம் பததி கே. 1.1
கோஹ்யேவான்யாத் தை. 2.7
க்ருஷ்ணாய தேவகீபுத் சா. 3.17.6
க்ருபண: ப்ரு. 3.8.10
க்ஷீயந்தேசாஸ்யகர்மா மு. 2.2.8
க்ஷுரஸ்ய தாரா கட. 3.3.14

க

கச்சதீவ ச மனோ கே. 4.5
கதா:கலா:பஞ்சதஶ மு. 3.2.7
கர்ப்பேனுஸந்நன் ஐ. 2.5
காயத்ரீ வா இதம் சா. 3.12.1
குஹாஹிதங் கஹ்வ கட. 2.12

### ச

சங்கு ப்ரு. 2.4.8
சந்த்ர இவ ராஹோர் சா. 8.13.1
சாயாதபௌ கட. 3.1
சேதோமுக: மா. 5

### ஜ

ஜக்ஷன் க்ரீடன் ரம சா. 8.12.3
ஜாகரிதஸ்த்தான: மா. 3
ஜாயஸ்வ ம்ரியஸ்வே சா. 5.10.8
ஜிஜீவிஷேச் சத ஈ. 2
ஜிஹ்வா மே மது தை. 1.4.1
ஜீவாபேதம் வாவ சா. 6.11.3
ஜ்ஞானப்ரஸாதேன மு. 3.1.8

### த

தஜ்ஜலானிதி ஶாந்த சா. 3.14.1
ததவ்யயந் தத்பூத மு. 1.1.6
ததாத்மானம் ஸ்வயம தை. 2.7
ததாவித்வான் நாமரூபாத் மு. 3.2.8
ததாவித்வான் புண்யபா மு. 3.1.3
ததேதத் ப்ரேய:புத்ராத் ப்ரு. 1.4.8
ததேவ ப்ரஹ்ம த்வம் கேன. 1.5
ததேவானுப்ராவிஶத் தை. 2.6
தத் கேன கம் பஶ்யேத் ப்ரு. 4.5.15
தத்-த்வமஸி சா. 6.8.7
தத்ர கோ மோஹ: க: ஈ. 7
ததைக்ஷத பஹுஸ்யா சா. 6.2.23
தத்ய இஹ ரமணீயசரணு
சா. 5.10.7
தத்யதா த்ருணஜலாயு ப்ரு. 4.4.3
தத்யதா ஹி நிர்ல்வயனீ ப்ரு. 4.4.7
தத்யதாऽன:ஸுஸமா ப்ரு. 4.3.21
தத்யதேஷிகாதூலம் சா. 5.24.3
தத்யதேஹ கர்மஜிதோ சா. 8.1.6
தத்யதாம்ரம் வௌதும் ப்ரு. 4.3.36
தத்யத்ரைதத் ஸுப்த: சா. 8.6.3
தத்ராபரோ ருக்வேத: மு. 1.1.5
தத்விஜ்ஞானார்த்தம் மு. 1.2.12
தத்விஷ்ணோ: பரமம்பதம் கட. 3.9
தத்-ஹி-தபஸ் தத் தை. 1.9
தந்துர்தர்ஶங் கூடம் கட. 2.12
தபஸா சீயதே ப்ரஹ்ம மு. 1.1.8
தபோதம:கர்மேதி கே. 4.9
தமுத்க்ராமந்தம்ப்ராணோ ப்ரு. 4.4.2
தமேவ பாந்தமனுபாதி மு. 2.2.11
,, கட. 5.15
தமேவம்வேதானுவச ப்ரு. 4.4.22
தமேவைகஞ் ஜானத மு. 2.2.5
தம் மா பகவான்ஶோக சா. 7.1.3
தம்வித்யாகர்மணீஸமன் ப்ரு. 4.4.2
தயோரன்ய:பிப்பலம் மு. 3.1.1
தரதிஶோகமாத்மவித் சா. 7.1.3
தஸ்மாதேவம் வித் ப்ரு. 4.4.23
தஸ்மாத் ப்ராஹ்மண: ப்ரு. 3.5.1
தஸ்மாத்ததத் ஸுக்ருதம் தை. 2.7
தஸ்மாத்வா இந்த்ரோ கே. 4.3
தஸ்மை த்ருணம் கே. 3.6
தஸ்மை ம்ருதிதகஷா சா. 8.26.2
தஸ்ய தாவதேவ சிரம் சா. 6.14.2
தஸ்ய ஹ ந தேவாஶ்ச ப்ரு. 1.4.10
தஸ்யை தபோதம: கே. 4.8
தாம் யோகமிதி மன்யந் கட. 6.11
தே க்ஷய்யலோகாபவந்தி சா. 7.25.2
தேஜோ ஹ வாவ உதான: ப்ர. 3.9
தேன த்யக்தேன புஞ்ஜீதா ஈ. 1
தேஷாந்நபுனராவ்ருத்தி ப்ரு. 6.2.15
தேஷாம் ஸர்வேஷு லோகே
சா. 8.1.6
தேஷா-மேஷ ஸத்யம் ப்ரு. 2.3.6
தேஷாம்ஸுகம்ஶாஶ்வதம் கட. 5.12
த்ரயா: ப்ராஜாபத்யா: ப்ரு. 5.2.1
த்ரயோ தர்மஸ்கந்தா: சா. 2.2.3
த்ரியக்ஷரம் ஸத்யமிதி ப்ரு. 5.5.1
த்வம் ஹி ந: பிதா ப்ர. 6.8

### த

தத்த இதி தாம்யத ப்ரு. 5.2.3
தனுர்க்ருஹீத்வா மு. 2.2.3
தஹரோऽஸ்மின்னந்தரா சா. 8.1.1
திவ்யே ப்ரஹ்மபுரே மு. 2.2.7
திவ்யோஹ்யமூர்த்த: மு. 2.1.2
தேவோபூத்வா தேவான ப்ரு. 4.1.6
த்ரஷ்டேர்-த்ரஷ்டா ப்ரு. 3.4.2

த்யாயதீவ லேலாயதீவ் ப்ரு. 4.3.7
த்யாயந்தீவ பர்வதா: சா. 7.7.1
த்ருஷ்டஞ்சாத்ருஷ்டஞ் ப்ர. 4.5
த்ருஷ்ட்வைவபுண்யஞ்ச ப்ரு.4.3.15
த்வாஸுபர்ணா மு. 3.1.1
த்விதீயாத்வைபயம்பவதி ப்ரு. 1.4.2
த்வேவித்யே வேதிதவ்யே மு. 1.1.4
த்வே வாவ ப்ரஹ்மணோ ப்ரு. 2.3.1

ந

ந கஞ்சன காமங் காம ப்ரு. 4.3.19
,, ,, மா. 5
ந கஞ்சன ஸ்வப்னம் ப்ரு. 4.3.19
,, ,, மா. 5
ந கஞ்சன வஸதௌ தை. 3.10
ந கம்பதே ஜ்ஞ: ப்ர. 5.6
ந சக்ஷுஷா க்ருஹ்யதே மு. 3.1.8
ந ச புனராவர்த்ததே சா. 8.15.1
ந சேதவேதீர்மஹதீவிந ப்ரு. 4.4.14
ந ஜாயதே ம்ரியதே கட. 2.2.18
ந ததோவிஜுகுப்ஸதே ப்ரு. 4.4.15
ந தத்ர சக்ஷுர் கச்சதி கே. 1.3
ந தத்ர ரதா ந ரதயோகாப்ரு. 4.3.10
ந தத்ர ஸூர்யோ பாதி கட. 5.15
ந தம் பஶ்யதி கஶ்சன ப்ரு. 4.3.14
ந தஸ்ய ப்ராணா உத்க்ரா ப்ரு. 4.4.6
ந து தத் த்விதீயமஸ்தி ப்ரு. 4.3.30
ந நரேணாவரேண கட. 2.8
ந பாஹ்யங் கிஞ்சன ப்ரு. 4.3.21
ந பிபேதி கதாசன தை. 2.4
ந பிபேதி குதஶ்சன தை. 2.9
ந ப்ராணேன நாபானேன கட. 5.5
ந ப்ரியாப்ரியேஸ்ப்ருஶத:சா. 8.12.1
ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞா ப்ரு. 2.4.12
ந மே ஸ்தேனோஜனபதேசா. 5.11.5
நம்யந்த்தேऽஸ்மை தை. 3.10.4
ந யேஷு ஜிஹ்மம் ப்ர. 1.16
ந லிப்யதே கர்மணா ப்ரு. 4.4.23
ந லிப்யதேலோகது:க்கேன கட.5.11
ந வக்துர்வக்தேர் விபரி ப்ரு. 4.3.26
நவதரங் கல்யாணதரம் ப்ரு. 4.4.4
ந வர்த்ததே கர்மணா ப்ரு. 4.4.23
ந வா அரே பத்யு: காமா ப்ரு. 4.5.6
ந வா அரேமோஹம்ப்ரவீ ப்ரு.2.4.13
ந விஜ்ஞாதுர் விஜ்ஞா ப்ரு. 4.3.30
ந விஜ்ஞாதேர் விஜ்ஞா ப்ரு. 3.4.2
ந வித்தேன தர்ப்பணீயோ கட. 1.27
ந ஸந்த்ருஶே திஷ்டதி கட. 6.9
ந ஸ வேத ப்ரு. 1.4.10
ந ஹ்யத்த்ருவை: கட. 2.10
நாயமாத்மா பலஹீனேன மு. 3.2.4
நாயமாத்மா ப்ரவசனேன கட. 2.2.3
,, ,, மு. 3.2.3
நாவிரதோ துஶ்சரிதாத் கட. 2.24
நாந்த: ப்ரஜ்ஞம் மா. 7
நானுத்த்யாயாத் பஹூன் ப்ரு. 4.4.21
நான்யோऽதோऽஸ்தித்ரஷ்டா ப்ரு. 3.7.23
நான்யதோऽஸ்தி ப்ரு. 3.8.11
நாஹமத்ர போக்யம் சா. 8.9.1
நாஹம் மன்யே ஸுவேத கே. 2.2
நித்யம் விபும் ஸர்வ மு. 1.1.6
நித்யோऽநித்யானாம் கட. 5.13
நிஷ்க்ராமதி சக்ஷுஷ்டோ ப்ரு. 4.4.2
நிஹிதங் குஹாயாம் கட. 1,14
,, ,, தை. 2.1
நி:ஶ்வஸித மேதத் ப்ரு. 2.4.10
நேதி நேதி ப்ரு. 4.4.22
நேஹநானாஸ்திகிஞ்சன கட. 2.4.11
நைததசீர்ணவ்ரதோ மு. 3.2.1
நைததப்ராஹ்மணோ சா. 4.4.5
நைனம் பாப்மா தரதி ப்ரு. 4.4.23
நைனம் க்ருதாக்ருதே ப்ரு. 4.4.22
நைஷா தர்க்கேண கட. 2.9
ந்யக்ரோத பலமத சா. 6.12

ப

பரஞ்சாபரஞ்ச ப்ரஹ்ம ப்ர. 5.2
பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய சா. 8.12.3
பரமேவ்யோமன் ப்ரதிஷ் தை. 3.6
பராஞ்சி கானி கட. 4.1
பரீக்ஷ்ய லோகான் மு. 1.2.12

பரே தேவே மனஸ்யே ப்ர. 4.2
பரேடவ்யயே ஸர்வ மு. 3.2.7
பர்யாப்த காமஸ்ய மு. 3.22
பாங்க்தம் வா இதம் தை. 1.7
பாண்டித்யம் நிர்வித்ய ப்ரு. 3.5.1
பாதோடஸ்யஸர்வா சா. 3.12.6
பாபகாரீபாபோ பவதி ப்ரு. 4.4.4
புண்யேன புண்யம் லோக ப்ர. 3.7
புத்ரைஷணாயாஶ்ச ப்ரு. 3.5.1
,, ,, ,, 4.4.22
புரமேகாதஶத்வாரம் கட. 5.1
புருஷ ஏவேதம் விஶ்வம் மு. 2.1.10
புருஷாந்ந பரங்கிஞ்சித் கட. 1.3.11
புருஷஸ்ய ப்ரயதோ சா. 6.8.6
புருஷோ வாவ யஜ்ஞ: சா. 3.16.1
பூர்வந்தேவேப்ப்ய: தை. 3.10.6
ப்ரஜாதந்தும் மா தை. 1.11.1
ப்ரஜ்ஞாங் குர்வீத ப்ரு. 4.4.21
ப்ரஜ்ஞானகன: ப்ரு. 4.5.13
,, ,, மா. 7
ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம ஐ. 3.3
ப்ரணவோ தனு: மு. 2.2.4
ப்ரபஞ்சோபஶமம் மா. 7.12
ப்ரதிபுத்த ஆத்மா ப்ரு. 4.4.13
ப்ரதிபோத விதிதம் கே. 2.4
ப்ரதியோன்யா ப்ரு. 4.3.36
ப்ராஜ்ஞேனாத்மனா ப்ரு. 4.3.21
ப்ராணபந்தனம் ஹி சா. 6.8.2
ப்ராணருஷபோ மனோ ப்ரு. 5.8.1
ப்ராணஸ்தேஜஸாயுக்த: ப்ர. 3.10
ப்ராணஸ்யப்ராணம் ப்ரு. 4.4.8
ப்ராணாத்வா ஏஷ உதேதி ப்ரு. 1.5.23
ப்ராணாய ஸ்வாஹா சா. 5.19.1
ப்ராணாவை ஸத்யம் ப்ரு. 2.3.6
ப்ராணேன ரக்ஷன்னவரம் ப்ரு. 4.3.12
ப்லவாஹ்யேதே மு. 1.2.7

ப

பயாதஸ்யாக்னி: கட. 6.3
பஹுஸ்யாம் ப்ரஜாயே தை. 2.6
பஹூனாமேமி ப்ரதம: கட. 1.1.5
பாரூப: ஸத்யஸங்கல்ப: சா. 3.14.2
பால்யேனதிஷ்ட்டாஸேத் ப்ரு. 3.5.1
பிக்ஷாசர்யஞ்சரந்தி ப்ரு. 4.4.22
பித்யதே ஹ்ருதயக்ரந்தி: மு. 2.2.8
பித்யேதே தாஸாம்நாம ப்ர. 6.5
பீஷாஸ்மாத்வாத: பவதே தை. 2.8
புத்தேராத்மா மஹான்பர: கட. 3.10
பூமாத்வேவ விஜிஜ்ஞா சா. 7.23
பூர்ப்புவ:ஸ்வரிதி சா. 2.23.2
ப்ரஹ்மசர்யேணானுவிந்த சா. 8.5.3
ப்ரஹ்ம தம் பராதாத் ப்ரு. 2.4.6
ப்ரஹ்மபுச்சம் ப்ரதிஷ் தை. 2.5
ப்ரஹ்மண: கோஶோஸி தை. 1.4.1
ப்ரஹ்மலோகான் கமயதி ப்ரு. 6.2.15
ப்ரஹ்மலோகேஷு பரா: ப்ரு. 6.2.15
ப்ரஹ்மவா இதமக்ர ப்ரு. 1.4.10
ப்ரஹ்மவிதஇவஸோம்ய சா. 4.14.2
ப்ரஹ்மவிதாப்னோதி பரம் தை. 2.1
ப்ரஹ்மைவ பவதி மு. 3.2.9
ப்ரஹ்மைவஸன் ப்ரஹ் ப்ரு. 4.4.6

ம

மடசீஹதேஷு சா. 1.10
மனஸைவானுத்ரஷ்டவ்ய ப்ரு. 4.4.19
மனஸைவேத மாப்தவ் கட. 4.11
மனுஷ்யாணாம் பரமானந்த: ப்ரு. 4.3.33
மனோ ப்ரஹ்மேத்யுபாஸீ 3.18.1
மனோமய: ப்ராணஶரீர மு. 1.2.7
மனோமயோடயம்புருஷ: ப்ரு. 5.6.1
மனோடஸ்யதைவஞ் சக்ஷு: சா. 8.12.5
மஹத: பரமவ்யக்தம் கட. 3.11
மஹதீ விநஷ்டி: கே. 2.5
மஹத்யக்ஷம் ப்ரதமஜம் ப்ரு. 4
மா க்ருத: கஸ்ய ஈ. 1
மாத்ருதேவோ பவ தை. 1.11.2
மாயாந்து ப்ரக்ருதிம் ஶ்வே. 4.10

மூர்த்தஞ்சைவாமூர்த்தஞ்ச ப்ரு. 2.3.2
மூர்த்தஞ்சாமூர்த்தஞ்ச ப்ர. 1.5
மூர்த்தா தே விபதிஷ்ய ப்ரு. 3.7.1
மைத்ரேயீதி ஹோவாச ப்ரு. 2.4.1
ம்ருத்யுர்-யஸ்யோப கட. 2.2.25
ம்ருத்யோ: ஸ ம்ருத்யு கட. 4.11
,, ,, ப்ரு. 4.4.14

ய

ய ஆதித்யேதிஷ்ட்டன் ப்ரு. 3.7.9
ய ஆத்மாऽபஹதபாப்மா சா. 8.7.1
ய ஆத்மா ஸர்வாந்தர: ப்ரு. 3.4.1
யஏஷோऽக்ஷிணி புருஷோசா. 8.7.4
ய ஏஷோऽந்தர்ஹ்ருத ப்ரு. 2.1.17
யச்சித்தஸ்தேனைஷ ப்ர. 3.10
யச்சேத்வாங்மனஸீ கட. 3.3.13
யஜ்ஞேன தானேன ப்ரு. 4.4.22
யதமுத்ர ததன்விஹ கட. 4.10
யதாகர்ம யதாஶ்ருதம் கட. 5.7
யதாகாரீ யதாசாரீ ப்ரு. 4.4.4
யதா க்ரதுரஸ்மில்லோ சா. 3.14.1
யதாக்னே: க்ஷுத்ரா ப்ரு. 2.1.20
யதாதர்ஶே ததாத்மனி கட. 6.5
யதா நத்ய: ஸ்யந்தமா மு. 3.2.8
யதாபஞ்சாவதிஷ்டந்தே கட. 6.10
யதாப: ப்ரவதாயந்தி தை. 1.4.3
யதாபஶுரேவஸ ப்ரு. 1.4.10
யதா பாதோதரஸ்த்வசா ப்ர. 5.5
யதா புஷ்கரபலாஶ: சா. 4.14.3
யதா ப்ருதிவ்யாமோஷத மு. 1.1.7
யதா ப்ரியயாஸ்த்ரியா ப்ரு. 4.3.21
யதா மாஸா அஹர்ஜரம் தை. 1.4.3
யதா வை கரோதி சா. 7.21
யதா வ்ரீஹிர்வா ப்ரு. 5.5.6
யதா ஸ்த்ரீபுமாஸௌ ப்ரு. 1.4.3
யதா ஸர்வே ப்ரமுச்யந் கட. 6.14
யதா ஸோம்ய மது சா. 6.9.1
யதிதங் கிஞ்ச ஜகத் கட. 6.2
யதேவேஹ ததமுத்ர கட. 4.10
யதேவ வித்யயா சா. 1.1.10
யதோதகம் ஶுத்தே கட. 4.4.15
யதோர்ணநாபி: மு. 1.1.7
யதோ வா இமானி தை. 3.1
யதோ வாசோ நிவர்த்த தை. 2.9
,, ,, தை. 2.4
யத்ததத்ரேஶ்யம் மு. 1.1.6
யத்த்ருதய மேதத்ப்ரம் ப்ரு. 5.3.1
யத்ர ஸுப்தோ ந ப்ரு. 4.3.19
,, ,, மா. 5
யத்ர ஹி த்வைதமிவ ப்ரு. 2.4.13
,, ,, ப்ரு. 4.5.15
யத்யப்யேனச்-சுஷ்காய சா. 5.2.3
யத் ரைதத் புருஷ: சா. 6.8.1
யத்ஸாக்ஷாதபரோ ப்ரு. 3.4.1
,, ,, ப்ரு. 3.5.1
யம் யம் லோகம் மு. 3.1.10
யன்மனஸா ந மனுதே கே. 1.5
யமேவைஷ வ்ருணு கட. 2.23
யஸ்து ஸர்வாணி பூதா ஈ. 6
யஸ்மின் த்யௌ: மு. 2.2.5
யஸ்மின் ஸர்வாணி ஈ. 7
யஸ்த்வவிஜ்ஞான கட. 3.5
யஸ்ய ஜ்ஞானமயம் மு. 1.1.9
யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ர கட. 2.25
யஸ்யாமதம் தஸ்ய கே. 2.3
யஸ்யானுவித்த: ப்ரு. 4.4.13
யஶ்சந்தஸாம் ருஷப: தை. 1.4.1
ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் மு. 1.1.9
யாவதாயுஷம் சா. 8.15.1
யாவான் வா அயமாகா சா. 8.1.3
ய: ப்ருதிவ்யாந்திஷ்ட்ட ப்ரு. 3.7.3
யான்யனவத்யானி தை. 1.11.2
யேயம் ப்ரேதே கட. 1.1.20
யேனாஶ்ருதஶ்ருதம் சா. 6.1.3
யேனேதம் ஸர்வம் ப்ரு. 2.4.13
யோவா ஏததக்ஷரம் ப்ரு. 3.8.10
யோவை பூமா தத்ஸுகம் சா. 7.23

ர

ரமணீயசரண: சா. 5.10.7
ரஸோ வை ஸ: தை. 2.7

ல

லவணமேததுதகே சா. 6.13

### வ

வயாம்ஸி வாஸோ ப்ர. 4.7
வாக்பதிஸ்சக்ஷுஷ் தை. 1.6.2
வாங்மனஸிஸம்பத் சா. 6.8.6
வாசந்தேனுமுபாஸீ ப்ரு. 5.8.1
வாசாரம்பணம் விகா சா. 6.1.4
வாசோவிக்லாபனம் ஹி ப்ரு. 4.4.21
வாசைவாயஞ்ஜ்யோதி ப்ரு. 4.3.5
வாயுர்வாவ ஸம்வர்க்கோ சா. 4.3.1
விஜ்ஞாதாரமரே ப்ரு. 2.4.14
விஜ்ஞானம் யஜ்ஞந்தனுதே தை. 2.5
விதேஹான் ததாமி ப்ரு. 4.4.23
வித்யயா தேவலோக: ப்ரு. 1.5.16
வித்யயா விந்ததே கேன. 2.4
வித்யாஞ்சாவித்யாஞ்ச ஈ. 11
விபாபோ விரஜோ ப்ரு. 4.4.23
விவ்ருதஸத்ம கட. 2.2.13
வேதமனூச்ய தை. 1.11
வேதாந்த விஜ்ஞான மு. 3.2.6
வேதானுவசனேப்ராஹ் ப்ரு. 4.4.22
வைஶ்வாநர: ப்ரவிஶதி கட. 1.7

### ஶ

ஶதஞ்சைகாச ஹ்ருதய கட. 6.11
ஶதம் மா புர ஆயஸீ: ஐ. 2.5
ஶதாயுஷ: புத்ரபௌத் கட. 1.23
ஶரீரே பாப்மனோ ஹித்வா தை. 2.5
ஶாகா: ப்ரரோஹேயு: சா. 5.2.3
ஶாந்தம் ஶிவமத்வைதம் மா. 7
ஶாந்தோ தாந்த: ப்ரு. 4.4.23
ஶாந்திஸம்ருத்தமம்ருதம் தை. 1.6.2
ஶிவம் மா. 7
ஶுஷ்காயஸ்த்தாணவே சா. 5.2.3
ஶ்யாமாச்சபளம் சா. 8.13.1
ஶ்ரத்தயா தேயம் தை. 1.11.3
ஶ்ரவணாயாபி கட. 2.7
ஶ்ராத்தகாலே கட. 3.17
ஶ்ரேயஶ்ச ப்ரேயஶ்ச கட. 2.2
ஶ்ரோதவ்யோ மந்தவ் ப்ரு. 2.4.5
ஶ்ரோத்ரியோऽவ்ருஜி ப்ரு. 4.3.33
ஶ்வேதகேதுர்ஹாருணே சா. 6.1
ஶ்வோபாவாமர்த்யஸ்ய கட. 1.26
ஶ்யாமாச்சபனம் சா. 8.13.1

### ஷ

ஷோடஶகல: ஸோம்ய சா. 6.7.1
ஷோடஶகலா: புருஷாயண:ப்ர. 6.5
ஷோடஶம் வர்ஷஶதம் சா. 3.16.7

### ஸ

ஸ ஏகதா பவதி சா. 7,26.2
ஸ ஏஷ் நேதி நேதி ப்ரு. 3.9.26
ஸச் ச த்யச்சாபவத் தை. 2.6
ஸத ஆகத்ய ந விது: சா. 6.8.1
ஸதா ஸோம்ய சா. 6.8.1
ஸதேவ ஸோம்ய சா. 6.2.1
ஸதோ ஹ்யேஷ ரஸ: ப்ரு. 2.3.2
ஸத்யகாமோ ஹ ஜாபா சா. 4.4
ஸத்யமேவ ஜயதே மு. 3.1.6
ஸத்யம் ஜ்ஞானமனந்தம் தை. 2.1
ஸத்யம் வத தை. 1.11.1
ஸத்யஹ்யேவ ப்ரஹ்ம ப்ரு. 5.4.1
ஸத்யஸ்ய ஸத்யமிதி ப்ரு. 2.1.20
ஸத்யேன லப்ப்ய: மு. 3.1.5
ஸ ந ஸாதுனா கர்மணா ப்ரு. 4.4.22
ஸந்த்யேஸ்தானேதிஷ்ட ப்ரு. 4.3.14
ஸமானே வ்ருக்ஷே மு. 3.1.2
ஸம்ஜ்ஞானமாஜ்ஞானம் ஐ. 3.2
ஸம்பரிஷ்வக்த: ப்ரு. 4.3.21
ஸ முக்தி: ஸாதிமுச்தி: ப்ரு. 3.1.3
ஸ ய ஏஷோஅணிமை சா. 6.8.15
ஸ யதா துந்துபே: ப்ரு. 4.5.8
ஸ யதா மஹாராஜோ ப்ரு. 2.1.18
ஸ யதாஶகுனி: சா. 6.8.2
ஸ யதா ஸைந்தவகன ப்ரு. 4.5.13
ஸ யதி பித்ருலோக சா. 8.2
ஸ யதி ஸ்த்ரியம் சா. 5.2.8
ஸ யத்ர ப்ரஸ்வபிதி ப்ரு. 4.3.14
ஸ யஶ்சாயம் புருஷே தை. 3.10.4
ஸ யோத ஏகைகமு ப்ரு. 1.4.7
ஸ யோநாமப்ரஹ்மே சா. 7 1.5
ஸ யோ ஹ வை தத்பரமம் மு. 3.2.9
ஸர்வகர்மா ஸர்வகாம: சா. 3.14.2
ஸர்வஞ்ஜீவிதமல்பமே கட. 1.26

ஸர்வமிதம் ப்ரஶாஸ்தி ப்ரு. 5.6.1
ஸர்வம் ம்ருத்யுனாப்தம் ப்ரு. 3.1.3
ஸர்வங்கல் விதம்ப்ரஹ்ம சா.3.14.1
ஸர்வஸ்யவஶீ ஸர்வஸ்ய ப்ரு. 4.4.22
ஸர்வஸ்யேஶான: ப்ரு. 5.5.6
ஸர்வே வேதா யத் பதம் கட. 1.2.15
ஸர்வானுபூ: ப்ரு. 2.5.19
ஸர்வேடஸ்மை தேவா தை. 5.3
ஸலில ஏகோ த்ரஷ்டு ப்ரு. 4.3.32
ஸ வா ஏஷ மஹான ப்ரு. 4.4.25
ஸன்மூலா: ஸோம்ய சா. 6.8.4
ஸஸ்யமிவ மர்த்ய: கட. 1.1.6
ஸஹஸ்ரந் ததாமி ப்ரு. 4.3.15
ஸாக்ஷாதபரோக்ஷாத் ப்ரு. 3.4.2
ஸாதுகாரீ ஸாதுபவதி ப்ரு. 4.4.4
ஸுப்த:ஸமஸ்த:ஸம்ப்ர சா. 8.11.1
ஸூர்யோ யதா கட. 5.11
ஸோடகாமயத தை. 2.6
ஸோடஹமஸ்மி ஈ. 16
ஸோடவித்யாக்ரந்திம் மு. 2.1.10
ஸ்வமபீதோ பவதி சா. 6.8.1
ஸ்வயந் தீரா: பண்டிதம் கட. 2.2.5
ஸ்வயமகுருத தை. 2.7
ஸ்வர்க் கேலோகே கட. 1.12
ஸ்வாஹாகாரோவஷட் ப்ரு. 5.8.1
ஸ்வேன ஜ்யோதிஷா ப்ரு. 4.3.9
ஸ்வேன ரூபேணாபிநிஷ் சா. 8.12.3

**ஹ**

ஹிரண்மயே பரே மு. 2.2.10
ஹிரண்மயேன பாத்ரேண ஈ. 15
ஹிரண்ய நிஹிதமஷேத்ர சா. 8.3.2
ஹ்ருதயஸ்யாக்ரம் ப்ரு. 4.4,2
ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: ப்ரு. 4-3.7


உபநிஷத மந்திரங்களின் அகராதி

முற்றும்

# உரையின் அகராதி


**அ**

அகாமஹத: ப்ரு. 4.3.33
அகாமோ நிஷ்காம ப்ரு. 4.4.6
அக்ருத்ஸ்ன: ப்ரு. 1.4.8
அக்ஷர: ப்ரு. 3.8.11
அக்ஷர வித்தை ப்ரு. 3.8.8
அக்ஷரபர வித்தை மு. 1
அக்னிஸ்தம்பம் கே. 3
அக்னிகள் மூன்று கட. 1.14
,, ,, ப்ர. 4.3
அக்னிர்மே வாசி ஶ்ரித ப்ரு. 3.1.3
அக்னிஹோத்ரம் சா. 5.24.5
அங்குஷ்டப்ரதிமாவித்தை கட. 4.12
அஜ-மநித்ர-மஸ்வப்னம் மா.கா. 1.16
,, ,, மா.கா. 4.81
அஜாதசத்ரு ப்ரு. 2.1.15
அதர்வர் மு. 1.1.1
அட்டைப்புழு ப்ரு. 4.4.3
அத்திப்பழம் நழுவுவது ப்ரு. 4.3.36
அத்த்யாத்மயோகம் கட. 2.12
அந்தர்யாமி வித்தை ப்ரு. 3.7
அந்த்த: சா. 8.42
அந்தேவாஸி தை. 1.11.1
அந்ருதாபிதானம் சா. 8.3.1
அபஹதபாப்மா சா. 8.1.5
,, ,, சா. 8.4.1
அபயம் ப்ரு. 3.2.4
அபயே பயதர்ஶின: மா. கா. 3.39
அபான: ப்ர. 3.5
அமூர்த்தம் ப்ரு. 2.3.5
அர்ச்சிராதி மார்க்கம் சா. 4.15.5
,, ,, சா. 5.10.1
அல்பத்தில் சுகமில்லை சா. 7.23.1
அவ்ருஜின: ப்ரு. 4.3.33
அன: ப்ரு. 4.3.35
அன்னப்ராணமன:ப்ரபோ தை. 2.5

அஶ்வபதி சா. 5.11.5
அஶ்வினீ தேவர் ப்ரு. 2.5.19
அஶ்ரத்ததான: சா. 8.8.5
அஸ்பர்ஶயோக: மா.கா. 3.39
,, ,, 4.2
அஹம் ஸ்மராமி ஈ. 18
அஹரஹர்-கச்சன் சா. 8.3.2
அஹரஹர்வா ஏவம் வித் சா. 8.3.3

ஆ

ஆகாசவித்தை சா. 1.9.1
ஆசார்யவான் சா. 6.14.2
ஆதாவந்தேசயந்நாஸ்தி மா.கா. 2.6
ஆதிபுத்தா: மா.கா. 4.92
ஆத்மகாம: ப்ரு. 4.3.21
ஆத்மஹன. ஈ. 3
ஆபஸ்தம்பர் சா. 4.4.5
ஆப்தகாமஸ்யகாஸ்ப்ரு மா.கா. 1.9
ஆப்தகாம: ப்ரு. 4.3.21
ஆயதனவான் சா. 4.4.5
ஆருணி: சா. 5.11.2
,, சா. 3.11.4
ஆனந்தத்தின் திவலை ப்ரு. 4.3.32
ஆனந்தமய வித்தை தை. 3
ஆஹவனீய: ப்ர. 4.3
ஆஹாரசுத்தி சா. 7.26.2

இ

இச்சாமாத்ரம்ப்ரபோ: மா.கா. 1.8
இத-மதர்ஶம் கே. 4.3
இந்த்ர: சா. 8.7.2
இந்த்ரயோனி: தை. 1.6.1
இரக்கமென்ருெரு (கம்பர்) ஈ. 3
இந்த்ரத்யும்ஞேல்பால்லவேய:
சா. 5.11.1

ஈ

ஈரவிறகு ப்ரு. 2.4.10

உ

உத்தம: புருஷ: சா. 8.12.3
உதான: ப்ர. 3.7
உதிப்பதுமில்லை அஸ்த சா. 3.11.2
உத்தாலக ஆருணி: ப்ரு. 3.7.1
,, ,, சா. 5.11.2
,, ,, சா. 3.11.4
உபகோஸல வித்தை சா. 4.10
உபநிஷதம் கே. 4.7
உபரதி: ப்ரு. 4.4.23
உபஸத: சா. 3.17.2
உப்புக்கட்டி ப்ரு. 2.4.12
உபாயேன நிக்ருஹ்ணீ மா.கா. 3.42
உருவேறத் திருவேறும் ப்ரு. 4.3.31
உலர்ந்த கட்டையுந் துளிர் சா.5.2.3
உஷஸ்த சாக்ராயண ப்ரு. 3.4.1
உபநிஷதப்பலகணி—
அன்னத்தை எறியாதே தை. 3.8
ஆஹாரம் தை. 3.7
கத்தி முனைமேல் கட. 3.14
சூரியனைக்கண்ட ஜலம் சா. 8.12.2
பரம்பொருள் கணிதத்து ஈ. 1

ஊ

ஊர்ணநாபி: ப்ரு. 2.1.20

எ

எட்டியும் எட்டாதிருப்பன் தை. 2.7
எவ்வளவு ஆழம் கிணறு ப்ரு. 3.5.1

ஏ

ஏகாகீ ந ரமதே ப்ரு. 1.4.3
ஏகீபூத: மா. 5

ஓ

ஓங்காராதஶப்தஶ்ச மங்கள. 1

ஔ

ஔத்தாலகிராருணி: கட. 1.1.11
ஔபமன்யவ: சா. 5.11.1

க

கங்கையில் தேள் தை. 1.10
கதிஸாரம் கட. 1.15
கந்தார தேசம் சா. 6.14.1
கருடன் ப்ரு. 4.3.19
கபீர்தாஸ் ப்ரு. 3.5.1

கர்ப்போபநிஷத் கட. 1.14
,, ,, ஐ. 2.5
கர்மஜிதோ லோக: சா. 8.1.6
காமசார: சா. 8.4.3
காமலாயன: சா. 4.10.1
காயத்ரிவித்தை சா. 3.12
காரைக்காலம்மை ப்ரு. 3.7.23
காய்ந்த கட்டையும் சா. 5.2.3
கார்க்கி ப்ரு. 3.8.1
கார்க்யர் ப்ரு. 2.1.1
கார்ஹபத்யம் ப்ர. 4.3
குந்தி அதர்வங்கற்ருள் ப்ரு. 3.8.1
குருபாஞ்சாலம் ப்ரு. 3.1.1
குரோத பட்டாரகர் தை. 2.5
கோகாமா ஏவ வயம் ப்ரு. 3.1.2
கோசுருதி சா. 5.2.3
கோத்திரம் தெரியாவிட்டால்
சா. 4.4.5
கோர ஆங்கிரஸர் சா. 3.17.6
கௌதம: கட. 1.1.10
,, கட. 4.4.15
கௌஷீதகேயர் ப்ரு. 3.5.1
க்ருதாத்மா சா. 8.13.1

## ச

'சத்ரி' நியாயம் கட. 3.1
சாக்ராயணர் சா. 1.10.1
சித்தகாலா: மா.கா. 2.13
சித்தாகாசம் சிதாகாச தை. 3.6
சிரத்தை சா. 6.12.3
,, சா. 7.19.1
சுகம் சா. 7.22.1
சங்கரர்—
அதிர்ஷ்டசாலிகளான தேவர்
சா. 8.12.6
அந்தர்தீபிகா நியாயம் மு. 2.1.5
ஆசை விடுபட்டவன் ப்ரு. 4.4.6
காமானசனமனசகம் ப்ரு. 4.4.12
கேவலம் உபநிஷத்தைமட்டும்
மு. 1.10.5
ந தேசகாலாத்யுசித சா. 4.15.5
நாஞச்சித்ரகடோ கேன. 1.4

பிரம்மசரியம் சா. 8.4.3
ப்ரஸன்னேந்த்ரிய: சா. 4.9.2
ப்ரஹ்மவிதோ நாஸ்திகாம
ப்ரு. 3.5.1
மனிதர்கள் இக்காலத்தும்
ப்ரு. 2.4.10
மனஞன்முனி: ப்ரு. 4.4.22
ருணமோசன கர்த்தா ப்ரு. 4.4.23
லோகாந்தர ப்ராப்தி: மு. 2.11
வாயுஞ நீயதே மேக: கட. 4.11
யோகஸ்ய ப்ரதமம் கட. 3.13
சப்த ஜாலம் ப்ரு. 4.4.21
சாந்தா மஹாந்தோ மு. 2.13
சாஸத்ரஸ்ய குருவாக் சா. 7.19.1
ஸந்நியாஸமில்லாத ஞானம்
மு. 3.2.4

## ஜ

ஜகதீ சா. 3.16.5
ஜடவல்லோகமாசரே மா. கா. 2.3.6
ஜயாதிமந்திரம் ப்ர. 1.4
ஜானச்ருதி சா. 4.2.1
ஜாயஸ்வம்ரியஸ்வ சா. 5.10.8
ஜாரத்காரவர் ப்ரு. 3.2.1
ஜ்ஞாஞம்ருதேன ப்ரு. 4.4.23
ஜ்யோதிஷாஞ்ஜ்யோதிர்
வித்தை ப்ரு.4.4.16
ஜ்யோதிஷ்மான் சா. 4.4.5

## த

தஞ்ச லோகோ ந காஹதே
மா. கா. 4.95
தட்டான் ப்ரு. 4.4.4
ததீசி ப்ரு. 2.5.19
தத்வனம் கேன. 4.6
தர்ம: சா. 2.23·1
,, தை. 1.11.1
தன்ஞலே தன்னுருவம் தை. 2.6
தஸ்யைவம் விதுஷோ சா. 3.17.1
தக்ஷிணை சா. 3.17.4
தஹரவித்தை சா. 8.1
திதிக்ஷு: ப்ரு. 4.4.23
தில்லைஸ்தலம் சா. 8.13

தீக்ஷை சா. 3.17.1
தீர: ப்ரு. 4.4.21
,, கட. 2.2.2
,, கட. 2.2.11
துந்துபி ப்ரு. 2.4.7
தேவயானம் சா. 5.10.1
தேவேப்ப்ய: ஸ்வாஹா ப்ரு. 5.8.1
தைஜஸ: மா. 4
,, மா. கா. 1.1
தைவஞ்சக்ஷுஃ: சா. 8.12.4
த்ருக்-த்ருஶ்ய விவேகம் கோ. 1.3
த்ருணஜாலயுகா: ப்ரு. 4.4.3
த்ரிணசிகேத: கட. 1.17
த்ரிசங்கு தை. 1.10
த்ரிபுர தஹனம் ப்ர. 5.6
த்யானம் சா. 7.6.1
த்வைதமிவ பவதி ப்ரு. 4.5.15
தாயுமானவர்—
ஆங்கென்றுமீங்கென்று தை. 3.10.4
உன்னுமனங்கர்ப்பூர தை. 2.4
கண்டார் கண்ட காட்சியு தை. 2.6
சித்தமறியாதபடி ஈ. 16
நித்தியமாய் நிர்மல ஈ. 8
நேரேதானிரவு பகல் தை. 2.8
,, ,, ப்ரு. 3.8.9
பந்தமறு மெய்ஞ்ஞான மா. 8
பேசரிய ஒளியென்றும் கட. 2.8
வானந்த மண்ணினந் தை. 1.3.4
திருக்குறள்—
உறங்குவது போலும் ப்ரு. 4.3.8
உற்றநோய் நோன்றல் மு. 2.12
எல்லா விளக்கும் விளக்கல்ல மு. 3.1.5
,, ,, தை. 1.10
கற்றதனாலாயபயன் சா. 6.1.1-2
யாகாவாராயினும் தை. 3.10.2
திருமந்திரம்—
உடம்பினை முன்னம் சா. 8.1.2
உரையற்ற தொன்றை ப்ரு. 3.4.2
ஒழியாத விந்து மு. 3.1
திருவாசகம்—
உண்மையுமாயின்மை கேன. 1.3
ஏதவனூர் ஏதவன்பேர் தை. 2.7
கேட்டாரு மறியாதான் தை. 1.7
வானாகி மண்ணாகி தை. 2.1

ந

ந தபஸ்தப இத்யாஹுஃ: ப்ர. 1.1
ந பத்தோ ந ச ஸாதக: மா. கா. 2.32
ந முமுக்ஷுஃர் ந வை முக்த: மா. கா. 2.32
ந ஹன்யதே ந ஜீயதே ப்ரு. 4.4.23
நாகோ மௌத்கல்ய: தை. 1.9
நாசிகேத வித்தை கட. 2
நாமார்க்குங் குடியல்லோம் தை. 2.9
நாஸ்வாதயேத் ஸுஃகந் மா. கா. 3.45
நிதித்தியாஸனம் ப்ரு. 2.4.5
நிஸ்துதிர்-நிர்-நமஸ் மா. கா. 2.37
நம்மாழ்வார்—
அவனே யவனுமவனும் கட. 5.9
அற்றது பற்றெனில் ப்ர. 5.5
ஆணல்லன் பெண்ண ப்ரு. 4.4.22
உளனெனிலுளனவன் தை. 2.6
உள்ளம் உரைசெயல் மு. 3.1.8
கடல் ஞாலம் யானே தை. 2.10.5
நாவினுள் நின்று மலரும் ப்ரு. 2.4.10
பொலிகபொலிக தை. 2.9

ப

பஞ்சாக்னிவித்தை சா. 5.3.5-10
பதஞ்சல காப்யர் ப்ரு. 3.7.1
பரஞ்ஜோதி வித்தை சா. 3.13.7
பருந்து ப்ரு. 4.3.19
பலம் சா. 7.8.1
பலசாஸ்திரங்களை ப்ரு. 4.4.22
பயக்ருத் பயநாசன: தை. 2.7
பரம்புருஷ வித்தை கட.3
பாண்டித்யம் நிர்வித்ய ப்ரு. 3.5.1
பாம்புச் சட்டை ப்ர. 5.5
பாலாகி: ப்ரு. 2.1.1
பாலா: கட. 4.4.2
,, மு. 1.2.9
பால்யம் ப்ரு. 3.5.1
பித்ருலோக-காம: சா. 8.2.1

பித்ருயாணம் சா. 5.10.3
பிப்பலாதர் ப்ர. 1.1
பிரம்மஸம்ஸ்பர்சம் சா. 6.14.2
புத்தியும் சிரத்தையும் (காந்தி) சா. 7.19.1
புண்யஜிதோலோக: சா. 8.1.6
பூமாவித்தை சா. 7.24
புடிலர் (ஆஶ்வதராஶ்வி) சா. 5.11.1
பேஶஸ்காரீ ப்ரு. 4.4.4
பௌருஶிஷ்டி: தை. 1.9
ப்ரஜாபதி: சா. 8.7.1
ப்ரஜ்ஞானஸ்ய நாமதேயா ஐ. 3.2
ப்ரணவ: மு. 2.2.4
,, ப்ர. 3.5
,, மா. கா. 1.25
ப்ரணவே ப்ரஹ்ம நிர்ப்பயம் மா. கா. 1.25
ப்ரதிஷ்ட்டா தை. 3.10.3
ப்ரதிலோமம் ப்ரு. 2.1.15
ப்ரவாஹணஜைவலி ப்ரு. 5.3
ப்ரவிவிக்தபுக் மா. 4
ப்ரவ்ராஜின: ப்ரு. 4.4.25
ப்ரஹ்மசர்யம் சா. 8.7.4
ப்ரஹ்மபுரம் சா. 8.1.1
ப்ரஹ்மலோகம் சா. 8.3.2
,, சா. 8.4.1
ப்ரஹ்மவர்ச்சஸ் தை. 3.6
ப்ரஹ்மிஷ்ட்ட: ப்ரு. 3.1.2
ப்ராசீனயோக்ய: தை. 1.6.2
ப்ராஜ்ஞ மா. 5
,, மா. கா. 1.1
ப்ராண: ப்ர. 3.5
ப்ராண வித்தை சா. 5.2
ப்ராணக்னய: ப்ர. 4.3
ப்ராசீனசால: சா. 5.11.1
ப்ராணக்னிஹோத்ரம் சா. 5.24.1
ப்ராரப்தம் சஞ்சிதம் சா. 6.14.2
ப்ருகு தை. 3.1
பகவத் கீதை—
அந்த முன் பழக்கத்தால் (6.44) ப்ரு. 4.4.2
அடக்க மெனும் அக்னி (4.26) மு. 2.1.8
,, ,, ப்ரு. 4.4.23
ஆகாயம் களங்கமடைவ (13.32) சா. 4.15.1
இதுவே ப்ராம்மீஸ்திதி (2.72) தை. 2.9
இந்திரியங்களனைத்தின் (13.14) ஈ. 5
,, ,, சா. 3.14.2
இந்திரியங்கள் வசப்படுத்திய கட. 5.1
உத்தமபுருஷன் (15.17-18) மு. 2.1.2
உள்ளத்தெளிவில் (2.65) சா. 7.25.2
உள்ளே சுகமுடைய (5.24) மு. 3.1.4
,, ,, சா. 7.25.2
எந்த மனிதன் ஆன்மாவிலேயே (3.17) சா. 7.25.2
எந்தெந்தநினைவை (8.6) சா. 3.14.1
எந்தெந்த வஸ்து (10.) சா. 8.14.1
எப்போது சரீரத்தை (15.8) ப்ரு. 4.4.2
எல்லாக்கருமங் (3.30) தை. 2.5
எல்லாப் பொருள்களிலும் (13.27) ஈ. 1
எவன் துன்பத்திலும் இன்பத் சா. 6.7
ஓம் தத்ஸதி (17.23) (13.24) மங் 1.
கடைசி நினைவு (8.6) ப்ர. 3.10
க்ஷீணே புண்யே (9.21) மு. 1.2.10
,, ,, சா. 8.2.1
கர்மணைவஹி ஸம் (3.) சா. 5.3.7
க்ஷரம்-அக்ஷரம் (15.16) ப்ர. 5.2
காமாத்மான: (2.43) ப்ரு. 4.4.22
சந்தங்களுள் (10.35) சா. 3.12.1
சரீரத்தையாளும் (15.8) ப்ர. 3.9
சிரத்தை பொருந்திய (4.40) ப்ர. 1.1
சுபாசுப பல : (9.29) கட. 2.10
தருமந்தவருத (7.11) சா. 3.142

தவஞ்செய்யாதவர் (18.67) சா. 3.11.5
துக்கஸம்யோக (6.23) சா. 8.42
த்ரிவிதம்நரக (16.21) ப்ரு. 5.2.3
ஞானத்தீ (4.37) மு. 2.2 9
ஞானமானது (5.16) சா. 3.11.3
நிச்சயபுத்தி (2.44) மு. 1.2.8
பணிவாலுங் கேள்வி (4.34) ப்ர 1.1
பிராம்மீஸ்திதி (2.72) மு. 3.2.5
மனுஷ்யாணும் (2.29) கட. 2.7
மயி ஸர்வமிதம் (7.7) ப்ரு. 3.7.1
மனிதர்களில் ஆயிர (7.3) ப்ரு. 4.4.12
யஜ்ஞமுந்தானமும் சா. 2.23.1
,, ,, ப்ரு. 4.4.21
யத்கத்வா ந நிவர் (15.6) கட. 3.11
யோகம் கரும சாமர்த்தி (2.50) தை. 2.9
லோகேஷஸ்மின் (3.3) ஈ. 2.
வாக்கால் தவம் (17.) சா. 2.23.1
ஶ்ரத்தாவான் (4.39) சா. 7.19.1
ஸத்துவகுணமுடை (14.18) கட.5.7
ஸம்ஸாரவிருக்ஷம் (15.1) தை. 1.16
(15.6; 13.32—33) கட. 5.14.15
(15.1) கட. 6.1

பாகவதம்—
அக்னேரப்ப்யாகதோ கட. 1.7
காயோஷந்த: ப்ரவிஶ் கேன. 1.1
ஸ்வப்னோபமமமும் ப்ரு. 4.4.22

பாரதி—
அச்சமில்லையமுங்குதல் தை. 2.4
காக்கை குருவியெங்கள் தை. 3.10.5
வாயுவே ! உன்னைவணங் தை. 1.1

புருஷஸூக்தம்—
நான்ய : பந்தா மு. 2.2.5
வேதாஹமேதம் சா. 3.11.3
ஸந்தாபயதி ஸ்வம் சா. 3.13.7

ம

மதுப்பிராம்மணம் ப்ரு. 2.5.1
மதுவித்தை சா. 3.1
மனோத்ருஶ்யமிதந்த்வைதம் மா.கா. 3.31
மஹாசாலா மு. 1.1.3
மஹாஜ்ஞாந: மா. கா. 4.95
மஹாத்மா கட. 1.16
மஹாமத்ஸ்ய: ப்ரு. 4.3.18
மஹான் தை. 3.6
,, ,, தை. 3.10.3
மஹாவீரர் மு. 1.2.3
மஹிதாஸ ஐதரேயர் சா. 3.16.7
மாம்பழம் ப்ரு. 4.3.36
மானவான் தை. 3.10.3
மாஹாசமஸ்யர் தை. 1.5.2
மின்னல்போன்றது கேன. 4.4
முக்திகோபநிஷ உப. மஹாத். 1.9
முப்புரம் ப்ர. 5.6
முனி: ப்ர. 3.5.1
,, ,, ப்ர 1.5
மூர்த்தம்-அமூர்த்தம் ப்ரு. 2.3.2
,, ,, ப்ரு. 4.4.22
மூன்று பிறப்பு ஐ. 2.4
மைத்ரேயி வித்தை ப்ரு. 2.4
மௌனம் ப்ரு. 3.5.1

மஹாபாரதம்—
இஜ்யாத்த்யயனதானனி சா.2.23.1
தர்மம் நித்தியமானது தை. 1.11
தர்மஞ்சராமிஸத்யஞ்ரோணி தை.1.11
தஸ்மாதேதம் ஸம்யக் தை. 1.6.2
யச்ச காமஸுகம் லோகே ப்ரு. 4.3.33

ய

யக்ஷம் கேன. 3.2
யத்யத்தி குருதே கர்ம ப்ரு. 4.4.5
யதா பஞ்சைவ லீயந்தே தை. 2.1
யம்பாவந் தர்ஶயேத் யஸ்ய மா. கா. 2 2.9
யாதேவீஸர்வபூதேஷு ப்ரு. 3.7.15
யாவதாயுஷம் சா. 8.15.1

ர

ரத்னமாலை கட. 1.16
ரமணீய சரண: சா. 5.10.7
ரஸ: தை. 2.7
,, சா. 1.1.2
ராத்தர: தை. 1.9

ரைக்வர் சா. 4.2.2
ரமணமஹரிஷி—
இருதயம் சா. 8.3.3
எஞ்சின்பூட்டின வண்டி ப்ரு.4.3.15
என்னையறியேன் நான் கேன. 2.3
கிரந்திகள் மு. 2.2.9
ராமகிருஷ்ணர் உவமைகள் —
அவிழ்த்துவிட்டயானை மு. 3.2.5
ஆழமில்லாத குளத்தில் ப்ரு.4.4.21
இலைகளைக்கணக்கி மு. 2.2.7
ஈசுவரனுடைய நாமங்கள் கட. 5.9
ஊசியும் நூலும் கட. 6.11
எல்லா அருளும் இருந்தாலும் கட. 2.15
,, மு. 2.2.3
எல்லாம் உன்மனதிலேயே கட.4.11
கங்கைக்கரையிலுள்ளவன் ப்ரு. 4 4.14
கழுகு உயரப்பறந்தாலும் மு. 1.2.8
காட்டில் பாதரகைஷ தை. 1.10
காய்த்தவுடன் பூ உதிரும் ஈ. 2.
சரீரமும் நோயும் தை. 2.5
சிலர் ஜலம் என்றும் கட. 5.9
தர்மக்கிரந்தங்கள் ப்ரு. 4.4.21
பட்டிக்காட்டான் அரசனைச் தை. 3.5
பலநூல்களைப் படிப்பது ப்ரு. 4.4.21
பலாப்பழம் உரிக்க சா. 5.24.3
,, தை. 2.9
பழங்கள் நிறைந்தமரம் தை. 1.11.3
பாதரஸந்தடவின மு. 2.1.8
,, சா. 8.4.3
பாலைக்கடைந்து ப்ரு. 3.5.1
பிரம்மசரியம் ப்ர. 1.1
மானிடசரீரம் பானைபோல் கேன 1.2
விந்துஜயம் மு. 3.1.5
விந்து நாசம் மு. 3.1.5
விழித்திருக்கும் வீட்டில் மு. 3.2.5
ஸாதனமார்க்கம் மூன்று ஐ. 3.2.
ல
லலிதாஸஹஸ்ரநாமம்—
அந்தர்முகஸமாரா மு. 3.2.2
பாஷ்யம் (ப்ரஜ்ஞானம்) ஐ. 3.2
ஸ்வாத்மானந்தலவீ ப்ரு. 4.3.32
வ
வராஹபுராணம் ஈ. 18
வஷட்காரம் ப்ரு. 5.8.1
வாசக்னவீ ப்ரு. 3.8.1
வாஜசிரவஸ் கட. 1.1
வாருணீவித்தை தை. 3.6
வாம தேவர் ஐ. 2.5
,, ப்ரு. 1.4.10
விசுவன் மா. கா. 1.1
விஜ்ஞானம் சா. 7.7.1
விஜ்ஞானகன ஏவ ப்ரு. 2.4.12
வித்யுல்லேகேவ கேன. 4.4
விமுக்த: மு. 3.2.9
விரோசன: சா. 8.7.2
வீதராகபயக்ரோதை: மா. கா. 2.35
வீதராகர்: மு. 2.2.5
வீணை ப்ரு. 2.4.9
வீர்யம் கேன. 2.5
வேதம் அனாதி (விவே) உப. மஹா. 7
வேத சாகைகள் உப. மஹா. 2.3
வைவஸ்வத: கட. 1.7
வைஶ்வாநர: கட. 1.7
,, மா. 3
வைஶ்வாநர வித்தை சா. 5.11
வ்யான: ப்ர. 3.6
வித்தைகள்—
அந்தராதித்ய வித்யா சா. 1.6.7
அக்ஷரபர வித்யா மு. 1.
அங்குஷ்ட்டப்ரமிதாவித்யா கட.4.13
அக்ஷர வித்யா ப்ரு. 3.8.8
அந்தர்யாமி வித்யா ப்ரு. 3.7
அக்ஷி வித்யா சா. 4.15.1
ஆகாஶ வித்யா சா. 1.9.1
ஆனந்தமய ,, தை. 2
ஈஶாவாஸ்ய ,, ஈ. 1
உபகோஸல ,, சா. 4.10
காயத்ரி ,, சா. 3.12
ஜ்யோதிஷாஞ்ஜ்யோதி ப்ரு. 4.4.16
தஹர ,, சா. 81
நாசிகேத ,, கட. 2

பரமபுருஷ ,, கட. 3.11
பரஞ்ஜ்யோதி ,, சா. 3.13.7
பஞ்சாக்னி ,, சா. 5.10.7
ப்ராண ,, சா. 5.2
பூமா ,, சா. 7.24
மது ,, சா. 3.1
மைத்ரேயி ,, ப்ரு. 2.4
வாருணீ ,, தை. 3.6
வைஶ்வாநர ,, சா. 5.11
ஶாண்டில்ய ,, சா. 3.14.1
ஸத்யகாம(ஷோடஶகலா) சா. 4.4
ஸத் ,, சா. 6.2
ஸம்வர்க்க ,, சா. 4.3
ஸர்வாந்தராத்ம ,, ப்ரு. 3.4
பர்யங்கவித்யா : கௌஷீ 1
ப்ரதர்தன ,, ,, 3
பாலாகி ,, ,, 4
ந்யாஸ ,, நாராயண 49-52

ஶ

ஶஸ்த்ரம் தை. 1.8
ஶாண்டில்ய: சா. 3.14.1
ஶாந்தஹ்ருதய: சா. 8.11.1
ஶார்க்கராக்ஷ்யர் சா. 5.11.1
ஶுத்த ஸத்வா மு. 3.2.6
ஶூத்ர: சா. 4.2 3
ஶ்ரத்தா சா. 7.19.1
,, கட. 1.1.2
ஶ்ரேயஸ் ப்ரேயஸ் கட. 2.3
ஶ்வேதகேது சா. 6.1
,, ப்ரு. 6.2.1

ஷ

ஷோடஶகல: சா. 6.7
ஷோடஶகலா: ப்ர. 6.5.
ஷோடஶகலா வித்தை சா. 5.11.1

ஸ

ஸங்கல்ப: சா. 7.4.1
ஸதீயமிதி சா. 8.3.3
ஸத்யகாம: சா. 4.4
,, சா. 5.2.3
ஸத்யயஜ்ஞ: பௌலு : சா. 5.11.1
ஸத்ய ஸங்கல்ப: சா. 8.1.5
ஸத்வ ஶுத்தி சா. 7.26.2
ஸத்வித்தை சா. 6.1
ஸநத்குமாரர் சா. 7. 1..1
ஸம ப்ராப்தம் ந சால மா. கா. 3.41
ஸமான: ப்ர. 3.5
ஸமாவ்ருத்ய சா. 8.15.1
ஸமாஹித: ப்ரு. 4.4.23
ஸமித் ப்ர. 1.1
ஸமித்பாணி: சா. 8.7.2
,, மு. 1.2.12
ஸம்பன்ன: சா. 6.8.1
ஸம்பரிஷ்வக்த: ப்ரு. 4.3.21
ஸப்ரஸன்ன: சா. 8.11.1
ஸம்ப்ரஸாத: சா. 8.3.4
,, சா. 8.12.3
ஸம்வர்க்க வித்தை சா. 4.3
ஸம்ராட் ப்ரு. 4.3.33
ஸம்ஹிதை தை. 1.3
ஸர்வாந்தர: ப்ரு. 3.4.1
ஸர்வாந்தராத்ம வித்தை ப்ரு. 3.4
ஸர்வாபிலாப-விகத: மா. கா. 3.37
ஸர்வோபாய விநிர்முக்தம் ஈ. 18
ஸாம்பராய: கட. 2.2.6
ஸுகேசர் ப்ர. 1.1
ஸைந்தவகன: ப்ரு. 4.5.3
ஸைந்தவகில்ய: ப்ரு. 2.4.12
ஸ்தோத்ரமும் ஶஸ்த்ரமும் தை. 1.8
ஸ்மாரக தாரக வாரக மு. 1.2.3
ஸ்வதா ப்ரு. 5.8.1
ஸ்வதோவாபரதோவா மா. கா. 4.2.2
ஸ்வாராஜ்யம் தை. 1.6.2
ஸ்வாஹா ப்ரு. 5.8.1
,, தை. 1.4.3

ஹ

ஹந்தகாரம் ப்ரு. 5.8.1
ஹிதாநாம நாட்ய: ப்ரு. 4.3.20
ஹிரண்யநிதிம் நிஹிதம் சா. 8.3.2
ஹ்ருதயம் சா. 8.3.5

உரையின் அகராதி

முற்றும்